
சங்கீத இராமாயணம்



முகவுரை

அன்பு உள்ளம் கொண்ட வாசகர் பெருமக்களுக்கு எங்கள் இதயம் நிறைந்த வணக்கங்கள்.

இந்த புத்தகம் 1908-ம் ஆண்டில் திரு. தென்னுட்டு சுப்பய்யா ரெட்டியார் அவர்களால் கொல்லத்திலிருந்து பிரசுரிக்க் பட்டது.

எங்களது ஸ்தாபனம் நூறாவது ஆண்டு நிறைவு பெற்ற 1986-ல் நுற்றாண்டு நினைவுமலராக, எண்பது வருடங்களுக்கு முன்பு திரு. S. T. ரெட்டியார் பிரசுரித்த இந்த புத்தகத்தை மீண்டும் வெளியிட தீர்மானித்தோம்.

சக்கரவர்த்தி திருமகனுகிய ஸ்ரீராமச்சந்திர பிரபுவின் புண்ணிய சரித்திரமான இராமாயணத்தை சங்கீத வடிவமாக அமைக்க பட்டு இந்த புத்தகம் வாசக பெருமக்களுக்கும் சங்கீத உலகத்திற்கும் ஒரு வரபிரசாதமாக இருக்கும்.

அனைவரும் ஸ்ரீராமச்சந்திர பிரபுவின் அருளையும் அன்னை மஹாலட்சுமியின் அவதாரமான சீதா பிராட்டியாரின் அருளையும் பெற்று பெருவாழ்வு பெற வேண்டுகிறோம்.

வணக்கம்

இங்ஙனம்
எஸ். டி. ரெட்டியார் & சன்ஸ்
எர்ணுகுளம்
கொச்சி-682035, கேரளா

SANGEETHA RAMAYANAM
(Tamil)

By
ARUNACHALA KAVIRAYAR

Centenary Revised Edition
1988 March

Published by
S. T. R. PUBLICATIONS
P. B. No. 1057, Cochin-682 011

Printed at
S. T. REDDIAR & SONS (Ekm.)
COCHIN-682 035

Price Rs. [redacted]

பிறகடனபப்த்திரம்

இப்பரதகண்டத்தில் புகழ் பெற்ருேங்கிய அயோத்திமாநகரத்தின்கண் சக்கிரவர்த்தி திருமகனுக அவதரித்த ஸ்ரீமன்நருயணமூர்த்தியின் திவ்விய சரித்திரமாகிய இராமாயணத்தை அருணுசலக்கவிகளால் இயற்றப்பட்ட இராமநாடகத்தை இன்னுட்டில்வசிக்கும் சிலர் அறிந்தும் சிலர் அறியாதும் இருப்பதால் யெல்லார்க்கும் பிரச்சித்தம் ஆகும்படியாக விருப்பம்உற்று சொற்ச்சோர்வு பொருள்ச்சோர்வு இல்லாமல் உயர்ந்தகிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு காலிக்கோபயிண்டுசெய்து விற்பனேக்கு தயாருகஇருக்கிறது கனவான்கள் அடியில்க்கண்ட அச்சுபெந்திரசாலேயில் பெற்றுக்கொள்ளக்கேட்டுகொள்ளுகிறேன்.

இங்ஙனம்.


15 - 10 -1083

S. T. Reddiar,

விதியாபிவர்த்தினி பிறஸ்

கொல்லம், திருவிதாங்கூர்.

ஸ்ரீ



இராமாயண ஓரடி கீர்த்தனை

விருத்தம்

ஏர்கொண்டநான்மறையின் பொருளையெல்லாம்
இனியதமிழாற்செய்து தொண்டர்க்கீந்த
பார்கொண்டகுருகூர்வாழ் சடகோபாழ்வார்
பதமலரைப்பணிந்து திருச்சென்னைமேவுந்
தார்கொண்டபுயாசலன் ஒப்பில்லாவீரன்
சதுரன் அயன்றொழும் ராமசந்திரமாலின்
சீர்கொண்ட திருஅருளின் பெருமைதன்னைத்
தேறுவேன்மனமகிழ்ந்து கூறுவேனே

தோடிராகம்-ஆதிதாளம்

பல்லவி

கோதணடதிக்ஷாகுருவே பக்தரிர்தய
கோகனக மலர் மருவே

அநுபல்லவி

தாதண்டுமலர்சோலை-விண்கற்பகத்தின் மேலே
தழைக்குஞ்சென்னைநகர்வாழ் - ஸ்ரீவெங்கடேச மாலே
பூதகிமுலைஉண்ணல்போல் - ஆவிஉண்டொருக் காலே
போற்றும்யாதவற்க்கின்பந் - தேக்கச்செய்தாய்பரி வாலே
புத்தமுதத்தினை நற்சுரருக்குமுன்
உற்றிடமிக்க அளித்திடுசற்குணா
பூஜிதம்பெறு ராமசந்திர
னேசவுந்தர ரூபாஞ்சித

புகழலர்மகள்தழு விய அதிபுஜபல
மிருபரிமளமுறு துளவணிரவிகுல
புண்யநீடும்அண்டபகிரண்டங்களைஉ ண்ட
திவ்யனே அகண்டபுகழ்கொண்டபிரசண்ட (கோதண்)

தசரதன்சுதனுவுதித்து

தரணிமன்னர் மன்னவன் அதிபுஜபல (தசரதன்)
தகைமைவாய்ப்பஉயர் மனுநெறிமுறைகொடு
நகுமயோத்திநகர் அரசுசெய்ரவிகுல (தசரதன்)
சர்ப்பராஜசய னத்தின்மீதுதுயில்
உற்றுவீறுபரவஸ்துவானதொரு
தசமுகனுல்இடர்படும் உயர்அமரர்கள்
நகையுடனே துதிதரநாரஉருவொடு (தசரதன்)
தார்புனைஈசனும்வின் சூரியனும்வேதனும்
மாமகவானும்அவன் பாலனுந்தேயுவுஞ்
சீர்அனுமான்சுக்ரீவனர்சாம்பவன்
வாலிஅங்கதனீலன் ஆய்வரவானவர்
வானரங்களாய்மண்ணினில் வந்திடச்செய்துமட்டி
தானவர்குலத்தைவிண்ணிற்சேர்த்திடக்கங்கணங்கட்டி (தச
சங்குசக்கரமுமங்களத்தினில்மி
குந்தஅற்புத அனந்தநற்றவனும்
வந்துதித்திடநினைந்திடத்தரையில்
சம்பரமத்தில்இல குஞ்சுமித்திரையின்
தன்னிடம்லட்சுமனன் சத்துருக்கனும்கைகேசி
மின்வயற்றிற்பரதனுந் தம்பியர்ஆய்சனிக்கத்
தான்எண்ணிகோசலை வயற்றிற்சித்திரைமாதம்
ஆனநவமிபுனர் பூசநக்ஷத்திரநாளில் (தசரதன்)
சந்திரவிம்பமுக முங்கிர்பைவளர்தரு
இன்றகண்களுநெடுஞ்சிலையெனுநுத
லுஞ்சிறந்தபவளந்தனைநிகரத
ரந்தருந்தஒளிர் குண்டலம்அணிசெவி
களுநிலவெறிகமு கினைநிகர்களமொடு
விரைகமழ்துளவணி புயமலர்களும்அலர்
கமலமலர்அணைய கரமலர்களுமநெடு
உலகம்அதனைஉணும் அழகியவயிறொடு
தாரணிமார்பும்வன் டாமரைத்தாள்களுஞ்
சாமளமேனியும் ராமநன்நாமமும்ந்
தயங்கஅருமறைஉணர்புங்கவர்மிகு
ஜெயம்விஜயபவனமங்களமொடு (தசரதன்)

தசரதன்சுதனு வுதித்து தனுவிற்கதிந்து
தாடகைபாவியை வதைத்து

விசுவாமித்திரனுடன் மிதிலைக்குச்செல்லும் போது
வேதச்சிரத்தில்நடம் ஆடும்சீர்பாதப் ... போது
இசைவுறப்பட்டளவில் அகலிகைஎன்னு மாது
எழுந்தாள்கல்லுருமாறி இது அல்லாமல்மண் மீது

இந்தரபோகசன கன்வில்லைரண்டு
துண்டமாகவொடித் தான்அதைக்கண்டு

சுந்தரிசீதையைத் தந்தனனேமகிழ்
கொண்டிடவேமண மானபின்னெவரு

கின்றவழிஅதனிற் பரசுராமன்வில்மு
றிந்திடவேசெய்து சனகியோடயோத்தி

வந்துகூனிகல கந்தனல்அரசி
ழந்துநீடுபுகழ் தம்பியோடுமலர்

மங்கைசீதைபதம் நொந்துவாடிவர
கங்கைமானதி கடந்துவாசமலர்க்

காவிரிதருசித்ரா கூடபர்வதத்தில்
மேவிபரதனுக்குப் பாதுகைஅளித்தபின்

விரிதண்டகவன வழிகொண்டதில்அத்
திரியென்றிடுதவ முனிவன்கிர்பைபெற்

றிட்டபின்புவிராதன்இருகைஅது
முட்டவிண்டிடவேசெய்துசரபங்க

முனிவனஆசிர மந்தனிலேஎழிற்
சனகியோடெய்தி இந்திரன்போனபின்

தண்டகாரண்ய வாசிகள்படுதுயர்
கண்டனேர்இடர் தீர்தரஇணை அற

கருணைகொண்டேஅந்த வனமதிற்பத்து
வருடம்நின்றுவரும் வழியிற்சுதிட்ட

மாமுனிவரங்கொண்டே அகஸ்தியன்றனைக்கண்டு
சேமவிற்சரங்கொண்டு துதித்தவன்றனைவிண்டு

சென்றுசடாயுஉற வாடப்பஞ்சவடியில்
நின்றுவிடாதமய லோடுகெஞ்சியபெரு

நீசூர்ப்பனகைகாது மூக்கரிந்து
காலனூர்க்குநிகர் ஆகப்போர்க்குவந்த

கரதூஷணத்திரிசிரசன் ஆதியரை
அரைநாழிகைதனில் மறவிநாடதனில்

அனுப்பிமான்உருவாய்வந்தமாரி
சன்கையாற்பிடித்திடவேபோன
தருணங்கண்டிராவணன் தபசிபோல
விரைவில்வந்துசீதையை நிலத்தினோடு
மேல்எடுத்துச்செல்லும் பொதுசடாயுவின்
ஆவிஇனைவதைத் தசோகவனத்தினில்
அரியசிறையில்இட வேசானகிதன்னைப்
பிரியும்அதிகதுயர் ஆலேசினம்நண்ணிப்
பின்மதிக்கவந்தனைச் சொர்க்கமேற்றிச்சவரி
சொன்னவிதங்கொடு சுக்கிரீவனைத்தனது
சொந்தம்ஆக்கிஅக்ரமமிகுவாலிதனை
மூந்தவாட்டிவிக்ரமஅனுமானைஅளி
மொய்த்தகுழற்சீதைதனைத் தேடவிடுக்கஅவன்
உத்தமசம்பாதிதன்னால் உளவறிந்துகொண்டு
ஒப்பில்லாதவிஸ்வரூபங்கொண்டுமயேந்திரம்வழிச்
செப்பமாய்க்கடலைத் தாண்டிலங்கையிற்சேர்ந்து
திடமுறுலங்கணியை முதற்பலியிட்டுச்சீதையைக்
கடிபெறுலங்கைஎங்குந் தேடிக்காணுமற்பின்பு
காவல்மிகும்அசோகவனத்திற்றிரிசடையன்பு
மேவக்காத்திடவட முகம்பார்த்திருக்கக்கண்டு
விஜயகோதண்டராம தூதன்நான்யென்றுசொல்லி
நசைதருங்கணையாழி கொடுத்துத்திடமுங்கூறி
நாயகிசீதைதந்தசூடாமணிகைக்கொண்டு
தீயகிங்கரர்எண்ப தாயிரம்பேர்களோடு
செழுத்தஅசோகவனத்தையும் அழித்திடகண்டெதிர்த்தக்
கொழுத்தராக்ஷதசேனை யொடுசம்புமாலிமிகுத்த
கொடுமைசெய்பஞ்சசேனாதிபர்களும்அக்ஷதனும்
மடியநாற்பதுவெள்ளம் அரக்கரோடிந்திரசித்தன்
வந்துபோர்செய்யஅனுமந்தன்அந்ததளத்தைச்
சிந்துசிந்தாக்கிஇந்திரசித்தன்தேரைஅழித்துச்
சிலையைமுறித்துமுடித் தலையைஉடைக்கஅவன்
வலியப்பிரம்மபாசத்தாற் கட்டராவணன்அப்பொ
வாலில்நெருப்பைஇடஅந்தநெருப்பைலங்கையின்
மூலைக்குமூலைஇட்டுக் கொளுத்திநீறாக்கிவிட்டு
உளமகிழ்கொண்டுமீண்டு வந்துசாமியைசேவித்து
அளிதிகழ்சூடாமணி தரக்கண்டுமகிழ்ந்தபின்பு
அடல்மிகுத்தஎழு பதுவெள்ளவானரப்
படையும்ஒப்பில்அதின்அதிபரும்நீடிப

பரிவொடுதென்கடல் அருகில்நிறைந்தபின்
சரணம்அடைந்துநின் துணை அடிதந்தருள்

சாமிஎன்றவிபீஷணன்றனக்குலங்கா
பூமிதந்துவிகாதஞ்செய்தவருணன்மேற்

பொற்கணைவிடுத்தவனே வரச்செய்துபுஜபல
சித்திரக்கவிஇனங்கள் அதைக்கொடுவிரைவொடு

சேதுபந்தனஞ்செய்வித்த நீள்கடல்வளைந்திடு
மாதிரம்பயந்திடச் செய்ராவணன் இலங்கைதன்னை

வந்துமுத்திகைசெய்துகொண்டு தம்பிஅங்கதன்மீதும்
மூநதுவிக்கிரமஅனுமந்தன் அம்புயந்தன்னிலும்ஏறி

மூதண்டந்திகில்மேவி அதிர்ந்திட
கோதண்டந்தனில்நாணொலிகொண்டுற

குரைகடல்வெருவிட நெடுநிலம்அதுதனை
ஒருசுமைஎனஉறும்உரகன்உடல்நெளிய

உயர்மதிகதிர்வழிபிசகிடநெடுவரை
அயற்தரவுடஇனம்அதுதரையில்உதிர

அணிரதகஜபரிபரிசனவகைமிக
அணிஅணியொடுவர அதிவலிமைகள்சொலி

அனல்கக்கிடும் அத்திரசத்திரமழு
கனசக்கரம்நெட்டயில் பட்டயமொடு

கதிர்வீசுங்கதிர்முத்தலைசூலங்
கதைவார்அஞ்சிலைக்கொடுதாளங்

காளஞ்சிசின்னந்தாரைகள்மத்தளபேரிகள்பலவித
மேளம்பின்னும்நாகசுரத்தோடுபூரிகைஒலிதர

வீரராவணன்தேரில்ஏறிபோர்களத்தில்வந்து
சேரவேஅவன்சேனை வீரர்யரும்போரில்முந்த

தீயவச்சிரமுஷ்டி துன்முகன்சுபாரிசன்
மரயபிரகஸ்தன்கெட்ட வன்மனங்கொள்நீசரை

வாளரவீரர்கள்கொல்லராவணன் இவரைவெல்ல
சானகிமணாளன்வில்விற்சேனைமாரிஎன்றுசொல்லத்

தகுஞ்சரங்களைவிட்டு அவன்தேர்வில்லைமுறித்துத்
திகள்மணிமுடிபத்துந்தரைமேல்உருளச்செய்து

திடமொடுசண்டைசெய்யநாளைவாஇன்றுபோவென்று
விடைதரமனம்நொந்துதனியாய்போய்லங்கைசேர்ந்து

வெற்றிசேர்கும்பகர்ன்னனைநித்திரையில்இருந்தெழுப்பி
அத்ததியில்ச்சண்டைக்குவிடுத்திடஅவன்களத்தை

அடுக்காகவன்அம்பு தொடுக்கவேகும்ப்கர்னன்
நொடிக்குள்காலுங்கய்யும்பொய்படிக்குள்ளேமுண்டமாகி

நொந்துபின்சாமிதனைச் சிந்தனைபேசி
இறந்ததைராவணனறிந்ததிகாயனை
அனுப்பஅவன்பரிசனத்திரளினேடு
மூனைத்தலைவர்களுஞ்சமர்க்களம்அணுகி
மூச்சிரத்தன்வயமஸ்தன்கும்பன்தேவாந்தகனும்
அச்சமற்றரணமஸ்தன்வம்பன்நராந்தகனும்

அனுமான்முதலோர்கையால்மடிந்திட அதிகாயன்
சினமாகியிளையோனேடமர்செய்துமுடிவாகச்
செய்திதெரிந்திந்திரசித்தன்தேரிலேறி
வெய்யச்சதுரங்கம்மொய்க்கப் போரில்வீறி
விஞ்சும்சுக்கிரீவன்பனசன்சாம்பன்அனுமன்
வஞ்சம்அற்றநீலன்முதலினோர்களதமையும்
வாட்டக்கண்டுலட்சுமணன்தன்வில்லினிற்சரம்
பூட்டஇந்திரசித்தன்ரதகஜபரிசனம்

புரவியாவற்றுமாண்டுதானும்மிகமெலிந்து
இரவில்நாகபாசத்தை ஏவஅதனல்நொந்து
இலட்சுமணன்முதலோர்களத்திற்படுக்கராமன்
அக்கணமவ்விடமேவிதிகைத்துவருந்தும்வேளை
அடல்சேர்கருடன்வரநாகபாசந்தெரித்து
விடயாவரும்எழுந்துபோரில்வீறிக்கதிக்க
மிதம்அற்றசேனைசூழஉக்கிரம்கொண்டுவந்தெதிர்த்த
மதம்உற்றசூரியகெதுவச்சிரதந்தன்பெரும்பக்கன்

மாலிசிங்கன்பேயன்பரிதிகன்னனையும்
ஆலம்அஞ்சுந்தீயகுருதிக்சன்னனையும
ஆர்கருங்கவித்தலைவர் மாய்க்கராமலட்சுமணர்
தாக்கமகரக்கண்ணன் அக்கினிகேதுமடிய
தசமுகன்அதைத்தெரிந் திந்திரசித்தனைவிட
வசைகொள்ளும்அவன்களம்வநதுலட்சுமனனுடன்
வாதுசெய்யஇளையோன் அப்பேதுசரமாரிவெய்யன்
மீதில்எய்யஅதனல்அப்பதகன்திரோகம்நைய

விண்ணில்மறைந்துதன் னூரைச்சேர்ந்துசூது
பண்ணிவெல்லஎண்ணி போருக்கம்பனேடு
பாவிமகோதரனை ஏவஅவர்கள்களம்
மேவிபலத்துடனெ ராவில்அமர்புரிய [பின்
வீறும்அனுமான்தன்னல் அகம்பன்கும்பன்சிரங்களுருண்ட
சீறும்மகோதரன்கைச்சரங்கள்அழுந்திடவருந்திஇளையவன்

திகைக்கும்வேளையில் இந்திரசித்தன் அங்குவந்துசோபித
மிகுத்தபிரம்மாஸ்திரம்விடுக்கத்தம்பிமுதலோர்சாய்ந்திட
வித்தகஸ்ரீராமன்கண்டுமெத்தவும் ஆகுலங்கொண்டு
சித்தப்பிரமைஆக அன்றுஉத்த அனுமான்சென்று
செழித்தசஞ்சீவிபருவதத்தைக்கொண்டுவந்தபின்
பிழைத்தனைவரும்போருக்கெதிர்க்க இந்திரசித்தென்னும்
பித்தன்மாயாசீதையை வெட்டிநிகும்பலயா
கத்தின்சாலைசேர அதைத்தெரிந்திளையவன்

கணைமழைபொழிந்தரக்கன் செய்யும்யாகமழித்து
க்ஷணமதில்அவன்சிரத்தைககொய்துதேவர்துதிக்கச்
சாமிபாதநேரில்வைக்கராவணனறிந்ததன்மேலமர்செயவிட
பூமிபாரமானதுஷ்டமூலபலங்கள்ஓர் ஆயிரம்வெள்ளமும்
போரிலேறுதல்கண்டுவானரவீரரோடவேலன்றியாகிய
தீரராகவன்சண்டைமாருதம்ஆகிநீசர்கள்பஞ்சுபோலேகெ
திவ்வியமோகனாஸ்திரம்விளங்கும்ராமனுகத்தேன்றிட [ட
வெய்யர்யாரும்பார்க்குள்தாவிதங்களிற்றூங்களேமாண்டபின்

வேதனையேசெய்யும்ஜாதககாதாக
பாதகனானமகோதரன்போர்செய்து
படையும்போய்ராகவன்கைக்கணைதன்னால் ஆவிவிண்டு
மடியவேராவணன் துர்ச்சகுனம்மென்மேலுங்கண்டு
வந்துபெருஞ்சண்டைசெய்யசாமிராவணன்பத்துசிரத்தயும்
விந்தைஅம்புகொண்டுகொய்யகோய்ய மீண்டும்மீண்டுமுளைக்க
வேளையிலேஇதமாகபிரதாபகு [அவ்
னுளவிபீஷணன்ஓதும்உபாயத்தி
னால்இணையறுபிரம்மாஸ்திரம் அதனைவிட்டு
ஆலம்அணையவிழிராவணன்நாபியில்வைத்த
அமர்தகலசத்துடன்முடிகள்சிதறச்செய்து
இமையவர்முனிவர்கள்படுதுயரம்ஒழித்து
இணையில்எழற்சனகிதீயினிற்குளித்தபின்பு
துணைவன்கவிப்படைவிபீஷணனுங்கற்ப்பிலங்கு

தூயசீதைததன்னோடுபுஷ்பகமீதிலேறி முன்வினைமுற்றிலும்
மாயவேசெய்கின்றமகத்துவமானசேது அண்டயில்ஒப்பறு
மாதேவற்கன்றுநீராட்டி இறைஞ்சிதிரும்பிமுன்வந்தவழிகளை
சீதேவிக்கன்போடுகாட்டிமகிழ்ந்துநடந்துபன்னருந்தவநிலை
திகழும்பரத்துவாசன்மடத்தினிற்சேர்ந்தபின்திடத்துடன்அ
புகழும்பரதராஜன் இடத்தினிற்கேவிடநொடிக்குள் [னுமானை
போதுசாமிவரவைக்காணோனென்றுபரதன் [ளே அவன்பொ
ஓதுந்தீயினில்விழப்போகக்கண்டு அனுமான்

ுமாமிரந்தந்துபதருசோகுபதிவர முனிமடம்வந்துசேர்ந்தா
[னென்று
ஆதாவுஞ்சுபமும்கூறிபா தனிடம்விடை விவ்விடைகொண்டுஆ
[ஞ்சனேயன்
அக்கணந்திரும்பிலோகரக்ஷகன்உன் னும்வேளைக்க
ணாக்கணம்முந்திவந்தோ தப்பக்ஷங்கொண்டவனைக்கூட
வைத்துவரதன்பொசித்து புஷ்பகமதிர்கதித்து
சத்யபரதன்துதிக்கஉத்தமகுகன்மதிக்க
தகைமைமேவிய அயோத்திநகரில்வந்து
திகழும் மூவுலகம்போற்றஒளிசிறந்த
சித்திரமிகுந்தசிங்காசனமீதினில்
அற்புதம்உற்றசெந்தேன்மொழியாள்எம
தன்னைசீதையோ டமர்ந்துபேரிகையு
மன்னுதாளமிரு தங்காகசுர
வாத்சியம்ஒலிக்கவருசார்மருமலர்கொடு
நாற்றிசை இறைக்கவெகு முனிவர்கள்மணிமுடி
நரபதிகளும்வா னரபதிகளும்பூ
சுார்துதிசொல்லவெ கவரிகள் அருகே
தூயலட்சுமண னுடன் சத்துருக்கனும்வீசிட
நேயம்உற்றபாதன்உட்களித்திதம்பேசியே
நிலவெறிதருசந்திரவட்டகுடைகவிக்க
பலமிகுஅனுமந்தனற்றுணை அடிபிடிக்க
பகர்வசிஷ்டனுல்மகுடாபிஷேகங்கொண்டு
ஜெகதலத்துளோர் துதிபேசச்சேர்வைதந்த
தீனதயாநிதியே அடியார்உள
மேநிலையாய்நிதம் வாழ்வரதாஉயர்
வேதர் அரிஅணை மேவுவினோதா
தாதாசுரர்முதலோர்துதிபாதா
சதுரனேசரா சரங்களைத்தருமூல
துதிசெய்ராஜசே கரன்றமிழ்க்கனுகூல
சுமுகசுகுணசுந்தராங்கசுகிர்தநய
விமலவிபவவிந்தை யோரங்கிடுமிகுஜய
கோதண்டதீக்ஷகுருவே—பக்தரிர்தய
கோகனகமலர் மருவே

இராமாயண ஓரடிகீர்த்தனை
முற்றிற்று

உதவிசிறப்பு.

இஃதுசிம்றேரி

அருணகிரிமுதலியார்பேரில்.

தரு- புன்னகவராளிராகம்-ஆதிதாளம்,

பல்லவி.

அருணகிரிவள்ளலைப்போலே இசை ஆர்பெற்றார்இந்தபுவி (மேலே)

அநுபல்லவி.

தெருண்மிகுந்திடு தீரன்-சிற்றேரிஎன் னும்ஊரன்
அருஞ்செங்குவளைத் தாரன்-அற்புதம்சேர்வசீரன்
ஆழிசூழ்உலகம் ஏழும்மதித்திட உற்ற
வாழ்வினல்உயர்வு சூழ்வுறநிலைக்கப்பெற்ற(அருண)

சரணங்கள்.

சண்பைஅருணசலப் பண்புறுகவிஞன்சொல்
தின்பெருராமநாட கம்பெருகப்புவிமேல்
தன்இதயத்துள் மதித்துப்புலவர்களால்
நன்னயம்ஆகச் சோதித்து-இசைதாளங்கள்
முன்னிலும்பாங்கா அமைத்து-நற்சரஸ்வதி
என் னும்அச்சினிற் பதித்து-விளங்கச்செய்த
இக்கினும்நற்சுவை யைத்தரும்அற்புத சொற்புகல்விற்பனம்
ஈசன்மீதுமலர் வீசியசுகந்தமாரன்(உற்றிடுகொற்றவன்
மாசில்லாதநிதி பூசிதைமிகும்குபேரன்(அருணகிரி)
தேசமையும்செங்கோல்வி லாசமாநட்த்தும்
ராசர்களும்புகழ்ந்து பேசவரும்புருஷ
சிங்கம்ஏ னும்கெம்பீரன்-குளோதிங்குபோர்டில்
தங்கிய விவகாரன்-பலபாஷாப்பிர
சங்ககன ஒய்யாரன்-பலம்கொள்சது
ரங்கதள வில்வீரன்-நினைவிசிஷ்ட
அத்துவி தப்பரி சுத்தன்ன வர்க்கும்அ னைக்குநி கர்த்தம னத்த
காதிபன்கனக சோதிமுடிபுனைதூயன் (ன்அணைத்துல
வேதமும்துதிசெய் மாதவனைநினைநேயன் (அருண

தலத்தினில்உயர்ந்துநன் நலத்தைஉற்றிடும்கங்கா
குலத்தில்அவதரித்து சுலட்சணம்உற்றமிகு
சத்வகு ணவிலாசன்-முத்துபூபன்த
வத்தில்உ தித்தபாலன்-மாதர்மகிழ்வி
சித்திர இங் கிதலோலன் செல்வம்நிறைந்த
நித்தியமங் களசீலன்-பனதில்என்றும்
நிற்பயம உற்றிடு சற்சனர் மிக்கவி யப்பின் ஓதைத்தும திக்கும்
நீடுமேருஎன நாடுபுயசுந்தரன் (அருட்கடல்)
ஈடிலாதபுகழ் கூடியசுந்தரன் (அருண

———:0:———

உதவிச்சிறப்பு

இஃது-மண்ணடி

வெங்கடசுப்பராயபிள்ளைபேரில்

கியால்மெட்டு

தரு-பைரவிராகம்-அடதாளம்சாப்பு

பல்லவி.

இப்போதே அழைத்துவா போடிசேடிநீபோய்
ஒப்பில்வீராசாமிசெய்த வப்பயன்எல்லாம்உருக்கொ
டிப்புவியில்வந்ததெனும் சுப்பராயமகிபனை (இப்)
ஆவலுடன்பாடிவரும் பாவலர்க்கருள்காரனை
மாவலமைஉடையோனை கோவைசிகாமணியை(இப்)
நீடியபுகழ்சேர்ஆயர் பாடிவளர்கண்ணன்அடி
காடிமலர்சூடிஇசை பாடியகுணகரனை(இப்)
ஓங்குபுகழ்கெவுனர்மெண்டு பாங்கியில்டிப்டிமானேஜர்
வெங்கடாஜலசெட்டியார்பாங்கனை இன்றீங்கன்முன்னே()
முத்தமிழினால்உயர்வு பெற்றபுலவோர்கள்இடர்
உற்றசமயத்தினிஅ டுத்துச்சேய்சகாயனை(இப்
ஆரம்எறிகடல்சூழும் பாருள்ளோர்புகழும்எழு
மூரினில்வாழ்ந்திடும்முல்லைத் தாரனைஉதாரனை(இப்
சென்னைபுரிமன்னிவளர் நன்னயகவுண்டாண்டு
சென்னல்ஆபீஸ்தன்னில்மிகு உன்னதஉத்தியோகனை(இ
மாபாவிகளைக்கொன்றேஇப் பூபாலனம்செய்யதேவ
கீபாலன்வளர்ந்ததந்த கோபாலகுலமணியை(இ

உதவிச்சிறப்பு.

இஃது

அக்கம்மாள்பேட்டை

வெங்கடாசலசெட்டியார்பேரில்

தரு ர்ாகம்-தோடி ஆதிதாளம்

பல்லவி.

செய்தார்புலவோர்களுக்கேசகாயம்செய்துகவிபெறுதல்ஞாயம்

அநுபல்லவி.

செப்யேஅனம்சேர் அக்கம்மாள்பேட்டைவாழ்
செயமுத்துவெங்கடா சலசெட்டியார்குமார
மெய்யேஉருக்கொண்டு வந்ததென்னவந்த
வெங்கடாசலதீர ஓங்குபுகழ்கெம்பீரா
வீராஅரிவையா மனமகிழ்மாரா
காார்காமஉள கர்ன்னு அவதார (செய்

சரணங்கள்.

சீதமதிவதனன் ஏதமில்சியகங்கள்
செய்தசகாயம்தன்னை மதித்து-பவணந்தி
சிறந்தநன்னூலில்அவன் இறந்தும்இறவாமலே
செய்தானேபாயிரத்துள்ப் பதித்து - பின்னும்
தீதில்அருணகிரி நாதருக்குபகாரம்
செய்துமனமகிழத் துதித்து-பிரவுட
தேவமகார்ாயனும் மேவித்திருப்புகழில்
திகழ்ந்திருக்கப்பெற்றுன்பார் கதிர்த்து-நாளும்
கோதிமொழிகள்ாாக வனைப்போல்மொழியும்சில
குணசிகாமணிஎன எவரும்புகழும்மேலா
குணமில்பாமலோ பியர்பிரதிகூல
குணம்உடையபுலவர் குலபரிபால (செய்
சங்கையில்லாமல்அந்த கொங்காாயர்முன்செய்த
காயத்தினுல்அல்லவோ நற்றூர்-வில்லிபுத்தூரர்
சந்திரசூரியருள்ள அளவும்தம்புகழநிற்க
சயாபாரதத்தில்பாடப்பெற்றூர்-கார்போற்சொரியும்

அமைகைஉடையதிரு வெண்ணைநல்லூர்ச்சடை
யப்பமுதலியாரும் கற்றூர்-கம்பருக்குமுன்
அகமகிழ்ந்திடவேச-காயம்செய்தோராம
யனத்தில்என்றைக்கும்நிலை யுற்றூர்-ஆதலினுலே
மங்களம்ஆம்செங்தோன்றி மாலைமருவும்மார்பா
வைசியகுலம்விளங்க வந்துதித்திடும்தீபா
மதுரம்ஒழுகமிருது மொழிபகர்பூபா
வரும்இரவலர்மகிழ அருள்பிரதாபா(செய்)

அழிவில்வேதங்கள்ஓதிக்-கிழிஅறுத்திட்டபெரி
யாழ்வாருக்கோர்சகாயம் புரிந்து-பல்லாண்டில்
அகன்றஉலகீரேழ்உள்ளளவும் செல்வநம்பியும்
அமர்ந்திருக்கின்றுன்புகழ் விரிந்து-எங்கும்நிறைந்த
வழுவில்மாயவன்பால்வாள் வலியால்மந்திரங்கொண்ட
மங்கையர்கோனுக்குமுன் பரிந்து-சகாயம்
மகிழச்செய்தேபல்லவா ராயன்திருமொழியில்
வாழ்ந்திருக்கின்றுன்நீபார் தெரிந்து-இன்னமும் சொல்வேன்
ஒழிவில்லாமல்பல வோருக்களித்துச்சொர்ன்னம்
ஓங்குகவிபெற்றூரே உலகில்பிரபுக்கள்முன்னம்
உடல்பொருள்கள்எவையும் நிலையிலைபின்னம்
உறுதியிதுவேவேறு துதியிலைஇன்னம்(செய்)

நவமன்மதனைப்போல்உருவம் இருந்தென்சௌபாக்கிய
நலம்இருந்தென்என்றுள்ளம் வைத்தாய்-பாடும்
நாவலமைஉடைய பாவலர்க்களித்துப்பா
நாம்கொள்வோம் என்றுனந்தம் உற்றூல்-இந்த
புவியில்இப்படிசெய்தே கவிகள்பெற்றூர்என்றுன்தன்
புத்தியினுலும்ஆலோ சித்தாய்-நீயும்
புகழ்பெறஎங்கள்மனம் மகிழ்வுறச்செய்தெங்களால்
புத்தமுதம்பொலக்கவி பெற்றுய்இனிஓர்
சவியில்லாமானிடர்இப் புவிமேல்இருந்துமின்ன
தனகனகவஸ்துவா கனம்அனுபோகித்தென்ன
ததியினில்உதவிசெய் பவர்களில்உன்ன
தானேஇனிஎவர்கள்எ னினும்புகழ்துன்ன(செய்)

இகீர்த்தனைபாடிய

அருணாசலகவிராயரநுசரித்திரம்

தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் அருளிசசெய்த ஸ்ரீராமாயணத்தைக்கற்றும் பிறருக்கு உரைத்தும்தமக்கே ஓதியும்சபைகளுக்குப் பிரசங்கித்தும் சீதாலட்சுமண பரதசத்துருக்கன் அனுமச்சமேதர் ஆகியஸ்ரீராமச்சந்திர சுவாமியின் இடத்தில்பண்ணிய பக்தி உபாசனுபலத்தினுல் அதைக்கீர்த்தனுரூபம் ஆகிய ஓர் நாடகமாய்பாடி அதினுலேயே மகானுபாவரும் பிரபலரும் ஆகி நாடகக்கவிகளில் சிறந்த இக்கவிராயர்பூர்வம் சைனத்திற்பிரிந்து சைவத்திற்புக்க நீறுபூசி வேளாளப்பூவைசியரும் தில்லையாடியில் ஒருகுடியும் ஆகியநல்லதம்பியார் பிள்ளையும் அவரது கற்பபுடையமனையாள் வள்ளி அம்மாளும்புரிந்த சஞ்சித புண்ணியத்தால் இருவருக்கு ஒருதந்தையும் தாயும்ஆகும்படி சாலிவாகனசகம் ௧௬௩௨-ஆவதில், விஜையவருஷத்தில் அவர்களுக்கு ஒருசர்புத்திராாகவந்து உதித்தார்.

அவாகள் தம்மாபின் வழக்கத்திற்கு இசைய இவரது ஐந்தாம்வயதின், ஐந்தாம்மாதத்தின் ஐந்தாம்தினத்தின் ஒரு தமிழ்பள்ளியில் இவரை அமர்த்தினர்கள் இவர் தமது பன்னிரண்டுக்கு உள் சாமான்னியக்கல்விகளை அதில்கற்றூர் அவ்வளவில் இவரை ஈன்ரேரில் தாயார்முன்னும் தந்தையார் பின்னுஞ்சிவலோகப்பிராப்தி ஆனர்கள்.

இவரது தமயன்கள் மூவரும் வாலிபர் ஆகையால்இவர்வாசிப்பின்விசாரணை மட்டிட்டாலும் அகூழ் இவருக்குத்துணைக்காரணம் ஆனதால் இவர்அவ்விடத்திற்கு அருகே இராநின்ற தருமபுரததுச்சைவாதீனத்தை அடுத்து அதிலசிலதம்பிரான்களில்வடுகும் கிரந்தமும் தமது பதினெட்டுக்கு உள்ளேமிதமாககற்றூர்

பின்னும் இவாதமது பத்தொன்பதுமுதல் விசேஷகல்விகளைக் கற்தககருதி அவ் ஆதீனத்தில் சிலவரில் சைவாசாரத்திற்கு உரியநூல்கள் பலவும் கிரந்தத்திலும் தமிழிலும் கற்றூர் தமது இருபத்தைந்துவரைக்கும் அதின்பின் மற்றபல தமிழ்நூல்களிற் பயினறூர் அம்மடத்தில் இவர்க்கு பலபாஷைகட்கும் ஆசான்கள் பலர் ஆகிலும் தமிழிலே முக்கிய ஆசான் அம்பலவாணக்கவிராயர் என்றவர்,

அக்காலத்தில் இவரதுகல்வி அவாவையும் புத்தியி ன் கூர்மையையும் விரைவையும் நுழையவும் உன்னிய அப்பண் டாரச் சந்நிதி நீர்துறவுபூண்டு இவ் ஆதீனத்து தலைமையும் பூ ணுவீராஎன்று இவரைவினவிற்று அதற்கு இவா விடைதந் தார் சுவாமி ஸ்ரீராமாயணம் சொல்லுகின்றது தசரத சக்கிரவ ர்த்திமுதல் இல்லறம்பூண்டு பிற்பாடு துறவறம்பூண இச்சித் தார் அவரது திருக்குமாரர் முதல் இல்லறம்பூண்டு பின்புமன த்தால் முற்றதுறவு பூண்டிருந்தார் மற்றை மகாரிஷிகளும் எ ப்பொழுதும் முன்னதோடு கூடியபின்னதயை பூண்டிருந்தார் கள் என்று திருக்குறளிலும் இவற்றையேநோக்கி அற்பாலி ன் முதற்கண் இல்லறமும் பின்பு துறவரமும் நிறுத்தப்பட் டன, ஆதகலால் அடியேனும் இவ்விதியையே கைக்கொள்ள நோக்குகின்றேன் என்று அதற்கு அங்குற்றி அவ்வாறேசெ ய்யும் என்று ஆசீர்வதித்தது.

ஆகிலும் இவர்அப்போதெ தமது விவாககாரியத்தில் பிரவேசிக்க இல்லை இவரது கருத்து விவாகம் வித்தியாநாசம் யென்ற பழமொழியை மறவாமலும், தமிழ்கல்வியைச் சாதி த்தலுக்கே ஒப்பிக்கப்பட்டும் இருந்ததால் இவர்பின்னதையே விடாது முயன்றார்.

இவருக்கு வாது முப்பதில் அபிஷேகக்கட்டளைக் கரு ப்பூரில் தமது இனத்தாரில் இவர் ஒரு குமரிகன்னிகையை ம ணந்து அப்புண்ணியவதியோடு தில்லையாடியிலேயே வாழ்கை யில் தமது இல்லறத்தை நடத்துதற்குத் துணைக்காரனம் ஆகி யபொருள்களை ஈட்டுதற்க்காக ஓர் காசும்கடைதொழில் செய் தார்.

அதினால் இவருக்குமிகவும் சாவகாசம் நேரிட்டதால் அதுவரையில் தாம்கற்ற தமிழ்நூல்களில் ஸ்ரீவைஷ்ணவத்தி லும் சைவத்திலும் முன் அவதரித்த தெய்வப்புலவர்களால் ஆ கிய பன்னிருவராலும் நால்வராலும் தோன்றிய திவ்வியபிரப ந்தங்களும் திருமுறைகளும் வேதகமப் பொருள்களால் ஆகி ய தமிழ்கள் என்றும் இவ்விருமதங்களுக்கும் தமிழில் முதநூ ல்கள் என்றும் தமக்கு முன்னோர்கள் தாமே அமைத்ததால் அதுகளை ஒழித்து மற்றதுகளில் உலகத்திற்கு உபகாரியும் உப யோகியும் ஆகிஅருமையும் பெருமையும் உள்ள முக்கியமாசா ரம் ஆனவைகள் எவைகள் என்று அது நுட்பமாகிய தமது மதிநுட்பத்தால் உரைமாற்றுஇடைக்காணப் புகுந்தார்.

அச்சோதனையில் இவர் கம்பநாட்டாழ்வாருடைய ஸ்ரீ ராமாயணமும் திருவள்ளுவநாயனருடைய திருக்குறளும் மற் ற எல்லாதமிழ் நூல்களிலும் சீரிய கூரிய தீஞ்சொற்களாலும் செவ்வியமதுரம்சேர்ந்த நட்பொருள்களாலும் சிறந்தஅரியபெ

ரிய அதிகசாரம் உள்ள நூல்கள் ஆக நடுவுநிலைமையில் நின்றுக ண்டுகொண்டார் மேலும் தெய்வப்புலமைகளுடைய மேற்படி இருவராலும் தோன்றியஇவ்விருநூல்கள் உள்ளும் முன்னது வேதமாதா ஆகியகாயத்திரி அர்த்தம்உள்ள இதியாசம் என்றும் பின்னதுமனுமுதலிய தருமநூல் அற்த்தமுள்ள நீதிநூல் என் றும் இவற்றின் உண்மையைக் கண்டுகொண்டார்.

அதுமுதல் விசேஷமாஇவ்விருநூல்களிலும் பயிலு கையில்மதுரைச்சங்கப் புலவர்கள் துதித்த திருவள்ளுவமாலை யில்

வெண்பா.

எப்பொருளும்யாரும், இயம்பில்அடிவுறப்
செப்பியவள்ளுவர்தாம் செப்பவரும்-முப்பார்க்குப்
பாரதம்ஸ்ரீராமாகதைபழய மனுபண்டமறை
நேர்வனமற்றில்லைநிகர்.

என்று இராமாயணம் குறளுக்கு உவமிக்கப்பட்டதை நோக்கினர் அதினால்இவர் கண்டுகொண்டார், முன்னதில் சொ ல்லப்பட்ட இராம சரித்திரங்களே பின்னதில் நீதிகள்போலச் சொல்லப்பட்டன என்றும், ஆதலால் நீதிகள்குறளிலும் அ வற்றிற்கு இலக்கியங்கள் ஆகியநடைகளோடு, பகவத்குணாநு பவமும் ஸ்தோத்திரங்களும் இராமாயணம் முழுதிலும் இருக்கி ன்றன என்றும் இத்திடகியானந்தால் இக்குறளிற் பாற்கநிலு இவ்ராபயணத்தில்அதிகமாகபயின்றும் பாராயணித்தும் அனே கரைஓதுவித்தும் சபைகளிற்பிரசங்கித்தும் வந்தார்

இவ்வாறு நிகழ்கையில், இவர்தமதுதொழில் முறமை பற்றி பொன்வெள்ளிகொள்ளும்பொருட்டு, அக்காலத்தில அ வை நயமாகவிற்ற புதுவைக்குப் பயணங்கொண்டார் அதற்கு சீர்காழியால் போகல்வேண்டுதலின் அவிடத்தில் வந்து தரும புரத்து ஆதீனததைச்சார்ந்த ஒருமடத்தில் தங்கினர்.

அதற்கு அக்காலத்தில் கட்டளைதம்பிரான் சிதம்பரப்பி ள்ளைஎன்ற ஓர் கார்காத்த வெளாளர் தருமபுர ஆதீனக்தில் இ வருக்குச் சகலபடிஆன ஒருபாவலர் இவர் அப்பண்டாரச்ச ன்னதி நியமனத்தால் இல்லறம்பூண்டகாலத்திலே அவரும் அ ங்குற்ற ஏவலால் துறவுபூண்டு இதற்குக் கட்டளைதம்பிரான் ஆகி அங்குவந்திருந்தார்.

ஆதலால் இவ்விருவரும் சந்தித்து தங்களில் இருந்த நெடுங்காலப்பிரிவின்பரிவு அகலத்தழுவி சிலநேரம் குசலபிரசி னம் பண்ணினபின்பு அவர் அம்மடத்து அலுவலின்பேரில் அ ங்கு வந்ததின்மேலே அதின் முன்னையகட்டளை வருவாய்க்கு ஆகிலும தாம் அதிகம் கண்டதற்காகத் தாமேபாடின ஒருகட் டளை மாலையை இவருக்குகாண்பித்து அதற்கு இவரது ஒப்ப...

கொண்டார் சீர்காழிக்கு ஒரு பள்ளுபாடப்பீடிகை போட்டேன், பலசோலிகளால் அதைநிறவேற்ற எனக்குச் சாவகாசம் கிடைக்க இல்லை நீரே அதைமுடியும் எப்பொழுதும் இவிடம்விட்டு அகலாதேயும் என்று இவரைப்பிரார்த்தித்தார் அப்பள்ளின்பீடிகையைப்பார்க்க என்று அதை இவர்கையில் ஒப்பித்தார் இவர் அற்றை இராத்திரி மற்றைப்பொழுதிலேயே அதைமுடித்துப்போட்டார் ஆம் அன்றுவிடியலில் அதையும் தாம் அவசியமாய்ப்புதுவைமட்டும் போகவேண்டிய பயணச்செய்தியையும் அவருக்கு ஒப்பிக்கும்படி அதுகளை அவர் அடியான் ஒருவன்வசம்பண்ணி அவருக்குப்பயணம் சொல்லிகொள்ளாமல் தம்துகுறிப்பிடபோய்ச் சிலநாள்கள் அங்கயே தங்கிஇருந்தார்.

அத்தம்பிரான் அன்றுவிடிந்தபின்பு அப்பள்ளின்முடிவைக்கண்டும் இவரது பயணச்செய்தியைகேட்டும் ஆச்சரியப்பட்டு இவரையெவ்விதத்தும் இங்குதான்ன இருத்தவேணும்யென்ற மதிகொண்டு இவருக்குயென்று பெரியவீடுஒன்று சித்தம்செய்து இவரது குடும்பத்தை இவர்பெயராலே சீர்காழிக்கு அழைப்பித்து புதுவைக்குச்சென்ற உங்கள் யெஜமானும் இவிடம்வருவாரென்று அவர்களுக்குத்திடம்சொல்லி தாம் கட்டுவித்தஅவ்வீட்டில் அவர்களைக் கிரகபிரவேசம் பண்ணுவித்திருந்தார்.

இக்கவிராயரோ் தம் ஊருக்காகதிரும்பு காலில் வழிவாட்டால் சீர்காழி வந்து அம்மடத்தில் முன்போலஇறங்கினுர் அங்கு இவரைக்கண்ட சிதம்பரதம்பிரான் இவரோடுசம்பாஷிக்கயில் முன்பு தம்மோடு எச்சரியாமல் இவர் புதுவைக்கு வழிகொண்டதைப்பற்றி இவரோடுசற்றுநேரம் சலித்தபின்பு தாம் இவருக்குயென்று ஒருவீடுகட்டினதும் அதில் இவர்குடும்பம் குடியேறினதும் இவரோடு முன்னடி எச்சரியாமல் இவரும் உலாவப்பொகிறவர்கள்போல இவரைஇட்டுக்கொண்டு அந்த புதுமனையில் நுழைந்தார் இவர் தமது சமுசாரத்தை அங்குகண்டு ஆச்சரியப்பட்டு அவர்களாலேயே அவர்கள் வரலாறுதெரிந்து கொண்டு அவர்களோடு அம்மனையில் குடிவாழ்க்கைசெய்துகொண்டு சீர்காழியில்தானே என்றென்றைக்கும் வீற்றிருக்கும்படி அத்தம்பிருனல் வேண்டப்பட்டு அதுவே இருப்பிடம்கொண்டார் ஆதலால் இவர் அன்றுதொட்டு சீர்காழி அருணுசலகவிராயர் என்று சொல்லப்பட்டார்.

அங்கு இவர்வசிக்கயில் அத்தம்பிரானுக்காகப் பலதனிங்கவிகளும் சிலசில்லரைப் பிரபந்தங்களும் புனைந்துகொடுத்ததும் அன்றி அசோமுகிநாடகமும், சீர்காழிஸ்தலபுராணமும்

சொழிக்கோவையும்பாடி அநுமார் பிள்ளைத்தமிழ் தமக்காக வேபாடினர்.

அக்காலத்தில் சீர்காழிக்கு அடுத்த சட்டநாதபுரம் என்கிற அக்கிராரத்திலிருந்து வெங்கட்டராமய்யர் கோதண்டராமய்யர் என்கிற இருவர் பிராமணர்கள் சங்கீதவித்வான்கள் இவரிடத்தில் சிலசில்லரைப் பிரபந்தங்களில் பாடம்கேட்டபின் தெய்வப்புலமையை உடைய கம்பநாட்டாழ்வாராலே செய்யப்பட்டிருக்கிற ஸ்ரீராமாயணத்திலும் பாடம் கேட்டுக்கொண்டுவந்தார்கள் அவர்கள் இவரை ப்பிரார்த்தித்தார்கள் இதுவரையிலும் தாங்கள்செய்த பலபிரபந்தங்களாலும் புராணத்தாலும் நாடகத்தாலும் தங்கள்நாமதேயம் எங்கும்குப்பென்று பரவமால் இருக்கின்றதால் அதையெங்கும் பரவச்செய்யதக்கமுக்திப்பிரதானமாகிய ஒருபிரபந்தத்தைத்தீர்க்க ஆலோசித்து தாங்கள் செய்யதக்கதுஎன்று.

அப்பால்இவர்யோசித்து இதுமெய்யே இனி நமக்கும் உலகுக்கும் புத்திக்கும்முத்திக்கும சாதனம்ஆகிற ஒருகதையைப் பற்றிப்பாடுவோம அதுராமகதையே ஏன் எனில் ராமமந்திரம் பரப்பிரம்மத்தை குறிக்கிறதுதாரகப்பிரம்மமந்திரம் என்கிறது காயத்திரிக்கு ஒருசுருக்கம்ஆகியதுஸ்ரீமநாராயணன் பிரம்மாவுக்கும் பிரம்மாபரமசிவனுக்கும் பரமசிவன்பார்வதிக்கும் உபதேசித்தது இறக்கமுத்திஎன்கிற காசியில் யாவருக்கும அந்தியத்தில் உபதேசிக்கிறது அந்நூலோ பரப்பிரம்மம் தசரதனிலே அவதரிக்குமென்று அதைக்குறிக்கிறகாயத்திரி (உச அக்ஷரங்களையுடையஏழுகாண்டங்களாகிய எதுர்வேதமே ஏழுகாண்டங்களும் (உசஞ) கிரந்தமா கிராமனைக்குறிக்கிற புண்ணியகதாரூபமாய் மகாரிஷியும் ஆதிகாரியமுமாகிய வால்மீகிபகவானிலேஅவதரித்தது இதுகாயத்திரியாதலால் அன்றேபிரம்மகத்திமுதலானசகலமகாபாதகங்களையும் போக்குகிறது அன்றியும் தெரிந்தோதெரியாதோ திருத்தியோகுளரியோ பக்திஆயோ அபக்திஆயோ நினைவோடே நினைவுதப்பியோ அன்வயத்தோடே அன்வயம் இன்றியோ பொருள்உணவோடோ அதுஇன்றியோ ராமா என்றஇரண்டுஅக்ஷரங்கள் மாத்திரம்வரத்தக்க மராமரா இந்தவரப்பில் இராமல்போக்குதே ராமா இடியாதே மோராமகாராமணி ஆமாசீராம என்று இப்பேர்ப்பட்டவசனங்ளிலும் வாக்கியங்களிலும் ஒவ்வொன்றையே ஒவ்வொருவர் தங்கள் அந்தியத்தில் உச்சரித்து முக்தி பெற்றவர் அனேகர் இதை உசசரிக்கையில். ரா-பாவங்களைத்திரட்டிவெளிப்படுத்துகிறதும் அதுகள்மறுபடியும் உள்ளேநுழையாமல் வாயைமூடுகிற: இதினல் அன்றேமுன்னையபெரியோர்களில்.

நம்மாழ்வார்

நற்பார்இராமபிரானை அல்லால்மற்றும்கற்பரோ
புற்பாமுதலாப்புல் எறும்பாதிஒன்றின்றியே
நற்பால்அயோத்தியில்வாழும்சராசரம்முற்றவும்
நற்பாலுக்குற்றனநான் முகனார்பெற்றநாட்டுளே.

என்றார்படிக்கில் ராகவன்சரித்திரம் நொடிக்குள்போகு
மேதரித்திரம்என்றுபழமொழியும் இருக்கிறதுமேலும்சங்கரரா
மானுசமத்துவாசாரிறர்களாகியதிரிமதஸ்தாபனர்களும் இந்த
ராமகதையைநியமமாய் வீட்டிலும்வெளியிலும் பாராயணித்து
ம்கேட்டும் கேட்பித்தும்இகபரசௌக்கியங்களை அடையஎன்று
தாங்கள் சிஷர்களுக்குநியமித்தார்கள் அவர்களும் அப்படி
யே செய்கிறார்கள் என்று இந்தப்பிரகாரம் இராமாயணத்தின்
பலமகுத்துவங்களையும் தமது கல்விநிறைந்தகருத்தில் இவர்
தியானித்து இதையே தாமும் பாடத்தொடங்கித் தமதுகால
த்தை நற்போதாப்போக்க்த்தீர்மானித்தார் ஆகிலும் இவர்
இதை என்னரூபமாய்பாடத்தக்கது என்று மேலும் சிந்தித்த
து இதனை தெவப்புலமை ஸ்ரீமத் கம்பநாட்டாழ்வார் திரு
விருத்தங்களால் நிறைத்தார் பாலபாருதியார் திருச்சந்தவிருத்
ங்களால்நிறைத்தார் பின்னும் பலரும் பலவாராய் நி
றைத்தார்கள் ஆதலால் நாம் பெண்களும் பேதையரும் உணர
த்தக்க வெளிப்படையும் வழக்கமும் ஆகிய செந்தமிழ் சொற்
க்களாலே ஓர் நாடகம் ஆகிய கீர்த்தனரூபம் ஆகநிறைக்கக்கட
வோம் என்று நிச்சயித்தார் சங்கீதநடை தெரிந்த மேர்ப்படி
இருவர் ஆகியதமதுபிராமண சிஷர்களையே ராகதாளங்களுக்கு
உதவியாகக்கொண்டு இக்கவிராயர் அதை தொடங்கி நிறைவே
ற்றினார் அதின் விவரம் ஆவது இருவருக்கு இந்தநினைவு அங்க
தாரயபாரத்தில் தோன்றியதால் முற்றமுதல் அடடாவெளியே
புறப்பட்டா என்ற கீர்த்தனையை அதின் விருத்தத்தோடுமுடி
த்து அச்சிஷர்களுக்குக் கொடுத்தார் அதற்கு ராகமும் தாள
மும் அமைத்துக்கொண்ட அவர்களாலும் அதை அவர்களிட
த்தில்ககற்றுக் கொண்ட மற்றவர்களாலும் சிலநாள்
களுக்கு உள்ளே அது அங்குயெல்லாம் பரவின
தைக்கண்டு இராமாயணத்தில் கிரமமாக ச்சிலவிஷ
யங்கள் எடுத்துச்சில்காலத்தில் சுருக்கமாய் நூறுகீர்த்தனைகள்
அதிவிருத்தத்தோடு முடித்தார் அதுகளுக்கு எல்லாம் ராகதா
ளங்கள் அமைத்த அந்த பிராமணர்கள் சிவ்வென்று சென்னப
ட்டணத்திற்குவந்து அதுகளை அங்கேபாடிப் பருசுபெற்று
மறுபடியும் தங்கள்ஊருக்குத்திரும்பிப் போய் அதினால் தங்க
ள் கலியாணங்களையும் நிறைவேற்றிக்கொண்டுதிரும்பி இக்கவி

ராயர் இடத்துக்குப்போய் அந்தசெய்திகளை அவருக்கு அறிவி த்தார்கள்.

அதினலே இக்கவிராயர் பின்னும் ஐம்பதுகீர்த்தனைக ளும் விருத்தங்களும்பாடி முன்னதுகளோடு ஆதி அந்தம் ஒ ழுங்குபேறகோர்த்து ஒரு பிரகாரமா முடித்துக்கொண்டு சி ரங்கத்துக்குப்போனர் அதை அரங்கேற்ற பூர்வத்தில் கம்பநா ட்டாழ்வார் தமது ஸ்ரீராமாயணத்தைஅரங்கேற்றியஸ்தலம் அ துவே ஆகையால் அப்போழுது அக்கோவிற்றுறையார்கள் சொன்னர்கள் பூர்வத்தில் கம்பநாட்டாழ்வார் தமதுராமாயண த்தை பூர்வாசாரியார் ஆகிய ஸ்ரீமந்நாதமுனிகள் திருமுன்னர் பிராட்டியார் சன்னியதானத்தில் பெருமாளும் எழுந்தருளியி ருக்க அரங்கேற்றினர் அக்காலத்தில் பலதருமங்களில் பலஅ ற்ப்புதங்களை அவர் உலகத்திற்க்குகாண்பித்தார் அதைத்தா னே நீர் கீர்த்தனைகள் ஆகப்பாடினபடியால் அதைக்குறித்துப் பெருமாள்எங்களுக்கு நியமித்தால் இந்தநூல்அரங்கேற்றசம்ம திப்போம்என்று அதின்பேரில் இக்கவிராயர்தனியே ஓர் இட த்தில் இருந்து ஒருகீர்த்தனையால் ஸ்ரீரங்கநாயகரைத் தோத் திரம்பண்ணினர் அதுஇது.

தரு-மோகனராகம் ஆதிதாளம்

பல்லவி.

ஏன்பள்ளிகொண்டீர்அய்யா-ஸ்ரீரங்கநாதரேநீர்
ஏன்பள்ளிகொண்டீர்அய்யா

அநுபல்லவி.

ஆம்பல்பூத்தசய பறுவதமடுவிலே-அவதரித்த
இரண்டாற்று நடுவிலே (ஏன்)

சரணங்கள்

1. கோசிகன்சொல்குறித்ததற்கோ-அரக்கி- குலையில்அம்புதெரி (த்ததோ)
ஈசன்வில்லைமுறித்த தற்கோ-பரசு-ராமன்உரம்பறித்ததற்கோ
மாசிலாதமிதிலேசன்பெண்ணுடன் வழிநடந்தஇளைப்போ
தூசிலாதகுகன் ஓடத்திலேகங்கைத் துறைகடந்தஇளைப்போ
மீசரம்ஆம்சித்திரகூடச்சிகரக்கல் மிசைகிடந்தஇளைப்போ
காசினிமேல்மாரீசன் ஓடிய கதிதொடர்ந்தஇளைப்போ-ஓடிக்
களைத்ததோதேவியைத்தேடி இளைத்ததோமரங்கள்ஏழும்
தொளைத்ததோ-கடலைக்கட்டிவளைத்ததோ இலங்கைஎன்னும்
காவல்மாநகரை இடித்தவருத்தமோ
ராவணுதிகளை அடித்தவருத்தமோ (ஏன்)

2.மதுரையிலேவரும்களையோமுதலைவாய்மகனைதரும்களையோ
எதிர்எருதைப்பெருங்களையோகன்றைஎடுத்தெறிந்த பெருங்

[கலைபோ
புதுவைஆனமுலைஉண்டுபேயின்உயிர் போக்கிஅலுத்தீரோ
அதிரஓடிவரும்குரிவிவாயையிரண் டாக்கிஅலுத்தீரோ
துதிசெய்ஆயர்களுக்காகவெண்டிமலை தூக்கிஅலுத்தீரோ
சதிசெய்காலினால்காளிங்கன்மணிமுடிதாக்கிஅலுத்தீரோமருத்
சாய்த்தோ-ஆடுமாடுகள் மேய்த்தோ-சகடுருளை (தும்
தேய்த்தோ-கஞ்சன்உயிரைமாய்த்தோ, அர்சுனனுக்காகச்
சாரதியாய்த்தோ் விடுத்தவருத்தமோ
போரிலேசக்கரம் எடுத்தவருத்தமோ (ஏன்)
3. படிதனில்மெத்தவும்நானேஉம்மைபரம்எனவேஅடுத்தேனே
அடிமைகொள்விர்என்னைத்தானே-செம்பொன் அணிரங்கப்
(பெருமானே
தடம்உறைந்தகரும்பாறைசாபமது தடுத்துரட்சித்தீரே
விடலன்னுதகாகாசுரனுக்கொருகண்விடுத்துரட்சித்தீரே(த்தி
கொடுமைகொண்டழுத துரோபதைக்கு த்துகில்கொடுததுரட்சி
மடுவில்ஆனைமுன்ஓடிமுதலையைமடித்துரட்சித்தீரேஅதுபோல்
வாரும்-கிருபைகண்ணாலேபாரும் மனக்கவலை
தீரும்நினைத்தவரம் தாரும்தாரும்என்சாமி
வட்சமேவும்மக லட்சிமியுடன்பெரும்
பட்சம்ஆகஎன்னை ரட்சிக்கஎழுந்திரும்(ஏன்)

இந்தகீர்த்தனைக்காக பெருமாள்திருஉள்ளம் உகந்து இ க்கவிராயருக்கு சொற்பனத்தில், ஒரு ஸ்ரீவைஷ்ணவரைப்போல் வந்து ஓய்ராமநாடகப்புலவா முற்காலத்தில் கம்பநாட்டாழ் வார் ராமாயணம் அரங்கேற்றவருகையில் - நம்சடகோபனை ப் பாடினையோ என்று பெருமாள்கேட்க அவர் நம்மாழ்வா ர்க்கு ஒரு அந்தாதிபாடினபின்புதான் அதை அரங்கேற்ற நி யமித்தார் அவ்வாறேநீயும் உன்னுடகத்தில் நம்பெருமாள்பரிச னங்களைப்பாடில் உன்னூல் அரங்கேற்றும் என்றார் அவ்வண் ணமே பெருமாள் கோவிற்றுறை யாருக்கும் சொற்பனம் ச தித்தார் இவராலே அதைப்பாடிவித்துக்கொண்டு இவரது ராம நடகத்தை அரங்கேற்றும்படியா அப்படியே அன்று விடிந்தபி ன் இரு திறவரும் அச்சொற்பனங்களை ஒப்பிட்டுக்கொண்டவ ர்கள் ஆய் இவர் இன்னுடகத்திற்கு தோடயம்பாடத்தொடங் கி நம்பெருமாள் பரிசனங்கள் ஆகிய அனந்த கெருடவிசுவ க்சேனர் பஞ்சாயுதங்கள்ஆழ்வார் ஆசாரியர்கள் அனைவரையும அதில் அமைத்தார் . ஆகிலும் அத்தோடயத்தில் இருக்கின்ற விநாயகரோ அக்கோவிற்பரிவாரத்தில்இருக்கின்ற ஒருவர்தா ம் மேற்காப்புவினயகரோ சேனைமுதலியார் பரிவாரத்தில் ஒரு வர் இவ்விதமாஇந்நால் ஸ்ரீரங்கத்தில் பூர்வத்தில் தெய்வப்பு லமை கம்பநாட்டாழ்வார் தமதுராமாயணத்தை அரங்கேற்

ரிய கம்பர்திருமண்டபத்திலே அந்த பங்குனி அஸ்தநக்ஷத்திரத்திலேதானே திருவரங்கத்திருமுற்றத்து அடியார்கள்கோஷ்டியில் முதலில் அரங்கேற்றினர் அக்கோவிலாருடல் பலமரியாதைகளோடு பலபரிசுளுமபெற்றார்கள்.

அப்புறம் இக்கவிராயர் தஞ்சாவூர் சமுஸ்தானதிபதிஆகிய துளசிமகாராஜாவின் சபையில் இந்நாடகத்தை அரயகேற்ற வந்தார அந்நேரம் தஞ்சைக்கொட்டை சென்னபட்டணத்து நவாப் ஆகிய மதார்மல்கின் தண்டினல் முற்றிரிக்கையிடப்பட்டிருந்தது அச்சமயபேதத்தால் புதுவைநகரத்து ஆனந்தரங்கப்பிள்ளையின் சபையில் இதை அரங்கேற்றவந்தார் அவர் தமக்குமிகவும் இஷ்டராகிய துளசிமகாராஜா இதைகேட்டதற்குமுன் தாம்கேட்டால்கூடாதுஎன்று இவருக்குநானுவெகுமதியும்செய்து மணலி முத்துகிருஷ்ண முதலியாருக்குத் தகவுரைப்பத்திரிகையோடு இவரைச்சென்னைபுரிக்கு அனுப்பினர் இவர் அவிடம்சேர்ந்து அவருக்கு ஒரு சீட்டுக்கவிதைஅத்தகவுரை பத்திரிகையோடுவிடுததார்.

அது - இது - ஆசிரியவிருத்தம்

சித்திதருகிறவல்லிபத்திதருகிறவல்லி தேவர்கள்வணங்கும் வல்லி,தில்லைநாயகவல்லிசிவகாமிவல்லி இருதிருவிழிக்கருணையாலே, சத்தியவாசகன்என்றுபூமண்டலாதிபர்கள் தாம்எங்கனும் துதிக்கும், சகலபாஷாநிபுணமணலிமுத்துகிர்ஷ்ண சதுரநீவாழிகண்டாய், நத்துமலர்குவளைநான் மதியம்நீ செஞ்சாலிநாண கருவிமழைமேகம்நீ, நளினம்நான்பருதிநீபிள்ளைநான் அன்னைநீநான் கவிஞன்வழுதிநீகாண், சுதமுளராமாயணந்தனைக் கொண்டுஉனதுசுகமுமதுபெறவருகிறேன்,சொற்பொருள்அறிந்தளவுசொல்லுவேன்கேள்க்கவேதுணை ஆகவேணும்நீயே.

இதைஅங்கீகரித்த முதலியார் இவரைத்தமஇடத்துக்கு அழைப்பித்துதக்கமரியாதைசெய்து இவர்கேள்விக்கு இசைந்தார், அப்பால் இவர் ஸ்ரீராமகதையை ஸ்ரீமத்கம்பராமாயணத்தைப் பத்தி நாடகமாய் ஒன்று செய்திருக்கிறேன். அதையும் கூடவேதாங்கள் கேட்கவேண்டுமென்றார்அப்போது அவர்இவரைகேட்டார் சிலகாலத்திற்குமுன்இருவர்பிராமணர்கள் இராமநாடகம் ஒன்று கொண்டுவந்து இங்கேகீர்த்தித்தார்கள் அதுதானே இதுஎன்றார்இவர் அதுவும்நான்பாடியதுதான் அது ஒரு சங்கிரகம் ஆதலால் அதைமெய விரிவாய்பிறகும்பாடினேன்என்றார் முதலியார் அப்படியாஆகில் இரண்டும் ஏககாலத்திலேதானே நடக்கஎன்றார் ஆதலால் அப்பால்இவர் தமதுநாடகத்தை பின்னும் பலதருக்களாலும் விருத்தங்களாலும் புதிக்கிவிரித்தார் முதலியார்சபையில் இராமாயணப்பிரசங்கம் ஆரம்பித்தார், கூடவேஅங்கங்கே இக்கிர்த்தனைகளையும் விருத்தங்களோடு

அரங்கேற்றினர் ஆதலால் ஸ்ரீராமபட்டாபிஷேகத்தில் முதலியாரால்பலமேன்மைகளையும் பரிசுகளையும் பெற்றார் அதுகள் இக்கவியால் அறியவரும்.

ஆசிரியவிருத்தம்.

கனம்தந்தான் கனகாபிஷேகந்தந்தான்
கலங்கம்இல்லாக்காருப்பொருளை ஒழைத்துதந்தான்
மனம்தந்தான் முடிசூட்டுமாலைதந்தான்
வாணிசிங்காதனத்திருத்தி வரிசைதந்தான்
இனம்தந்தான் ராமகதைஎவர்க்கும்தந்தான்
எனோராமாயணகவிஞன் எனப்பேர்தந்தான்
அனம்தந்தான் மணலிமுத்துகிர்ஷ்ணபூபன்
அகம்தந்தான்இருமயிலும் சுகந்தந்தானே,

இப்படிமுத்துகிர்ஷ்ணமுதலியார் சன்மானம்செய்யப்பெற்ற இக்கவிராயர் பின்பு லிங்கப்பச்செட்டியார் குமாரர் ஆகிய தேப்பெருமாள்ச்செட்டியாருக்கு ஒருசீட்டுக்கவிதை அனுப்பினர் அது இது.

ஆசிரியவிருத்தம்

கணிகொண்ட பஞ்சலட்சணமும்ராமாயணக்கடலையும்உணர்ந்தபுலவன், கவிராசர்புகழ்கின்ற காழிஅருணாசலக் கவிராயன் எழுதும் ஓலை, மணிகொண்டமார்பிலிங் கப்பமகிபாலகன் மகிழ்ந்தசுதன்வனிகாதிபன், வருசீர்படைத்ததேப் பெருமாள் மகிபன் இதை மனம் உவந்தினிதுகாண்க, அணிகொண்டதியாகேசர் வண்ணம் உரைசெய்ததும் ஆதற்குவெகுமதிசெய்ததும், அதுநமக் குபகாரம் ஆனதும் இப்புவியில் அறியாதபேருமுளரோ, பணிகொண்டராமகீர்த்தனையும் அப்படியேபணிந்து நீகேட்கவேணும், பரில்ஓராயிரம் பிறைகண்டு நீபொருள்படைத்துவாழ்ந்திடுகமாதோ.

அவர்அப்படியே அதைககேட்டு இவருக்குகணிசமான பரிசோடு மரியாதைசெய்தார், பின்பு மதார்மல்க் நாவாப்போடு சமாதானப்பட்டிருந்த துளசிமகாராஜாவையும் அப்பால் ஒருபஞ்சரத்தின மூலமாஆனந்தரங்கபிள்ளையையும் பின்புஉடையார் பாளையத்துத்துரைகள்ஆகிய உவரங்கப்புடையாரையும் பின்னும் சிலபாளையப்பட்டுதுரைகளையும் இவர்கண்டு இதை அரங்கேற்றிபல நல்வரிசைகளும் மெய்வரிசைகளும் அவர்களால்பெற்றார்.

இவ்விதத்தால் இவர் ஈட்டியபொருள்களைக் கொண்டு தம்குடும்பத்தொடு கலாந்தபின், சிலவருஷங்கள் இருந்து சீர்காழியில்தானே விகாரிஞூ ஆனிமீ வைகுண்டபிராப்திஆனர் இவர்வேஷத்தில் கொத்துதாழ்வடம் தலையிலும் வெள்ளைவேட்டி

அரையிலும் தரித்து சைவபண்டாரங்கள்போல்இருந்தார் ஆம்.

இவர் தமது விவகாரத்தின் பின்தில்லையாடியில் ௰உ௵ வசித்து சிர்காழியில் உ௫௵ வசித்தார் இவருக்குவயது சுஎ-இவர்தமது சுய ஆம் வயதில் இக்கீர்த்தனைபாடியது இந்த கீலக வருஷத்திற்கு இதுபாடி ௱௯௰எ௵ ஆகிறது இவர் வைகுண்டபிராப்திஆகி ௱௯௰௵ ஆகிறது.

இவரதுசரித்திரம் இவரதுபேரும் இவர் குமாரர்கள் மூவரில் மூத்தவர் ஆகிய அம்பலவாணக்கவிராயருக்குப் புத்திரரும் இக்கீர்த்தனைக்குப்பிரசங்கியும் ஆகிய, சுப்பராயக்கவிராயராலும் பின்னும் அனேகர்களாலும் நாங்கள்கேள்விப்பட்டபடிக்கு எழுதப்பட்டது.

அமைத்தவர்கருத்து.

இக்கவிராயர் நிச்சயித்தபடி மகிமைஉள்ள இந்தஇராமாயணகீர்த்தனை ஆகியபுண்ணியநூல் வெளிப்படைஆனவழக்கச் சொற்களாலே செய்யப்பட்டிருந்தும், இடையிலே அவ்வளவும்தெரியாத சிலர் வாய்களில் அகப்பட்டு முடியஎழுத்தும் சொல்லும்பொருளும், அங்கங்கே சரணங்களும் வரிகளும் மிகுந்தும் குறைந்தும் ராகதாளங்களும்பேதித்தும் சிலவிருத்தங்களும்சிலகீர்த்தனைகளும சிலபுஸ்தகங்களிலேகுறைந்தும் சிலவற்றிலேமிகுந்தும் இப்படிக்கும் பலவிதங்களிலும் பிழைபாடங்கள் ஆய்விட்டது, இதற்க்குமுக்கியகாரணங்கள், இத்தமிழ்ப்பாஷையின்நடையில் அக்ஷரங்களைத்தொடர் எழுத்துகளா எழுதுகிற சந்திவழக்கமும் அவ் அக்ஷரங்கள் இயல்பாயே மிகுதலும் குறைதலும் மாறுதலும் அல்லாமல், வலிய அதுகளைமிகுத்தலும் குறைத்தலும்மாற்றலும் செய்கிறவிகாரவழக்கமும் தாம் இச்சந்திகளும் விகாரங்களும், இன்னஇடங்களிலே வேண்டத்தக்கதுகள் என்றுகற்ற இலக்கணப்புலவர்களில் சிலர் இன்னமும் தெளியாமல் இருக்கிறார்கள்.

ஆகையால் இந்த புஸ்தகத்திலே வாசிப்போர்களையும் பொருள்கொள்பவர்களையும், தடுத்தம்மருட்டியும் பிழைகளுக்கு உள்ளாகிற ஷை சந்திகளையும் விகாரங்களையும் அவசியமாய் வேண்டத்தக்க இடங்களிலேகொண்டும், வேண்டத்தகாதஇடங்களிலே விலக்கியும் கற்றவர்களுக்கே அன்றியும், மற்றவர்களாகிய பெண்களுக்கும் பேதையருக்கும்கூட்டத்தாட்டியாய்ப் படிக்கவரவும் சொல்லும்பொருளும் அவர்களுக்கும் விளங்கும்படிஆகவும் சொற்களைபிரித்திருக்கிறோம், ஏனனின், இந்த நூல் படிக்கின்றவர்களில் இச்சந்தியும் விகாரமும் வேண்டத்தக்கவர்கள் மிகவும் சிலர் அதைவேண்டாதவர்கள் மிகவும்பலர்

ஆதலால் பலருக்குபயன்படுவதையே முக்கியமாய் நாங்கள் வேண்டினேம், மேலும்எழுத்துநடை அல்லாதவர்களும் சங்கீத பயற்சிஇல்லாதவர்களும் கூடஇதனைப்படிக்கையில் எந்தெந்த விருத்தத்தையும் எந்தெந்தகீர்த்தனையும் சற்றேறக்குறைய எழுத்துநடைஅறிந்தும் சங்கீதநடை அறிந்தும்நடத்தும்படியா அதுகள்தாமே அவர்களைநடத்திக்கொண்டு போகத்தக்கதாக, அவ்வளவுபக்குவமாய்த்தகுந்தபடி பிரிவினைசெய்யப்பட்டிருக்கின்றது.

இதில்கீர்த்தனைகளும் விருத்தங்களும் நூறும்ஐம்பதும் ஆகக்காலானுகூலப்படி, பாடப்பட்டபடியால், அப்போதைக்கப்போது எழுதிக்கொண்டபுஸ்தகங்களில் சிலவற்றில் கீர்த்தனைகளும் விருத்தங்களுங்குறைந்து சிலவற்றில் அதுகள்மிகுந்தும் போய்விட்டதுகள் அவற்றுள் சிலபொருத்தம் இல்லாமலும் ஆய்விட்டதுகள். ஆதலால் நாங்கள் பல புஸதகங்களைக்கொண்டு பரிசோதிக்கையில் பொருந்தாமைகண்ட இடங்களில், எழுத்துகளையும் சொற்களையும் திருத்தினமாத்திரம் அல்லாமல் தனிச்சொற்கள் சேர்த்தோம் விருத்தங்களை உடைத்து பொருத்தினேம் நூதன விருத்தங்களும் பாடிச்சேர்த்தோம் கீர்த்தனைகளிலேகுறைவை நிறவாக்கினதும் அல்லாமல் நூதனகீர்த்தனைகளும் பாடிபதிப்பித்தோம் இக்கவிராயராலே பாடப்பட்டதுகளாகக் காணுமலும், கூறியதையேகூறியதுபோலக் கண்டதும்ஆகியசிலகீர்த்தனைகளையும், விருத்தங்களையும் கழித்துவிட்டோம்.

இந்தஇராமாயணகீர்த்தனையிலே நாங்கள்திருத்தியதுகளையும் கூட்டியதுகளையும் கழித்ததுகளையும், நங்கள் இருவரும் ஒருவருக்கொருவரே அல்லாமல் பின்னும் தகுந்தசில வித்வான்கள் சிலபுலவர்கள் சிலகவிராயமார்கள் சிலசஙகீதவித்துவான்கள் இராமாயண பிரசங்கிகள் சில கீர்த்தனைபிரசங்கிகள் போதாமைக்கு வால்மீகபிரசங்கிகள் ஸ்ரீமத் கம்பராமாயணபிரசங்கிகள் யாவரோடும் ஆலோசித்தேசெய்தோம். இதுகளைப்பார்க்கிறவர்கள் பொறுமையைவிட்டுபார்வையிடநாங்கள் பிரார்த்திக்கிறேம் ஏனெனில் பொறுமைஉள்ளவருக்குப் பொருளுண்மைதோன்றுதுஎன்றுபழமொழிஇருக்கிறபடியால் அப்படிசெய்வார்களாகில் அவர்கள் எங்களுக்குக்கொடுக்கும் வெகுமானமும் பரிசும் ஒரு சபாசும் ஒருசிரக்கம்பமும் ஒருகரக்கம்பமும் சாம்இவையும் செய்யக்கோருதவர்கள்அனேகர்இருப்பார்கள்.

சங்கீத வரதய்யன்கார் என்கிற இராமாயணகீர்த்தனைப் பிரசங்கிஆனவர் இதிலேநாங்கள் ராகங்களையும் தாளங்களையும் பரிசோதித்து நவரசங்களில் இன்னரசத்துக்கு இன்னராகமே

சரி இன்னதாளம்வேணும்என்று ஆராய்ந்துபதிக்கையில் அங்கு கூட இருந்து உதவிபண்ணினர்.

இதிலே அங்கங்கேகீர்த்தனைகளுக்குஇராகங்களும்தாளங்களும்நாங்கள் இன்னது இன்னதென்று போட்டிருந்தாலும் இராகதாளங்களுக்கு அதுவேநிபந்தனை அல்லசுதியினம் லயைக்கியானம் தெரிந்த மகாசங்கீதவித்துவான்கள் தங்கள்வல்லமைக்குத்தக்கபடி ஒருராகத்தை பலராகத்திலும்ஒருதாளத்தைபலதாளங்களிலும் பாடிக்கொள்ளலாம்.

ஸ்ரீராமஜயம்.

இராமநாடகம்.

ஆக்கியோன் பெருமை

கொச்சகக்கலிப்பா.

கம்பராமாயணப்பாற் கடலைஉண்டு
நம்பவரும்ராமநாடகமாம் மாமழையை
அம்புவியில்காழி அருணசலமேகம்
கும்புஉயிர்ப்பயிர்க்குப் பெய்துவினைகொய்ததுவே

மேற்காப்பு.

வழிபடுகடவுள்வணக்கம்.

விநாயகர்தோத்திரம்.

நேரிசைவெண்பா.

ஆனைமுகனே அரனார்திருமகனே
சேனையர்கோனுகவளஞ் செய்வோனே-ஞானமே
நாடகத்தைக் கொண்டஉன்றன் நல்லருளாலேராம
நாடகத்தைச் சொல்லுவேன்நான்.

க-வது-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விநாயகாசரணம்-ஜெயஜெய-விநாயகாசரணம்,

அநுபல்லவி.


அநாதரக்ஷகனே-கெஜமுகனே-ஐங்கரனேசிவசங்கரமகனே(வி


சரணங்கள்

க, அன்பிலாத பேயேன்-என்னுட
அறிவுவிளங்கவே துணை வருவாயே
என்குலதெய்வம் நீயே - இந்த
ராமநாடகத்துக் கனுகிரகிப்பாயே (விநா)

உ, வானவர்பணி வோனே - நல்ல
வாக்குத்தந்துகாத்தருள் சீமானே

நான்உனதடி யேனே - ராம
நாடகத்துக்கருள்புரிநீ தானே (விநா)
ரு, உண்மைஞானம் தோணும் - உன்றன்
உதவியாலேநல்லபுத்திகள் பூணும்
நன்மைசெய்திடும் காணும் - ராம
நாடகத்தைச்சொல நீமுன்னிற்க-வேணும். (விநா)





ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

இராமநாடகம்.

:0:

பாயிரம்.

ஏற்புடைக் கடவுள்வணக்கங்கள்.

அனுமார்தோத்திரம்

நேரிசைவெண்பா.

கோதண்டதீக்ஷா குருராமநாடகத்தை
தீதண்டா வாறடியேன் செப்புவேன்-கோதண்ட
மாருதியே அஞ்சனையாள் மைந்தனே நற்கருணை
வாருதியே நீதுணையாவா

உ. தரு-கலியாணிராகம்-ரூபகசாப்பு தாளம்

பல்லவி.

துணைவந்தருள்புரிகுவாய்—அனுமந்தா நீ
துணைவந்தருள்புரிகுவாய்

அநுபல்லவி.

துணைவந்தருள்வாய்நல்ல சொல்ப்பொருளதுபுல்ல
இணைஒன்றிலாதவல்ல ராமநாடகம்சொல்ல (துணை)

இந்தப் பல்லவியை இரட்டித்துப் பாடும்போது அனுமந்தாநீ என்கிறதற்குப் பிரதியாக (என்றனக்குற்ற)என்றும்(எனக்குப்பக்க)என்றும் சொல்லிக்கொள்ளவும்.

க. துஷ்டவாலிதோழமையை விண்டோனே - விண்டு
சுக்கிரீபன்தோழமையைக் கொண்டோனே-வெகு
திட்டமாராகவனைப்போய்க் கண்டானே - அவன்
செப்பியசொல்அமுர்தத்தை உண்டோனே-சுக்கிரீவன்

கஷ்டமும் அரசிழந்த
நஷ்டமும் அவனிருப்பும்
சட்டமாகச் சொன்னமாருதி
இஷ்டகருணைவாருதி (துணை)

உ. அஷ்டதிக்கில்த்தென்திசை உகந்தோனே-சீதைக்காய்
அரியபிலத்தினுள்ப்பு குந்தோனே-அப்போது
பொட்டெனப்பூமியினைப்பி ளந்தோனே - உயிரைப்
போக்கவேமிகமனம்த ளர்ந்தோனே - சம்பாதி

எட்டவேஇருந்துமெள்ள
கிட்டவேவர அவற்குப்
பட்டதைச் சொல்லும்தூயனே
முட்டிலா ஆஞ்சனேயனே (துணை)

ங. உக்கிரமாவிஸ்வசொரூபம் எடுத்தோனே-மயந்திரத்
துதைந்துகடலைத்தாண்டி விடுத்தோனே-பொல்லாத
அக்கிரமலங்கணியைக்கீழ் படுத்தோனே-நற்றிரு
ஆழியைத்தேவிகையினில்க் கொடுத்தோனே-ஆறுபோல்

மிக்கவே ரத்தங்கள்வாயால்
கக்கவே ராக்ஷதர்எல்லாம்
மக்கவேசெயும்ருத்திரனே
முக்கியமாம்வாயுபுத்திரனே (துணை)

ச. தேவிசூடாமணிகையில்த் தரித்தோனே-சொன்ன
சேதிகள்எல்லாம்அங்கி கரித்தோனே-படு
பாவிராவணன்லங்கையை எரித்தோனே-ராமன்
பக்கல்வந்துற்றசேதிகள் விரித்தோனே-இந்த

பூவுலகத்தோரும்தேவர்
கோவும்முனிக்கணமும்ப
ராவியசிரஞ்சீவியே
மேவிய எளதாவியே (துணை)

ரு. அருமையாம்சஞ்சீவிமலையை ஏற்றோனே-பிரம்ம
அஸ்திரவேதைகள்எல்லாம் தீர்த்தோனே-சீதையை
உரிமையாம்ராகவன்பக்கல் சேர்ந்தோனே-பரதன்
உயிரைவிடுமுன்னமேபோய் காத்தோனே-தவத்தில்

பெருமையார்முனி-விருந்தினில்
தருமராமனே-டருந்தின
ஒருமையார்சஞ்சீவி-ராயனே
பிரமபட்டம்பெற்றும்உ-பாயனே (துணை)

பெருமாள்தோத்திரம்.

விருத்தம்.

அண்டர்தாம்துயரம்தீர-அயோத்திமாநகரில்வந்து
தண்டகாரணியஞ்சென்று-சமுத்திரமீதணையைக்கட்டி
கொண்டுராவணனைமாட்டக்-கோதண்டங்கையில்ஏந்தும்
புண்டரீகக்கண்ராம-பொன்னடிக்கமலம்போற்றி.

ங-தரு-சௌராஷ்டிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

எனக்குன்இருபதம் நினைக்கவரம்அருள்வாய்-ஸ்ரீராமச்சந்திரா
எனக்குஇருபதம் நினைக்கவரம்அருள்வாய்

சரணங்கள்.

க. எனக்குன்இருபதம்-நினைக்கவரம்அருள்
இனியதசரதன்-தனக்குமகன்எனும்
மனத்தினுடன்அவ-தரித்துமுனிவரன்
மகத்தில்அரக்கியை-வதைத்தஅரசே (எனக்கு)

உ. நடக்கையிலேஅகலிகைக்-கிருபைசெய்து
நடத்திஜனகன்வில்-ஒடித்துஜனகிகை
பிடித்துப்பரசுரா-மனுக்குமமதையைப்
பிரித்துநகரில்வந்-திருக்கும்அய்யனே (னக்கு)

ங. தரிக்கும்முடிபர-தனுக்குதவிநதி
தடத்தில்குகனுடன்-அடுத்துசித்திரகூட
வரைக்குள்சனகியொ-டிருக்கத்துணைவன்நல்
வணக்கம்சேயமகிழ்-குணகுஞ்சரமே (எனக்கு)

ரு. துடித்தபரதனும்-ஒடுக்கமுடன்வரத்
தொடுத்தமிதியடி-கொடுத்தரசுசெய
வடக்கில்அவனையும்-விடுத்துநடுவிலே
வனத்தில்வரும்விரா-தனைகொன்வறனே (எனக்)

௫. விடுக்கரிபசடா-யுவுக்குறவுசொலி
விடுத்துங்கொண்டுபஞ்ச-வடிக்குச்சென்றவுடன்
அடுத்தசூர்ப்பநகி-கொடுத்தகரதூ
ஷணத்திற்சிரர்முடி-துணித்தராகவா (எனக்கு)

௬. தனித்துவருமாரீ-சனைக்கொன்றொருகவந்
தனுக்கருளிஅனுமானை-கண்டொருசுக்ரீ
வனுக்குதவிவாலி-தனைப்பொருதிவா
னரப்படையைஆ-தரித்ததுரையே (எனக்கு)

எ. இருக்கும்அநுமன்வந்-துரைக்கநிசிசரர்
இருக்கைபுறிந்தபின்-எரித்தகடலிலே
பெருக்கஅணைசெய்து-வருக்கம்வருக்கமா
பெலத்தஅரக்கரைத்-தொலைத்ததெய்வமே (எனக்)

அ. கொடியஇந்திரசித்தன்-பிரகஸ்தன்முதலாகக்
கொள்ளுமூலபல-வெள்ளஅரக்கர்தம்
முடியும்கும்பகர்னன்-முடியும்ராவணன்
முடியும்பொடியாக-விடுபுங்கவனே (எனக்)

௯. நினைத்தபடிவிபி-ஷணர்க்கரசுபெற
நிறுத்திஒருபுஷ்ப-ரதத்தில்ஏறிவந்து
தனத்தில்உயர்தரும்-அயோத்தியிலேசிமா
தனத்திருக்கும்ரகு-குலக்குமரனே (எனக்கு)

அபசாரக்ஷமை

விருத்தம்.

கனமானவால்மீகர் சுலோகம்செய்தார்
கம்பரும்ராமாயணத்தைக் கவியாச்செய்தார்
உனதாசையாலே நாடகமாச்செய்தேன்
உளறினல்என்னபலன் உண்டாம்என்றால்

முனிமார்சொல்லிய ராமமந்திரத்தை
மூவரும்ஓதிய ராமமந்திரத்தை
வனவேடன்மராமரா வென்றேமுத்தி
வழிகண்டான் அதுகொண்டே மொழிகின்றேனே.(ரு)

சு. தரு சாவேரிராகம்-அட தாளம்சாப்பு

பல்லவி.

ஐயனேரகுராமனேஎன்சொல்அபசாரம்உபசாரம் ஆக்கிகொள்வாயே

அநுபல்லவி.

கையில்ஆகாதநான் ஏதேதுசொன்னாலும்
காக்ககடன்என்பிழையை-நீக்கக்கடன்உன்பாரம் (ஐயனே)

சரணங்கள்.

க. எள்ளத்தனையுங் குற்றம்
இல்லாதசுப சத்தம்
தெள்ளித்தெளியேன் மொத்தம்
செய்தேன் இதோ சுத்தம்
வெள்ளைக்கவி என்றும்-இதுசின்னப்
பிள்ளைக்கவி என்றும்-சொல்வதல்லால்
விள்ளத்தகுமோ பழுதுகள்
உள்ளத்தகுமோ சாமிநீ
தள்ளத்தகுமோ திருவுளம்
கொள்ளத்தகுமோ அறிகிலேன் (ஐயனே)

உ. நற்பொருள் நீதமும்
நவரச பேதமும்
வைப்புள்ள கீதமும்
வண்ணவி நோதமும்
ஒப்புத் தெரிவேனோ-அதில்உள்ள
தப்புத் தெரிவனோஇலக்கணச்
சொற்பிக்கறியேன் உன்புகழ்
கற்பிக்கஅறியேன் சொல்லி
மெய்ப்பிக்கஅறியேன் சாமி
ஒப்பிக்கறியேன் எங்கள் (ஐயனே)

ங. உத்தமமுனி முன்னம்
உரைக்கக்கம்பர் சொன்ன
நற்றமிழ்தன்னைச் சின்ன
நாடகம்ஈ தென்ன

வைத்திப்படி கண்டேன்-பெரியோர்முன்
புத்திப்பிழை கொண்டேன்என்சாமி
பித்துச்சொல் வைப்போலே
சத்திக்கஜ ருக்காலே
நத்திச்சொலும் என்மேலே
சித்தத்தில்இ தந்தாலே. (ஐயனே)

—0—

நூற்பெருமை.

விருத்தம்.

கதிர்பெறும்ராமகதை-சதகோடிபிரபந்தம்ஆகும்
அதில்ஓர்அக்ஷரம்சொன்னாலும்-அருவினைப்போகும்என்றெ
விதியினால்முனிவால்மீகி-விளம்பியஉறுதிகொண்டு
மதியினல்அறிந்தமாத்திரம்-வகுத்துநாடகம்சொல்வேனே(சூ)

ரு. தரு சாவேரிராகம்-திருபுடைதாளம்.

பல்லவி.

மருத்துவம்உள்ளகதைராமகதைஇதுவேகேட்கவேணும்-முனி
வருக்கும்பலமனிதருக்கும் இதுபொதுவே

அநுபல்லவி

மிகுத்தமிகுத்தபுராணம்சொல்லும் கதை
விரும்புமோமறுநாள்ச்சொன்னால் அதை
அகத்தில்ஆனந்தம்தருமே இதுசொல்ல
அடிக்கடிசொல்லினும் வெறுக்குமோநல்ல (ம)

சரணங்கள்.

க.சேர்க்கும்பொருள்களில்என்ன இணைச்செவிஏர்க்கும்பொரு
ள்இதுமாத்திரம்
செபமும் இதுபெருந்தபமும் இதுஎன்றுதெளிவதே
நல்லசூத்திரம்
பார்க்குள் இதைஅறியார்க் கெல்லாம்பிறந்தெடுத்தஉ
டம்பவபாத்திரம்
பத்தியால்இதுகற்றவர்க்குப்பலிப்பதுபரமபத க்ஷேத்திரம்
தீர்க்கமாய்இதைகேட்கின்றோர் பெரும்
திருமனையில்வருவாரேதே வரும்
ஏர்க்கும்இதின்குணமுயார்க்குச்சொல்வரும்
இகபரங்களில்சகலமும் தரும்(மருத்து)

சருமராஜன் யாகசெருப்போதியில் ஒருமையாய் அதை-தடுக்குமே
சற்றேபடிக்கினும்புத்திரபாக்கியமும்சகலபாக்கியமும் -அடுக்குமே
பெருகுநவக்கிரகம்ஏகாதசப்பலனைப்பிரியமுடன்வந்து -கொடுக்குமே
பேயும்பூதமும்நோயும்சூனியமும்பிணிசெய்யாதபடிவிடுக்குமே
மரணஜனனவியாதிநமக் கின்னம்
வருந்துவார்வருந்காதபடி தின்ன
அரியமருந்திது ஆம்என்றோ முன்னம்
ஆதிசிவன்உமைகாதிலே சொன்ன (மருத்து)

சீமைதனிற்கங்கையமுனைமுதற்பெருந்திவ்யதெய்வந்தி ஸ்நானமும்
சேனைமாநிலம்யானைமுதல்ஆகச்செய்யும்பலபல தானமும்
ஆதிதாம்என்றுதெறுகின்றவேதாந்தம்முதல்கலைக்கியானமும்
அதுவும்அல்லாமல்எதுநினைந்தாலும்உதவும்அந்தநி தானமும்
சாமிநாரதமுனிவன்சொல்லி வைத்த
சரித்திரம்வால்மீகர்உரைத்தபடி கொற்ற
ராமன்அவதாரம் ஆம்முன்னை மெத்த
நயம்கொண்டாதிகாவியம்என்றே பெற்ற (மருத்)

அவை அடக்கம்

விருத்தம்.

முத்துமுதல்விலை இல்லா மணிகள்பெற்ற
முதியகடல்ஆடுகின்றோர் அகிலேஎழு
சற்றும்உதவாதமணியாம்பருக்கை
தான்போடகளிப்பான சமுத்திரம்போலக்
கர்த்தன்எனும் ராமச்சந்திரன்கதைப்பாக்கேட்கும்
காதிலேநாடகமாஅதனைச்சொல்லிக்
குற்றங்கள்செய்தாலுங் குணமாக்கொண்டு
கூட்டுவீர்என்கவிபாராட்டுவீரே. (எ)

இதுவும் அது.

அரன்முடிமேல்க்கங்கைபகீரதன்கொணர்ந்தே
அந்நாள்செய்தர்ப்பணம்போல்இந்நாள் இந்த
நரரும்அந்தக்கங்கையிலேதர்ப்பணத்தை
நடத்திமுத்திபெறுகின்றார் அதுபோல் ஆதிப்

பிரமன்முகத்தினில்வந்தராமகதை
பெருமுனிவால்மீகிசொல்லக்கம்பர்சொன்னார்
விரவுதமிழ்ப்பாதத்தாலேநானும்சொன்னேன்
மேற்கொள்வீர் என்பிழைதீர்த்தாள்கொள்வீரே.(அ)

சு-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைபொறுக்கவேணும்- பெரியோரே - பிள்ளைமக்குநான்கா[ணும்

அநுபல்லவி.

மழைநிறத்தராமசாமிகதை இன்ன
வகையென்றறிந்தும்அறியாமலும்நான் சொன்ன (பி)

சரணங்கள்.

க. ஆதியில்பிரம்மதேவர் நூறுகோடிவிஸ்தாரம்
ஆதிகாவியம்என்றித்தை மதித்தாரே
பேதமில்இருபத்துநாலாயிரம்ஆகப்
பிறகுவால்மீகர்சொல்லி விதித்தாரே
போதாய்னர்முதல்மா தவர் இக்கதையைப்
புனைந்துவடமொழியாலத் துதித்தாரே
ஓதியகம்பர்பன்னீராயிரம்கவிஆக
உரைசெய்துதமிழிலே பதித்தாரே
காதலால்இவர்செய்யநான் அதுக் கிப்பாலே
கருடன்பறக்கவொருகொசுவும் பறந்தாற்போலே
ஈதொருநாடகமாஓதினேன் புவிமேலே
எட்டும்ரண்டும்தெரியாஏழைநான் ஆகையாலே(பிழை)

உ. வாவியபெருவெள்ளம்பாயும்கடலிலே
வாய்க்காலும்பாயும் அல்லோ நில்லாமல்
யாவதும்கற்றோர்சொல்லைக்கேட்கிறநீங்களும்
என்சொல்லும்கேளும்தடை இல்லாமல்
காவியமும்பஞ்ச லட்சணமும்தெரியக்
கற்றஉங்களைப்போலே சொல்லாமல்
கேவலம்நான் இதைப்பாகவதர்படிக்கும்
கீர்த்தனையாச்சொன்னேன்சு தல்லாமல்

தேவதேவராமன்பேரோ உற்றது
தேடிஅந்தப்பேர்இந்தநாடகத்தில் வைத்து
பூவோடேகூடியநாரும்மணம் பெற்றது
போலேவிளங்கும்அதினாலேசொன்னேன் கற்றது(பிழை

௩. திருத்தும்நாராயணாய்சிவாயஎன்று
செபிக்கும்மந்திரம்இரண்டும் மெய்தானே
உரைக்குமமந்திரம்இரண்டில்இரண்டாம்எழுத்திரண்டும்
ஒருராமன்ஆகிவந்த பெருமானே
அருள்செய்தகதைஇதேஇலக்கணம்ஆகச்சொல்ல
அறிவேனோசின்னம் சிறியேனே
பரப்பியபாலையும்சோற்றையும்குழந்தைகள்
பாச்சிசோச்சிஎன்னும் படிநானே
பொருத்தம்இல்லாசொல்லால்உரைசெய்தாலும் தள்ளப்
போமோஉங்களால்ஆமேதிருத்திக கொள்ள
அரைச்சொல்கொண்டம்பலம்ஏறினால்மெள்ள மெள்ள
அரைச்சொல்லும்முழுச்சொல்லாம்ஆகையால்இதிலுள்ள (பி)

———[*]———

மங்களம்.

விருத்தம்.

மூவருக்கும்தேவியர்க்கும்தேவரோடு
முனிவருக்கும்முன்னிந்தகதையைச்சொன்ன
நாவருக்கும்தசரதர்க்கும்தேவிமார்க்கும்
நற்றம்பிமார்களுக்கும்சீதையோடு
ஆவருக்கம்கோவருக்கம்அனுமான்மற்றோர்
ஆழ்வார்கள்ஆரியர்ஐம்படைஅனந்தன்
மாவருக்கம்இதைப்படிப்போர்கேட்போர்கெல்லாம்
வளம்சொல்வான்ராகவன்மங்களம்சொல்வானே (கூ)

எ-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜெயமங்களம் நல்ல
திவ்வியமுகச்சந்திரனுக்கு சுபமங்களம்

அநுபல்லவி.

மாராபிராமனுக்கு மன்னுபரந்தாமனுக்கு
ஈராறுநாமனுக்கு ரவிகுலசோமனுக்கு (ஸ்ரீராம)

சரணங்கள்.

க. கொண்டல்மணிவண்ணனுக்குகன்னனுக்கு மங்களம்
கோசலைகுமாரனுக்குவீரனுக்கு மங்களம்

புண்டரீகத் தாளனுக்கு
பூச்சக்கிர ஆளனுக்கு
தண்டுளவத் தோளனுக்கு
சானகிம ணாளனுக்கு (ஸ்ரீராம)

உ. கோவைமணிவாயனுக்குமாயனுக்கு மங்களம்
கோதண்டகையனுக்குமெய்யனுக்கு மங்களம்

தாவுகுண சீலனுக்கு
சத்தியவி லாசனுக்கு
தேவர்அநு கூலனுக்கு
தெசரதன் பாலனுக்கு (ஸ்ரீராம)

ங. பகிரண்டநாதனுக்கு வேதனுக்கு மங்களம்
பரதனும்அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்

சகலஉ லாசனுக்கு
தருமந்த காசனுக்கு
அகிலவி லாசனுக்கு
அயோத்திய வாசனுக்கு (ஸ்ரீராம)

பாயிரம் - முற்றிற்று.

———(*)———

கொச்சம், க-வெண்பா-உ-விருத்தம்-ங-ஆக (கூ) தருக்கள்(எ)

முதலாவது

பாலகாண்டம்.

கடவுள்வணக்கம்

விருத்தம்.

ஆதி ஆய்நடுவாகி முடிவும்ஆகி
அண்டபகிரண்டமும்ஆய் அனைத்தும்ஆகிப்
போதினை ஆவினைவெள்ளிப பொருப்பைஷிட்டுப்
புகழ்பொறைகள்தருமம்எல்லாம் பொலிந்துநல்ல
நீதிசேர்அயோத்தியில்வாழ் தசரதேந்திரன்
நெடியமாதவத்தினில்வந் துதித்தஎங்கள்
சோதிஆகியராமன் நாடகத்தைச்
சுயஞ்சொல்வான் மகிழ்ந்துதோடயம்சொல்வானே,

க-தோடயம் நாட்டைராகம்-சம்பைதாளம்,

சரணங்கள்.

எவரும்வணங்கியரகுராமன்-எதுவும்நின்றததுதருராமன்
ரவிகுலசுந்தரசெயராமன்-நாடகத்தைச்சொல்லவே-ஆ-ஆ
கவளநெடுங்கரதலசாமி-கமலகிரியம்பகம்உளசாமி
பவனிவரும்கெசமுகசாமி-பாதபற்புத்துணையே-செயசெயா
துணிவுளபுசபெலமர்வனே-சுரன்முடிபொடிபடமோதுமால்
அணிபெறுதசரதராமநா-டகமதுரைசெயவே-ஆ-ஆ
திணிதருபுயம்இருநாலுஞ்சேர்திசைமுகன்இசைபெறுநாவில்வா
மணமிகுசரஸ்வதிபாததா-மரைஎனதுதுணையே-செயசெயா[ழ்
கோநெடுவானவர்தேடவொரு-கோசலையாள்விளையாடவரு
ஞானகிருபாகரராமகதை நாடகமாசொலவே-ஆ-ஆ
வானவன்ஆம்மணவாளமுனி-மாருதிநீள்கருடாதிபதி
சேனையர்கோனுடனேபதின்மர்சேவடிகள்துணையேசெயசெய
வாசவன்மாசுரரோடுலோகாந்திர-வாசிகள்பூசுரர்இவர்ஏகாந்த
பூசிதராகவனிடஆராய்ந்த-புகழதுரைசெயவே-ஆ-ஆ
காசினிமீதினில்மிகுமூடாந்த-காரமதோடவேவருவேதாந்த
தேசிகர்தாமரைமலரேபோன்ற-திருவடிகள்துணையே -செயசெ
[செயா

திருமகள்சானகிசேரும்வாமன் - செயமொடுகோசலம்வாழ்
[நேமன
கருமணியேநிகராகும்ராமன்-கதையது னாசெயவே-ஆ-ஆ
குருகையில்மேவியகாரிமாறர்-குணநிறை ஆகியபாஷியகாரர்
மருளறுதேசிகர்மாசிலாத-மலர்அடிகள் துணையே-செயசெயா
மைக்கடல்வாய்விண்டுபொங்கவே -வைத்தெருபாணம்துரைந்த
விக்கிரமராமன்பிரபந்தம்ஆம்-விந்தையதுசொலவே-ஆ-ஆ [மால்
பக்குவம்ஆம்அன்புகொண்டுவாழ்-பத்தரைஆளும்திறங்கள்சேர்
சக்கரகோதண்டதண்டம்வாள் - சங்கம்இவைதுணையேசெய
செயா

அரசியல்

கட்டியம்-வசனம்.

அகோரசாதிர்ராசன்-மகாதேசப்பிரகாசன்
ராசபரமேசுரன்-தேசநரமீசரன்
ராசமார்த்தாணடன்-ரணரங்கோதண்டன்
ராசகெம்பீரன்-நேசசம்பீரன்
பாஸ்கரகுலதீரன்-சிலாக்கியமுளவீரன்
புத்தியில்பிரகஸ்பதி-வித்தையில்சரஸ்வதி
நயகுணசீலன்-பயசனபாலன்
நல்லார்க்குமித்திரு-பொல்லார்க்குச்சத்துரு
சுசரிதகுணநேசன்-தசரதமகாராசன்
மனுநீதிகோணுமல்-சனவேதைதோணுமல்
ஆறிலொருகடமைகொண்டு-மாறுபடபகையைவென்று
திங்கள்மும்மாரிபெய்ய-எங்குமுப்போகஞ்செய்ய
செங்கோல்முகம்சாயாமல்-வெங்கோல்முகம்பாயாமல்
அறுபதினாயிரம்வருஷம் பசுவும்புலியும் ஒருதுறையில் நீர் உண்ணராச்சியபரிபாலனம்பண்ணின கீர்த்தியைச்சொல்லுகிற மார்க்கம். (உ)

விருத்தம்.

மகராசன் அசமகாராசன்ஈன்ற
மகராசன்மிகுசூரியவங்கிசாரசன்
சுகராசன்கௌசலைநாயகிகைகேசி
சுமித்திரையாம்தேவியர்கைதொட்டராசன்
-மிகராசர்பணிந்திடஇந்திரனைகாத்த
விசயதசரதராசன்அயோத்திவாழும்
செகராசன்ஒருவன்மனுநீதியாலே
தெசம்எல்லாம்ஒருகுடைக்கீழ்ச் செய்தாண்டானே.

உ. தரு-சாவேரிராகம்-திரிபுடதாளம்.

பல்லவி.

ராசராசர்க்கும்-ராசன் தசரத-ராசன் இருந்தானே

அநுபல்லவி.

தேசதிலகன் அ யோத்திநகர்க்கொரு
திலகன்ரவிகுலதிலகன் ஆகவே (ராச)

சரணங்கள்.

க. மந்திரதந்திரமும் நித்தியநைமித்தமும்
மகங்களுந்தினம் செழிக்கவே
வன்புலியொடு பசுவும்ஓர் துறைநீர்
உண்டுகொண்டுபயம் ஒழிக்கவே
இந்திரபதமும் குபேரதனங்களும்
எவருமசிழ்தென்று பழிக்கவே
எங்கெங்கும்முப்போகம்விளையவே
திங்கள்தோறும்மும்மாரி பொழிக்கவே (ரா)

உ. நாலுவர்ன்னுசிரமங்களும்சொன்ன
நடைபுரண்டு பாயாமலே
நரர்க்கும்வேறுள்ள உயிர்க்கும்வயதுகள்
நடுவிலே தேயாமலே
கோலம்ஆகிய மிருகமும்பறைவையும்
குறிகடந்து மேயாமலே
குடியில்ஆறிலொரு கடமைகொண்டுசெங்
கோலின்முகம் சாயாமலே (ரா)

௩. மறுமங்கையருக்கும் மறுமன்னவர்க்கும்
மார்பும்முதுகும் கொடாமலே
வளரும்அஷ்டலட்சுமியும்தன் அற
மனைவிட்டடியை எடாமலே
அறுபதாயிரம்வருஷமும்ஏ
காதிபத்தியம் விடாமலே
ஆரும்மனதில்விசாரத்தால் ஆ
ராய்ச்சிமணியைத் தொடாமலே(ரா

சக்கிரவர்த்திமக்கள்வேண்டிவருந்தல்

விருத்தம்.

இருந்ததசரதராசன்நெடுநாளாப்புவிஆண்டேன்
இனிமேல்இந்தப்
பெரும்புவியை ஆள்வதற்கும் மூத்தியிலேசேர்ப்பதாச்கும்
பிள்ளைகாணேன்
அருந்தவனேகுலகுருவேவசிஷ்டமுனியேபிள்ளை
அதைநான்காண
வருந்துவதில்லாவகையைமொழியென்றன் இதற்கென்ன
வழிஎன்றனே (௪)

ங-தரு துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பிள்ளையில்லாதபாக்கியம்-நாள்-பெற்றிருந்தென்னசிலாக்கியம்

அநுபல்லவி.

வள்ளலேசென்மமலடன்என் றெருக்காலே
வசைகொண்டேன் தசரதன் நான்புவிமேலே
கள்ளியானதுநெடுகவ ளர்ந்ததாலே
காயுண்டோகனிஉண்டோ அதுபோலே-பிள்ளை

சரணங்கள்.

க. மறுவில்லாத இந்சூரியவம்கிசம்இது
வளரும்வங்கிசம் ஆச்சே-இது
மழைபெய்ந்தடிமறைந்தால்ப்போலஎன்
மட்டிலேநின்று போச்சே
அறுபதாயிரம்வருஷம் வருந்தும்
அரசுதான் இனி ஆரங்கொண்டு திருந்தும்
குறைவில்லாதஅர்தசஞ்சிவி மருந்தும்
கொடுக்குந்தெய்வமும் நீநானேகிடைத்திருந்தும்-பிள்

உ. பெருக்ககாண்பதேகாண்பதல்லாமல்
பெறுவதொன்றும் காணேன்-மிகு
பிச்சர்போலேநெடுநாளும்உண்டஉண்ட
எச்சிலே உண்ணல் ஆனேன்
விருத்தன்நான் இனித்தவசிலே செல்ல
வேணும்அல்லால்ப்புவி ஆள்வதுசிறப்பல்ல



பெருமாள்சந்நிதியில் தேவர்கள் முறையிடல்,

இருத்தும்வாழைஅடி வாழைஆய்ப் புல்ல
இவன்மகன் இவன்ஆம் என்றுபேர் சொல்ல(பிள்

ரு. மோந்தால்முத்தியும்வரும்பாத்திலே
முத்தியும்கூட வருமே மேலே
சாய்ந்தால்உடமபெங்கும்குளிருமே
தழுவஇன்பம் தருமே
வாய்ந்தபொன்னுல களவும்போய்ச் சனி
மண்டலமும்திருத்திக் கொண்டேன்புவி தனில்
யேந்தினேன் இல்லையே ஒருபிள்ளைக் கனி
என்னவீடென்ன வாசல்எனக் கினி (பி

———:0:———

பெருமாள்சந்நிதியில்தேவர்கள்முறைபாடு.

விருத்தம்.

மன்னவன் ஆம் தசரதபூபதிஇவ்வாறு
.மக்கள் இல்லாதுன்பத்தை வதிஷ்டனேடே
சொன்னவுடன் அந்தமுனிவனும்தியானித்தான்
சுரர்முதல்ஆனவர்கள் மகமேருமேலே
சின்னஅரககரை நடுங்கிவாழ்த்தும்போது
சிறைக்கருடன்மீதினில் அச்சுதனும்வந்தான்
பொன்னின்மலர்அவன்பதத்தில் இறைத்தேகண்ணீர்
பொழிகின்றார் அரக்கர்துன்பம் மொழிகின்றாரே. (ரு)

௬.தரு அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கடைக்கண்ணால்இரங்கிப் பார்அய்யா - பார்த்துக்
காராவிட்டால்இனிமேல் ஆர்அய்யா.

அநுபல்லவி.

அடைக்கலம்எனஓடி-வந்தோமே-நாங்கள்
ஆலைக்கரும்புபோலே-நைந்தோமே-சாமி (கடை)

சரணங்கள்.

க. சொற்கர்திபுவனம்எல் லாம்தாவிக் - கொண்டு
துரத்தக்கும்பகர்னன் தனைஏவி - மற்ற
பக்கம்இந்திரசித்தென்னும் பெருங்கோவி - ஆளப்
பண்ணிவைத்தானேரா வணன்பாவி

செக்குள்ளே அகப்பட்டஎள்ளுப் போலே-அரக்கர்
கைக்குள்ளே அகப்பட்டஎங்கள் மேலே-உனது (கடை)

உ. அளகேசன்புஷ்பகம் தனைவிட்டான்-இலங்
கையிலேசூரியன்தேரும் வரஒட்டான்-மெத்த
தளர இந்திரனைக்கூடச் சிறையிட்டான்-அரக்க
சறுவகொள்ளை அடிக்கத் தலைத்பட்டான் (ன்
எளியோங்களை இப்படிஈனர் ஒடுக்கல்-ஆமோ
கிளியைவளர்த்துப்பூனைகிட்டக் கொடுக்கலாமோ (க)

ங. பாவி அரக்கன்பேச்சே மேலாச்சு-நாங்கள்
படைத்தபலங்கள்எல்லாம் மேல்பூச்சு-நல்ல
பூவைவண்ணா அரக்கன் கைவீச்சு-வெள்ளிப்
பொருப்பேஅறியும்இனி என்பேச்சு
ராவணன்வதைக்கிறான்எங்கள்மேல் என்ன-கண்டோ
தேவநீகேளாவிட்டால் திக்குதிசைஇன்னம்-உணடோ (க)

தேவர்களுக்குபெருமாள் அருளிபாடு.

விருத்தம்.

இசையும்வானவர்கள்கூடி-இப்படிசொல்லமாயோன்
அசையும்வாள் அரக்கர்தம்மை-அகற்றுவோம்அஞ்சவேண்ட
தசரதன்மதலை ஆகித்-தரணியில்வருவோம்நீங்கள் [ாம்
திசைதொறும்கவிகளாகிச்-சேரும்யென்றுரைசெய்வானே (க

ரு-தருமோகனராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

அவதாரம்செய் இடுவீரே-நீங்கள்
அரக்கர்பயத்தை விடுவீரே

அநுபல்லவி.

கவனவாலியும்சுக்கிரீவனும் ஆகிக்
கண்ணபிரவனும்கதிரோனும் போகி (அவ)

சரணக்கள்.

க. அதிகம்ஆனருத்திரன் அங்கசம்அனும் சீலன்
அக்கினியேசேனைக்கதிபன் ஆன நீலன்

நீங்களுக்குப் பிரதியாக இனிமேல் என்றும்சொல்லிக் கொள்ளவும்.

சதுர்முகபிரமாவேசாம்பவன்எனும் காலன்
தரும்உபேந்திரன்வாலிதனக்குப் பாலன்-ஆக
அவதாரம்

உ. சங்கமும்சக்கிரமும்சேஷனும் பரிவாகத்
தம்பியர்ஆய்வரத்தானேநாம் பூலோகத்
துங்கள்ஆனதசாதராசன்குறை போகச்
சுறுக்காவருவோம்எவரும்அதின்முன் ஆகப்-போய்
அவதாரம்.

ஙு. வானரவடிவாலும்மானிட வடிவாலும்
தான்அல்லாதரக்கன்சாகானே ஒருக்காலும்
ஆனபடியினலேஅனைவரும் புலிபோலும்
கானிலும்இரும்காட்சிதருவோம் மென்மேலும்-வந்து
அவதாரம்.

பெருமாள் திரு அவதாரம்.

விருத்தம்.

இவ்வகையாமாயவன்முன் நடந்ததென்று
எண்ணிமுனிகலைக்கோட்டுமுனிவனாலே
அவ்வகையாம்புத்திர காமேஷ்டிதன்னை
அயோத்திஅரசனைக்கொடு செய்வித்தபோதில்
பைவளரும்பாம்பணைமேற் பள்ளிகொள்ளும்
பரமனேதசரதன்செய் பாக்கியத்தாலே
மெய்வகைசேர்உலகெல்லாம் மனுவிக்கியான
விதிசெய்வான்அவதாரம் அதுசெய்லானே.

சு-தரு-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

பல்லவி.


பரப்பிரமசொரூபமே-ஸ்ரீராமன்ஆகப்-பாரில்வந்ததுபாரும்

அநுபல்லவி.

வாத்தினல்அரக்கரைவானத்தில் ஏற்றவும்
வானத்தில்தேவர்கள்மலர்மாரி தூற்றவும்(பரப்பிர)

சரணங்கள்.

க. புத்திமுனிவன்கலைக்கோட்டுமாமுனி
புண்ணியயாகபலன் தேற



பெருமாள் திருஅவதாரம்.

சத்தியதசரதற்கறுபதினுயிரம்
சம்வச்சிரபலன்நிறை — வேற
சித்திரைமாசம்நவமிகடகம்
செழும்புனர்பூசம்தேன் — ஊற
ஒத்தக்கிரகங்கள்நால்வரும்பதினென்றில்
உச்சத்தில்ஐவரும் — ஏற-ஆதி(பரப்பி)

உ, சீர்ஆரும்லட்சுமணன்சத்துருக்கன்சுமித்
திரைவயற்றினில்நின்று — பேர
பாரார்புகள்கைகேசிவயிற்றில்நின்று
பரதன்வந்துபுவி — சேர
ஆராலும்கொள்ளாதஆனந்தம்மேல்க்கொண்டு
அம்புவியோர்இடர் — தீர
கார்ஆரும்குழல்வல்லிஇருவர்க்கும்மேலான
கௌசலைகண்களி — கூர-ஆதி(பரப்)

௩. தேவர்முனிவர்பகைதீர்ந்தோம்என்று
சென்னியில்ப்பூந்துழாய் — முடிக்க
பூவுலகத்துளவேதியர்எல்லோரும்
புகழும்வேதகாமம் — படிக்க
பாவிஇலங்கையின்மேல்சூரியன்தேரில்உள்ள
பச்சைப்பரிஏழும் — நடிக்க
ராவணன்ஆதிஇருக்கின்றராட்சதர்
எவர்க்கும்இடக்கண்கள் — துடிக்க-ஆதி(பரப்பி)

—0—

கௌசிகர்ராமகுறித்துகேட்குதல்.

விருத்தம்.

மைந்தர்இவ்வாறுவந்து வதிஷ்டனல்பேரும்பெற்றர்
அந்தநாள்விசுவாமித்திரன் அணிதசரதன்முன்வந்தான்
இந்தநாள்எனதுவேள்வி இராமனல்முடியவேணும்
தந்திடஇதுநல்வேளை தாவென்றான்காவென்றானே. (அ)

எ-தரு-மோகனராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

ராமனைத்தருவாய் - ஜெகரட்சக - ராமனைத்தருவாய்

அநுபல்லவி.

தாமசம்நீசெப்பாதே - தசரதேந்திர-இப்போதே (ராம)

சரணங்கள்.

க. அரன்பக்கம் செல்வேன்
அரிமுன்னே சொல்வேன்
இரண்டும்தப்பினுல்உனைவிட்
டெவரால்ப்பகை வெல்வேன் - ராமனே

உ. தாடகைப் பாவி
தவிர்த்தாள்என் வேள்வி
பிடைவராமல்க்காத்தால்ப்
பிழைக்கும்என் ஆவி ராமனே

ரு. உம்பர்வி சாரம்
ஒழிக்கஅன் னேரம்
சம்பரனைக்கொன்றுயே
தயவாய்இன் னேரம் ராமனே

ச. கோபத்தில் ருத்திரன்
குருவிசுவா மித்திரன்
ஆபத்துகாக்கவேணும்
அதனுல்உன் புத்திரன் ராமனே

சக்கிரவர்த்தி அதைமறுத்தல்.

விருத்தம்.

சொல்லிது முனிவன்சொல்லத்துடித்தனன் தசரதேந்திரன்
சில்லிதுவேள்விக்காக்கச் சிறுபிள்ளைராமன்ஏன்தான்
சல்லியம்செய்யும்அந்த தாடகைதனைநான்கொல்வேன்
பல்பலஉரையேன்இிராணி பார்என்பான்நேரென்பானே.. (கூ)

அ-தரு-ஸ்ரீராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமன்ஏதுக்கு-இதுக்கோஅவன்வர வேணும்
நான்வருகிறேன் காணும்

அநுபல்லவி.

பூமிஅரசனென்றுநான் இருந்தென்ன கொள்ளை
சாமிஅவன்ஏந்துகுழந்தைப் பிள்ளை ராமன்

சரணங்கள்.

ச. என் இந்த தோத்திரம்-தாடகை
எனக்கெ மாத்திரம்
வானுளோர்கள்வந்துதடுத்தாலும் அடிக்கிறேன்
நானேவந்துன்வேள்வியை முடிக்கிறேன்-ராமன்

உ. பேயைக்கொல்வ தரிதோ காரியம்
பெரிதோவீரியம் பெரிதோ
ஆயுதம்பிடிக்கறியான்கேளாய்ஒரு சொல்லை
வாயில்முலைப்பால்மணமமாற இல்லை ராமன்

ஙு. கவலைஏன் கொண்டாய்-என்முன்ஒரு
காணும்வராள் கண்டாய்
அவளையும்படையையும்-அடிக்கிறேன் பாராய்பாராய்
இவனல்என்ன-எழுந்திரு வாராய்வாராய்-ராமன்

———[*]———

வதிஷ்டர் தகவுரைத்தல்

விருத்தம்.

இனமதில்அயோத்திவேந்தன்-இதிசொல்லவிஸ்வாமித்திர
முனிவனும்கோபம்செய்தான்-முன்னின்றவதிஷ்டன்கண்டான்
உனதுமைந்தனுக்குமன்ன-யோகநாள்வந்ததென்று
கனமுடன்விரித்துச்சொல்லி-காட்டுவோன்கூட்டுவானே. (ய)

கூ-தரு. முகாரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மோசம்வராதயா-நான்சொன்னவார்த்தை-மோசம்வராதயா

அநுபல்லவி.

கோசிகன்பின்னேராமனை-கூட்டிவிடுவாய்சொன்னேன்-மோச

சரணங்கள்.

க. உப்புநீர்மேகம்சேர்ந்தால்-உலகில்ப்பிர வாகம்
அப்படிஉன்மகனுக்கு-அடுத்ததே யோகம்-மோ
உ. மறுஉண்டோவதிஷ்டன்சொல்-வார்த்தைக்குமுண்டோ
பொறுபொறுமுனிப்பாரேப்-புதைப்பாருமுண்டோ-மோ

ரு. சோதிக்கவேண்டாம்நான்-சொல்வதே சீலம்
ஆதித்தன்குலத்துக்கின்-றனுகூல காலம்--மோசம்

———‡———

கௌசிகர் ஸ்ரீராமருக்கு நீதிகூறல்

விருத்தம்.

முனிவசிஷ்டன் இவ்வாறு சொல்லவேந்தன்
முறையாலேராமனைலட்சுமணனோடே
இனிதழைத்துக்கூட்டிவிட்டான் வழிக்கிவேண்டி
இருவரும்மந்திரங்கொண்டார்வெயில்ப்படாமல்
தனிநடந்தார்வேள்வியில்த்தாடகையும்வந்தாள்
சாமியும்பெண்ணென்னேந்தான் முனிவன்அந்த
நினைவறிந்தான்பெண்ணிவளோ அல்லாராம
நில்லென்றான் இப்போமுதே கொல்லென்றானே.(கக)

ம. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

பெண்ணிவள் அல்ல ராம—தாடகை
வண்ணம்கொண்டகமன் இவள் ராமா

அநுபல்லவி.

மண்ணில்மெத்தஉயிரை-வதைத்திந்த நிர்ம்மூடி-
கண்ணில்கண்டதுகோடி-காணாதனந்தம் கோடி-பெண்

சரணங்கள்

க. இஷ்டமாமுனிவர்என்றொரு பேர்தரித்
திருககும்கடலுக்கிவள்பெருத்தமந் தரகிரி
அட்டகாசம்செய்தால்அதுவொரு பாடாவிரி
அண்டகூடம்எங்கும்இடியுமே அரிகரி
எட்டுதிசையிலும்ஓடி முட்டுமே இவள் ஆதாளி
மூட்டினால்மலையும்பிளந் திட்டுமே தூளிதூளி
எட்டியும்பார்க்ககூடுமோ கிட்டிஒரு காளிகூளி
விட்டுநான்சொல்லவேணுமோமட்டில்லா பாவசண்டாளி (பெ)

உ. ஆயிரங்குணம்ஒருலோபகுணத்தால்த் தட்டும்
அதுபோல்இமமருதத்தை அழித்தாலும் அழிக்கட்டும்
மாயைஇவள்பேர்சொன்னால்முனிவருக்கும்பல்லு கிட்டும்
வற்றல்என்றெம்மைத்தள்ளிவைத்தாளோ இந்த மட்டும்

தூயதிசை ஆனையெட்டும் ஈளரும்பாய் விழக்காட்டி
வாயில்வொருபல்லிடுக்கி லேஅடக்கு வாளேசூட்டி
தீயவடவாக்கினிபோல்ப் பாயுவாள்கை களேநீட்டி
பேயையும்பிடிங்கித்தின்னும் பேயனவந்ததருவெள்ளாட்டி ()

ந. ஒருகுமதிஎன்னும்பெண்ணைபிளந்தான் இந்திரன் அப்போது
ஒருபெண்கியாதியைமாயன்ஒழித்தானேபுவிமீது [து
பெருமானே இவள் அந்தப் பெண்என வும்கூடாது
பெண்என்றால்பேயும்இரங்குமே.அதி வளுக்கேது
இருடிகள்உடம்பைமெத்த உருகைஎன்று கண்டுகொண்டோ
பெருமகம்செய்வோரைகொல்லவருகிறாள் இதென்ன மூண்டே
நிருதிஇவளைப்பெண்என்று கருதுகிறாய் என்னகண்டோ [ா
ஒருநொடியில்கொல்லவேணும்குருமொழிதனக்குமாண்டோ ()

தாடகைமுதலானவர்கள்வதம்

விருத்தம்.

செய்திகளை இவ்வாறுரைக்கச்-சிரமேல்க்கொண்டேரகுராமன்
வெய்துவணங்கிகுருவிசுவா-மித்திரன்சொல்லேவேதச்சொல்
மையம்எனவேமகம்காக்க-வரிவில்வளைத்தான் த்ராடகையும்
எய்தபாணம்பட்டுருவி-எழுந்தாள்மலைபோல்விழுந்தாளே (கஉ

கக-தரு-நாதநாமக்கிரியைராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள்--பொல்லாக்
கொடியதாடகைபாவிவிழுந்தாள்


அநுபல்லவி.

கொடியதாடகைபாவிவிழுந்தாள் செம்போன்
முடியன்ராவணன்வெற்றிக் கொடிவிழுந்தால்போல்(கொ)

சரணங்கள்.

க. உரைத்ததேவர்துன்பம் மறக்க - காலன்
ஒருக்காலுங்காணுதருசிகண்டு பறக்க
அரக்கர்ஆதிக்கங்கள் இறக்க-நல்ல
ஆனுகூலகாலங்கள்முனிவர்க்குப் பிறக்க (கொடிய)

உ. மூதண்டகோடிக்கப் பாலே-ஓசை
முழங்கவிசுவாமித்திரன் [illegible] பாலே



தாடகை வதம்.

கோதண்டபாணிஅம் பாலே-நிலே
குலேந்துபுரண்டலறிக் கொண்டுமெட் பாலே (கோடிய)

ரு. நடலேவஞ்சனேமாயம் தடுக்க-சுவாமி
நாள்க்கொண்டுமுதல்ப்பலி அரக்கரைக் கொடுக்க
கடினசுவாகுபட்டுப் படுக்க-ராமன்
கணேயாலேமாரீசன்கடல்ஓட்டம் எடுக்க (கொடிய)

அகலிகைசாபவிமோசனமும் சரித்திரமும்.

விருத்தம்.

தாடகைதான்விழுந்தபின்பு தேவர்சொல்லச்
சகலபண்டகளுங்கொடுத்தே முனிவர்எல்லாம்
கூடவரகௌசிகயே முதலாம்தீர்த்தம்
கொண்டாடிகௌதமன் ஆசிரமம்சேர்போதில்
காடதிலேரகுராமன் பதத்தூள்சிந்தக்
கல்லுருப்போய்நல்லுருவாய் விளங்கிநின்ற
பாடகக்கால்அகலிகையை இவளார்என்னப்
பரிந்துவிசுவாமித்திரமுனி பகர்கின்றனே.

௰உ-தரு-அசாவேரிராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

தேவிஇவள்ராமா-கௌதமன்-ஆவிஇவள்ராமா


அநுபல்லவி.

ஆவலினல்ப் பண்டு
மேவல்மனம் கொண்டு
அந்தரம் நாடிய
இந்திரன் கூடிய (தேவி)

சரணங்கள்.

க. மாபத்தியால்கங்கைஆடத்தடை பெற்ற
மாமுனிகண்டுவெகுண்டுபயம் சுற்ற
கோபத்தினல்இடும்சாபமொழி மெத்த
கூறையிலேகரும்பாறைவடி வுற்ற- தேவி

உ. வெம்பியமாமுனிகண்ணில்எதிர்ப் பட்ட
வேளேயில்க்கண்டுபொருமல்முனி திட்ட



அகலிகைசாபவிமோசனம்.

அம்பொன்முடிகொட்டடி அளவும் முட்ட
ஆயிரம்கண் அந்தவாசவனுக் கிட்ட- தேவி

௬. ஞானத்திறல்உன்னை ஓதினபேர்க் கெந்த
நன்மையுண்டாமோ அறியேன் இப்போ திந்த
கானத்திலேஉன்றன்பாதத்தூள்கள் சிந்த
கல்இருமாறி அகலிகைஆய் வந்த-தேவி

ஸ்ரீராமர் சீதையைக்கண்டு ஐயுறல்.

விருத்தம்.

திடம்ஆம்விசுவாமித்திரன் இந்தச்-சேதிஉரைக்கலட்சுமணன்
உடனேநடந்துமிதிலையில்போய்-ஒருமாமணிமேடையில்சீதை
மடவாள்காணத்தன்னை அந்த-மயிலேதானும்ரகுராமன் [ந
கடல்வாய்வருசெந்திருஎனவே கண்டான்விரகம்கொண்டானே

௫. தரு சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரோ இவளாரோ-என்ன-பேரோ அறியேனே

அநுபல்லவி.

கார்உலாவும்சீர்உலாவும்மிதிலையில்
கன்னிமடந்தன்னில்முன்னேநின்றவர்-ஆரோ

சரணங்கள்.

௧. பண்ணிப்பதித்தாற்போல் இருஸ்தனமும்-கூட
பாங்கியர்கள் இன்னமும் துரைத்தனமும்
எண்ணத்தாலும்வண்ணத்தாலும் பங்கயப்
பெண்ணைப்போல்கண்ணில்க் காணும்மங்கயர்-ஆரோ

௨. பாக்கியம்என்பதிவர் தெரிசனமே-அதிங்கே
பலித்ததென்ன்புண்ணியமோ மனமே
மூக்கும்விழியும்தீர்க்கமாய் இன்னமும் பெண்கள்
பார்க்கப்பார்க்கநோக்கம்கொள்ளுமோ கண்கள்-ஆரோ

௩. சந்திரவிம்பமுகம லராலே-என்னைத்
தனேபார்க்கிறாள் ஒருக்காலே
அந்தநாளில்த்தொந்தம்போலே உருகிறாள்
இந்தநாளில்வந்ததோ உறவை தருகிறாள் - ஆரோ

கௌசிகர் ஸ்ரீராமர்வரலாறுசொல்லுதல்.

விருத்தம்.

மனதில்இந்தப்படிநினேந்துமறுநாள்எழுந்துமகம்செய்யும்(தார்
கனகமணிமண்டபத்தினில்போய் க்காருத்தனும்தம்பியுமஇருந்
அனையகாலத்திவர்பெருமை அருமைதெரியஉரையும்என்றே
சனகன்உரைக்ககௌசிகன்உத் தரிப்பான்விவரம்விரிப்பானே

௰௪-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்என்றெண்ணுமலேநாளும்-இவன் - அதிசயங்களைசொல்லக்
[கேளும்

அநுபல்லவி.

சூராதிசூரன் ராமன்எனும்பேரன்
சுகுணதீரன் ரவிகுலகுமாரன் இவனை (ஆரோ)

சாரணங்கள்.

௧. ஆதியில்த்தசரதன்புத்திரகாமேஷ்டி
யாகம்செய்யவென்று தொடுத்தான்-வந்த
பூதம்தந்தபர மானந்தத்தைநால்ஆகப்
பொன்னின்கமலத்திலே எடுத்தான்-அதில்
சோதிகோசலைக்கொன்றும் கைகேசிக்கொன்றும்
சுமித்திரைக்கிரண்டுமாக் கொடுத்தான்-மூத்த
பேதைகோசலைஇடத்திந்தராகவன்
பிறந்தான்என்கவலையை விடுத்தான்-இவனை(ஆ)

௨. தலைஆமபரதன்லட்சுமணன்சத்துருக்கன்
தம்பியர்இவனுக்கு நேயம்-மிக
கொலையாளன்சுவாகுவையும்சேனையையும்இவன்அம்பு
கொண்டுபோனதென்ன மாயம்-நான்
உலையாதேன்வேள்வியை முடித்தானேஇவன்அம்பால்
உருண்டதேதாடகை காயம்-மெத்த
மலைபோலேவந்ததும் பனிபோலேபோச்சிந்த
மகாசன்செய்தச காயம்-இவனை (ஆர்)

௩. துரத்தும்சாபம்அகலிகைக்குகாலினலே
துடைத்தானே அவள்உடல் மாசை-சொல்லும்
பெருக்கம்என்ன இவன் பிறக்கவேஉலகெங்கும்
பிறந்ததேமங்கள ஓசை-உங்கள்

பருத்தவில்இவன்கைக்குப்போதுமோபோதாதோ
பார்க்கவேணும்இன்னோர் ஆசை-யிங்கே
வரச்சொன்னாலும்வரக் கிடைக்குமோவலிவிலே
வந்தானேநீங்கள்செய்த பூசை-இவனே (ஆர்)

ஸ்ரீராமர்வில்வளைத்தல்.

விருத்தம்.

புங்கவன்ஆம்முனிவன் இந்தவாறுசொல்ல
போர்வில்லைஅறுபதினாயிரம்பேராலே
அங்குவரும்படிசெய்தான் இதைநாண்ஏற்ற
ஆகும்என்றான்மருமகனே ஆகுஎன்றான்
சிங்கம்எனும்சனகனுடன்வின்னும்மண்ணும்
திடுக்கிடவேஎல்லாரும் ராமன்கையால்
துங்கமுள்ள அந்தவில்லைவளவுகானத்
தொடக்கண்டார்இரண்டுதுண்டாய் விடக்கண்டரெ(டுரு)

டுரு-தரு-தோடிரகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வில்லானதுரண்டாய் ஒடிந்துவிழுந்ததேபாரில்

அநுபல்லவி.

கலியாணராமன்-அனகன்கையால்-மிதிலையில்வாழ்சனகன் -வி

சரணங்கள்.

சுத்திப்பெறும்முனிவோர்கள்மங்கள சோபனங்கள்பல கூற
பத்துதிசைவானவர்எல்லோரும்பனிமலர்மாரிகள் தூற
சித்திப்பிரமையாலேநால்இரு திசையானைகள்தலை பீற
கத்திப்பிடிஇடையாள்சானகிகாதல்எண்ணம் ஆனதுநிறைவே
[ற (வில்லா)
சிங்காரமகாவிகுலமே சிலாக்கியம்என்னஒளி வீச
உங்காரம்செய்தராசர்எல்லோரும்ஒருத்தர்போலமுகம் கூச
இங்கேபெண்சீதைசெய்தவப்பலன் லபிச்சுதென்றுபலர் பேச
கெங்காதரன்அல்லால்ஒருவர்க்கும் கிளப்பஒண்ணாதமகாபபிர
[யாச(வில்லா)
தருமாகமசாஸ்திரகோடிகளும் சகலவேதங்களும் பாட
வருமாமுனிவிசுவாமித்திரன்சொல் மறுவில்லாதபடி கூட
ஒருகாலனும்இந்தஓசைதன்னை ஓர்கோணுமல்செவிமூட
நிரமாஇனிஇவனேகோதண்டதீக்ஷாகுருஎன்றுகொண்டாட
(வில்லா)

மிதிலைக்குச் சக்கிரவர்த்தியின்எழுர்ச்சி.

விருத்தம்.

நன்அரியவில்லதுதான் ஒடிந்தபின்பு
நடைதூதர்கலியாண ஓலைகாட்டா
அண்ணலெனும்தசரதனும் பயணபேரி
அதுமுழங்கத்தேவியரும் படையும்கூடத்
தண்உலவுசந்திரகிரி பிறவும்சென்றான்
சனகேசன்சதுரங்க தளத்திெனாடே
எண்அரியகளிப்பாக வழிமேற்கொண்டே
எதிர்வந்தான்உடன்மிதிலைப் பதிவந்தானே. (கஎ)

௱கூ-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராசன்ஆம்தசரதராசன்-சனகமகா-ராசன்பதிக்குவந்தானே

அநுபல்லவி.

வாசவன்பணிராக வேசன்கலியாணஓலை
வாசகம்கண்டுவிசு வாசநேசம்உண்டாகி (ராச)

சரணங்கள்.

௧. கொட்டம்இடும்கெசமும்-அட்டம்இடும்துசமும்
எட்டியகுதிரையும்-கட்டியதேர்நிரையும்
இட்டமுள்ளராசரும்-அட்டாளதேசரும்ஆய்
பட்டவர்த்தனர் இணங்க-கப்பணம்
இட்டுமற்றவர் வணங்க
வட்டவெண்குடையும்முடிகளும் துலங்க
மகரதோரணங்கள்முறைமுறை இலங்க
சட்டம்ஆனதிசைஎட்டின்மேலும்படை
மட்டில்லாமல்கூட-கட்டியம்போட -பெண்கள்பாட-கொண்டாட(ராசன்)

௨. உச்சமாணிக்கத்தாலே-தச்சப்பல்லக்கின்மேலே
அச்சுதன்தாய்முதலா-மெச்சியதேவிமார்கள்
இச்சையால்முன்னேபோ-கச்செய்துபின்னாகவே
பச்சைப்பங்கிளி என்னவே-பாங்கியர்
மொச்சுக்கொண்டு துன்னவே
வச்சிரபாணிஎன்னமலர்முகம் மின்ன
மண்ணும்விண்ணும்என்னஅதிசயம் என்ன

உச்சிமீதுகரம்வச்சுமன்னவர்கள்
எச்சரிக்கைபேச-கவரிவீச-வெகுவிலாச-உலாச (ராச)
௩. மெத்தப்பெருஞ்சேனைகள்-சுற்றத்துந்துமிபேரி
சத்தமேகம்போலார்க்க-அத்திசையிலேநின்று
சத்திரபதிசனகன்-நெற்றிநேர் ஆகவர
முற்றியகடல் போலே-புகுந்த
மற்றொருகடல் போலே
பத்திஆகஇருபடைகளும் கலந்து
பார்த்திரண்டுராசரும்முகம் மலர்ந்து
வேற்றிஎறியபு-சத்திலேஅவனை
ஒற்றிஅணைத்துமாற்றி-மிகுத்தகீர்த்தி-படைத்தமூர்த்தி-அயோ
ாத்தி(ராசன்)

———:0:———

ஸ்ரீ ராமர் பவனிவருதல்.

விருத்தம்.

வந்ததசரதராசன் தன்னைமுன்னே
வந்திருந்தராமனும் தம்பியும்போய்க்கண்டர்
அந்தஇருவருந்தந்தை அருளைக்கொண்டார்
அரசர்இருவரும் பின்னேவரமுன்சென்றார்
பந்தமுள்ளமிதிலை வீதியிலேதேர்மேல்
பவனிவரும்ராமனைக் கண்டாசைகொண்டு
செந்திருவைநிகரான பெண்கள்பின்னே
செல்லுவார்மதிமயங்கிச்சொல்லுவாரே. (௰அ)

க-திபதை-கௌளிபந்துராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. சோதிநெடுந்தேர்மிதிலை வீதியினில்வரக்கண்டு
சுவாமிமுகம்காணவந்தார் வெகுமாதர்
பூதலம்தனில்இந்தவூர்மாதவம்செய்ததோ
புண்ணியன்இங்கேவந்தான்என்றார் வெகுமாதர்

உ. ஆடகலோகத்தமுதை ஈகள்மொய்த்துக்கொண்டதுபோல்
ஐயனைமொய்த்துக்கொண்டார் வெகுமாதர்
கோடைதனிலேதண்ணீர் ஓடைகண்டமான்கள்போல
கூடிக்கொண்டோடிவந்தார் வெகுமாதர்

௩. ஆழியும்வளையும்செம்பொன் ஓலையும்மாலையும்விட்டாள்
ஆடைவிடாமல்நின்றாள் ஒருமாது

கெழ்விமுறையில்லையோ-சுவாமி உன்முன்னே அம்பாலே
 கிழிக்கின்றான்மாரன்என்றாள் ஒருமாது

௪. பெருத்தமலைபோல்வில்லை-ஒடித்தாயேசீதைக்காக
 பெலத்தவன் நீயேயென்றாள் ஒருமாது
வருத்தமோமாரன்கையில்கரும்புவில்லைஒடிக்க
 மாட்டாயோ சுவாமியென்றாள் ஒருமாது

௫. கண்ணுக்கோருருவாய்ப்பார்ப்போர்கண்ணில்எல்லாம்தோ
 ன்றும் இவன்
 கண்ணனே ஆகும்என்றாள் ஒருமாது
மணணுவ்விண்ணும்கடந்தானைக்-கண் ணால்வளைத்துக் கொ
 வைதேகியேபெண்ணேயென்றாள் ஒருமாது
 [ண்டயளே

௬. சாய்த்தொருவரையும்காணாள்-சாமிதனையேகண்டாள்
 தனியனோராமன்என்றாள் ஒருமாது
வார்த்தையும்உடமைகளும் -பூந்துகிலும்சொர்ந்தாள்உயிர்
 மாத்திரம்சோராமல்நின்றாள் ஒருமாது

௭. இங்கேஎன்உளம்புகுந்தான்-கண்கவினாலேமூடி
 இறுக்குவேன் இவனையென்றாள் ஒருமாது
மங்கையரேஎன்மனது-வள்ளலபின்னேபோச்சு தங்கே
 வரக்கண்டதுண்டோஎன்றாள் ஒருமாது

௮. தன்மருகன் ஆகஇந்த-மன்னனைப்பெற்றசனகன்
 தர்மவான்என்றுசொன்னாள் ஒருமாது
கன்மனதுக்காரன்இவன்-தன்மகளுக்காகவில்லை
 ஏன்வளைக்கச்சொன்னான்யென்றாள் ஒருமாது

சீதைசபாமண்டபத்துக்குவருதல்

விருத்தம்.

பாவையர் இப்படிஉருகப்பவனிவந்தான்
 படைஅரசர்தசரதனும் பலரும்வந்தார்
மாவி சுவாமித்திரனுடன் தம்பிமாரும்
 மருங்கிருக்கராகவனும் இருந்தான் இப்பால்
தாவுபுகழ்வதிஷ்டமுனிவார்த்தைகொணட
 சனகன்உரைகொண்டுமணிமண்டபத்தில்
பூவுலகில்த்தேவர்சிறைமீட்கவந்த
 பொருளினல்சிதையெழுந்தருளினளே. (௰௬)

கஅ-தரு சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அன்னை சானகிவந்தாளே.ராசாதிராசர்- அனைவர்க்கும்காக்ஷிதந்தாளே

அநுபல்லவி.

கன்னிமார்என்னும்தார - கனத்தில்ச்சந்திரனைநேர
பொன்னின்ஒளியும்பூமணமுங்கொண்டு- தொடர்ந்து
மன்னன்சனகன்மணிமண்டபத் தில்நடந்து(அன்)

சரணங்கள்.

க. சுந்த்ரபாதம் வைக்கவே ரத்தினசிலம்பின்
சோதிநிலத்தில் மோய்க்கவே பூமிஆகிய
தன்தாய்மகளுக் கென்னவே விரித்ததேமாந்
தளிர்போல்எங்கெங்கும்மின்னவே
அந்தஅமிர்தம்கண்டஇந்திரன்போ லேதாகம்
ஆகியராமன்முன்னேதோகையர் நடுவாக
கந்தமலர்க்கைவ்ளைச்சோதியி னாலேரண்டு
கடைக்கண்ங்கள்கொண்டுராமன்-வடிப்பங்கள்கண்டுகொண்டு()

உ. வீராமன்கைதீண்டியே இடும்போதவன்
மென்கைபிடிக்கவேண்டியே அம்மன்கைஆள
வாரீசமலர் விரித்துக் காட்டும்சூரியன்போல்
மாணிக்ககங்கணந்தரித்து
சோராநடைகண்டுநேராஆ காமல்மெத்தத்
துவளும்அன்னங்கள்போலக் கவரிமங்கயர்சுற்ற
சீராமனைவிடுத்துஆர்ஆ ருக்கும்துய்ய
தெய்வம்இவள்என்றெண்ணிக்கைகள்அஞ்சலிசெய்ய (அன்)

ங. சிவியகூந்தல்மேலே பூரணச்சந்திரன்போல்
தெரிந்திடஒருக் காலே மாலிகைசூடி
தாழ்வில்லாமல்முன்னாலே தேவர்கள்செய்த
தவம்வெளிவந்தால்ப்போலே
மூவுலகும்செலுத்தும்ராவண னுக்குத்பண்டு
முத்திகொடுக்கவந்த சித்திரவ டிவைக்கண்டு
தேவிஇவள்என்றுல்ராகவன் இந்தச்சின்ன
சிலையோஒடிப்பான்ஏழு-மலையும்ஒ - டிப்பான்என்ன (அன்னை(

௩. தெரிசனம்காணப் போருமோ சொல்லஎன்றுது
    சேஷனுமேலும் ஆருமோ இந்திராணிமுதல்
அரிவையர்க்குமெய் நாலுமே ராமனும்காண
    அனந்தம்கோடிகண்வேணுமே
பிரமன்முதல்எதுவும் பெற்றவனுக்குநல்ல
    உரிமினில்இனிவேறு உடமைகள்என்னசொலல்
அருமையாஉலகில்க்கல் யாணதினத்தில் பெண்கள்
    திருமங்கிலியத்தில்இடும் திருஆகிய எங்கள் (அன்)

ஸ்ரீ ராமர்மணக்கோலம்கொள்ளுதல்.

விருத்தம்.

சிலம்கொண்டிப்படிவந்த-சீதைமாதரோடும்சென்றுள்
மூலம்கொண்டகௌசிகனும்-முகூர்த்தம்நாளைஎன்றுசொன்ன
ஓலம்கொண்டவேதன்முதல்-ஓராயிரத்தெட்டண்டமும்தன்(ன்
கோலம்கொண்டராமன்மணக் - கோலம்கொண்டான்கொரண்ட
[ானே

௰௩-தரு- அசாவேரிராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

ராமசாமிகொண்டகோலம்-என்-னாலேசொல்லப்போமோ

அநுபல்லவி.

கோமிதிலேராசன்முன் அனேக-கோடிமன்மதனேநிகர்ஆக-ராம

சரணங்கள்.

க பாதகடம் சேர்த்தி-மருங்கினில்
    பசும்பொன்ஆடை போர்த்தி-மார்பின்
மீதுபொன்நூல் ஏற்றி-தன்நாமமும்
    விளங்கவே சாத்தி
சீதைஆசை இதனைப்பா ராட்டி
    தெரிந்தசந்திரசூரியர் அதைநாட்டி
ஓதிமாறுகா திலேஒளி காட்டிகுண்டலங்கள்பூட்டி
ராம

உ. சுமுகபட்டம் வரித்து நவரத்தின
    தொங்கல்மாலை பரித்து-முடிமேல்
விமலகுடம் தரித்து-பீதாம்பரம்
    மேனிமேலே விரித்து

கமலமாமலர் ஆனது நாண
கங்கணங்கள்செங் கையினில் பூண
அமுர்தகிரணசந்திரன்போல்முகம் காணயோககல்யாண
ராம

௩. ஆகமீது வன்ன-வன்னம்
ஆனபணிகள் மின்ன-பச்சை
மேகம்போலே காந்தி -விளங்கும்
மேனியில்கலவை ஏந்தி
வாகுமந்தர கிரிமுறுக் குண்ட
வாசுகீஎன் மணிவகை கொண்ட
நாகரீககே யூரம்ஒளி மண்ட வீரகோதண்ட
ராம

கலியாணச்சடங்குசெய்தல்.

விருத்தம்.

சக்கிரபதிஆகியராகவன்இவ்வாறு
சமைத்தநல்லமணவாளக்கோலங்கொண்டான்
அக்கணமேதம்பியரும்கோலம்கொண்டார்
அரசர்களும்தசரதனுமமந்திரிமாரும்
திக்கிலுள்ளமுனிவரும் வேதியரும்கூடித்
திரைகடல்போல்மிகப்பொங்கிமிதிலைதன்னில்
முக்கியமுள்ளபலசடங்கின் விதிகள்எல்லாம்
முறைசெய்தார்கலியாணத் துறைசெய்தாரே. (உக)

உ-திபதை-மோகனராகம்-அடதாளம்சாப்பு

கண்ணிகள்.

க. கல்லியாணபேரிகை அடித்தார்-சனகன்
சொல்லியவார்த்தையைப் படித்தார்
எல்லாரும்ஆனந்தம் கூடினார் - அவர்
எங்கெங்கும்நின்றுகூத் தாடினார்
உ. வாழைகமுகுகள் நாட்டினார்-நெடு
வானமட்டும்பந்தல் ஓட்டினார்
ஆழிபோலேதிரை அமைத்தார் - அலங்
காரவேதிகை சமைத்தார்
௩. தூணுக்குத்தூண்உறை பூட்டினார் - சந்திர
சூரியர்போல்க்கண்ணாடி மாட்டினார்

சானுக்குச்சான்மாலை தொடுத்தார் - நங்க
தாலமும்கும்பமும் எடுத்தார்

ச. பொன்னரியாலைகள் வீக்கினர் - முத்தும்
பொன்னும்பவளமும் தூக்கினர்
கின்னரிவீணைகள் பாடினர் - மெத்த
கேளிக்கைமாதர்கள் ஆடினர்

ரு. பூரணகும்பங்கள் பதித்தார் - முக்கிய
பூசுரர்வேதத்தால் துதித்தார்
தோரணத்தால்வெளி மறைத்தார் - எங்கும்
சொர்னவருஷமா இறைத்தார்

சு. மாணிக்கதீபங்கள் ஏற்றினர் - நல்ல
வடைகஸ்தூரிகள் தீற்றினர்
ஆணிப்பொன் ஆடைகள் சாத்தினர் - பனிநீர்
ஆலத்தெருவெங்கும் ஊற்றினர்

எ. சந்தனத்தால்கோலம் தீட்டினர் - பஞ்ச
தருவையும்நன்றாக நட்டினர்
சுந்தரபாலிகை கூட்டினர் - நறுந்
தூபமும்தீபம்மும் காட்டினர்

அ. பொன்ஆலவட்டமும் பட்டமும் - திவ்விய
புஷ்பமும்விந்தமும் குந்தமும்
தன்னாவண்ணமாக் கட்டினர் - எங்கும்
தங்கப்பொடிகளாக் கொட்டினர்

கூ. மத்தளம்மல்லரி தாளங்கள் - பஞ்ச
வாத்தியம்நாகெச மேளங்கள்
தித்திகளால்ச்சக்கிர வாளமும் - திக்கும்
செவிபடுமேஅண்ட கோளமும்

ய. சனகனும்தசரத ராசனும் - வா
சவனுடனேஅள கேசன்போல்
கனிவுளசந்தோஷம் மீறினர் - வந்து
கலியாணமண்டபம் ஏறினர்

௬௧. வெள்ளைவிடையினை	ஊர்ந்தார் - உமை
வேணிஅரன்வந்து	நேர்ந்தார்
வள்ளியும்கந்தனும்	சேர்ந்தார் - மூத்த
மைந்தன்வல்லபையும்	சார்ந்தார்
௬௨. வேதனும்வாணியும்	நாடினர் - தே
வேந்திரன் இந்திராணியும்	கூடினர்
மாதவர்தேவர்மென்	மேலே - அந்த
மண்டபம்சேர்ந்தார்இப்	பாலே
௬௩. மங்களம்ஆம்ராமச்	சந்திர - சூரிய
வங்கிசமனரிஆன	தந்திரன்
கங்கைமுதல்த்தீர்த்தம்	ஆடினர் - மிகக்
கலனைவச்சலனைவகள்	சூடினர்
௬௪. மாலைமகுடமு	கத்தணி - பட்டம்
வாகுவலயம்சா	ரப்பணி
காலணிகைவளை	பாரித்தார்-பதக்
கங்கள்முதல்அலங்	காரித்தார்
௬௫. தனதாம்பரதன்கை	நீட்டவே - மற்ற
தம்பியர்சாமரை	ஆட்டவே
கனகரதம்கண்டு	தாவினன்-ராமன்
கலியாணவேதிகை	மேவினன்
௬௬. எப்பொருளும்பெற்ற	கோதையை - அஷ்ட
லட்சிமியும்ஆன	சீதையை
ஒப்பனைசெய்யுவும்	தேடுமோ - என்
ஒருத்தனலேசொல்லக்	கூடுமோ
௬௭. பூமிஉள்ளோர்க்கெல்லாம்	ஆவியை - நல்ல
பூவைஎனும்சீதா	தேவியை
சாமிஅருகினி	லேதந்தார் - வ
திஷ்டரும்தருப்பைகொண்	டேவந்தார்
௬௮. முத்தானதண்டலம்	விரித்தார் - வேத
முறையேசடங்கெல்லாம்	தரித்தார்
உத்தமமந்திரம்	விளைத்தார் -முனிவர்
ஓமாக்கினியை	வளர்த்தார்

௰சு. தானதருமங்கள் ஓங்கவே- ரா
சூதர்போய்பூமியாரம் வாங்கவே
வானவருக்கின்பம் சுற்றவே· ஓமம்
வலம்கொண்டெழுந்தது மெத்தவே

உ௰. சல்லாபன் ஆகிய நேசன்-சிதை
தன்னை அந்தமிதி லேசன்
எல்லாருங்காணமுன் னுமே-சொல்லி
ஈந்தானேராமன்கை மேலே

உக. அயனும்தையல்கை பிடித்தான்-கலி
யாணவிதியெல்லா முடித்தான்
செய்யவளும்திரு மாலே-போலச்
சேர்ந்தெழுந்தாரமெசு மேலே

§*§

ஸ்ரீராமர் அக்கினிவலமவருதல முதலியதுகள்·

விருத்தம்

ராகவன்சிதையைப்பாணிக்கிரணம்செய்து
நற்றீயைவலம்வந்தான்சீதைபாதம்
மோகமுடன்பற்றிஅம்மிமீதில்வைத்தான்
முக்காலும்அருந்ததிமுன்காட்டினான்பின்
ஏகமனதுடன்முனிவர்தந்தைதாய்மார்
எல்லார்க்கும்சேவித்தான்,அப்பால்இன்பம்
ஆகஒருநன்மலையில்ச்சிதையோடும்
அமர்ந்திட்டான் அண்டம்எல்லாம்சுமந்திட்டானே(உஉ

சோபனம்பாடுதல்·

இதுவும் அது

மணம்உள்ளமலர்மாரிஅந்தவேளை
வானவர்கள்பொழிந்திட்டார்முனிவர்எல்லாம்
கணம்உள்ளஆசிர்வாதங்கள்சொன்னார்
காவலர்கள்பொன்மலர்கள்சொரிந்தார்தாய்மார்

பணம்உள்ளநல்வரிசைபலவும்ஈந்தார்
பத்திஉள்ளபந்துக்கள் எலலாம்மொய்த்தார்
குணமுள்ளசுமங்கலிகள் அங்கேவந்து
கூடினர்சோபனங்கள்பாடினரே. (உ௬)

௰௬-தரு-மத்தியமாவதிராகம்.ஆதிதாளம்.

பல்லவி.

சோபனம் சோபனம் - ராம - சுவாமிக்கும்சீதைக்கும்
சோபனம் சோபனம்.

அநுபல்லவி.

பூபன் தசரதமதிக்கும் சோபனம்
புண்ணியசனகபூபதிக்கும் சேபனம்சோபனம்

சரணங்கள்.

௧. தாமம்மேவியரதிக்கும்ரதிசுந் தரனுக்கும்-சோபனம்
சீர்மகள் இந்திராணிக்கும்இந் திரனுக்கும் -சோபனம்
மாமதிபெருகும்வாணிக்கும்அவள் வரனுக்கும்-சோபனம்
தாமரைமலர்த்திருவுக்கும்தாமோ தரனுக்கும்-தேவிக்கும்
[சோபனம்(சோபனம்

உ. நேர்வரும்சுமந்திரன்முதல்மந்திரி நேசருக்கும்-சோபனம்
ஏர்பெறுவதிஷ்டன் கவுசிகன்முதலாம்யோகீசர்க்கு- சோபனம்
வார்முலைஅரம்பைமாதருக்கும்எண்டிசை-வாசருக்கும்சோபன
சேவைசெய்துமனம்மகிழுமஐம்பத்தாறு-தேசருக்கும் -ராசாதி
[ராசர்க்கும்-சோபனம் (சோபனம்)

௩.வருகவுசலைகைகைசுமித்திரைஎனும்தாய்- மாருக்கும் சோப
பெருகும்பரதன்முதல் ஆகியமூன்று-பேருக்கும் சோபனம்
ஒருமையா இதுசொன்னவால்மீகர்கம்பர்இருவர்க்கும்- சோ
அருணசலகவிநாடகம்இதுபடிப் பார்க்கும்கேடகும் (பனம்
எல்லார்க்கும்சோபனம்

———)(*)(———

ஸ்ரீராமருக்கும்பரசுராமருக்கும்சம்வாதம்.

விருத்தம்.

திருமகளாம்சானகிகல்யாணமசெய்து
செயம்உளதம்பியர்க்கும்விவாகங்கள்செய்து
வரும்வழியில்சகுனவிரோதத்தினலே
மலைபோலவுளிப்பசுராமன்வந்தான்

பெருகுதசரதன்கண்டுநடுங்கும்போது
பிரசண்டகோதண்டகுருராமன்தானும்
ஒருவரும்நேரில்லைனவில்லைவந்தி
உரம்சொல்வான்உடனேஉத்தரம்சொல்வானே. (உச)

௩. திபதை-கலியாணிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. மண்ணினில்அரசர்போல்க் காணுகிறாயே ஆசீர்
வாதம்ரகுராமா
கண்ணினில்வேதியர்போல்த்-தோணுகிறாயேநமஸ்க்
கார்ம்பரசு ராமா

உ. தாடகைஎன்னும்பெண்மேல்-சண்டைகொள்ளராசர்க்குத்
தான்விதியோ ராமா
வேடர்கள்தொடுக்கும்வில்லைப்-பிராமணர்தொடத்தலை
விதியோபரசு ராமா

௩. ஆனால்ப்பெண்கொலைசெய்யல்ஆமோஉனக்கிது
அடைவோரகு ராமா
தான்ஆகப்பெற்றெடுத்த-தாயைக்கொலைசெய்தாயே
தகுமோபரசு ராமா

ச. தருமமாஎன்னைப்பெற்ற-தகப்பன்சொற்ப்படிசெய்தேன்
தாய்க்கொலையோ ராமா
குருவார்த்தைதடுக்காமல்-நானும்செய்தேன்பெண்
கொலையோபரசு ராமா

ரு. சொத்தவில்ஒடித்ததை-மெத்தமெத்தவேஎண்ணித்
துள்ளாதேரகு ராமா
கற்றவேதியன்என்று-பொறுத்தேன்பொறுத்தேன்குதிக்
காதேபரசு ராமா

சா. அந்தவில்வளைத்தாயே-இந்தவில்வளைத்திந்தா
அடடாரகு ராமா
இந்தாவளைத்தேன்இதில்-வைத்தஅம்புக்குவழி
எங்கேபரசு ராமா

எ. அம்புக்குவழியில்லை-நான்பிராமணன் இனி
அனுக்கிரகம்செய் ராமா
பின்புத்திக்காறன் இரு-பிறப்பன்உன்னோடேஎன்ன
பேச்சுபாசு ராமா

அ. சந்திசெபதபங்கள்-எல்லாம்உன்சாத்துக்கே
தந்தேன்ரகு ராமா
வந்தவழிபார்த்துக்கொண்-டோடிப்போவதேநல்ல
மார்க்கம்பாசு ராமா

ஸ்ரீராமர்திருஅயோத்தியைச்சேர்தல்.

விருத்தம்.

இன்னவகைசொன்னராகவனைவாழ்த்தி
இனியதவம்செய்யப்பரசுராமன்போனன்
அன்னவன்கைக்கொண்டவில்லைவருணராசன்
அடைக்கலமாய்வைத்துவிட்டுராமச்சந்திரன்
மன்னவரும்தம்பியரும்தேர்மேல்க்கொண்டு
வரஅருகேதானும்மணித்தேர்மேலேறி
மின்அனையசிதையுடனேசந்தோஷம்
மிகவந்தான்அயோத்திமாநகர்வந்தானே. (உரு)

பாலகாண்டம்முற்றும்.

(*)

வசனம்-க-விருத்தங்கள்-உச-ஆக-உரு.
தோடயம்-க-திபதைகள்-ங-தருக்கள்-கஅ-ஆக-உஉ.

ஆகபாயிரம்-க-க்கும்-காண்டம்-க-க்கும்கூடிய
கொச்சம்-க-வெண்பா-உ-வசனம்-க-விருத்தம்-ங0-ஆக-ஙச

[*]

தோடையம்-க-திபதைகள்-ங-தருக்கள்-உரு-ஆக.உகூ.
சக்கிரவர்த்திதிருமகனார்
திருவடிகளேசரணம்.

அயோத்தியகாண்டம்.

சக்கிரவர்த்திமுடிசூட ஸ்ரீராமரைவேண்டுதல்.

விருத்தம்.

வனிதமணிச்சனகியுடன் அயோத்திமேவி
மண்வாளராமன்என இருக்கும்நாளில்
கனிவுபெறப்பரதனைச் சத்துருக்கனோடே
கைகையன்பால்விடுத்துசின்னாள்கழிந்தபின்பு
இனியதசரதன்வதிஷ்டன் மந்திரிமாரும்
இசைந்தபடித்துறந்திடராகவனைக்கூவித்
தனிமகுடம்புனைனவே அவனுக்கன்பாய்ச்
சாற்றுவான்தன்கவலை ஆற்றுவானே.

க-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தமனுதரவேணும்மகனே-ராமா-இந்தமனுதரவேணும்

அநுபல்லவி.

இந்தமனுதரவேணும் மகனே-ராமச்
சந்திரனேபுவிஆளத்தகும்நீ உத்தமனே (இந்த)

சரணங்கள்.

க. அறுபதினாயிரம்வருஷ காலம்-வாழ்ந்தேன்
அதிலேகாணுதெல்லாம்கண்டறிந்தேன் இந்திர சாலம்
பருவதமோஎன்காய ஸ்தூலம்-இனிப
பார்க்கவேணும்என்கண்ணால்நீ பாராளும்கோலம் (இ)

உ. முடியாதமோகாந்த காரம்-இத்தை
முதுமையிலும்துறவாமல் இருந்தென்ன சாரம்
குடிதாங்கிஎனக்கோர்உப காரம்-இந்தக்
குவலயம்கைகொண்டுமுத்திகொடுப்பதுந்தன்பாரம் (இ)

௩. ஒருவன் அறுபதினாயிரத் தோரே-கங்கை
உதவிமுத்திகொடுத்தானே பகீரதன்முன் னோரை
இருநிலத்தில் அதுபோல்உன் பேரை-உதவ
எனக்குமுத்திதாஆள்வாய் இனிஇந்தபாரை (இந்த)

௪. உள்ளத்தைஉன்னோடேசொன் னேனே-முன்னாள்
ஊமைகண்டகனவாக உள்ளடக்கி னேனே
பிள்ளைக்கலிதீர்த்தபெரு மானே-இந்த
பெரும்புவிமேல்கொள்ளமுத்தி பெறவேணும் நானே (இந்த)

௫. மலர்க்கையால்பிடிப்பாய்செங் கோலே-எந்தன்
வார்த்தைதடுக்காய்எனவே உரைத்தேன் ஒருக் காலே
தலைச்சுமைதந்தான்என்றெந்தன் மேலே-சற்றும்
தாழ்வாயென்னாதேஇனித் தாங்காதென் னாலே (இந்த)

௬. வாழைஅடிவாழையென மேலே-இந்த
மண்டலத்தைஆண்டதுண்டு மன்னர்ஒருக்காலே
சூழ்மதில்அயோத்தியைஅது போலே-நீயும்
சுமந்தாளவேணும்என்தன் சொல்வழியினாலே (இந்த)

௭. குலத்தில்உள்ளகுறைஎல்லாம் வாங்கும்-உன்தன்
குணத்தாலேஉலகெல்லாம்-மென்மேலே ஓங்கும்
மலைக்கும்மலைஅல்லவோ தாங்கும்-இந்த
மண்டலத்தைநீதாங்கினால் என்கவலை நீங்கும் (இந்த)

ஐம்பத்தாறுதேசத்துராஜர்கள்வருதல்.

விருத்தம்.

ஈங்கிவை இப்படி மகனை இசையக்கூறி
இனியதசரதராசன்கணிதர்சொல்லப்
பாங்குபெறுதேச ராசர்க்குராமான்
பட்டாபிஷேகம்இன்றைக் கழிவீர்என்றும்
நீங்கள்எல்லாம்அயோத்திநகர் வருவீர்என்றும்
நினைப்பினால்தன்ஓலை அனுப்பிவிட்டான்
ஆங்கவரும்மிகமிகச்சந்தோஷம்மீறி
அந்தந்ததேசம்விட்டேஅணுகினாரே (௨)

உ. தரு-மத்தியமாவதிரகம். அடதாளம்சாப்பு.

பல்லவி.

வந்தனர்எங்கள்கலியாணராமச்-சந்திரன்திருமுடிகாண

சரணங்கள்

க. வந்தனர்அந்தந்ததேசத்துள்ளோர் காடும்
மன்னன்இராமனைச்சொர்ன முடிசூடும்
சந்திரிகலேயைக் கண்டெதிரே கொண்டு
தம்தலைமேல்வைத்துக் கண்களிலே ஒற்றி (வந்த)

உ. வங்களர்சிங்களர் மாளவர் சோளர்
மராடர்கர்னுடர் மகதர் குருதர்கள்
கொங்கணர்டங்கணர் குச்சரர் மச்சர்
குலிங்கர்கலிங்கர் தெலுங்கர் முதல்ஆக(வந்த)

ங. சோளர்சாளுவர் உற்களர் பப்பரர்
சேதிபர்குந்தளர்சித்தர் அவந்திகர்
ஆரியசீனர் விதர்ப்பர் விமதகர்கள்
ஔட்டர்பராஷடிரர்சுராஷ்டிரர் முதலாக(வந்த)

ச. புண்டரீகக்கண் ராமனுக்கு முடி
பூணச்செய்தான்றெநகாணப்பெற்றோம் என்று
மண்டும்ஐம்பத்தாறுதேசத்து ராசரும்
மன்முடிமன்முடிக்கொண்டாடி கொண்டாடி(வந்த)

திருஅயோத்திஅலங்கரித்தல்.

விருத்தம்.

தேசதேசத்தில்வந்தராசர்எல்லாம்
தெசரதராசன்சமுகம்தனிலேகூடி
நேசமுடன்ராமனுக்கு மகுடம்சூட்ட
நினைந்தபடிசெய்எனவே மகிழ்ந்துகூற
ஆசகலும் அயோத்திமா நகரில்வேந்தன்
ஆனைமேல்த்துந்துமிகள் அடிப்பீர்எனப்
பூசுரரும்ராசர்களும் அறிந்துகொண்டு
பூரிப்பார்நகரம்அலங் காரிப்பாரே (ங.)

௩-திபதை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. விசையதுந்துமி	அடித்தார்-நகர்எங்கும்
தசரதன் அருளியமொழி	படித்தார்
திசைதிசைசொல்லி	விடுத்தார் - வாசலில்
அசையும்விசையகேதனம்	எடுத்தார்
௨. பூரணகும்பம்	அமைத்தார் - தெருவெங்[கும்
தோரணம் அழகுடனே	சமைத்தார்
வாரணம்	அலங்கரித்தார் -முனிவர்க[ள்
ஆரணம்முறைமுறை	ஆர்பரித்தார்
௩. மாலிகைதொடுத்து	வைத்தார் - முத்துமுனைப்
பாலிகைபலபலபடுத்து	வைத்தார்
ஆலயம்விளக்கு	வித்தார் - பூமலர்
சோலையும்சாலையும்துலங்கு	வித்தார்
௪. அத்திகள்	பொருவாரும்- வெளிவ[ட்ட
முத்துக்குடைபிடித்து	வருவாரும்
சித்திரம்	புனைவாரும் - சந்தன
கஸ்தூரிகளபத்தால்	நனைவாரும்
௫. சிந்தூரம்	எழுதிடுவார் - பரிமளச்
சந்தனந்தாழ்ந்தரை	மெழுகிடுவார்
கந்தப்பொடிகள்	இறைப்பார-மாவனை
பந்தல்இட்டந்தரவெளி	மறைப்பார்.
௬. வானவர்வந்து	திரிவார் - அடிக்கடி
மேனகை ஊர்வசி	நடம்புரிவார்
கானவித்தைகள்	படிப்பார் - அதுக்கிளம்
ஆனகோகிலம்போல்ச்	சுதிபிடிப்பார்
௭. அங்கே	எதிர்சொல்லுவார்-இடம்
இங்கேஇருமஇரும்	எனசொல்லுவார் [காட்டி
சிங்காசனம்	அணிவார்கெளசலை
கண்காணவேஇவை அடி	பணிவார

அ. சடங்குகள்	செய்வாரும்-சமித்துகள்
இடம்படுதருப்பைகள்	கொய்வாரும்
உடந்தையாய்த்	திரிவாரும் - பொன்மழை
இடம்கண்டவர்க்கெல்லாம்	சொரிவாரும்
கூ. ரம்பயர்	நடமாட வீணையில்
தும்புருநாரதர்	இசைபாட
செம்பொன்	மவுலிசூடா ராமற்குச்
சம்பிரமம்சொல்லமன்னர்	எழுந்தோட
ய. சல்லரி	பேரிதாளம் துந்துமி
மல்லரியொடுகர	கெசமேளம்
சொல்லிய	அண்டகோளம் கிழிபட
எல்லையும்குமுறிடு	மேளேம்
கக. இப்படி	கொண்டாடி ராமனுக்கு
ஒப்பனைசெய்வதே	தெனநாடி
அப்போது	தோய்ப்படி கூனியும்
வெப்புடனேவந்தாளே	குடிகேடி

கூனிகைகேசியைகலைக்கவருதல்.

விருத்தம்.

துதித்திடும்அயோத்திஆளும்- சொர்ன்னமாமுடிராமற்கே
பதித்திடவேணும்என்று பலரும்ஆர்பரிக்கக்கண்டாள்
இதைக்கலைத்திடுவேன்என்று-ராமன்வில்உண்டையாலே
கொதித்திடும்மனத்தாளான-கூனியும்தான்வந்தாளே. ௬

௬-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கூனிவந்தாளே - பொல்லாத - கூனிவந்தாளே

அநுபல்லவி.

போனநாள்ராமன்செய்த பகையால்க் காய்ந்து
பூனைபோல்இருந்து புலிபோல்ப் பாய்ந்து (கூனி)

சரணங்கள்.

௧. அடுக்குமோராமனுக்கு அரசொருக் காலே
ஆர்கொடுக்கிறுர் அத்தை அறிகிறேன் மேலே
கெடுக்கிறேன்நான்என்றுபுரக்கடத் தாலே
கிணறுவெட்டபூதம்புறப்பட்டாற்ப் போலே (கூ)

௨. பூமிபாதனுககுத்தகும்ளை உணாக்க
பூவைகைகேசிதன்மனமதைக் கணாக்க
ராமன்பகையைநினைந்தடிவாய் நுணாக்க
நடுங்கிவிழுந்தலைந்துபெருமூச் சிரைக்க(கூனி)

௩. கொட்டியபஞ்சுபோல்உடம்பெல்லாம் தளர்ந்து
கூனிகுறுகுறுத்துவில்லைப்போல் வளைந்து
பட்டம்கட்டஒட்டுவேனோஎன் றளைந்து
பழயபகையைஎண்ணிப்பழமுள்ளு களைந்து(கூனி)

௪. சந்தானதுபோய்முடங்கிய காலி
சனைபோலேநாத்துத்திரங்கிய தோலி
இந்திராதிதேவருக்கனு கூலி
இலங்கைராட்சதர்கள்குடிக்கொரு நீலி (கூனி)

———:0:———

கைகேசிகூனியைகோபித்தல்.

விருத்தம்.

வந்ததொருகூனிமனதெரிச்சலாலே
வல்லியெனும்கைகேசிதனையெழுப்பி
இந்தமன்னன்ராமனுக்குமகுடம்சூட்ட
எண்ணினன்என்னுமொழிசொல்லுமுன்னே
விந்தைமுகமலர்ந்துநவரத்தினமாலை
வெகுமானம்செய்திடவும்அவமானித்துச்
சிந்தைவஞ்சத்தொடுகலைத்தகூனிநாக்கைச்
சேதிப்பேன்என்றுகைகைபோதிப்பாளே. (ரு)

௬-தரு-ஆனந்தபைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராமனுக்குமன்னவன்முடிதரித்தாலே நன்மையுண்டொருக்காலே

அநுபல்லவி.

பாமரமேஉனக்கென்னடி பேச்சே
பழம்நழுவிப்பாலில்விழுந்தால்ப்போல் ஆச்சே (ராமனு)

சரணங்கள்.

க. இந்தவார்த்தைசொன்னாய் எனக்கெவர் நேரடி
பிரம்மாதிகளும்வரு வாரடி
இதுவேநல்ல சீரடி
வரயாடாதே பாரடி
ஆரடி எனக்குச்சரி(ராமனு)

உ. பரசுராமன்கெர்வம் தீர்த்தவன்டி
நம்மையெல்லாம் காத்தவனடி
பட்டம்கட்ட ஏத்தவன்டி
நாலுபேரில் மூத்தவன்டி
அவன்டி என் கண்மணியடி (ராமனு)

ங. பரதன்பட்டம்கட்டாவிட்டால் நட்டியோ
அவன்சர்க்கனைக் கட்டியோ
என்பிள்ளைராமன் எட்டியோ
நான்தான்என்ன மட்டியோ
வெட்டிப் போடுவென்உன்னை(ராமனுக்)

கைகேசியைகூனிகலைத்தல்


விருத்தம்.

துங்கம்ஆம்அயோத்திஆளச் சொல்லியராமனுக்கே
தங்கமாமுடிகொடாமல் சடைமுடிகொடுப்பேன்என்று
பங்கம்ஆம்கூனிமுன்னாள் பகையினாலேகைகேசி
மங்கையாள்எதிரேபின்னும் வார்த்தையால்கலைக்கின்றாளே சு

உ-த்பதை-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. ராமன்முடிசூடும்என்ற பேய்மதிஉனக்குவந்தது
ஏதம்மா-என்ன-வாதம்மா அடி
சிமாட்டிஉன்பிள்ளைபரதன்-காமாட்டிஆனேனென்ன
செய்கையே - அம்மா - கைகேயே



கைகேசியை கூனி கலைத்தல்.

௨. உன்மகன்ஊர்க்கில்லாவேனைத் தன்மகனைமுடிசூட்ட
உன்னினுள்-கௌசலை-எண்ணினுள்
மன்னவனும்அவள்சொன்ன-வார்த்தைகடவாமலுன்னை
வாதித்தான் - ஏதோ - போதித்தான்

௩. கண்உள்ளபோதல்லவோ-கண்காட்சியென்பதறியாயோ
கன்னியே-என்ன-உன்னியே ஆர்க்கும்
பண்ணியபயிரிஅல்லோ-புண்ணியம்தெரியும்அடி
பாவியே-என் தன்-ஆவியே

௪ ஒட்டம்விட்டஆறும்அடிச்சுடும்என்றும்சொல்லும்வார்த்தை
உள்ளதோ-பெணணே-இல்லதோ அதுபோல்
ஈடழிந்துன்தாய்தந்தைமார்-உன்னைவந்தடைந்தபோதில்
என்செய்வாய்-எவரைக்-கெஞ்சுவாய்

௫. ஊருக்கோபால்வார்த்துண்பது -உடலுக்கோபால்வார்துன்
ஓதடி-செய்வ-தேதடி [பது
ஆருக்கும்பெண்ணேமண்பிள்ளை-ஆனாலும்தன்பிள்ளைஎன்ப
தறியாயோ-ஒன்றும்-குறியாயோ

௬. கவுசலைபிள்ளைக்குப்பட்டம்- கட்டினல்உன்பிள்ளைக்கென்ன
கட்டுவாய்-எவரை-கிட்டுவாய் பரதன்
தவசி-ஆய்ச்சந்நியாசிஆகிப்-பரதேசம்போவதோநல்ல
சமர்த்தடி கோபத்தை அமர்த்தடி-

௭. சீரானகோசலைவீட்டுச்-சிறிக்கிக்கும்சிறிக்கிஆகச்
செகுத்தயோ என்னை வருத்தாயோ அடி
யார்யார்கையில்என்னபட-வேணுமோஅதெல்லாம்பட
லபித்ததே தெய்வம் சபித்ததே

பலநாளும்உன்னேடேநான்தான்-பாடுபட்டதெல்லாம்வீணே
பாதகி அடி ஏதகி அய்யோ
இலவுகாத்தகிளிபோலே-போகவோநான்உன்னைநம்பி
எண்ணினேன் வீம்பு பண்ணினேன்

௯. நண்ணும்தன்மகன்மேலேபோல்-உன்மகன்மேலேகோசலை
நய்வாளோ பட்சம் செய்வாளோ அடி
கண்ணிலஎண்ணெயேகரிக்கும்-பிடரியில்எண்ணை தான்என்ன
கரிக்குமோ அன்பு தரிக்குமோ

௰. நாயகன்கோசலைபிள்ளை-ஆகிலுனக்கென்னவரும்
நன்மையே சொல்வாய் உண்மையே ஆர்க்கும்
தாய்கையில்பசும்பொன்னிலும்-தன்கையில்தவிடேமேலாம்
தையலே இதென்ன மையலே

௧௧. என்னசெய்வேன்என்கிறாய்நீ- முன்னேகொண்டவரம்ரண்
இல்லையோ தரச்சொல்லயோ அந்த [டும்
மன்னவன்உனக்குச்சொன்ன - வார்த்தைக்கிரண்டுசொல்
வாங்கடி இதுவே பாங்கடி [வாரே

௧௨. ஒருவரம்பரதன்நாடாள-ஒருவரம்ராமன்காடாள
ஓதடி இதே சூதடி இந்த
இருவரமும்கொண்டால்உனக்-கீடுசோடுண்டோடிமக
ராசியே என்தன்கை கேசியே

கைகேசிக்கும்சக்கிரவர்த்திக்கும்சம்வாதம்.

விருத்தம்.

அந்தவகைகூனிசொல்லமனதுவேறாய்
அப்படியேசெய்வேன் எனமனம்செய்து
கொந்தளகம்சோரவளை சோரமண்மேல்
குப்புறவேகிடந்திடுகைகேசிதன்னை
வந்ததசரதராசன்கையால்த்தூக்கி
மலர்மேனிதுடைத்தெனதுமானேதேனே
பைங்தொடியேஉன்குறையேதெனப்பட்டபோலே
படிக்கின்றான்தசரதனுமயர்வடிக்கின்றானே. (எ)

௩-திபதை- நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. இந்தஅலங்கோலமும் இந்தமனோதுக்கமும்
ஏன்வந்ததோ கைகை மின்னஅரசே-உன்தன்
சிந்தையில்நினைந்ததை உள்ளங்கைநெல்லிக்கனிபோல்
தெரியச்சொல்வாய் கைகை மின்அரசே

௨. மருவும்மலரும்போலப் பாலும்நீரும்போல
மானம்வைத்தாண்டீரே மன்னவரே-உந்தன்

கருவிழிமணிபோலக் கரிசனம் அகளன்னைக்
கண்ணுண்டாய்க்காத்திரே மன்னவரே

௩. காத்ததற்கென்னகுறை இப்போதும்என்னஉன்னைக்
கைநழுவவிட்டேனோ மின் அரசே - நீ
பார்த்தெதுகேட்கிலும் எந்தவரம்ஆனாலும்
பரிந்துதருகிறேன் காண் மின் அரசே

௪. மற்றொன்றும்இல்லைவரம் எனக்குமுன்நீர்கொடுத்த
வரம்இரண்டும்கேட்கிறேன் மன்னவரே-என்றும்
உற்றதுசொன்னால்அல்லவோ அற்றதுபொருந்தும்நான்
உள்ளதுசொன்னேன் காணும் மன்னவரே

௫. அந்தவரம்இரண்டும்தந்தேன்இனிஉனக்கு
அட்டிசொல்வேனோ கைகை மின் அரசே-உன்
மைந்தன்இராமன்ஆணை வார்த்தைபிரட்டறியேன்
வாங்கிக்கொள்வாய்கைகை மின் அரசே

௬. முன்ஒருவரம்பரதன் நாடாளமர்ணிக்க
முடிபெறவேணும் அய்யா மன்னவரே-அதில்
பின்ஒருவரம்ராமன் காடாளசடைமுடி-
பெறவேணும்தாரும் அய்யா மன்னவரே

௭. மலைப்போஒருவர்செய்த வஞ்சனையோஎன்ன
வர்த்தைசொன்னாய்கைகை மின் அரசே-அது
கலைப்பார்கலைத்தக்கால் கல்லும்கரையும்என்ற
கதைபோலாச்சுதேகைகை மின் இரசே

௮. கலைப்பாள்கவுசலை உமக்குண்டுஎனக்குவேறே
கலைப்பார்ஒருவரில்லை மன்னவரே-நீர்
சலத்தாற்சொல்லுகிறீரோ சொன்னதேசொன்னதுநான்
தடுமாறிசொல்அறியேன் மன்னவரே

௯. மூத்தவனைத்தள்ளிவிட்டு இளையவனைப்பட்டம்கட்டல்
முறைமைஅல்லவேகைகை மின் அரசே-யாரும்
எத்திம்மனுவிக்கியான சாஸ்திரத்தினில்முன்னம்
இசைத்தபடியிதுவே மின் அரசே

௰. மூத்தவன்இந்திரனே உபேந்திரனே அகிலாண்டம்
முழுதும்செலுத்துகிறான் மன்னவரே-வெகு

நேர்த்திஇதுமுன்சொன்ன வார்த்தைவிட்டுசாஸ்திர
நெறிகள்போதிக்கல்ஆமோ மன்னவரே

௰க. ஆனை இருந்துக்கொண்டு அரசாளும்மண்டபத்தில்
அறியாப்பிள்ளை பரதன் மின் அரசே-சிறு
பூனை இருந்துக்கொண்டு புலம்புகிறதுபோலப்
புலம்பலாமோகைகை மின் அரசே

௧௨. ஆனையும்பூனையும் நீர்பெற்றபிள்ளை அல்லால்
அசலார்பெற்றபிள்ளையோ மன்னவரே-நீர்
மனம்வைத்தாற்போதும் அனுவும்மலைஆம்அந்த
வகையைநான் அறியேனோ மன்னவரே

௧௩. ஆயிரம்ஆனாலும் பெண்புத்தியை அறிய
ஆராலும்முடியுமோ மின் அரசே-நல்லது
போயினதுபோகட்டும் ராமனைஊரைவிட்டேன்
போச்சொல்என்கிறாய்கைகை மின் அரசே

௧௪. ஏதுக்குராமனைஊர் விட்டுபோகச்சொல்லும்என்கிறாய்
என்றுகேட்கவந்தீரே மன்னவரே-நடுப்
பாதிக்குள்பரதனைப் ஊரில்த்தங்கவொட்டாமல்
பண்டேன் துரத்திவிட்டீர் மன்னவரே

௧௫. அவனும்சம்மதிக்கவே பாட்டன்ஊர்போவென்றேன்
அநியாயம்சொன்னேனோ மின் அரசே-உனக்கு
கவனம்இல்லையோஎன்ன காரணமோ இந்த
கபடம்பேசாதேகைகை மின் அரசே

௧௬. கவனமும்உண்டுஒரு காரணமும்இல்லை
கபடமும்பேசஇல்லை மன்னவரே-இன்று
இவனும்சம்மதிக்கவே ஊர்விட்டுப்போச்சொல்லும்என்றே
என்னதப்பிதம்சொன்னேன் மன்னவரே [றன்

௧௭. பூமியும்தருகிறேன் பரதற்குப்பொன்முடியும்
பூட்டுகிறேன்கைகை மின் அரசே-என்
சாமியைஎன்உயிரைராமனைப்பிரிந்தால்நான்
தரிக்கறியேன்கைகை மின் அரசே

கஅ. என்னுயிர் அவன்போனால் இருக்கமுடியாதென்றீர்
என்னசத்தியம்இது மன்னவரே-அவனை
சின்னம்சிறுவயதில்முனிபின்போகச்சொன்னீர்உம்
சீவனுக்குண்டோ துன்பம் மன்னவரே

கசு. கும்பிடுகிறேன்உன்தன் காலையும்பிடிக்கிறேன்
கோபம்செய்யாதேகைகை மின்அரசே-நீ
எம்பெருமானைஎன்தன் கண்மணிராமனை இங்
கிருக்கச்சொல்என்பாய்கைகை மின்அரசே

உ0. தாரைநீர்ஏற்றபோதேஎன்சரீரம்உமது
தம்சரீரம்அல்லவோ மன்னவரே-நீர்
ஆரைக்கும்பிடுகிறீர் ஆர்காலில்விழுகிறீர்
அசலார்என்றெண்ணல்ஆமோ மன்னவரே

உக. அடியில்விழுவேன்என்றும் அடங்கிஒடுங்கியேநான்
அனந்தம்வார்த்தைசொல்லியும் மின்அரசேசற்றும்
கடினம்இல்லாதுபோலே ஈரச்சீலையைப்போட்டு
கழுத்தைஅறுக்கலாமோ மின்அரசே

உஉ. காட்டுப்புறுவுக்காகச் சதையைஅரிந்தமன்னனை
கதையிலும்கேட்டிலீரோ மன்னவரே-உந்தன்
விட்டுபெண்சாதிக்காக இத்தனைசாகசமும்
வேணுமோபோதும்போதும் மன்னவரே

உஙு. கண்ணும்கருத்தும்ராமன் கண்ணுளனும்ராமன்
காப்பவனும்ராமனே மின்அரசே-நான்
எண்ணும்தெய்வமும்அவன் அவன்போனால்என்உயிர்போம்
இருக்கச்சொல்என்பாய்கைகை மின்அரசே

உச.எனக்குப்போய்வாராதுபொய்சொன்னால்தோஷம்என்றீர்
எந்தமதியால்ச்சொன்னீர் மன்னவரே-நான்
வனத்தில்போச்சொல்லும்என்ற சொல்திரும்பிவிட்டா
மகத்தானபொய்யல்லவோ மன்னவரே [ல்அது

உரு. ஆனால்ராமனைவனத்தில் போகச்சொல்வதால்
ஆவதுண்டோகைகை மின்அரசே-அருங்
கானிலேராமனைப் போகச்சொல்வதிலும்என்
கண்கேட்கிலும்தருவேன் மின்அரசே

உசு. நஞகச்சொல்லஇல்லை தெய்வம்சொல்லியதர்க்கு
நான்என்னசெய்வேன்காணும் மன்னவரே-ராமன்
போனாலும்கானகத்தி லேஅவனுக்குவரும்
பொல்லாங்குஉண்டோசொல்வீர் மன்னவரே

உஎ. போயென்றுசொன்னஉடன் பொறிகலங்கிஎன்சீவன்
போய்விடுமேகைகை சண்டாளி-நான்
ஆஎன்றுபோனபின்னே அள்ளிஇடுவார்உனக்
காரடிகைகேசி சண்டாளி

உஅ. ஒட்டாரம்காட்டுகிறாய் ராமன்போனால்என்சீவன்
உடனேபோமடிகைகை சண்டாளி-நீ
கட்டியதாலிக்கயிற்றை உன்மகனுக்குப்பட்டங்கட்ட
காப்புக்கட்டிகைகை சண்டாளி

உகூ, வரதமுனிவன்ஆன வசிஷ்டமுனியேஉன்னை
வரம்கேட்கிறேன்தாராய்என் தெய்வமே-அந்த
பரதன்வந்தால்அவன் உற்றரிமைசெயயாமல்
பத்துதரமாய்ச்சொல்என் தெய்வமே

௩0. அண்டர்முனிவர்அல்ல பகையாளிகள்அல்ல
அசலார்ஒருவர்அல்ல தெய்வமே-நீமுன்
கெண்டபெண்சாதிதானே தசரதன்ஆவிக்கு
கூற்றுவன்ஆய்வந்தாளே தெய்வமே

௩க. ஊளிவாய்இருந்துகொன்ற பிள்ளைப்பழிக்குமுனி
உரைத்தசாபம்இதுவோ தெய்வமே-உலகம
எளியாரைவலியார்அடித்தால்வலியாரைதெய்வம்கேட்கும
என்பதும்இதுதானோ தெய்வமே

௩உ. பண்ணிட்டஎறும்புக்கா புருஷனைக்கொல்லவந்த
பாவிதன்பெண்இவள்அலோ தெய்வமே-இந்த
மண்ணுக்குள்த்தாயைபார்த்துப்பெண்ணைக்கொள்என்று
வசனம்பிசகுவருமோ தெய்வமே [சொல்லும்

௩௩. உதிக்கும்கண்போனால்என்ன உயிர்போனாலும்என்ன
உத்தமன்ராமன்மாத்திரம் தெய்வமே-அயோத்தி

பதிக்கிப்பதி ஆகியே இருக்கிறாள் என்றுகாணாப்
பாவிநான் ஆயினேனே தெய்வமே

———)(*)(———

கைகேசிஸ்ரீராமரைவனத்துக்கு ஏவுதல்-

விருத்தம்.

கொன்றவன்போல் தசரதன் இப்படிபுலம்ப
கூற்றுவன்போல்க் கைகேசிராமன்தன்னை
நின்றநிலைக்கழைத்துவரஎன்னவந்து
நெடுமனைவாசலுக்குள்ளே புகுந்தபோதில்
என்றும்அரசன்செ(ல்லான் நானேசொல்வேன்
என்றீரேழ்வருஷம் ராமாகோட்டில்
சென்றுதவம்செய்பரதன் உலகைஆள்வான்
செல்என்றாள் இதுவேந்தன் சொல்என்றாளே. (அ)

———‡‡———

ஸ்ரீராமர்வனம்ஏகக்கைகேசியின் விடைபெறல்.

இதுவும்அது.

உள்ம்மகிழ்ந்தொருகைகேசி உரைத்தவாய்மொழியைக்கேட்டு
களங்கம்இல்லாதராமன் கானகம்செல்லநானே
தெளிந்தபார்பரதன் ஆளச் செய்ததேயேன்மைஎன்று
தளர்ந்திடாத்தாயைவாழ்த்தித் தாழ்ந்துபின்விடைகொண்டா
[னே

ரு. தரு-சுருட்டிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

என்பாக்கியமேபாக்கியம்-எவர்க்குண்டிந்தசிலாக்கியம்

அநுபல்லவி.

அன்பாகவனம்போக-அனுக்கிரகம்செய்தாயே (என்)

சரணங்கள்.

க. குழியில்ப்பயிர்தனைஎடுத்துக் கூனாமேல்ஏறவிட்டு
வழுவானகளைமாற்றி வளக்கிறதுபோலே
சுழுலும்இந்தராச்சியத்துக்குச் சூடுமணிமுடிமாற்றி
தழுவும்முத்திராச்சியத்துக்குச் சடைமுடிதந்தாயே

உ. கொக்கரித்தபேர்எல்லாம் கூடத்தீப்பாய்வாரோ
பக்கம்உள்ளபேர்என்னைக்காப் பாற்றநினைப்பாரே
சிக்கும்இந்தவலைநீக்கித் தேடும்பரகதிசேரத்
தக்கதவம்செய்யென்றுநீ தயவுசெய்தாயே (என்)

ரூ. ஒருபிள்ளைராமன்பர லோகசாதகம்செய்ய
ஒருபிள்ளைபரதன் இந்த உலகம்தன்னை ஆள
இருபிள்ளையாலும்கைகை இகபரம்பெற்றாள்என்ன
வருசொல்உண்டாச்சுதென்ன மாதவம்செய்தேனே ()

§*§

ஸ்ரீராமர் வனம்ஏகுதற்காகக் கோசலைபுலம்பல்.

விருத்தம்.

இப்படிசிறுதாயாரை இறைஞ்சியே அனுப்பிக்கொண்டு
மைப்படிவண்ணராமன் வந்துகோசலைஅம்மைக்குத்
தப்பிலாதடிவாறேல்லாம் தான்சொல்லக்கன்றைத்தேடி
வெபபுறும்பசுப்போல்அன்னை விழுகின்றாள் அழுகின்றாளே.

சு-திபதை-முகாரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அய்யையோரகுராமா-வனம்போக-தெய்வம்சம்மதிஆமா உனை
எவ்வகைபிரிவேனோ-நான்இனி-செய்குவதறிவேனோ [நான்

என்ஒருதாயகமேரவிகுல-மன்னவர்நாயகமே-அரசன்
உன்னையும்வெறுத்தானோ-வெறுத்தும்-தன்னுயிர்பொறுத்தா [னோ

சுடர்மணிமுடிபோச்சோ-தலைமேல் - சடைமுடிவரலாச்சோ-
உடல்பதறுதேமகனே-மனம்விடவிடஉதறுதேமகனே [கேட்க

தாய்வரம்அதுகண்டு-பூமியைகாவல்பரதன்கொண்டு ஆளட்டும்
நீவனம்போவான்ஏன் இப்படி-தீவினை ஆவான்ஏன்

கலியுகம்மேலிட்டதோ-சூரிய-குலமுறைபோய்விட்டதோ- நீஇ
நிலமைவிண்டிடல்ஆமோபரதன் தலைமைகொண்டிடல்ஆ [ந்த மோ

எப்படிநான்சகிப்பேன் உனைபிரிந்துஎப்படிநிர்வகிப்பேன் ராவி னி
எப்படிகண்விழிப்பேன்-உயிர்கொண்டுஎப்ப டிநாள்கழிப்பேன்

பொன்அடிகசங்காதோ - மேனியில் - வன்னமும்மசங்காதோ-
[வெயில்ப்பட்டால்
என்னென்றுகுதிப்பாயோ-கல்லுமுள்ளும் - என்னென்றுமிதிப்
பாயோ
நீசெலும்வனம்தானே-உன்னுட-னேசெலுவேன்நானேனென்னிட
ஆசைஎல்லாம்மறந்தேன்-இதுக்கோ- கோசலைபெண்பிறந்தேன்

ஸ்ரீராமர்கோசலையைதேற்றிவிடைபெறல்.

விருத்தம்.

தாய்வருந்திடஇவ்வாறு தளருவாள்தன்னைநோக்கிப்
பாய்வரும்பதினால்ஆண்டும் பதினுநாளேஅம்மா
நீவருந்திடுவதேனோ நின்கிருபையாலேகானில்ப்
போய்வருவேன்கேள்என்று போற்றுவான்தேற்றுவானே.(ய

கூ-தரு-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வனம்போய்வருகிறேன் அம்மா-கோசலைஅம்மா
வனம்போய்வருகிறே அம்மா.

சரணங்கள்.

க. வனம்போய்வருகிறேன்நானே-பெற்ற-மாதாபிதாவசனம்
தனம்தனிமந்திரமும்அது· சகலதந்திரமும்அது[தானே
சத்தியமும் அதுபர முத்தியும் அதுதானே (வன)

உ.கானகம்நான்போகவேணும்-நீர்கணவனைகாப்பாற்றும்காணு
நானிலம்பரதனுக் கல்லாஎன்னப்போமோ(ம்
நான்இருந்தாசனைப் பொய்சொல்லச்சொல்லல்ஆமோ

௩.ஆதிகதைஅறிவீர்நீரும்-சகரர் அறுபதினாயிரம்பேரும்
தாதைசொல்ப்படிதங்கள் உயிக்கொடுத்தாரேமுன்னம்
தகப்பன்சொல்படிக்குநான் தவம்செய்வதரிதோகடி.னம்(வ)

ச. ஈன்றவன்சொல்வேதம்தானே-பாசு - ராமன்தாயைவெட்டி
ஆண்டுபதினாலும்போய் வருவான்எனக்கண்டோ[னே
அரசன்எனைப்போஎன்றால்திருவாய்க்கெவர்தியாஉண்டோ (வ)

ஸ்ரீராமர்வனம் ஏகலைப்பற்றி லட்சுமணர்கோபம்.

விருத்தம்.

சிந்தையைக்கவுசலைக்குத் தேற்றியராமன்மீண்டு
சுந்தரிசுமித்திராதேவி துணை அடிவணங்கும்போதில்
இந்தமாமகுடம்சாமிக் கீகிறேன் இப்போதென்ன
அந்தமாம்லட்சுமணன்தான் ஆக்கிரகம்செய்கின்றானே. (யஉ)

எ-தரு-கௌளிபந்துராகம். ஆதிதாளம்.

பல்லவி.

நானேலட்சுமணன்-ஆறுல்கொடுக்கிறேன்-ராமனுக்கேமகுடம்

அநுபல்லவி.

சேனைபேர்என்னோ டெதிர்க்கட்டுகுதிக்கட்டும்
சித்திரக்கணையால்வென்று அத்தனைபேரையுங்கொன்று-நானே

சரணங்கள்.

க. குருடன்ராசர்மிழி மிழிக்கிறல்போலேபட்டம்
கொள்ளுமோபரதற்கு மூடிசூட
தரணியில்சர்க்கரையும் மாவும்சரியாயெண்ணும்
தசரதனும்கிடந்து மனம்வாட
இரவிமுன்பனிபோல் என்னோடெதிர்த்தமன்னர்
எவரும்பயந்துவிரு திகள்போட
அரசிட்டசுவாமிக்குத் தவசிட்டகேகிமகன்
ஆடடுகுட்டிபோலேஓட கேட்டுக்கையும்தள்ளாட நா

உ. தொகுத்தகாளிநடிக்ககூளிதாளம்பிடிக்க
துண்டங்கள்எதிராகப் படமாட்டி
பகைத்தராசர்தலை பனங்குலைபோல்வுதிர
படுகளம்எங்கும்ரத்தக் கடல்மூட்டி.
இகத்தில்நானேஅடிமை ராமனேஆண்டவன்
என்பதெல்லார்க்கும்தெரி வுறக்காட்டி
வகுத்தபிரம்மர்திதேவர் வந்தாலும் அவர்அவர்
மர்மமெல்லாத்தையும்ஒட்டிதர்மத்தைநிலைக்கநாட்டி -நா

ங. சட்டமன்னும்பச்சைமண்ணும் ஒட்டுமோசாமி
துணைஅல்லால்எனக்குண்டோ உபகாரம்

எட்டிப்பறந்தாலும்ஊர்க்குருவிகருடன்ஆமோ
இந்தப்பரதனுக்கேன் அதிகாரம்
வெட்டித்தலைதலையாய் குவியாவிட்டாலென்னை
வில்லாலேஆயதுண் போவிரம்
பொட்டனவேஅயோத்திப் பட்டணம்எல்லாம்வந்து
போர்கொடுத்தாலும்விட்டேரம்ஊர்தொடுத்தாலும்இங்நேர
ம்-நானே

—:0:—

ஸ்ரீராமர் லட்சுமணர்கோபத்தைத்தணித்தல்.

விருத்தம்.

சினம்கொண்டஇளையோன்இங்கே சிறியேசொல்லும்ஒலைச
கனம்கொண்டராமச்சந்திரன்காதிலேவிழக்கண்டோடி
இனம்கொண்டதந்தைவார்த்தை கெதிர்உண்டோதம்பிஎன்று
மனம்கொண்டுதேற்றிக்கோபம் மாற்றுவான்ஆற்றுவானே.

அ. தரு-மத்தியமாவதிராகம்.ஆதிதாளம்.

பல்லவி.

இத்தனைகோபமும்நல்லதய்-வந்ததுஏதடதம்பிஇதுசொல்லாய்

அநுபல்லவி.

தத்துவம்ஆகஉந்தன புத்திஎல்லாம் வெள்ளை
தகப்பன்பேர்விளங்கிற பிள்ளைஅல்லவோ பிள்ளை (இ)

சரணங்கள்

க. இரும்போதாய்மனம்காட்டிலே யோய்த்திரி
என்னவும்வாய்வருமோர்அத்தைப் பரிகரி
கரும்புகசப்பதெல்லாம்வாய்க்குற்ற மேசரி
காலம்செய்ததல்லாமல் ஆர்செய்தார் அரிகரி (இத்த)

உ. தகப்பனேச்சத்தியவாக்கியன் அல்லனென்றுக் கழிக்கவோ
தாய்கொண்டவிரதத்தைமுடியாமல் அழிக்கவோ
அகத்துணைஆம்பரதன்செல்வத்தை ஒழிக்கவோ
அப்புறம்உனைக்கண்டபேர்எல்லாம் பழிக்கவோ -இ

ங. உரம்ஆகும்தவம்செய்தால்உனக்குநல் லதோதீதோ
ஒன்றும்பேசாதேகோட்டைக்குள்ளேபண்டைவெட்டேதோ
அரசுபரதன்கொண்டால்நமக்கினி மேல்வராதோ
ஆக்கப்பொறுத்தநமக்காறும்மட்டும் பொறாதோ (இ)

சுமித்திரைலட்சுமணருக்கு புத்திசொல்லல்.

விருத்தம்.

அற்புதத்தம்பிகோபம் ஆற்றியேராமன்தாயார்
பொற்பதம்வணங்கும்போது பூவைகைகேசிஏவ
வற்கலைமாதர்காட்ட வாங்கிலட்சுமணனீஎன்
சொற்படிகொடுபோஎன்று சுமித்திரைகூறுவாளே (கசு)

ரு-திபதை-பைரவிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. இந்தாமரவுரி அந்தவனத்தில்க்கொண்
டேகுறன்வார்த்தை லட்சுமணா
அந்தவார்த்தையே மந்திரமா அண்ணன்
அடிபூசைசெய் அட லட்சுமணா

உ. அண்ணன் இவன்மணி வண்ணனேஎன்றெண்ணி
அரைநொடிபிரியாதே லட்சுமணா
கண்ணின்நிமைபோலே எண்ணம்எல்லாம்செய்து
கட்டிக்காத்திருடா லட்சுமணா

ந. வெம்பியக்காட்டினில் அரக்கர்வந்தால்அண்ணன்
முன்போய்நீநில்லடா லட்சுமணா
தம்பிஉடையவன் படைக்கஞ்சான்என்றும்சொல்
சாதித்துக்கொள் அடா லட்சுமணா

ச. அலைஆழிபுரண்டாலும் அண்ணன் இருக்கஉன்னை
ஆரால்என்னசெய்யலாம் லட்சுமணா
மலைமீதில்இருப்பாரைப் பன்றிபாய்வதுண்டோ
மயங்காதேதியங்காதே லட்சுமணா

ரு. உளம்கொண்டு அண்ணன்எப் படிசொல்வான் அப்படி
ஊழியம்கேள் அட லட்சுமணா
இளங்கன்றுபயமறி யாதென்றால்போலே
எதிர்த்தொன்றும்சொல்லாதே லட்சுமணா

தயேசிதைஉன்தகப்பன்ராமன் இந்த
தலைமேவனம்அடா லட்சுமணா
ஆயாசம்பாராதே எள்என் னும்முன்எண்ணெய்
ஆகச்செய்துவாடா லட்சுமணா

எ. பின்னுஞ்சடையும்மர வுரியுங்காணவேராமன்
பிறகேவரு்தேன் என்று லட்சுமணு
குன்னமாய் எண்ணுதே தெய்வம்பண்ணிய திருக்
கூத்துக்கென்னசெய்யலாம் லட்சுமணு

அ. கர்த்தன் ஆனராமன் சித்தத்திலேஎண்ணும்
கூட்டளைப்படிதானே லட்சுமணு
புத்தி ஆகச்செய்தால் அப்போதல்லோஎன்தன்
புத்திரன் நீபோய்வாடா லட்சுமணு

ஸ்ரீராமர்பிரிதலைக்குறித்துசீதையிரங்கல்.

விருத்தம்.

மன்னும்இரங்கமரம்இரங்கமறு தாயாரை அனுப்பிக்கொண்
டென்னும் இரங்கும்லட்சுமணன் இசைந்துவரவேரகுராமன்
நண்ணுமசனகிநலைப்பார்த்து நான்போய்வருவேன் ஈரேழு
பண்ணும்பருவம்வனமென்முன் பரந்தாள்சீதைகரைந்தாளே.

கூ-தரு-உசேனிராகம்-ரூபகதாளசாப்பு.

பல்லவி.

எப்படிமனந்துணிந்ததோசாமி வனம்போய்வருகிறேன்
என்ருல்இதை ஏற்குமோ பூமி

அநுபல்லவி.

எப்பிறப்பினும்பிரியவிடேன் என்று கைதொட்டீரே
ஏழைஆனசீதையைநட் டாற்றிலேவிட் டீரே (எப்ப)

சரணங்கள்.

க. கரும்புமுறித்தால்ப்போலேசொல்லல் ஆச்சுதோ-ஒருக்
காலும்பிரியேன்என்று சொன்னசொல்லும்போச்சுதோ
வருந்திவருந்திதேவரீர் வெல்ல
வார்த்தையால்க்கொல்லாமல்க் கொல்ல
இரும்புமனதுண்டாச்சு தல்லோ
என்னைவிட்டுப்போகிறேன்என்று சொல்ல (எப்படி)

உ. அன்னைகொண்டவரம்என்னைஎன்னைத் தள்ளவோ-நீர்
அழுக்குக்கோவில்எடுத்துநிலம்வுன்றிக் கொள்ளவோ
குன்னமோஉமக்கு என்னைத் தாரம
கொடுத்தவனமேல் அல்லோ நேமம்

என்னை இடசிக்கொண்டு போவதோ பாரம்
இதுவோ ஆண்பிள்ளைக்கு வீரம் (எப்படி)

நாடிநீர் போய் இருக்கும்வனத்தின் பேர்சொல்லவேணும்-அந்த
நான் கிளைத்துக்கொண்டிறந்தால் அங்கேபிறக்கல்ஆம்காணும்
கூடிநான்உகர்திருக்கும் காடு
குறைவில்லாஎன்மிதிலை நாடு
காடுநீர் இல்லாத வீடு
கால்வையும்தெரியும்என் பாடு (எப்படி)

———(*)———

ஸ்ரீராமர்வனம்செல்லால் புரசனங்கள்புலம்பல்.

விருத்தம்.

ஆவதினல்சீதைமனதறிந்தராமன்
அப்படியேவருகஎன்றன் வெளிபோலவந்தாள்
தேவர்களும்முனிவாகளும் கலங்கிநின்றார்
செயராமன் லட்சுமணன்சீதைஎன்னும
மூவர்களும்மரவுரியையுடுத்திக்கொண்டார்
முறைபாலேஅயோத்திநகர்த்தெருவின் மேலே
போவதுகண்டவ்வூரின் ஆணும்பெண்ணும்
புலம்பிறர்கண்ணீர்விட்டலம்பினரே. (மசு)

சு. திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அரசுமணிமுடியோடும் ஆனைமேல்
வருகிறதிருக்காட்சியைகாணுமல்
அந்தந்தத்தெருவீதியிலேவந்து நொந்தார்சிலபேர்கள்

மரவுரியும்சடைமுடியும்காணு
வதற்கோருநிருகித்தோம்எனத்தங்கள்
வாயொடுவாய்பேசாமலேமனம் மடிந்தார்சிலபேர்கள்

அய்யோ இந்த அருமைத்திருமகன்
மெய்யேவனமபோனல்நமக்கினி
ஆறுதலேதெனக்கண்பிசைந் தழுதார்சிலபேர்கள்

செய்யாவினைசெய்திடும்பாதகி
கைகேசிக்கு இன்றைக்குநெஞ்சுக்கல் [ள்
திடுக்கென்னவேவிழுந்ததோஎன்மனதிகைத்தார்சிலபேர்க

கானனுக்குக்கனுப்ப அருகேஎண்ணின
 எண்ணம்எல்லாம்போச்சேநாம்அந்தக்
 காட்டேகதியாய்ப்போவோம்என்றுகரைந்தார்சிலபேர்கள்

பண்ணினதவம்இதுக்கோதசரதன்
 புண்ணியவான்ஆனால்ஒருகரம்
 பழிகாரிசற்றலையாளோஎன்று பதைத்தார்சிலபேர்கள்

சொல்லியவரம்தானென்றுகண்மணியைக்
 கொல்லவேவழிபார்த்தாள்அல்லாமல்
 தாரதிஷ்டியாய்பார்த்தாளோஎன்று துடித்தார்சிலபேர்கள்

கல்உருகவும்புல்உருகவும்கண்
 கைகேசிக்குத்தன்மகன்மாத்திரம்
 கரும்போஇவன்வேம்போஎனமனம் கசிந்தார்சிலபேர்கள்

முறையோஎன்னமூடப்பிள்ளையாகிலும்
முந்தினபிள்ளையென்றுசொல்லும்பழ
மொழியாகிலும்ராமனுக்கில்லையோவென்றழுதார்சிலபேர்கள்

குறையாமலேஇருக்கினசூரிய
 குலத்திலேநல்லபரதநல்புல்லுருவிபோல்
 குடிகேடிஎங்கிருந்தாளெனக்குலை குலைந்தார்சிலபேர்கள்

மைஆர்கண்ணிஇளையவள்சீதாசுக
 வலையிலேசிக்கித்தவிக்கச்செய்தாமனை
மன்னவன்செய்ததென்னசொல்வோமென்று வைதார்சில
 [பேர்கள்

கைகேசியும்பிள்ளையும்கூனியும்
 கட்டாந்தரைஅட்டைபோல்மண்ணைக்
கட்டிக்கொண்டினிப்புரளட்டுமெனக்குடி கலைந்தார்சிலபேர்கள்

சானகிஎன்னும்லட்சிமிபோனபின்
 மாநகரத்தில்ஆர்இருப்பார்அவள்
தமக்கைஅல்லோஇருப்பாள்எனத்தவி தவித்தார்சிலபேர்கள்

கானகம்புகுமுன்னேதசரதன்
 வானகம்புகுவதல்லவோஎன்று
 கரைகாணக்கப்பலோர்போலவே பரிவார்சில்பேர்கள்

சத்தியமாய்ராமனைவரச்சொல்லி
 மற்றொருவர்க்குமுடிகொடுத்தானிந்த
 தசரதன்மதகதல்லவோவென்று தளர்ந்தார்சிலபேர்கள்

எத்தனைபேர்சந்தைக்குவந்தாலும்
எல்லாருந்துணைஆவாரோராமனுக்கு
இளவனேதுணை இந்தவூரில்என்று இடித்தார்சிலபேர்கள்
மணிமுடிவரச்சொல்லியமுகூர்த்தத்தில்
சடைமுடிவாச்சொன்னானேஇந்த
வசிஷ்டனைப்போலவிசிஷ்டன்உண்டோஎனறு வைதார்சி

துணியும்மோமனம் அடடாஉண்டு
சோற்றிலைஞ்சுகலத்தாற்போலவே
தொடுத்தாள்பழிகெடுத்தாள்கைகேயென்று சொன்னார்சில
பாவமும்வரும்பழியும்மிகவரும் [பேர்கள்
தீபம்இல்லாமனைபோலேஇந்த
பட்டணம்பழிபொமேயென்றுமண் படிந்தார்சிலபோகள்

ஸ்தாவரம்இல்லாஇளங்கொடிபோலவும்
பாய்மரம்இல்லாமரக்கலம்போலவும்
தாமரைஇலைத்தண்ணீர்போலவும் தவித்தார்சிலபேர்கள்

சுமந்திரன் புலம்பல்.

விருத்தம்.

மாநகர்இப்படிபுலம்பத்தேர்மேல்கொண்டு
வழியில்ஒருசோலையில்ப்போய் பாதிசசாமம்
ஆனதிதுவந்தவரோ உறங்கிவிட்டார்
அயோத்தியிலேஅவர்போமேனும்தேரைத்
தான்உருவவடதிசையில் விட்டால்என்னைத்
தானமீண்டான்எனப்பலரும் அங்கேகமீள்வார்
ஏன்இனிசுதுமதம்என்றுராமனசொல்லி
எழுகென்றுன்சுமந்திரனநொந்தழுதென்றானே. (யஎ)

ஏ-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. செகமகிழும்ராமச் சந்திரன்-போகாமல்த்தேரைத்
திருப்புவானல்லோ சுமந்திரன்-என்தன்
மகன்வருவானேன் திருப்பானே-ராசனுக்கெந்த
வாய்கொண்டுசொல்ல இருப்பேனே
உ. ஊரில்எனைக்கண்டபேர் சொல்ல-தசரதனுக்கு
கோர்உடம்பீர்உடம்பாம் அல்லோ-உனபிள்ளைதானா

தேர்இறக்கிவிட்டேன்என் பேஞேமுகம்அறியாத்,
தேசத்திலேவிட்டேன்என் பேறே

௩. மக்களைவிட்டோடிவந் தானேஎன்தடடனே
மன்னவனுர் உயிர்னைத் தானே-இப்போதுநான்
தெற்கிலேநின்றல்லோ போகுவேன-எமன்விடுத்த
சேவகன்போல்அல்லோ ஆகுவேன்

௪. இன்னம்உன்னைக்கூவிக் கூவி தசரதனுக்
கிருக்குமோநல்உயிர் மேவி நான்இந்தவார்த்தை
சொன்னஉடன்போமே ஆவி இந்தப்பழியை
சுமக்கவோநான்வந்தேன் பாவி

ஸ்ரீராமர் சுமிந்திரனுக்கு நீதிஓதுதல்.

விருத்தம்.

மந்திரிசுமந்திரன்இந்த வண்ணமேகூறராமச்
சந்திரன் அவனை நோக்கிச் சகலமுமதெரிந்தநீரே
என்தன்தாய்சொன்னவார்த்தைக் கிரண்டுதான்செப்பலாமோ
சிந்தைஏன் இனிமேல்என்று தெளிவிப்பானதெளிவிப்பானே
கஅ

௰-தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சொல்லுமசொல்லும்-சுமந்திரரே-நில்லுய்நில்லும்

அநுபல்லவி.

நல்லராத்திரிஇதுபோலஇல்லை காணும்
நகர்உள்ளோர்களும்நீரும்போக வேணும்
அல்லநீர்வேறேசொன்னல் விரும்புமோ
அணைகடந்தவெள்ளம்-அழைத்தால்திருமபுமோ-சொ

சரணங்கள்.

க.விரம்பேசிக்கொண்டெழுந்தசெவகன்
வெட்டும்களம்கண்டுமுதுகை இடலாமோ
ஆருபகாணவேதவசுக்கென்றுவந்து
அதுக்கெல்லாம்பயந்தச்சப் படலாமோ

வாரும்காணும்பெற்றதாய்சொல்விரதத்தைத்
மறந்தபின்னைஒருவிரதத்தைத் தொடலாமோ

சூரியகுலத்திலேபிறந்து முத்திமூர்த்தி
தொடுத்தகாரியத்தைநடுவே விடலாமோ-சொல்

௨. மன்னன்பரதற்குநான் இருக்கிறேன்
வருகிறேன் இளக்கரிப்ப தேன்என்றும்
பின்னும்அறிந்தறியாத்தாக்கும்மன்னன்
பெரியஉதவியேஉறுதி தான்என்றும்
என் இடத்தில்வைத்தஅன்புபோல்கைகை
இடத்தில்வைக்காவிட்டால்வனம்போ றேன்என்றும்
அன்னைமார்க்கும்மன்னனுக்கும்பதினலு
ஆண்டுபோய்வந்துவணங்குவேன் என்றும்- சொல்

௩. உலகிலேஒருநன்மைசெய்யஇடை
யூறுமெத்தவரும்ஆகை யால்அதை
நிலையதெனலாமோகாலம்போம்வார்த்தை
நிற்குமேபின்னேவேறேஉண் டோவதை
பலரும்திவிக்கிறார்என்றுதாய்மொழி
பழிக்கலாமோநான்வந்தேன் என்னசதை
மலைவிழுந்தாலும்தலையேதாங்கவேணும்
மலைத்தவர்க்குப்பலன்பலிக்கு மோஇதை-சொல்

§*§

ஸ்ரீராமரைநினைந்து சக்கிரவர்த்திபுலம்பல்.

விருத்தம்.

வீரம்என்னும்ராமன்உளாசுமந்திரனசொண்டான்
மீண்டதேர்வழிபலரும்மீண்டார்சேதி
ஊரதிலேவசிஷ்டமுனிஉடன்போய்ச்சீவன்
உண்டில்லைஎன்றிடும்வேந்தனுடனேசொன்னான்
கூர்எரியிலேவிழுந்தவெண்ணெய்போலும்
கொதித்திடும்கொப்பரையில்விழுப்புழுவைப்போலும்
சீருள்தன்மகவைநினைந்தேங்கிச்சிந்தை
சிதறினன்தசரதனும்கதறினனே (கக)

அ-திபதை-கண்டாரகம்-ஆதிதளம்

கண்ணிகள்.

௧. சின்னம்சிறுதாமரைபோல் பொன்னனைாதங்கள்நோவ

தேடிவனம்ஓடிவிட்டாய் ரகுராமா-ராமா
என்னைஇந்தவேளைநடுத்-தண்ணீரில்கைவிட்டாற்போலே
எப்படிதுணிந்துவிட்டாய் ரகுராமா-ராமா

உ. முடிக்குமகுடஞ்சூட்டிமுகம்பார்க்கஇருந்தேனே
மோசம்லகைகேசிசெய்தாள் ரகுராமா-ராமா
உடுத்தபுடவைதானேபாம்பாய்க்கடிக்குமென்னும்
உளவறியாமல்ப்போனேன் ரகுராமா-ராமா

ங. மாலைஇட்டகைகேசிதான் காலனைப்போலவேவந்தென்
வாணாளைக்கொண்டாள்அய்யோ ரகுராமா-ராமா
வேலிக்குமுள்இடவேஎன்காலுக்குமுள்ஆகவந்து
விளைந்ததென்விதிவசம் ரகுராமா-ராமா

ச. ஆனைமேல்பவனிஆக அபிஷேகமுடிசூடும்
அலங்காரம்எனறுகாண்பேன் ரகுராமா-ராமா
நான்ஒன்றுநினைக்கத்தெய்வம்தான் ஒன்றுநினை[illegible]யோ
நான்செய்தபாவம்ஈதோ ரகுராமா-ராமா

ரு. தாயும்நீதந்தையும்நீ சற்புத்திரமாணிக்கமும்நீ
சகலபுக்கியமும்நீயே ரகுராமா-ராமா
நீஇல்லாநாடெல்லாம் நிலவில்லாமுற்றம்போலே
நெடும்பாழ்அடைந்ததையயோ ரகுராமா-ராமா

சு. படித்துப்படித்துச்சொல்லிக் காலும்பிடித்துக்கொண்டேன்
பாவிகைகேசிஅய்யோ ரகுராமா-ராமா
அடிக்கடிக்கப்பந்து விசைகொண்டெழுந்தாற்போல்என்
ஆயுசுக்குலைவைத்தாளே ரகுராமா-ராமா

எ. குடைக்குமகுடம்சூட்டி குவலயம்தன்னைஆளும்
கோலம்காணுமுன்ஆக ரகுராமா-ராமா
சடைமகுடம்தரித்துக் கட்டிலேபோஎன்றேனே
சண்டாளன்என்போலுண்டோ ரகுராமா-ராமா

அ. தேறுதல்எங்கும்காணேன் திக்குதிசையும்காணேன்
தெய்வமுமதுணைகாணேன் ரகுராமா-ராமா
ஆறுதல்எங்கும்காணேன் அந்தரத்தில்கோலெறிந்த
அந்தகன்போல்ஆனேன்அய்யோ ரகுராமா-ராமா

பாரெல்லாம்பரதன்கொள்ளஉன்னையும்என்கண்ணின்முன்னே
பலிகாட்டிடப்போனாயோ ரகுராமா-ராமா

கிளைக்குப்புல்லுருவி கிடைமுளைத்தாற்போலே
கெடுகோலிளங்கேவந்தாள் ரகுராமா-ராமா

௰. சேனைகாவலர்கூடநான்கூடமுடிசூட்டி-
சிங்காசனம்வைக்குமுன்னே ரகுராமா-ராமா
ஆனைகிழலைப்பார்க்கத தவளைகலங்கினாற்போல்
ஆனாளேகூனிஅய்யோ ரகுராமா-ராமா

சற்றேபொறுத்துச்சென்றால் சகுனதோஷமென்றேநான்
சாவேன்என்றறிவாயோ ரகுராமா-ராமா
சுற்றும்அழுகைக்குரல் கேட்கிறதுக்குமுன்னே
சுறுக்காய்நடந்துவிட்டாய் ரகுராமா-ராமா

கஉ. குலத்தைவிளக்கவந்த மகனேஉனக்குப்பட்டம்
கொடுத்துவாங்கிக்கொண்டது ரகுராமா-ராமா
கலத்திலேசோற்றைஇட்டுக் கைப்பிடித்தாற்போலாச்சே
காலம்இப்படிஆமா ரகுராமா-ராமா

கங. பாயும்அமுதமும்பொன் பள்ளமும்இங்கிருக்க
பரிகாட்டிலேநடந்து ரகுராமா-ராமா
காயும்கிழங்கும்தின்னல் ஆச்சோதெய்வத்துக்கும்
கண்ணில்லையோமகனே ரகுராமா-ராமா

கச. வீசும்நெருப்பைப்போலேகடுங்கோடையும்கானலும்
வெய்யிலும்மேல்படுமோ ரகுராமா-ராமா
காசாம்பூமேனியெல்லாம் வேர்வைமுத்துமுத்தாக
காண்பாளோகௌசலை ரகுராமா-ராமா

கரு. பூமேலேவிழுந்தாலும் தழும்புபடுமேஉந்தன்
பொன்னானமேனிஅய்யோ ரகுராமா-ராமா
மாமலையும்கொடியும் செடியும்பொடியும்தாக்க
வழிநடந்தறிவாய்யா ரகுராமா-ராமா

கசா. முடிக்கபிஷேகம்செய்துன் அடிக்கீழேஉடம்புதண்ணீர்
முகந்திக்கொண்டாராலும் ரகுராமா-ராமா
பிடித்தொருபடிதந்தால் குடிக்கேனென்குடித்தேன்தன்
பெருந்தாகமதணியேனே ரகுராமா-ராமா

கஎ. இழைஆயிரம்பொன்பெற்ற பீதாம்பரம்உடுத்த
இடைமீதிலேமகனே ரகுராமா-ராமா

பழிகாறிநான்கோந்த மரவுநான்படிக்கப்
பார்த்தாரோஉள்ளோர்கள் ரகுராமா-ராமா

கஅ. பார்த்தாலும்பசிபோமே பால்வடியுமேஉன்தன்
பவளவாய்முகம்தன்னை ரகுராமா-ரமா
காற்றோட்டம்ஆகவந்து சற்றேநீகாட்டிஎன்னைக்
கரையேற்றிவிடஒண்ணாதோ ரகுராமா-ராமா

கசு. பிள்ளைதன்தொடைமேலே பெற்றவன்சீவன்விட்டால்
பெருங்கதிஉண்டென்பாரே ரகுராமா-ராமா
கள்ளகைகேசிகையில் காட்டிக்கொடுத்துவிட்டு
கடக்கப்போய்நிற்கல்ஆமோ ரகுராமா-ராமா

உ0. கண்ணும்இருண்டதையயோ கருத்தும்அழிந்ததையோ
கைகாலும்ஓய்ந்ததையோ ரகுராமா-ராமா
எண்ணம்குலைந்ததையோ என்றுநான்காண்பேன்உந்தன்
எழுதருமுகம்தன்னை ரகுராமா-ராமா

————[*]————

ஸ்ரீராமரைக் குகன் தன்ஊரில்இருக்கவேண்டல்

விருத்தம்.

புலம்பியமன்னவன் இவ்வாறிடிந்துசீவன்
பொயினன் வைகுண்டபுரத்தைச்சேர்ந்தான்
பெலம்தருமன்னவர் அவனையெடுத்தார்எண்ணெய்ப்
பெருந்தோணியில்இட்டார்இப்பால்ராமன்
நலம்தரும்லட்சுமணன் சீதையுடனேகங்கா
நதிஅடைந்தான் முனிவரொடுகலந்தான்அந்த
சலம்தனையும்குகன்விடுத்ததோணியாலே
தாண்டினன் அவன்இருக்கவேண்டினனே. (உ0)

கக-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

இங்கேஇருங்காணும்-தரிசனம்தந்-தென்னைரட்சிக்கவேணும்

அநுபல்லவி.

மங்கைஆம்என்தாயும்-ரமாநீயும்இந்த
வரிசைதம்பியும்அய்யா-ஒருபத்தன்குகன்உய்ய (இங்கே)

சரணங்கள்.

க. பூவுண்டுகனிவுண்டுஊன்உண்டுதேன் உண்டு
புதுமரஉரிகளும் போர்வை உண்டு

தாழ்வுண்டுதடம்உண்டு கங்காநதி உண்டு
தான்வேணபட்சணம்உண்டு நானேசெய்ரட்சணம்கண்டு (இ)

௨. எட்டுதிக்கிலும்செல்லுவேன்கிழங்குவகைகெல்லுவேன்
எதிர்த்தவரைவெலலுவேன் வழிசொல்லு வேன்
கட்டிகாத்துநானே கண்இமைபோலே தானே
காலாலேகாட்டினதெல்லாம் கைபாலேசெய்குவேனே (இங்)

௩. நித்தியம்உம்மைபிரியேன்மற்ெறான்றையும்குறியேன்
நினைறுமனக்கறியேன் நான்சிறி யேன்
முற்றிலும்நிறைநிங்கள் எனவேவிளங்கும் உங்கள்
முகம்கண்டால்ப்சிபோமேமுத்திமோட்சம்உண்டாமே (இங்)

ஸ்ரீராமர் குகனைசினேகம் கொள்ளல்·

விருத்தம்.

தனதுபுகலும்குகனேஎன்-தம்பிஉனதுதம்பிகண்டாய்
எனதுதுணைவன்நீகண்டாய்-இச்சீதையும்உன்மதினிகண்டாய்
மனதுபொருந்ததாய்சொனனவரத்தால்காட்டில்இருப்பதல்லா
உனதுநாட்டில்இருப்பாமோ-உரைப்பாய்இதைஆதரிப்பாயே

உ௰-திபதை-சங்கராபரணராகம்-அடதாளம்சாப்பு·

கண்ணிகள்.

௧. காட்டில்இருக்கவந்து காட்டுக்கருகான
நாட்டில்இருக்கல்ஆமோ குகனே
பூட்டகமோஇது குளிக்கபோயும்சேறு
பூசிக்கொள்ளலாமோ குகனே

௨. பதினாலுவருஷம்போய்நாம்எல்லாம்ஒருமிக்கப்
பதியில்இருக்கல்ஆமோ குகனே
மதிமோசமோஆனை ஏறியும்கிட்டி
வாசலில்நுழைவானேன் குகனே

௩. உன்பரிசனம்என்னது உன்ஊரும்என்னதுஉன்
உறவும்என்உறவாச்சே குகனே
என்பிறகேநீவந்தால் இந்துவுறவைக்காக்க
எவர்உண்டுநீசொல்லுவாய் குகனே

௪. பொறுத்தஎனதுதவம் முடிக்கவேணும்அந்தப்
பொறுப்புஉனக்கில்லையோ குகனே

குறுக்கபேசாதேமுதல் கோணினால்முட்டக்
கோணும்தடைசொல்லாதே குகனே

டு. ராமன்பரதன்லட்சு மணன்சத்துருக்கன்என்ன
நால்வர்பிறந்திருந்தோம் குகனே
ஆம்உன்னுடனேஐந்துபேரானோம்சீரானோம்
அதிகபலவான்களானோம் குகனே

சு. குருவியின்தலைமேலே பனங்காய்ப்போற்புவிஆளக்
குழந்தைபரதனடா குகனே
அருகில்இருக்கிறாயே நானஇருக்கிறப்போலே
அடிக்கடிபார்த்துக்கொள்வாய் குகனே

எ. உடன்ஆனதம்பிஇவன் உனதுமதினிஇவள்
உனதுதுணைவான்நானே குகனே
இடர்ஏன்படுகிறாய் நான்என்றும்நீஎன்றும்
இரண்டாகஎண்ணாதே குகனே

அ. சற்றேகாணும்முன்னே கங்கைக்கரைஏற்றிஎன்
தனையும்கரைஏற்றின குகனே
சித்திரகூடத்துக்கு வழிஎங்கேநீஇங்கே
திரும்பஒன்றும்பேசாதே குகனே

ஸ்ரீராமர்சீதைக்குச் சித்திரகூடவளம்காட்டல்.

விருத்தம்.

வரதன்எனும்ரகுராமன்குகனை இந்தவகைதேற்றிப்பரத்துவாச
குரவன்அனுமதியாலேதம்பியும்சீதையும்தானும்கூடிப்போனான்
பரம்உளசித்திரகூடமலைசேர்ந்தான் முகமலர்ந்துபார்த்தானய
கரதலத்தைசீதைமுன்னேநீட்டுவான்மலைவளங்கள்காட்டு [கே
[வானே

உக-தரு-முகாரிராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

பாராய்பெண்ணே-பாராய்பெண்ணேபாக்கியசனகன்கண்ணே

அநுபல்லவி.

சீராகநமக்குநேர்ஆகிறஇந்த-சித்திரகூடமலைரத்தினபீடம்போ
லே (பாராய்)

சாரணங்கள்.

க. மாதவர் முனிவர் சொல்வேதங்களைக்கிளி
வாடிக்கையாற்கற்றுவனமெங்கும் படிப்பதும்
கோதும்தினைகொல்லையினிற்-பம்பைகள்எடுத்து
குரங்குகள் அடிப்பதும்
ஆதவன்குதிரைபோற்பசும்பாறைஒளிபாயந்த
ஆடுகள்பசுமையாக்கோடேறி நடப்பதும்
பேதகம்இல்லாமல்-மேலோடும்மேகத்தைப்
பெண்ஆனைஎனக்கையால்ஆண்ஆனை பிடிப்பதும்(பாரா)

உ. மூலமுனிவர்க்குமலை-ஏறப்படிபோலே
மூடங்கிஅடங்கிக்கொண்டுமலைநாகம் கிடப்பதும்
காலில்ஆழுந்தாமல்-புல்எல்லாமகொம்பாலே
கரும்பன்றி இடப்பதும்
கோலஆயோத்தியில் இட்டகொடிபோலே
கோல்மூங்கிலிற்பாம்புத்தோல்பட படப்பதும்
வாலைப்பிடிகொடுத்துக் குறுகும்கண்முனிவர்க்கு
மந்திகள் அங்கங்கேவழிகாட்டி நடப்பதும்(பாரா)

ந. அருவிநீரைமொண்டுதுதிக்கையாலானைகள்
அருந்தவர்பெருங்கமண்டலம்தனில் விடுப்பதும்
குருவிகள்தினைக்கதிர் மூக்கினால்மடத்திற்
கொண்டுபோய்க் கொடுப்பதும்
பரவும்ஓமகுண்டத் தெரிவளர்ந்திடமயில்
பசுமைஆம்சிறகைவிசிறிபோல் எடுப்பதும்
திருமாமுனிவர்முப்புரிநூல்அணிவதற்குச்
சிலந்திநூல்கொண்டுபோய் குரங்குகள்கொடுப்பதும்(பாரா)

சக்கிரவர்த்தியைக் குறித்துபரதர்புலம்பல்.

விருத்தம்.

துய்யமலைவளங்களைஇவ்வாறுகாட்டித்
தோகையுடன்சாமிலட்சுமணன்தான்செய்த
செய்யபர்ணசாலையினில்இருந்தான் இப்பால்
செயம்உளகைகைநாட்டில் வதிஷ்டன்ஓலை
பைஅறிந்துடன்மீண்டான் தாய்கைகேசி
பாதத்தினிற்சத்துருக்கனுடன் பரதன்வீழ்ந்தான்
அய்யன்எனும்தசரதன்சீர்அறிந்தான்தேம்பி
அழுகின்றான் அரற்றியழுதுவிழுகின்றானே. (உரு)

உஉ-திபதை-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அரசேஎனதையனேஎன தப்பனேஎங்கே நடந்தாய்
உரசேரும்விண்ணவரோடேநீ உறவாடவோ தொடர்ந்தாய்

முறையும்உன்தன்நிறையும்ஐக்கியத்துறையும்எல்லாம் தானே
பிறகேகொண்டுபோனதென்ன குறையோஅறி யேனே

சத்தியமும்சுபகிர்த்தியமும்நித்தியம் நித்தியமும்அல்லோசிறந்
மித்திரனேதர்மபுத்திரனேராமபத்திரனேஎங்கே மறந்தாய்[தாய்

அழகாஉன்னைதொழஆசைகொண்டேடுத்தேன் இது பொய்யோ
எழுதாப்பொறிக்கழுதால்இதில் என்னதான்வரும் அய்யோ

சிலராகவன்மேலேமாமுடி கோலிநீவைக்கும் முன்னே
காலம்செய்திடும்கோலம்தன்னைஎனலுல்என்னசெய்யல் ஆம்ம
[ன்னவனே

அம்பரம்தன்னில்சம்பராசுரன் துன்பமேசெய்கி ருனே
உன்பிராணனைராமன்மேல்வைத்த அன்பெல்லாம்இது தானே

அய்யன்முனிவதிஷ்டன்விட்டகைஓலையின் பேச்சே
மெய்யென்றிருந்தேனேநான் விழித்தேன்கனா வாச்சே

எண்ணிலுல்என்ன அண்ணன்ராமன் இங்கிருக்கிறுனே இந்நேர
புண்ணியவானைஎன்கண்ணிற்காணவேபோமேஎன்விசாரம் [ம்

பரதர்கைகேசியைகோபித்தல்.

விருத்தம்.

வருதுயரம்ஒருவிதத்தால் பரதன்தேறி
மன்னன்இறந்தாலும்என்ன அண்ணன்ராமன்
திருமுகம்கண்டாற்போதும்எங்கேஎன்றான்
தேசமெல்லாம்ஒருவரத்தால்உனக்கேசொன்னேன்
ஒருவரத்தால்அவனைவனம்போகச்சொன்னேன்
உள்ளபடிஇதுமகனே பிள்ளைநீங்கப்
பெரியமன்னன்இறந்தான்என்றுரைத்தாள்கண்ணீர்
பெருகினன்கைகைநொந்துருகினனே. (உ.௬)

கங-தரு. கமாசுராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

என் அடிபாவிகைகேசி-என் அடிசெய்தாய்-நீ
என் அடிபாவிகைகேசி-என் அடிசெய்தாய்

சரணங்கள்.

க. மன்னனைக்கொன்றண்ணன்வனம் போகவிடுத்தாய் இன்னம்
இன்னம்உண்டோபாவிஎன்னை என்டிகெடுத்தாய் (என்)

உ. என றுபாவிஉன்வயற்றினில் வந்தேனே-நான்
அன்றுதாயேஅனறுபேய்என் றுசொந்தேனே (என்)

ந. அய்யன்ராமன்கைகிழங்கு கிண்டல்ஆமோடி-நாம்
செய்யும்பாலும்சோறும்வாரி மண்டல்ஆமோடி (என)

ச. உன்னைக்கொன்றுஎன்பழியைப் பின்னைத்தீர்க்கிறேன்எங்
மன்னவன்ராமன்வைவானென்றெண்ணிப்பார்க்கிறேன் [கள்
என்

ரு. இன்றால்அல்லோநஞ்சுகொல்லும்என்பதுபொய்யோநான்
ஒன்றும்அறியேனேஇதுக்கென்செய்வேன் அய்யோ (உன்)

சு. மன்னவன்பின்னேடேநீ போகல்லோவேணும்-இனி
என்னையும்கொன்றாகிலும்நீ சாகல்லோவேணும் (என்)

எ. தரமோநான்புவிஆளத் தரமோகண்டாய்-ரண்டு
வரமோகழுத்தறுக்க அரமோகொண்டாய் (என்)

அ. நாயகன்ராமனுக்கிணை சொல்லப்போமோடி-ஓர்
ஆயிரம்நட்சத்திரம்ஒரு சந்திரன்ஆமோடி (என்)

பரதர்கோசலாதேவிக்குச்சத்தியம்கூறுதல்.

விருத்தம்.

கோவித்தபரதனந்தக்கைகைவிட்டப்புறம்கோசலையைகண்டா
சேவித்தான்கைகைசெய்ததறிந்திலேயோஎன்றந்ததேவிகே [ன்
ஆவிக்குமாவிஅண்ணன்ராமனைவஞ்சித்தறியேன்அறிந்[ட்டாள்
பாவிக்கும்பாவியாய்விடுவேன்என்றுசத்தியங்கள்[தேனஆகில்
[பண்ணுவா...

உ௫-தரு சாவேரிராகம்-அடதாளம். சாப்பு

பல்லவி.

சேரும்கதியில்சேருவேன் அம்மா இந்தராமந்துரோகம்
தெரிந்தால்அனுபவிக்கிறேன் அம்மா

அநுபல்லவி.

இராகநெஞ்சுக்குத்தெய்வமே சாட்சி
திரும்பதிரும்பஎனனகண் காட்சி
ஓரிபோற்பெரியோரை வைதவன்
உண்டவீட்டுக்குரண்டகஞ் செய்தவன்(சேரும்)

சரணங்கள்.

க. அய்யம் இட்டுஉண்ணுதவன்குடிகெடுத்தவன்அப வாதகன்
அகத்திலொன்றும்புறத்திலொன்றும்செய்யும்துற்க்குண
[போதகன்
செய்தநன்றிவிடுத்தவன் தீங்குசொடுத்தவன்பிரம்ம காதகன்
செய்யும்அவரைக்குறுக்கேதடைசெய்தவன்கொலை பாதகன்
அய்யம்தீர்த்துநெஞ்சை உறந்தவன்
அசலுடமைக்குப்பேயாப் பறந்தவன்
கைஅடித்துக்கொண்டாணை மறந்தவன
கன்றுக்குப்பாலைவிடாமற் கறந்தவன் (சேரும்)

உ. தீர்த்தக்கரைப்பாவியும் கடுங்கோவியும்செனத்துரோகியும்
செபதபவிரதஈனனும் பரஸ்திரீசென அநு போகியும்
பூர்த்தியாம்மதுபானியும் அக்கியானியும்அவி வேகியும்
பூமிக்குச்சுமைஆகவந்த புகழ்இல்லாத தேகியும்
வார்த்தையாற்பிரட்டும்படு கோளனும்
வழக்கழிவுசொல்லும்அசட் டாளனும்
தார்த்தவிர்த்திவிடாமிண் டாளனும்
சொற்றிலேநஞ்சிடும்சண் டாளனும் (சேரும்)

ங. ஆறுகுளத்தில்உடைஇல்லாமல்அம்மணத்துடன்நடந்தவன்
அன்னைவார்த்தைதந்தைவார்த்தைகுருவின்வார்த்தைகடந்தவ
தேறுநல்லோர்பெரியோரைக் கண்டெழுந்துராமல்க் கிடந்[ன்
திருடனுக்கிடங்கொடுத்தவன் இடங்கொடுத்தவன்பி [தவன்
வேறில்லாரைப்பைத்து விண்டவன் [ன்னேதுடர்ந்தவன
வேட்டகந்தன்னிலேஇருந் துண்டவன்
சீறும்படையைப்பாய்ந்து கண்டவன்
செடியிலேதலைதுறுத்துக் கொண்டவன்(சேரும்)

குகன் பரதசேனையைக்கண்டு கோபித்தல்.

விருத்தம்.

சத்தியம்செய்துடனே சத்துருக்கனோடே
தசரதன்செய்கடன் முடித்துநானேராம
பத்திரனை அழைப்பேன்என் றெழுந்துயாரும்
படைகளும்தாய்மாரும் வசிஷ்டமுனியும்சூழ
சுற்றுசடாமுடி-முடித்துப் பரதன்கங்கைத்
துறைக்குவடகரைக்குவந்தான் வரக்கண்டங்கே
இத்திசையில்ராமன் மேற்பகைகொண்டன்றோ
ஏகினான்என் றுகுகன்சீறினனே. உரு

கரு-தரு-காபிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னத்துக்குப்பரதன்படைவந்தது என்திராணிபாருங்கள் [வேடரே

அநுபல்லவி.

மன்னவனுக்கடிமை நான்என்றுதெரியாமல்
வனத்தில்வந்தும்துரத்திப்பிடிக்கவந்தாரோ (என்னத்துக்கு)

சரணங்கள்.

க. ஆழநெடுந்திரைக்ககங்கை ஆறுகடந்தாலும்என்ன
தோழன்என்றுராமன்என்னைச் சொல்லிதருளியதொரு
சொல்லேனோ - சொன்னபடிக்கு
நில்லேனோ - நான்பிடித்தகை
வில்லேனோ - இவரைக்
கொல்லேனோ (என்னத்துக்கு)

உ. அரவொட்டின்மேல்க்காலம் போடவந்ததுபோலே
முடியத்துரத்தினன்ன மோசம்செய்யவந்தாலும்
முறியேனோ - வளைதடிகொண்
டெறியேனோ - தலைதலையாய்ப்
பறியேனோ - கொல்ல
அறியேனோ (என்னத்துக்கு)

ந. ஆனைகட்டச்சங்கிலி-தான்எடுத்துகொடுத்தாற்போல்
என்எதிர்த்துக்கொண்டார்என்னை இவரைப்பொடிபொடியா
இடியேனோ - வரவொட்டாமல்
அடியேனோ - வந்தமன்னரைப்
பிடியேனோ - என்சொல்
முடியேனோ (என்னத்துக்கு)

லட்சுமணர்பரதசேனையைக்கண்டுகோபித்தல்.

விருத்தம்.

திடம்பெருகுகுகன் இவ்வாறெண்ணிஐயம்
தெளிந்துதெரிசிக்கவந்தான் பரதன்அன்பால்
நடந்ததெல்லாம்குகனுக்குச சொன்னகங்கா
நதிகடந்தான்சேனைகளைப் பரத்துவாசன்
மடந்தனிலேஇளைப்பாற்றிச் சித்திரகூட
மருங்குவந்தான் அவனைலட்சுமணனகண்டிங்கே
தொடர்ந்துகொல்லவரும்இவனைக் கொல்வேன்என்று
துடிக்கின்ருன்ராமன முன்னேபடிக்கினருனே (உஎ

௰௬-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி எனக்குத்தாரம்
ஒருமொழிமாத்திரம்தாரும்சாமி

அநுபல்லவி.

பரதன்சேனை இதுநான்மரம் ஏறிப்
பார்க்கத்தெரிந்ததையாபழி காறி
வரவிடுக்கவந்தான்நம்மைச் சீறி
வரட்டும்ஒருகைபார்க்கிறேன்எனத் தேறி

சரணங்கள்.

க. வஞ்சகம்பரதன்செய்த கோரம்தீர்த்தால்அல்லாமல்
வாங்குமோஎனதுவங்கை வரம் தேவரீர்இந்த
வஞ்சியும்நீரும்போய்ச்சற்றே தூரம் இருப்பீர்இந்த
மட்டுமேசெய்திடும்உப காரம்
கொஞ்சநேரத்திலேஎன்சிலை பூட்டி
குரைக்கும்நரிக்குஇரைஆகவே காட்டி
பிஞ்சிடாமல்இந்தச்சேனையைக் கூட்டி
பிரளயகாலருத்திரனைப்போல் மாட்டி
நஞ்சநஞ்சுபஞ்சுபஞ்சா எவர்களும்
நெஞ்சிரங்கவெஞ்சரங்களைத்தொடுக்கிறேன் (ஒரு

உ. வண்டிலும்தேரும்கப்பல்போல்ஆட-அதிலேரத்த
வரிவெள்ளம்கரைபுரண்டோட-எதிர்த்தவர்கள்

மண்டைகள்மலைமலையாய் போட-பேயும்பூதமும்
மகிழ்ந்துகொண்டுதலைகள்பந் தாட
அண்டொன்றுதபெரும்படைகள்மேன் மேலே
ஆடிக்காற்றில்விழும்சருகுகள் போலே
சண்டவார்கணைகள்தொடுக்கிற தாலே
சரிந்துசரிந்துநிலைகுலைந்தொருக் காலே
விண்டுவிண்டுபிண்டுபிண்டு விழவிழ
கண்டகண்டதுண்டதுண்டம் ஆக்கிறேன் (ஒருமொ)

௬. ஆள்அடிமைலட்சுமணன் தொட்ட-அம்புகள்பாய்ந்து
ஆனைமத்தகம்பிளந்து கொட்ட-அதில்வந்தபேர்
வாள்எல்லாமமீன்போல்புகுந்து கிட்ட-அந்தசேனையை
வாரிக்கொண்டுரத்தம்கடல்முட்ட
தோளும்தாளும்அறுந்தது துடி. துடிக்கத்
துள்ளித்துள்ளிச்சிலகவந்தங்கள் நடிக்க
மூளைச்சேற்றில்விழுந்திடுப்புகள் வெடிக்க
முகங்கண்டவர்க்கெல்லாம் குறளிகள் படிக்க
வாளிஆடகாளிஆட பலபல
கூளிஆடதூளிஆட அடிக்கிறேன்(ஒமொழி)

ஸ்ரீராமர் சக்கிரவர்த்தியைக்குறித்துப்புலம்பல்.

விருத்தம்.

இந்தவகைசொல்லதம்பீஉனக்குலோகம்
ஈரேழும்நேர்ஆமோநமக்குப்பூமி
தந்திடவும்வணங்கிடவும்வந்தான்கண்டாய்
தம்பிபரதனும்எனைவிரோதிப்பானே
அந்தமதிவிடுவிடென்னபடையைநீக்கி
அண்ணன்முன்னேபரதன்வந்துபணிந்தபோது
தந்தைஉளனோஇலனோஎன்றான்கேட்டான்
தயங்கினான்ரகுராமன்மயங்கினானே. ௨௮

௧௭. திபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மெய்யைநிலைநிறுத்திஉன் மெய்யைவிட்டுபோனதென்ன
மெத்தவனே - என்னை - பெற்றவனே
கையிலேவளர்த்தஎன்னை இப்படிக்கண்கலக்கங்கள்
கண்டாயோ - என்னை - விண்டாயோ.

௨. வீட்டில்இருந்துமுகத்தை காட்டுவாய்என்றிருந்தேனே
வெறுத்தாயோ - என்னை - ஒறுத்தாயோ
காட்டிலேபோம்முன் ஆகவின்நாட்டிலேநீ போனதென்ன
காரியமோ-இது - வீரியமோ

௩. தத்தளிக்கும்பரதர்க்குப் புத்திமதியோசனைகள்
சாற்றுவையே- பயம்-மாற்றுவையே
எத்தனைகாரியத்துக்கும்என் கர்த்தன் இருக்கிறான்என்றே
எண்ணினேனே-அவம்-பண்ணினேனே

௪. எண்ணும்என்உயிர் இருக்க உன்உயிரைமாத்திரம்
இறந்தாயோ-என்னை-துறந்தாயோ
கண்ணுக்குற்றம்கண்ணுக்குத் தெரியாதென்றுசொன்ன
கதையாச்சே-நல்ல-வதையாச்சே

௫. இந்திரன்பழயபோலே வந்தானதுமுன்னேமுறை
இட்டானே-குறை-பட்டானே
அந்தரத்திலேசென்றாலும் எந்தாய் இங்கேயிருக்க
ஆர்படுவார்-கேள்- ஆர் விடுவார்

௬. என் இரண்டுகால்மிதித்த உன்னிடமார்பும்வயிறும்
இருதாளும்-உன்-இருதோளும்
வன்னிதின்னக்கண்டேனே என்னைப்போல்ஒருபிள்ளை
வாய்ச்சுதல்லோ-பேய்-ஆச்சுதல்லோ

௭. தள் அரியதாறுவந்து தாய்வாழையைக்கெடுத்த
சதிதானோ-தலை-விதிதானோ
பிள்ளையென்றுநான்பிறந்து பெற்றவனைகொன்றான்என்று
பேர்எடுத்தேன்-நல்ல-சீர்எடுத்தேன்

௮. கண்ணில்எண்ணெகுத்திஎன்னைக்காத்துக்கொண்டிருந்து
கட்டுமுன்னே-பலன்-விட்டுமுன்னே [பட்டம்
வெண்ணைதிரண்டுவரச்சே தாழிஉடைந்தால்ப்போலே
விடுத்தாயே-என்னைக்-கெடுத்தாயே

௯. நாலுபேர்பிள்ளையிலும் என்மேல்உன்மனம்எல்லாம்
நாட்டினையே-பா-ராட்டினையே
காலிலேதைத்ததுன் கண்ணிலேதைத்ததுபோல
காத்தாயே-இன்று-தீர்த்தாயே

ய. வெந்தவனம்கடந்துன் ஊரினில்வந்தார்முகத்தில்
விழிப்பேனோ-ஆரை-அழைப்பேனோ
என்தன்முகம்திருத்தி உச்சிமோந்துதழுவி
எடுப்பார்ஆர்-முத்தம்-கொடுப்பார்ஆர்

கக. மாமந்திரசாலேயும் சிங்காதனமும்ஒளி
வாங்காதோ-கண்டால்-ஏங்காதோ
பூமண்டலாதிபர்கள் தாம்வந்துபணியும்அம்
புஜபதனே-ஐயோ-தசரதனே.

ஸ்ரீராமரைவதிஷ்டர்தேற்றுதல்.

விருத்தம்.

அரசனைஎண்ணிஇவ்வா றழும்இரகவனைநோக்கி
வரமுனிவதிஷ்டன் அங்கே மலர்கையால்கண்ணீர்மாற்றி
விரகினல்எவரானலும் விதியினைவெல்வாருண்டோ
புரவலாகேளாய்எனறு போற்றுவான்தேற்றுவானே. உகூ

கஎ-தரு-முகாரிராகம்-அடதாளம்சாப்பு

பல்லவி.

ராமாநீயும்-இப்படிகிலசிக்கல்-ஆமாஎன்சாமி
அநுபல்லவி.
பூமான்எனும்தசரதன்போ கையினாலே
புலம்பிபுலம்பிக்கொண்டுகுழந்தைபிள்ளையைப்போலே()
சரணங்கள்.
க. கனிந்துகண்ணீர் இறைத்தாவதுன் டோசாரம்
கையால்எள்ளும்நீரும் இறைக்கவே ணும்இந்நேரம்
நினைந்துபார்க்கில் இதுமகன்செய்யும் உபகாரம்
நீஅறியாதுண்டோஉனக்கேனஇந் தவிசாரம்(ராமா)

உ. புண்ணியம்பாவம் இரண்டும்நெய்என்று மனஸ்கரி
பூட்டும்வாணுள் அதில்ப்போட்டு வைத்ததிரி
எண்ணும்இவ்விரண்டிலும் உயிர்விளக் கேசரி
இரண்டும்போனல்விளக்கிருக்குமோ அரிகரி(ராமா)

ந. பெறுவதன்முன்எள்க்கும் அடிக்கடி மேதினி
பிராணபயம்உன் ... பொல்லமேபெருந் ...

அறுபதாயிரம்ஆண்டு அரசிருந்தான் தனி
அதுவும்போதாதென்று அழலாமோஅவற்கினி(ராமா)

ஸ்ரீராமர்முன்னேபரதர்புலம்பல்.

விருத்தம்.

அலகிலாக்குறைநீக்கிவஷிஷ்டன்தேற்ற
அறிந்துகங்காநதிமூழ்கித்தந்தைக்குள்ள
குலவிதிஎல்லாம்செய்தான்சீதைதானும்
குளிர்ந்தகங்காநதிமூழ்கித்தெளிந்தபோது
தலம்அதனை ஆளும்முடிதரிக்காய்தம்பீ
சடைமுடிஏன்தரித்தாய்என்றுரைக்கண்ணீர்
பலபலெனஉதிர்ந்திடத்தன்மனதில்உள்ள
படிராமன்முன்பரதன்பகருவானே ௩௰

௧௨. திபதை-எதுகுலகாம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

௧. மன்னவன்தன்னையும்கொன்றுஉன்னையும்இந்தப்படி
வைத்தாள்வயிற்றுக்குள் ளேஅவம்
சென்மித்தகான்அல்லோ மாதபம்செய்யவேணும்
தேவாஉனக்கேன்இந்த மாதவம்

௨. உறவுபோலேஇருந்துகுளவிபோலேகொட்டி
உன்னையும்போகச்சொன்னாளே படுபாவி
மறுபடியும்வந்துசந்தோஷம்சொன்னாளே
வைத்திருக்கவேணுமோ எனஆவி

௩. உடன்ஆம்துணைபிரிக்க தந்தைஉயிர்மரிக்க
ஊரும்சிரிக்கவரம் கொண்டேனே
இடறினகாலிலேஇடறும்என்பதேல்லாம்
என்இடத்திலேதானே கண்டேனே

௪. அருந்துணையேஎன தையர்வேஎன
தரமேசநீரா தேசியோ
பிரிந்தென்னைப்போஎன்றாய் பழிகாரனோநான்
பிள்ளைபிறந்தநேர் வாசியோ

௫. உலகம்எல்லாத்தையும் நீ ஆளவேணும்பின்
ஒருவர் ஆணைக்குறை — வாங்குமோ
மலைதாங்கும்பாரத்தைமலையே தாங்கவேணும்
மண்ணாங்கட்டிஎன்ன — தாங்குமோ

௬. ஆனைமேல்இட்டபாரம் பூனைமேல்இட்டாப்போலே
ஆரசாளுவதென்ன — கோலமோ
கானகம்நீஇருக்க — நான்போயி அரசிருக்கல்
கதையோ இதுகலி — காலமோ

௭. தன் இனம்தன்னைக்ககக்கும் வேலிபயிரைக்காக்கும்
தப்பிதம்இல்லை இந்தப் — படிதானே
உன் இனந்தன்னை நீயே — வந்துகாத்தருள்என்றால்
ஒன்றும்ஆகாதுசொன்னேன் — அடியேனே

௮. தெவேந்திரனுக்கும் — மகுடம்தரித்துவைத்த
தெசரதமகராஜன் — பூமியே
நீவேறென்றெண்ணல்ஆமோ நீயேவரவேணும்
நீ ஆளவேணும்என் — சாமியே

——(*)——

ஸ்ரீராமர்பரதர்க்கு புத்திசொல்லல்.

விருத்தம்.

பரதன் இவ்வாறுகூறப் பரிந்துஸ்ரீராமன் தாயார்
விரதம்என்விட்டாய்இந்தவிரதம என் கொண்டாய்நான்போ
தாமுடன்பதினால் ஆண்டும் தவம்செய்யவேணும்நீபோய் [ய்த்
திறமுடன்புவிஆள் என்று தெரிவிப்பான்விரிவிப்பானே.

௧௮. தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இன்னம்சிறுபிள்ளைபோலே என்னை அழைக்கிறாயஉன்னை
என்னசொல்வேன்பரதாஎன் -கண்ணின்மணி — யே

அநுபல்லவி.

அன்னைதந்தபணிவிடையே தன்மம்என்றுமதித்தேனே
அப்படிநீமதிக்காமல் இப்படிவந்ததில்தானே (இன்னம்)

சரணங்கள்.

௧. வாய்த்தமழைவிட்டுதா வானம்விட்டதில்லைராமன்
வனத்தில்வந்தபின்னும்என்ன சொல்லையா
நேத்தியாப்பதினாலுவருஷ மட்டும்சொன்னபடி
நில்என்றால்நில்லாமல்என்ன தொல்லையா

ஏர்த்ததகப்பன்சொன்ன வார்த்தைகொண்டுபுவிஆள
இசைந்தேனே அந்நாள்அறிந்தாய் அல்லையா
மூத்தவனும்ஒருவிதத்தில் தகப்பன்ஆமேசொன்ன
மொழிகொண்டுபுவிஆளொண்ணாதோ வல்லமைஇல்லையா

௨. மத்தர்போல்பொய்யுரைத்துத்தகப்பன்வினைகட்டிகொள்ள
மகன்இருந்துபட்டங்கட்டிக் கொள்ளல்ஆமோ
சத்தியமாய்வேதம்எல்லாம் கண்கண்டதெய்வமென்று
தாய்தகப்பனஉரைகடந்து துள்ளல்ஆமோ

பத்தியாத்தவம்எனக்கும் புவிஉனக்கும்பிரித்திருக்கப்
பங்கல்லாபங்கைவிழுந்து அள்ளல்ஆமோ
பித்தன்அல்லடாதம்பிநீ சமர்த்தன்எனஇருந்தேனே
பேயானாலும்பெற்றதாய்வார்த்தை தள்ளல்ஆமோ (இன்)

௩. முன்ஆகநான்கொண்டு பின்னைஅரசுனக்கு
முறையாலேதந்தேன்என உரைபொய்யாமல்
உன்னாலும்என்னாலும் சொன்னபடிநடக்கும்என்று
உசரப்போனதசரதர்க்கு வசைவையாமல்

சின்னபின்னங்களாய்ப் பட்டணமும்பரிசனமும்
சேற்றில்நட்டகம்பம்போ லேதொய்யாமல்
என்ஆணைதம்பிநீ உனநாட்டைஆளடா
எப்படிநான்சொன்னாலும்அப்படி நீசெய்யாமல் (இன்ன)

பாதுகைக்குப்பரதர் பட்டாபிஷேகஞ்செய்தல்.

விருத்தம்.

பதினாலும்ராகவன் இவ்வாறுரைக்கக்கேட்டான்
பரதனும்சம்மதிகொண்டான்பதினாலாண்டாம்
அதில்வராவிடில்முடிவேன் என்றுகெண்டான
அண்ணன்மிதியடிகொண்டான்அனுப்பிக்கொண்டான்
றாதிஅயோத்தியில்புகுந்தான்நந்திகிராமம்
தனனினான்சுமித்ரன் அதிகாரம்செய்ய
மிதியடிக்குமுடிதரித்தானதெற்க்கேநோக்கி
விழிக்கின்றான் தன்பழியைக் கழிக்கின்றானே.
அயோத்தியாகாண்டம்முற்றிற்று.

விருத்தம்-௩௨.
திபதைகள்-௧௨-தருக்கள்-௬௮-ஆக௱௰-

———)0(———

ஆகபாயிரம்-௧-க்கும்-காண்டம்-௨-க்குமகூடிய
கொச்சம்-௩-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௯௨-ஆக-௯௯.
தோடையம்-௧-திபதைகள்-௩௫-தருக்கள்-௪௩-ஆக.௫௯.
சக்கிரவர்த்திதிருமகனார்
திருவடிகளேசரணம்.

———0———

மூன்ருவது

ஆரண்ணிய காண்டம்.

[*]

ஸ்ரீராமர் அத்திரியைக்கண்டு தண்டகம்சேருதல்.

விருத்தம்.

துதிபெறுதம்பியர் தாயார்மந்திரிமார்கள்
தொல்முனிவர்புரசனங்கள் குகன்போனலும்
பதிவுறும்நம்இருப்பிடத்தைக் கண்டுகொண்டார்
பரிவினல்வந்துதினம் சூழ்வாரென்று
சதிஎனுமசானகிபின்னும் தம்பிமுன்னும்
தான்வரச்சித்திரகூடமலைக்கப்பாலே
உதையரவிமுன்பனிபோல் முனிவர்துன்பம்
ஒழிக்கின்ருன்ஸ்ரீராமன் வழிக்கொண்டானே

க-திபதை-தோடிராகம்-அடதாளம்சாப்பு.

கண்ணிகள்.

க. வழிகொண்டுராகவன் விண்டான் - அந்த
வழியில்அத்திரிமுனியைக் கண்டான் - முனி
மொழியும்ஆசிர்வாதம கொண்டான் - தந்த
பூங்கனிகிழங்கமு துண்டான

உ. அழுக்கில்லாதசொர்னனச் சாயை - ஆன
ஆடைபணிகள்வெகு வாயே - அன்பு
செழிக்கும்சீதைக்கொரு தாயைப் - போலே
செய்தாளமுன்அனு சூயை

ங. அதுகொண்டம்முனிவன்அவ் அன்னை - இடத்
தனுமதிகொண்டவர் முனனே - நல்ல
முதுதண்டகாரணியம் தன்னைக் - கண்டு
மூவரும்சென்ருரே பின்னே

விராதன்வதையும் துதியும்.

விருத்தம்.

பொய்கலந்தவிராதன் அந்தவனத்தேவந்தான்
பூவைசனகியைஎடுத்துக்கொண்டான்ராமன்
மெய்கலந்ததம்பியும்தானும போர்செய்தார்
விட்டிலன்என்றவர்களையும் எடுத்துக்கொண்டான்

மைகலந்ததோளை இருவோரும்வெட்டி-
மாய்த்திட்டார் பதம்படலால்அரக்கன் அங்கே
கைகலந்ததிவ்வியதேகத்தைப்பெற்ருன்
கதிசொல்வானஞானமுள்ளதுதிசொல்வானே. (உ)

க-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அறிவார்ஆர் - உன்னை - அறிவார்ஆர்.

அநுபல்லவி.

அறிவார்ஆர்மானிடம்போலே குறியாவேஷம்கொண்டதாலே
சிறியேன்செய்தபிழைதன்னைக்- குறியாதேராகவாஉன்னை(அ)

சரணங்கள்.

க.எடுப்பானும்எவர்க்கும்இன்பம்-கொடுப்பானும்குட்சியினிலே
விடுப்பானும்ஆலிலைமேலே படுப்பானும்நீஅகவேபா
ராட்டுவாய் - கதிபைக் - காட்டுவாய் - உலகைச்
சாட்டியில்லாப்பம்மரம்போல் - ஆட்டுவாய்உன்மகிமையை
அறிவார்

உ. தாயறியும்பிள்ளைதன்னைத்-தாயையும்பிள்ளை அறியும்
நீஅறியும்உயிர்உன்னை-ஆர்றியாதென்ன இந்திர
சாலமோ - இதென்ன - கோலமோ - உனது
காலாலேமுடிந்ததனைக்-கையாலேஅவிழ்க்கப்போமோ
அறிவார்

ங.அரவம்ஆகிமேல்உகந்தாய் ஒருகொம்பினுலேசுமந்தாய்
சரணம்அதினுல்அளந்தாய்-பெருநிலமங்கைமேல்வைத்த
தாகமோ - இளையாள் - மோகமோ - உன்மர்பில்
ஏகமாய்இருக்கின்றவள்-வேகமேசெய்யாளோஉன்னை
அறிவார்

௪. உள்ளசராசரம்எல்லாம்-வள்ளலேஉன்நாபிமலர்ப்
பொள்ளலில்வந்தும்ஒருவர்-பிள்ளைஎனநீவந்தது
ஞாயமோ - இதென்ன - மாயமோ - சேற்றிலே
மேயும்பிள்ளைப்பூச்சிபோலே-தோயவும்தோயாதஉன்னை
அறிவார்

ரு. வேதத்தின்மேலேவேதாந்த-நாதத்தின்மேலேஞானிகள்
போதத்தின்மேலேவிளங்கும்-பாதத்தைஎன்மேலேவைத்தாய்
யோக்கியனே-அடியேன் சிலாக்கியனே-சுருதிசொல்
வாக்கியனே-சுவாமிஎனது-பாக்கியமேபாக்கியம்உன்த
அறிவார் [ன்கா

சு. பாகண்டுசொல்லாளை இந்தநாய்கண்டதென்று கொள்ளாதே
நாய்கண்டுபொறுக்காத்தைவை -ரோகண்டுபொறுக்கும்மலர்
தாமனே-பன்னிரு-நாமனே-எவர்க்கும்
வாமனனெனும்சீதாபி-ராமனேஉன்பெருமையை-அறிவார்

தண்டகவனரிஷிகள் ஸ்ரீராமரோடுமுறையிடல்.

விருத்தம்.

துதிவிராதன்வணங்கிஉயரப்போனான்
சுவாமிசரபங்கன்ஆசிரமத்தில்ப்போனான்
அதில்எதிர்கண்டிந்திரனும்போனான்ராமன்
அருளமுனிதம்பதியோடனலில்ப்போனான்
கதிதருதண்டகவனத்துமுனிவர்தம்மைக்
கண்டுகனிஅமுதையன்உண்டிருந்தான்
சதிசெயும்ராக்ஷதராலேகொஞ்சச்சீவன்
தரிக்கின்றார்அவர்கள்கையைவிரிக்கின்றாரே (௩.)

உ-திபதை-புன்னாகவராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. ராமபத்திராராமச்சந்திரா ராமாஆ சீர்வாதம்
பூமிச்சுமைகழிக்கும்தர்ம்ம புத்திராஆ சீர்வாதம்

உ. அரக்கர்கையால்நருக்கியிட ஆலைக்கரும் பெனத்தானே
நெருக்கிடைஆய்வந்தும்எம்மை நிலைநிறுத்தாய் எங்கோனே


௩. விழல்எனராட்சதநெருப்பால் வெதும்புகிறோம்ஒருகாலே
மழைமுகம்கண்டிடும்பயிர்போல் மகிழ்ந்தோம்நீ வரலாலே

௪. புரைசேரும்ராட்சதரால்ப் பூனைகளாய் போனோமோ
அரசேஉன்வரவுகண்டோம் ஆனைகள்போல்ஆனோமே

௫. வள்ளல்தசரதன்மகனே மனக்கவலை தீராயோ
எள்ளளவுன்கிருபைக்கண்ணால் எங்கள்முகம் பாராயோ

௬. பசுபறந்தாலும்அய்யா படியும்அல்லோஒருதேசம்
நெஞ்சுபறந்திடும்அதற்கு நிலைகாணோம் லவலேசம்

எ. உத்தமனேஅரக்கரைவே ரோடும்பிடுங்கி எறிவாயே
இத்தனைபேர்செயுந்தவங்கள் எல்லாம்நீ பெறுவாயே



ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்.—

௮. புலிக்கூட்டம்திரிகாட்டில்ப் புகுந்திடும்மான் என்னாமே
கலிக்கிராட்சதர்திரியும் காட்டில்இருக் கின்றோமே

௯. இயற்கைகுலைந்தரக்கர்களால் இறந்துவிட்டோம்பேர்நாமம்
பயிற்றினில்வாள்கட்டிக்கொண்டு மறந்துவிட்டோம்செபஓமம்

௰. உக்காரம்செயில்அரக்கர் உலகில்என்ன படுவாரோ
இங்கேநீஇருக்கில்அவர் எட்டியும்பார்த் திடுவாரோ

ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்

விருத்தம்.

நருக்களும்மலையும்சூழ்ந்த தண்டகவனத்தோரிந்த
வருத்தம்ஆம்மொழியைக்கேட்டான் வணங்கியேராமன்நீங்கள்
செருக்கிபேதவங்கள்செய்வீர் தேவரீர்க்கேவல்ஆளா
இருக்கிறேன்அரக்கர்துன்பம் இனிவிடும்எனச்சொல்வானே

உ-தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அஞ்சாதிருங்கள்சந்நியாசிகளே-தண்ட-காருண்ணியவாசிகளே

அநுபல்லவி.

அஞ்சாதிருங்கள்உங்களாசிர்வா தம்துணை
அப்புறம்ராட்சதர்க்குண்டென்கை யில்க்கணை
செஞ்சாமாருதம்போலேநொ டிக்கிறேன்
பஞ்சாகப்பறந்தோடஅ டிக்கிறேன்-அஞ்சா

சரணங்கள்.

க. கண்டோனாக்கொல்லுவேன் கொல்லாமல்-விட்டான்
காகுத்தன்என்றுநீர் சொல்லாமல்
மண்டிஎதிர்த்துமுன் நில்லாமல்-காயில்
வந்துவணங்கினர் அல்லாமல்
எண்டிசைமேல்அவ ராலேஆனமட்டும்
ராட்சதசேனைகள் வந்துபோராடட்டும்
அண்டபகிரண்டம் ஆயிரத்தெட்டும்
அப்புறம்போனாலும் என்கணையேஎட்டும்-அஞ்சா

௫. அந்தணராலே பகவாலே-தங்கள்
ஆவிகொடுத்தவர் விண்மேலே
முந்தியதேவருக்கும் அப்பாலே-சொல்லும்
மூர்த்திகள்ஆவார் அதனாலே
இந்திரன்ஆவதேவன் வந்துதடுக்கிறேன்
என்றாலும்ராட்சதர் போரில்அடுக்கிறேன்
சுந்தரகோதண்ட வாளிவிடுக்கிறேன்
சூரியனைக்கண்ட பனிபோல்ஒடுக்கிறேன் - அஞ்சா

௬. மங்கியேதாயார் நிலம்கிற-முடி
மன்னன்உயிரும் தடுமாற
எங்கள்பரதனும் வேசாற-நான்
என்வந்தேன்என்சென்மமம் ஈடேற
உங்கள்பணிவிடை நானேபொறுக்கிறேன்
உக்கிரகோதண்டத்தில் நாணிஇறுக்கிறேன்
எங்கெக்கும்என்கணை யாலேநொறுக்கிறேன்
ராட்சதபூண்டெல்லாம் வேரோடறுக்கிறேன்-அஞ்

———0———

ஸ்ரீராமர்பஞ்சவடிதீரத்தைக்காணுதல்.

விருத்தம்.

அருள்முனிவர்க்கிந்தவகைதேற்றித்தண்ட
காரணியந்தனிற்பத்துவருஷம்நீக்கி
வரும்வழியில்ச்சுதிஷ்டமுனிதவமும்கொண்டு
வந்தகஸ்தியமுனிவரனைவணங்கிஅன்னான்
தரும்சிலையும்புரமெரித்தகணையும்கூடும்
சங்கையிலாதேதரித்ததுங்கராமன்
பரிவுளதம்பியும்சனகிதானுசெல்லும்
படிகொண்டான்பிறகுபஞ்சவடிகண்டானே

ஸ்ரீராமர் சடாயுவைக்கண்டு பஞ்சவடிதங்கல்.

விருத்தம்.

அகஸ்தியமுனியைஅனுப்பிக்கொண்டந்தவழியில்ஜடாயுஎனு [ம்
தகப்பன்உடாகொண்டவன்காட்டத்தருநீர்க்கோதாவிரிதான்

சங்கரும்இளையோன்செய்தபர்ணசாலைதனிலேசனகியுடன்
மிகுந்தோர்பஞ்சவடியில்உள்ளோர்விருந்தாய்ராமன்இருந்தா
[னே

௯-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருந்தானேராமச்சந்திரன்-பஞ்சவடியில்
இருந்தானேராமச்சந்திரன்

சரணங்கள்

இருந்தானேராமச்சந்திரன்-ரிஷிகளைக்காக்கும் தந்திரன்
வருந்தராட்சதர்கூடிவரும்வழிதன்னை நாடி (இருந்)

விருதர்கள்பசிபார்த்து-நிரைநிரையாக் கைகோர்த்து
வரும்விகாரத்தைதீர்த்து-மாமுனிவோரைக் காத்து (இ)

அலைந்தமுனிவர்சோகம்-ஆகுலம்எல்லாம் போக
இலங்கையில்அநுபோக-ராட்சதர்க்கெமன் ஆக (இரு)

பலத்தராட்சதர்ஆட்ட-பாட்டங்கள்எல்லாம் மாட்ட
சலித்தபேர்துன்பம்ஓட்ட-தர்மத்தைநிலை நாட்ட (இரு)

சூர்ப்பனகைஸ்ரீராமரைக்கண்டுமோகித்தல்.

விருத்தம்.

இருந்தராகவன்பூமேனி எழில்எல்லாம்நோக்கிஆசை
புரிந்தசூர்ப்பநகைலங்கரபுரி இராவணற்குத்தங்கை
அருந்தும்மோகத்தால்ஐயன் அடிமுடிஅளவும்கண்டு
தெரிந்துள்ளேஎண்ணிநெஞ்சம் திருகுவாள்உருகுவாளே எ

௯-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தேவனோமனிதன்தானோ-பாவனோயௌவனம்உள்ள
சித்தனோ-இவன்-கர்த்தனோ-பிரமன்
பாவனையால்க்கண்டபெண்கள்-ஆவியை கொள்ளைகொள்ளஎன்று
படைத்தானோ-என்னை-உடைத்தானோ
எட்டானைக்கையும்இவன்கை-மட்டாமோசொரசொரென்ன
இருக்குமே-உள்ளே-சுருக்குமே-முன்னே
பட்டமன்மதன்தவம்செய்-திட்டிந்தஉருவாய்ப்புறப்
பட்டானோ-தவசு-தொட்டானோ

ஈசனுக்குமுக்கண் இந்திர-ராசனுக்கோ ஆயிரங்கண்
என் ஆச்சே-இவற்கிரு-கண் ஆச்சே-இவனைப்
பேசிலெல்என்சாமி இவன்-கேசவன் தானோ நான் ஒன்றும்
பிரியேனே-ஆரோ-அறியேனே.

புந்திபவளத்தையிவன்-செங்கனிவாய்க்கொப்புசொல்லப்
போகுமோ-நிகர்-ஆகுமோ-ஐயோ
அந்தவார்த்தையைத்துப்பென்ற-நிந்தையால்ப்பவளந்துப்பென்
றூச்சுதே-உவமை-போச்சுதே.



சூர்ப்பநகைவருதல்.

முடி வைத்தகுழல்ச்சடையா-முடியால்விட்டால்பெண்களெல்ல
மூடியாரோ-மனம்-மடியாரோ-இவன் [ாம்
அடிவைத்தபூமிப்பெண்மேனி-புளகித்தால்போல்அல்லோபு
அரும்பினள்-மெத்த-விரும்பினள். [ல்லே

மரவுரிசேர்இடைபீதாம்பரமதைச்சேராததென்ன
மாயமோ-இது-ஞாயமோ-சந்
திரன்இவன்முகம்என்றாலும்-வரவரஅதுக்கும்கலே
தேயும்மே-களங்கம்-தோயுமே.

நவம்செய்ததாமரைப்பெண்ணும்-செபம்செய்கிருள்இவன்மா
நாடவோ-வந்து-கூடவோ-ஐயோ [ாபை
தவம்செய்யவந்தானோநான்முன்-தவம்செய்ததற்காகக்காட்சி
தநதானோ-தேடி-வந்தானோ.

ஏலும்இவன்இலக்கணம்-எல்லாம்செய்தஅயனேமோசம்
இட்டானோ-மதிகெட்டானோ-இவன்
கானில்தூளுக்கொவ்மாஇந்திரன்-மேல்உலகைஆள்வதென்ன
கர்மமோ-இது-தர்மமோ.

எடுத்திவன்சுந்தரத்துக்காம்-அடுக்காள்பூஷணம்பூண
திருப்பான்என்-அரு-வருப்பான்-என்சும்மா
விடுத்தவன்அல்லயேபொன்னின்-குடத்துக்குப்பொட்டிட்டு
வேணுமோ-அதிகம்-காணுமோ. [ப்பார்க்க

தப்பில்லாஇவனேச்சேர-இப்படிபிர்ம்மாஎனக்குத்
தந்தானோஇவனுப்-வந்தானோ-ஒகோ
எப்படிஆனாலுமஇவன்-பொற்புயம்தன்னேச்சேராமல்
இருப்பானோ-ஆவி-தரிப்பானோ.

இந்தவிதம்எண்ணிமலர்ச்-செந்திருப்போல்மாயவேஷம்
இட்டாளே-நாணம்-விட்டாளே-நல்ல
பைந்தொடிஆய்சூர்ப்பனகை-வந்துராமச்சந்திரன்முன்னே
படர்ந்தாளே-கிட்ட-நடந்தாளே.

ஸ்ரீராமர் பக்கல்சூர்ப்பனகை வருதல்.

விருத்தம்.

அட்டிசொல்லாதன்னேஉளாகொண்டான்
 ஆனேவருகிறவழியைப்பார்க்கும்சிங்கக்
குட்டியைப்போல் அரக்கர்வரும்வழியைப்பார்த்துக்
 கொண்டிருந்தான் அவன்இருந்தசாலைமுன்னே
கட்டிஇடும்பிணிஉள்ளேஅடங்கிநாச
 காலம்வரவெளிவந்தாற்போலேபொல்லா
மட்டிராவணன்குடியைநாசம்செய்யும்
 வகைவந்தாள்எனசூர்ப்பனகைவந்தாளே. (அ)

ச-தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளே சூர்ப்பனகை-வந்தாளே

அநுபல்லவி.

வந்தாளேமன்மதசத்கோடி-வடிவுள்ளராமன்மேல்மயல்மிகநா
 பந்துமூலையை மூடி பஞ்சவடியைத் தேடி [டி
 பாவம்செய்யும்நிர்மூடி ராவணன்குடி கேடி(வந்)

சரணங்கள்

ராவணன்குபேரனுக்குத் தங்கை-பகைஇல்லாத
நன்மைத்துனர்கொண்டுவந்த நங்கை
 தேவரீருக்கிவள்பெண்டல்லா நீலி
 சீதைக்குத்தெரியுமோராட்சத சோலி
 ஏவனுக்கெளியவன்நான் அநுகூலி
 என்றுசொல்லிஅரக்கர் துடைகாலி (வந்தாளே)

மானிடப்பெண்கொண்டீர்என்ன கண்டோ-என்னுடன்
 மருவிவாழ்ந்தால்உமக்குப்பயம் உண்டோ
 ஆனாலும்என்னபாவிகருப்பு வில்லி
 ஐங்கணேணே பிளக்குதேஎன்உடல் நெல்லி

?ய னை லீலைசெய்வேன்நான்சுமை வல்லே
திட்டுப்பால்குமட்டுதோஉமக்கென்றுசொல்லி (வந்தா)

எதிரிலேவந்ததேஉடபது யோகம்
இருவோரும்இசைந்ததேகாந்தர்வவிவாகம்
சதிசெய்யேன்உமக்கும்எனக்கும்ஏக ராசி
சம்மதிஆனதேநல்லமுகூர்த்த வாசி
கதகதென்றெரியுதேநல்லகாமாக்கினி வீசி
கட்டிக்கொள்ளும்என்றுதில்லுமுல்லும்பேசி (வந்தா)

ஸ்ரீராமருக்கும் சூர்ப்பநகைக்கும் சம்வாதம்.

விருத்தம்.

வந்தசூர்ப்பநகைதன்னை மதித்ராகவனும்நொக்கி
அந்தமானிடவர்பெண்ணோ அரம்பையோஅறிவோம்என்றும்
தொந்தமாதவத்தோர்கான சொல்அறிந்துரைப்பாள்என்றும்
தந்தவார்த்தைக்குவார்த்தை சரிசரிஎதிர்சொல்லுவாளே

௪-திபதை-மோகனராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

செம்பவளவல்லிபோல எங்கேவந்தாய்வந்தா
சேதிஎன்னசொல்வாய் பெண்பாவாய்
கும்பிடப்போனதெய்வம் எதிர்வந்ததென்றுசை
கொண்டுகாணவந்தேன் என்கோவே

ஆசைவில்லின்மேலோ மரவுரிமேலோதின்னும்
அருங்கனிமேலோசொல் பெண்பாவாய
ஆசைவில்லின்மேல்இல்லைமரவுரிமேல்இல்லைஉன்
அதரக்கனிமேல்உண்டு என்கோவே

அதரக்சனிகொடுக்கத் தவசிகட்கடுக்குமோ
அடுக்காதவார்த்தைசொன்னாய் பெண்பாவாய்
அதிரக்கனிவதிஷ்டர் அருந்ததிக்கியலேயோ
அவர்தவசிஅல்லவோ என்கோவே

தவசிஅதுசெய்தாலும் பிர்ம்மகுலம்உன்குலம்
க்ஷத்திரியகுலம்என்குலம் பெண்பாவாய்

இவைஅவைஎள்பதென்ன நாமுகருக்குக்கண்ட
இடத்தில்என்பதுபொய்யோ என்கோவே

உன்வீட்டில்அண்ணன்ஆன ராவணன்அறியாமல்
உன்கைபிடிக்கலாமோ பெண்பாவாய்
என்வீட்டில்அண்ணனும்நான் உன்னவள்ஆனபின்பு
இசைவதற்கையம்இல்லை என்கோவே

தன்வீட்டுவிளக்கென்று முத்தம்இடுவாருண்டோ
தகுதிஅல்லவேஅது பெண்பாவாய்
என்வீட்டுக்காரன்ஆனல் அரக்கர்உறவும்வுண்டாம்
இந்திரபட்டமும்ஈவேன் என்கோவே

அரக்கர்உறவும்பேறற்றேன் உன்போகமும்பெற்றேன்
அருந்தவம்பலித்ததே பெண்பாவாய்
பெருக்கம்என்னசொல்ல என்சுகம்பெற்றபின்பு
பெறும்பாக்கியம்வேறுண்டோ என்கோவே

தவசிகளுக்கிதெல்லாம் ஏதுக்குக்காட்டினில்
தவசேபெறும்பாக்கியம் பெண்பாவாய்
தவசிதவசிஎன்று மெள்ளமெள்ளச்சொல்லி
தள்ளிவிட்டிடல்ஆமோ என்கோவே

தனிஆகஉன்னைநான் கைல்பிடித்தால்உந்தன்
சாதியார்என்சொல்வாரோ பெண்பாவாய்
தனியாய்முருகன்வள்ளி கைபிடித்தானே அந்த
சாதியர்என்செய்தார் என்கோவே

அநியாயகாரியத்தைப் பயம்இல்லாமல்ச்செய்தால்
ஆர்க்கும்சம்மதிஆமோ பெண்பாவாய்
இனிஇருவரும்ஒத்தால் ஒருவர்க்கும்பயமில்லை
எவர்க்கும்சம்மதிஆமோ என்கோவே

ஆனல்மனுஷகணம் ராட்சதகணத்தோடே
அடுக்குமோகூடுமோ பெண்பாவாய்
நான்ஆனல்எப்போதும் தேவருக்கேவல்செய்வேன்
ராட்சதசங்கையில்லை என்கோவே

சங்கைஏன்என்ருய்க்குபோனும்உனக்கோரு
தமயன்என்ருய்அல்லோ பெண்பாவாய்

தங்கைஆனாலும்என்ன தமையன்ஆனாலும்என்ன
சந்தேகம்உனக்கென்ன என்கோவே

அங்கவன்பகைவந்தால் சங்கான்பகைவரும்
எங்கும்பகைஆகுமே பெண்பாவாய்
திங்கள்சூடியும்மாலும்-நான்முகனும்நீஎன்றன்
திஷ்டிக்குக்காணுகின்ற தென்கோவே

திஷ்டிக்குக்கண்டாலும் ஒருத்திஇருக்கவேறே
தேவைஎன்னசொல்வாய் பெண்பாவாய்
மட்டுச்சொல்லுகிறாயோ பெருமரம்சுற்றிய
வள்ளிவிடுவதுண்டோ என்கோவே

விட்டிடுமோஎன்றாய் விளையாட்டுபூசல்இது
விளைப்பூசல்ஆமோ பெண்பாவாய்
தட்டுதலைசொல்லி என்னைப்பயம்உறுத்தி
தடுத்துவிட்டிடல்ஆமோ என்கோவே

ஒட்டாரம்கட்டாதே இளையோன்அறியாமுன்னே
ஓடிப்பிழைத்துப்போவாய் பெண்பாவாய்
அட்டாதுட்டிகள்பேசி அகற்றுகிறாயோநல்ல
தாகட்டும்பார்க்கிறேன் என்கோவே

சூர்ப்பநகை தன்உறவைநினைந்து புலம்பல்

விருத்தம்.

வாதாடும்சூர்ப்பநகைதனைநோக்கி
மணிவண்ணன்எனக்கிந்தமனையாள்சீதை
போதாதோஓர்உறையில்இரண்டுவாளோ
புறங்காக்கும்தம்பிக்குமனையாள்இல்லை
நீதானேபோஎனவேசீதைமேலே
நேர்வாளைலட்சுமணன்கூர்வாளேந்தி
காதோடுமூக்கரிந்தபின்னும்பல்லுக்
கருகுவாள்உறவைநினைந்துருகுவாளே. (ம)

ரு-திபதை-கண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. அருமைபிறப்பேஅண்ணேன் ராவணனே என்னை
அருமைத்தங்கச்சிஎன்ற ராவணனே உன்தன்

கருப்பிபோலேக்ாத்த ராவணனே · என் தன்
கண்ராவிஎன்னசொல்வேன் ராவணனே

உ. சிங்கம்இருக்கக்குட்டிவசம் ஆமோ உன் தன்
செல்வத்தங்கையைஒருவர் தொடப்போமோ எனவோ
அங்கப்பழுதுமனிதன் செய்வானே செய்தும்
அஞ்சாநெஞ்சுபடைத்தும் உய்வானே

ங. லார்க்குருவிஉயரப் பறந்தாலும் அது
உசந்தகருடன்ஆமோ ஒருக்காலும் இந்த
பார்க்குள்ளேமனிதர் மிருந்தாலும் உன்தன்
பாதத்தூளுக்கொப்பாரோ எக்காலும்

ச. எட்டுதிக்கும்உன்பேரைப் பழித்தானே மனிதன்
என்னையும்கொண்டையைப்பிடித் திழுத்தானே அய்யோ
கிட்டிச்செவிஅரிந்து மூளைந்தானே உன்னைக்
கிள்ளுக்கிரைஆகவே நினைந்தானே

ரு. துணைகும்பகர்ணஇங்கே மேவாயோ என்றும்
தூக்கம்பேய்பிடித்தநீ ஆவாயோ அடா
பிணமேகரதூஷண வாரீரோ நான்
பெண்பிறந்துபட்டதைநீர் பாரீரோ

சா. அத்தையருகன்என்ப திதுதானே பிரம்ம
அஸ்திரம்விட்டால்மனிதன் அழியானே
சித்தேஎன்போலஉந்தன் முணைபோச்சோ தெய்வேந்
திரனைச்செயித்ததெல்லாம் விழலாச்சோ

எ குட்டிமனிதன்என்னை வதைத்தானே என்தன்
குலேகலங்கிடவேபோட் டுடைத்தானே மெள்ள
எட்டிப்பார்த்திவன்அண்ணன் பிரிந்தானே இவனை
ஏவிவிட்டறியான்போல் இருந்தானே

அ. இந்திரகாந்திராதியர்கள் பணிகேழ்க்க உலகில்
எங்கெங்குவீரர்களும் முடிதாழ்க்க வந்து
பந்தியிருக்கும்உங்கள் சபைநேரே மூக்குப்
பறிபோய்நான்வருவேனே துரைமார்ரே

சூர்ப்பநகைஸ்ரீராமருக்கு மீள்வும்இதவுரைத்தல்

விருத்தம்.

பேய்வடிவாம்அரக்கி இந்தப்படி அழுதாள்ராமனிடம்
பின்னும்வந்தாள்
தேவரீஅறியாதோ இளையவன் இப்படிசெய்தான்
செய்தால்என்ன
கோவம்உள்ள இடத்தில் அல்லோசந்தோஷம்உண்டு
என்னைக்கூட்டிக்கொண்டால்
ஆவதுமெத்தவும்உண்டு கேள்என்பாள்மருவிஎன்னை
ஆள்என்பாளே. (கக)

ரு. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்உருவினில்கொஞ்சம்கொய்தீர்-எனக்கென்னதாழ்ச்சிநீர்
[செய்தீர்

அநுபல்லவி.

அன்னியாள்ஆகஎன்னைப்பிரிய விடாமல்-என்
அழருகண்டொருவர்கண்ணேறு படாமல்(என)

சரணங்கள்.

க. நடுப்படையில்ப்போனாலும் வடுப்படாமல்உம்மை
நானேசுமந்துகொண் டேட்டவோ ஆரும்
திடுக்கிடவேஎம்மை எதிர்த்தபேர்தலைகளை
திருகிமலைமலையாக கொட்டவோ நல்ல
குடித்தனத்துக்கிவள் ஆகும்ஆகாதென்று
குறிப்பதின்னம்முட்ட முட்டவோ கேட்டால்
இடைப்புசீதைக்குக்கொஞ்சம் மூக்கிவளுக்குக்கொஞ்சம்
என்றெவருக்கும்சரிக் கட்டவோ எண்ணி(என்)

உ. குற்றம்போலேசெய்துகுணம்செய்தீர்என்னைக்கொட்டி
கொள்ளும்காமப்பேயைக் கொல்லவோ நல்ல
பத்தினிஆகநின்றி ராமல்க்காய்கனிகளைப்
பறித்துக்கொண்டுவரச் சொல்லவோ உமது
அஸ்தம்பட்டேதேசொர்தம்ஆனேன்இனி
அரக்கரைவேரோடும் கொல்லவோ நல்ல

புத்திபண்ணிவைத்துக் கொண்டீர்பொங்கியும்பால்
புறம்போகல்ஆகாதென் றல்லவோ சாமி(என்)
௫. பதிக்குப்போகும்போது சீதைக்குமேலான
பருவப்பெண்என்முன்னே நிற்க்கலாம் எம்
கதிக்குப்பழுதுகண்டால் அடங்காதவளைநாம்
கண்டித்தோம்என்றுஏப் பிக்கல்ஆம் நல்ல
திதுக்கென்னகாண்முட்ட நனைந்தார்க்கிரம்இல்லை
எனக்கும்அப்படியேமெய்ப் பிக்கல்ஆம் சாமி
அதுக்கல்லஎன்றாலும் அரக்கர்மாயைகள்அறிந்
தவள்என்வேகிட்ட வைக்கல்ஆம் என்றோ(என்)



கான்வருதல்.

சூர்ப்பநகை கரனேடுமுறையிடல்.

விருத்தம்.

பன்னியசூர்ப்பநகை இந்தப்படிக்கேசொன்னாள்
பாராமல்ஸ்ரீராமன் துரத்திவிட்டான்
அங்கிலேயேமூக்கறச்சிமூளியாகி
அரக்கிசென்றேஅண்ணனுக்காப்பாடுபட்டேன்
பின்னை ஒன்றால்ப்பட்டதில்லை உங்களோடே
பெண்பிறந்துபட்டபிழைஇதுதான்என்று
மின்னிலேவேல்க்காரன்காலில்மரம்போல்ச்சாய்ந்து
விழுந்திட்டாள்அவன்கேட்கமோழிந்திட்டாளே.(கஉ)

கூ-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

பட்டபாடுகேளாய்-கரனேநான்-பட்டபாடுகேளாய்

சரணங்கள்.


க. பட்டபாடுகேளாய் - பணைத்ததோளாய்-பிடித்தவாளாய்
குட்டிமனிதன்என்னைக்-கட்டியிழுக்கப்பின்னை
பெட்டிப்பாம்புபோலே-ஒட்டிஅண்ணனாலே (பட்ட)

உ. ஏற்கும்பெண்ணைக்கண்டே-அண்ணனுக்குண்டே-என்று
தூக்கப்போனபெண்டு-காக்குமனிதன்கண்டு[கொண்டே
மூக்கும்காதும்ரெண்டும்-போக்கடித்துக்கொண்டு (பட்ட)

ங. திருத்தம்ஆனசூரர் - இரண்டுவீரர் - நராவதாரர்
அரக்கர்வேர்களைந்து - நருக்கவேநினைந்து
இருக்கிறாரேவந்து-ஒருத்திபெண்பிறந்து (பட்ட)

ச. பங்கம்இனனம்வேணுமோ- காதுதோணுமோ-மூக்குகா
லங்கைஆளும்வல்லி-தங்கைஆன செல்லி [ணுமோ
மங்கையர்க்குள்நல்லி-உங்கள்பேரைச்சொல்லி (பட்ட)

——[*]——



கர,தூஷணத்திரிசிரங்களின்வதை.

கரதூஷணத்திரிசிரங்களின் வதை.

விருத்தம்.

சாதலிசூர்ப்பநகி இந்தப்படிகோடாலிக்
காம்புகுலத்துக்குக் கேடன்றுல்ப்போலப்
பாதகன்ஆம்கரன்முதல் ஆனவர்க்குச்சொல்லிப்
படைக்கடலைமூட்டிவிட் டப்பாலேநின்ருள்
சாதகன்ஆம்ராமச்சந்திரன் சாலநீங்கிச்
சண்டகோதண்டத்தைவளைத்தம்பாலே
ஓதம்எனும்அரக்கர்உயிர் முகூர்த்தம்தன்னில்
ஓட்டினன்தருமநிலை நாட்டினனே. (கங.)

எ-தரு-பந்துவாராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அடித்தானேரகுராமன்-கோதண்டம்கை-பிடித்தானேசெயரா
[மன்

அநுபல்லவி.

அடித்தானேரகுராமன் முடுக்கானகரநாமன்
அனுப்பினபதினைக்கு முனைத்தலைவனைஅங்கு
அரக்கிகண்காட்டியே பொருக்கெனமூடியே
அப்புறத்திலேஒண்டக் கைப்பிடித்தகோதண்ட
அய்யன்கைகளில்வாரி எய்கின்றசரமாரி
அதினால்உரைக்கரும் பதினால்அரக்கரும்
அலைகடல்போல்எழுத் தலைதலையாய்விழ
ஆனைப்படமுடியச் சேனைகடல்வடிய (அடி)

சரணங்கள்.

க. கரிகள்பலவும்சுற்ற-பரிகள் அதிலும்அந்த
கட்டியதேர்களும்ஒத்த நட்டணைவீரரும்மெத்த
கருந்துகளாஅளைந்து பெருங்கடல்போல்வளைந்து
காகுத்தன்சாலைபைப்பற்றி-மேகத்தைப்போலவேகத்தி
கங்குகங்காப்முனைதர-பொங்கிஅங்கேவரவரக்
கதிகாணவரப் பதினாலாயிரக்

கனகத்தே ரோடும்கூடி கதிரவனை
பனிமொய்த்த தென்மூடி ராமனைமொய்த்துக்
கானும்தூஷணன் திரி - சிரனும்வர அரக்கி
களிப்பாககாட்டினளே நமனும்பசி
இளைப்பாறமூட்டினளே அதைராகவன்
கண்டானேதம்பியை - கொண்டானே ஒருமனு
கார்த்திரு சானகிதன்னை இந்தச்சண்டையை
பார்த்திரு மூனையும்என்னை என்றுநாணியைக்
காதண்டம்இழுத்துமுனைக் - கோதண்டம்வளைத்துமழைக்
கற்கடகச் சந்திரன்போலே சரமாரிகள்
உக்கிரம்கொண்டுவிடலாலே வல்அரக்கன்
கரம்அறுந்தவர்களும் - சிரம்அறுந்தவர்களும்
கண்டம்கண்டம் ஆனபேரும் கட்டைகள்போலே
துண்டம்துண்டம் ஆனபேரும் இறுக்கிக்கட்டும்
கவசங்கள்கிழிந்தோரும் - துவசங்கள்கிழிந்தோரும்
கடைவாய்கிழிந்தோரும் பிடித்துவந்த
குடைபோய் அழிந்தோரும் கணைதொடுக்கும்
கைச்சிலைஆனதும்அற்று - வச்சஆயுதமும்அற்றுக்
கையைக்கையைப் பிசைவாரும் குற்றுயிர்ஆகிப்
பையப்பைய அசைவாரும் நெற்றிபிளந்து
கத்தும்பரிகளும்-தலைசுற்றும்பரிகளும்ரத்தம்
கக்கும்பரிகள் அனேகம் குடல்அறுந்து
முக்கும்பரிகள் அனேகம் மதயானைகள்
கைத்தலம்பிளந்துபெரு-மத்தகம்பிளந்துவைத்த
காத்திரங்களும் பிளந்து நெருப்புபோலும்
நெத்திரங்களும் பிளந்து மலைமலையாக்
கதறுண்டுசிதறுண்டு-மதகுஞ்சரம்உருண்டு
காடுகளா விழுந்ததுகள் கண்ணுக்கெட்டாத
மேடுகளா எழுந்ததுகள் இவைஅறிந்து
கடித்தானே இருபல்லை-பிடித்தானே ஒருவில்லைக்
காய்ந்தானே திரிசிரசன் ராகவன்மேலே
பாய்ந்தானே குணமுரசன் பாய்ந்தவன்தர
கதத்தையும்ஏறிவந்த - ரதத்தையும் அய்யன்அவன்
கைச்சிலையும்முறித்துவிட்டான் அவனுடைய
முச்சிரமும் தறித்துவிட்டான் அவன்பிறகே

காத்திருந்தெதிராலே - ஏற்றவர்கள்மேலே
காற்றிற்பஞ்சுகள்போலே-தூற்றிவிட்டொருக்காலே(அ

உ. வெற்றிராமன்தோடத்தொட-அஸ்திரங்கள்படப்பட
வீட்டில்ஓடுவாரையும்-காட்டில்ஓடுவாரையும்
வில்லைவிட்டெறிவரையும்-கொல்லையிற்பரிவரையும்
வில்க்கம்கொண்டவரையும்-கலக்கம்கொண்டவரையும்
விருத்தம்செய்தீர்என்றும்.நரற்கஞ்சினீர்என்றும்
விசைகொண்டதூஷணன்-வசைகொண்டபாஷணன்
விசையத்தேர்பூட்டினனே-சக்கரம்போலே
திசைஎட்டும்ஓட்டினனே-ஓட்டிஎதிர்த்து
விட்டவிட்டகணைகளும்-தொட்டதொட்டகணைகளும்
வெடிபட நீக்கினனே ராமன்அம்பாலே
பொடிபொடி ஆக்கினனே பிறகேவந்த
மேற்படைகளும்புரண்டு-நாற்படைகளும்திரண்டு
வெகுவாகக் குதித்தாரே எல்லாரும்ஒரு
முகமாக மிதித்தாரே மிதித்தவர்கள்
வெட்டும்வெட்டும்என்பார்சிலர்-கட்டும்கட்டும்என்பார்சிலர்
மெல்லும்என்பார்சிலபேர் நரன்இவனை
கொல்லும்என்பார்சிலபேர் அரக்கன்விட்ட
வேல்ஒடிந்துகால்ஒடிந்து-கோல்ஒடிந்துதிரப்பெரு
வெள்ளத்தில் மிதிப்பாரும் ஆனைவிழுந்த
பள்ளத்தில் பதைப்பாரும் கதிகலங்கி
மெத்தஉள்ளம்கெடநொந்து-ரத்தவெள்ளந்தனில்வந்து
விழுந்தார்அநேகம்அரக்கர் ரத்தவெறியால்
அழிந்தார்அனேகம்அரக்கர் தூஷணன்கண்டு
விளைத்தானேசெருவில்லை-வளைத்தானேகணைசெல்ல
விடுத்தானே மழைபோலேராகவன்அதைத்
தடுத்தானே கணையாலே அதின்பிறகு
விடுகணைபொடிபட-ஒருகணைசடுதியில்
மெய்த்தமுனையோடுதோட்டானே சாமிக்குநெற்றி
மத்தியிலேபட விட்டானே ரகுநாயகன்
மீறிஅவன்ஏறிவரு-தேரதிலேசாரதியை
வெட்டினனே கணையையெய்து குதிரைகளைக்
கொட்டினனே தலைகள்கொய்து கொய்ததல்லாமல்

வில்லும்துணிந்திட அவன்-சொல்லும்துணிந்திடத்தேரை
வேறுவேறாநொறுக்கினனே அவன்கைகாலைக்
கூறுகூறா நறுக்கினனே நறுக்கியபின்
மின்னும்அவன்எதிராகப்-பின்னும்ஒருகணைபோக
விரலொத்தூத் தொடுத்தானே தூஷணனும்
சிரம்அற்று படுத்தானே அதனைக்கண்டு
விண்ணுலகில்அனைவரும்-மண்ணுலகில்முனிவரும்
வெருள்துன்பம்பிரிந்தாரே வாழ்த்தொடுபுஷ்ப
வருஷங்கள் சொரிந்தாரே அரக்கர்பட்ட
வெற்றிகல்லோர்தொடுக்க - ரத்தவெள்ளாறெடுக்க
விசையமங்களம்பாடத் - திசைஎங்கும்கொண்டாட (அடி)

ரு.. தத்திவரும்பரிகளும்-சுற்றிவரும்கரிகளும்
தாவிவரும்பெருந்தேரும்-சேவகம்பேசியபேரும்
தளகர்த்தவீரரும்-வளமிக்கசூரரும்
தண்டனைஎதிர்வரும்-மண்டியசேனதிபரும்
சரிசரிஆகவந்து-போரிலேமிகமுனைந்து
தம்பிதூஷணன்பட்ட-புண்பாடநமுட்ட
தணல்போல நிவந்தானே சாதிலிங்கம்போல்
இணைக்கண்கள் செவந்தானே செவந்தபின்பு
தாக்கியபுலியையொத்து-மூக்கிலேவிரலைவைத்துத்
தாழ்ச்சிஇதுஎன நொந்தானே நொந்துபோல்லாத
ராட்சதகரனும் வந்தானே வந்துசுற்றிலும்
சதுரங்கதளத்தோடே ரணரங்கம்அதைத்தேடி.
சாமிராகவனைக் கண்டான் மனிதன்இவன
ஆமெனமனதிற் கொண்டான் சேனைகள்விட்ட
சக்கரம்இருப்புலக்கை கப்பணம்முசுண்டிபிண்டி
சாஸ்திரவே லாயுதங்கள் குவித்துவிடும்
அஸ்திரம்சூ லாயுதங்கள் பொடிபொடியாய்
தூளிபட்டும்முறிபட்டும் விலகச்சிலைவளைத்துச்
சாய்த்தானே சரதாரை ரகுநாயகன்
தேய்த்தானே வெகுபேரை வரும்அரக்கர்
தலையைச்சிலையைரத்தின-முடியைக்கொடியைவெட்டிச்
சரித்தானே சிலகணையால் அடிவயிற்றை
எரித்தானே சிலகணையால் இரைக்குவந்த
சாகினியும்டாகினியும்-காளிகளும்கூளிகளும்
சதர்கூடிப் பார்த்தாடுமே கவந்தம்அதுக்
கெதிர்ஆக கூத்தாடுமே படைகள்எல்லாம
சரியானதுகண்டு-கரன்ஆனவன்முண்டு
சாஹசங்கள் செய்தானே ஒருநொடியில்

ஆயிரம் அம்பெய்தானே எய்தநுகண்டு
சற்றுநேரத்தில்அய்யன்-அந்தனைக்கத்தனைவிட்டு
தவிடாக ஊதினனே பின்னையும்சில
அவன்மேலே மோதினனே அரக்கன்அங்கே

சாதித்தகணையாலே-ஆதித்தகுலநாதன
தனுவையும் ஒடித்தானே தவமுனிவன்
மனதையும் மடித்தானே ராமனுக்குத்

தடத்தில்பரசுராமன் இடத்திற்பறித்தவில்லைத்
ததியினில் எடுத்தானே வருணன் அங்கே
உதவியாக் கொடுத்தானே கொடுக்கஒரு

சரத்தாலேரகுவீரன்-வரத்தாரைபயமெல்லாம்
தணித்தானே உளந்தனிலே கரன்சிரத்தைத்
துணித்தானே களந்தனிலே இப்படிஅந்த

சனஸ்தானவருக்கத்தில்-மூனந்தாரைமுகுர்த்தத்தில்
தான்ஒருவனும்ஆக-வானவர்துயர்போக (அடித்தானே)

சூர்ப்பநகை ராவணனோடே முறையிடல்.


விருத்தம்.

முடிவரியகரன்படையை முடித்தராமன்
முன்போல்ச்சாலையிற்போய்இருந்தான்இப்பால்
இடிகுரற்சூர்ப்பநகிசென்றுள் இலங்கைதன்னில்
ஈஎறும்பும்அழுந்திடாரவணன்முன்விழுந்தாள்
அடிவரலாறுகள்என்னஉன்னை இந்த
அவமானம்செய்ததென்ன அவர்ஆர்என்ன
கெடிஅரக்கன்குலமுழுதும்வேரைவாங்கிக்
கெடுக்கின்றுள் அரக்கிசொல்லத்தொடுக்கின்றுளே.

சூ-திபதை-தோடிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. கண்டேன்கண்டேன்அடா அண்ணேன்
காட்டுகிறேன்பஞ்ச வடியிலே-யாக்கும்



சூர்ப்பநகை ராவணனேடுமுறையிடல்.

அண்டாஙரர் இருக்கிறர் அவர்க்
கவரேஙிகர் இந்தப் படியிலே

௨. தருமசீலராம் அயோத்தி
தசரதமகராசன் பாலராம்-அவர்
விருதுகட்டிஅரக்கர் தங்களே
வேர்அறுக்கவந்த காலராம்

௩. நீதம்தெரிந்தவராம் அவர்கைக்கு
நேத்தியாஇருவரில் அமைந்ததாம்-அதில்
கோதண்டம்அரக்கர் சீவனேக்
குடிக்கவேணுமென்று சமைந்ததாம்

௪. ராமலட்சுமணர்வடிவெலாம்என்
ஞலேசொல்லிமுடி போகுமோ-அந்த
காமராசன்வடிவும்அவர்
காலில்தூளுக்கிணே ஆகுமோ

௫. கிட்டிப்போய்ராமனே என்சுகக்
கேளியிலேமையல் கொண்டேனே-அங்கே
திஷ்டிப்பிரியமான பெண்கள்
சிகாமணிஒருத்தியைக் கண்டேனே

௬. சுந்தரமும்அவள்சிகப்பும்
தொட்டிட்டுக்கொள்ளலாம் அண்ணுவே-நான்
இந்தவயதினிலே என்கண்ணுல்
எங்கும்கண்டதில்லே அண்ணுவே

௭. மன்னுஉனனுல்நான்அவளே
வாய்க்கடங்காப்பிடியாய்ப் பிடித்தேனே-ஒரு
சின்னமனிதன்கையால் என்தன்
செவியும்மூக்கும்போக்கடித் தேனே

௮. அந்தோஎன்னுலே பதினு
லாயிரம்தேர்க்காறரும் மூண்டாரே-எதிர்
வந்தார்கரன்முதலானோர் அந்த
மனிதனுலேகால் மாண்டாரே

௯. செப்புச்சிலேயும்அல்ல அந்தப்பெண்
செம்பொற்ச்சிலேவார்த்தாப்போல் இருக்குதே-நான்

ஒப்பெங்கும்காணேன் அவளே
உனக்காம்என்மனம் உருக்குதே

ம. தாவிபிடித்தேனேஎனக்குமெள்ளத்
தப்பிவிட்டால்வந் தெடுப்பாயே-அந்த
தேவிஇங்கேவந்தால் உன்னிட
சீவனையாகிலும் கொடுப்பாயே

சூர்ப்புனகிராவணன்முன் சீதையைவர்ணித்தல்.

விருத்தம்.

கன்னம்அறுந்ததுனக்கென்றும் கானும்போனனென்றும்இங்
பன்னலாமோவிடுவிடுபோர்த்தேனென்றபெண்ணவளேச்[கே
சொன்னஉடனேஉயிர்கிடந்து துடிக்குதடியேசூர்ப்பனகி
இனனம்ஒருக்கால்சொல்என்றான் எடுததாள்சொல்லத்தொடு
[த்தாளே

அ-தரு-சுருட்டிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

காணவேணும்லட்சம்கண்ங்கள்-சிதாதேவிதன்-காலுக்குநிகரே
[ரபெண்கள்

அநுபல்லவி.

சேனுலகெங்கும்வாட்டித்-திசைஎங்கும்கீர்த்திநாட்டித்
திரியும்ராவணாஉந்தன்-இருபதுகண்போதுமோ (காண)

சரணங்கள்.

க. குவளைவிழிகளோ பாணம் அவள்தன்வார்த்தை
கொண்டால்அதுவே கல்யாணம்
நவரத்தினதங்கத்தோடு நடையிலே அன்னப்பேடு
அவனிமேல்இல்லைஈடு அவளுக்கவளோசோடு (காண)

உ. தங்கக்கொடிபோல் இடையும் சிவிவகிர்ந்து
சாய்ந்தபின்னலின் சடையும்
இங்கிதமிருதுவாக்கியம் இவளேதேவதா யோக்கியம்
மங்கையர்க்குள்ளேசிலாக்கியம்வச்சால்உன்னதேபாக்கியம்(கா)

௩. தவமுனிஒருத்தன்பெண்டு அதனுக்கேற்ற
தம்பிஒருவன அங்குண்டு
அவளேநல் ஐஸ்வரியம் அவளேநல்லகாம்பீரியம்
அவள்வந்தாலல்லோ வீரியம் அப்போமுடியுமுன்காரியம்(கா

மாரீசன் இராவணனை இடித்தல்.

விருத்தம்.

கடுத்ததங்கைஇது சொல்லச்சீதைமேலே
கருத்தாடக்காமப்பேய் தலைசுற்றாட
உடுப்பதுவும்உண்பதுவும் மறந்தான்சிந்தை
உலைமெழுகானான் அரக்கன்அம்மானேநீ
அடுத்தெனக்குராமன் மனைவியைத்தாஎன்றான்
அதுகேட்டஉடனே நாராசம்காய்ச்சி
நடுச்செவியில்வைத்தாற்போலேமாரீசன்
நடிக்கின்றான்ராவணனேதடுக்கின்றானே (௰௬)

௬-தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திநினைந்தாயடா-அடராவணா-என்னபுத்திநினைந்தா
]யடா

அநுபல்லவி.

பின்னொருத்திஅல்லராமன் மன்னவன்தேவியைச் சொல்ல
அன்னவன் அம்பிங்கேசெல்லஉன்இனத்தைஎல்லாங் கொல்ல

சரணங்கள்.

௧. புள்ளிப்பொறி வரலாலே-மூங்கில்எரிந்து
வெள்ளிச்சாம்பலானாற் போலே
கொள்ளியாய்வந்தாள்உன் தங்கைஅள்ளிராமன்கணை இங்கே
தள்ளிவிடும்முன்னேதலை துள்ளிவிடுமேநமக்கு (என்

௨. இந்தமதிபண்ணால் ஆமோ-பாதரத்தை
சிந்தையிலுமெண்ணல் ஆமோ
முந்தொருத்திஆசையிட்டான் சந்திரனும்பழிபட்டான்
வந்தகலிகையைத்தொட்டானிந்திரனும்மகிமைகெட்டான் (எ)

௩. உத்தமிசீதையை உன்னாதே-உன்னினால்அவன்
சற்றிலேவிடுவான் என்னாதே

புத்திரர் தலையும்சேர்ந்த மத்திரர் தலையும்ராம
பத்திரர் அம்புகொய்யும்கொய்யும்சித்திரைவதைசெய்யும்செய்
[யும்

ச. துப்புள்ளவிராதன் இறந்தான்-ராமன் அம்பாலே
அப்படிக்கரனும் பறந்தான்
இப்படிவாராதேநாடித் தப்புவதல்லவோமோடி
செப்பினேன்உள்ளதுதேடிக்கைப்பொருட்குமஎன்கண்ணடி()

ரு. வேலையில்லாவெலை என்னினுய் சின்னஞ்சிறிய
பாலகர்யோசனை பண்ணினுய்
கோலம்ஆனசீதையென்று காலம் ஆய் அடங்கிநின்று
காலன்வந்ததைத்தோராமல் மூலகாரணமபாராமல்(என்)

சா. வேதனையும்சூதும்வாதும் சொன்னுயே-இந்தப்
பேதைமதிபோதும் போதும்
சீதைஎன்னம்என்னத்தானே வாதைஉண்டடாசீமானே
மாதுலன்உனக்குநானே ஏது அறிந்ததுசொன்னேனே (எ)


எ. பைந்தொடிசீதைபேர் சொல்லாதே-சொல்லாதே அது
எந்தவிதத்திலும் பொல்லாதே
வந்திடுமேராமபாணம் எந்தன்உரையேபிரமாணம்
என்தலைக்கும்பாயும்பொய்யோ உன்தலைக்கும்பாயும்ஐயோ(எ)

அ. முன்னம்விசுவாமித்திர ஞலே-யாகசாலை
தன்னுள்வந்தூநமன் போலே
அன்னையுங்கொன்றான்சுவாகுதன்னையும்கொன்றான் அனை
உன்னஅதிர்எடுக்குதே இன்னம்நடுநடுக்குதே(என்)

லட்சுமணர் பொன்மானைப்பொய்மான்என்றல்.

விருத்தம்.

இசையமாரீசன் இந்தவார்த்தைசொன்னுன்
ராவணனும்சீறினன்பொன்மானுய்ப்போய்
அசையாமலேசீதை விழிக்கெதிர்நின்றான்
அவளும்ராமனைப்பிடித்து தருவாய்என்றாள்
பசையினுல்லட்சுமணன் பொய்மான்என்றான
பாராமல்நான் இதனைப் பிடிப்பேன்என்று
விசையராகவன்நடந்தான்வாயைவாயை
மெல்லுவான்தம்பியின்னும்சொல்லுவானே



பொன்மான்வடிவாய்வந்தமாரீசனை ஸ்ரீராமன்கொல்லுகிறதும் ஸ்ரீராம
னைதேடப்போக லட்சுமணனை சீதைஅனுப்புகிறதும்

எ-திபதை. தன்னியாசிராகம்-அடதாளம்சாப்பு.

கண்ணிகள்.

க. வர்னமானும்அல்லசொர்ன்னமானும்அல்ல
மர்மமான்என் சாமி
பின்னைத்தெரியும்இது நம்மைமருட்டவந்த
பெரியகால நேமி

உ. பார்த்தமான்ஈதல்லா இந்தமான்மடிப்பு
பண்ணவந்த மாளே
கூத்துப்பார்க்கப்போனஇடத்தில்ப்பேய்பிடித்தால்ப்போல்
குலையுதென் மனம் தானே

ங. ஊழியம்செய்கிறநான் இந்தமான்சந்தேகமான்என்
றுள்ளது சொன்னேன் அய்யனே
ஏழைசொல்அம்பலம் ஏறுமோகட்டளை
இட்டபடியே செய்வேனே

ச. மனோமாயம்இது தானோஅம்மைகைக்கு
வந்தால்ச்சொர்ன்ன மழையோ
ஏனோபிடித்துத்தா என்றுசொல்லுகிறாளே
என்னகாலப் பிழையோ

ரு. அந்தஅன்னைசொல்லால் அய்யன்தசரதனும்
அலங்கோலம் ஆனானே
இந்தஅன்னைசொல்லால் என்னமோஅண்ணனுக்கு
ஈதென்று தெரியேனே

சு. அப்போதுவேள்வியில்வந்தமாரீசன்என்றே
அயிர்க்கிறேன் நீஆராய்
தப்பிதம்சொல்லறியேன் அப்புறம்சித்தத்துக்குச்
சரிபோனபடி பாராய்

லட்சுமணர் சீதாதேவியைத்தேற்றல்.

விருத்தம்.

உறும்தருமம்தம்பி இந்தவண்ணம்சொன்னான்
உத்தபராமனும்அந்தமான்பின்யேகி
குறுங்கணையால்எய்தான்மாரீசன்விழ்போதில்
கூக்குரல்இட்டான் அதனைச்சீதைகேட்டாள்
இரும்கணவன்குரல்இதைப்போய்அறிநீஎன்றாள்
என்னஅன்னே அன்னையென்சொன்னீர் இந்த
வெறுங்கவலைஏன்எனலட்சுமணன்துன்பம்
விடச்சொல்வான்சீதையைத்தேறிடச்சொல்வானே

௰-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆர்என் றுராகவனைஎண்ணினீ ரம்மா-இத்தை
அறிந்துசொன்னீரோஅறியீரோநீ ரம்மா

அநுபல்லவி.

ஏராவார்த்தையிதுவசையோடொக்குமோ போரில்
எண்டிசைஅதிபரும் அண்டினபடைவுடன்
மண்டினுலும்என்அண்ணன் சுண்டுவிரல்போதாதோ

சரணங்கள்.

க. விந்தைஆகவெண்ணெய்க்குப் பல்லுமுளைத்தால்போலே
மிஞ்சிராட்சதர்அண்ணன் தன்னைவளைத்தால்
வந்தாமன்அதுகண் டேங்கிஇளைத்தால்- வேறே
மந்திரம்என்னஒரு தந்திரம்என்னவானில்
இந்திரன்கதிப்பானே சந்திரன்உதிப்பானே(ஆர்)

உ. ஆதிருத்திரன்வில்ஒருவர் ஒடிக்கப்போமோ-அத்தை
அறிந்தும்பெண்புத்தியால் எம்சித்தங்நோமோ
வேதையர்என்னையும் சோதிக்கல்ஆமோ - நல்ல
வேதண்டம்என்னபெருங் கோதண்டம்தன்னைஅண்ணன்
காதணடம்வளைக்குமுன் மூதண்டம்பிளக்குமே(ஆ)

ங. பண்ணினமாயையாலே அந்தமாரீசன் - மானும்
பருவத்தில்அங்கேஓலம் இட்டானேநீசன்
எண்ணத்துன்பம் ஏதுக்கிருக்கிறேன்தசரதன்-அவனை
எண்ணினல்ஒருமேகவண்ணன் உடனேநெற்றிக்
கண்ணன்உடனேகூட்டி அண்ணனையும்எண்ணமல்(ஆ)

சீதைக்கும்ராவணசந்நியாசிக்கும்சம்வாதம்.

விருத்தம்.


மெள்ளவேஇளையோனிந்தவிதம்சொல்லிநடந்தான்பின்னே
தள்ளம்ஆம்தவசிஆகிக்கடுகி ராவணன்தான்வந்தான்
வள்ளலேவாரும்என்றுள் வஞ்சனைஅறியாள்சீதை
உள்ளமாமுனிவர்என்றே உரைக்குரைசொல்லுவாளே

ங-திபதை-ஆரபிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

க. வாரும்என்றஉடனே ராவணசந்நியாசி
வந்துகண்டானேஅந்த நாளே
ஆரோநீஎன்றுவஞ்சகன்கேள்க்கவே
அன்னைஎதிரேசொல்லு வாளே

உ. தசரதன்பாலன் தம்பியுடனேபெற்
த்தாய்சொல்லவந்தான்இந்தப் பூமி
இசையும்சானகிஎன்பேர் காகுத்தன்மனைவிநான்
இங்கேஇருக்கிறேன்என் சாமி



சீதையிடம் ராவணன் சந்நியாசியாகவந்து பிச்சைகேள்க்கிறது.

௩. இந்தவனத்தில்மெத்த பழுத்தப்ழம்போலவே
எங்கேவந்தீர்தேவர் ஆயே
வந்ததுசொல்லுகிறேன் சந்தோஷம்ஆகச்சற்றே
மனதுவைத்துக்கேளாய் நீயே

௪. பேரால்பெரியவன் ஆயிரம்வேதம்வந்தோன்
பிரமதேவனுக்குகொட் பேரன்
ஆராலும்அசையாத கயிலாசமலைதன்னை
அசைத்துப்பிடிங்கினஎம் பிரன்

௫. அமைந்ததேவரையும் அஷ்டதிக்குப்பாலரையும்
ஆக்கினையால்அந்தமகா ராசன்
சுமந்தகலையும்சும்மாடுமாத்திரிய
துரைத்தனம்செய்யும்இலங் கேசன்

௬. நலங்களினலே அந்த இலங்கைக்குச்சொற்கம்ஒரு
நகரம்போலகாணும் மாதே
இலங்கையைவிடலாமோ என்னகாலமோநான்
இங்கேவந்தேனே இப் போதே

௭. சினமித்தமுனிவாளும் மிகுந்தாளும்அந்தச்
சிவன்கையில்வாங்கினவன் தானே
மனதுக்கினியப்பெண்கள் மாணிக்கம்ஒன்றுதேடி
வருந்துகிறேன்திவ்விய மானே

௮. வீராதிவீரன் அஷ்டதிக்கெசதந்தங்களை
வெடுக்கென்றொடித்தவச்சிர ஆமள்
ஓரான்காணியா மூன்றுலோகமும்காக்கும்
ஒருத்தன்அரக்கன் யோகன்

௯. மூன்றுலோகமும்காக்கும் அரக்கனென்றீர்அவன்
மூவேழுலகங்களும் நாளை
கீண்டெறியவந்தானே ரகுவீரனென்றுசொல்லக்
கேளீரோஎங்கள்பெரு மானை

௰ பெருமாள்பெருமாள்என்ற மனிதன்வந்தரக்கரை
பிடிங்கியெறிவான்என்றாய் பெண்ணே
ஒருமுசல்குட்டிவந்து சிங்கம்தன்னை அடித்த
உவமைபோல்ஆச்சுதுகாணும் கண்ணே

கக உவமையென்பிர்காணும் பதினாலாயிரவரும்
உருண்டாரோமனிதனால் அய்யா
இவர்ராவணன்போல்இருபதுதோளர்அல்லாமையால்
இருந்தார்மனிதன்கொலை செய்ய

கஉ ஆயிரந்தோள் இருந்தும் கார்த்தவீரியன்தன்னை
அடித்தான்மனிதன் அல்லோ முன்னே
தாய்இதுசொன்னவுடன்சந்நியாசிவேஷம்விட்டுச்
சண்டாளன்எழுந்தானே பின்னே

கங. ஈமுகன்ஆம் அரக்கன் ஆகாதவர்த்தைசொல்லச்
செவியில்கைவைத்தந்த தேவி
ஓமபிண்டத்தைநாய் இச்சப்பட்டதுபோல்
உரைத்தாளென்னடா அடா பாவி

கச நின்றநிலைக்கேதப்பிஓடி அப்புறம்போடா
ரகுவீரனபிழைக்கவொட்டானே
என்றஉடனேசீதையைநிலத்தோடேஆக்கிவஞ்சகன்
எடுத்துத்தேரினில்இட்டானே

சடாயுராவணனுக்குப் புத்திசொல்லல்.

விருத்தம்.

தேரினில்இப்படிசீதைதன்னைக் கொண்டுபோய்அளவில்சீறிவந்து
போரினில்ராவணனபத்துமுடியுந்தெறிக்கபுடைப்பேன்கண்டாய்
பேரில்சீதையைவிட்டால்பிழைப்பாயில்லாவிட்டால்பிழையாய்என்
றுவீரியமாய்சடாயுவந்துகிளம்பினான்புத்திசிலவிளம்பினானே

கக-தரு அசாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விடுவிடடாசீதையை விடுவிடடா-ராவணா
விடுவிடடாசும்மா விடுவிடடா

அநுபல்லவி.

சுடுநெருப்பிவளாலே அடியோடேவேகாதே
கருப்பத்தைத்தெரியாமல் நரகத்தில்மூழ்காதே
அடடாசொன்னேன்சொன்னே நடுவில்சாகாதே
ஆசையினாலேகுல நாசம்ஆய் போகாதே (வி)

சரணங்கள்.

க. என்செய்தாய் இவளை நஞ்சம் என்றெண்ணமல்
ஏழைஎளிமையாக் குறியாதே
என்தாய் இவள் மனம் நொந்தால் இருப்பாயோ
என்தன் வார்த்தைகேள் முறியாதே
கொஞ்ச அரக்கர்மான் குட்டியென்றும் ராமன்
குட்டிசிங்கம் என்றும் அறியாதே
குதிக்கிருய் உங்களை வதைக்கவந்தானே அவன்
கொல்லவரும்யானை முன்னே கல்லுகள் விட்டெறியாதே ()


உ. கர்த்தர் மூவருக்கும் கர்த்தன் ஆகும் இந்தக்
காகுத்தன் என்றுகொண் டாடுவேன்
கையாலே நீ எய்வதெல்லாம் சிறைக்
காற்றிற் பஞ்சுபஞ்சாய் சாடுவேன்
பத்தினிதனை இங்கே வைத்துப்போடா அவன்
பக்கத்தில்தானே கொண் டோடுவேன்
பாரடா இல்லாவிட்டால் கூர் ஆணகத்தால் உன்
பத்துத்தலைகளும் கிள்ளி பத்திக்கிலும் போடுவேன்-வி

ங- கைக்குள்ளே மடக்கி இக்கணமே நான் ஒரு
மிக்கஉறுஞ்சுவேன் உன் தலைமூளை
கருங்காக்கைகளுக்கும் நமனுக்கும் உன்னை நல்ல
விருந்தாக்குவேன் பாரடா இவ்வேளை
முக்கணன்வரம்பெற்றும் அக்ரமம் செய்தாலது.
தக்குமோ கேடல்ல வோநாளை
முனைகெட்டுயோவாய் சீதை தனைவிட்டுப் போடா தேவர்
முன்கொடுத்தவரம் எல்லாம் ஏன் கெடுக்கிருப் முட்டாளா-வி

சடாயுவுக்கும் ராவணனுக்கும் உயுத்தம்.

விருத்தம்.

[மல்
பொருத்தான் இந்தபுத்தி சொல்லபொல்லா அரக்கன் கொள்ளர
வெறுத்தான் தர்கப்புறம் தேரைவிடும்போதினிலே நெடுந்தூரம்
குறித்தேபோன குமாரர்வந்துகூடுமளவுமிவனை இங்கே [னே
மறிப்பேனென்றுசடாயுவும்வாய்மடித்தான் சண்டைபிடித்தானே



ராவணன் சீதையை தேரில்ஏற்றிக் கொண்டுபோகும்போது
சடாயுவுகண்டுதடுத்துயுத்தம்செய்கிறது

கஉ-தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி,

கொத்திக்கொத்தி அடித்தானே-இடித்தானேசடாயுராஜன்
கொத்திக்கொத்தி அடித்தானே

அநுபல்லவி.

பத்துச்சிரத்திலும் தாளிலும்தோளிலும்
வெற்றிக்கரத்திலும் மாரிலும்தேரிலும்
தத்தித்தத்திப்பாங் தெந்திளத்திகையால்
குத்திக்குத்திஎங்கும் சுற்றிச்சுற்றிமூக்கால் (கொ)

சரணங்கள்.

க. ஆலகாலம்போலேசீறிஎதிர்த்தேறிஉடம்பெங்குஞ்சிறி
கோலாகலத்தேரைமறித்துஅச்சைமுறித்துபத்துமுடியும்பறித் [து
காலாலும்கையாலும் மேலேகிள்ளிகிள்ளி
கண்டகன்நாலேந்து குண்டலமும்தள்ளி
மேல்வரும்அம்பெல்லாம் வாலால்விழத்தட்டி
வீணைக்கொடியையும் தூணியையும்வெட்டி -கொ

உ. ஈரேழுகணை அவன்தொடுத்துவிடத்தடுத்துகவசத்தையும்
நேராகப்பின்நூற்றம்பைபூட்டிவிடமாட்டிசிறகால்விழக்காட்டி
போராடகண்டொரு சூலம்அவன்போட
புதையாமலேஅது சிதறிஅப்பால்ஓட
கூர்ஆனமூக்காலே பாகனைமடித்து
கொல்லுவேன்என்றவன் வில்லையும்ஒடித்து - கொ

ங.மோதும்அவன்தெண்டால்சாய்ந்துகளைதீர்ந்துகுதிரைகளைப்
பாதகனைவிழத்தாக்கிகளைஆக்கிமணிரதத்தைபோக்கி[பாய்ந்து
சூதிவன்செய்கிறான் என்றறியப்பட்டும்
தோழன்மருமகன் என்கிறதைத்தொட்டு
காதகராவணன் மோதிஅறவெட்டும்
கத்தியினால்சிற கற்றுவிழும்மட்டும் - கொ

சடாயுவிழவேசீதைபுலம்பல்.

விருத்தம்.

அடித்தநம்சடாயுராஜன் அவனிமேல்வீழ்ந்தாள்சீதை
கொடிக்கொருகொழுகொம்பில்லாகொள்கைபோலானாள் இந்த
முடித்தலைபத்துள்ளானை முடிப்பதார்எனவே அச்சம்
பிடித்தநல்வடித்தகண்ணீர்பெருகினாள்உருகினாளே

க-தரு-ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னசெய்வேன்சீதை நான்இனிமேல்
என்னசெய்வேன்தெய்வமே

அநுபல்லவி.

என்னசெய்வேன்மான்பின்போன இருவீரரும்வாரீரோ
வஞ்சகராவணன்செய் வகைமோசம்பாரீரோ—என்

சரணங்கள்

க. எய்தும்வீட்டினில்-இருளென்றுசாமிசொல்ல
இருந்தேனே இல்லானேனே
மையலாளென்னைப்-பிரிந்திட்சனிபோலே
வந்ததே பாழ்மானே
கையினால்பிடியும்-என்றதல்லாமல்யான்
கண்டேனே பலன்தானே
ஐயய்யோஉன்-னாமல்தின்னாமல்ஊர்
அம்பலம் ஆனேனே—என்

உ. ஈனராவணன்-கொல்லிக்கச்சடாயுமன்னன்
இறந்ததுஎன்ன தொல்லையே
ஆனபோதிவன்-குடிக்கென்னகாலமோ
அறிவேனே சாமியில்லையே
வனமேவனமே-அவருக்குச்சொல்ல
மாட்டீரோ என்னசொல்லையே
என்னென்றுகேட்-பாரில்லையேஎன்னை
எடுத்துமி ழிப்பார்இல்லையே—என்

௩. பூட்டும்வில்இளை-யோனைஇடும்புசொல்லிப்
போபோ என்றேனே
தாஷ்டகராவண-சந்நியாசிசெய்த
சதிக்குள்ளாய் நின்றேனே
வீட்டிலேபுகுந்-தேன்அத்தமாமனை
விதிபோலே தின்றேனே
காட்டிலேபுகுந்-தேன்இத்தமாமனைக்
கண்முன்னே கொன்றேனே—என்

ஸ்ரீராமர்சீதைக்காகத் தம்பியோடிரங்கல்.

விருத்தம்.

இஷ்டம்உள்ளசடாயுவுக்கிவ்வாறுசிதை
இரங்கஅவருடன்அரக்கன்இலங்கைசேர்ந்தான்
மொட்டவிரும்அசோகவனச்சிறையில்வைத்தான்
முன்போனதம்பிதன்னைஅண்ணன்கண்டான்
பட்டபருவங்கள்எல்லாம் அறிந்தான்வந்து
பன்னகசாலையையும்சீதையையும்காணான்
வட்டமலர்முகம்வாடித்தேடித்தேடி
மயங்கினான்ஸ்ரீராமன்கலங்கினானே. (உ௩.)



இராமர் சீதையைகாணாமையால் வியாகூல
த்துடன்லட்சுமணரைகேட்கிறது

சரு. திபதை-ஆகிரிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. உற்றசிதையைப்பிரிந்தேன் உனதுபுத்தியைஎறிந்தேன்
தத்துகள்எல்லாம்அறிந்தேன் தம்பி லக்ஷ்மணா

௨ கட்டிவைத்தபுதையலைக் கல்லிஎடுத்தவன்போலேத்
தட்டிக்கொண்டுபோனான்அய்யோ தம்பீ லக்ஷ்மணா

௩. நன்மைசெய்யவந்தோம்இதுகன்மம்ஆய்விளைந்தபோது
தர்மம்என்னதானம்என்ன தம்பீ லக்ஷ்மணா

௪. தேரோடேபாரோடேதூக்கிதீண்டாமத்தெற்குவழியே
ஆரோகொண்டுபோறான்இதை அறிவாய் லக்ஷ்மணா

௫. நலம்உள்ளோர்கவலைதீர்க்க நாம்இந்தகவலைஏற்கத்
தலைஎழுத்துவந்ததல்லோ தம்பீ லக்ஷ்மணா

௬ உண்டானால்இப்போதேநேரேஓட்டமாய்ஓடினால்தேவை
கண்டாலும்காணலாம்வாஎன் கண்ணே லக்ஷ்மணா

ஸ்ரீராமர் சடாயுவின்மேலேவிழுந்துஇரங்கல்.

விருத்தம்.

இவர்இப்படியோசனைபண்ணிஇருயோசனைதூரம்போனார்
எதிரேவில்ஒன்றதுகண்டார்அற்றுக்கிடந்ததூணிகண்டார்
கவசம்கிடந்ததொன்றுகண்டார்கண்டார் சூலங்கொடிகண்டார்
கடுந்தேரோடுசாரதிமுடியைக்கண்டார்இந்தப்படிதோற்ற
அவசம்பிரக்காவணனை அடித்துதரத்தும்பிடங்கண்டார்
அவன் ஆயுதங்கள்ஒடிந்ததெல்லாம்அங்கேகண்டார்பிறகிவற்றி
விபரங்கண்டார்ராமன்வந்துவீழ்ந்தசடாயுகிடக்ககண்டார் [ன்
வெள்ளிமலைமேல்கருமலைபோல்விரைந்தான்வீழ்ந்துகரைந்தா
[னே

௰௪-தரு-புன்னாகவாராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதிகாணவோ வந்தேன் - சடாயுஅய்யா
இதுக்கோநான்பிள்ளைபிறந்தேன்

அநுபல்லவி.

தந்தைதகப்பனைக்கொல்லச் சமைந்தேன் அதென்னசொல்ல
இந்தநாள்உனையும்நல்ல எமன்போலேகொன்றேன்அல்லோ-இ

சரணங்கள்.

க. வண்ணம்ஆம் சிதையைநீக்கினேன்-நானும்ஒருசே
வகன்போல வில்லும்தூக்கினேன்-ஐயா இப்போதெ
கண்முன்னே உன்னையும்போக்கினேன்-மரமீதேறிக் [ன்
கைவிட்டோன்போல்என்னை ஆக்கினேனை-நான்என்செய்வே [ன்
எண்ணினஎண்ணம்எல்லாம்போய்இளக்காரமாய்த்தளர்ந்தேன்
பெண்ணுமல்லஆணுமல்லாபெருமரம்போல் வளர்ந்தேன்-இங்

உ. வையகந்தன்னையும் விடுத்தேன்-வனத்தில்வந்து
மலைபோலேஉன்னை அடுத்தேன்-தம்பிசொன்னத்தை
அய்யயோகேளாமல்த் தடுத்தேன்-என்புத்திதன்னை
அநியாயத்திலே மடுத்தேன்-கபடம்செய்த [தேன்
பொய்அரக்கனைக்கொல்லாமல்புறம்போய்அல்லோகொடுத்
கையில்ஆகாதவன்போல்க்கண்டோர்பழிக்கஇட்டம்பெடுத்தேன்

ந. என்உயிரைப் பொக்கடிப்பேன்-முனிவர்க்குநான்
இசைந்ததெப்படி முடிப்பேன்-அண்டங்கள்எல்லாம்
சின்னபின்னம் ஆகஇடிப்பேன்-இதுபார்த்திருந்த
தேவரையும் ஆவிகுடிப்பேன்-எந்தனுடனே
முன்னாள்நீசொன்னவீரம்முடித்தாய் அல்லோஇந்நேரம்
என்னால்உண்டோஉபகாரம் ஏதுக்கெடுத்தேன்சரீரம்-இங்

ஸ்ரீராமர் கோபத்தைச்சடாயு ஆற்றுதல்.

விருத்தம்.

மதிமுகராகவன் இரங்கத்தம்பிவந்த
வரலாறெல்லாஞ்சொல்ல மண்ணுமவிண்ணும்
கொதிஎடுக்கச்சீதைதன்னை எடுத்தான்உன்னைக்
கொலைசெய்தான் அரக்கன்அவன்குலத்துவாசி
அதுகிடக்கஉன்கொலை பார்த்திருந்ததேவர்
அனைவரையும்மடிப்பேன் என்றுராமன்சீற
இதுஉனக்குமுறைமை அல்லமகனேஎன்ன
ஏற்றுவான்சடாயுமன்னன் ஆற்றுவானே. (உரு)

௩௫. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமா நீ இந்தகோபம் செய்யல் ஆமா
இருந்தல்லோ படுக்கவேணும் ராமா

அநுபல்லவி.

பூமியுடன்சீதையை ராவணன்கொண்டுமீண்டான்
போகையில்ச்சண்டைபோட போச்சுதென்சிறைரண்டாய்
ஆம் அவனைக்கொல்லாமல் நாம்விடுவோமோகண்டாய்
அதுக்கு முன்கிலேசத்தாலே பதட்டம்ஆகஒருக்காலே (ரா)

சரணங்கள்.

௧. இன்பம்வருவதும் துன்பம்வருவதும்
எடுத்தஉடற்குநில வந்தானே
சம்புவானசிவன் தானும்தலைஓட்டைத்
தனகையில்ஏந்திக்கொண் டிரந்தானே

அம்புவிபடைத்தபிரம்ம தேவனும்
அறுப்புண்டானேஒரு சிரந்தானே
நம்பும்சந்திரனும் சூரியனும்பாம்பால
நடுங்கிறார் இன்னம்நிரந் தரந்தானே

உன்பிழையும்இந்தவகை ஒத்ததல்லஆகையாலே
அம்பினால்ராவணன்தலை அறுப்பாய்பனங்குலைபோலே
தம்பிள்ளைபெண்டுகளோடே தாழ்ந்துநின்றுருக்காலே
வெம்பதராம்அரக்கர்க்கு வேலைசெய்யுமதேவர்மேலே(ரா)

௨. சேனைஇந்திரனுக்கும் தேவர்க்கும்உயிர்நிலை
செய்ததுனதுதந்தை உபகாரம்
ஆனைகெட்டவன் குடத்தில்தேடினால்போல்
அவரைவெறுத்தால்உண் டோசாரம்

ஈனராவணன் சீதையைக்கொண்டுபோய்
எவிடத்தில்வைத்தானோ இன்னேரம்

போனதிசைதேடி- அவனைவேர் அறுத்து
புண்ணியத்தைநாட்டுவ துன்பாரம்

மானினைத்தொடர்ந்துபின்னே போனதென்ன அலங்கோலம்
போனதனால்வந்ததிந்த சானகிபிறிந்தசீலம்
சானகிபிறிவரக்கர் ஆனவர்க்குநாசகாலம்
ஆனதனால்தேவருக்கு-நீநினைப்பாய் அனுகூலம் (ரா)

௩. வெள்ளிவெண்மதி வளர்வதும்தேய்வதும்
விதியின்பயன் அல்ல வோ ஆமோ
உள்ளதொருவர்க்கு நிறைவதும்குறைவதும்
ஊழின்படிஎன்ப தறியோமோ

தெள்ளிதெளிக்தஎன் கண்மேண்உனக்கினி
தெரியச்சொல்லுவார் எவர்தாமோ
கிள்ளிஎறிகுவாய் ராட்சதச்செடிகளை
கேதம்கொண்டிப்படிஉன் மனம்நோமோ

துள்ளிசமுத்திரம்பொங்கினால் கொள்ளுமோகிணறநேகம்
வள்ளலேஉன்முன்னேலங்கைக்கள்ளர்கட்கெங்கேஎிர்வாகம்
எள்அளவுநீமுனிந்தால் அள்ளுப்பொடிஆ மேலோகம்
மெள்ள இருந்துபகையைத்தள்ளுவதல் லோவிவேகம் (ரா)

சீதையின் பிரிவாற்றாமல் ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

பொறைஅடையத்தந்தைஇந்தபுத்திசொல்லிப்பரமபதம்போக [கக்ண்டான்
விறகுதம்பிஇடக்கண்டான்சாயிசடாயுவுக்குள்ளவிதியுங்கண்ட
ான்
கறைஇருளும்வரககண்டான்-சீதைமுகக்கமலம்ஒன்றும்காணான்
ஆங்
மறைவுசெய்தார்ஆர்எனவேதியங்கினான்ஸ்ரீராமன்யயங்கினனே

௰-திபஃதை-சங்காபரணராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. நல்லோர்பெரியோர்என்னை வசையும்சொல்லல்ஆச்சே
நடுக்காட்டில்என்னைத்தெய்வம் அகலேகொண்டுபோச்சே

பொல்லாதவனைக்கண்டு கலங்கினளோ பேதை
பூனைகண்டகிளிபோலே புலம்பினளோ சீதை

௨. ஆரும்இல்லாதகாட்டில் அதட்டினனே பாவி
அய்யோநினைக்கநினைக்கப் பதைக்குதேஎன் ஆவி
வாரும்வாரும்என்றென்னைக் கூவிஇளைந் தாளோ
வழிமேலேகண்ணைவைத்துப்பார்த்துக்களைந் தாளோ

௩. வீடேபர்ணசாலைஎன் றெண்ணியிருந் தேனே
விதிமோசத்தாலேதம்பி விட்டுப்பிரிந் தானே
காடேமலையேஎன்றன் கவலைதடுக் கிறே
கண்ணாட்டிபோனவழி காட்டிக்கொடுக் கிறே

௪. துள்ளித்தமான்குட்டிவந்தென் முன்னேநின்ற போதே
சொன்னேனேதம்பிஅதை உண்மையென்றெண் ணுதே
வெளுத்ததெல்லாம்பால்என்றெண்ணி அடுத் தேனே
வீட்டுவிளக்கைவெட்ட வெளியில்விடுத் தேனே

௫. அங்கலாய்ப்பாளேசீதை கண்ணைநனைப் பாளே
அரக்கர்க்குப்பயந்தான் என்றென்னைநினைப் பாளே
சிங்காரவேட்டைஆட வீணேபோகி னேனே
சிறகுபறிகொடுத்த பறவைஆகி னேனே

௬. தணிக்காநெருப்பைப்போலே மூளுதேவி சாரம்
தாரத்தைரட்சியாதான் வீரம்என்ன வீரம்
அணைப்பானேசிறகால்என் றெண்ணமாய்எண்ணி னேனே
அய்யோசடாயுவுக்கும பாவம்பண்ணி னேனே

கவந்தன் வதையும் துதியும்.

விருத்தம்.

சானகியைஇந்தவண்ணம் நினைந்துராமன்
ததும்பையபிலேதடபியும் தண்ணீருகுப்போனான்
போனவிடத்ததோமுகிழைக் கழிந்துமீண்டான்
புனிதர்இருவரும்கவந்தனகைக்குள் ஆனார்
ஆனபிறகவன்உயிரை முடித்தார் அந்த
அரக்கனும்அந்தரத்திலேதேவனாகி
ஈனம்இல்லாபரமபதம் தனிலேயுறச்
செல்லுவான்சாமிதுதிசொல்லுவானே.



கவந்தன் வதையும் துதியும்.

௰௧-திபதை-முகாரிராகம்-அடதாளம்சாப்பு.

கண்ணிகள்.

௧. ஆதியும்ஆகி அநாதியும்ஆய்இந்த
அகிலம்எங்கும்நிறைந் தாயே
பேதகம்இல்லாமல் ஆலம்தளிர்உள்ளே
பிள்ளையாகிஉறைந்தாயே தாயே

௨. உன்தன்பதத்தைவேண்டித் தவம்செய்வார்கள் இந்த
உலகத்தில்உள்ள ஞாயம்
எந்தப்பதத்தைவேண்டி நீதவம்செய்யவந்தாய்
ஈதென்னகண்கெட்ட மாயம்

௩. முலையானதும்இல்லை கெர்ப்பகுழியும்இல்லை
முளைத்தாயேஒரு தூணில்
மாலைவாய்உலகத்தோர் பிறந்தான்பிறந்தான்என்பார்
வாய்க்குண்டோஎன்வார்த்தை வீணில்

௪. என்னையேஅறியாத அரக்கன்என்றாயேநீ
இரண்டுசெய்தபிறி வேறோ.
உன்னைநீதானும் அறியாயோசாமிநான்
உன்னைஎப்படிஅறி வேனோ

௫. காட்டுவானும்நீயே காணுவானும்நீயே
கற்றாயேஇந்திர சாலம்
போட்டுவிட்டுதேடி தவிப்பார்போல்தவிக்கிறாய்
போதும்போதும்இந்த கோலம்

௬. சூரியகாந்தம்தரு திபத்தைக்கொண்டந்த
சூரியனைப்பணிவது போலே
ஆரியனேஉந்தன் அனுக்கிரகம்கொண்டுநான்
அறிந்ததைச்சொல்லுவேன் என்னாலே

௭. எனதுசாபம்தீர்த்தாய் அதுபோலச்சவரிஇங்
கிருக்கிறவளைக்காண வேணும்
தனதவள்சொல்லுவாள் சும்மாஇருந்தால்ஒன்றும்
சாதிக்கல்ஆமோசொல்லாய் காணும்

அ. திடமா அவள் சொன்ன படியே சுக்கிரீவனைச்
செரும் அவன் உடனே செல்லு
கடல்போல் வானரங்கள் வருமே சானகியைக்
கணத்தில் கொண்டுவரச் சொல்லு

கூ. தடுக்காமல்க் கேளாய் ஓர் சிற்றுள் எட்டாளுக்குச்
சரி அல்லோ அறியாயோ நீயே
திடுக்கென்று செய்யலாமோ பதராதகாரியம்
சிதறுதென் வார்த்தை ஆராயோ

ஸ்ரீராமர் சவரிக்கு முத்தி அருளி அப்பால் ஏகல்.

விருத்தம்.

பத்தியாய்க் கவந்தன் இந்தப் படிசொல்லிக் கதியில்ப் போனன்
சத்தியராமன் பின்னே சவரி ஆசிரமந்தில்ப் போனன்
அத்திசை அமுது கொண்டான் அவள் உபசாரம் கொண்டான்
முத்தியும் கொடுத்தான் சொன்ன மொழிகொண்டான் வழிகொண்
[டானே

ஆரண்ணிய காண்டம் முற்றிற்று

விருத்தம்-உகூ.
திபதைகள்-கக-தருக்கள்-கரு-ஆக உசு-

)0(

ஆகபாயிரம்-கக-க்கும்-காண்டங்கள்-௩க்கும்கூடிய
கொச்சகம்-௩-வெண்பா-உ-வசனம்-க-விருத்தம்-௬க-ஆக-௬ரு.
தோடையம்-க-திபதைகள்-உரு-தருக்கள்-ருஅ-ஆக.அரு.
சக்கிரவர்த்தி திருமகனர்
திருவடிகளே சரணம்.

[*]

ஸ்ரீராமஜயம்.

நான்காவது

கிஷ்கிந்தாகாண்டம்.

அனுமார்மறைந்துநின்றுயோசித்தல்

விருத்தம்.

சவரிசொன்னவழிபிடித்து ராமனும்தம்பியும்நடக்கத்
தான்கண்டேங்கிக்
கவலைகொண்டுசுக்கிரீவனை விட அனுமான்மறைந்துநின்று
கருதிப்பார்த்தான்
தவவடிவர் வரிசிலையர் புரிசடையர் இளங்குமாரர்
தருமசீலர்
இவர்எவரோஎன்றுசொல்லி நன்னுவான்யோசனையால்
என்னுவானே (௧)

௧-திபதை-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்

௧. இன்னார்இனியார்என்று தெரியேனே புண்ணியம்
என்னசெய்தேன்இவர்கள் வரத்தானே

௨. இங்கேஎன்கண்ணின்முன்னே உதித்தாரே வந்து
கங்கைஉதித்தாற்போலே குதித்தாரே

௩. காளைப்பருவத்திந்தக் காட்சிதந்தாரே இவர்
வேளைக்குத்தக்கவேஷம் கொண்டுவந்தாரே

௪. தேவருக்கும்தேவர்இவர் என்றுசொல்லவோ அவர்
மூவர்இவர்இரண்டு பேர்கள்அல்லவோ

௫. அசங்காதபலம்உள்ள சிலாக்கியவான்கள் இவர்
பசும்புற்றேயநடவா பாக்யவான்கள்

௬. எல்லாவல்லமையும் செய்யஉரியோர் இவர்
கல்லாக்கலைகள்எல்லாம் கற்றபெரியோர்

எ. பிராணைசந்திவிபோர்லே ஓல்கூறவிடுத்தார் தங்க
நிராவியால்அதைத்தேகு. இங்கேஅடுத்தார்

அ. அடைவாளமுப்பிளமை பூணுகிறாரே இவர்
உடலும்நிழலும்போலக் காணுகிறாரே

கூ. வளைத்தவில்லும்அம்பும்கைக்கொண்டபடையோர் இவர்
இளைத்தபேணைக்கைதூக்குமன்னம்உடையோர்

ய. கல்லும்முள்ளும்மல்லிகை மலர்போலே இவர்
செல்லக்குளிருதயோ வழிமேலே

கக. குவடும்காடும்செடிக ளும்பரியுதே அய்யோ
இவரைக்கண்டுபேயுக[illegible] ளீர்சொரியுதே

கஉ. பறவைகளும்கரைந்து முகம்வாடுதே இவர்க்கு
சிறகைவிரித்துமேலேபந்தல் போடுதே

அனுமார் ஸ்ரீராமருக்கு வரலாறுகூறல்.

விருத்தம்.

மாசகலஇந்தவண்ணம் எண்ணிச்சின்ன
வன்னிவடிவுடநின்றான நீர் ஆர் பிள்ளாய்
பேசனவேவாயுமகன் அனுமான்என்பேர்
பெருமலையில்வாலியினால்ச் சுக்கிரீவன்
ஆசகலஒளித்திருப்பான் தேவரீரை
அறிந்துவரஎன்னைவிடடான் வந்தேன்என்னத்
தாசரதிசுக்கிரீவன் எங்கேஎன்று
தான்சொல்லவணங்கி அனுமான்சொல்வானே (உ)

க-தரு-சுருட்டிராகம்-ஆதிதாளம்


பல்லவி.

சுக்கிரீவன்பேர்நீ - சொன்னபோதே - அவன்
சுகுர்தம்அல்லவோ சுகுர்தம்

அநுபல்லவி.

தற்காலத்திலே பாலால்முலைவிம்மித்
தாய்ஆனவள்பிள்ளை பேர்சொல்லிஅழைத்தால்ப்போல்-சு

அநுமான் இராமலட்சுமணரைக் காணுகிறது.



சரணங்கள்.

க. பட்டமரம் துளிக்கும் உங்கள் வசனத்தாலே
பரிந்தீரோ அவனுக்குப் பயம் உண்டோ இனிமேலே

வெட்டுணிவாலின னும்கோடைகொண் டொருக்காலே
வெதும்பியபயிர்க்கொருமேகம்இறைத் தாற்போலே—சு

உ. படைத்தபுவியும்சொந்த மனைவிதன்னையும் விண்டு
பதைக்கிறுன்செடியில்லாக் கொடிபோல்வேது வண்டு
அடைக்கலம்தந்தால்உமக் கானந்தம்பலன்கள் உண்டு
ஆர்க்குகிடைக்கும்உங்கள் அருமைக்கனிவாய் கொண்டு-சு

௩. பலமிக்கவாலினனும் தறிதும்புக் காளையிலே
பருத்திப்படாப்பாடெல்லாம் பட்டோமே நீளையிலே
மலைஇற் றுமயிரிலே தொங்கிற வேளையிலே
வந்தீரோஎன்னதவம் செய்தோம்முன் நாளையிலே-சு

௪. கோரவாலிவிடுக்க வந்தீர் இன்றென்ன சங்கை
கொண்டஎங்களை ஆண்டு கொள்வது பங்கே
ஆர்என்றுகேட்கில்உம்மை என்னசொல்வேனே அங்கே
அடியேனும்அவனுலே அனுப்பவந்தேனே இங்கே—சு

அனுமார்தேற்றச் சுக்கிரீவன் சரணம்அடைதல்

விருத்தம்.

அனுமான் இப்படிச்சொல்ல அயோத்திதன்னில்
அய்யன்உதித்ததுமுதல்ச்சீதைபோன
மனவேதைகடசியாநடந்தவாறே
வருந்தஇளையோன்சொல்லஅறிந்துகொண்டான்
கனமானவிசுவரூபம்காண்பித்தான்
கவிக்குலவேந்தனையும்காண்பிப்பேன்என்று
தனதாம்தன் அரசன்உடனேபோய்எல்லாம்
சாற்றினன் அவன்கவலைமாற்றினனே

உ-திபதை-புன்னுகவாராளிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. குணசம் பிரமதீரர் ராமலட்சு
மணர்என் இருவீரர் அவர்தம்மை
மணமா அடுத்தவர்க்கு மறுசுகம்தேடுமோ
க்ஷணம் ஆகிலும்விட்டுப் பிரியவுமகூடுமோ

உ கண்டேன் கண்டேனே ஆனந்தம்
கெண்டேன் கொண்டேனே நல்ல

புண்டரீகக்கண்ணனை அந்தமூத்தவன்
மண்டலீகஅரையே தம்பிவாய்த்தவன்

௩. சத்துருவென்பது துடைத்தோர் விசுவா
மித்திரன்கை அம்புபடைத்தோர் வெகு
வெற்றிமருவுகீர்த்தி மேவியகுணசீலர்
சித்திபெறும்அயோத்தி தசரதராசன்பாலர்

௪. குடிலத்தாடகைமேலே அம்புபோட
ஒடிபட்டமரம்போலே விழுந்தாளே
அடிவைத்தஉடன்அந்த அகலிகைஎழுந்தாளே
சடிதிக்குள்கௌதமர் சாபம்ஒழிந்தாளே

௫. ஒடுக்கி ஒடுக்கிச் சொன்னாலும் ராமன்கீர்த்தியை
அடக்கப்போகுமோ என்னாலும் மிதிலையில்
மிடுக்குடன்உருத்திரன் தடக்கைவில்அறிந்தானே
எடுத்தாப்போல்எடுத்தானே ஒடித்துவிட்டெறிந்தானே

௬. மாமணம்நிறைவேற்றி பரசு
ராமன்கெறுவம்மாற்றி அயோத்தி
கோமுடிதன்னைராமன் கொடுத்தானே தம்பிக்கங்கே
நாம்எல்லாம்ஈடேற நடந்துவந்தானே இங்கே

௭. முன்னேவிராதன்மடிந்தான் ராமன்அம்பாலே
பின்னேகரனும்முடிந்தான் இது அல்லாமல்
வன்மாரீசனுக்கும் வாளிதொடுக்கல்ஆச்சே
பொன்மான்செத்தஇடம் புல்லுமுளைத்துபபோச்சே

௮. எடுப்புள்ளபெரியோரே கவந்தனை
அடித்தாரேஎதிர்நேரே இவரே
அடுக்களைக்கிணற்றிலே அமுதம்எழுந்தால்ப்போலே
கிடைத்தாரேஒருவர்க்குக் கிடைக்குமோ இப்பாலே

௯. அலைவாய்த்துரும்பேன்னவே நித்தம்நித்தம்
மலைபோல்விசாரம்தின்னவே மெத்தமெத்த
பலநாளிலும்பட்ட பாடெல்லாம்விண்டோமே
நலம்ஆகவாலிக்கொரு நமனையும்கண்டோமே

௰. ராசன்மகனே ஏண்டா பலபா
யோசனைபண்ணவேண்டம் வரம்தரும்
ஈசுரன்உன்பங்கில் இருந்தானே இருந்தானே
பூசைசெய்தான்என்றிப் பொதல்லோதெரிந்தேனே

௧௧. சுகம்கண்டு மேவல்ஆமே அவர்மலர்
முகம்கண்டாற்பாவம்போமே சுக்கிரீவா
புகுந்தவர்சேவைகாணப் புத்திமுத்தியும்தரும்
இகபரம்இரண்டிலும் எதுநினைந்தாலும்வரும்

௧௨. இக்கதைஅன்றுவீறி அனுமான்சொல்ல
சுக்கிரீவன்மனம்தேறி புறப்பட்ட
அக்கணம்ஒருமன தாகவேதுணிந்தானே
மைக்கடல்வண்ணன்ரா மனைவந்துபணிந்தானே

௧௩. பணிந்தவன்தன்னைப்பார்த்து ரகுநாயகன்
அணிந்தகண் கிருபைபூத்து சுக்கிரீவா
பிணங்குவாலிக்கும்வில்லுபிடித்தேன்என்றெடுத்தேனே
இணங்கும்உன்னைரட்சிப்பேன் என்றுகைகொடுத்தேனே

ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்குஆதாரணைசொல்லல்.

விருத்தம்.

சரணம்என இப்படியேசுக்கிரீவன்சொல்லச்
சாமிஅபயம்கொடுத்தான்அனுமான்தானும்
முரண்உளவாலிக்கும் ஓர்அரக்கனுக்கும்
முன்புசண்டைவரலலேதம்பிதன்னை
உரன்அழித்துமண்ணையும்பெண்ணையும்கைக்கொண்டே
ஓட்டிவிட்டான்இவன்இங்கேஒதுங்கினன்உன்
பரம்எனவேதாரம்எடுத்ததையேஎண்ணிப்
பாவிப்பான்ரகுராமன்கோவிப்பானே (௪)

௬-திபதை-தோடிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. சுக்கிரீவாஉன்ம னக்கிலேசங்கள் எ
னக்கேஆம்அது தீரடா
இக்காலத்தில்மு டிக்காம்வாலியை
வைக்கநீஅது பாரடா

௨. பெருவாலிக்குள தலைசாயக்கணை
பிசகாதபடி தொடுக்கிறேன்
அரைநாழிக்குள்ளேமுடிசூடிப்புவி
அரசாளக்குடை கொடுக்கிறேன்

ங. அடுக்காமனவியை எடுத்தான் எனவுரை
கொடுத்தாய் அவனை இந் நேரமே
கெடுத்தேன் அவன்முடி பொடிக்காவிடில்வில்லை
எடுத்தாவதில்லென்ன சாரமோ

ச உடைந்தேசரண்என அடைந்தோர்களைமுற்றும்
தொடர்ந்தாதரித்திட வேணுமே
கடும்போரினிலேலகை விடும்போதினில்இந்த
உடம்பால்என்பலன் காணுமே

சீதைஆபரணங்களைக் கண்டு ஸ்ரீராமர் இரங்கல்.

விருத்தம்.

அண்ணல்இராகவன்சுக்கிரீவனுக்கிவ்வாறே
அனுக்கிரகித்துவாலிசோதனைக்குவேண்டி
வண்ணமராமரம்ஏழும் அம்பால்எய்து
வழியிலேதுந்துபிதன்எலும்பைக்கண்டு
திண்ணம்எனும்தம்பியினுற்கிளம்பிவிட்டுத்
தேரிலேபோம்சீதைமுடிந்துபோட்ட
துன்னெனும்ஆபரணங்கள்காட்டக்கண்டு
துடிக்கின்றான்சாமிகுறைபடிக்கின்றானே ரு

௪-திபதை-கண்டாராகம்-அடதாளசாப்பு

கண்ணிகள்.

க. நின்றுதெரிந்தகுலமடைந்தையர்
தங்களைக் கொன்டீரோ - இல்லையோ
கணவன் இருந்தும்உடமைஎறிந்த
பெண்களைக் கண்டீரோ

உ. அரசிலேமணி முடிசுமந்துல
கம்கொள நாடினேனே - ஐயையோ
சிரசிலேசடை முடிசுமந்தொரு
பெண்பழி சூடினேனே

ந. தசரதன் தப சுகன்புரிந்துவ
ருமபாலன் ஆனேனே - ஐயையோ
மிசைபடும்சுவை உளகரும்பில்
வெறும்பூ ஆனேனே

ச வாரிதிதந்தவர்கங்கை அழைத்தவர்
மரபில் வந்தேனே - ஐயையோ

பாரியைஆறு நும்மாட்சனைசெய்யப்
படாமல் மெலிந்தேனே

ரு. மங்கைஐனப்பார்க்கான்முகச்சோடைக்கு
மாற்றிட்டுத் தீர்ப்பாளோ-ஐயையோ
அங்கிங்கும்பார்த்தேன் வனம்பார்த்தேன் இனி
ஆர்முகம் பார்ப்பேனே

சு. விண்பணிதிஎதுக்கார்என்னைமீட்பவர்
'மேல்எள் றறிந்தாவோ-ஐயையோ
ஆண்பிள்ளை அல்லநான் பெண்பிள்ளைஎன்றெண்ணி
அணியை எறிந்தாளோ

எ. அவளுக்குநானும் எனக்கவளும்பூட்டும்
ஆரங்கள் பூண்பேனே-ஐயோ அவள்
பவளக்கனிவாயும்முத்துநகையும்நான்
புரிந்தென்று காண்பேனே

அ பணிதிஇங்கிது சனகிஅங்கம்நி
றைந்திடச் சேர்வேனே-ஐயோ அவள்
குணசவுந்திரியமலர்முகம்கண்டு
கண்களி கூர்வேனே

கூ. குலம்தருமக்கொடி உடன்தவம்செய்து
போந்தேன் என்பேனே - ஐயையோ
இலங்கையில்விட்டு வெறுங்கையாய்வந்து
சேர்ந்தேன் என்பேனே

ய. இல்லாளைவிட்டு வல்லாண்மைபேசி
இன்னம் இருந்தேனே-ஐயையோ
புல்லாளைச்செய்து கொல்லையிலேவைத்தாற்
போலே இருந்தேனே

ஸ்ரீராமருக்குச் சுக்கிரீவன் துணிவுகூறல்.

விருத்தம்.

இந்தவிதம்ஆகராமச்
சந்திரன்மனம்நோகும்வேளை
தொந்தம்உளசுக்கிரீவ
னுந்துணிவுசெப்புவானே



இராமர் சொற்ப்படி சுக்கிரீவன் உயுத்தத்திற்கு அழைக்கப்பட்டவாலி உயுத்தம்செய்கிறதும்
ஸ்ரீராமன்மரத்தின்மறவில் நின்று வாலியைக்கொல்லுகிறதற்க்காக பாணம் அனுப்புகிறதும்

உ-தரு-நாட்டகுறிஞ்சிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்கு-இந்தவிசாரம் ஏதுக்கித்தனை தூரம்

அநுபல்லவி.

போதும்பிரம்மாண்டம்அப் புறம்போய்வருகிறேன்
சீதையைக்கொண்டுவந்து க்ஷணத்திலேகொடுக்கிறேன்()

சரணங்கள்.

க. தருமராமரம்எய்தாய் துந்திமிஎலும்பைத்
தம்பியாலே எறிந்தாய்-சாமி
கருதினது தருவேன் என்பலன்உன்பலன்
களும்நீயே அறிந்தாய்-ராவணன்
ஒருபத்துதலைகளும் உன்பெருங்கணையாலே
திருகிறேன்தருகிறேன் தேவியைக்கைமேலே -ஏதுக்கி

உ. மின்பணிகாட்டி உனக்குநான் இந்த
வேதனை காட்டினேன்-சாமி
நின்பெருங்கவலையை நீக்கவேணும் சும்மா
நேரம்பா ராட்டினேன்-சாமி
என்குறைமுடிக்கிற தென்னஇதுக்குமுன்னே
உன்குறைமுடிக்கிறேன் ஒருநிமிஷத்தில்சொன்னேன் -
ஏ

ந. சுத்தர்ஆகிய மூவருக்கும்தேவருக்கும்
சூழுமோ படைக்கூட்டம்-என்படை
மெத்தஉண்டுவரும் வெற்றியும்தரும்இனி
மேல்என்ன முகவாட்டம்
உற்றசீதையை உதவுகிறேன்இதுநிதானம்
கற்றுக்கற்றுக்சொல்லிஎன்ன காரியம்அல்லோபிரதானம்
ஏது

ஸ்ரீராமரை வலிநிந்தித்தல்.

விருத்தம்.

ராமனை இந்தப்படி சுக்கிரீவன்தேற்ற
நல்அனுமான் வாலியைக்கொன்றிப்போதிந்தக்

*இவ்விடத்தில்-சாமிஉனக்கு-என்றுவருவித்து ஏதுக்கித்தனை தூரம்என்று ஓட்டி இரட்டித்துப் படிங்கொள்க.

கோமகன்சுக்கிரீவன்முடிசூட்டியெல்லாம்
கூடும்என்றான்சாமியும்அங்கிசைந்தான்அப்பால்
பூமகன்வாலியும்தம்பிதானும்சண்டை
பொடவிலேஅய்யன்அம்புபோடச்சாய்ந்து
பேய்முகனுய்வாயில்வந்தபிதல்லாம்வாலி
பேசுவானராகவனைஏசுவானே (எ)

௩-தரு-சாரங்கராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஏனிந்தமதிசூழித்தாய் மறைந்துவாளி
எடுத்தென்மேல்ஏன்தொழித்தாய்

அநுபல்லவி.

மானபூஷணன்ஆன தசரதன்உன்னைப்பெற்று
வரங்கள்தந்தது நல்லாய்
குரங்கைவெல்லவோ சொல்லாய் —ஏ

சரணங்கள்.

௧. நரர்க்கும்வானரர்க்கும்உன் டோதொந்தம்-முன்பின்
ஞாதிவழக்குண்டோசொல் அனுபந்தம்
அரக்கன்அழிவுசெய்தால் பலவந்தம்-ஆகி
ஆயுதம்இல்லாரை அடிப்பதோஉன்சந்தம்
அதுவும்அல்லாமல் ஆண்மைசொல்லாமல்
எதிரில்நில்லாமல் என்னைவெல்லாமல்—ஏனிங்

௨. வலியமரங்கள்ஏழும் தொளைத்தாயே-அந்த
வலிமையிருந்தும்எனக் கிளைத்தாயே
கலிராசன்போல்வந்து முளைத்தாயே-நடுக்
காட்டில்மறைந்துவிலலைக்காணுமல்வளைத்தயே
காரியம்இதுசுத்த கபடம்உனைப்பெற்ற
சூரியகுலம்மெத்தத் துலங்கும்அடாபித்த—ஏனிந்த

௩. தன்மம்வளர்க்கவந்த ரகுராமா-பரதன்
தனக்குமூத்தபிள்ளை நீ ஆமா
உன்மனதுதான்என்ன மிகஷேமமோ-வாலி
உயிரைக்கொண்டாற் சீதைஒழிந்ததுயரம்போமா
உனக்குஞாயமோ உன்உபாயமோ
எனக்கபாயமோ ஒன்னமாய்மோ—ஏனிந்த

வாலிகுற்றங்களை அவனுக்கு ஸ்ரீராமர்விரித்தல்

விருத்தம்.

இன்னனவாலிசொல்ல இராகவன் அவனைநோக்கி
மின்னையும்கொண்டாய் தம்பிமேதினி தனையும்கொண்டாய்
பின்னையும்கொல்லவர்மம்பிடித்திட்டான் அதனைக்கொண்டே
உன்னைநான்கொல்லுறேதோ உரைஎன்றான் உரைஎன்றானே

௬-தரு-அடாணாரர்கம்-ஆதிதாளம்.

பல்லவி.

வடிப்பம்வடிப்பமாய்பேசிக்-கொள்ளாதே-அடாவாலிஉன்
வயைமூடடா ஏண்டாதுள்ளாதே

அநுபல்லவி.

கடத்தடாஈதெல்லாம் ஆயிரம்கால்அரைக்காம்
பணம்அடாகடை கட்டடா—வடி.

சரணங்கள்.

க. பிலம்தனிலேநீபுகுந்தபோதில்உன்
பின்பலனாயிவன் தொடர்ந்ததும்
பேய்அறைகிறாப்போலே நீஅறையஇவன்
பின்வாங்கிக்கொண் டிடைந்ததும்
தலம்தனிலேஅப வாதம்ஆகத்தம்பி
தாரத்துக்கும்உனக்கும் நடந்ததும்
சாபத்தாலேநீ ஏருமலைமேலே
தப்பித்தவறிஇவன் அடைந்ததும் சொல்லாமல்—வடி

உ. வார்த்தைக்குமாத்திரம் குரங்குருபம்நீதி
வகையும்துகையும்சொல்லி நிறைக்கிறாய்
மனதாரச்செய்தவினைபோமோவீண்
வார்த்தைகள்ஏன்சொல்லி இறைக்கிறாய்
மூத்தவன்தம்பி தாரம்என்றறிந்தும்
முறைபிசகிநிறை குறைக்கிறாய்
மூடன்போலவேவா யாடுகிறாயடா
முழுப்பூசணிக்காயும் சோற்றோடேமறைக்கிறாய்—வடி

௩. அம்பும்கையுமாய்நின்றால்உன் தன்
அபயம்என் றலறுவாயென் அடிக்கு

ஆராகிலுமனொந்தபோனாலும்அடுத்
தாரைக்கெடுக்கல் ஆமோஎன் குடிக்கு
தம்பித்துரோகிஉன்னைச் சித்திரவதைசெய்யத்
தகுமோநான்பிடித்த பிடிக்கு
தர்மத்துக்குள்ளும் பாவத்துக்குப்புறம்பும்ஆய்
சாத்தாலேகொல்லத் தொடுத்தேன்இந்தப்படிக்கு—வ

ஸ்ரீராமனைவாலிவரம்கேட்டுக்கொள்ளல்.

விருத்தம்.

மறைநிறைத்துராமன்இந்தவாறுசொல்லவாலியும்சம்
மதித்தான்இப்பால்
பழயதொருநினவுகொண்டான் அறிந்தும்அறியாமலும்நான்
பதறிச்சொன்னேன்
தழையுமகன்சுக்கிரீவன் அனுமான்உனதடைக்கலம்என்
சாமிஎன்தன்
பிழைபொறுப்பாய்எனச்சொல்லிக் கூசவான்மனுவொன்று
பேசுவானே கூ

ரு-தரு சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சாமிரகுராமா-இவர்கள்உன் தஞ்சம்ரகுராமா

அநுபல்லவி.

ஆம்இவரால்என்னகாணும் ஆகிலும்ராசாங்கம்வேணும்
நீமாத்திரம்வெல்ல நினைத்தாற்காரியம்அல்லா (சாமி)

சரணங்கள்.

க. எனதுமகன்அங்கதன்தான் உனதுபகையைவாட்டுவான்
ராட்சதகுலங்களை உபேட்சைஇல்லாமல்மாட்டுவான்
அனுமந்தன்உந்தன்கோதண்டம் எனவிசயங்கள்காட்டுவான்
அந்தராவணனைஎன்போற் றொந்தொம்தொந்தம்என்று
சாமி [ட்டுவான்

உ. அந்தத்தில்உன்தனைக்காணத் தந்தேனேஇது அல்லாதே
அநித்தியம்தனக்கும்நித்தியம் எனக்கும்தந்தானேஇப்போதே
என்தம்பிசுக்கிரீவன் பிழைதந்தாலும்கிருபைவிடாதே
என்மேலேதொடுத்தஅம்பை எடுத்தவன்மேல்தொடாதே
சாமி

௲. நெடுந்தவம்புரிந்தோ ளென்சிவன் விடும்போது கண்டேன் உன்க
ழினைக்கொணுபரமபதம் எனக்கல்லோகாணியாட்சி[ராட்சி
அடங்கலும்ரட்சிக்கயந்து தொடங்கினநீசர்வசாட்சி
ஆள் இல்லாப்படைவெட்டுமோ ஐயாவுனக்குண்டோதாட்சி
சாமி

வாலிசுக்கிரீவனுக்குமதிசொல்லுதல்.

விருத்தம்.

இன்னவாறுசாமிதன்னை இரங்கிவரம்கொண்டிடும்வாலி
பின்னை இவ்வாறுசுக்கிரீவன் பெருமாமுகத்தைமிகநோக்கிச்
சொன்னேனிதுநீகேள்என்றுன்சுவாமிராமன் இவன்பணியை
எந்நேரமும்செய்எனஅவனை. இந்தான்தனக்கோர்வரம்தந்தா
னே

கரு. தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்.

பல்லவி,

ஆதிதேவனே-ஸ்ரீராமன்என்-மதிசுக்கிரீவனே

அநுபல்லவி.

வேதசாஸ்திரபு ராணம்எல்லாம்கூடி
விரிப்பதும்இவனேசொல்லத் தரிப்பதும்இவனேஅல்ல--ஆ

சரணங்கள்.

க. அடைவுடன்இவன் கையில்விழமுத்தி
ஆகுமே நித்தியம்-பணி
விடைசெய்தாற்குறை உண்டோஉனக்கிது
வேஅல்லோ பத்தியம்-வேறே
தொடரும்தெய்வங்கள் என்பதெல்லாம்சும்மா
சொல்வதேநி மித்தியம்-ஒன்றும்
தடையில்லாபிரம மாதிகிர்த்தியம்எல்லாம்
தப்பாதிவன்கிர்த்தியம்அப்பாசொன்னேன்சத்தியம்-ஆ

உ. மதிஅரசுகொண்டதில்மதங்கொண்டு
மயக்கம் பண்ணாதே-எங்கும்
எதிர் இல்லாஎன்னைக் கொன்றான் இவன்போலே
ஈடு நண்ணாதே-ஐயன்
உதவியை அடிக்கடிஎண்ணவேணும்
ஒழிக்க ஒண்ணாதே-நன்றி

சிதறி இவன் ஓர் மனிதன் ஆம் என்று
திருக்கானபுத்தியை ஒருக்காலும் என்றுந் தே— ஆ

௩.. அகலாமல் அனு காமம்சாமியை
அனுதினமும் சுற்றி - இவன்
மகிழ்வாக இட்ட வேலைகள் செய்து
வருவதே பத்தி - இத்தை
இகழாது கொண்டால் இதுவே சித்தி
இது அல்லேல் வெற்றி சொல்லி
உருகுவதேன் இனி சகல பாக்கியமும்
உருவாய் பரமபதம்மும் பெறுவாய் இதுவே புத்தி—ஆ

வாலி இறந்தபின் தாரை புலம்பல்.

விருத்தம்.

வாலி இந்தவரங்கொண்டு வளர்வைகுந்தபதம்சேர்ந்தான்
வேலின் நெடுங்கண் உள தாரை மின்னற்கொடிபோலேகணவன்
காலில்விழுந்தாள் வானரபூபதியேகெதியார்எனக்கென்று
மேலில்விழுந்தாள் நெடுமூச்சுவிடுத்தாள் புலம்பத்தொடுத்தாளே

ரு-திபதை-கெண்டாராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மன்னவனே எங்கள் வாலியே நல்ல வானர பூபதியே
இன்னவேளை இந்த மரணம் உனக்கென்று இருந்ததோ தலைவிதி
இறவா மருந்தையும் தருவாயே நீ எப்படி இறந்தாயோ
மறவாதே சிவபூசை செய்கின்ற வழிபாடு மறந்தாயோ

ஆனைக்கும் அடிசறுகும் துள்ளி விழல் ஆகாதென்றெனே [றனே
சேனைத்துரையே ஆன உன்னைக்கொடுத்திங்கே தெருவிலே நின்டே
என் உயிர் நீ ஆவல் உன் உயிரோடே என் உயிர் கூடே மாயாதோ
விந்தை மணி தன் கைக்கு நீயும் விழுவாயோ வேறொரு வாலியுண்
டோ
என் தன் உயிர் இன்னம் இருக்குதே ஐயோ என்னைபோல் நீலியுண்டோ
மறைந்து ராமன் கணை தொடுக்காமல் உன்மேல் வழக்குதொடுத்ததாலே
குறைந்திடாக்கடல்கடைந்தமுதமும் நீ கொடுப்பாயே கைமேலே
செய்தநன்றி அறியாரோ காலதூதர் என்ன தேவரோ மறுபேரோ
ஐயோ அவர்க்கமுதமும் உன்னைப்போல் ஆர் இனி தருவாரோ

நான்அடிஉந்தன்பிராணநாதன்என்றுநம்பிக்கைபொய்ப்போயே
வானரம்பையர்மேல்ஆசைகொண்டெனைமறந்துவிட்டோடலாமோ

வன்னமேருமுதல்மலையில்உன்காலுவைத்தவடிவுகள்இனிபோச்
சின்னமறைந்தம்புபோட்டராகவன்நீநிக்குவடுவாச்செ [சே
மருந்தமுது தந்தசாமிவந்தான்என்மகிழ்ந்துதேவர்கண்டாரே
விருந்தமுதுசெய்யானென்றேஉன்னைவேண்டிஎதிர்கொண்டாரே

ஸ்ரீராமர் சுக்கிரீவனுக்கு ராஜநீதிகூறல்

விருத்தம். [ட்கொண்டார்

கொம்பனையாள்தாரைஇவ்வாறகன்றுள்அங்கதன்அய்யன்கூர்வெ
தம்பிஇளையவன்முடிசூட்டச்சுக்கிரீவன்தரித்துக்கொண்டான்
பின்புரகுராமன்இருபதத்திலில்வந்தான்பணிந்தான்பிறகுசாமி
அம்புவியைஆளும்வகைதெருளுவான்புத்திசொல்லிஅருளுவா
னே

எ-தரு. சௌராட்டிராகம்-அடதாளம்சாப்பு

பல்லவி.

அரசுசெய்வதென்ன-எதிந்துபோட்ட-தல்லடாசுக்கிரீவா

அநுபல்லவி.

நிருபன்எனறபோதே-கொர்வம்   மெத்தகாணும்
நெருப்பாறும்மயிர்ப்பா-லமுமா   நடக்கவேணும்—அ

சரணங்கள்.

க. கோலமன்னவருக்குச்   சதுரங்கம்-செங்
கோலைப்போலத்தருமோ   உத்துங்கம்
நாலுதிசைக்குஉள்ள   ஆதங்கம்-தீர்த்து
நடத்தவல்லவன்அல்லவோ   துரைச்சிங்கம்
ஆலகாலதுஷ்டர்   உறவென்றுதுள்ளாதே
அனுமான்போல்ஒத்த   அமச்சனைவிள்ளாதே
காலம்தெரிந்தபெரி   யோர்களைதள்ளாதே
கால்போகாஇடத்திலேதலையிட்டுக்கொள்ளாதே—அர

உ. மங்கையர்களுடனே   சூட்சி-கொண்ட
மன்னவர்க்கவமானம்   காணியாட்சி
எங்களிடத்தில்அந்த   அத்தாட்சி-போதும்
திறைவிடஇனிவே   றேன்சாட்சி

உங்கள்வாலியும்மங்	கையரால்முனைசிந்த
உருண்டானேஅறிந்	தாயேமுந்தமுந்த
செங்கோல்கொண்டால் எங்குமகோணுமஅந்த
நேசத்துனமைதன்மை ராசருக்கல்லோ இந்த— அரசு

௬. பண்ணினநிலைமையினல்	ஒருகூலி-என்னைப்
பரதேசிஆக்கினளே	அவதானி
எண்ணிஎளியவனை	அதுபோல்நீ-சரியா
எதிரிட்டுக்கொண்டால்அது	வேஆனி
உண்மைஆகஇன்னம் உறுதிசொல்வேன் இப்போது
ஒருத்தர்செய்தஉதவியைமறக்கில்அதுவேநீது
மண்ணில்இருந்து வழக்கோரம்சொல்லொணுது
மயிரைப்பிளந்துவிவ	காரங்களைஓது— அரசு

ஸ்ரீராமர் கார்க்காலம்சீதையை நினைத்துஇரங்கல்

விருத்தம்.

மாமகுடம்புனைந்தசுக்கிரீவனுக்கிவாறே
மதிசொல்லிமதங்கமுனி மலையின்மேலே
ஏமமழைகாலம்எல்லாம்இருந்துசீதை
எண்ணத்தால்ரகுராமன் வண்ணம்மாறிக்
காமலர்ச்சோலையை மயிலைக்குயிலைமானைக்
கானகத்தைப்பார்த்துவிரகாக்கினியாலே
வேமுருகுவெண்ணெயைப் போற்கரைந்துசிந்தை
விலங்குவான் தனியேதான்கலங்குவானே	(௰௬)

எ-திபதை-நாதநாமக்கிரியைராக-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. மான்காள் பழிகொண்டீர்	பொன்
மான்உருவாய்என்னை-வந்துகெடுத்தீர்
நான்அறியாவித-னங்கள்கொடுத்தீர்
கான்காள்வழிசொல்வீர்	இரு
கண்ணைவிட்டுத்திரி-வாருண்டுயிர்போற்
பெண்ணைவிட்டுப்பிரி-வார்களும்உண்டோ
உ. மயில்காள் ஒன்றுசொல்வீர்	சொல்ல
வாயிலையோஉங்கள்-சாயலைநேர்தரு
சேயிழைஆனவள்-போயதெவ்வாறே

குயில்காள்ஒன்றுகூறீர் சொன்னும்
குற்றம்உலம்டோளென-தத்தமி ஆகிய
புத்தினிசானகி-எத்திசைபோனாள்

௩. கிளிகாள்உரையீரே ஒரு
கேள்விகேளீர்படு-பாவிகளென
தாவியைநேர்தரு-தேவிவாராளோ
அளிகாள்கிருபையில்லையோ உவந்
தாடுகிறீர்உயி-ரோடுயிர் ஆனவள்
ஓடுகையால்உயிர்-வாடுகிறேனே

௪. காலமேஅவகாலமே என்தன்
காதகிஆகியபிதைபிரிந்திட-
நீதுணையாகிய தொதகம்ஏதோ
கோலமேஎன்னகோலமே
கொச்சயும்ஆய்மிகு லச்சயும்ஆய்உயிர்
வைச்சிடவோஇனி-லட்சுமணசொல்

ஸ்ரீராமனை லட்சுமணர் தேற்றுதல்.

விருத்தம்.

வெம்பியராமன்இந்த விதம்சொல்லிஇரங்கும்போதில்
எம்பிரானேஈதென்ன ஈதென்னகோலம்சாமி
உன்பெருமையைநீகாணாய் உருகிறாய்என்றுசொல்லித்
தம்பிதான்துன்பம்எல்லாம் தணிவிப்பான்துணிவிப்பானே

அ-தரு-யமுனாகலியாணிராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

சாமிஏதையா-இந்தவேதை-சாமிஏதையா

சரணங்கள்.

க. பூமிஉள்ளோர்க்கெல்லாம் ஆதாரராமா
நீமனதில்இப்படி நினைந்திடல்ஆமா—சாமி

உ. சங்கைஏன்உனக்குச் சமானம்வேறேதோ
உன்கையில்கோதண்டம் ஒன்றும்போதாதோ—சாமி

௩. அடிப்பாரோராட்சதர் அதிகமோஆடு
கடிக்கும்என்றுபுலி கலங்குமோநாடு—சாமி

௪. உன்மகிமைஅறியாய் உருகிறாய்இங்கே
பிரம்மாதிதேவருக்கும் பிழைப்பினிஎங்கே—சாமி

கு. உதவிசெய்வார்க்கிடை யூறுண்டோகாணும்
பதறுதிருந்தல்லோ படுத்திடவேணும்—சாமி

சு. அநுமாதிகள்பலம் அறியாயோசாமி
நினைவுநீகலங்கினுல் நிற்குமோபூமி—சாமி

எ. சொன்னேன்குறையில்லை சுகம்இனிமீதே
அன்னைசீதையும்வரல் ஆச்சுதிப்போதே—சாமி

சுக்கிரீவன் தாமசம்கண்டுஸ்ரீராமர்கோபித்தல்.

விருத்தம்.

மதிமான்ஆனதம்பிஇந்த வகையேசொல்லராமச்சந்திரன் (ன்
இதிலேதெளிந்தேசானகிபோய்இருக்குமிடம்எவ்விடம்காணே
சதியால்நமதுசுக்கிரீவன் சரர்காலமும்போய்வரக்காணேன்
விதியால்அவனை அழைஎன்றே விடுத்தான்கோபம்எடுத்தானே

கூ-தரு-அசாவேரிஆதிதாளம்.

பல்லவி.

வருகிறனேவானே-சுக்கிரீவன்-மனதைஅறிந்துவாராய்தம்பி

அநுபல்லவி.

திருகுசொன்னல்அவன் குலம்ஒன்றும்வெட்டுவேனே
சித்திரத்திலும்குரங்கை வைத்தெழுதஒட்டுவேனே—வரு

சரணங்கள்.

க. தருணத்தில்உதவியை மறந்தானே மதங்கொண்டு
தண்ணீரும்முக்கால்பிறைபொறுக்கும் அல்லவோகண்டு
மரபுக்குச்சற்றேஇன்னும்பார்க்கவே ணுமேபண்டு
வாலியைக்கொன்றஅம்புபோல் ஆயிரம்அம்புகள்உண்டு—வ

உ. கரத்தாலேஅபயம்கொடுத்தவன் தன்னைவன்னக்
கனகசிங்காதனத்தில வைத்தோ மேமின்ன
சரற்காலம்போனஉடன் வருகிறேன் என்றுசொன்ன
சத்தியம்மறந்தவனைச்சித்திரவதை செய்தால்என்ன—வ

ங. அரியமராமரங்கள் தொளைத்தரா மன்வில்லை
அறிவாயோ அறியாயோஎன்றுகேள் ஒருசொல்லை
ஒருமாசகம்இவனை அடிப்பதற் கென்னசல்லை
உண்மையாஎனக்கவன் சம்மதிதெரியஇல்லை—வ

சுக்கிரீவன் மதுபானத்தை நிந்தித்தல்

கொச்சகம்.

சாமிஇந்தப்படிஉரைக்கத் தம்பியும்கிஷ்கிந்தையிற்போய்
ஆம்அநுமான்தாரையைக்கண்ட துசொன்னான் அவராலே
கோமகன்சுக்கிரீவன் இளங்குமாரன்வரவறிந்துகேட்டேன்
மாமதுஉண்டென்றுவரை வான்சொல்லிக்கரைவானே

௰-தரு-புன்னாகவாராளிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மதுவே-உன்னாற்கெட்ட-திதுவே

அநுபல்லவி.

புதுமைநான்பாவி சுக்கிரீவன்எய்த
பூமிதந்திரனுக்குச் சாமித்துரோகம்செயத—மது

சரணங்கள்.

க. சுவாமிஎன்றங்கதன் கூவிஎனைத்தட்டத்
தொட்டதும்விட்டதும் நான்அறியேன்முட்டப்
பாமரன்ஆம்உன்னைக் குடித்தேனேபொட்ட
பஞ்சமபாதகன் ஆனேன்கடைகெட்ட—மது

உ. பித்தாம்உடம்புக்கு மத்தும்புறப்படும்
பெண்என்றும்தாய்என்றும் தெரியாமலேவிடும்
குத்திரம்ஆம்நர கத்திலீலேஇடும்
குடித்தவன் அடுத்தவன் எடுத்தவனும்கெடும்—மது

ங. குன்றுதவாலியை வென்றுபிறந்தேனே
கோதண்டதீக்ஷா குருவாற்சிறந்தேனே
ஒன்றுஅவன்செய்த நன்றிதுறந்தேனே
உன்னைக்குடித்தேனே என்னைமறந்தேனே—மது

ச. வையகம்தந்து மதிதந்தெனையாள
வைத்தானைஎண்ணமல் வைத்தாய்பழிமூள
ஐயையோநான்சொன்ன காலம்சற்றேநீள
ஆகாமற்போனேனே ஓகோசண்டாள—மது

லட்சுமணர் சுக்கிரீவனை இடித்தல்

விருத்தம்.

மன்னன்ஆம்சுக்கிரீவன் மதுவினல்மயங்கிவிட்டேன்
என்னவேசுருக்காய்வந்தான் எதிர்கண்டதம்பிசொல்வான்

சொன்னநாள்தவறியிந்தத் துடுக்குநீர் செய்தீர்சிந்தை
இன்னம்ஏதென்று கோபம் எழுகின்றனமொழிகின்றனே

கக-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தகாரியம்இதுகாண்-சுக்கிரீவரே நான்வந்தகாரியம்இதுகாண்

அநுபல்லவி.

வந்தகாரியம்இது வாலியைக்கொன்ற அப்போது
வணங்கிராகவனுக்கன்று மழைநாட்போய்வருவேனஎன்று
தந்துரைஆடி-அகந்தைகள்மூடி-இருந்ததைநாடி-அறிந்திடஓ
[டி—வ

சரணங்கள்

க. அங்கன்சாமிநொந்திருக்க அதுகண்டென்நெஞ்சைஉருக்க
அலைந்துலைந்தென்கால்பெருக்க அசந்துங்கள்ஊரைநெருக்க
வந்துவாசலைப்-பிடித்தேன் அடைத்தகல்லைச்
துங்கசம்ஆகஇடித்தேன் வானரங்களை
அங்கேஓட-அடித்தேன் தாயைக்கண்டு
உங்காரவார்த்தை-படித்தேன் அவள்சொன்னது
சங்கையில்ஆயிரம்கோடிபேர் வெகுதூரம்-போனார்சேனையோ
டிங்கிதோவருவார்என்இனி இந்தவிசாரம் என்றாள்பிறகே
தங் கியவாள்அனுமானும்வந்தான அந்த-நேரம்யாம்உம்அடிமை
உங்கள்உதவிமறவோம்என்றான்உபசாரம் நீரும்மெய்போலே
எங்கோமான்மலர்க்கைதொட்டீர் இருமாசம்தவணை இட்டீர்
என்காணும்வராமல்விட்டீர்-எப்படிநினைவு கெட்டீர்
இங்கிதம்ஆகியவங்கணம்மறிய விங்களம்நீர்செய்த சங்கை
வந்த [யை அறிய

உ. அஷ்டலட்சியிக்கும்அன்னை-ஆகிய சனகிமின்னை
அகலவிட்டசாமி தன்னை-அறிந்தும் அவனாலேபின்னை
விட்டீரம் சூழவைத்தீரே சொன்னநாளில்வந்
தொட்டாமல் தாழவைத்தீரே ராட்சதர்இன்னும்
நெட்டாக வாழவைத்தீரே தேவரைஎல்லாம்
பொட்டாக விழவைத்தீரே இந்தச்சாமிக்கும்
எட்டியபலசாலிகள்இருந்தால் அங்கேசேரும்-பிரம்மாதிதேவர்
மட்டிலோர்திசைஎட்டினில் அல்லோரும்-வரட்டும்சிங்க
குட்டிமுன்னேநரிக்குட்டிகள் ஆக்குவேன்பாரும்-பிறகாகிலும்
சட்டமானதளத்துடனே நீர்வரும்-அணுகொட்டாமல்
அட்டிசெய்வாயியைமுட்ட-அடித்துவெகு ராச்சியம்கட்ட
அரசுமணி - முடிஇட்ட ஆண்டவன்- உரைக்கப்பட்ட
கட்டளை எனகிற-மட்டுகள் தாண்டி - தட்டியஉங்களை-வெட்டிட
வந்த [வேண்டி

௩. கர்த்தன்உண்டபின்உச்சிஷ்டம்-கண்டுஉண்பதேஎன்அதிரு
ஷ்டம
காய்கனிதீர்ந்தால் இஷ்டம்-காணுமோ இதென்னகஷடம்
புத்திதான்எங்கே போச்சோ-ஐயனைபசியில்
வைத்துநான் உண்பதாச்சோ-ஐயையோஉங்கள்
பத்திஎல்லாம்மேற்பூச்சோ சகாயத்துரோகம்
கற்றவர்க்கித்தனை பேச்சோ-என்அண்ணன்ஆன(தண்டம்தனை
உத்தமனுக்குத்துணை மற்றுண்டோஒருவரைக்கொண்டு-கோ
சற்றேறவனைக்குமுன்செத்தானேவாலியும்பண்டு-அவனைகொன்ற
அஸ்திரம்போல்இன்னம்அஸ்திரம்அனேகம்உண்டுதெரிந்திரு
ந்துப
இத்தனைநீர்செய்ததென்ன இளக்காரம்கண்டு-காரியம்கொள்ளச்
சுற்றினீரோபிரியாமல் துரோகபுத்தி எறியாமல்
சொன்னநாளைக் குறியாமல் தோஷம்என்றும்அறியாமல்
சத்தியமோசொல்-அசத்தியமோதான்- முற்றிலும்நாடி-இட
வந்த த்தனியோநான்

வானரப்படைத்தலைவர்களும் படைத்தொகையும்.

விருத்தம்

அடல்சேர்தம்பிஇதுசொல் லவிந்தேன்அடியேன்புத்திஎன்று
உடனேசுக்கிரீவன்சாமி உபயபாதம்வந்துகண்டான்
விடவேபோனதூதர்களில் வீரர்சேரர்அணிஅணியாய்
கடல்போல்வந்துராகவனைக் கண்டார்சேவைகொண்டாரே

எ திபதை மங்களகௌசிகாகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. சுதவலிபடைகள்ஒரு பத்துகோடி—சுசே
ஷணன்படைகள்பத்துநூறு யிரம்கோடி
பதுமமுகன்பதினெல்நூ றுயிரம்கோடி—தீர்க்க
பாதகன்இடபன்ஓரா யிரம்கோடி
௨. பனசன்படைகள்பன்னீ யிரம்கோடி—நீலன்
படைகளும்பதினையா யிரமகோடி
அனுமன்இருபத்தையா யிரம்கோடி—போரில்
அட்சயனபடைமுப்பத்தையா யிரம்கோடி
௩. ததிமுகன்படைமுப்பதா யிரம்கோடி—நல்ல
சாம்புவான்ஆயிரத்தறு நூறுகோடி
மதிதுமிந்தன்நூறுநூறு யிரம்கோடி—அந்த
மயிந்தன்இருபதா யிரம்கோடி
௪. கேசரிபடைஐம்பதா யிரம்கோடி—மிக்க
கெவையாட்சன்படை ஆயிரம்கோடி

வீசுதன்முகன் இருநூறு யிரம்கோடி—வந்த
விருப்பாக்ஷன் ஒன்பதா யிரம்கோடி
ரு. குமுதன்படைநாற்பத்தெண்ணு யிரம்கோடி—நளன்
கூட்டும்படைகள் நூறு யிரம்கோடி
சமுகப்படையிந்தப்படி கூடிக்கூடி—வரச்
சாமிகண்டுமகிழ்ந்தானே கொண்டாடி.

சாம்புவந்தன் அனுமானை துதித்தல்.

விருத்தம்.

மிக்கானகவிஎழுபத்துவெள்ளம்
வீரரொடுசாமிகண்டான் சுக்கிரீவன்தான்
தெற்கானவழிசொல்லராமன்தானும்
சீதைஉருச்சொலித்தருமோ திரமும்பெற்றுன்
மிக்கானமலைகளும் நாடுகளும்தேடிப்
பிலம்புகுந்துகடந்துசம்பா தியின்சொல்லாலே
கைக்கானமயேந்திரம்சேர் அனுமான்தன்னைக்
கதிசெய்வான்சாம்புவனும்துதிசெய்யானே (கஃ)

அ-திபதை கேதாரகௌளராகம் திரிபுடைதாளம்

கண்ணிகள்.

க. ஏதுகாணும்சும்மா அறிந்தும்அறியார்போல்
இருக்கிறீர்ஆஞ்ச நேயரே
ஓதுமேன்வெண்ணெய் இருக்கநெய்தேடு
வோமோவாதராசன் சேயரே
உ. காதலால்கல்ல காலம்பிறந்துகா
ணுதுகண்டவர் பேசலவே
சீதைசேதிசம்பாதிவரயினுல்
தெரிந்திகொண்டோமே சாலவே
ந. துணியுமேன்உமக் கிலங்கைதான்என்ன
தூரமோகடல் தூரமோ
அணுவும்மகமேரு ஆகும்மேருவும்
அணுவாம்உமக்கென்ன பாரமோ
ச. வருத்தம்ஏன்இலங் கையும்உம்மிடவாலால்
மாட்டியிழுத்தாலும் செல்லுமே
திருத்தஎன்னபேச்சு விளக்கிருக்கத்தீ
தேடுவோமோநாங்கள் சொல்லுமே
ரு. ஒருத்தராய்பிரம்ம தேவன்பட்டமும்
உமக்கென்றேபுகழ் மேவினீர்

குருத்துக்குழந்தையில் சூரியன்தேர்நிலை
குலையஎதிர்கொண்டு தாவினீர்
௬. வாசவன்கைவச் சிராயுதத்தால்ஓர்பால்
மயிரும்உதிராத வீரரே
தேசம்மேல்எந்த ஆயுதங்களாலும்
சிந்தைகலங்காத சூரரே
௭. இயற்கையால்எந்த வேஷம்எடுக்கினும்
எடுக்கவேவல்ல தேவரே
சேயித்திடாதபஞ் சேந்திரியங்களையும்
செயித்திடும்மகாநு பாவரே
௮ ஓதும்சுக்கிரீவன் ஆக்கினைதெரியுமே
உயிரைவைப்பானோ நாளையே
காதுக்கிடுவதா முகத்துக்கழகெங்
கணொடப்பீர் இந்த வேளையே
௯ எட்டுத்திக்கின்அப் புறத்தினிலேகங்கை
இருக்கினும்பாய்ந்து கூடுவீர்
கொட்டைப்பக்குபோல் எட்டுமலையையும்
தொட்டெடுத்துவிளை யாடுவீர்
௰ அமைத்தசாமிமோ திரத்தைபிடித்தீரே
ஆர்க்குண்டிந்தஅதி காரமே
உமக்கில்லாப்பொறி எமக்குவந்ததோ
உரைப்பதேன்உப சாரமே

அனுமார் கடல்தாண்ட இசைதல்

விருத்தம்.

பாட்டில்வுரைக்கும்அங்கதன்முன்படித்துசாம்பன்துதிசெய்யக்
கேட்டஅனுமான்மிகநாணிகேளீர்அடியேன்தனைபொருட்டா
கூட்டிநீர்வவுதலால்நம்கோமான் அருளும்உமதருளும்
ஈட்டும்சிறையாக்கடல்கடப்பேன் என்றான்புலனைவென்றானே

கிஷ்கிந்தாகாண்டம் - முற்றும்

விருத்தம்-௰௬. கொச்சகம்-௧-ஆக௨௰
திபதைகள்-௮-தருக்கள்-௧௧-ஆக௧௬-
ஆகபாயிரம்-௧-க்கும்-காண்டங்கள்-௪க்குமகூடி
கொச்சகம்௨-வெண்பா-௨-வசனம்-௧-விருத்தம்-௧௧0-ஆக-௧௩௫
தோடையம்-௧-திபதைகள்-௩௪-தருக்கள்-௬௬-ஆக. ௱௪.
சக்கிரவர்த்திதிருமகனார்திருவடிகளேசரணம்.

————)()(————

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஐந்தாவது

சுந்தரகாண்டம்.

———(*)———

அனுமார் கடல்தாண்டப்பாய்தல்

விருத்தம்.

வாய்ந்திடுசிறுபிள்ளைஆம்பொழுதொருதினம்மாங்கனிஆம்என
காய்ந்திடுகதிர்எதிர்பாய்ந்தவன்நெடுகியகடல்களும்நிலைபிசகி
தோய்ந்திடவடவரைசாய்ந்திடவிசுவசொரூபம்எடுத்தனுமான்
நாந்துதிபேசும்மயேந்திரம்ஏறிஅண்ணாந்தெதிர்பாய்ந்தானே

க-தரு. நாதநாமக்கிரியைராகம்-ஆதிதாளம்

பல்லவி

பாயந்தானே அனுமான்மயேந்திரம்ஏறிப்பாய்ந்தானே அனுமா

அநுபல்லவி

பாய்ந்தொருமூவுல கேந்தியராவணன்
மாய்ந்திடமேவுகு லாந்தகன்எனவே—பாய்ந்

சரணங்கள்

க கெசவராகவ பூசிதனேஎனும்
வாசகம்ஆனது நேசம்விடாமல்
மோசநிசாசரர் நாசமதாய்விட
வீசியவால்எம பாசமதாகப்—பாய்ந்

உ. வட்டநெடும்கடல் முட்டஊரம்கிழி
பட்டுமறைந்திடு திட்டுகள்தெரிய
நெட்டைநெடுங்கிரி எட்டுமறும்பொடி
பட்டுதிரும்படி நட்டணை ஆகப்—பாய்ந்

ந. எடுத்தெருராகவன் கொடுத்தகைமோதிரம்
இடுக்கியகாதிலே மடற்குள்ளேஅடக்கி
மிடுக்குளராட்சதர் நடுத்தலைமேல்விழும்
இடிச்கிணை ஆகவே திடுக்கெனவோடிப்—பாய்

௪. அண்டர்கள்முனிவர்கள் கண்டதிசயமொடு
மண்டியமருமலர் கொண்டனர்பொழிய
விண்டலரவிச்சி மண்டலம்இருசிறு
குண்டலமளனமுக மண்டலம்அசைய(பாய்ந்)

௫. சுமந்திடுதாய்படரை சுமந்தவன்ஈரடி
சுமந்துயிகவ நபம் சமைந்ததினலே
அமிழ்ந்தியகடல்படு திமிங்கலமொடுதிமி
திமிங்கிலம்விசையினில் மிதந்திடமேலே(பாய்ந்)

௬. அந்தமலேயில்உள தந்திகரடிபுலி
நொந்துதிசைதிசைபி ரிந்தவவைவெருள
முந்துகொடிமுடிபி ளந்துபளபளென
உந்திணை அடிகள் உதைந்துகிளம்பி(பாய்ந்)



இலங்கணிவதை.

விருத்தம்.

வரவிஸ்வரூபம்உடன் பாய்ந்தானவார்த்தை
மைநாகற்குரைத்தான் மத்தியில்ஆங்கார
தான்ரஎனும்அரக்கிகுடல் பிடுங்கிக்கொண்டான்
தலங்குலுங்கஇலங்கைமுன்னே குதித்தான்அங்கே
காரம்உள்ள அரக்கி இலங்கனிதான் ஆல
காலம்எனவடவாசற்காவற்காரி

ஆரடாஎன்றதட்டிவந்தாள் அனுமான்கையால்
அறைகொண்டாள் கொண்டவளேதரைகண்டாளே

உ-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இலங்கணிமடிந்தாளே-அனுமான்கையால்- பலம்கெடமுடிந்தா
[ளே

அநுபல்லவி.

சலம்கொள்-ஈர்இரண்டு தலையும் விரித்துக்கொண்டு
அலங்கோலம்ஆய்புரண்டு அறைகளிற்பிரிப்பண்டு (இல)

சரணங்கள்.

க- பதைப்பினாலேஎட்டுக் கையும்பறக்கவிட்டுப்
பாரமலைபோல்எழுந் தாரவாரம்இட்டு
அதட்டிஅதட்டிஆயுத மெல்லாம்தொட்டுதொட்டு
அத்தனையும்பொடியாய் அனுமான்கைஅடிபட்டு (இல)

உ. பிடிபடாமல்இந்த ஊர்காத்திருந்தேஆதிப்
பிரம்மாஉரைத்தபடி ஆச்சுதேஎன்சேதி
அடிபட்டுக்கொண்டேன்போ கிறேன்உனக்கினிமீதில்
ஆட்டுகுட்டிகள்இந்த அரக்கர்படைஎன்றோதி (இல)

௩. ஆரும்எதிர்த்திடாத என்னைநொடிக்குள்சீறி
அடித்தாயேஉன்னைஎதிர்ப் பாரில்லைமனம்தேறி
மாருதியேநமஸ் காரம்என்றுகூறி
வணங்கிவடக்குகோட்டை வாசல்காவற்காறி (இல)

அனுமார் இலங்கையில் சீதையைத் தேடுதல்.

விருத்தம்.

மோதும்இலங்கணியை ராவணன்படைக்கு
முதற்பலிஆகக்கொடுத்து முகூர்த்தம்கொண்டு
மாதவன்ஆகிய ராமன்பாதம்தன்னை
மனங்கொண்டுராட்சதர்மேற் சினங்கொண்டப்பால்
தூதன்அனுமான் மாடகூடம்சோலை
சூளிகைமாளிகை எல்லம்சுற்றிசுற்றி
நாதன்உளம்மகிழ்ந்தருளும்சீதைதன்னை
நாடினான் இலங்கைஎங்கும் தேடினானே (௩)

ங-தரு-தோடி ராகம்-அட தாளசாப்பு.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தானே-சீதாதேவிதன்னை அநுமானே

அநுபல்லவி.

ஆடிப்பறக்கின்ற காற்றும்நுழையாத
அலயகக்கோத்தளம்எங்கும்-இலங்கைபட்டணம்எங்கும் (தேடி

சரணங்கள்.

க. வாரணச்சாலையும் மந்திரச்சாலையும்
மலர்ச்சோலையும் சாவடிகளும்
தோரணமேடையும் பூமலர்ஓடையும்
துலைகளும்தலைவாசற் படிகளும்
தேர்அடிகளும்மசொர்னப் போர்அடிகளும்செங்நற்
சேர்அடிகளும்மதில் அடிகளும்
கீரைவிரை புகுதாவளைகளும்தொளைகளும்
கெடிகளும்செடிகளும் கொடிகளும்
நாரியர்காவல் இருக்கும்சிறைகளும்
நாடகசாலையும் நவரத்தின அறைகளும்
ஏராளமாக்கோலம் எழுதியதறைகளும்
ஏகாந்தஸ்தலமும் தண்ணீர்படித்துறைகளும்
இடுக்குகளும்இருட் டொடுக்குகளும்உறி
அடுக்குகளும்மூலை முடுக்குகளும்பாய்ந்து—தேடித்

உ. மலைநிகர் ஆகிய உப்பரிகைகளும்
மாடமுமகூடமும் திரைகளும்
பலபலபுரவியின் வெள்ளமும்பள்ளமும்
பாதாளம்செல்லும் புரைகளும்
கொலைசெய்யும்அரக்கர்கள் கிடைகளும்நடைகளும்
குங்குமநீர் ஆற்றங் கரைகளும்
நலமஉள்ளசந்தியும பந்தியும்நாற்பத்து
நாலுலட்சமவீதி நிரைகளும்
அலைகடல்ஆகிய அகழியும்கேணியும்
ஆயிர வெள்ள அரக்கர்தம்காணியும்
தலையெடுப்பாக உயர்ந்தஅட்டாணியும்
சத்திரச்சாலையும் ஒத்ததிட்டாணியும்

கடத்திலும்முனிவர்கள் மடத்திலும்பெண்கள்செய்
நடத்திலும்புகைபோக இடத்திலும்போய்ப்பார்க்க— தேடித்

௩. மைந்நாகமலைபோலே தூங்குங்கும்பகர்ணன்
மனையிலும்சூழ்ந்தகொட் டகையிலுந்
பொன்ஆரமணிமார்பன் இந்திரசித்திருக்கின்ற
புதுமனையிலுமரு ளிகையிலும்
மெய்ந்நாளும்பேசும்விபிஷணன்வீட்டிலும்
வீட்டில்ஓமகுண்ட வகையிலும்
பின்அதிகாயன்அட் சயன்தேவாந்தகன்
பேரானமாடமா ளிகையிலும்
வன்னக்கிளிகள் வளர்பஞ்சரத்திலும்
வானவர்தானவர் பணிநகரத்திலும்
அன்னமண்டோதரி வாழும்தரத்திலும்
ஆவலும்அரக்கனும்சேர் அந்தப்புரத்திலும்
அணில்எனவேதொத்தி அணிஅணியாஒற்றி
அணைகள்எல்லாம்தத்தி அணுவணுவாய்ச்சுற்றி—தேடித்

அனுமார் ராவணனைக்கண்டு கோபித்தல்.

விருத்தம்.

இலகும்அரக்கனையும்மண்டோதரியும்கண்டே
இவளோசானகிஆவாள்எனஉள்ளேங்கி
நிலைகலங்கிமுகத்தொழுகுகோட்டவாயும்
நெடுமூச்சும்கண்டிவள்ஓர்அரக்கிஎன்றே
மலர்விழியில்அறைந்துகாதினிலேகையை
வைத்துடனேஅரிகரீஎன்றுசொல்லிப்
பலபலயோசனைஅனுமான்எண்ணிஎண்ணிப்
பாவிப்பான்ராவணன்மேல்கோவிப்பானே (௪)

௪-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தராவணனைக்-கண்டுசும்மாபோனால்-என்ன அனுமானநா
[னே

அநுபல்லவி.

அந்தராமத்துரோகி இவன்பலம்குறியேனே
ஆத்திரர்கிழித்தாற்போல் கிழிக்கான்அறியேனே—இ

சரணங்கள்.

க. புவி அடங்கலும் கிட்டவே-மண்டோதரி
புலம்பும்ஓசை முட்டவே-கண்டவர்கள்
எவரும்கெக்கலி கொட்டவே-வாலினாலே
இழுத்துப்பிடித்துப் பொட்டவே-கட்டி
இறுக்கிறேன்தோல்ஒடிய முறுக்கிறேன் தலைபத்தும்
அறுக்கிறேன்தேங்காய்போல் நொறுக்கிறேன் அல்லாமல்—இ

உ. பஞ்சசாலை விட்டுத்-திருட்டுவேஷம்
பண்ணிஇலங்கை மட்டும்-கொண்டுவந்தேன்
அன்னையைச்சிறையில் இட்டுவைத்தஇப்பாவி
அரக்கன்என் எதிர் பட்டும்-கன்னத்தில்
அடிக்காமலும்கைகளை ஒடிக்காமலும்நெஞ்சிலே
இடிக்காமலுமஎன் கோபம் முடிக்காமலும்போவேனோ—இ

ங. காலனுக்குப காரம்ஆகுமேதேவர்
களுக்கும்உண்டாகி காரம்விருதாவாய்
மேலினியென்வி சாரம்சாமிசொந்த
வேலைக்கிதுவே நேரம்-இப்போது
வெல்லவேணும்இவனைக் கொல்லவேணும்என்பேரைச்
சொல்லவேணும்பிறகு செல்லவேணும் அல்லாமல்—இ

அனுமார் சீதையைக் காணாததால் இரங்கல்.

விருத்தம்.

மாதரசைத்தேடஎன்று தூதனாக
வந்தஇடத்திந்தராவணனைக்கொன்றால்
பேதகமாம்இவனாரயிவாங்கவீரன்
பிரசண்டகோதண்டமேதக்கதென்று
போதுளதாமரையிலைமேல்தண்ணீர்போலும்
புதயல்இழந்தவர்போல்அனுமான்ஏங்கிச்
சீதைதனைக்காணாமல்ராமமந்திரம்
செபிங்கின்றான்வெளியில்வந்து தவிக்கின்றானே (ரு)

ரு-திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. இந்த இலங்கைநகர்-எழுநூறுயோசனை
எங்கெங்கும்போய்த்தேடி னேனே

கந்தமலர்க்குழலாள்-என் தாய்சிதையைக்
கண்ணிற்காணாமல்வாடி னேனே

உ. பாராதஇடமில்லை-தாயாம்சீதையை
பாதகன்செய்ததென்ன ரூதோ
தீராதநெஞ்சுக்குத்-தெய்வமேதுணை நான்
செய்யும்வகைதானினி ஏதோ

ங. அற்பராகும்இந்த-வஞ்சனை அரக்கர்செய்
அதர்மம்தானேமெய் தானோ
எப்படிஆகிலும்-தர்மமேதலைகாக்கும்
எனபதெல்லாம்பொய் தானோ

ச. நாடிச்சேதிகொண்டு-வருவானென்றுசாமி
ராமன்சொல்லுவானென்றன் பேச்சே
தேடிவருவேனென்று-விருதுகூறிவந்து
செடியிலேநுழைந்தாற்போல் ஆச்சே

ரு. மேட்டுக்குப்பையைபோலே-இலங்கைபட்டணமெங்கும்
வேருடனேகெல்லு வேனோ
காட்டும்என்தாயைஎன்று-ராட்சதபயல்களை
கையால்பிசைந்துகொல்லு வேனோ

சு. விலங்காமல்தவனை-சொல்லிவந்தநாளெல்லாம்
வீணேதிரிந்துகுறைத் தேனே
சலந்தனிலோஇந்த-நிலந்தனிலோநாக
தலந்தனிலோமறைத் தானே

எ. உலகிலெந்தக்காரியமும்-ஒருதரம்ராமாஎன்றால்
உடன்கூடுமென்னுமல்லோ வேதமே
பலதரம்ராமாஎன்றும-எனக்கிந்தக்காரியம்
பலியாததென்னவி னோதமே

அ. ஆனைதன்பலந்தன்னை-அறியாதுபோலேதேவி
ஆராரைகைகுவிக்கி றாளோ
பூனைமுன்கிளிபோலே-எவர்கள்முன்னேஎன்தாய்
புலம்பிப்பரதவிக்கி றாளோ

கூ. வாதைப்பட்டரக்கர்-முட்டைபோலேசுங்க
மலைமலையாய்ப்பிடுங்கிச் சாடவோ

சீதையைக்காட்டுமெட்டும்-கிடஎன்றுராவணனே
சிறையிலேவாலிபோலே போடவோ

ய. ஏதோஎன்றிருக்கும்-ராகவன்முகத்திலே
எப்படிப்போய்விழிப் பேனே
மாதாவைக்காட்டென்றிங்-கேஇந்தராவணனே
வாலாலேமாட்டிஇழுப் பேனே



அனுமார் சீதையைக் காணுதல்.

விருத்தம்.

கொண்டலெனும் அனுமான் இப்படிகலங்கி
கோலிழந்தகுருடனெனநின்றுன்முன்னே
மண்டியதோர் அசோகவனம்கண்டான் தாவி
வந்ததிலோர்மரத்திருந்தான் அந்தவேளை
அண்டரியஒருமூலையார்பத்துக்கையர்
அரிமுகத்தர்பரிமுகத்தர் அனேகம்பேர்கள்
கண்டகவல் அரக்கியரகள்நடுவிலேஓர்
கருக்கண்டான்சீதைதிருஉருக்கண்டானே

௬-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சீதையைக் கண்டானே-அனுமான்-செடிமேல்நின்று
சேவையைக் கொண்டானே-அனுமான்

அநுபல்லவி.

ஆதவன்காணாத இலங்கைமடுகிலே
அரக்கியரென்கிற புலிக்கூட்டம்நடுவிலே—சீதை

சரணங்கள்.

க. தாயிவள்தாயிவள் நிலவரமே-சாமி
தனக்கும்இவள்மெத்தம நேசரமே
தீயையுஞ்சுடுமிவள் சரித்திரமே-தெய்வ
தெய்வங்களுக்குமிவள் மீசரமே
சாயுஞ்சந்திரசூரிய வம்மிசமும்பெருக்கும்
தனியாந்தருமமும் இனிமேலல்லோசெருக்கும்
எய் அடையாளங்கண்டேன் அஞ்சேன்ஒருவருக்கும்
என்றுசெல்தரித்தாலும் இருந்திடத்தேஇருக்கும்—சீதை

உ. தேவிக்குத்தாயென்பார் அல்லோபூமி-அவள்
திடத்தையும்வென்றாள் இந்த அபிராமி
பாவிஅரக்கர்க்கிவள் காலநேமி-இதைப்
பார்க்கப்பெற்றனில்லையே என்சாமி-என்று
பூவிளந்துகில்மேல் அழுதழுதுமொய்த்த
புனல்தானேமுலைத் தடஅனலாலேவற்ற
சேவலைத்தேடுமிளம் பேடைபோலேமெத்த
திகைத்துத்திகைத்துவட முகத்திலேமுகம்வைத்த-சீதை

ந. இருஷிகட்குமகிமை என்னகண்டு-இவள்
ராமமூர்த்தி வனத்தைக்கொண்டு
சருகுபோலேவற்றிப் பொசிப்பைவிண்டு-அம்மை
தான்செய்யுந்தவமே மகிமைஉண்டு
ஒருசூரியன்முன்னே மதிபோலிந்தவல்லி
உவமைகொண்டாள்அரக்கர்ஒழியஎவர்க்கும்நல்லி
திருவேஇவள்அந்த அரியகோதண்டவல்லி
செயமினிசாமிகாரியம் பயமில்லைஎன்றுசொல்லி—சீதை

சீதாதேவி திரிசடையோடுமுறையிடல்.

விருத்தம்.

அனுமான்இந்தப்படிசீதைதனைமரத்திலிருந்துகண்டான்
அப்பால்அந்த

வனிதையுந்தாமரை இலைமேற்கலங்காராய்ந் திரிசடைதான்
வதனம்பார்த்தாள்
கனமுள என்சிறைநீங்கிச்சாமிமுகந்தனைக்காணக்
கடவேனோநான்
உனதுமதிவதென்றே உருகுவாள் அம்மைசொல்லி
உருகுவாளே (எ)

எ-திபதை நீலாம்புரிராகமாதிதாளம்

கண்ணிகள்.

க. ஐயோ நானொருபெண்பிறந்தகதையை
அருடனேசொல்லுவேன் திரிசடையே
தெய்வமும்நீபெற்ற தாயும்நீ அல்லால்வேறு
திக்குண்டோகேளாயம்மா திரிசடையே

உ. மங்கைமார்கொண்ட கணவனைப்பிரிந்தசல்
மனையிலுமிருப்பாரோ திரிசடையே
எங்கெங்கும்வசை ஆச்சேகேட்பவர்
என்னென்றுபழிப்பாரோ திரிசடையே

ஙு. கடலிலேயிந்த இலங்கைஇருக்குதென்று
காகுத்தர்அறியாரோ திரிசடையே
தொடரும்என்சேதி அவருக்குச்சடாயுராசர்
சொல்லாமல்இறந்தாரோ திரிசடையே

ச. துணை ஆகவேவைத்த கொழுந்தனைஅவர்பின்னே
தாரப்போகச்சொன்னேனே திரிசடையே
கணவனார்மெச்ச நீலி இவளென்றென்னைக்
கைநழுவவிட்டாரோ திரிசடையே

ரு. சுத்திரஞ்செய்து ராட்சதன் இவன்என்னைக்
கொண்டுவந்தானல்லோ திரிசடையே
இத்தனைநாள் அவன் தின்றுவிடுவானஎன்றே
எண்ணித்திரும்பினாரோ திரிசடையே

சா. அரசில்லா அந்த நாடுகாடச்சுதென்று
ஆலோசனைசெய்து திரிசடையே
பரதனும்தாய்மாரும் வந்து அழைக்கஅவர்
பதியிலேபோய்விட்டாரோ திரிசடையே

௭. சனகராசன்வில் ஒடித்தவன்முன்னெறிந்த
தடந்தோளைஎன்றுகாண்பேன் திரிசடையே
கனமுடனேபரசு-ராமன்வில்லைப்பறித்த
கைகளைஎன்றுகாண்பேன் திரிசடையே

௮. வைத்தபோதிலம்மைகையை-பின்னே அந்த அரசை
வாங்கியபோதிலும் திரிசடையே
சித்திரச்செந்தாமரை-மலரைப்போலேமலர்ந்த
திருமுகமென்றுகாண்பேன் திரிசடையே

௯. கொழுந்திநானென்றுமருக-னுக்குத்தான்தோழனென்றும
கூறினதும்பொய்போமோ திரிசடையே
எழுந்துசெல்லும் விராதன்-துதியைமனமகிழ்ந்த
இரக்கமும்போய்விட்டதோ திரிசடையே

௧௦. கரதூஷணர்படி-நாலாயிரந்தேரும்
களத்திற்பொடிசெய்தாரே திரிசடையே
சரவேகமும்கையும்-மெய்யுமென்னிருவிழி
தம்மில்நிற்கின்றதையோ திரிசடையே

௧௧. வல்லவர்பெருக்குப்-புல்லும்ஆயுதமென்ற
வழக்கச்சொல்லைப்போலேத் திரிசடையே
புல்லினாற்காக்கை-கண்கொண்டோர்கண்கொடுத்த
புண்ணியரைக்காண்பதென்றோ திரிசடையே

௧௨ சற்றும்வைத்துப்பாராமல்-பாவிராவணன்வார்த்தை
தணல்போலிறைக்கிறானே திரிசடையே
பத்துத்தலையும்பனங்-காய்போல்விழுந்துருளப்
பார்ப்பதெந்நாளோநான் திரிசடையே

௧௩. பாயுங்கைகளுமென்னைப்-பார்க்கும்கண்களுமிக்கப்
பழிவார்த்தைசொல்லும்வாயும் திரிசடையே
பேயும்பெருங்கழுகும்-நாயும்நரியும்பிச்சுப்
பிடுங்கித்தின்னக்காண்பேனோ திரிசடையே

௧௪ குடிமகனிந்திரசித்தன்-கொழுந்தனாற்பட்டானென்ற
கூக்குரலென்றுகாண்பேன் திரிசடையே
அடியற்றமரம்போல்மன்-டோதரி ராவணன்முன்
அலறிவிழக்காண்பேனோ திரிசடையே

கரு. பேயாம் அரக்கனையும்-சேனைகளையுமென்றன்
பிராணநாதர்கொல்லாரோ திரிசடையே
தாயேஉன் அப்பன்வீடு-பாற்கடல்போலேபொங்கித்
தழைக்கநான்காண்பேனோ திரிசடையே

கசு. இடதுகண் துடிப்பதும்-இடதுதோள் துடிப்பதும்
ஏதோ அறிகிலேனே திரிசடையே
இடதுசெவியில்ஒரு-வண்டுவந்தூதக்கண்டேன்
என்னசொல்லடி அம்மா திரிசடையே

கஎ. வந்தசாமிமுன்-மிதிலையில்என் கைதொட
வரக்கண்டகுறியிவை திரிசடையே
அந்தநாளின்குறி-இந்தநாளிலும்கண்டேன்
அதிசயம்ஏதோ அம்மா திரிசடையே

சீதாதேவிக்குத் திரிச்சடைகனநிலைஉரைத்தல்.

கொச்சகம்.

கோதைமனம் தளர்ந்திந்தக்குறிகுணங்கள்சொன்னளவிற்
தூதுவன் இப்போதுனக்கோர்சுபவார்த்தைசொல்லுவன்காண்
காதலியோநானும்நல்ல கனவுகண்டேன் கேள்எனவே
சீதைமனம்தேறியிடத் திரிசடையும்சொல்லுவாளே

அ-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்

பல்லவி.

என்கனவைகேளாயம்மா-சானகி அம்மா-எனுனக்குகவலைசும்மா

அநுபல்லவி.

மங்களமுனக்குண்டாமே வல அரக்கன்வாழ்வுபோமே—எ

சரணங்கள்.

க. சுந்தரிமண்டோதரி வெறுந்தலையைசீவினள்
அந்திடத்திலேஅவள் விழுந்தழுதுகூவினள்
இந்தமன்னன்வீடுவிட் டெழுந்தொருபெண்தாவினள்
என்தகப்பன்வீட்டிலவள் வந்துசந்துமேவினள்—என்

௨. பூவுகளெல்லாங்கரிக ளாக்கருகவும்கண்டேன்
கோவில்களெல்லாமெழுகு போலுருகவும்கண்டேன்
பேய்வகையும்நரிகளு மேபெருகவுங்கண்டேன்
ராவணன்எண்ணையத்தலையோடேவரவும்கண்டேன்---௨

௩. பத்துமுடிராவணனைக் கொத்துடனேசொல்லவோ
வைத்தசிறைவிட்டமரர் சொஸ்தமொடுவெல்லவோ
உத்தமியுன்பத்தினி மகத்துவமென்னசொல்லவோ
இத்தனையும்இலங்கைக் கனர்த்தமென்பதல்லவோ--௩



சீதாதேவிபக்கல் ராவணன் குறையிரத்தல்.

விருத்தம்.

திரிசடை இப்படிசொல்லச் சனகிகொஞ்சந்
தெளிந்தளவிலிதுநல்ல வேளைஎன்றே
மரம்உறையும் அனுமானும்குறுகும்போதில்
மகுடம்ஒருபத்தும்மின்னமாதராட
அருகினிற்கட்டியம்போட அந்தராவில்
அரக்கன்வந்தான அருந்ததிக்குந் தெய்வமாகும்
கருணைவல்லிசீதைமுன்னே தான்ஏதேதோ
கரைக்கின்றான்பல்கெஞ்சி உரைக்கின்றானே ௬

௬ தரு பந்துவராளிராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன்நான் என்னசெய்வேன்நான்
என்னசெய்வேன்மிதிலை அன்னமே
மன்மதன்கணையாலேபட்டுவிழுவேனென்று
மலரயனவகுத்தானோ முன்னமே

௨. அங்கம்நைபவும்வீட்டுப் பெண்கள்வையவும்காமன்
அம்பாலெய்யவுஞ்சிந்தை நோகவே
திங்கள்சுடவும்பனி அன்றில்சுடவும்வீசும்
தென்றல்சுடவும்வெந்து போகவே

௩. ஆலைக்கரும்புபோலும் வேலைத்துரும்புபோலும்
ஆசைவலையிற்சிக்கி மாயவோ
மாலைக்குங்காலைக்கும் ஊண்உறக்கமில்லாமல்
வரவரநாளுக்குநாள் தேயவோ

௪. அந்நாதும்நெல்ஆனேனேநொந்துகொந்துபோனேபோ
அனுக்கிரகம்நீசெய்ய வேணுமே
சந்தோஷமாகப்பாராய் என்தன்கவலைதீராய்
சாஷ்டாங்கதெண்டனிட்டேன் காணுமே

௫. மறக்குமோஉனதாசை வார்த்தைஒன்றருளாயோ
வானோர்ப்பழிக்கநின்று கூசவோ

பிறக்கும்பிறக்கும்தலை முறைக்கெல்லாம்ராவணனோர்
பெண்ணால்இறந்தானென்று பேசவோ

௬. பதியுமுனதெனது நிதியுமுனதுசொன்ன
படிகேட்பேன்அடிமை ஆகுவேன்
இதிலேவதைபடாமல் தயைபாராய்கதிதாராய்
எங்கேநான்இனிப் போகுவேன்

௭. வான்ஆளும்தேவரும் மூவரும்தினம்வந்து
வணக்குமென்கவலையைத் தீர்த்திடாய்
நானேஉன்னைப்பணிந்தால் பதிலால்உலகுக்கும்நீ
நாயகிஆம்அல்லவோ பார்த்திடாய்

௮. கண்ணுங்கருத்துநீயே மன்மதன்செய்யும்போரை
காட்டிலும்நல்லதெம வாதையே
எண்ணம்தப்பிப்போனேனே நாயிலும்பேயனேனே
எனக்கொருபுத்திசொல்லாய் சீதையே

சீதாதேவி ராவணனை இடித்தல்.

விருத்தம்.

மிண்டாளன் அரக்கனிந்தவின்வார்த்தைசொல்லசொல்லக்
கண்டாள்சனகியுமென்றன் காகுத்தர்சரத்தினாலே
உண்டானதெல்லாம்தோர்க்க ஊழிவந்தடுத்ததையோ
சண்டாளஎனக்கோபித்துத் தள்ளுவாள்விள்ளுவாளே ௰

௰-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராட்சதப்பதரே துன்மார்க்கவார்த்தைகள்
ஏர்க்குமோபோடா அடராவணா—ராட்சதப்பத

அநுபல்லவி.

காட்சியாஎன்னைப் பார்க்காதே-இந்த
தாழ்ச்சியாம்பழி ஏர்க்காதே-உன்
வாழ்ச்சிவீணிலே போக்காதே-அர
சாட்சிஆனதைத் தோர்க்காதே-அட—ராட்சதப்

சரணங்கள்

க. கிளைக்கும்மூன்றுலோகமும்செலுத்தும்உன்கோலும்உன்
கீர்த்தியும்என் தொலைக்கிறாய் - கெறுவத்தாலே [தன்
வெளிக்கபகீர்த்தி ஆகப் பாவபுண்ணியமும்பாரமல்
விருதாவிலேஎன் குலைக்கிறாய்-ஆகாசமட்டும்
அளக்கும்இருப்புத்தூணைச் செல்அரிக்குமோஇத்தை
அறியாமல்என் மலைக்கிறாய்-அக்கினிதன்னில்
குளித்துத்தவங்கள்செய்து பெற்றவரத்தையெல்லாம்
கொஞ்சத்தில்என் கலைக்கிறாய்-அடசண்டாளா
வளர்த்தியவார்த்தைகள் படியாதே-தணல்
ஒளிக்கமுன் தானையில முடியாதே-என்னை
இளக்காரமாக்கிட்டத் துடியாதே-எரி
விளக்கினிற்பூச்சிபோல் மடியாதே—ராட்சதப்

உ. காயத்துடன்பிறந்த தங்கைமூக்கும்மூலையும்
காதும்அறுக்க விடுத்தாய்-வெளிகில்லாதென்
நாயகர்க்கஞ்சிஅந்த மாயமான்பின்னேதிரிட்டு
நாய்போற்பதுங்கி அடுத்தாய் நமன்போலும்உன்
தீயரூபத்தைக்கண்டு மூர்ச்சையாய்போனஎன்னைத்
தீண்டாமல்மண்ணோடெடுத்தாய்-கொல்வேனென்றுமே
பாயும்சடாயுவாலே பூனைவாய்எலிபோலுன் [ல்
பவிஷெல்லாம்பறி கொடுத்தாய்-அடசண்டாளா
தாயிவள்என்மனம் அறியாதோ-போடா
பேயேஇம்மாத்திரம் தெரியாதோ-என்னைத்
தீயுரைசொன்னனுக் கெரியாதோ-பத்து
வாயிலும்புழுவாய்ச் சொரியாதோ-அட—ராட்

ங. குதிக்கிறாய்சும்மாபோமோர் இப்பாவம்பின்னுக்கொன்று
கோடியாய்வந்து வாய்க்குமே-உன்செல்வம்எல்லாம்
செதுக்கிறஅரம்போலென் பொறுமைஆகிறதர்மம்
தேவதைதானே தேய்க்குமே-உன்குலந்தன்னை
மதிக்காஎட்டியைக்கூட்டி இலவுந்தீப்பட்டாற்போலென்
வயிற்றெரிச்சலே தீய்க்குமே-என்பிராணநாதர்
விதிக்கும்பாணம்உந்தன் தலையைப்பனங்குலைபோல்
வெட்டிவெளியிற் சாய்க்குமே-அடசண்டாளா
அதற்குள்ளே துள்ளிச் சாகாதே-இந்த
பதைப்பினாலொன்றும் ஆகாதே-வாய்
மதத்தினாற்கெட்டுப் போகாதே-நாளைக்
கொதிக்கும்நரகத்தில் மூழ்காதே-அட—ராட்ச

சீதாதேவி தனியேபுலம்பல்.

விருத்தம்.

சானகிஇப்படிவைய அரக்கன்சீறித்
    தான்நடந்தான் அரக்கியரைக் கலக்கச்சொன்னன்
ஆனதுகண்டனுமானும் இவனைஇங்கே
    அடிப்பேனென்றுகையொடுகைபிசைந்தான் அப்பால்
தானொருமந்திரஞ்செபித்தான் மாதரெல்லாம்
    சவம்போலேஉறங்கிவிட்டார் அந்தவேளைக்
கானகத்தில்இளங்குழந்தை போலேசீதை
    காங்குவாள்தனியேதான்ஏங்குவாளே கக

க-தரு ஆனந்தபைரவிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

தேற்றுவாரில்லை ஆற்றுவாரில்லைதெய்வமேஎன்னசெய்குவேன்
ஏற்றுமரக்கியர்வார்த்தை இடும்பைவிட்டெந்தநாள்இனியுய்குவேன்
சொந்தவீட்டிலிருஎன்றசாமியை தடுக்குசோல்லிஎழுந்தேனே
அந்தவினைக்கிந்தஇலங்கையிலேபொல்லாஅருஞ்சிறையில்விழுந்தேனே
தம்பிமார்அன்னைமார்எல்லாரையும் தவிக்கவிட்டுவந்தபோதே
என்பொருட்டில்அவர்க்கிங்கேவரமனம் ஏன்வருமோவராதே
நிறைதவசுக்குக்குறைஇவளென்று நினைந்துகைவிடுவாரோ
பறையர்ஊரிலேசிறைஇருந்தஎன்னை பரிந்துகைதொடுவாரோ
தாழ்வுசெய்தேனோதெய்வமேஎன்தன் சாமிநெஞ்சைஉருக்காயோ
பாவிஉயிரேஎன்சாமிதிருமுகம் பார்க்குமட்டும்இருக்காயோ
ஏதுகாண்இவர்அரக்கிமார்களோ இந்தப்பேரிடுவான்ஏனே
நாதன்பிரியவும்இன்னம்இருந்தேனேநானல்லோஅரக்கிதானே
தந்தைசனகனும்இந்தவினைகண்டு தன்னுயிரும்பிழைப்பானோ
அந்தஇளையகொழுந்தனும்என்னை அருமைசொல்லிஅழைப்பானோ
புல்லும்பூமியும்உள்ளமட்டும்இந்தப் பொல்லாபழிசிறந்தேனே
சொல்லுவார்சொல்லுவசைக்கெல்லாம்ஒரு தோதகிபெண்பிறந்தேனே

அனுமார் ஸ்ரீராமரை வர்ணித்தல்.

விருத்தம்.

அன்னையெனுஞ்சானகிஇவ்வாறாறுவாடி
    ஆவிஇனிவைத்திரோ னென்றுபிராலன்

தன்னைவிடங்கினங்தொருபூஞ் செடிக்கீழ்வந்தாள்
சாமிஅனுமானும்முன்னே வணங்கிக்கண்டு
என்னதசரதராமன் தூதன்நானே
எங்கெங்குந்தேடினேன் அனுமான்என்பேர்
சொன்னபடிசொல்லவந்தேன்சாமிரூபம்
சொல்லுவேன்என்றெடுத்துச் சொல்லுவானே

அ-தரு கேதாரகௌளாாக ஆதிதாளம்

பல்லவி

அந்தராமசவுந்தரியம்என்னால் - அறிந்துசொல்லப்போமோஅ
ம்மா

அநுபல்லவி

கந்தசேமவும்அர - விந்தமலரும்அவர்
காலுக்குநிகராமோ - கைக்குத்தான்சொல்லப்போமோ—அ

சரணங்கள்

க. உருண்டமணிமுழங் - காலுக்குவன்மைஅவர்
உடையஅட்சயத்தூணி ஏர்க்குமே
திரண்டபெருந்தொடை - இரண்டுக்கும்எட்டுத்
திசையானைத்துதிக்கையுந் தோர்க்குமே
வரிந்தமரவுரி - இடையும்நடையுங்கண்டோர்
மனதைஎல்லாம்உரிக்கி வார்க்குமே
தாந்தரமாயுல - கிருந்தவயிற்றுக்குச்
சரிசொல்லகூடுமோ ஆர்க்குமே
விரிந்தமர்புக்கிணை பூமிஅகலங்காணும்
விளங்கும்கழுத்துக்குநேர் இளங்கமுகேபூணும்
பரந்தபுசங்களுக்கு மேருமலையும்நாணும்
பார்க்கப்பார்க்கபதி னயிரம்கண்கள்வேணும்—அந்த

உ. அதிசயமுடன் - பளபளென்றிலகுகண்
ணடிநிகர்த்தக போலமும்
மதிகள்ஒருசத - கோடிக்குமேலான
மங்களமலர்முகக் கோலமும்
கதியேன்றடுத்தவர்க்குப் பதியும்நிதியும்தரும்
கருணநயனவி சாலமும்

குறிகொள்ளும்பவள - வாயும்சிறுநகையும்
குருமந்தகாசசவி லோலமும்
புதுமலையினில்விழும்பொன் அருவியைபோலும்
பூமணிமார்பினிற் புரளும்முப்புரிநூலும்
எதிரில்லாதகோ தண்டமும்ஒருகாலும்
எழுதவொண்ணுமென்றால் ஆமோமன்மதனாலும்—அந்த

௩. பெருத்ததாமரை - இலைபோலேஒளி
பெருகியமேனிச்சிங் காரமும்
எரித்தசிந்தூர - ரேகையும்புருவமும்
வளர்ந்தநெற்றிவிஸ் தாரமும்
பருத்ததிருமுடி - வேணியும்வேணியில்
பசுந்துளவமலர் ஆரமும்
தரித்ததிருவாழி - கொடுத்துன்சேதியைத்
தனியேயென்னுடன்சொன்ன சாரமும்
திருத்திசசொல்லவெகு வாய்இல்லைஒருவாயே
தெரிந்தும்தெரியாமலும்சொன்னேன்நீபொறுப்பாயே
ஒருக்காலேஉண்டவர் மகிமைநீஅறிவாயே
உனக்குத்தெரியும்வேதம் தனக்குத்தெரியும்நாயே—அ

சீதாதேவி லட்சணியைத் தேரிசித்தல்

விருத்தம்

காட்டியேஇந்தவண்ணம் ராமர்க்குள்ள
நற்குறியெல்லாஞ்சொன்னான் நாடுவிட்டுக்
காட்டிலேநடந்ததுவுஞ் சுருங்கசொன்னான்
கரதலாகமலம்போல் அனுமான்பின்னே
ஆட்டியிடும்பசியாலே விழுந்தோர்கையில்
அண்டர்உலகத்தமுதம் ஈந்தாற்போல
நீட்டினான்திருவாழி அதனைக்கண்டாள்
நிசங்கொண்டாள்சீதை பரவசங்கொண்டாளே (௰௩)

௬-தரு-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

கொண்டாளே - சாமிமோதிரம் - கண்டாளேசீதை

அநுபல்லவி.

எண்டிசைபோற்றிய இலங்காபுரத்திலே
என்அனுமானிட பொன்இருகரத்திலே—கொ

சரணங்கள்.

௧. கந்தமலர்க்குழல்-மேலேசூடிக்
கண்ணுக்குக்கலத்தண் ணீர்விட்டு
காணக்கிடைத்ததே-கார்த்திகைப்பிறைபோலே
கண்டேனேஎன்று முறைபட்டு
அந்தராம-மந்திரமெழுதிய
அடையாளமோ திரந்தொட்டு
அணைத்துமுலைமேல்-இணைத்துடம்பிலே
அடங்காமகிழ்ச்சிகொண் டடிக்கடிமுத்தமிட்டு—கொ

௨. எரிந்தபசியால்-வருந்தும்நாகம்முன்
இழந்தமணிதன்னை அடுத்தாற்போல்
ஏதினிமேல்வா-ராதென்றெழிந்தவர்
எறிந்தஉடமையைக்கண்டெடுத்தாற்போல்
பெருந்தறையிலொரு-கால்மேலேநின்று
பிள்ளைபெற்றுமலடி படுத்தாற்போல்
பின்னும்முன்னுந்தோன்-றாமல்தவிக்கிற
பிறவிக்குருடனுக்குத்-தெய்வமகண்கொடுத்தாற்போல் —

௩-சிந்தாகுலம்-விண்டேனேஉன்
திருவாக்காலென் குறைஆற்றி
தீயராவணப்-பாவிஊர்இதைத்
தேடிவந்தாயேஎன் மனம்தேற்றி
தந்தாயேஎன்-சிவனேஉனக்கினித்
தருவதென்னஇதற் கெதிர்மாற்றி
தாயுந்தந்தையுங்-குருவும்தெய்வமும்
சகலமும்நீயேஎன் றனுமானைவாழ்த்தி—கொ

அனுமார் சீதைபிரிந்தபின் நடந்தசேய்திகள்

அயனுக்குவிரித்தல்.

விருத்தம்.

கண்டுதிருவாழியினுல்மகிழ்ந்தசீதை
கடல்பாய்ந்தவிஸ்வரூபத்தைக்காட்டக்
கொண்டுமகிழ்ந்தாள்பின்னும்அனுமானேநான்
கோணுமல்மானுக்காய்நெடுந்தூரத்தில்
மண்டிரகுவீரனைபோய்மீண்டவாறும்
வந்திளையோனுடன்கலந்தவாறும்நீதான்

பண்டுபழகியவாறுஞ்சொல்வாயென்ன
படிக்கின்ருன் அவள்குறையைமுடிக்கின்ருனே (கச)

ழ-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேளம்மாசோல்லுவேன்-முன்உள்ளதெல்லாம்- கேளம்மாசெ
[ாலுவேன்

அநுபல்லவி.

நீளமான்ஆனமாரீசன்மறைந்துநின்றுடனேஉயிர்கொன்றுட
மீளவேரகு-வீரனவந்துசேர்ந்தபின்—கேள் [னேவழி

சரணங்கள்.

க. இனம்பிரிந்தமான்போலே என்தாயேஉன்னைநாடி
உணும்கனிகாய்களும்போய்உலேவாய்மெழுகாய்வாடி
அனந்தம்காடுமலேயும் ஆறெங்கும்தேடித்தேடி
தனந்தனியேபுலம்பித் தம்பியாலுயர்கூடி
வனந்தனிலவந்துச டாயுவினுல்மதிதேறவே-ராவணன்
முனேந்ததெல்லாம்சொல்லிஅவன்உயிர்வாகனம் ஏறவே-அங்கே
சினந்துகவந்தனை வென்றுசவரிமொழிகூறவே-உன்தன்னை[ரம்
நினைந்துநினைந்தழி வானதுபொய்த்தடமாறவே-நாயேனும்
பணிந்திடவேதன தடியருளாக்கிப்
பணிகளும்மணிகளும் வகைவகைநோக்கித்
துணிந்திடும்வாலியைமாட்டினன் முன்னே
சுக்கிரீவனைமுடிசூட்டினன் பின்னே—கே

உ. அறிகிறதூதர்தம்மை அந்தந்ததிசையில்ஏவி
நெறியேதெற்க்குத்திசைக்குநீபோஎன்றென்னைகூவி
பொறியேஆரும்மோதிரம்கைப் போட்டதுதந்துதேவி
குறிகுணமெல்லாஞ்சொல்லக் கொண்டுதென்திசைதாவி
முறைமுறையேவெகு-தேசமெல்லாமலேந்தெட்டினேன்-என்
னேடே
பிறகுசெல்வாரைவாராதிருமென்று தட்டினேன்-அன்னேரம்
தரையிலிருந்தாகாசமளவும்போய் முட்டினேன்-மயேந்திர
பருவதமேல்நின்றுபாய்ந்திலங்காபுரி கிட்டினேன்-கோட்டைக்
குறுகுறெனநடக் கிறவேளையிலெதிர்[குள்
கொண்டிடும்லங்கணி தொண்டையும்மண்டையும்

நெறநெறனநெரிந் திடவேஊர்விட்டு
நீங்கினள் ஆவயை வாங்கினேன்னானே—கே

௩. அகலும்இலங்கைஎல்லம் அனு அனு ஆகச்சுற்றி
தகைசேரும்மத்திட்ட தயிர்போலவேஎன்புத்தி
நிகழும்வேளியில்ராம நேசயவந்தபற்றி
மகிழவே அசோக வனத்தில்வந்தேனேஒற்றி
வகைஉடனேராவணன் வந்துன்எதிர்படித்ததும-சண்டாளா
அகலநில்லடாஎன்றுநீ வாய்மேல்அடித்ததும்-அம்மாஉன்
முகமலர்மேல்இருகண்ணால்முத்துகள் வடித்ததும்-அடியேன்
சகலமுமஅறிவேன்உனதிடதுபுறம் துடித்ததும்-இதெல்லாம்
பகலவன்முன்பனி ஆயவிடுமமெய்யே
பாவிஅரக்கர்கள் வாழ்வதும்பொய்யே
செகமுழுதிலும்ஒரு திருவுளமேபொது
தேன்மொழியே அம்மா யேன்வரலாறிது—கே

அனுமார் சீதாதேவியை வரங்கேட்குதல்.

விருத்தம்.

சொல்லிஇந்தவகை அனுமான் பின்னும்என்தன்
தோள்மேலேஎழுந்தருள்வாய் அங்கேபாய்வேன்
அல்லதிலங்கையோடெடுப்பா யெனினுஞ்செய்வேன்
அரக்கரைவேர்பிடுங்கெனினும்கணத்திற்செய்வேன்
அரக்கர்சிறையிலே கண்டான்மீட்கப்
பயப்பட்டான்உயிரைக்காப் பாற்றினேன்
றெல்லவருஞ்சொல்பபோகேன் தாயேசீதை
ஏதென்றுன் இதற்குவகைஓதென்றானே (௰௫)

அனுமாரைச் சீதாதேவி மனுகேட்குதல்.

விருத்தம்.

எண்ணிஅனுமான்இந்த வார்த்தைசொல்ல
எனைஒருவரும்தொடப் போகாதுகண்டாய்
மண்ணதைத்தொட்டரக்கன்எனைஎடுத்ததுகண்டாய்
வலியகோதண்டபதிஅவர்பேர்கண்டாய்
நண்ணிஎந்தன்சிறைஅவரே மீட்டிடாமல்
நடைதூதன்மீட்டால்எப் படிஆம்கண்டாய்
கண்மணியேம்கனேஎன் றவனைநெஞ்சம்
கரைக்கின்றாள்சீதைகனிந் துரைக்கின்றாளே

கக-தரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இம்மாத்திரம்செய்வாய் அனுமானே · என்னைவேண்டிநீ
இம்மாத்திரம்செய்வாய் அனுமானே

அநுபல்லவி

சும்மாவிட்டுவிட்டாலே - தோஷம்உண்டுந்தன்மேலே—இம்மா

சரணங்கள்

க. வேடிக்கைக்கோபிடித்தார் வில்லு-அவர்க்கிந்தவூர்
சுடோஇதெல்லம்ஒரு சில்லு-நான்சபித்தாலும
காடாகாதேஇலங்கைக் கல்லு-துணிந்தவர்க்குப்
பாடோபிராணன்என்னஓர் புல்லு-அந்தாதிப்போட்டு
கூடுமாத்திரம்இருந்த நெல்லு-போலேஅனேனே
ஓடிப்போய்சாமிமுன்னே நில்லு-அவருடனே
கூடவேஅயோத்திக்குச் செல்லு-என்னைஎங்கேஎன்று
தேடும்மாமிமார்க்குநான்
தெண்டனிட்டேனென்று சொல்லு—இம்மா

உ. குருவார்த்தைஆகஉன்மேற் பாரம்-போட்டுச்சொல்கிறேன்
ஒருமாதம்நிற்கும்என் சரீரம்-கல்யாணம்செய்த
பெருநாளிலனமன விசாரம்-அறிந்துகைமேல்
பரவசம்சொன்னூரே விஸ்தாரம்-அத்தைநம்பிநான்
வருவார்அல்லோ இத்தனை தூரம்-என்றிருந்ததை
தெரியாமல்ஊர்க்குப்போம்அந்நேரம்-நீயும்கூடப்போய்
அருகேநான்சொன்ன உபசாரம்-சொன்னபின்கங்கை
கரைக்கண்டால்சிதைகடனும்
கழிக்கச்சொல்வாய் உபகாரம்—இம்மா

ங. ஆதியில்பொனமானுக்கா வர்து-சொன்னதுண்டந்த
வேதைபொறுக்கச்சொல்என்மீது-பெண்களுக்கெல்லாம்
பேதமைஎன்பது விடாது அதுகொண்டென்ன
வேதன்சொன்னசாபம் பொல்லாது என்னைராவணப்
பாதகன்அணுகக் கூடாது என்றுதிரிசடை
மாதாவுரைத்தாள்பயம் ஏது-என்றிருந்தாலும்
மேதினிவாய்மூடப் போகாது-ஆகையினாலே
சீதாராமன்தன்பேரைச்
செலுத்தச்சொல்வாய் இப்போது—இமமா

அனுமார் சீதாதேவிக்குத் திடம்கூறுதல்.

விருத்தம்.

வடித்துவடித்தன்னை இந்த வார்த்தைசொல்ல
பாருதியும்நகைசெய்தான் விழல்கூளத்தை
இடிப்பதுபோல் அரக்கர தம்மை இடிக்கச்சேனை
எழுபதுவெள்ளமுஞ்சேரும் எனதுதோள்மேல்
அடித்தலங்கொண்டென்சாமி சேர்வார் தம்பி
அங்கதன்தோள்மேற்சேர்வார் அவர் அம்பாலே
பொடிப்பொடியாய்ராவணனும் தரையில்ச்சேரும்
போரும்வரும்பாரும்எனப் புகலுவானே.

கஉ. தரு-சாரங்கநாகம் ஆதிதாளம்.

பல்லவி.

எட்டுநாளையிலேபாரும்-அம்மா-ராவணன் பேரும்இவன்ஊரும்

அநுபல்லவி.

இஷ்டகாலம்வந்த திரங்கவேண்டாம்நீரே
எப்போதும்போலேராமர் இடத்தினிற்சேருவீரே
முட்டாதவானரர்கை-தொட்டேகல்லாவெறிந்து
முட்டர்கள் துஷ்டர்கள் கெட்டபலிஷ்டர்கள்
இட்டிடுகட்டுகள் ஒட்டுகள்கெட்டபின்
நெட்டுளபட்டண மட்டி அரக்கியர்
கட்டியபொட்டுகள் தொட்டறுபட்டிடும்—எட்

சரணங்கள்.

க. மலாதலைஉலகெல்லாம் வாழ-மண்மேல்
வண்டோதரிஅலறி வீழ-எங்கும்
அலகையும்நாயும்வந்து சூழ-காவல்
அரக்கியர்உனதுவெள்
ளாட்டிகள்போலே தாழ
அந்தரதுந்துமி இந்திரன் அறைந்திட
எந்தன்முகுந்தனெ டுந்தளம்வந்தபின்
உன்தன்வருந்திய சிந்தைமகிழ்ந்திட
இந்தஇலங்கை அழிந்திடும்விந்தையை—எட்

உ. ஆகாரட்சதப்பிரேதம் மேலே-மிதக்க
ஆருமோராட்சதக்கடல் போலே-அதில்
காகங்கள்மூழ்கி ஒருக்காலே-மாதர்
கண்ணீரால்அந்தரத்தம்
கழுவிப்போமே அப்பாலே
கங்கிலும்வங்கிலும் நாங்குதலங்களும்
மங்கையர்தங்கிந டங்கொள்அரங்கிலும்
அங்கிலும்இங்கிலும் எங்கிலும்எங்கள்கு
ரங்குநெருங்கி இடுங்கலங்களே—எட்

ரூ. ஆனைசேனைகளானன் சாட-குரங்கால்
அரக்கர்தலைஎலலாம தாட-ஒருவர்
போனவழிபோகாமல ஓட-இந்தப்
பொல்லாராவணன்வராழகதை
எல்லாம்தம்பியை கூட
புத்திரமித்திரகளத்திர இனத்தவர்
சுற்றிவிற்றில்அ டித்துவிழத்தலை
பத்தும்நரித்திரள் சுத்திஇழுத்திட
வித்தகன்அஸ்திரம்அ றுத்திடும்வெற்றியை—எட்

சீதாதேவி அனுமாருக்கு அடையாளம் ஈதல்.

கொச்சகம்.

உன்னித்தான்அனுமான்இந்த உறுதிசொலலமனந்துணிந்தா
வன்னம்உள்ள அணிசூடா மணிகொடுத்தாளசாமிஅவள் [ன்
என்னசொன்னுள்எனக்கேட்கில் ஏதுரைபபாயஎனச்சீதை
சொன்னபடிஅடயாளம் சொல்என்றுசொல்லுவாளே

கரு. தரு-ஆநந்தபைரவிராகம் ஜம்பைதாளம்.

பல்லவி.

அனுமானேசாமிக்கிந்த - அடையாளம்சொல்ஐயா

அநுபல்லவி.

சனகிஇலங்கைச்சிறையில் தன்உயிரைதானேதின்று
மனதில்ராமாமூர்த்தி வணம்செய்திருக்கிருள்என்று—அ

சரணங்கள்.

௧. உலகமியநகரைவிட்டுக் கோட்டைவாசல்கடக்குமுன்னே
ஓங்கும்வனம்எங்கேஎன்று நான்கேட்கநேரே
தொலைதூரம்வழிநடந்தாய் சமர்த்திநீஎன்றுசொல்லித்
துளிர்ஆனவாய்மலர்ந்து குளிர்நகைசெய்தாரே—அ

௨. தாழ்வில்லாநகர்நீங்கி வருகிறபேர்எல்லார்க்கும்
தனித்தனியே துணிவுசொல்லி அனுப்பினர்ஐயோ
கூடும் அந்தவழிநடுவே வேள்விசெய்யவேணும்என்று
தொடங்கும்வேதியருக்கு ஆசைஅடங்கப்பசுகொடுத்தார்ஐயோ—அ

௩. கனம்ஆலாகங்கைக்கரை வனவேடன்முனேஎங்களை
காட்டிஇவர்ஆர்என்றுநீ கேட்டாயேகுகனே
உனதுதம்பிஎனதுதம்பி உன்கொழுந்திஇவள்நானும்
உனதுஆசைத்தோழன்என்று சொன்னாரேமகனே—அ

௪. உளத்தில்மறுமாதர்பேர் குறிக்கேன்என்று அந்தரங்கம்
உரைத்தார்என்சாமிக்கது கருத்தில்உண்டுதானே
வளர்த்தகிளியும்மானும் தளர்ச்சியில்லாதபடி
வைத்திருக்கச்சுமந்திரர்உடன்பத்திரமாச்சொன்னேனே—அ

௫. ஒருநாள்என்மேல்ப்பாய்ந்த காக்கைதனைநோக்கிபுல்லால்
ஒருகணைவிட்டார்இதன்ன தெரியாதபேச்சோ
சரணம்என்றதுவிழ இருவிழிக்கும்ஒருமணியாய்த்
தாமேகொடுத்தாரே அந்த மனமும்தான்எங்கேபோச்சோ—அ

அனுமார் அசோகவனம்அழிக்குதல்.

விருத்தம்.

முந்தித்தாய்சீதைசொன்ன அடையாளங்கள்
முறைகொண்டான் அநுமந்தன் நிறைகொண்டிங்கே
சிந்திததான்ராமலட்சுமணரைஎங்கள்
சேனைஉடனேகொண்டுவருவேன்வந்தால்
பந்திதசாவணனும் படையும்காலன்
படைக்காவார்தாய்நீ பார்என்றேநி
சிந்தித்தான் அச்சூடாமணியைக்கொண்டான்
வழிகொண்டான் அசோகவனம் அழிக்கின்றானே (௧௬

௧௪-தரு-பியாகடை ராகம்-ஆதிதாளம்

பல்லவி.

அடித்தானே-அசோகவனம்தன்னை-முடித்தானே அனுமான்

அநுபல்லவி.

அடித்தானே அருங்காய்சனிகிளைகளை
ஒடித்தானே நிமைநொடிக்குள்விசுவரூபம்
பிடித்தானே அந்தராவணன்கீர்த்தியைக்
குடித்தானே கையைக்கொட்டி தொடைதட்டிக்கொண்டு
அடித்தா

சரணங்கள்.

௧. ஆடச்செயும் அசையச்செய்யும்
அறுத்தான் சிலமரங்கள்-கைகளை
மூடச்செயும் முறுகச்செயும
முறிந்தான் சிலமரங்கள்-வேர்பிடுங்கிச்
சாடச்செயும் தாவச்செயும்
தறிந்தான் சிலமரங்கள கொண்டாட்டம்
ஏடச்செயும் பாயச்செயும்
கிந்தான் சிலமரங்கள்-வெகுவெகு
காடானுகோடிகளாக் கொம்புமகொடியும் ஆகக
குறைந்தான் சிலமரத்தைப்-பெருங்ய
நீடாழிமுகட்டிலே அணைபோலேகிடக்க
நிறைத்தான் சிலமரத்தை-தேவர்கள்
வாடாமல்ராடசதர்கள் பாராமல்வெளியெங்கும்
மறைத்தான் சிலமரத்தை-வாரிவாரி
ஏடாகூடாமலங்கைத் தெருக்கள் கருக்கள்எல்லாம்
இறைத்தான் சிலமரத்தை-இப்படி
மேடென்றுமகாடென்றும் தெரியாமல்முடிய
விசைகொண்டெறிந்தமரம்திசைதிசைபோய்படிய
மாடங்களும்அரக்கர் கூடங்களும்இடிய
மதிள் இலங்கைவீடெல்லாம் சிதறிப்பொடிபொடியாய்-அ

௨. அடிக்கடிமரம் ஒடிக்கும்ஓசையில்
அண்டமும் வயிறுளைக்க-அதுண்டு

எடுத்தராட்சதப் பெரும்படைக்கடல்
எங்கெங்கும் ஓடிவளைக்கச்-சினம்உடன்
கடுத்தாதகச தூதகபதாதிகளைக்
காலனும் கண்டுகளைக்கத்-திசைதிசை
நிடுங்கெனக்கருந் தூளிசெந்தூளி ஆகச்
சேடனும் முடியிளைக்க-வநதளவில்
தடுக்காமல்மரத்தின்மேல் மரங்களாவிட்டெறிந்து
சதைத்தான் சிலபடையை-மரம்பிடிங்கி
பொடுக்கெனப்பள்ளத்திலேபிணம்பிணமா அடித்து
புதைத்தான் சிலபடையைத்-தேர்களை
ஒடிக்கிமளமளென நொறுக்கிநொறுக்கிவிழ
உதைத்தான் சிலபடையை-மீன்குலம்
வெடுக்கெனவேபிடுங்கி நடுக்கடலிலேதூக்கி
விதைத்தான் சிலபடையைக்-கையினாலே
அடுத்தவர் ஆயுதத்தைப்பறித்துப் பற்றிப்பற்றி
அழுகல்வெற்றிலைப்போலேகுழைய எற்றிஎற்றி
வடுப்படாவாலாலேசுருக்கிச் சுற்றிச்சுற்றி
வயிற்றுக்குடல்களெல்லாம்வாயில்வரக் குத்திகுத்தி—அ

௩. அதுசமயத்துக்குமரங்கள்வாய்த்ததே
அய்யனுக்கு கொண்டாட்டம்-என்னசொல்லப்
பதியில்இருந்ததே பருந்துகாகம்முதல்
பறவைகள் ஆட்டபாட்டம்-மண்டைகளைச்
சிதறத்தேங்காய்போல உடைத்தும்சாமிக்குண்டோ
சிறிதாகிலும் வாட்டம்-ராவணன்
ததியில்அனுமானுக்கு தவியாவளர்த்தானே
தன்னுடைப்பெருந் தோட்டம். அங்கங்கே
குதிரைமேல்ஆனைவிழத் தேர்மலைபோல்விழக்
குவிந்ததே பெரும்பள்ளம்-பள்ளத்திலே
எதிரிடும்ஆறுபோலே பெருகிக்கரைபுரள
எடுத்ததே ரத்தவெள்ளம்-பசிபோக
கதிஇல்லாநரிகளும்நாயும்பேயும்உண்டு
களித்ததே தங்கள்உள்ளம்-குரங்கென்று
விதிமோசம்ஆகவந்தோம் நமக்கிவன்எமனென்ன
விட்ட தரக்கர்கள்ளம்-கிடைக்காத
புதுவிருந்திதுஎன்று மெத்தமெத்தவே தாள
பூதங்கள்நடம்இடப் பிணநாற்றமும்மூள
எதிர்எதிர் அரக்கியர் அழுகைக்குரல்கள்நீள
எண்பதினாயிரம் கிங்கரர்களும்மாள—அ.

சம்புமாலிவதை.

விருத்தம்.

கொடிகொண்டவனமும்அந்தக் கிங்கரர்களும்போய்மாள
முடிகொண்டஅரக்கன்கோபம் மூண்டிடஎழுந்தசேனை
வடிகொண்டகடல்போல்பட்ட மண்கிடந்திடும்இருப்புத்
தடிகொண்டஅனுமான்கையால் சம்புமாலிபட்டானே

கடு-தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மடிந்தானேசம்புமலி-அனுமான்கையால்-முடிந்தானேசம்பும
[லி

அநுபல்லவி.

அடங்காதரகுநாதன் விடும்குணம்உள்ள தூதன்
நெடுங்கிரிஎனமண்டு தடங்கையால்அறைகொண்டு
மடங்கியவாயிலே முடங்கியகுடல்எழ
தொடங்கியஉதிரமும் குடம்குடமாவிழ—மடி

சரணங்கள்.

க. நருக்குவேன் இதுஒரு குரக்கெனஎதிர்பட்டு
செருக்களத்தினில்எறி பெருக்கவேகணைதொட்டு
அரக்கர்படைக்கடலை நெருக்கிநெருக்கிஇட்டு
இருப்புலக்கையினலே அரைக்கக்கொடுத்துவிட்டு—ம

உ. நீலப்பெரியகடல் போலத்திரண்டுமொய்த்து
மேல்இட்டநிருதரைக் கோலிபொருதவைத்து
சோலைக்கரும்புகளை ஆலைக்கிடுவதொத்து
வாலுக்கும்அனுமந்தன் காலுக்கும்ஒப்பிவித்து—மடி.

௩. மோதிவரும்படையை ஏதும்விடாமல்கொல்ல
மாதர்அழுதழுது வீதிஎங்கெங்கும்செல்ல
பாதகராவணன் காதினில்இடவல்ல
நாதர்முரசங்கிதுபோல் எங்கெனுமறிச்சொல்ல—ம.

பஞ்சசேனாதிபதிகள் அட்சதன்இவற்கள்வதை.

விருத்தம்.

பாய்ந்தசம்புமாலி இந்த விதத்திற்பட்டான்
பஞ்சசேனாதிபரும் படையும்மூண்டார்
தோய்ந்தஅவர் தங்களையும் கணத்தினுள்ளே
தோரணகம்பத்தில்இருந் தனுமான்கொன்றான்
காய்ந்தசினத் துடன்பன்னீ ராயிரம்பேர்
காதலரும்நாலுலட்சம் காளைமாரும்
ஏய்ந்தபடைகளும் கொண்டக்ஷதனும்தேர்மேல்
ஏறினான்மாருதிமேற் சீறினானே (உக)

மகா-வண்ணத்தரு-தோடிராகம் ஆதிதாளம்.

வந்தானேராவணகாதகன் அனுப்பஅக்ஷதன்மிகுதிடப்படை
தந்தானேதோரணகாலிமுன் மிகசமுத்திரம்வளைத்ததொப்பென
மதகரிகள்பரிகள் ரதநிரைகள்வரவும
வருதாவருகஎன ராகவதூதன
கண்டானேஅண்டகடாகமும் வெடித்திடக்கடுகடுத்தகெற்சனை
கொண்டானேகொண்டிடிபோலவே குதித்தாக்கரைஇருப்புல
அடிகள்முடிகள்பல கொடிகள்தடிகள்பொடி[க்கையிக்
பொடிகள்படவிசிறி வாலதைவிசி (ரர்கள்
வளைத்தோடியும்வாரிஅடித்தும்தெரித்தும்விக்கிடமுறித்தும்வி
தலைக்கேதலைமோதிநெரித்தும்சரித்தும்அப்படைதொடுக்கும்
தவிடுபொடிகள்பட உதறிஉதறிஎறி (ரனிகள்
சருகும்உமியும்என ஊதியபோது.
காலால்உதைபட்டபேர்சிலர் கடிக்குளேசிலர்பிடிக்குளேசிலர்
தோளால்அறைபட்டபேர்சிலர் தொடைக்குளேசிலர் இடைக்கு
கரம்அற்றபேர்களும் சிரம்அற்றபேர்களும்(ளேசிலர்
கதிஅற்றபேர்களும் ஆகியேவிழ
அறைவான்ஓர்அறைக்குளேபல கோடிவீரர்கள்வீரர்மேல்விழ
எறிவான்ஓர்எறிக்குளேபல கோடிதேருதேரின்வீரர்மேல்விழ
அதிரதர்மகரதர் சமரதர்சிதறிட
அதலகுதலமொடு சேனைகள்மாள
தெரிந்தானேஅட்சயன்ஊதியசெம்புபோலவேரண்டுகண்களும்
எரிந்தானேஅக்கணமேசெல அம்புமாரிபிரசண்டமாகவே
தெரித்தனுமன்உடல் இருக்கும்மயிர்முனை
முறுக்கில்மறயவும் அந்தமாருதி

தலைமேலும்தோளிலும்மார்பிலும் முகத்திலும்கொளுவிருந்த
நிலைமேலும்தாளிலும்வாளிகள் தொடுக்கவும்குலைகுலைந்தராகவ
சரணம்அதைமனதில் ஒருமையொடுகருதி
விறுவிறெனவிசையில் ஓடிவந்தெதிர்

அடுத்தானேஅட்சதன்எறிய ஆயிரம்பரிரதத்தைஓர்கையில்
எடுத்தானேவிட்டெறிபோதினிலேஇறங்கிமுன்எதிர்க்கவேபிர
கவனைஇவன்அறைய இவனைஅவன்அறைய
அவன்இடுகவசமும் வில்லும்வாளியும் (டி

ஒடித்தானேபல்லொடுகுண்டலம் உதிர்ந்திடச்செவிகலங்கிஓர
அடித்தானேகையினில்அ பகவன்நெடுங்கழுத்தினைமடங்கமாரு
உதரமருபடைகள் கதறநிருதன்மூது [தி
குரைபடஉரைபட ராஜவீதியில்

நிலத்தோடேதேயஅரைத்துக் கரைக்கஅட்சயன்மாயவேசிலர்
தலத்தோடேரூபம்மறைத்து பசுக்கள்ஆயுனமேய்குவார்சிலர்
நினைத்திலேசிலர் பிணைத்திலேசிலர்
நெளித்தபேர்சிலர் ஒளித்தபேர்சிலர் (லா

வண்டாகிமறைந்தபேர்சிலர் மான்கள்எனவெளிபாய்ந்தபேர்சி
மண்டோதரிமுன்பினிலேஅடிசாய்ந்தமரம்எனவீழ்ந்தபேர்சில
மலைந்தபோரினில் ஒழிந்ததூதுவர் [ர்
இலங்கைநாதன்முன் விழுந்தபேர்சிலர்

அனுமாரை இந்திரசித்து எதிர்த்தது.

விருத்தம்.

வீரர்ஆம்அரக்கரும் அட்சதனும்இந்த
  விதம்அனுமான்கையாலே அசமாய்ப்போனார்
ஓரமாத்தூதரும் ராவணன்முன்ஓடி
  உன்மகனும்நமன்உலகுஉற்றான்என்றார்
நார்அடாஎனக்குரங்கைக் கிழிப்பேன்என்று
  நாற்பதுவெள்ளச்சேனை உடனேவந்தான்
ஆர்அடாகுரங்கேநீ ஆர்அடாஎன்
  றதிர்கண்டான் இந்திரசித் தெதிர்கொண்டானே

அனுமார் இந்திரசித்தோடு பொருதல்.

விருத்தம்.

எதிர்கொண்டஇந்திரசித்தோடெழும்பினஅரக்கர்சேனை
கதிர்கொண்டஉகாந்தநாளில் கடல்எனவளைப்பைக்கண்டான்
மதிகொண்டஅனுமான்கையில்வல்இருப்புலக்கைகொண்டு
குதிகொண்டான்எமனைப்பேர்லே கூடினான்சாடினானே

௫௯ தரு-மத்தியமாவதிராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

அனுமந்தன் அடித்தானே - இந்திரசித்தன்
மனம்நொந்து துடித்தானே.

அநுபல்லவி.

அனுமந்தன் அடித்தானே-முனைகொண்டுபிடித்தானே
அரக்கர்படையைக்கண்டு-இருப்புலக்கையைக்கொண்டு—அனு

சரணங்கள்.

௧. கட்டும்என்றபேரையும-கிட்டும்என்ற பேரையும்
கறுவிவந் தேரையும்—மொறுவிவந் தோரையும்
கைப்படைபோய்மாள உதைத்தான் - சிலபேர்களைக்
குப்பல்குப்பல்ஆக வதைத்தான்-நிரைநிரையாக்
காரிகள்மேல பரிகளும் - பரிகள்மேல் கரிகளும்
காலாள்மேல் தேராளும்-தேராள்மேல்காலாளும்
கண்பொறிகலங்க இறைத்தான்-சிலபேர்களை
மண்களில் அழுந்த மறைத்தான்-கடல்கடந்த
காலல் அனேகம்பேரை-வாலால் அனேகம்பேரைக்
கையால் சிலபேர்களை - மெய்யால் சிலபேர்களை
கசக்கிமூளைகள் பொழிந்தான்-கரும்புபோலே
ரசுக்கிச்சாறுகள் பிழிந்தான்-அரக்கியர்க்குக்
கணவனைக் குமரனைத்-துணைவனைத் தெரியாமல்
கதையில் அடித்துடலைச்-சிதையப்பொடித்துப்பெருங்
காற்றில்பஞ்செனை ஊதினன் - சிலரைத்தேங்காய்க்
கீற்றுக்கீற்றாக மோதினன் - எண்இறந்தோர்கள்
கரம்அற்றும்சிரம்அற்றும் - உரம்அற்றும் வரும்ரதம்
கண்டிடம் எல்லாம்புரள-மண்டைமண்டை ஆய்உருள—அ

௨. முட்டிவரும் தேரையும் - கிட்டிவரும் தேரையும்
மூடிவரும் தேரையும் - கடுகிவரும் தேரையும்
முன்கையால்வாரித் தூக்கினன்-தரையில்மோதிச
சென்றபொடிபோல் ஆக்கினன்-ஆனைப்படையை

மொத்தியும்குத்தியும் வாலால் - சுற்றியும் எற்றியும்வாரி
முட்டைப்பூச்சி போல்மடித்துக்-கூட்டம்கூட்டமா அடித்து

முட்டுமுட்டா அடுக்கினான்-கோட்டையும்லங்கை
பட்டணமும் நடுக்கினான்-அன்னகர்வீதி

முகப்பும் கோபுரங்களும்-வகுப்பும் தாவரங்களும்
முத்துமாடங்களும் தேய்ந்து சித்திரகூடங்களும்சாய்ந்து

முடியவீசி நொறுக்கினான் - கோடைகாலத்தில்
இடிபோலவே உறுக்கினான்-அடித்தடித்து

மூலையும். குதிரைமலர்ச் - சோலையும் குதிரைநடை
சாலையும்குதிரை அலை - வேலையும் குதிரை-ஆக

முறைமுறையாய்ச்சாய்த்து விட்டான்-காலால்எற்றி
தரையிலேதேய்த்து விட்டான்-அரக்கர்தலை

மூளையும்சதையும் வண்ணக்-காளியும்கூளியும் உண்ண
முழுதும்பேய்க்குலம் ஆடக்-கழுகும் காக்கையும்பாட—அ

ந. அங்குசமும் நோட்டியும்-சங்கிலியும் ஈட்டியும்
ஆஸ்திரமும் சூலாயுதமும்-சாஸ்திரமும் வேலாயுதமும்

அரக்கர்விடுத்து மொய்க்கவே-அதெல்லாம்அய்யன்
பெருத்தபுயத்தில் தைக்கவே-தைத்தவைஎல்லாம்

அருந்தூதோரணம் மேலே-குழந்தைசூரியன் போலே
அட்டகாசமது பண்ணி-இஷ்டராகவனை எண்ணி

அமரவே. மதித்தானே-பட்டவைஎல்லாம்
உமிபோலே உதிர்த்தானே-ராவணனமகன்

அடுத்தபணிட களிலும்-விடுத்தபடை களிலும்
தொடுத்த் படைகளிலும்-பிடித்தவன் மேல்பட

அள்ளியே தெறித்தானே-சிலபடையைச்
சுள்ளிபோல் முறித்தானே-அரக்கியர்கள்

அழுவாரும் தெய்வத்தைத்-தொழுவாரும் வீடுவீட்
டெழுவாரும் அரக்கன்முன்-விழுவாரும் தலைவிரித்

தலங்கோலம் ஆனாரே எல்லாரும்பேய்க்
குலம்போலே போனாரே-இந்தப்படியா

அடிப்போம்குரங்கைக்கட்டி- பிடிப்போம்என்னவேகிட்டி
ஆர்ப்பரவத்துடன் வந்த-நாற்பது வெள்ளமுஞ்சிந்த—அ

அனுமார் பிரம்மாஸ்திரத்தால் கட்டுண்டல்

விருத்தம்.

அனுமான்பின்னையும் இந்திரசித்தம்பெல்லாம்
அடித்துவில்லையொடித்துத் சாரதியைமாட்டி
மனமஆம்தேரையும் விசிமரத்தால்மோதி
மண்டைகலங்கிட அடித்தான் அரக்கன் அப்பால்
கனமான பிரம்மபாசத்தைவிசிக்
கட்டினான் ஐம்பதினாயிரம்பிசாசர்
இனம்ஆக இழுக்கஇலங்கையில்உள்ளோர்கண்
டேசுவார்மாருதியைப் பேசுவாரே

ரு-திபதை பைரவிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. வந்ததுகுரங்கு வந்திந்திரசித்தன்
வலையில்மாட்டிஎன்பார் சிலபேர்
இந்தஊருக்கெமன் ஆகக்கோலம்கொண்
டிருந்தகுரங்கிது என்பார் சிலபேர்

உ. வினைக்குரங்குவந்த தெனச்சொல்லிராவணன்கை
வெகுமானம் கொள்வார் சிலபேர்
தனக்கென்றிருக்கையாலே சமையத்துக்காச்சுதிந்த
சதுமுகாஸ்திரம்என்பார் சிலபேர்

ந. அந்தச்சிவனேசீதைக் காகஇலங்கைதன்னை
அழிக்கவந்தான என்பார் சிலபேர்
தந்தையை அண்ணனை மகனைக்கொன்றபழி
தந்துபோட்என்பார் சிலபேர்

ச. மணவாளனைக்கொன்ற இவனைக்கொன்றால்ஒழிய
வாங்கோம்மங்கிலியம் என்பார் சிலபேர்
கணைஆம்பாசத்தால் முகத்தில்வாட்டம்இல்லை
கபடகுரங்கிது என்பார் சிலபேர்

ரு. அகப்பட்டகுரங்கிதைவிட்டால் இலங்கைநகர்க்
கனர்த்தகாலம் என்பார் சிலபேர்
நகத்தாற்கிள்ளுவதைக் கோடாலியால்வெட்ட
நமக்குமுடியுமோ என்பார் சிலபேர்

கூ. இங்கேஇந்திரசித்தினைப்பிடியாவிட்டால் இன்னம்
என்னென்னசெய்யுமோ என்பார் சிலபேர்
தங்கைமூக்குப்போனதகப்பனுக்குமூக்குத்
தந்தானேமகன் என்பார் சிலபேர்

ரவணன்கொலுவில் வீற்றிருத்தல்.

விருத்தம்

முனைசேர்அரக்கர்இவ்வாறு முறையிட்டலரச்சேனைசுற்றில் இனம்ஆய்வனைக்கமலைபோலே இலங்கைஅழித்தகுரங்கிதென்றே, அனுமான்தன்னைக்கொண்டிந்திரசித்தன அங்கேவிடஎங்களன்று, புனைமான்முடிராவணன்கண்டுபொருந்தான்கொலுவிருந்தானே.

௧௯-தரு அசாவேரிராக அடதாளசாப்பு.

பல்லவி.

வீரசூரராவணன்கொலுவீற்றிருந்தானே

அநுபல்லவி.

பேராதரத்தினசிங்கா சனமேலேசொர்ன்ன
பீடத்தில்மைநாக மலைபோலேதுன்ன
சருதயம்சேர்பத்து சூரியர்கள்என்ன
தலைபத்திலும்பத்து மகுடங்கள்மின்ன—வீர

சரணங்கள்

௧: நடம்ஆடும்அரம்பையும்-ஊர்வசியும்அபி
நயம்காட்டிமயில்போல்உ லாவ
கடல்போலேமேள - தாளங்கள் அண்டக
டாகம்மட்டும்சென்று தாவ
அடடாஇந்திராவாடா - சந்திராவாடனன்
றவசரக்காறர்கள் கூவ
வடவாக்கினிஆன - விரவாக்சினிநீர்
வந்துமேகம்பனிநீர் தூவ
சுடர்மணிமண்டபம்அண்ட கூடம்அதைத்தொடவே
தொடைநடுங்கிஅசுரரெல்லாம் நெடுமூச்சுவிடவே
முடிகளொடுமுடிமோதி அடியிணைபுண்படவே
மூவுலகத்துள்ளோரும் சேவடிகும்பிடவே—வீர

௨. எப்போதென்று முகம் - திரும்பியவர்க்கெல்லாம்
ரிஷிகள்வந்து தலை நீட்ட
நப்பளட்டாணைக்கொம் - பொடிந்ததுபகிறுறு
சந்திரன்போல்மார்பிலே காட்ட
வைப்பாகியநரக - ராசர்கள்மாணிக்க
மலைகொண்டடிமேலே சூட்ட
வெப்பான துர்முகன் - முதலானமந்திரிகள்
விநயபோசனைகள்பா ராட்ட
முப்பத்துமுக்கோடி தேவரும்கொண்டாட
முதல்ஆன தும்புரு நாரதர்கீதம்பாட
கற்பகமென்மலர்மாரி குப்பைகள்போலேபோட
கட்டியம்சொல்ஓசைதிசை எட்டிலும்மேலேஓட—விர

௩.. இன்னம்ஆம்மேகங்கள் - புகைபோல்ஒதுங்கிக்கொண்
டிரச்சல்இடாமலே கூச
புனைமாமுகலட்சிமி - கரம்துடைப்பார்போலப்
பூவையர்கவரிகள் விச
எனைநாடினன் எனைப்பார்த்தான்வார்த்தைசொன்னான்
என்றியக்கர்சந்தோஷ பேச
தினம்வைபூரியத்துக்கு - வரும்தெய்வப்பெண்களைச்
சிறுக்கியர்போல்ஆக்கியர் ஏச
முனைபேரும்அட்சதன்வீழ்ந்த மணவேதைகூடி
மூத்தமகன்செயித்துவந்த கீர்த்தியைக்கொண்டாடி
அனுமான்வருகிற வார்த்தைதனையேநாடி
அடிக்கடிச்சீதையைஎண்ணித் துடித்துடன்மனம்வாடி—வீ

அனுமானை ராவணன் வினவுதல்.

விருத்தம்.

இருந்தராவணன்முன்பாக இருந்தமாருதியைநோக்கிப்
பெருங்குரங்குருவாய்வந்தாய் பிரமன்மால்சிவன்விட்டாரோ
வருந்திவானவர்விட்டாரோ மனத்துளகபட்டையெல்லாந்
தெரிந்திடவிட்டாளென்று சிறுவான்கூறுவானே

௨0. தரு-செஞ்சுருட்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஆரடாகுரங்கே . இங்கேவந்நதே - ஆரடாகுரங்கே

அநுபல்லவி.

ஆரடா குரங்கே-அறிவாயோ லங்கை
வாரசிங்காசனம்போல்-வால் இட்டென்னிலும்- மேல்இட்டிருக்
ஆரடா கிறாய்

சரணங்கள்.

௧. அச்சம்இல்லாமல் அடங்கிச்சொல்லாமல்
நிச்சயவனகிங்கரர் நிறுத்தநில்லாமல்
நிசாசரர்களும் அசோகவனமும்
திசைதிசையில்விழ விசிஎறிந்தாய்நீ—ஆர

௨. சம்பத்தின்மேலே காலனைப்போலே
செம்புமாலியையும்சேனாதிபரையும்கொன்றிருக்காமலே
சிட்சைசெய்வேன் என்று கட்சிஉடனேவந்த
அட்சதனைக்கூட பட்சணம்செய்தாய்நீ—ஆர

௩. நிந்தனைபிச்சி நீஒருபூச்சி
இந்திரசித்தன்உன்றேடே எதிர்த்தெனைகண்காட்சி
இடிக்கவோகட்டி அடிக்கவோபல்லாற்
கடிக்கவோபத்தம் குடிக்கவோநீ—ஆர

௪. மறைந்தொருகர்மம் வகுத்தஉன்மர்மம்
அறிந்தல்லோகொல்லவேணும் அதர்க்குமுன்கொல்லதர்மம்
அல்லடாதெந்த கல்லடநிசம்.
சொல்லடாபோட்டச் சொல்லடாநீ—ஆர

அனுமார் ராவணனுக்கு விடையும் மதியும்கூறல்.

விருத்தம்.

அடல்ராவணன் இநதவார்த்தைசொல்ல
அரன் அயன்மால்விடுக்கவந்தேன் அல்லகண்டாய்
மடமயில்சீதையைத்தேடி வந்தேன்கண்டாய்
வநகிடத்தில்உனைக்காண வேண்டிஉன்ஊர்
இடம்உடையஅசோகவனம் அழித்தேன்கண்டாய்
ராகவன் தூதுவன்நானே நீபிழைக்கக்
கெடல்அரியபுத்திகேள் கண்டாய்என்றே
கிளம்புவான் அனுமானஎதிர்கிளம்புவானே

உக தரு மோகனராகம்-அடதாளசப்பு.

பல்லவி.

ராமசாமிதூதன்நான் அடா-அடாராவணா
நான் அடா எம்பேர் அனுமான் அடா

அநுபல்லவி.

பூமலர் தலைவாசனும்கை-லாசனும்ரிஷிகேசனும்
மறைந்துநின்று தந்தநான் அல்லடா
புறமபோநின்றுவந்தநான் அல்லடா—ராம

சரணங்கள்.

ச. கொடுத்தவரமுந்தனமும் கனமும்-வீணிலேஎன்போக்கிறாய்
குடிக்கும்பாலை ஐயைமோகமா-வெடிக்குளேஎனவார்க்கிறாய்
துடுக்குடன்பரஸ்திரிசனங்களைதோடர்ந்தேதன்பழிஏற்கிறாய்
தூக்கிஏறவிட்டேணியைவாங்கும்-தூர்த்தர்வார்த்தையைக்
தடைபடாமல்என் ஐயர்கால்மீதே[கேட்கிறாய்
சரண்என்றால்பிழைப் பாயேஇப்போதே
அடக்கஉன் தாம் அல்லடாசீதை
அவன் இவன்விட வந்தான்எண்ணாதே—ராம

உ. காலமும்பலமும்தெரியாமல் குதிக்கிறாய்என்னமாயமோ
காமத்தாலேதர்மபுத்தியைக் கடக்கிறாய்இதுபாயமோ
சாலமோகெடுகாலமோ அடா உனக்குதெய்வசகாயமோ
தங்கைமூக்கறுப்புண்டதல்லவோசண்டாளஇதுஞாயமோ
வாலியும்போனான் உன்னைச்சிறைவைத்த
வாலும்போய்விட்ட தஞ்சாதேமெத்த
சிலராகவன் அம்பால்அவன்செத்த
சேதியைநீ அறி யாயோடபித்த—ரா

ந. கீதம்திருந்தும்வேதம்தெரிந்தும பாதகங்களைச்சூழ்கிறாய்
கெடுமதிகண்ணுக்குத்தோன்றுமல்படுநகரத்தில்மூழ்கிறாய்
மாதர்மோகத்தாலேதுவண்டு தாழாதவரைத்தாழ்கிறாய்
மயக்கமோகைக்குள்விளக்கைப்பிடித்துக்கிணற்றிலேஏ
ஆதிமூர்த்திதானே உத்தண்டம் [ன்வீழ்கிறாய்
ஆகவந்தான் அரக்கரைமண்ட
சீதையைவிட்டுப் பிழைஅடாகண்ட
சேதியைச்சொன்னேன் விரகோதண்ட—ரா

இதுவும் அது

௨௨-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

பிழைக்கஎன்றால்வாடா-நான்சொன்ன-பேச்சைகேளடாமூட

அநுபல்லவி.

பழிக்கெல்லாம்நீதானே ஆளா-படைத்துக்கொண்டயே சண்டா
பிழை [ளாதப்பிப்

சரணங்கள்.

க. வேதன்முதல்விண்ணோர்கள் குறைநீங்க-ஆதி
விஷ்ணுவேபுவனம்எல் லாம்தாங்க-ஒரு
கோதண்டராமன்என்னும் பேரோங்க-வந்து
குதித்தானேசரத்தால்உன் உயிர்வாங்க
ஆதவன்முன் இருள் கிட்டுமோ-மூட
வனுக்குக்கொம்புத்தேன எட்டுமோ-அந்த
ஸீதைஆம்தெய்வம்உனக் கொட்டுமோ-இந்தத்
திருட்டுப்புத்திதனைக் கட்டுமோ-தப்பிப்—பி

௨. வினைசெய்வதற்குச்செய்யும் வகையேதோ-ராமன்
விடுங்கணைஒன்றுனக்குப் போதாதோ-மிக
இனிதாநான்சொல்லுவமதல் நீதோ-சற்றும்
இணக்கம்இல்லாதஉன் உடன்வாதொ
உனதுதங்கைகொங்கை போய்அட-பாவி
உனக்கிதன்மேல்என்ன வாய்அடா-அந்த
சனகிஉலகுக்கெல்லாம் தாய்அடா-அவள்
தானேஉன்குலம்சுடும் தீயடா-தப்பிப்—பி

௩. புவிமேல்உன்னைவென்ற கார்த்தவீரன்-விழப்
புடைத்தானேபரசுராமன் எனும்சூரன்-எதிர்த்
தவனையும்வென்றரகு குலதீரன்-தேவி
அவளைவிட்டால்நிலங்கைக் கதிகாரன்
தவமில்லாவரத்தோ டகஸ்தியமுனி-முன்னம்
தந்தவில்லுக்குன்சேனை வெய்யிற்பனி-அங்கே
எவர்களுக்கும் எழைஆனதனி-நான்
எனக்குமிந்தசம்வானரர் அனேகர் இனி-தப்பிப்—பி

அனுமானைக் கொல்லாமல் ராவணனை விபிஷணன் விலக்குதல்.

விருத்தம்.

போதரவா அனுமான் இந்தப்புத்திசொல்லப்
பொங்கியவாள் அரக்கன்விழிப்பொறிகள்சிந்தி
நிதிவசனம்குரங்கேநீயோசொல்லவந்தாய்
நேத்தி இதுகேத்தி இதுஎன்சீறிப்
பாதகராசல்இவனைவெட்டும்என்றான்அங்கே
பணிந்துவிபிஷணன் அண்ணன்பாவம்கண்டாய்
தூதுவனைக்கொல்லுவதென்றுஞாயம்சொல்லித்
துலக்குவான்ராவணனைவிலக்குவானே

உரு-தரு-சாவேரி ஆதிதாளம்.

பல்லவி

இவனைக்கொல்லுவேன்என்று-நீஎழுந்தது மெத்த
இகட்சிஅடாஅண்ணேன்

அநுபல்லவி

தவம்தானேமிகுந்த இலங்கேசனே அந்த
சாதிமனிதன்சொந்த தூதுவன்என்றுவந்த—இ

சரணங்கள்

க. நாசம்கட்டும்கீர்த்திக்கு அழிவுவந்ததிப்போதோ
தூதனைக்கொல்வேன்என்று துடிக்கிறாய்என்னகூதோ
கொசுகைப்பொருட்டாஎண்ணிக்கருடனைஎதிர்ப்பதேதோ
குரங்கைநீஎதிரிட்டால் புறம்எங்கும்நகையாதோ—இ

உ. அந்நாள்நம்தங்கையைக் கொல்லாமல்நரர்தாமே
அவர்பலம்வெளியாக அனுப்பினதறிந்தோமே
இன்றைவ்நமதுபலம் வெளிஆம்என்தெண்ணிநாமே
இந்தகுரங்கைகொன்றால் எங்கெங்கும்வசைஆமே—இ

ரு. பொறுக்காகோபம்வந்தாலும்குரங்கைக்கொல்யதோசத்தி
புலிபசித்தாலும்என்ன புல்லைத்தின்னுமோநற்றி
அறிக்கைசெய்தேன்இனி நீயேஅறிவாய்புத்தி
ஆக்ஞைசெய்தப்பாவிதை அகற்றுவதுவேவெற்றி—இ

அனுமார் வாலில் சுடாமல் அக்கினியை

சீதைவேண்டல்

விருத்தம்.

தட்பிவிபீஷணன்சொல்ராவணனும்கேட்டான
 தையலர்தாலியிலேகயறில்லாமல்
வம்புபடிகயிறெல்லாம் முறுக்கிச்சுற்றி
 வாலிலேகிழிசுற்றித்தீயைஇட்டான்
முன்பிருநூறுயிரம்பேர் இழுத்தோர்விழ
 முனைந்தெழுந்தஅனுமந்தன தனைத்தொடாதே
பொன்பொறிபோலேஇருபபாய் நெருப்பேஎன்று
 போற்றுவாள்சீதைசொல்லிஆற்றுவாளே

உச-தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அக்கினிபகவானே - வருத்தாதே - அனுமானைநீதானே

அநுபல்லவி


திக்குவேறில்லைநீயே திக்குபுடவைசொர்ந்தால்
கைக்குண்டோஉபசாரம் கார்க்கடனதுபாரம்—அக்

சரணங்கள்

க. இத்திசைவந்தானே-என்பிராணேசன்கை-முத்திரைதந்தா
 சத்தியம்ஆகச்சர்வ சாட்சிநீதானே ஆனால்[னே
 பத்தினிமார்க்குள்மேலாம் பத்தினிநானே ஆனால்—அக்

உ. விவரித்துள்ளதுசொல்லவோ-உனதுமித்திரன்தவபுத்திர
 (இவன்அல்லவோ
 கவலைஅரக்கர்இரு கண்ணுக்கெல்லாம்நெருப்பாய்
 இவனுடையவாலுக்குமாத்திரம் மலர்போலிருப்பாய்—அ

ந. தன்மத்தைகுறியாயோராமதூதன்என்பின்னமுமறியாயோ
 முன்னேஎன்சாமிகையைஉன்னையல்லவோதொட்டேன்
 இந்நாளும்நானவரை இணங்கவைப்பாய்கும்பிட்டேன்-அ



இலங்கா தகனம்

அனுமார் இலங்கையைக்கொளுத்துதல்.

விருத்தம்.

கோடையிலேகசங்குகின்றமலர்போல்சீதை
குழைந்துகுழைந்திவ்வாறுபுலம்பிஏங்கி
வாடையிலேஅக்கினியும்பாய்ந்துசெம்பொன்
மலர்போலவேஇருந்தான்நாறுதிக்கும்
ஆடரங்கும்சாலையும் மூலைகளும்கோப்பும்
அரசிருப்புந்திண்ணைகளும் படுக்கைவீடும்
மாடமும்கூடமும்இலங்கை எங்கும்வாலை
வளர்த்தினன் அனுமந்தன் கொளுத்தினனே

உரு-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

பற்றிக்கொண்டது அனுமான்இட்ட-அனல்
சுற்றிக்கொண்டதுலங்கையை

அநுபல்லவி.

வெற்றிப்பெண்சானகி உறைமரம்ஒன்றும்
விட்டுநீங்கிதிசை எட்டும்ஓங்கிமுட்டி—பற்றிக்

சரணங்கள்.

க. எடுத்தபொற்கோ புரங்களும் - மலர்
படுத்தபூஞ்சப் பரங்களும் - எரி
அடுக்களையும்தா வரங்களும - சுவர்
கொடுத்தமணிஉத் தரங்களும்
உன்னத உப்பரிகையும் - தங்கத்தாலே
மின்னரியகொடி வகையும் - ஆனைசேனை
மன்னும்விமானத் தொகையும் - நவரத்தினப்
பொன்அறைகளும் குகையும் - திகுதிகெனக்
கொண்டல்கொண்டலாய்புகைஏறவே - அத்தைக்
கண்டவர்சிவன்விட்டு மாறவே - அயர்
பெண்டுபிள்ளைகள்பழி கூறவே - பெண்கள்
கொண்டைகள்எல்லாம்சுரு நாறவே- நாறவே
உருவங்கள்தாறுமாறுப் பருவங்கள்வேறுவேறு
அருகெங்கும்கீறுகீறுத் தெருவெங்கும்நீறுநீறாய்---பற்றி

உ. முதேயில்வளைந்து சொலிக்கவே - படும்
வாதைகண்டமரர் சலிக்கவே - சொல்லும்
வேதசாஸ்திரங்கள் கெலிக்கவே - எங்கள்
சீதைசொன்னபடி பலிக்கவே
சாகரங்களும் குறைய - புகைபடலம்
ஆகாசம்மட்டும் நிறைய - பாதாளத்தில்
நாகரும்கூட இறைய - ராவணனும்
மேகதலத்தில் மறைய - இலங்கையிலே
கிணற்றுநீரும்சுண்டி வற்றவே - செத்த
பிணத்தின்வெடிநாற்றங்கள் சுற்றவே - வாலே
வணக்கிளமுந்தெழுந்து மெத்தவே - செந்
தணல்பொரிஆகஅய்யன் எற்றவே
புரவிஎல்லாம்உவிய நிருதர்எல்லாம்அவிய
எரிஎரியாக்கவிய கரிகரியாக்குவிய—பற்றிக்

௩. கைக்குழந்தைகளைப் போடுவார் - பெற்ற
மக்களைவிட்டுவிட் டோடுவார் - புகைச்
சிக்கினிலேதள்ள மாடுவார் - ஒரு
மிக்கஅரக்கியர்கள் வாடுவர்
மலர்ச்சோலைபொரிந்த தென்பார் - ரவணன்
கொலுக்கூடம்எரிந்த தென்பார் - விட்டின்மேல்வீடா
நிலத்தோடேசரிந்த தென்பார் - வெட்டவெளியாந்
தலைக்கடைதெரிந்த தென்பார் - தவிதவித்து
வேலைக்குள்ஓடிவிழச் சொல்லுவார் - பெண்கள்
மூலைக்குமூலைவாயை மெல்லுவார் - அனல்
மேலிட்டிடாமற்குழி கொல்லுவார் - அனுமான்
வாலுக்குத்தெண்டன்என்று சொல்லுவார்
மாடகூடம்அனேக கோடிகோடிநீறுக
மேடுமேடாகிப்போகக் காடுகாடாகிவேக—பற்றிக்

வானரவீரர்கள் திரும்புகாலையில் மதுவனமழித்தல்.

விருத்தம்.

அக்கினியைஇலங்கையில்இவ்வா றிட்டுச்சீதைதிசை
அறிந்துபோற்றி
மைக்கடல்வாய்மைநாகம் தனைக்கண்டான்சேனைகளை
வணங்கிக்கொண்டான்
புக்கதுசொல்அனுமானும் அங்கதனும்சேனைகளும்
போய்ச்சுக்கிரீவன்

தக்கமதுவனம்கண்டு நிலைபட்டார்மதுவைஉண்ணத்
தலைப்பட்டாரே

உகூ-தரு அசாவேரிராகஅடதாளசாப்பு.

பல்லவி.

வானரவீரர்எல்லாம் பாய்ந்தாரே-மது
வனம் எல்லாம்கொள்ளையிட்டு மேய்ந்தாரே

அநுபல்லவி.

வானும்சூரியபக் வானும்தெரியஅந்த
தானகத்தினில்மிகுந்த தேனுடகனியும்சிந்த—வான

சரணங்கள்.

க. நிரளதானமாங் னியும்-ஆ
சினிபழுத்த தேங்கனியும்-தேன்
உருகுகதலிபூங் கனியும்- சுவை
ஒழிபடாவிளாம் கனியும்கையாற்
நிருகித்திருகிப் பறிக்கத்-திசைதிசை
பெருகிப் பெருகித்தெறிக்க-வழிமேல்
வரும்இளைப்பினால் வந்தடைக்கவே
இருவிலாப்புற மும்புடைக்கவே—வானர

உ. வாயிலேஅளிப்பார் சிலபேர்-தேன்
வயிலேஒளிப்பார் சிலபேர்
வாயிலேவிளிப்பார் சிலபேர்-கடை
வாயிலேதுளிப்பார் சிலபேர்
ஈய்கள்மொய்த்தாற் போலே-மொய்த்து
இரைச்சலிட் டொருக்காலே-பெரு
வாயிலேமதுவைவழியக் குதட்டிக்கொண்டு
ஓயநின்றவரைஉருமி அதட்டிக்கொண்டு—வான

ங. இந்திரன்வாலிக்கிட்ட தோட்டம்-இப்ப
இதிலேசுக்கிரீவருக்கு நாட்டம்-என்று
வந்துபுகுந்துகடல் ஓட்டம்-போலும்
மதுவைஎல்லாம்குடித் தாட்டம்-செய்ய
அந்தவேளைததிமுகன் எதிர்க்க-அவனை
அடித்தானேஅங்கதன் பதைக்க-சொல்லும்

எந்தஆவோ ஆக்கினைக்கும் நில்லாமலே
தந்தமஇச்சையில்த்தடை இல்லாமலே—வா வா

சிதைபைத்தேடப்போனவர்களைக் குறித்து

ஸ்ரீராமர்இரங்கல்.

விருத்தம்

இப்புரம்ராசாமி தெற்கினில்போனபேரை.
எப்படிகாணுவேன் எனக்குரை கூறுவானே

அ-திபதை ஆகிரிராகம் ஆதிதாளம்

கண்ணிகள்.

க. திக்குத்திக்காகசிதையைத் தேடிநொந்தாரோ- எந்த
திக்கிலும்காணமல்எங்கே வாடிவந்தாரோ

உ. தெற்குந்திசையில்ப்போனோரைக் காணேம்கண்ணலே
சுக்கிரீவாநான்வ துக்கின்னம்இருந்தேன்மண்மேலே [அட

ங. கன்னிச்சீதைஇருந்தாளே என்னபட்டாரோ-இத்தை
என்னசொல்வோம்என்றுசீவன் தனைவிட்டாரோ

ச. நாள்கணக்கைஎண்ணிஎண்ணி ஏக்கம்ஆனரோ-உந்தன்
ஆக்கினைக்குபயந்துதவசு ரோக்கப்போனரோ

ரு- மற்றொருலோகத்தைச்சுற்றித் தேடுகின்றாரோ-சிறையில்
வைத்தஅரக்கரோடேபோர் ஆடுகின்றாரோ

சா. தென்முகமேமுகம்ஆக இன்னம்செல்வாரோ-இங்கே
என்முகத்தில்சிதைசேதி என்னசொல்வாரோ

எ. தன்வரவுபார்க்கும்என்னைத்தான்பார்ப்பானே-அனுமான்
என்வயற்றில்என்றுவந்து பாலைவார்ப்பானே

அ. கவலைஏன்அனுமான்இரக்ககாரியம்போகுமோ-அய்யோ
அவனல்ஆகாதகாரியம்பின் ஆரால்ஆகுமோ

ஸ்ரீராமரு அனுமார் சீதையின் இருப்பைகூறல்.

விருத்தம்.

வண்டேபோல்மனம்சுழல இந்தவண்ணம்
    மடல்போல்சுக்கிரீவனுடனே சொல்ல
கொண்டதென்முகத்தின்மேல முகத்தைவைத்து
    குதித்தாராகவன் இருந்த சபைக்குமுன்னே
பண்டேஅங்கதன்முன் சேனைகள்பின்செல்லத்
    பறந்துவந்துகரங்குவித்துபணிந்துகண்டேன
கண்டேன்சிதையைஎன்று கூவிக்கூவிக்
    கதிகொண்டான் அனுமான்வந்து குதிகொண்டானே

உஅ-தரு-முகாரிராக-அடதாளசாப்பு

பல்லவி.

கண்டேன்கண்டேன்கண்டேன் சிதையைக் கண்டேன்ராகவா

அநுபல்லவி.

அண்டரும்காணாத   இலங்காபுரத்திலே
அரவிந்தவேதாவைப்   தரவந்தமாதாவேக்—கண்

சரணங்கள்

க. காவிவிழிகளில்   உன்உருவெளிமின்னக்
    கனிவாயிலேஉன்   திருநாமமேபன்ன
ஆவித்துணையைப்   பிரிந்தமடஅனனம்
    ஆலள்நான்   சொல்வதென்ன
பூவைதிரிசடை   நித்தம்நித்தம்சொன்ன
    புத்திவழியேதன்   புத்திநிலைமன்னப்
பாவிஅரக்கியர்   காவல்சிறைதன்னைப்
    பஞ்சடிந்த   பழம்சித்திரம்அன்ன—கண்

உ. பனிக்காலவாரிகம்   போலநிறம்கூசிப்
    பகல்ஒருயுகம்ஆகக்   கழித்தாளேபிரயாசி
நினைத்தங்கராவணன்   அந்நாள்வரச்சீசீ
    நில்லடா   எனறேசி
தனித்துத்தன்உயிர்தன்னை   தான்விடமகராசி
    சாமபொழுதுகாணும்   சமயமதிவேவாசி

இனித்ராமசமசெய்யல் ஆகாதென்றிடர்விசி
ராமாராமராமா ராமாஎன்றெதிர்பேசி—கண்

படல்சேரும்வாலியை வானுலகிலேகூட்டி
பவனியைசுக்கிரீவன் ஆளமுடிசூட்டி
விடவந்தஅனுமந்தன் நான்என்றுசீராட்டி
விரம்சொல்லஉயிர்கொண் டிருக்கிறாள்சீமாட்டி
திடமாலட்சுமணன்செய்த பர்ணசாலைவீட்டில்த்
தேவாதிதேவாஉன் திருவாழிதன்னைக்காட்டி—க

ஸ்ரீராமர் சீதாதேவி சூடாமணிகண்டுமகிழ்தடல்.

கொச்சகம்.

பணிஅனுமான் இதுசொல்லிப் பாவைஉதவியசூடா
மணிஅடையாளம்கொடுத்தான் வள்ளல்ராகவன்கண்டான்
அணிஉடலம்புளகித்தான் அகம்குளிர்ந்தான் முகம்மலர்ந்தான்
துணியும்அந்தமணிவாங்கித் துதித்தான்சம்மதித்தானே

உ அ-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

சூடாமணிகண்டபோதே-சாமிக்குவந்த-சுகமேஅனந்தசுகம்

அநுபல்லவி.

வாடிஅனுமான்சொல்ல ஆடிமுட்டமுட்ட
நாடிச்சீதைஅம்மை சூடிவரவிட்ட—சூடா

சரணங்கள்.

க. அமலமாமணிதன்னை வங்கினன்-உயிர்செய்
ஆமுர்தசஞ்சீவிபோல்த் தங்கினன்-சீதை
கமலக்கைபோற்பிடித் தோங்கினன்-கவலை
கதிர்கண்டபனிபோல் நீங்கினன்-கண்டு
கண்இரண்டும் குளிர்ந்தான்-மேல்வரும்
எண்ணங்களும் தெளிந்தான்-அந்த—சூடா

உ. மடித்துவாயிதழ் கடித்தான்-மேனி
மயிர்புளகம் பொடித்தான்-வேர்வை
பொடிக்கத்துடி துடித்தான்-அனுமான்
புத்திசொல்லிப் படித்தான்-சேனையைப்

போர்க்கச்செல்லும் என்றான்-அப்படி
சேர்க்கச்சொல்லும் என்றான்-இப்படி—சு

அரக்கர்ஆம்இருள்எல்லாம் ஓடவே-தர்மம்
ஆனபயிர்வளர்ந்து கூடவே-கீர்த்தி
விரித்துரம்பயர்கீதம் பாடவே-தேவர்
வீசும்பூமலர்எங்கும் மூடவே-வரவு
மேனி பாரிக்கவே-துர்க்கப
வானி பூரிக்கவே-அந்த—சு

ஸ்ரீராமர் தென்சமுத்திரக்கரையைக் காணுதல்.

விருத்தம்.

இந்தவண்ணம்சாமிமன மகிழ்ந்துதேறி
இலங்கையைப்போய்வளைந்திடவே சேனைசூழ
அந்தஅனுமானமேலேதானும்தம்பி
அங்கதன்தோள்மேலும் எழுந்தருளிச்சென்று
தொந்தம்உள்ளபடைத்தலவர் முன்னும்பின்னும்
சூழ்ந்துவரச்சுக்கிரீவன் அருகேநின்று
முந்திவழிகாட்டிடராமச்சந்திரன்
முறைகொண்டான்தென்கடலின துறைகண்டானே

சுந்தரகாண்டம-முற்றும.

விருத்தம்-கூஉ. கொச்சகம்-ரு-ஆகஙு
திபதைகள்-சு-தருக்கள்-உஎ-ஆக-ஙுஙு-

பயிரம்-க-க்கும்-காண்டங்கள்-ருக்குமகூடி
கொச்சகம்ரு-வெண்பா-உவசனம்க-விருத்தம்-கசஉ-ஆக-கருய
தோடயம்-க-திபதைகள்-சய-தருக்கள்-கூசு-ஆக. ளஙஎ.

சக்கிரவத்தி திருமகனார்

திருவடிகளேசரணம்.

——[*]——

ஸ்ரீராமஜயம்.

ஆறாவது

உயுத்தகாண்டம்.

அனுமார் மீண்டபின் ராவணன்கேட்க மந்திரிகள்ஆலோசனை கூறல்.

விருத்தம்.

ஆலிலைமேற்பள்ளிவிருந்த அயோத்திவேந்தோன்
அருங்கடல்வாய்ப்பெருங்கனிகள் உடன் இருந்தான்
மூலஇலங்கையைமுன்போல் விசுவகர்ம்மா
முடிக்க அந்தப்படிக்குராவணனும்கண்டான்
வாலினும்காலிலும்அனுமான் இடிதீயாலும்
மாண்டராக்ஷதர்போக அந்தஊரில்
மேல்உள ராக்ஷதருக்கும் அரக்கன்பொல்லா
வினைசெய்வான்மந்திராலோசனைசெய்வானே (க)

க-திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு


கண்ணிகள்.

வாரும்வாரும்பாரும்பரிய மதிமந்திரிமாரே
பாரும்பாரும்ராவணன்எனைப் பார்த்தென்னசொல்லுவீரே
அரிஅயன்கூடப்பயப்படும்இலங் காபுரித்தெருமேலே
சங்கரியாக்குவியக்குவியக் கண்டோமேகுரங்காலே

இலங்கைசுட்டசூடாறஇல்லையே இலங்கையில்நாலுசாரும்
நங்கைமார்கொண்டைவெந்திடச்சூறு நாறுகின்றதுபாரும்
மனிதர்அனுப்பக்குரங்கிங்கேவர மாண்டதரக்கர்கூட்டம்
இனிஎன்னவெற்றி இனிஎன்னசத்தி இனிஎன்னகொண்டாட்ட

என்னராவணன்சொல்லிச்சீறி எழுந்தானேஉன்மத்தம்[ம்
நன்னிக்குரங்கும்கொசுகுமபகையோ நமக்கென்றனேபிரகஸ்த
ஒருவர்எதுக்குநானேலட்சுமணன் உடனே அவன் அண்ணான்(ன்
இருவர்தலையும்கொண்டுவருவேன் என்றனேபுகைக்கண்ணன்

நரரையும்வானரரையும்கொல்ல நான்அல்லோஅனுபந்தன்
ஸரிதமாஎன்னைபோகசொல்லென்று சொன்னனேவச்சிரதந்தன்



இராவணன் கேட்க மந்திரிகள் ஆலோசனை கூறல்.

இலங்மரிகருக்கிவன்றாங்குக்கென் றேவிருன்என்கோனே
அவன் அவன்பலம்தெரியால் ஆரும்என் ருன்மகோதரன்தானே
நாமெதின்கிறநரும்குராங்கும் நம்மைஎதிர்க்கலாச்சே
மாமோசம்இதுஎன்றாதுன்முகன் வகுத்தானேதன்பேச்சே

முட்டனுக்குத்தன்புத்திநாவிலும் முற்றிலும்செம்மைபோலே
துட்டமந்திரிகள்வாயிலவந்தது சொன்ருரேஒருக்காலே
சூரியகேதுபிராசன்முதலோர் சொல்லிடும்அந்தவேளை
காரியம்அல்லஎன்றுறுக்கிருன்கும்பகர்னன்என்னும்அக்காளை

கும்பகர்னன் ராவணனுக்கு ஆலோசனைகூறல்.

விருத்தம்.

படபடெனமந்திரிகள் இந்தவிதம்சொன்னதெல்லாம்
பரிந்துகேட்டே
உடல்மறந்தோராவணனும் சிறிபார்கைச்செம்பொன்போல்
உச்சாகத்தால்
கடல்கடந்துபோராட நினைந்தளவில்அமச்சர்களைக்
காய்ந்துபின்பு
திடம்உடையகும்பகர்னன் கூறுவான்அவ்வண்ணன்முன்னே
சிறுவானே

க-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நேத்திஇதுவெகுநேத்திஅடா அண்ணேன்-மந்திராலோசனை
கேதநிஇதுவெகுநேத்திஅடா அண்ணேன்

அநுபல்லவி.

ஏற்றகும்பகர்னன் என்சொல்லைவீழ்கிருய்
எடுப்பானகிர்த்தியைத் துடுக்கலேதாழ்கிருய்
சூத்தில்அடிக்கவே பல்லுபோச்சுதென்ற
சொல்லைப்போலேஇந்த தூதர்சொல்கேட்கிருய்—நேத்

சரணங்கள்.

க. தேட்டம்ஆம்அசோகவனம்அழிபட்டபோதே
தேவருக்குங்கனது பயம்போச்சு

நாட்டம்ஆம்அரக்கர் தலைகள்உன்றலைமெரு
நாலுபுறமும்உருண் டிடல்ஆச்சு
விட்டுப்பெண்கள்நகைக்க ஒருத்திகாலடியினில்
வீழ்கிறாய்இதிலும்உன் டோஎச்சு
கொட்டைமுழுதும்கரிக் கோட்டைசெய்தகருங்
குரங்கும்மனிதர்க்கும் பயந்தோமேஎனும்பேச்சு-நேத்


உ. விதவிதமாப்பெற்ற விசயசாம்ஜயய்யோ
விரகாக்கினியாலே கருக்கிறாய்
மதிமோசமோஉன்தன் விதிவசமோசொன்னால்
மனதுகொள்ளாமல்அரு வருக்கிறாய்
அதிகவேதங்கள்ஓர் ஆயிரமும்தெரிந்தும்
அறியாமலேசெல்வம் செருக்கிறாய்
மிதிலைப்பெண்தற்பால்இந்தப் பதிவெந்ததல்லாமல்
வேறொன்றால்வெந்ததென்றே நீவீண்ணிஇருக்கிறாய்-நே

ந. கருமலைபோல்இந்த நிருதரைக்கண்டால்அந்த
காலருத்திரனுக்கும்உன் டோவீரம்
இருஇருநான்இதோ புறப்படுகிறேன்என்முன்
எவ்வளவவரிட ஆரவாரம்
மருஉடன்சிதை விடுவதேயைநல்ல
மார்க்கம்இல்லாவிட்டால் இந்நேரம்
ஒருமிக்கவேபோய் உனக்காச்செனக்காச்சென்று
ஒருகைபாராமல்இங்கே குறுகுறுக்கும்விசாரம்-நேத்

விபீஷணர் இந்திரசித்தை விலக்கிராவணனுக்குப் புத்திகூறல்.

விருத்தம்,

கும்பகர்னன்இந்தமொழி சொன்னபின்பு
குதித்திந்திரசித்தெழுந்தான் வனதுகையில்
வெம்புபிரம்மாஸ்திரமும்நாக பசம்தானும்
விண்போமோபின்அதைநீ காண்பாய்என்றான்
வம்புசொன்னய்பயலேநீ போடாநாளை
வருங்காரியம்அறியாய்என் றவனைத்தள்ளித்
தம்பிவிபிஷணன்அண்ணேன் உனக்கிதெல்லாம்
சதிஎன்றான்கோட்பாய்என் மதிஎன்றானே



விபீஷணர் ராவணனுக்குப் புத்திகூறல்.

உ-தரு-சாவேரிராகம்-ஆதிதாளசாப்பு.

பல்லவி.

ராகவன்பகை ராவணுதொருக்காலும் நமக்காமோ
அண்ணேன்பழிசுமக்காதே

அநுபல்லவி.

ஏகன் ஆய் அந்தமூவரும்தசரத-ராமன்என்றுவந்தாரே
நாம்எங்கேபோம் அந்த-ராகவன்

சரணங்கள்.

க. அலைகடல்சூழ்இலங் காபுரிநகர்மேலே-வந்தொருகாலமே
அளவறுராட்சதர் மலைமலைகளைபோலே-மண்டினத்தாமே
அலைந்தோம்-மெத்த உலைந்தோம்-மேனி
குலைந்தோம்-நிலை கலைந்தோம்-என்றுதேவர்
காலமே ஓலமே-செய்ஆதி
மூலமே கோலமே-ஆகிவந்து,
கிளையும்விளையும் முளையும்களையவே
லலக்கைதந்து நிலத்தில்வந்தவதரித்த—ராகவ

உ. பதிவிரதங்கையால்ச் சீதையைவிணைமுளா-அடசண்டாள
பன்னகசாலையோடுன் இருபதுதோளால்.பாவத்துக்காளா
எடுத்தாய்-ஆசை தொடுத்தாய்-நன்மை
விடுத்தாய்-குடி கெடுத்தாய்- அவள்ஒரு
தாயடா தயடா-நமக்கொரு
தீய்அடா தீ அடா-சிறைமேல்
எத்தாய்வைத்தாய் பித்தாய்செத்தாய்—ராகவன்

ரு. மேக்குகார்த்தவீரியன்முன்எதிரிட்டாய்-விருதுவிட்டாய்
வேதவதிசொன்னசாபத்தில்அகப்பட்டாய்-பிழைக்கவொட்டாய்
மதமோ-உனக் கதமோ-எந்த
விதமோ-லங்கை சதமோ-இத்தனை
சூரரும் வீரரும்-உனதுகு
மாரரும் போரும்-உன்னுடைய
முடியும்கொடியும் கோடியும்மடியும்முன்
சிதைபோ வதைதிரும்உள்வது—ராகவ.

விபீஷணனை ராவணன் பிறிகூறல்

விருத்தம்.

உதிக்கின்றகதிரோன்முன்னே ஒளிக்குமின்மினிபோலல்லால்
கொதிக்கின்றஎன்முன் அந்தக் குரங்குசொடுநரர்என்செய்வார்
எதிர்க்கின்றசொல்என்சொன்னுய் எனவிபீஷணனைப்பார்த்து
கதிக்கின்றஅரக்கன்பல்லைக் கடிக்கின்றான்படிக்கின்றானே

கூ தரு கௌளிபந்துராகம் ஆதிதாளம்

பல்லவி.

போதும்போதும்இந்த புத்திவிபீஷணு
போதும்போதும்சொன்னது போதும்அடா

அநுபல்லவி.

ஏதடாநான்பயப் பட்டுநடக்குமோ
எலியைக்கண்டுபூனை ஏங்கிக்கிடக்குமோ
நாதன்ஆனநானே உன்சொல்லைக்கேட்பது
நரிவாலைக்கொண்டோ கடல்ஆழம்பார்ப்பது—போது

சரணங்கள்.

க. உலகும்அரசும்போய் வெள்ளாட்டியால்காட்டில்
ஒதுக்குண்டராமன் என்னோடெதிர்ப்பானோஅவன்கூட
விலகிடமாயம்செய்து குலமங்கையையெடுத்து
மேடும்காடும்திரிய விட்டேனேஎங்கும்தேட
பலருக்கும்தெய்வமென்றாய் இந்திரன்சிறைபட்டநாள்
பாலனோஇவன்என்னோடேலாதோசண்டைபோட
கொல்லத்தெருவில்ஊசி விற்றால்விலைபோமோ

உ. துப்பானவாலிமுன்ன எதிர்த்தவர்பலம்போமே
தோர்வையோஆர்க்கும்அது சாபமென்றறியாமோ
இப்போதும்மானிடர்முன் எனக்குப்பலம்இல்லையோ
ஈசனையும்மலையோடெடுத்ததேன்னபொய்போமோ
அப்பாநான்இருக்கவும் என்னோடேநீபிறந்தும்
அந்தநரர்க்கஞ்சிஉன் சிந்தைஇப்படிநோமோ
குப்பைக்கீரைகிள்ளத்துக் . சுப்புகவும்ஆகிக்
கொழுத்தாலும்கப்பலுக்குப்பெருந்தபாய்மரஆமோ—போது

ங. அரன் அயன் தந்தவரம் என்ருய் அவரைக்கூட
அடிக்க எனக்குயரம் கொடுத்தாய் பொய்சொல்லாதே
பரிவோபடைமிருத்தல் அரண்நிற்குமோ இந்தப்
பஞ்சைவார்த்தைவிட்டால் என்தன்கோபம்பொல்லாதே
அருகேகள்ளனும்ஆகி விளக்கும்பிடித்தாயே ஊர்
அழித்தகுரங்கைவிட்டென் றுரைத்தாய் அது அல்லாதே
இரணியன்மகன் அந்த இரணியனைக்கொன்றாற்போல்
என்னைக்கொல்லநினைத்தாய இனிஎன்முன நில்லாதே—போது

சரணமடைந்தவிபீஷணனைக்குறித்து ஸ்ரீராமர்கூறல்

விருத்தம்.

என்றுராவணன்இந்த வார்த்தைசொல்ல
இரங்கிவிபீஷணன் அண்ணன் எனதுவார்த்தை
ஒன்றுமேபிசகாதென் றெழுந்தவ்வுரை
ஒழிந்துவானரச்சேனைக் கொழுந்தின்முன்னே
சென்றுராகவசரணம் என்றவார்த்தை
ஸ்ரீராமன்கேட்கமயிந் தனும்போய்சொன்னான்
அன்றுராகவன்பலர்யோசனையும்கண்டான்
அதுபோதில் அனுமந்தன் இதுசொல்வானே

ச-தரு-உசேனி ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிபீஷணன்மீது -நமக்- கித்தனையோசனை எது

அநுபல்லவி.

அந்தஇலங்கையிலே அறிந்தேன் இவனைமுன்னே
சந்தேகம்இல்லைசாமி தாசன் அனுமான்சொன்னேன்-இ

சரணங்கள்.

க. சொல்லும்புராணவேத சாஸ்திரம்-இவன்
செய்வதுதேவதா தோத்திரம்-பல
கல்விகேள்விக்கெல்லாம் பத்திரம-கள்ளம்
கபடமியான் அனு மாத்திரம்-இது
அல்லாமல்இவன்வீட்டில் அடுத்தபோதில்அனேகம்
நல்லநல்லசகுனம் நான்கண்டேன் அநுபோகம்—இ

௨. உத்தமயான கள்ளனும் கள்ளனும்ம்-இவன்
உன்னிருன் என்பதைத் தள்ளனும்-கண்டால்
ஏற்றவனென்றுநீர் கொள்ளனும்-நல்ல
இங்கிதவானவர்க் குள்ளனும்-இவன்
நேற்றுராவணனென்மேல் நீட்டியகத்திவெட்டைத்
தீர்த்துவிட்டேனெனக்குச் செய்தான்பிராணபிரதிஷ்டை—

௩. மூவர்க்குங்கூடாத வெற்றி-கூட
முடிப்பதல்லோஉந்தன் சத்தி-சிறு
கூவத்தைக்கண்டுகடல் ஒற்றிப்-போன
கொள்கைபோலாச்சே இந்தப்பெற்றி-சாமி
தேவிக்கும்பெண்ணைக்கொண்டு தேற்றச்சொல்லி அகன்றான்
ஆவத்தையினாலேவந் தபயம் அபயமென்றான்---இங்

விபீஷணர் சரணாகதத்தைக் குறித்து

ஸ்ரீராமர்கூறல்.

விருத்தம்.

தொடரா அனுமான் இந்தவண்ணம்
சொன்னமொழியும்கவித்தலைவர்
இடராஉரைத்தவாய்மொழியும்
இரண்டுமொழியும்மனங்கொண்டான்
உடனே அபயம்என்றவருக்
குயிர ஆனாலும்கொடுப்பதுவே
கடன்ஆம்எனஎல்லார்க்கும்மனம்
களிப்பான்ராமன்உரைப்பானே

ரு. தரு சௌராட்ரகம்-அடதாளம்சாப்பு

பல்லவி.

சரணம்சரணம் என்றானே-காவாதேவிட்டால்
திரணம்அல்லவோ நான்தானே

அநுபல்லவி.

அரியவிபீஷணன்அங்கே அரக்கன் ஆனாலும்இங்கே
இருசெவிகேட்கவாய்விட்டு ராகவாஎன்றுகூப்பிட்டு—சர

சரணங்கள்

௧. ரவிகுலத்தினில்வந்தேனே தண்டகாருண்ணிய
தவசிகட்குரைதந்தேனே
சிவிராசன்புறவாலே தேகம்ஈந்தானேமண்மேலே
ஈவலையால்இவன்யேதோவொரந்தக தவிக்கவேண்டிங்கேவ
சரணம் [ந்தா

௨. பெற்றசடாயுவும்பாய்ந்தானே மருமகட்காய்
உற்றபோரில்ஓடிமாய்ந்தானே
சுத்தும்யானைஓசைகண்டு காத்தானேமாயன்பண்டு
சத்துருராவணன்தம்பி தானஆனாலும்என்னைநம்பி
சரணம்

௩. சங்கரா அபயம் என்றானே மார்க்கண்டன் அவன்
பொங்கியகாலனைவென்றானே
வகையோஈதென்னவீரியம் மாருதிசொன்னதேகாரியம்
அங்கவன்வந்தென்னைமேவ அழைத்துவாபோசுக்கிரீவா
சரணம்

சுக்கிரீவன் அழைத்தபோது விபீஷணர் சொல்லிக்கொண்டுவருதல்.

விருத்தம்.

என்னரகுராமன்உரைப்படிவாரும்சாமி இடம்எனச்சுக்கிரீவன்
சொன்னதைவிபிஷணன்கேட்டுபுளகித்தான்கண்களில்நீர்சொ
ரிந்தான் எனும்சிதைதனைபிரிவித்தபாவிஉடன்பிறந்தபாவி நீய
என்னையும்வாஎன்றாரோசாமிஎன்றே தொழுகின்றான் அழுகின்
றானே

௯-தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

என்னையும் வரச்சொன்னாரோ-ரகுநாயகர்
என்னையும்ராட்தன்என் றன்றுரோ

அநுபல்லவி.

அன்னைஆம்சிதாதேவியைக் கொண்டுபோனபாவி
தன்உடனேபிறந்த சண்டாளன்ஆகிவந்த—என்

சரணங்கள்.

க. நெஞ்சிற்கிருபை இதுதானோ-சாமிஎன்னின
நின்றநான் அறியேனோ-பாவங்களுக்கு
அஞ்சினன்என்றசொல் உண்டோ-அடிமைகொள்ளல்
ஆம்எனமனது கொண்டோ-பாதகங்களுக்குத்
தஞ்சம் எனஎண்ணினோ-ராவணன்செய்த
வஞ்சம் எனஎண்ணினோ-சிவனார்உண்ட
நஞ்சம் எனஎண்ணினோ-இவன்எம்மாத்திரம்
கொஞ்சம் எனஎண்ணினோ—என்னை

உ. மந்தர கிரியாலே-குழம்புகடல்
வானோர்க்கமுதம் மூன்றாலே-சந்தோஷம்ஆகத்
தந்ததே ஒருக்காலே-என்னசெய்தாலும்
சகிப்பார்நல்லோர் இதுபோலே-ஆகையினாலே
என்தன்பிறவியும் தீரும்-இலங்கையிலே
வந்திடுமேசூரியன் தேரும்-அரக்கருக்கு
அந்தம்முத்தியும் சேரும்-நிலவரமா
சந்தேகம்இல்லை இதுபாரும்—என்னை

௩. கண்ணீர்ஆறாய் பெருகுதே-சாமிசொற்கொண்டு
காதில்இன்பம் வருகுதே-நெஞ்சும்உடம்பும
வெண்ணெய்போலே உருகுதே-மயிர்கூர்ச்சிட்டு
மேனிபுளகம் தருகுதே-தாயைவிடென்று
எண்ணிநான்சொன்ன விசாரம்-எண்ணாமல்அவன்
பண்ணினானே ஓட்டாரம்-அதனால்இந்தப்
புண்ணியனைக்கண்டேன் இன்னேரம்-இதுஎனக்கு
அண்ணன்செய்த உபகாரம்—என்னை

விபீஷணர் ஸ்ரீராமருடைய தெரிசனம்செய்யல்.

விருத்தம்.

பத்திவிபீஷணன் இவ்வாறுருகி-அடிக்கடிமண்மேற்பணிந்துவ
அத்திமுன்னேகூவவந்த ஆதிமூலப்பரனே அமரர்கூவ [ந்தான்
நித்தியசோதண்டபதிஎனவந்தான்-என்குறைநீக்கவந்தான்
சத்தியம்ஆம்எனத்தேறிமனம்கொண்டான் ராமதரிசனம்கண்
[டானே

"

எ-தரு-மோகனராகம் ஆதிதாளம்.

பல்லவி.

ராமனைக்கண்ணாரக் கண்டானே-விபீஷணன்கை
மாமுடிமேல்வைத்துக் கொண்டானே

அநுபல்லவி

சாமனும்செங்கமலப் பூமனும்பணிபரந்
தாமனை ஆயிர நாமனைக்கோதண்ட—ராமனை

சரணங்கள்.

க. வெள்ளம்ஆனவானர வர்க்க-நடுவேதம்பி
மேருமலைபோல்அருகே நிற்கப்-பூணில்லாமார்பம்
புள்ளிவிற்போடாதமுகம் ஒக்கத்-தோளவளைநீங்கிப்
பூட்டில்லாமந்தரம்போல் சோபிக்க-மூன்றுலோகமும்
கள்ள அரக்கர்தினம் கிள்ளிக்கிள்ளிஅருந்தக்
கொள்ளைகொடுத்தமரர் துள்ளித்துள்ளிஅருந்த
வள்ளல்ஆகிமுறை உள்ளபடிஇருந்தப்
பள்ளிஅரவணையைத் தள்ளிஎழுந்திருந்த—ராம

உ. தருமம் ஆகரூபி கரித்தானேப்-பிரசண்டகோ
தண்டமும்அண்டமும் பரித்தனைத்-தாமரைபூத்த
கருமுகில்போல்அவ தரித்தானே-மரவுரியைக்
கச்சைபோல்வச்சு வரித்தானேச்-சனகன்கன்னி
இருவிழியிலும்உள்ள கருமணிஎனவந்த
திருஉருவினில்ஒளி பெருகிடத்தாய்முந்த
விரதம்கொடுத்தமுடி சிரசினில்கொண்டுசொந்த
அரசன்கொடுத்தமுடி பரதனுக்கன்றுதந்த—ராம

௩, பூமிதனில்அடிக்கடி வீழ்ந்து-சூரியனைக்கண்ட
பூமலர்போல்முகப்பிரபை சூழ்ந்து-ராட்சதகுல
ஆண்மைஎல்லாம்வரவரத் தாழ்ந்து-சாமிகடைக்கண்
ஆநந்தசமுத்திரம்தன்னில் ஆழ்ந்து-சுந்தரம்உள்ள
காமனைஉதவிய மாமனைத்துளசியந்
தாமனைத்திருமுகச் சோமனைப்புசபல
வீமனைச்சனகி வாமனைத்தேவர்கள்
ஆம்அனைவரும்பணி பூமனைத்தசரத—ராமனை

விபீஷணர் ஸ்ரீராமரைச்சரணம் அடைதல்

விருத்தம்.

வசமுடன் இப்படிக்கண்டு நால்வர் ஆன
மந்திரிகளுடனேவிபீஷணனும்வந்தான்
நிசமுடனேராமச்சந்திரன் சன்னிதிக்கு
நேர்ஆகவரவரக்கண்ணீர் ஆருகி
அசையும்உடல்ஒடுக்கிஅய்யன் பாதத்தில்வீழ்ந்தான்
அயோத்திராமாசரணம் என்னைக்காப்பாய்
தெசரதராமாசரணம் சரணம்என்றேதோத்
திரம்சொல்வான் அதிமேலஉத்தரம்சொல்வானே

அ-தரு புன்னாகவராளிராகம்-ரூபகசாப்புதாளம்

பல்லவி.

ராகவனேசரணம்ரகு ராமாஉன்சரணம்
பட்டிமேன் விபீஷணன்உன்செம்பொன்பாதம்சரணம

அநுபல்லவி

ஆகாதான்உடன்பிறந்த பாவம்தீர்த்தின்னேரம்
அபயமடைக்கபயம்என்னை ஆள்வதுநின்பாரம்-ராகவ

சரணங்கள்

க. பணத்துக்கொருஅம்புகொண்டு பாழில்எய்தால்போலே
இணக்கம்சொனேனென்என்புத்தியைஎறிந்துவிட்டான்சாமி
குணக்கெடுக்கநாய்வாலைக் கூடுமோகூடாதகனல்
துணித்துவிட்டுன்தனைஅடைந்தேன் சாமிசித்தம்என்பக்கிய
ம்—ராகவ
உ. பாம்புக்குப்பால்வார்க்கவார்க்க படுவிஷத்தைக்கொடுப்பது
ஆம்புத்திநான்சொல்லச்சொல்லஅகற்றிவிட்டான்சாமி[போல்
வீம்புக்காரன்அவனுக்கினிமேல்அல்லவோதெரியும்உனை
காண்பித்துக்கொண்டேனைமுற்றிலும காப்பாற்றஉன்தனக்
[கேகடன்—ராகவ

ங. காட்டிற்சீதைதன்னை நம்குடிக்கோர்நெருப்பாகத்
தேடிக்கொண்டாய்என்றடிக்கடி தெரியச்சொன்னேன்சாமி

கேடுவரும்முன்னேமதி கெட்டுவரும்என்பதனுல்
முடன்ஆனுன்அவன்தனைநான் முழுதும்துறந்துனை அடைந்
[தேன்—ராகவ

௪.வானவர்ஆகியபயிர்க்கு வளர்ந்திடும்ராட்சதகளையை
ஈனம்அறப்பிடுங்கவந்தான்! ராமன்என்றேன்சாமி
சாவகியால்ஒருபத்துத் தலையும்பனங்குலைபோல்
மாநிலத்தில்விழுவானே மறந்துவிட்டுன்தனை அடைந்தேன்—

ஸ்ரீராமர் விபீஷணர்க்கு அபயமுமரசுங்கொடுத்தல்

விருத்தம்.

கலங்கிபணிந்தவிபீஷணன்மேல்கருணைபொழிந்துதம்பியினுல்
துலங்கும்துணைப்பாதுகைமகுடம் சூட்டிஎன்பேர்உள்ளளவும
தலங்கள்பதினுல்உள்ளளவும சந்திராதித்தர்உள்ளளவும்
இலங்கைஉனக்கேஎனச்சொல்லி எடுத்தான்வலக்கைகொடுத்
தானே

௬—தரு-பரசுராக-அடதாளசாப்பு

பல்லவி.

இந்தாவிபீஷணு லங்காபுரிராச்சியம்

அநுபல்லவி.

இந்திராதிதேவர்கள் உள்ளநாள்வரைக்கும்—இந்

சரணங்கள்.

௧. வேதம்உள்ளளவும்-வேத கீதம்உள்ளளவும்-பாரி
சாதம்உள்ளளவும்-பஞ்ச பூதம்உள்ளளவும்
இந்தா-இந்தா இந்தா-இந்தா—இந்தா
௨. கார்உள்ளளவும்-கடல் நீர்உள்ளளவும்-ஈரேழ்
பார்உள்ளளவும்.என்தன் பேர்உள்ளளவும்
தந்தேன்-தந்தேன் தந்தேன்-தந்தேன்—இந்தா
௩. கேள்வியும்நீயே-பிர தாவியும்நீயே-என்
ஆவியும்நீயே-சிரஞ் சீவியும்நீயே
சொன்னேன்-சொன்னேன்சொன்னேன்-சொன்னேன்-இந்த

விபீஷணர் ஸ்ரீராமருக்கு ராவணன் பெருமைகூறல்.

விருத்தம்

வந்தவிபிஷணற்கிவ்வா றரசுதந்து
வரிசையுள்ள துணைவனைப்போல் பரிவினுலே

சந்ததமும்வாழிஎன்ற ராமச்சந்திரன்
தழைத்தருளால் அவனைவரவழைத்துன்வாக்கால்
அந்தராவணன்புரமும் உரமும்கோட்டை
அரணமும்மக்களும் அமைச்சர்அளவேபெரும்
தொந்தமுள்ளசேனைகளும் இதரியநீதான்
சொல்எனவிபீஷணனுஞ் சொல்லுவானே

௰-தரு பைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

அந்தராவணன் பெருமையே ஒருவகை
அறிந்ததைச்சொல்லக்கேளாய் சாமி

அநுபல்லவி.

இந்தக்கடல்உலகில் அந்தக்கடலைநீங்கி
எழுந்தவதாரம்செய்த செழுங்கருணைக்கடலே
பிந்தியோமுந்தியோ என்றளவிடாதபுச
பெலவீமாரவி குலசோமாநான்—அந்த

சரணங்கள்.

௧. கோட்டைக்காற்றடிக்க ஆதியில்மேருமலைச்
சிகரம்மூன்றுபறி போச்சுது
ஓட்டமாஅந்தவிசை கடலில்எழுநூறு
யோசனையகலமாச் சாய்ச்சுது
நாட்டம்ஆம்மதில் ஏழுசுற்றுடைலங்கை
நகர்என்றதற்கொருபேர் வாய்ச்சுது
கொட்டைவாசல்ஒவ் வொன்றுக்குப்பதினாறு
கோடிசேனைகாவல் ஆச்சுது
ஆட்டம்இல்மதிள்க்காவல் அரக்கர்ஆயிரம்கோடி
அரமனைக்காக்கின்றபேர் அறுபத்துநாலுகோடி
மேட்டுப்பட்டணம்காவல் அரக்கர்முப்பதுகோடி
விழித்துவிண்ணில்நிற்பவர் கொழுத்தநால்எட்டுகோடி
அந்த

௨. சிந்தியபுகைக்கண்ணன் கும்பன்நிகும்பன்வச்சிர
தெந்தன்மகாபாரிசன் அதிகாயன
பந்திபந்தியாயிவர் கோடானுகோடிசேனைப்
படைத்தோர்இன்னமும்ஒரு வன்பேயன்

தந்திமேவளானையைச்சுழற்றி அடித்தான அவன்
  தம்பிகும்பகர்ணன் பெருவாயன்
மந்திரிகள்வெகுபேரில் அவனைக்கெடுக்கவந்த
  மந்திரிமகோதரன்கூடன் டொருதீயன்
சந்திரலோகத்தைக்கொள்ளை கொண்டானே ரணமஸ்தன
  சதிர்ஆனசேனைக்கெல்லாம் அதிபதிஆம்பிரகஸ்தன்
இந்திரனையும்சிறையில் இட்டானே இந்திரசித்தன்
  இவர்க்கும்ஆயிரம்வெள்ளைத் தவர்க்கும் அவனேகர்த்தன்
  அந்த
கூ..போதவேவருணன் பாசத்தையும்குபேரன்
  புஷ்பகத்தையுமகூடப் பறித்தானே
ஏதோர்போல்வெள்ளி மலையைப்பிடுங்கிமார்பால்
  எட்டானைக்கொம்புகளும் முறித்தானே
வேதனைசெய்தந்ததெய்வப்பெண்களைவீட்டில்
  வெள்ளாட்டிவேலைசெய்ய மறித்தானே
ஆதிசிவன்கொடுத்த வாள்கொண்டபலத்தினால்
  ஆரையும்மசகமாக் குறித்தானே
வாதைசெய்யும்மூல பலம்உண்டினனம்உபரி
  மண்டலத்தில்அவனுக் குண்டோவேறேதிரி
சிதரனேஉன்கைக் கோதண்டம்ஆனவரி
  சிலைக்கும்கணைக்கும்அவன் தலைக்கும்கணக்கும்சரி
  அந்த

ஸ்ரீராமர்முன் விபீஷ்ணர் அனுமானை துதித்தல்.

விருத்தம்.

மானவிபீஷணன் இந்த வாறுசொல்லி
  மரம்ஏழும்கரனையும் வாலியையும்கொன்றாய்
ஆனதுகண்டிங்குவந்தேன் அல்லகண்டாய்
  அய்யாஉன்தூதுவன் அன்றாக்கனவிட்ட
சேனைகளைமடித்திலங்கை கொளுத்தி உன்பால்
  சேர்ந்ததுகண்டினிநீயே திக்கென்றெண்ணி
நானுமஇங்கேசேர்ந்தேன் என்றனுமான்தன்னை
  நாடினன்சாமிமுன்னேகொண் டாடினனே

௰௧. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தஅனுமான் இலங்கையிற்போர்செய்த
விந்தையை என்னசொல்வேன்

அநுபல்லவி.

வந்தனை செய்தந்த சீதையைக்கண்டு
மதத்தாலேஎங்கும் குதித்துக்குதித்துக்கொண்டு—இந்த

சரணங்கள்.

க. சாமிநீதந்த அடையாளம்தந்தம்மை
தந்தஅடையாளம் அந்தமாக்கைப்பற்றி
மேன்மைஅசோக வனத்துமரங்களை
வேரோடும்தூரோடும விசிவிழச்சுற்றி
சேமிக்கும்அந்த வன கிங்கரர்களைத்
திசைக்கும்அப்பாலே தெறிக்கும்படிஎற்றி
ஆம்ஐ னும்பஞ்ச சேனுதிபரைக்கையால்
ஆரிடவேரத்தம் பீறிடவேகுற்றி
அங்கவர்சேனை நடுங்கிடவாரி
அடங்கலும்வீசி பிணங்கள்அவர்அவர்
மங்கையர்முன்விழத் தங்கள்பிணம்என்று
மங்கியேகண்டு பிணங்களில்மேல்விழ
மடித்தவாய்த்தலை ஓர்சிதறிட
வாய்களைக்கவ்வி நாய்கள்உதறிடப்
பிடித்திடும்காலை தூதர்பதறிட
பெண்கள்கூடிக்கொண் டெங்கும்கதறிட—இந்த

உ. தோரணகம்பத்தின் மேற்கொண்டபின்னும்
தொடர்ந்துவரும்அக்ஷ யன்படையைப்பார்த்து
பாரினில்ப்பாய்ந்துகைக் குத்திலும்எற்றிலும்
பல்லாலும்கல்லாலும் செல்லுகள்போல்மாய்த்து
வீரியம்பேசிய அட்சயனைத்தூக்கி
மேலும்கீழும்போட்டுக் காலினுலேதேய்த்து
தீரும்சரீரத்து ரத்தத்தைநெற்றிக்குச்
சிங்காரம்ஆகிய சிந்தூரமாய்ச்சேர்த்து
சித்திரவில்இந்திர சித்தன்விடும்படை
முற்றிலும்காலால் உதைத்துவிழக்கொன்று
மற்றவன்பின்சென்று கொற்றஅரக்கன்முன்
சுற்றிவ்ரால்கோட்டை வைத்ததின்மேல்நின்று
மாயத்தினுல் அழியாதடாசீச்சீ
மர்க்கம்அல்லவாட என்றேசிஏசி
வாயிலவராஇடும் பாலேபேசிப்பேசி
வாலில்அவன்இட்ட தீயைவீசிவீசி—இந்த

ஈ. சுந்தரமாடங்கள் கூடங்கள்பீடங்கள்
தூர்க்கம்எல்லாம்தனல் பக்கம்எல்லலாம்...

தந்திகளபந்திகள மேடைகளோடைகள்
சாலைஎல்லாம்தனல் சோலைஎல்லாம்தனல்
முந்தியகோட்டைகள் கொம்மைகள்பொம்மைகள்
முற்றம்எல்லாம்தனல் சுற்றம்எல்லாம்தனல்
விந்தையதாகிய துங்கஅரங்கமும்
வீதிஎல்லாம்தனல் வேதிஎல்லாம்தனல்
விலகிவெந்தோர் சிலர் அலறிவெந்தோர்சிலர்
மெலியவெந்தோர்சிலர் நலியவெந்தோர்சிலர்
தலைகள்வெந்தோர் சிலர் மூலைகள்வெந்தோர்சிலர்
கலைகள்வெந்தோர்சிலர் நிலைகள்வெந்தோர்சிலர்
தாமும்பிணத்தால் அவனிநெளிக்கவே
சானகிவாழ்மரம் ஒன்றும்தளிர்க்கவே
ஏழும்தினம்பட்ட... ணம்தத்தளிக்கவே
ராவணனும்பயந் தோடிஒளிக்கவே—இந்த

ஸ்ரீராமர் வருணன்பேரில் அம்புதொடுத்தல்.

விருத்தம்.

அறியும்விபீஷணன்சொல்ல அனுமான்வெற்றி
அறிந்தவனுக்குகந்து சிரஞ்சீவியாக
மறுவில்வரமதுகொடுத்தான் கடலைத்தாண்ட
வருணமந்திரம்செபித்து விரிதர்ப்பைமேலே
பெறுதினம்ஏழும்போய் ராமச்சந்திரன
பின்னும்வருணனைக்காணுன் தம்பிக்கோதி
எறிகடல்மேற்சினந்து கோதண்டம்நாணி
ஏற்றினன்சரமாரிதூற்றினனே

கஉ. தரு-சங்கராபரணராகம் அடதாளசாப்பு

பல்லவி.

தொடுத்தானே சரதாரை-தரைக்குராமன்-கொடுத்தனேகடல்
[நீரை

அநுபல்லவி.

தொடுத்தானேஏழுநாள் படுத்தானே அதைகூடத்
தடுத்தானேவருணன்என் றெடுத்தானேகோதண்டம்—()

சரணங்கள்.

க. கனல்கனலாளங்கும் பாய்ந்ததே-பிரம்ம
கமண்டலசலங்களும் தீய்ந்ததே-மலையிற்

கனையுங்கரையாவும்திக் காய்ந்ததே-புகையால்
சூரியன்பரியும்நடை ஓய்ந்ததே
புனலிலேசெங்கமலமலர்என விரிகொழுஞ்சுடர்நழைய
வனதிமிங்கலதிமிங்கல மகரமீன்கள்குழைய[ய
அனல்எழும்பொறிசிதறவெருவெரு கணைகளோடுகணை இழை
இனிஎங்கேஇடம்என் றுவடவாக்கினியும்போய் மறுகடலில்நு
தொடுத் [ழைய

உ. சிட்டமுனிவர்தவம் சிறக்கவே-நீரில்
செழிக்கும்ராட்சதரும்போய் இறக்கவே-அவர்
பட்டஉதிரமஎங்கும் பறக்கவே-கடல்
பாய்ந்துசெவசெவன ற நிற்கவே
அட்டகெசங்களுமதேவரும்பயப் பட்டுக்கண்விழிபிதுங்க
மட்டில்லாஅனல்வெட்டையாற்சுருண் டெட்டுநாகமும்அதுங்க
இட்டமஆம்கவிப்படைஎல்லாமதிகிலிட்டுசெடிதோறும்ஒதுங்க
சுட்டதூதனவந்தானேஎன லங்கைபட்டணமும் திடுக்கிட்டுப்ப
தொடுத் துங்க

௩. தெரிந்துபாதாளமும் கண்டதே-ஆதி
சேஷன்முடியும்சாய்ந்து கொண்டதே-வானிம்
பிரிந்துவெக்கிரகமும் விண்டதே-அந்த
பிரமலோகமும்புகை உண்டதே
பொருந்தவிடும்ஒருதொடைக்குநூறு யிரம்சரங்களகப்பெருக
விரிந்தகடலினிலஇருந்தமலைகளும் எரிந்துகரியாக்கருக
பரிந்துநதிமடவார்கள்கண்ணர் சொரிந்துசாமிமுன்உருக
வருந்தவருந்தவராதவருணனும் -பொரிந்துகடல்கரிந்துவருகத்
தொடுத்

ஸ்ரீராமனை வருணன்சரணம் அடைதல்

விருத்தம்.

பெருமான்பிறகக்கினிவாளி பிடிக்கவருணன்துடித்துவந்து
பருமாமணிஆயிரமாலை பாதகாணிக்கைஆகவைத்து
நிருபாசரணமபிழைபொறுப்பாய் நீயேசரணம்எனத்தாவி
தருவாய்சரணம்என்முனனே தாழ்ந்தான்அடிகிழ்விழ்ந்தானே

௫௩-தரு அசாவேரிராகம்ஆதிதாளம்.

பல்லவி.

சரணம்சரணம்ரகுராமா-நின்னைத்- தற்கா ந்தருள்பரம்தாம

அநுபல்லவி.

விரிகடல்வேந்தன்உன் திருவடிசேர்ந்தனென்
மேல்என்னஉபசாரம் ஆயிரம்நமஸ்காரம்—சரண

சரணங்கள்.

க. மட்டிமீன்ஒன்றேடொன்று மல்லாடிஅமர்பூணும்
வழக்குதீர்க்கப்போனேன் இதுக்காஉன்மனம்கோணும்
எட்டுமரணடும்தெரியா எனக்கித்தனேயோகனும்
என்னபிழைசெய்தாலும் நீயேபொறுக்கவேணும—சா

உ. எதும்பலம்இல்லாத நீஒருமானிடன்
என்றுன்னைநினைத்தால்நான்வீழ்வேன்நரகத்துடன்
இதுநல்லதிதென் றறியாதநான்அசடன்
சிறியோர்செய்தபிழை பெரியோர்பொறுக்கக்கடன்—ச

ங. இக்குவேறில்லைஉன்தன் பாதத்திலேபுகுந்தேன்
சேதுபந்தனம்செய்ய என்முதுகிடம்தந்தேன்
அக்கினிகணைவிட வேண்டாம்நான்மிகநொந்தேன்
அலைகடல்தாயின்றேனே நானுன்னைநம்பிவந்தேன்—ச

வானரவீரர்கள் சேதுபந்தனம் பண்ணுதல்.

விருத்தம்.

இரக்கமாய்வருணன் இந்தவாறுபோற்ற
இராகவனும்கருணைசெய்து மருகாந்தார
அரக்கர்மேல்அக்கணையை விடுத்தான் அப்பால்
அபயதானம்கொடுத்தே வழிகாட்டென்றான்
பாத்திருல்அவனும்என்மேல் அணைசெய்துந்தன்
படைஎல்லாம்நடத்தென்றான் கூடிக்கூடிக்
குரங்குவீரர்கள்மலைமேல் மலையாய்வீசிக்
கொட்டினர்கடலில்அணை கட்டினரே

௧௫-தரு-மோகனராகம் அடதாளசாப்பு

பல்லவி.

சேதுபந்தனம்செய்தாரே-தேவர்-சீதமலர்மழைபெய்தாரே



சேதுபந்தனம்

அநுபல்லவி

நாதனும்கவிக்கெல்லாம் நாதனும்இலங்கைக்கு
நாதனும்அல்லாமல் ஓதும்வானரர்எல்லாம்—சேது

சரணங்கள்.

க. முந்தநாள்முகன்மகன் இந்திரன்மகன்மகன்
சுந்தரதிமுகன் கந்தமாதன் அநு
மந்தன்குமுதன் மயிந்தனதுமிந்தன்
வசந்தன்முதலோர்கூடி
அந்தமலையுனக்கு இந்தமலைஎனக்கென்
றெந்தமலையும்ஓங்கித் தம்தம்கைகளால்வாங்கி
தொந்தராகவன்முன்னே தந்தமொழிப்படிக்கு
வந்தந்தத்துறையிற்கி டந்தவருணன்மேலே—சேது

உ. கடித்துமுகங்கள்சிடு சிடுத்தராட்சதர்தம்மைக்
கெடுத்துவேரோடேகீன் டெடுத்தெரிவதுபோலே
அடுத்தமலைகளைக்கீண் டெடுத்தொருவர்க்கொருவர்
சடுத்தம்பேசிப்பேசி
மடுத்தவலியினிற்சில தொடுத்ததோளினிற்சில
படுத்துச்சிலமலையை எடுத்துத்தலையில்வைத்து
விடுத்துநளன்கையிலே கொடுத்துப்பெருங்கடலின்
நடுத்திடல்ஆம்படி தடித்துவகைவகையாச்—சேது

௩. மேட்டின்மலைகளோடு நாட்டின்மலைபிடுங்கி
ஓட்டிஎறியஅலை ஆட்டியதுளிதெய்வ
நாட்டின்மங்கையர்இடை பூட்டியதுகில்குளிப்
பாட்டிவெட்கமூட்டி
தாட்டிகம்உடன்வெகு போட்டிபோட்டிகள்ஆகப்
பாட்டில்அடுக்கிச்சந்து மூட்டிமூன்றுநாளையில்
நாட்டியோசனைபத்து கூட்டிஅகலமசெய்து
நீட்டிநூறுயோசனை காட்டிஇலங்கைமட்டும்

ஸ்ரீராமர் சுகசாரணரோடு கூறுதல்.

விருத்தம்.

வளம்ஆனஅணைகண்டு மகிழ்ந்துராமன்
மலையனும்சுவேலமலையில்ஏறிச் சகலமும்பார்க்கும்

நளனுலேவிட்டமைத்தங் கிருந்தபோது
நல்லசுகசாரனார்ரா வணனுல்வந்து
தளமமீது திரிதல்கண்டு பிடித்துக்கட்டித்
தந்துவிபிஷணன் காட்டச் சாமிகண்டான்
களவாளன் அரக்கன்ஐயோ இனிஈடேறக்
கரைசொல்வீர்என்றவரோ டெலாசொல்வானே

கடு-தரு-பியாகடைராகம்-ஆதிதாளம்

பல்லவி.

சொன்னன்ஸ்ரீ ராமன்என்று-ராவணன்முன்னேசென்று
சொல்வீர்சுகசாரணரே

அநுபல்லவி.

செந்நெல்வளர்அயோத்தி தெசரதமகராசன்
திட்சணம்உள்ளபாலன் ராட்சதகுலகாலன்—சொ

சரணங்கள்.

க. மாயமான்பின்னேவந்து நாய்எனவேநுழைந்து
சேயஅருந்ததிக்கும் தாயைஅருங்கொடிய
தீயைச்சிறையில்இட்ட பேயனைநரகத்தில்
ஏயஇடுவேன்என்றும்
தூயமுனிவர்கண்டு ஏஏஎன்றுசிரிக்கச்
சாயும்பனங்குலையின் காய்எனவிழப்பத்து
வாயும்தலையும்சுற்றிப் பேயும்கழுகும்கொத்த
பாயும்என்கணைஎனறும் ஆயிரம்தரம்ஆகச்—சொ

உ. மண்டலஅரசரும் எண்டிசைஅதிபரும்
அண்டரும்முனிவரும் புண்டரீகனும்அந்தக்
கொண்டலவண்ணனும்நீல கண்டனும்அவனுடை
அண்டையில் இருந்தாலும்
மண்டுகளரியிடு சண்டையிலேஎனது
சண்டவிசயகோ தண்டம்விடும்கணையால்
அண்டினபடையும்தன் மண்டைகளும்உருளக்
கண்டம்கண்டங்களாகத் துண்டம்இடுவேன்என்று—சொ

ரு. மூத்தமகனும்பின்பு வாய்த்தமகனும்கும்ப

சுரேந்திரனும்படையும் கோத்திரமும்குலமும
கூற்றுவன்கைக்கொள்ளவேகாற்றில்இலவம்பஞ்சாய்
தூற்றிவிடுவேன்என்றும்
வேற்றொருமங்கையரைப் பார்த்தவிழிகளெல்லாம்
காற்றம்எழுமபகரி கோத்துவலைத்திழுக்க
நாற்றிசையிலும்அப கீர்த்திஈண்டானபடு
தூர்த்தனைஎமன்உல கேற்றிவிடுவேன்என்றும்—சொ

ராவணனுக்கு மாலியவான் புத்திகூறல்.

விருத்தம்.

வள்ளல்என்னும்ராமன்உரை தலைமேற்கொண்டு
வந்தசுகசாரணர்கள் போனார்சேர்ந்த
பிள்ளைவிபீஷணன்செயனும்இலங்கைபட்டம்
பெற்றதுவும்திருவணையும் சுவேலமேலே
கொள்ளநெடுஞ்சேனை இறங்கினதுமெல்லாம்
கூறினார்புண்ணினிற்கோல்இட்டதுபோலத்
துள்ளிஇராவணன்வெகுண்டான் அதுக்குநீதி
சொல்லுவான்மலியவான் சொல்லுவானே

கரு தரு-ஆரபிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேள்அடாராவணனே-நானம்சொன்னபுத்திகேள்அடாகண்ம
[ணியே

அநுபல்லவி.

நாளைத்தெரியும்அடா மாலியவான்பேச்சு
ராமன்பேர்சொல்லச்சொல்லஎடுக்குதேபெருமூச்சு—கே

சரணங்கள்.

க. முற்றிலும்தானேஅந்த ராமாவதாரம்தன்னை
மூவரும்ஓர்உருவா எடுத்தார்என்றாரேஅப்பால்
சற்றும்அறிந்திலையோ தேவர்எல்லாரும்குரங்காச்
சமைந்தார்என்றாரே இப்பால்
ஒற்றிவெள்ளம்வருமுன் அணைகோலிக்கொள்ளவேணும்
ஊரிற்கிட்டிவந்தாரே செய்வதுண்டோஇனிமேல்
பித்துபிடித்தாற்போலப் பிடித்தைப்பிடியாதே
பேதைசிதையைவிடு பிழைக்கிறதுமெய்ஆனால்—கே

உ. பண்டிவன்கையாலேநாய் பட்டபாடுகொஞ்சமோ
பழம்புண்ணுளிபளி யாரியென்பதுபோய்யோ
மீண்டுபெண்ணுமீதகூத் நாடிச்சிலம்பமபடை
வெட்டுக்காவது மெய்யோ
உண்டானவார்த்தைசொன்னேன்சுடுகண்டைக்காகளரி
உடையாதேராமன்சேனைக்குன்சேனைமாவோநொய்யோ
துண்டரீகபுத்தி வேண்டாம்அடாஉனக்கு
சுயபுத்திபோனாலும்என் சொற்புத்திவேணும்ஐயோ—

ங. வரவரவிபரீதம் கண்டல்லோசொல்லவந்தேன்
வலியத்தேடிச்சொல்லவந்தேனே உன்தன் அண்டை
கிரியைஅறிந்துவந்து தூதர்சொன்னால்எண்டா
கிழித்துக்கொள்ளுகிறாய் தொண்டை
ஒருகுரங்கின்கையாலே படுபாதிசேனையும்போய்
ஊரில்மூலைக்குமூலை உருளுதேதலைமண்டை
இருமனதாயெண்ணுதேஎல்லாகுரங்கும்வந்தால்
இலங்கைமடடிமேலம்பாமோ எப்படிஆமோசண்டை—கே

மாலியவானை ராவணன் நிந்தித்தல்.

விருத்தம்.

மீட்டாங்குரைக்கும் செயல்உண்டோ
விடியும்தனையும் மழைபெயினும்
ஒட்டாங்கிச்சில் கரைவதுண்டோ
ஒருமாலியவான்உரைத்ததெல்லாம்
கேட்டான்எனது செவிக்காகக்
கேள்விநீசொன்னதுபோதும்
பாட்டாகேளாய்என அரக்கன்
பழிப்பான்சொல்லி ஒழிப்பானே

௫எ-தரு தோடி ராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேவைத்திருந்தாய்இந்த-ஏழைமதி-என்மாலியவானே

அநுபல்லவி.

அங்கேபோன விபீஷணன்போலே
ஆளைச்சுற்றிபாராமல் அளக்கிறாய்ஒருக்காலே—எங்

சரணங்கள்.

க, ஆயிரம்வெள்ளம் சேனைஉண்டிதை
அறியாதவர்இங்கே எவர்தாமோ
அல்லதொருசிறு முள்ளுருக்கினுல்
அதுகொண்டென்னபெரு மலைநோமோ
மாயமோஇந்தக்காட்டுப்பூச்சிகள்
வல்அரக்கர்படைக் கெதிர் ஆமோ
வாயைமூடடா பேயாஉனக்கென்ன
வயதுசெல்லச்செல்ல மதிதான்கெட்டுப்போமோ—எங்

உ. வழக்கமொமா யனுக்கும்என்கணை
மணியோமார்பில்இடும் சவ்வாதோ
மதித்தகைலாசம்எடுத்தநான் இந்த
மனிதனைப்பொருதச்சஞ் சலம்வதோ
உழக்கிலேகிழக்கும் மேற்கும்காட்டி
உறுக்கிருய்இதென் னருதோ
உடல்குள்ளோநா வளைக்கிருய்விரல்
உரல்ஆனல்உரல் எப்படிஆகாதோ—எங்

ந. அதம்செய்யேனேசிதை யால்இளைத்தால்நீ
அழைஐயாஎன்னைப் பேர்மாற்றி
ஆலகாலவிஷ மோசிவனுக்கும்என்
அம்பைவிழுங்கப்போமே களைஆற்றி
பதுங்கிராட்சதர்முன் பயப்படும்நருக்குப்
பயப்படச்சொன்னுய்பயங் கரம்வற்றி
பயப்படும்நரர்கிழே பயப்படும்குரங்குக்கும்
பயப்படச்சொன்னுய்இது வெகுநேத்தி—எங்

சாரணன்ராவணனுக்கு ஸ்ரீராமர்முதலோரைகாட்டல்

விருத்தம்.

அன்றுசொன்னபாட்டனை இவ்வாறுதள்ளி
அந்நேரம்கன்னியர்கள் ஆடப்பாடத்
துன்றுமணிஉத்தரகோ புரத்தில்ஏறிச்
சூரியனைக்கண்டதொரு ராகுபோலக்
கன்றிஇராமனையும் சேனையையும்கண்டு
காய்ந்தராவணனுக்குச் சுவேலமேலே
நின்றவர்இன்னர்இன்னர் என்றேகையை
நீட்டிஞன்சாரன்எதிர்காட்டினனே

கஅ-தரு-சாவேரிராகம்-ஆதிதாளசாப்பு

பல்லவி.

பாரும்பாரும்சாமீ-ராவணேஸ்வரரே-பாரும்பாரும்சாமீ-பாரு

அநுபல்லவி

நேரும்கவிகள்எல் லாரும்கும்பிட்
நீலமலைபோலே சுவேலமலைமேலே
ஏர்வையாளதிர் சேவைதரும்ராமன்
இவனே ஆரிலும்திராணிஇவனேகோதண்டபாணி—பா

சரணங்கள்

க. துடுக்கன் அந்தலட்சுமணன்-செவிகளும்மூக்கும்
சூர்ப்பனகியைக்கொய்து விட்டவன்
அடுத்தராமனுக்குக் கைகொடுக்கிறான் இதோ
ஆதித்தனுக்குப்பிறந் திட்டவன்
இடுக்கேநிற்கிறவன்-நம்மைநாசம்செய்ய
இலங்கையைவிட்டுபுறப் பட்டவன்
ஒடுக்கிக்குரங்குக்குள்ளே-குரங்காநிற்கிறான் இந்த
ஊரைக்கரிகரியாச் சுட்டவன்-உற்று—பாரும்

உ. முந்தக்கடல்கடந்த-வாலிமகன் அவன்
மூர்க்கன் அங்கதன்வெகு தாக்கன்
இந்தப்பெருவணையைக்-கட்டியநளன்அவன்
இவர்கட்குமுதன்குமு தாக்கன்
கெந்தமாதனன் அவன்-சதவலி இவன் அவன்
கேசரிஇவன்கவை யாக்கள்
விந்தைக்கரடிக்கு-நாதன்சாம்புவன்அவன்
வெகுநாள் ஆயுசுள்ள தீர்க்கன்-உற்றுப்—பாரும்

ங. வாய்ச்சநீலன்முதல்-தலைவரும்மனிதரும்
வானரச்சேனைகூட ஈதே
பூச்சிக்கூட்டம்இது-தேவரீர் உடன்
போராடுமோகளம் மீதே
நீச்சுக்கடலிலே-குரங்கிட்டமலைஎல்லாம்
நெட்டிபோலேமிதந்த போதே
ஆச்சுதென்னை இனிக்-காலானுகூலம்
அவர்க்கோஉமக்கோதெரியாதேகண்ணாலேஉற்றுப்—பா

சுக்கிரீவனுக்கும் ராவணனுக்கும் மல்லுயுத்தம்.

விருத்தம்.

சாரன் இதுசொல்லியபோது தள்ளி அரக்கன்சொல்லிவிட்டான்
வீரம்உடனேசுவேலமலை மேலேநின்றராகவன்முன்
ஈரம்அகன்றராவணன்இங் கிவனேஎனவீடணன்காட்ட
வாரம்உள்ளசுக்கிரீவன் அதைமதித்தான்அவன்மேல்குதித்தா
னே

கசு. தரு கலியாணிரகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

சுக்கிரீவனுக்கும் - தசக்கிரீவனுக்கும் - தொடர்ந்ததேமல்லுயு
[த்தம்

அநுபல்லவி.

கைக்குள்ளேவிபீஷணன்காட்டும் முன்சாய்ந்த
கருமலைமேல்ஒரு பெருமலைபோற்பாய்ந்த—சுக்கி

சரணங்கள்.

க. கருகியமேனி அரக்கன்முன்பாய்ந்திவன்
கையாற்கன்னத்தில் அடித்தான்
இருபதுகைகளும் ஓங்கியேஅவன்
இவன்மேலேஇடிபோலே இடித்தான்
ஒருநிமிஷத்தில் இவன்அவன்மார்பில்
உதைத்தான்அவன்கட்டிப் பிடித்தான்
குருமணிமேடையில் தேய்த்தான்இவன்அவனைக்
குத்திரத்தத்தைக் குடித்தான்
ஒருவர்கைகளைஒருவர் பின்னவே
ஒருவரைக்கடித் தொருவர்தின்னவே
இருவர்கண்ணிலும் பொறிகள்மின்னவே
இலங்கைநகர்எங்கும் கிடுகிடென்னவே—சுக்கி

உ. விறுவிறென்னச்சுற்றி வானரவீரனை
மெல்அரக்கன்எறிந் தடினன்
பிறகிவன் அந்த அரக்கனைப்பாய்ந்து
பிடித்துநிலத்தோடே சாடினன்
பொறிஅரவம்கதிரோனைமூடினற்போல்

அரக்கனப்பன் லும — முடினன்
கருவிக்கிளம்பிக்கவிமன்னவன் அந்தக்
கண்டகனேடேகை — கூடினன்
உருமிவிழுந்தந்த — அகழிஅடையவும்
ஒருவர்க்கொருவர்தம் — தலைகள்உடையவும்
மறுபடியும்தொடர்ந் — தரக்கன் இடையவும்
வாலிபோலேஇவன் — அவனைக்கடையவும்—சுக்கி

தானம்பிசகாளட்டானைகளும்இந்தச்
சண்டையினுக்கணைகள் — பிதிர்
கானக்குரங்கும்அரக்கரும்என்னமாக்
காணுவோம்என்றுநெஞ் — சதிர
ஆனல்அரக்கனமணியும்பணியும்
அலங்கோலமாஅறுந் — துதிர
வான்அளவுமதுகள்பாயஇருவர்க்கும்
வரவரக்கோபமும் — முதிர
ஈனநிருதனும் — இவனும்அடிக்கடி
எதிர்த்துப்போர்செய்யும் — வேளையினிற்கெடி
வானரேசுரன் — அரக்கன்பத்துமுடி
மணியுப்பறித்தெழுந் — திடவே இப்படி—சுக்கி

ஸ்ரீராமர் சுக்ரீவன்பிரிவைப்பற்றி அவனேடு முறையிடல்.

விருத்தம்.

பறித்தமாமணியைச்சாமி பதத்தில்வைத்துவீழ்ந்தான்
எறிக்குமாகீர்த்திசேதேளனவிபீஷணனும்சொன்னன்
அறிக்கைஆகியஸ்ரீராமன் அவனைமுன்பிறிகையாலே
குறித்தசுக்கிரீவனேடே குறைசொல்வான்முறைசொல்வானே

உதிபதை சஹானுராகம் திருபுடைதாளம்

கண்ணிகள்.

அம்புபோல்பறந்தாயே — எங்கேபறந்தாய்-அடாசுக்கிரீவா
நம்பினஎன்னை — எப்படிமறந்தாய்
சீதையைத்தம்பியை — வேண்டிவருந்தேன்-அடாசுக்கிரீவா
நீதுணைஎன்றல்லோ — நம்பிஇருந்தேன்

எழுபதுவெள்ளம் சேனைக்குமெனக்கும்-நீ அல்லோசிவன்
முழுமதிமோசம் போச்சுதோஉனக்கும்
கைப்பிடித்தஎன்னை ஏன்டாசதிதாய்-தன்னந்தனியே
எப்படிராவணன் மேலேகுதித்தாய்
அந்தராவணனால் உன்உயிர்போமேஆனால்-என் அம்பாலே
எந்தலோகமும் நீறுநீறுமே
உன்னைக்கொன்றானை கொன்றாலும்ஆற்றேன்-அவன்குலத்தை
பின்னைக்கொன்றாலும்நான் அல்லோதோற்றேன்
என்உடன்சொல்லாத தென்னமூண்டோ-கோபம்வந்தாலும்
தன்னை அறியாச் சன்னதரும்உண்டோ
சிந்த அரக்கன்முடியைக் கொள்ளை-நான்கொள்ளும்முன்னே
முந்திக்கொண்டாயே நீயேஆண்பிள்ளை

ஸ்ரீராமர் வானரவீரரோடு இலங்கையைவளைத்தல்

விருத்தம்.

எடுத்திந்தப்படிஇரங்கச் சுக்கிரீவன்தன்னை
இசையவிபீஷணன்புகழ் அறிந்துமறுநாள்வாய்
வடக்கினில்சுக்கிரீவன் மேற்கினில்அனுமான்தெற்கு
வாசலில்அங்கதன்கிழக்குவாசலிலேநீலன்
படைத்தொகைஒவ்வொருவருக்குப் பதினேழுவெள்ளம்
பழம்கனிகாய்களுக்குரண்டு வெள்ளம்எனப்பகுத்தே
விடுத்தபின்புவடக்கினில் தம்பியினுடன்கோதண்ட
விற்கொண்டான்ஸ்ரீராமன் நிற்கின்றான்தானே

இராவணன் இலங்கைக்குக் காவல்வைக்குதல்.

இதுவுமது.

கோலமுடிமணியிழந்துவெட்கிஇராவணன்பொனன்கோட்வாசல்,நாலினும்வானரப்படைகள்வளைந் ததனைச்சார்த்தாலனாலே கேட்டான்,மூலவடவாசல்தனைநான்காப்பேன்நீர்வாசல்மூன்றும்காப்பீர்,சாலும்என அவரைத்தேற்றுவான் நகர்காக்கச்சாற்றுவானே.

௨0-தரு-உசேனராக-அடதாளசாப்பு

பல்லவி,

பட்டணம்பதனம் - இலங்கைப் - பட்டணம்பதனம்

அநுபல்லவி.

அஷ்டதிக்கெல்லாம் செயித்தோம்என்றெண்ணி
அசட்டுக்குரங்கென் றகந்தையேபண்ணி
நெட்டதுசெய்யல் ஆகாதுகாணும்
நெரிஞ்சிமுள்தைத்தாலும் குனிஞ்சிப்பிடுங்கவேணும்(பட.

சரணங்கள்.

ஆச்சரியம்பதினேழுவெள்ளத்துடன்-அனுமந்தனமேலேகோ
பூச்சிக்குள்பெரும்பூச்சிபோல்வந்துபுறம்வளைத்தானும்[ட்டை
பேச்சுக்குள்இந்திரசித்தே-அவனைபிடியட-இருநூறுவெள்ளம்
தேய்ச்சுவிட்டாஉன்கையாலே-தின்னடாதடை-என்னடாஇந்த
பட்டணம்

உ. அப்பனைக்கொன்றமனிதர்க்காகஅங்கதன்பதினேழுவேள்வ
துப்புள்ளதெற்குவாசலில்வந்து-சூழ்ந்துகொண்டானும்[துடன்
ஒப்பிலர்தமரபெரும்பக்க-உடன்கோதரா இருவீரும்சென்று
கைப்படைக்குள்ளே அவன்படைஎல்லாம்கரையுங்கள்மண
[மேல்அரையுங்கள் இந்த (பட்டணம்)

௩. சுற்றியவெள்ளம்பதினேழுடன் தொத்தும்குரங்குகளுக்
[கெல்லாதள
கர்த்தன்நீலன் கிழக்குவாசலைக்கட்டிக்கொண்டானும் [மதலை
பெற்றிஉள்ளபிரகஸ்தனேஉன்தன்பேர்சொன்னலந்தகாலனு
வைத்துப்படான் இருநூறு-வெள்ளம்கொண்டுமசகம்போல்க்
கையால்பிசயடா—பட்டணம்

ச. திடத்துடன்வானாரும்நாரும்சிங்கத்தின்காட்டைநரிவளைத்தாற்போ
வடக்குவாசலைச்சுக்கிரீவன்வுடன் வளைத்துகொண்டாராம் [லாயும்
நடக்கிறேன்இருநூறுவெள்ளம்கொண்டோர்-நாழிகைக்குள்ளேஅவ
ரஎல்லாம்
கெடுக்கிறேன்வீடுபெற்றுமுன்னமே-கிணறுவெட்டவேணும்நி
நிணறுசொன்னேன் இந்த—பட்டணம்

அங்கதன் தூதுபோக அவனோடு ராவணன் சொல்லுதல்.

விருத்தம்.

அரக்கன்இவ்வாறிலங்கையுள்ளே காத்துக்கொண்டான்
அடல்குரங்குவீரர்வெளி வளைத்துக்கொண்டார்
உரைக்கும்அனுமனைநிகர் அங்கதன்சிராமன்
உத்தரம்கொண்டிலங்கைநக ரத்தில்போனான்
இரைச்சல்அவ்வூர்எடுத்திடா ராவணனைக்கண்டான்
ராகவதூதுவன்நான் அங்கதன்ஆம்என்பேர்

திருத்தம்உள்ளவாலிமைந்தன் என்றுன்கேட்டுச்
சிறுவான்அரக்கன்எதிர் கூறுவானே

உக தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கேளடா அங்கதா-எனதுவார்த்தை-கேளடாநீஅங்கதா

அநுபல்லவி.

கேள்அடாநரர்கொஞ்சம் நாள்டாநீபழி
மீள்அடா அவர்க்கென்கை வாள்அடாஇருக்குது-கேள்

சரணங்கள்.

க. தகப்பனைக்கொன்றவன் தூதாகப்பாராட்டி
தள்ளிவந்தாய்சிறு பிள்ளைஎன்பதுகாட்டி
செகத்தந்தவசைகூடப் போகநான்உனைநாட்டி
சிங்காசனத்தில்வைப்பேன் சிங்காரமுடிசூட்டி-கேள்

உ. நீடச்சானகிஎன்னும் பெண்ஒன்றுகிட்டுது
நின்னைப்பிள்ளை ஆகஎன் புண்ணியமேஇட்டுது
தேடப்போனமருந்து காலில்அகப்பட்டுது
தெய்வமேஉன்னைஎந்தன் கையில்கூட்டிவிட்டது-கேள்

ங. நெருங்கியதுணைஆம்உன் தகப்பன்மனிதன்அம்பில்
நெருக்குண்டான்என்னும்வார்த்தைஉருக்குதேஎன்னைவெம்பி
இரும்பழிமீட்காமல் இருந்தென்னடாநம்பி
செய்தார்க்குச்செய்வது செத்தபிறகோ-தம்பி-கேள்

அங்கதன்ராவணனுக்கு மறுமொழிஉரைத்தல்.

விருத்தம்.

தூவியஎள்ளும்கரும்பும்-நசுக்கில்உண்டாம்மலன் என்னும்சொல்லேஅல்லால்,பாவிஇவன்இணங்கிவாரான்-எனத் துரைஅங்கதன்நீதான்படித்தெல்வாம்,ஏவியஎன்காதுகொள்ள-அரக்காநான்வந்தகாரியங்கேள்சீதா,தேவிதனைவிடுத்தடுத்தால்-ஆவிதனைவிடுஎன்றேசெப்புவானே.

உஉ-தரு-மோகனராகம்அடதாளசாப்பு

பல்லவி.

அடடாவெளியேபுறப்படடா இல்லை-ஆகில்சீதையைவிட்டுவிடடா

அநுபல்லவி.

தொடரும்வின்பழிதேடிக் கொண்டாயே-முன் ஒரு
தூதன்வந்துசெய்ததைக் கண்டாயெ-நானும்
சொயம்வீரர் ஆம்அந்த ரகுவீரர்விடவந்த
தூதன்-தூதன்-தூதன் வெட்கம்உண்டானல்-அடடா

சரணங்கள்.

க. நினைவுவராமல்வர்ம்மம் முற்றியே,என்னை
நீர்ஆர்என்றாய்உன்னைப் பற்றியே-ஒட்டத்
தனதுவாலில்கட்டிச் சுற்றியே-இந்தத்
தாணிஎல்லாம்தாவி வெற்றியே்-கொண்ட
சினவாலிபுத்திரன் நான்அடாஉனக்கோர்
சேதிசொல்வதற்காவந் தேன்அடா-எங்கள்
சிராமர்தேவியைச் சூதாக்கொண்டுவந்தாயே
திருடா-திருடா-திருடா ரோஷம்உண்டானல்—அட

உ. துடிக்கத்தாடகைஉயிர் போக்கவும்.தங்கை
சூர்ப்பனகியைமூளி ஆக்கவும்படை
எடுத்தகரனைவிழத் தாக்கவும்-வந்தாய்
இலையேநீஅவர்உயிர் காக்கவும்நல்லது
தடிக்கவேஅதுதப்பிப் போனாலும்-நாங்கள்
சமுத்திரம்அடைத்தபோ தானாலும்-உன்தன்
தளத்தோடும்வாராமல் ஒளித்ததேதடா-அட
சண்டி-சண்டி-சண்டி மானம்உண்டானல்—அடடா

ந. அரசும்உன்கொலுத்திருச் சட்டமும்-நாளை
அழியப்போகுதேஉன்தன் கொட்டமும்இதிலே
தருவேன்என்றாய்எனக் கிஷ்டமும்-நாய்
தாக்கொள்ளுமோசிங்கம் மட்டமும்எங்கள்
துரைசுக்கிரீவனோடும் கிட்டியே-ராமர்
சூழ்ந்துவடக்குவாசல் கட்டியே-தலை
துணிப்பேன்என்றுவில்லை வணக்கினின்றுவரச்
சொன்னர்-சொன்னர்-சொன்னர் சேவகன்ஆனல்—அ

அங்கதன்மீண்டுபோர்க்கலக்கஎன்ன இருபடைகளும் கைகலைத்தல்.

விருத்தம்.

அங்கதன்இப்படிசொல்ல அரக்கன்இவனைப்பிடியும்அடியும்என்றான்,கிங்கார்தொட்டவரைஎல்லாம்தலைசிதறஉதறிவிட்டுகிளம்பிவந்தான், செங்கண்இராகவசரணம் போய்வந்தேன்வல்அரக்கன்சின்னதகண்டேன், வெங்கண்இராவணனைப்பொரிடுகென்றான்தயவைஇனிவிடுகென்றானே.

௩-திபதை-சங்கராபரணராகம்-அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. என்றான் அங்கதன் அங்கே-நின்றவானரர்எல்லாம்
ராமசாமிமனது தான்மொய்க்கவே
சென்றாரேஎதிர்த்தாரே-கொன்றாரேராட்தர்கள்
திரும்பித்திரும்பிவந்து தான்மொய்க்கவே

௨. கல்லும்கருமலையும்-கெல்லும்பெருமரமும்
கைக்கொண்டுவானரர்கள் விட்டுவிறைத்தா
வில்லும்வாளும்கொண்டு-வெட்டிவெட்டிஅரக்கர்
மேலும்கீழும்அம்புக ளாலேமறைத்தார்

௩. வாலும்காலுட்தறிந்து மேலும்தோலும்பறித்து
மாய்ந்தஅனேகம்கோடி வானரங்கள்
மேலும்திசைகள்ஒரு-நாலும்ரத்தவெள்ளமாம்
வீழ்ந்தஅரக்கர்முடி யோடுசிரங்கள்

௪. அடுத்தராக்ஷதர்ச்சண்டை-வானரச்சண்டையினில்
அலங்கோலம்ஆச்சுலங்கை ஊரினிலே
எடுத்தபிணம்குவிந்து கடலும்திடலாகவே
எழுந்ததூரதம அந்தப் போரினிலே

௫. தட்டிமலைபிடிங்கி-விட்டெறிந்துசுக்கிரீவன்
தலைதலையாஅரக்கர் தம்மைப்படுத்தான்
எட்டிஎதிர்த்தவச்சிர-முஷ்டிதனையும்அவன்
எமதூதர்கையில்இரை ஆககொடுத்தான்

௬. தேக்கும்அனுமான்கையால்-மேற்குவாசலில்வந்த
சேனையொடுதுன்முகனும் தான்உயிர்விட்டான்
தாக்கும்அங்கதன்கையால்-தெற்குவாசலில்வந்த
தளத்தோட்டமாண்டுசுபா ரிசனும்பட்டான்

௭. நீலன்கையாலேகீழ்-வாசலிலேப்பிரகஸ்தன்
நீண்டசேனையும்தானும் மாண்டுபறந்தான்
கோனும்இடும்பன்குத்த-கும்பானுஎன்பவனும்
குடலும்உடலும்தள்ளி ஆவியிறந்தான்

௮. அந்தச்சேதிஅறிந்து-சிந்தித்தராவணனும்
ஆயிரம்பறித்தேரை வரக்கூறினன்
பந்தித்தேர்கள்இரண்டா-யிரம்சுற்றிவரத்தானும்
பத்துத்தலைமலைபோற் களம்ஏறினன

௯. எறிஅம்புமழையாத்-தூறிச்சுக்கிரீவன்படை
எல்லாம்படுத்தவனை மூர்ச்சைஆக்கினன்
சீறிவரும்மாருதி-விட்டமலைகள்எல்லாம்
சிந்தைஅரக்கன்கணை கொண்டுதாக்கினன்

௰. மாருதிவல்அரக்கன்-தேரில்இருந்தபெருஞ்
சாரதிதலைமலையா வெழுழித்தான்
வீரராவணன்ஒரு-நூறம்பினால்அனுமான்
மெய்யும்கைய்யும்தளர வேதறித்தான்
௰க. இளையான்அதைஅறிந்து-வளைவாம்அரக்கர்படை
எல்லாம்இமைப்பொழுதில் செல்லஒழித்தான்
இளையாயிராவணன்மேல்-வெகுவாகச்சண்டைசெய்து
ஓரம்பால்அவன்சரக் கூடும்அறுத்தான்
௰உ. தளராமலட்சுமணன்-விளையாடக்கண்டரக்கன்
சமர்த்தன்நீஎன்றுதுதி தான்விளம்பினான்
வளம்ஆனமாருதியும்-களைஆறியேஅவ்வேளை
மகமேருகிரியென வேகிளம்பி

அனுமாரும் இராவணனும்கைக்குத்துக்கு நிற்குதல்.

விருத்தம்.

கிளம்பியமாருதி இராவணனைநேரே
கிட்டிமணித்தோள் இரண்டும் தட்டிக்கேளாய்
விளம்புகிறேன்வெறுங்கைஇரண் டுடையோனானே
வீரத்தால்இருபதுகை உடையைநீயோ
அளந்தவில்லுமஅமபும்எடுத் தாட்டவந்தாய்
அதிலேஆள்பலம்தெரியல் ஆமோஇந்தத்
தளந்தனில்உன்பலமும்என்தன் பலமும்காண்போம்
சற்றென்முன்கொடடாகைக் குத்தென்றானே

உரு. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

குத்துக்குவாடா - ராவணாகைக் - குத்துக்குநீவாடா.

அநுபல்லவி.

பத்துத்தலையும்இரு பதுகையும்ராக்ஷத
பலமும்குரங்கினிட் பலமும்தெரியவேணும்—குத்

சரணங்கள்.

க. எட்டானைக்கொம்பும்-மொட்டக்கிடாபோலே
ஒட்ட ஓடித்தேன்என்றும் - அந்த
ஈசன்கையிலேஊசிவேரோடோரான்
எடுத்துப் பிடித்தேன்என்றும்

சட்டம்சட்டம்ஆய்ப் பேசிக்கொள்ளுவதும்
சமர்த்தன்சமர்த்தன்நான் என்றுதுள்ளுவதும்
விட்டுக்கட்டடா ஏதுக்குவீணும்சாணும்
வீரம்எல்லாம்இன்றைக்கு- வெளிச்சம்ஆகவேணும்—குத்

உ. நான்உன்னைக்குத்துவேன்-அந்தக்குத்துனக்குத்
தானே பெருந்தத்தடா-பிழைத்தால்
நாலைந்துகைகளும்-ஓங்கியேஎன்தன்
மேலே நீகுத்தடா
ஏன்என்னைக்குத்தினாய் என்றுகோபிக்கவில்லை
இதுவேநம்பிக்கை தேறிக்கொள்எனசொல்லே
ஆனமட்டும்பார் வஞ்சனைபண்ணுதே
ஆள்பகட்டால்மிரட் டல்ஆம்என்றெண்ணாதே—குத்

ங. ஓதிபருத்தால்என்ன தூண்ஆகுமோசற்றும்
ஒதுங்காதே நில்லடாகையை-கையை
ஓங்கினேன்குத்து-வருகுது வருகுது
தாங்கஉன்வசம் அல்லடா
சதியினாலேஎங்கள் சீதாங்கனிதன்னைக்
தமபிரிந்துபோன பின்புதிருடும்உன்னை
எதிரிலேகண்டு சினம்மிகப்பெருகுதடா
எனதுவலதுகைக்குத் தினவுதின்குதடா—குத்

ஸ்ரீராமருக்கும்இராவணனுக்கும் முதல்நாள்உயுத்தம்

விருத்தம்

அனுமான்இப்படிகுத்த அரக்கன்சாய்ந்தான்
அறக்கன்மறுபடிகுத்த அனுமான்சாய்ந்தான்
தனிவேல்ஒன்றரக்கன்விட்டான் இளையோன்சாய்ந்தான்
சாய்ந்தவனைஎடுத்தாக்கன் ஓய்ந்துநின்றான்
முனையால்மாருதிஇளையோனைக்கைக்கொண்டான்
முடித்தேர்கொண்டிராவணன்போர்தொடுக்கவந்தான்
ம்னுநாதர்எதிரேஅனு மான்மேற்கொண்டு
வளைத்திட்டார்இருவர்போர்விளைத்திட்டாரே

உசு-தரு அசாவேரிராகம்அடதாளசாப்பு

பல்லவி.

ராகவனுக்கும் - ராவணனுக்கும்-நடங்கதேசண்டை

அநுபல்லவி.

ஏககோதண்டத்தில் இவன்கணை எய்யவும்
ஈரைந்துகையாலும் அவன் அம்புபெய்யவும்—ராக

சரணங்கள்.

௧. அரக்கன்தேர்மேற் றாவினான்-சுவாமி அநுமான்
பெருத்ததோள்களில் மேவினான்-சாமிமேல்ஏழு
சரத்தைராவணன் தாக்கினான்-ஏழையும்
சாத்தால்ஐயனும் போக்கினான்-பின்
கருத்தன் ஓர் ஐந்தம்பு தூவினான்-மாற்றிக்
கண்டகன்பத்தும்பை ஏவினான்-அதைத்
தூரத்திராகவன்வெற்றி கொண்டான்-வந்து
சுற்றியசேனையைக் கண்டான்
ஒருத்தற்கொவ்வொருகணை தவறாமலேஊன்றி
ஊழிமழையைப்போலே தலைதலையாச்சிந்தி
கரிக்கூட்டம்பரிக்கூட்டம் தேர்க்கூட்டங்களைச்சேர்த்து
கால்மாடுதலைமாடாக்களத்தை எல்லாம்தூர்த்து
கரைக்குள் அடங்கா ரத்தவெள்ளக்
கடலிலேகவந்தங்கள் துள்ள
இரைக்குவருகிற பேய்கள்கவிய
எங்கும்ராட்சதப் பிணங்கள்குவிய—ராகவனுக்

௨. நெருங்கும்ராட்சதரைக் கொன்று-தனதுசேனை
குரங்கைத்தற்காத்து நின்று-பொருதும்வேளை
தெரிந்துராவணன் அடுத்தான்-சாமிதோளினில்
இரண்டம்பழுந்த விடுத்தான்-பின்
பரிந்தொருகணைராமன் தெறித்தான்-அவன
பத்துகைவில்லையு முறித்தான்-கொடியில்
திரும்பச்சாரதிதனை கொய்தான்-பரியும்
தேரும்கொடியும்பொடி- செய்தான்
வரங்கொள் ஆயுதம்எல்லாம் அவன்தொடத்தொடவெட்டி
மறுதேரும்சேனையும் வாராமல்வழிகட்டி
உரம்கொண்டுராகவன் முனைந்துநின்றதுகண்டு
ஒண்டியாய்த்தேர்விட்டுக் குதித்துயோசனைகொண்டு
உலையின்மெழுகாய்நின்று தேய
ஒருகணைவந்துதலையிற் பாய
இலைகள்உதிர்ந்தாப்போல மணிமுடி
ஈரைந்துங்கிடந்துருள இப்படி—ராகவனுக்

௫. தொடுத்தகவசம் நீங்கி-கிரிதொட்டு
விடுத்தபாம்புபோல் ஏங்கி-நாதர்க்கெதிர்
படித்தநாக்குகள் காய்ந்து-ஓரம்சொன்னவன்
குடித்தனம்போற் றேய்ந்து-ஆலின்
இடைக்கிடைவிழுதுபோல்க் கட்டும்-கைகள்
இருபதையுந்தொங்கப் போட்டும்-தன்
மிடுக்கெல்லாம்போய் மெலிவாக-தோளில்
வீரலட்சிமி அப்பாற் போக
அடிக்கடிகுரங்குகள் மலைபோடக்களைபட்டு
அனுமந்தன்கைக்குத்தால் முதுகெல்லாய்தொளைபட்டு
படைக்கலமவிடவிடப் பொடிப்பொடியாவிண்டு
பாலலக்ஷ்மணன்அலங்கோலம் செய்திடக்கண்டு
பார்த்தமுகம்எல்லாம் வேற்றுமுகமாய்
பத்துமுகத்துள்ள பவிஷெலாம்போய்
தோற்றுராவணன்மனது கொதிக்கவும்
சுவாமிகீர்த்தியைத்தேவர் துதிக்கவும்—ராகவனு

ஸ்ரீராமர் ராவணனை சம்மதிகேட்குதல்.

விருத்தம்.

வண்ணம்வாடி இளைத்திந்தவகைவல்அரக்கன்நின்றளவில்
அண்ணல்எனும்ராகவன்கண்டான்ஐயோகைஆயுதம் அறுறாய்
என்னைல்அருஞ்சேனையும்அற்றாய் இளைத்தாய் இனிஉன்நினைப்
பேது, இன்னம்ஆகநான் அறியத் தெரிப்பாய்எனச்சொல்லிப்
ப்பானே.

உடு-தரு-துசாவந்திராகம்-ஆதிதாளம்

பல்லவி.


ஏதடாராவணு - உன்சம்மதி - என் அடாஉன்சமமதி

அநுபல்லவி.

ஆதிமுதல்முதல் - சண்டைக்குவந்தாயேநீ
அலங்கோலமாஒண்டி ஆகிநிலமகிறிநின்றுயேதுரோகி(ஏ

சரணங்கள்.

[களைப்போலே
௧. பெருமகுடமும்வில்லும்படைகளும்போய்பேதைப்பேண்
இருபதுகைய்யும்வெறுங்கையாய்நின்றாய்எய்யும்என் அம்
[பினாலே



ஸ்ரீராமர் ராவணனிடத்தில் சம்மதிகேட்குதல்.

இருநூறுவெள்ளமும் பெருங்காற்றிலேபூளை
ஈட்டம்போல்மாளக்கண்டு போட்டாயேகைவாளை
சரணம்புகுதல்என்றால் இதுவேநல்லவழி
சண்டைக்குன்னால்ஆகாதினிஇன்றைக்குபோய்வாடாநாளை (ஏ
னேஅடா

உ. பருத்திப்பொதிக்கொருநெருப்புபொறிபோலபற்றுமுன்
நகரைக்குள் அறியாமல்சிறைக்குள்ளேவைத்த சனகியைவி
நெருக்கம்செய்யாதே தேவரைமுன்போலும்[ட்டுவிடடா
நிலைக்குள்ளேவைத்து மகுடமும்செங்கோலும்
துணைத்தனமும்உன்தன் தம்பிக்குதந்துமேலும்
சொல்லும்அவன்ஏவல்கேட்டால் கொல்லேனஉன்னைஒருக்கா
லும்(ஏதடா)

ங. மயக்கமாய்மறுமாதரைத்தொடர்ந்தவன்வாழ்வுநில்லாதடா
பயித்திய கொண்டலைகிறாய் தருமத்தைப்பாவம்வெல்லாதடா
செயிக்கமாட்டாய் கடிஅடாஇளம்புல்லு
யெருக்கென்றல்லவோ பிடித்தேன் இந்தவில்லு
பயப்படாதேநீ சும்மாநில்லுநில்லு
பத்துவாயும்பேர்ச்சுதோளுர் உத்தரவாகிலும்சொல்லு (ஏத)

ராவணன் மாலியவனோடு அமர்களங் கூறல்

விருத்தம்.

சம்மதிஎதென்ற ராகவனோடேஉத்
தரம்ஒன்றும்சொல்லாதே மகுடம்பத்தும்
செம்மியமார்பினில் அணிஎட்டானைக்கொம்பும்
சிவன்கொடுத்தவாளும்போட் டமரர்எல்லாம்
மெய்ம்மகிழமக்கள்அழப் பெண்கள்கூவ
வெறுங்கையாய்நிலம்பார்த்தவ் விலங்கைசேர்ந்தான்
அம்மதிசொல்லியபாட்டனுடனேசொல்லி
அழுகுவான்அமர்களத்தைமொழிகுவானே

உக. தரு சௌராஷ்டிரராகம்-அடதாளம்சாப்பு.

பல்லவி.

அந்தமானிடன்சண்டையில்நான்பட்ட நிந்தையைஎன்ன-சொ
[ல்வேன்

அநுபல்லவி

கந்தமூலம்தின்னும் அவன்கையில்அம்புக்கும்
காலனுக்கும்என்ன கூட்டா-சண்டைக்
கோலம்சொல்லவிளை யாட்டா-அடா
மாலியவானேஎன் பாட்டா—அந்த

சரணங்கள்.

வக்கணைப்பேச்சல்லகோதண்டம்எந்த
மலர்க்கையிலேபிடித் தானோ-மேற்கு
தெற்குவடக்குகிழக்கினில்நான்எந்த
திக்கினிலேஇருந் தேனோ-அதி
உக்கிரம்ஆம்அனலோஅவன்வாகனம்
ஊழிக்காற்றோஅநு மானோ-ஒனுறும்
திக்குத்திசைதெரியாமல்நின்றேன்கண்டு
கெக்கெலிகொட்டினர் வானோர்-அந்த
வெட்கத்துக்காள்இனி நானோ-அவன்
விக்கிரமம்என்னசொல் வேனோ—அந்த

௨. விடும்அவன்வாளிஎன்கைக்கணையையும்திக்கு
வேழத்தையும்கூடச் சாடும்-எழுந்
திடறிஅனேகம்அரக்கர்சிரங்களை
லங்கைத்தெருவெங்கும் போடும்-இன்னம்
உடலோடுயிர்தப்பி இருக்கின்றராட்சதர்
உண்டோஎன்றண்டத்தைத் தேடும்-பல
அடவிஎல்லாம்சுட்டு விண்ணும்மண்ணும்பறந்
திடமலையும்கிழித் தோடும்கடல்
வடவையுடனேபோ ராடும்-அவன்
விடும்அம்புக்கூட்டிற்பின் கூடும்—அந்த

௩. எறிதருபர்சங்கொண்டிந்திரனைச்சந்திரனை
எல்லாரையும்கட்டிச் சேர்த்தேன்-சிறி
முறைமுறையேசென்றுசண்டைகொடுத்தந்த
மூவர்சமர்த்தையும் பார்த்தேன்-ஆரும்
அரியவடகைலாசத்தைவேரோடும்
அங்கையாற்கட்டி பேர்த்தேன்-காலம்
குறுகினதோராமனவாளிக்கென்சேனை
பிறிதிஎன்றேதாரை வார்த்தேன்-சும்மா
விருதாபெரும்பழி ஏர்த்தேன்-என்றன்
கெறுவம்எல்லாம்அங்கே தோர்த்தேன்—அந்த

எ. தக்கவன்தம்பி இலக்குவனசண்டைக்கென்
சண்டைவெய்யில்மஞ்சள் பூச்சே-மெத்த
எக்களிப்பாய்அவன்பக்கம்நூரங்குர்க்கும்
என்னேடெதிர்க்கலும் ஆச்சே-எட்டு
திக்காணைக்கொம்புமென்மார்பிற்குரங்கொரு
கைக்குத்திலேசிந்திப் போச்சே-சொன்னுல்
ஒக்கவரும்பெரு மூச்சே எவ
ருக்கும்இதுமெத்த எச்சே—அந்த

மாலியவான்புத்திமை ராவணன்கேட்காமல்

மகோதரன்கலைத்தல்

விருத்தம்.

அடல்அரக்கன்இவ்வாறுமுதனுட்போரினிற் பட்டஅவஸ்தை எல்லாம், கிடமஉளமாலியவான்முன்சென்றன் அங்கவனும் அப்பாசிதைத்தன்னை, விட இதுவேசமயம்என்றுன்பாவிமகோதரன் அதனைவிலக்கிவெள்ளக், கடல்எனும்ராட்சதகுலத்தைத் தொலைக்கின்றுன் ராவணனைக்கலைக்கின்றனே.

உஎ-தரு-கலியாணிராக-ஆதிதாளம்

பல்லவி.

இந்தயோசனை என்ஐயா-மாலியவான்சொல்
எல்லாம்அவலம்தான்ஐயா

அநுபல்லவி.

விந்தைமின்மினிப்பூச்சி வெளிச்சத்துக்கிருள்போமோ
அந்தமானிடர்க்குமவானரர்க்கும் பயந்தோமோ—இந்

சரணங்கள்.

க. மெத்த பய்ந்தகுடியோ - ஐயையோஎலி
வேட்டைக்கும் தவில்அடியோ
பத்திக்கைலையை நீ பயித்தெடுத்ததும்பொய்யோ
கர்த்தர்மூவரும்இன்னம் கலங்கிருர்உனக்கையோ—இந்

௨, தளர்ச்சிசொல் வடிகாவிரம்-ஒன்றைப்பிடித்தால்
சாதிப்ப நல்லோபாரம்
இளக்காரம்கண்டால்உன்னை எங்கெங்கும்பழிக்காதோ
நினைக்குரங்கிலங்கையைநொடிக்குள்ளே அழிக்காதோ—

௩.. கெம்பீரம் தன்னில்மீசரா-மூன்றுலோகமும்
கெடிபெற்ற ராவணேஸ்வரா
கும்பல்மனிதர்என்றும் குரங்கென்றும்பேர்எடாமல்
தம்பிகும்பகர்ணனுநீ சதையென்றுசொல்லிடாமல்—இங்

கிங்கரர்கும்பகர்ணனைஎழுப்பவும் அவன் தூங்குதல்

விருத்தம்.

விளவதறியாதமகோதரன்உரையால்அரக்கன்மனம்வேருய் இங்கே, வளைதருவானரங்களையும்மனிதரையும்உயிர்குடிக்கவல்லேரன்ஆன, இளையவனைஎழுப்புமென்ருன் அப்போதுகும்பகர்ணன் இரண்டுமூக்கின், தொளைதிறந்துதன் அறிவுநீங்கினுன் பிணம்போலே தூங்கினனே.

௨அ தரு மோகனராகம் ஆதிதாளம்

பல்லவி.

தூங்கினுன் தூங்கினனே-கும்பகர்ணன்-தூங்கினுன் தூங்கினு
[னே

அநுபல்லவி.

தூங்கியராவணன்ஏவல் தாங்கியநாலுகிங்கரர்
வாங்கிஇருப்புலக்கைக்கொண் டோங்கி அடிக்கடிக்க—தூ

சரணங்கள்.

க. தேவரும்திசையில்உள்ளயாவரும் இவன்மூச்சிலே
திடுக்கென்றுமெய்களைக்கவும்கோட்டைவாசல்போல
வாய்விழிஓடியசுவாச வாயும்உகந்தகால
வாயுவைப் போல்வளைக்கவும் சூலத்தைக்கொண்டு
ராவணன்தூதுவர்காலன் ஏவியதூதரைப்போல
இருகாதிலும் துளைக்கவும் எழுப்பவேண்டி.
பாவிஅரக்கர்கையால் ஆவதெல்லாம்செய்துசெய்து
பார்த்தவர்கள் கையிளைக்கவும் எழுந்திராமல் தூ

௨. எட்டுமேலையும்பிடுங்க முட்டிக்காற்றிவன்மேலே
இளங்தென்றல் போலேபடிய இருபக்கமும்
கட்டிகட்டிஆகவடி இட்டிடுசுண்ணும்புபோலே
கண்களினிற் பீளைஇடிம் பெருங்காற்றென்ன
விட்டபெருமூச்சில் அகப்பட்டவர்பம்பரம்போலே
விசைகொண்டு ருண்டுமடிய மழுக்களாலே
கொட்டுவதெல்லாங்குரங்கு தட்டுவதுபோல்சுகமாக
கோட்டுவாய் ஒடிவடிய குறட்டைவிட்டுத்—தூ

௩. தாக்கியபூரிபேரிகை கூக்குரல்எல்லாம்செவியில்
சற்றும்ஏ றுமல்விடுக்க தளம்தளமா
மேற்கொளளும்யானைசேனைகள்மார்க்குளும்தோளிலும்ஏறி
மிதித்து மிதித்துமூடுக்க தணலிற்காய்ச்சி
போக்கியஉலக்கைகளால் மூக்குமயிர்வெங்கிலங்கா
புரிஎங்கும் நாற்றம்எடுக்கப் பலவிதமா
ஆக்கியவேதனைகள் சிலாக்கியமாகமென்மேலும்
அதிகநித் திரைகொடுக்க சுரணைகேட்டு—தூ

கும்பகர்ன்னன்ராவணனுக்குபுத்திகூறல்

விருத்தம்.

தூங்கியதோர்கும்பகர்ன்னன் வருத்தத்தாலே
துயில்எழுந்தான் அறுநூறு சகடச்சோறும்
ஓங்குபதினுயிரம் சாடியிலேகளும்
உண்டானபின் அண்ணன்முகம் கண்டான்தந்த
பூங்கவசம்முதல்எல்லாம் பெற்றுன்அவ்வூர்ப்
புறத்தினில்வானரர்ஆர வாரம்கெட்டான்
ஈங்கிதென்னபுதுமைஎன்றுன் அவனும்சொன்னுன்
இடிக்கின்றுன்புத்திசொல்லித் துடிக்கின்றுனே

உகூ-தரு புன்னுகவராளிராகம்அடதாளசாப்பு

பல்லவி.

வந்துதோதீமை இலங்கைக்கு வந்துதேதீமை

அநுபல்லவி.

வந்ததோசீதைபெண் நொந்ததோநகர்எங்கும்
வெந்ததோகலகம்மி குந்ததோஉன்னுலே(வங்)

சரணங்கள்.

க. புலத்தியன்குலம் கெட்டதோ நமக்கிந்த
தலத்தில்இருப்பு விட்டதோ
விலக்காதபழி மூண்டதோ மூவுலகமும்
செலுத்தும்செங்கோல் மாண்டதோ
கலைப்பவர்சொல்கொண்டு கலங்கிருய்நீகுட்டி
குலைத்துதாய்மேல்வைத்த கொள்கைபோலேகிட்டி(வங்)

உ. தாய்வரம்பிடித்தானே அம்பால்வாலி
சிவனைக்குடித்தானே
தேவருக்கும்தேவன் அவன்ராமன்முன்பாகப்
போய்வென்றுபிழைப்பதெவன
நீவெல்வேன்என்பது நினைந்தசனகிப்பெண்ணை
மேவுவேன்என்பதும் விர்தாயோசனை அண்ணேன்(வங்)

ரு. அம்புராகவன் தொடுக்க வருணன்வந்து
கும்பிட்டுவழி கொடுக்க
கெம்பிர அணை படுத்து வந்தமனிதன்
முன்புபோய்ப்படை எடுத்து
கும்பலாஒருமிக்கக் கூட்டிச்சண்டைகொடாமல்
தம்பிசொற்படிசீதை தனையும்விட்டுவிடாமல்(வங்)

ச, முழுதும்லட்சுமணன் அம்பாலே-இந்திரசித்து
விழுவான்பார்இனி மண்மேலே
எழுதும்எழுத்தின் படியே-ராமன்அம்பாலே
விழும்என்தன் மணிமுடியே
பிழைபொறுசீதையைப் பிறகாகிலும்விடு
ஒழிவாய்ஆனால்உந்தன் உயிரும்போம்படுபடு(வங்)

விபீஷணன்ஸ்ரீராமருக்குகும்பகர்னன்வரலாறுகூறல்

விருத்தம்.

கும்பகர்னன்இதுசொன்னான் அரக்கன்சீறிக்
குரங்கையும்மானிடனையும் கும்பிடுபோஎன்றான்
தம்பிஅதுபொறாமல் ஆயிரம்பேய்பூண்ட
தடந்தேர்மேல்எறிநெடுஞ்சூலம்கொண்டன்
வெம்பரக்கர்புடைசூழ இலங்கைவிட்டு
வெளிவந்தான் அதுகண்டான்வீராமன்
நம்பிஇதேதென்ன விபீஷணனும்அங்கே
நாடினன்வணங்கிஉரைஆடினனே

கூ0-தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாபபு

பல்லவி,

கும்பகர்ன்னன்இவன் அய்யா-நான் - தம்பிஎனக்குமூத்தவன்
[அய்யா

அநுபல்லவி.

எம்பெருமானேஉன் இணையடிக்காளாய்
நம்பும்விபீஷணன் நான்சொல்லக்கேளாய்—கும்ப

சரணங்கள்.

௧. ஞாலத்திலேவெகு நாளாகத்தவம்செய்து
சூலத்தைச்சிவன்கையிற் பற்றினான்வந்து
மேலிட்டுஇந்திரனைக் குத்தினான்-ஒரு
காலிட்டலைகடலை எத்தினான்-இவன்
ஆலத்தைப்போலேதேவர்களைப்போய்பிடிப்பான்
நாலுக்கும்சரட்டுக்கும் ஆகாமல்அடிப்பான்—கும்ப

௨. பகரமாஒருகையாற் பந்துபோல்எடுத்தந்த
மகமேருவையும்தோளில் தாங்குவான்-எங்கும்
புகைபுறப்படமூச்சை வாங்குவான்-பல
யுகம்ஒருநாள்ஆகத் தூங்குவான்-இவன்
சுகம்ஆகச்சிலதுநாள் தூங்கையாற்பூமி
சகலரும்உயிர்தப்பிப்பிழைத்தார் என்சாமி—கும்ப

௩. தெரிந்துராவணனுக்குச் சீதையைவிடச்சொல்லி
வருந்திவருந்திமெத்த முறைப்பட்டான்-அவன்
இரங்காமையால்இவன் குறைபட்டான்-காலம்
பிரிந்ததென்றேஎண்ணிப் புறப்பட்டான்-உன்
சரணம்புகுந்திடுவானே தமையன்தன்சொல்லால்
சிரம்துணிபடுவானே தேவாஉன்வில்லால்—கும்ப

கும்பகர்ன்னன்தன்னையழைத்தவிபீஷணனுக்குப் புத்தி கூறல்.

விருத்தம்.

சத்தியவிபீஷணன் இவ்வா றுரைக்கச்சாமி
சண்டையிடவரும்இவனை உன்முன்ஆகச்

சித்திரவதைசெய்திடில்உன்மனம்வருதாமோ
தெரிந்துவா அவன்மனதை என்னச்சென்றான்
அத்திசையில்அரக்கர்படைக் கடலுக்குள்ளே
அண்ணன் அடிமேற்பணிந்தபோது
புத்திஉள்ளகும்பகர்ணன் தம்பிதன்னை
புல்லினான்புத்திசில சொல்லினானே

௩௧. தரு-சாரங்கராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஏன்வந்தாய்தம்பி விபீஷணா-நல்லோர்
எவர்க்கும்அதிககுணபூஷணா

அநுபல்லவி.

ஆனந்தராமனை அடுத்தாய்வினைவிடுத்தாய்
அமிர்தம்உண்கிறவாயால் விஷம்உண்பார்களோபேயா—

சரணங்கள்.

௧. அங்கேநீபோனதும் அபயம்பெற்றதும்லங்கை
அரசுபெற்றதும்கண்டு வருந்தேனே
வங்கிசமும்புலஸ்தியன் பேரும்விளங்கும்உன்னால்
வந்துகெடுத்தாயென்று பொருந்தேனே
தங்கும்என்குலத்திலே ராமன்அம்புக்கொருவர்
தப்புவார்என்றெண்ணம் திருந்தேனே
இங்கேஇறந்தவர்கள் எல்லாரும்கரையேற
எள்ளும்தண்ணீரும்நீ இறைப்பாஎன்றிருந்தேனே—ஏ

௨. நாலுபதமுங்கொண்டாய்-சிரஞ்சிவியுங்கொண்டாய்
நாங்கள்நரகம்கொண்டோம் ஒருகாலே
மேலேகூற்றுவன்நின்றான் ராமனும்எதிர்நின்றான்
விதியும்நின்றதுகால முடிவாலே
சீலம்உள்ளவர்அவர் தங்கள்உயிர்விட்டாலும்
தெறிக்கவிடார்உன்னைப் புவிமேலே
காலன்ஊர்எமக்குண்டு இலங்கையூர்உனக்குண்டு
கனியைத்தின்பதைவிட்டு காயைத்தின்பதுபோலே—ஏ

அம்புபோற்சுறுக்காக அவரைச்சேர்வதேகாரியம்
அழைக்கிருய்ச்சம்மதி படுவேனே
தம்பியும்ராமனும்நிற்கக்குரங்கைகளெல்லாம்
சதையாமல்வதையாமல் விடுவேனே
வம்புக்கிடமாளன்னை வளர்த்தானைக்கைவிட்டங்கை
வந்தபகீர்த்தியைத் தொடுவேனே
நம்பும்தமையனோடே நானும்இறப்பதல்லால்
நானுபேரும்நகைக்க நரகைக்கும்படுவேனே—என்

கும்பகர்ன்னனுக்கு விபீஷணன் நீதிகூறல்.

விருத்தம்.

மொழிஇதனைக்கும்பகர்ன்னன் சொல்லவிபீஷணன் அண்ணேன் முறைதப்பான், வழிஇதுநீக்கிடவேணும்வந்துநீ சாமிபாதம்வணங்கவேணும், பழிபடும்ராவணனுடனே இறப்பதும்நீ கருமம் அல்லபார்ந்தென்பின்னே, எழுவதுவேகருமம்என்ன அசைக்கின்றன் உறுதிமொழிஇசைக்கின்றனே.

௯௨ தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்வார்த்தைதன்னைக்கேள்அண்ணேன் - கும்பகர்ன்னா நீ
ராமரைச்சேர்ந்துவாழ் அண்ணேன்

அநுபல்லவி

உன்வார்த்தைகேட்கஉன்னை உகந்தனுப்பினார்எனை
உண்மைபார்ஆனமட்டும் தர்மமேதலைகட்டும்—என்

சரணங்கள்

௧. மனத்துக்காகாதரா-வணனை ஒழிக்கவேணும்
வளருதேஅப வாதகம்
அனர்த்தமஆம்பரதாரத் துரோகிஉடனேசேர்ந்தால்
அதைவிடஉண்டோ பாதகம்
செனித்தநமதுவேத குலமும்பலமும்போகச்
சிந்திப்பதென்ன தோதகம்
கனத்தராமர்படைமுன் நமதுபடைவெல்லுமோ
கடலிலேபெருங்காயம் கரைத்தால்உண்டோசாதகம—எ

உ. அடைவானதாய்தலையைப்பிழையால்பரசுராமன்
அரிந்தானே பரிகாரம்
திடம்ஆம்பிதாவைக்கூடப் பிழைகண்டுசிவன்பண்டு
சிரம்கொய்த தல்லோவீரம்
நடவாநடைநடந்தால் அண்ணன்தம்பியைக்கூட
நறுக்கவேணும் அந்நேரம்
உடலிற்புரைகழலை அறுத்தெறிவாரைப்போலே
ஒழிக்கவேணும்அல்லாமல்உயிர்கொடுத்தென்னசாரம்—எ

ங. உனக்குள்ளகாலமெல்லாம் உறங்கிக்கிடந்தாஇந்த
உலகம்இனிமேற் கட்டாதே
தனித்தகோதண்டமுன்னே அண்ணனும்நீயும்எங்கே
தலைவிதிதப்ப ஒட்டாதே
வினைப்பிறவியும்தீரும் வந்தால்முத்தியும்சேரும்
வேளைஇதுபோலக் கிட்டாதே
எனக்குத்தங்தலங்கையை உனக்குத்தந்துநீசொன்ன
ஏவலும்கேட்கிறேன்நான் இனிஆகிலும்தட்டாதே—என்

விபீஷணன்மீண்டபின்இருபடைகளும்

போர்கலத்தல்

விருத்தம்.

மந்திரீஎனும்தம்பிஇந்தவாறுசொல்ல
மறுத்துவிட்டான்கும்பகர்ன்னன்சுவாமிஅன்னோன்
சிந்தைஇதுஎன்றுவிபீஷணனும்சொன்னான்
செயராமன்சண்டையே செய்யும்என்றான்
பந்தம்உள்ளசுக்கிரீவன் முதலாஉள்ள
பலபலவானரப்படைஞர் தொகையில்லாத
நிந்தைஇராக்கதப்படைஞர் கடற்போற்பொங்கி
நேரிட்டார்அதிகம்உள்ள போரிட்டாரே

சதிபதை-சங்கராபரணராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

க. கோலாகலமாக் கடல்போல்வளைந்தாரே
கும்பகர்ன்னன்படை வீரர்

மேலேபெருங்கடல்போலேவளைந்து
மிதித்தாரேவானர — சூரர்

உ. எங்கும்பரிக்குலம் எங்கும்கரிக்குலம்
எங்கும்அரக்கர்கொள் — ட்டாட்டம்
எங்கெங்குமமந்திகள் எங்கெங்கும்பல்லூகம்
எங்கெங்கும்வானரக் — கூட்டம்

௩. சங்குகள்கொம்புகள் தாளங்கள்மேளங்கள்
சாகரம்போலவே — இடிக்க
அங்கெகுரங்கு நெருங்கிச்செய்கொர்ச்சனை
அண்டகடாகமும் — வெடிக்க

௪. எதிர்ப்பிடிப்பார் அடிப்பார்ஓடிப்பார்
இராக்கதர்வானரர் — உடலை
குத்தும்குதிக்கும் மிதிக்கும்வதைக்கும்
குரங்குகள்ரட்சதக் — கடலை

௫. அள்ளும்குருதியில் துள்ளும்மகரம்போல்
ஆடுமோராகூதப் — பிணங்கள்
விள்ளும்கவசங்கள் விள்ளும்துவசங்கள்
விள்ளும்தலைமண்டை — நிலங்கள்

௬. மெத்தமலையும்சிலையும்கவிக்குல
வீரர்எதிர்எதிர் — விடுத்தார்
அத்திரசத்திர தோமரத்தால்எதிர்
தரக்கர்அவைஎல்லாம் — தடுத்தார்

௭. வேலாயுதத்தாலும் சூலாயுதத்தாலும்
மெத்தஇராக்கதர் — தாக்கினா
காலாலும்கையாலும வானரவீரர்கள்
காணுதவைபொடி — ஆக்கினர்

௮. தோளும்சிரங்களும் தாளும்கரங்களும்
துண்டாஅரக்கர்கள் — தடிந்தார்
மாளும்தலைவிதி நாள்வந்தநேக
வானரவீரர்கள் — மடிந்தார்

---

* இதைஇரட்டித்துப் பாடும்போது அதின்-என்று இவ்விடத்தில் முதலிலேபடிக்கொள்க.

௯. தேய்ந்ததெவிர்ந்த இவ்வாறுகும்பகர்ன்னன்
சேனைஎன்னும்பெரு வெள்ளம்
சய்த்ததுதிரம் படிந்துசெவந்து
தணிந்ததல்லோகடற் பள்ளம்

௰. வேளைஅதில்ஒரு நாலுவெள்ளம்படை
வீரன்வசந்தன்ஓர் மன்னன்
தோளில்ஒருமலை போடப்பொடியாகத்
தொலைத்தானேகும்ப கர்ன்னன்

௰௧ குத்திஉடனே அவனைப்பிடித்தந்தக்
கும்பகர்ன்னன்எனும் காலன்
நெற்றித்திலதமா இட்டான்அதைக்கண்டு
நெரிட்டரனேவந்து நீலன்

௰௨. நீலன்எறிந்த மலையைக்கும்பகர்ன்னன்
நீறுநீறுச்செய்து நகைத்தான்
மேல்அவன்பாய்ந்து கடித்தான்இவன்குத்த
வேசாறிநீலனும் திகைத்தான்

௰௩. அங்கதனைக்கண்ட அங்கதன்ஓர்மலை
அங்கையாற்மோட்டுரம் பேசினான்
செங்கற்பொடி போல்நுறுக்கிகும்பகர்ன்னன்
தெண்டொன்றவன்மேலே வீசினான்

௰௪. விட்டகதைதன்னை அங்கதன்கையால்
வெடுக்கென்றொடித்துமுன் போட்டான்
குட்டிக்குரங்கேநீ ஆரவன்சொல்என்று
கும்பகர்ன்னன்பின் கேட்டான்

௰௫ கேட்டாய்உன்அண்ணனை வாலாலேகட்டிக்
கிளம்பினவன்மகன் தானடா
மாட்டிஅவனைப்போல் உன்னையும்வாளால்
வளைக்கிறஅங்கதன் நானடா

௰௬. என்றுசொல்அங்கதன் தன்னைக்கும்பகர்ன்னன்
எற்றஅவன்அங்கே சாய்ந்தான்

கன்றுகொண்டோடி வரும்பசுப்போல
கணத்தில்அனுமந்தன் பாய்ந்தான்

௰எ. பாய்ந்தவன்மேலேஒருமலைதன்னைப்
பறித்தேஅனுமந்தன் எறிந்தான்
சாய்ந்திடக்கண்டான் இவன்தன்னைராம
சரம்கொல்லும்என்றப்பால் பறிந்தான்

௰அ. பறியக்கண்டேகும்ப கர்ன்னன்அந்தப்படை
படுபாதிஆம்படி தேய்த்தான்
அறியும்இளையான அனுமான்மேல்எறிகின்
றஸ்திரம்மழைபோலே சாய்த்தான்

௰௯. தேரைப்பரியைக் கரியைத்தொலைத்தவன்
செங்கைச்சிலையையும் ஒடித்தான்
பேரைக்கண்டோர்சூலம் கும்பகர்ன்னன்தம்பிமேற்
போடஎன்றேஎண்ணம் பிடித்தான்

௨௰. பிடிக்கும்முன்னேவெறுங் கையன்என்றேதம்பி
போங்கொருதிக்கிலில் மேவினன்
துடித்தெதிரேவந்த சுக்கிரீவன்மேல்ஒரு
சூலம்கும்பகர்ன்னன் ஏவினன்

௨௧. ஏவியசூலத்தைப் பாய்ந்தனுமான்கை
இரண்டாலும்நாளா நொறுக்கினன்
தாவியசுக்கிரீவனைக்கும்பகர்ன்னன்
தடங்கையாற்கட்டி இறுக்கினன்

௨௨. சாமிஅதைஅறிந் தம்புகள்போட
தயங்கிக்கும்பகர்ன்னன் ஓய்ந்தானே
ஆம்அவன்காதையும் மூக்கையும்பிச்சுக்கொண்
டப்புறம்சுக்கிரீவன் பாய்ந்தான்

௨௩. பய்ந்தபின்தங்கச்சிமூக்குபோற்றன்மூக்கும்
பழுதாகவேவெட்கம் பூண்டான்
காய்ந்தசினத்தோடும் ராகவன்மேற்கும்ப
கர்ன்னனும்சண்டைக்கு மீண்டான்

ஸ்ரீராமருக்கும் கும்பகர்ன்னனுக்கும்உயுத்தம்

விருத்தம்.

மீண்டவன்நான்மூக்கிழந்தேன் தங்கைமூக்கும்
வீணிலேஉங்களால் இழந்தாள்இங்கே
ஈண்டஇருவோரும்மூக கிழந்தபோதே
இனிஇலங்கைவேந்தனும்மூக் கிழந்தான்கண்டாய்
ஆண்டகைமைபோகுமுன்உங் களைவாளாலே
அறுத்தறுத்துத்தெறிப்பேன் என்றொருவாள்ஏந்தி
பூண்டஜெயராகவன்முன் கும்பகர்ன்னன்
போர்செய்தான்இப்படிப்போர்ஆர்செய்தானே

௩௩- தரு-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ஸ்ரீராகவனும்-கும்பகர்ன்னனும்-செய்தாரேசண்டை

அநுபல்லவி

வீரன்பதிமூன்று கணைதொடுத்தான்
வெற்றிபரிசையால் அவன்தடுத்தான்
நாரசிங்கமும்இரணிய னும்போலே
நாவரும்தேவரும் காணமென்மேலே—ஸ்ரீராகவ

சரணங்கள்

௧. விக்கிரமன்ஆம்கும்பகர்ன்னன்இராகவன்
மேலேஒருபத்தம்பால் தாக்கினன்
கைக்கணையால்சாமி அவன்கையின்வில்லையும்
கவசத்தையும்துணடம் ஆக்கினன்
அக்கணத்தேதடி கொண்டவன் மீள
அடித்தானேவெகு குரங்குகள் மாள
தைக்கும்அம்பால்அந்தததடியையும் போகத்
தறித்தானேஐயன் இப்படி ஆக—ஸ்ரீராகவ
௨. மடித்தவாயோடும் கும்பகர்ன்னன்வேறே
வாளும்பரிசையும் எடுத்தான்
தொடுத்துராகவன் அவன்வலக்கையைத்
துணித்துமண்ணில்விழ விடுத்தான்

*இதைஇரட்டித்துப்பாடும்போது-கணை-என்று-இவிடத்தில்முதலிலேசேர்த்துப் பாடிக்கொள்க,

பிடித்தவாளோடும்கைவிழ மேய்யைப்
பேர்த்திடாமல்நின்றேஅந்தக் கையை
எடுத்துக்கொண்டடித்தே சண்டைதந்த
இடக்கையயும்கொய்தான் இப்படிஅந்த—ஸ்ரீராகவ
௩. வழுவாமலேஒரு கண்யாற்கும்பகர்ன்னன்
வலக்காலேவிழ எய்தான்
*அழியஇடக்காலால் குந்திகுந்திவர
அந்தக்காலும்துணி செய்தான்
எழும்வகையில்லாமல் அண்ணனை நாடி
ஏங்கினன்அழ தான்மனம் வாடி
முழுதும்தொளைபட் டரக்கன்சரீரம்
முண்டமாககிடந் துருளஅந்நேரம்—ஸ்ரீராகவ

கும்பகர்ன்னன்ஸ்ரீராமரை துதித்துவரம்கொள்ளுதல்.

விருத்தம்.

முன்புமாரீசனெடு கரனும்பட்டான்
மொய்குழல்சீதையும்சிறையில் பட்டாள்அண்ணேன்
உன்குலமும்நீயும்போய்ப் படுவாஎன்றே
உரைத்தவிபீஷணன்அவனல் ஒதுக்கப்பட்டான்
என்பலம்போய்நான்பட்டேன் உன்அம்பாலே
ராவணனும்இனிப்படுவான் என்றுசொல்லி
அன்பினெடுகும்பகர்ன்னன் ராமன்பாதம்
அகம்கொள்வான்பின்ஒரு வாசகம்விள்வானே

ரு திபதை-மத்தியமாவதிராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

க. சாமிநமஸ்காரம் சாமிநமஸ்காரம் சத்தியராகவனே
பூமியில்உத்தமவானேநமஸ்காரம் புண்ணியராகவனே
உ. நீயேசாமிஉன்-கைக்கும்வில்லுக்கும் இந்நேரம்ராகவனே ஓர்
ஆயிரம்ராவணர்-வந்தெதிர்த்தாலும்பற் றுதுராகவனேஇந்த
௩. தோளும்துணிந்தேனே-தாளும்துணிந்தேனே-சாமிராகவ
[னே-இந்த
வேளையில்நான்உன்னைக்-கேட்கும்வரந்தரவேணும்ராகவனே
௪. வந்தபுறுவுக்கு-உடலைக்கொடுத்தவன வங்கிசராகவனே
இந்தவிபீஷண-னைக்கைவிடாமலே ரக்ஷிநீராகவனே

*இதைஇரட்டித்துப்பாடுபோது-அது-என்று- இவிடத்தில்மு
தலிலேசேர்த்துப் பாடிக்கொள்ளவும்.

௬. அந்தராவணன்உடன்-பிறவிஎன்றகுறியானே ராகவனே-இ
வனே
எந்தவேளையில்வந்-தென்செய்வானோ எச்சரிக்கைராகவனே
௬. விளையாட்டல்லஇவன்-உன்அருகேநிற்க-வேணும்ராகவனே
இளையவனை அநுமானைப்பிரியாமல்இருந்துராகவனே [தப்பில்
எ. என்னைக்கொன்றபோதென்-அண்ணனையும்கொல்வாய்-இ
[னிராகவனே
தன்னைகண்டபேர்கள்-நகையாதபடிசெய்வாய்-சரணம்-ராகவனே
தங்கைமூக்குப்போலே-என்மூக்குப்போச்சுதே சாமிராகவ[ன
[னே-தேவர்
பங்கம்சொல்லாமுன்னே-என்தலைமறைப்பதுன்பாரம்ராகவ
[னே

ஸ்ரீராமபாணம்கும்பகர்ன்னன்தலையைக்கடலில் விழுத்தல்.

விருத்தம்.

அன்பினுடன்இந்தவகையும் தொகையும்விண்டளவில்
அம்புயமனனும்கண்உடையான்
செம்பதுமம்என்றமுக மண்டலம்மலர்ந்தொரு
செழுஞ்சிலையில்அம்புதொடவே
அம்பதுபறந்தவன் நெடுந்தலைவிழும்படி
அரிந்தெறிய அந்த்விசையால்
கும்பகருனன்சிரசு பொங்கியதடங்கடல்
குழிந்திடவிழுந்ததவமே

சீதாதேவியின்பக்கல்வந்துராவணன்கெஞ்சுதல்

இதுவும்அது

இன்னவகைகும்பகர்ன்னன்இறந்தான்இப்பால்
இராவணனும்மருத்தனைஓர் சனகன்ஆக்கிப்
பொன்அனையாள்முன்புமகோதரனைக்கொண்டு
போவெனவேஏவிவிட்டுத் தானும்முன்னே
மின்அனையார்நடமாடக் கீதம்பாட
வில்மதனன்கணைசாடமெலிந்துவாடி
அன்னையெனும்சிதைமுன்னேவந்தான்கிட்ட
அஞ்சுவான்ஏதேதோகெஞ்சுவானே

௯. திபதை கணடாராகம்-அடதாளம்சாப்பு

கண்ணிகள். மோ
க இன்னம்தான்என்னவர்மமோ-என்னை-இடியச்செய்வதுதர்ம
இன்னம்மன்மதவாதையே-பட-என்னால்ஆகுமோசீதையே

உ.குறித்துமூவரையும்வீசினேன்-காமக்-கோட்டியால்மனம்கூ
[சினேன
இறக்கவேமனம்பொங்கினேன்-உன்னை-எண்ணிஅல்லோ இ
[ங்கேதங்கினேன்
௩.மெத்தமெத்த துவண்டேனேஉன்னை-விஷமதாத்தேடிக்கொ
[ண்டேனே
பத்தென்பார்காமஅவஸ்தையேநான்-படுவதாயிரம்அவஸ்தை
யே ௪.தென்றல்வந்தென்னைப்பாயுதே-இந்த-திங்களும்தண
[லாய்க்காயுதே
என்றன்மேற்கிருபைஆகியே-மனம்இரங்குவாய்வைதேகியே

சீதாதேவி ராவணனைஇடித்தல்.

விருத்தம்

விரும்பிய அரக்கன் இந்தவிதம்சொல்லிப்பதங்கள்முன்னே
பருந்தலைபத்தும்மண்மேற்படியவேவந்துவீழ்ந்தான்
திரும்பினள்முகம்பாராமல்சீதையும்அவனைத்தான்ஓர்
துருமமென்றோர்துரும்பைப்பார்த்துத்தூறுவாள்கூறுவாளே

௩௪-தரு சஹானாராகம்ரூபகசாப்புதாளம்

பல்லவி.

கெட்டுப்போகவேணுமோகேளடா-அடாராவணத்துரும்பேநீ
கெட்டுப்போகவேணுமோகேளடா

அநுபல்லவி.

துஷ்டத்தனம்எல்லாம்விட்டுவிடடாஎன்
சுவாமி கோதண்டவில்லின்-அம்பால்
போமேஉன்குலம் கெல்லி
துடுக்குச் சொல்லி—கெட்டு

சரணங்கள்.

க. தூண்டாவிளக்கதைத்-தீண்டவரும்பூச்சி
மாண்டாற்போல்மாளுவாய் நீயே-துள்ள
வேண்டாம்அடா கெடுவாயே
எண்டா பேயே—கெட்டு

௨. ஆக்கிரமசிங்கததைப் பார்க்கிறபெண்சிங்கம்
சாக்கடைக்குள் நரிகுட்டி-தன்னைப்
பார்க்குமோகண்ணாலே எட்டி
ஏன்டா மட்டி—கெட்டு

௩. பாருக்குள்ளேரகு-வீரர்க்கல்லால்மற்ற
பேருக்குநான்பச்ச நாவி-நீ
ஆருக்குப்போக்கிறாய் ஆவி
அய்யோ பாவி—கெட்டு

௪. பத்துளவாயாலும்-கத்துகிறாயேஉன்
சுற்றமும்வாழ்வும் நில்லாது-என்
பத்திவிவாக்கு பொல்லாது
ஏண்டா வாது—கெட்டு

௫. வாய்த்தகொழுந்தனால் மூத்தமகன்பட்ட
வார்த்தைநீகேட்டமும் ஓசை-காதில்
ஏர்த்திடவேணும்என் ஆசை
ஏண்டா பிசாசே—கெட்டு

மாயாசனகனைச் சீதைகண்டுதகப்பன்என்றுபுலம்பல்.

விருத்தம்.

நெறியாள்இந்தப்படிஉரைக்க நீசன்அரக்கன்ஏவலினால் [ன்
பொறியார்மருத்தன்தன்னைச்சனகன்போலேசெய்துமகோதர
மறியா இழுத்துவரஅவனும்மகளேமகளேஎன்றிரைந்தான்[தா
அறியாள்சீதைதகப்பனென்றே அழுவாள்அழுதுவிழுவாளே

௲ தரு-முகாரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

அய்யாசனகா-அய்லாளனைப்பெற்-றனுபவித்ததிதுவோ

அநுபல்லவி.

கையும்கயறுமாக்கண்முன்னேஎன்முன்னே
கட்டுப்பட்டாய்என்னைத்தொட்டுப்பட்டாய்அல்லோ (அய்)

சரணங்கள்.

௧. பஞ்சாசதகோடிபூமண்டலத்திலே
பலவேள்வியும்செய்து நிறைப்பட்டாய்

அஞ்சாளவரையும் கட்டுகிறநீயிந்த
அரக்கார்க்கட்டுண்டு குறைத்பட்டாய்
செஞ்சொல்அயோத்தியிற் காணுமல்நீயென்னைச்
சிற்யிலேகாணவோ புறப்பட்டாய்
என்சிறைநீங்காமல்தவிக்கிறேனே அப்பா
இதுவும்போதாதென்றோநீயும்சிறைப்பட்டாய்(அய்யா

உ. சுற்றத்தாரேதாய்மாரேதங்கைமாரே
சோல்வார்ஆர்இந்தப் பெருஞ்சோகி
அத்தத்திலேபாய்ங் துங்களுக்கறிவிக்க
அனுமானும்இல்லயேபுண் ணியசாலி
வெற்றிஅயோத்திராஜர்கீர்த்திகளை
வெட்டிஅழிக்கநாலே கோடாலி
பெற்றவீட்டையும்வந்து புகுந்தவீட்டையும்நல்ல
பேர்அழிக்கஎன்றுபிறந்தேனே பெண்நீலி(அய்யா)

௩. கர்த்தன்ஆகிக்கொண்டகணவனைக்கொல்என்று
கடும்பழிதேடிக்கோண் டேன்முன்னம்
பற்றும்பற்றுத்துக்கும் தந்தைக்கும்வினைசெய்தேன்
பண்ணினேனேகள வுகள்கன்னம்
உற்றார்நகைசெய்யப் பத்துமாதம்இங்கே
ஒருத்திநான்இருந்ததே பெருங்குன்னம்
இத்தனைபாடும்எனறுலேவாக்கண்டும்
இங்கேசீவன்கொண்டிருக்கிறே னேஇன்னம்(அய்)

கும்பகர்ணன்மரணத்தைக்கேட்டுராவணன்புலம்பல்.

விருத்தம்.

உத்தமிசானகிஇந்தவாறழுதாள்சனகனென உருவம்கொண்ட, பித்தனும்ஆகாவார்த்தைசொன்னான் அன்னையும்வச்சும்பேச்சும்சொன்னாள், மத்தனிராவணன்கொதித்தான் அப்போதுகும்பகர்ன்னன்மரணம்கேட்டான், சொத்தமரம்போல்விழுந்தான் முடங்கினன் அரக்கன்அழத்தொடங்கினனே

௩௬-தரு-ஆநந்தபைரவிராகம்-ஆதிதாள

பல்லவி.

அப்பாகும்பகர்ணஉனைப்பிரிந்தெப்படிநான்பிழைப்பேன்

அநுபல்லவி.

எப்புறப்பிலே உன்முகம்பார்ப்பேன்
எந்தவிதத்தில் என்உயிர்கார்ப்பேன்
செப்பும்முன்னமேபோய்ப் பட்டாயே-என்னைத்
தெருவில்பரதேசியா விட்டாயேஎன் (அப்பா)

சரணங்கள்.

௧. இனிமேல்என்சிறைதள்ளிவானவரோ
டிந்திரனும்நிலையிலே போவானே
தனியேஎன்குடிக்கொருமூக்கறுப்பத்
தங்கையும்மூக்கறுந்தாள் தான்தானே
அநியாயத்தினிற்கரன்மாரீசன்என்
றவரையும்போக்கடித் தேன்நானே
சனிஆகும்இந்தமோகத்தினால்அல்லோ
சருகுதிர்ந்தமரம் ஆனேனேஎன்—அப்பா

௨. வாயும்முனையும்நான்படைக்கவே
வளர்ந்தாயேகுலக் கொழுந்தாயே
ஓயும்என்குறைகண்டுசுறுக்கிலே
உறக்கம்விட்டுமலைபோல் எழுந்தாயே
மாயன்முதலோர்ஆயுதத்தினால்
மயிர்முனையும்உடம்பில் அழுந்தாயே
ஈயும்எறும்பும்போல்இருக்கிற
இந்தமனிதன்அம்பால் விழுந்தாயே-என்—அப்பா

௩. மயில்போற்பெண்கள்கால்பிடிக்கமெத்தையில்
வளர்ந்தஉன்நித்திரைகண்டு பயந்தேனே
கயிலேபேய்கள்கால்பிடிக்கக்களத்தில்
கவிழ்ந்தாஎன்றுசொல்ல நொந்தேனே
நயமோசொல்லும்எமனுக்கும்உனைக்கிட்ட
நானேஇளக்காரம் தந்தேனே
உயிர்போல்உன்னைக்கொடுத்துந்துணிவேனோ
உன்பிறகேஇதோ வந்தேனே-என்—அப்பா

அதிகாயன்வரலாறு விபீஷணன்கூறஸ்ரீராமர் தம்பியைப்புகழ்தல்.

விருத்தம்.

அரக்கன்இராவணன்இவ்வாறழுதான்பின்னே
அதிகாயன்படைஎழுந்தான்ராமன்கண்டான்

விரித்துவிபிஷணன்சொல்வான்சாமிமுன்னுள்
விழுந்தமதுகாயிடர்வர் ஆம்இரண்டுபேர்க்குள்
ஒருத்தன்மதுகும்பகர்ன்னன்உன்னாற்போனான்
ஒழிந்தகயிடவன் இவன்போம்வகைஏதென்றான்
திருத்தியராகவன்இதுக்குத்தம்பிபோதும்
சேர்என்றான்சண்டைஇனிப்பார்என்றானே

இருபடைகளும்கைக்கலக்க ஆனபடையை அனுமார் அடித்தல்.

விருத்தம்.

பார்எனவானரர்சேனை அரக்கர்சேனை
பலசண்டைஇடஇளையோன்விடும்அம்பாலே
கார்எனவேகண்டகண்டதுண்டம்ஆகிக்
கால்மாடுதலைமாடாய்அரக்கர்வீழ்ந்தார்
கோரன்அதிகாயன்விடும்யானைக்கூட்டம்
குமுறிவெருவெருவாகவரக்கண்டோங்கி
மாருதியோர்மரம்பிடுங்கிநடுவேபாய்ந்து
மாட்டினான்பிணமலையைக்காட்டினானே

௩எ-தரு-தோடிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அதிகாயன்படைமதவேழங்களை-அடித்தானேஅனுமான்

அநுபல்லவி.

விதியாகப்பலபேர்களும் நடுங்கி
விடவிடென்றதிரவேரோடும் பிடுங்கி
சதிராகப்பிடித்தொரு மாமரத்தாலே
சடைகொண்டஇலுப்பையைத்தடிகொண்டடித்தாப்போலே
அதிகாயன்.

சரணங்கள்.

௧. கடியாற் சிலயானை உதையாற்சிலயானை
கதையாற் சிலயானை மாய்ந்தவே
அடியாற் சிலயானை விதியாற்சிலயானை
அதிராற் சிலயானை சாய்ந்தவே
இடியாற் சிலயானை அறையாற்சிலயானை
எறியாற் சிலயானை ஓய்ந்தவே
பிடியாற் சிலயானை விசையாற்சிலயானை
பிசைவாற் சிலயானை தேய்ந்தவெ

அடியற்றமரம்போலே படும்சிலயானைகள்
அலறிக்கைகால்ஒடிந்து விழும்சிலயானைகள்
நெடுகக்கலங்கிஉயிர் விடும்சிலயானைகள்
நெளிவுற்றலைந்துநிலை கெடும்சிலயானைகள்
நெறிபட்ட யானைசில-முறிபட்ட யானைசில
நெக்கிட்டுவிக்கிட்டுச்சூழ-திக்குக்குதிக்குப்போய்வீழ(அதி)

உ. எடுத்தான் சிலசில குறைத்தான்சிலசில
இறைத்தான் சிலசில யானையை
கொடுத்தான் சிலசில குழைத்தான்சிலசில
கிழித்தான் சிலசில யானையை
தடுத்தான் சிலசில தெறித்தான்சிலசில
தறித்தான் சிலசில யானையை
கடித்தான் சிலசில அழித்தான்சிலசில
கழித்தான் சிலசில யானையை
படிப்படியாகக்கடல் ஓரம்எங்கும்யானைகள்
பருத்தமலைகள்அடி வாரம்எங்கும்யானைகள்
துடிப்புடனேவிசிறும் தூரம்எங்கும்யானைகள்
சுழற்றியவால்படுவிஸ் தாரம்எங்கும்யானைகள்
சுற்றிஎங்கும் யானைவிழ - ரத்தவெள்ளம் ஆகிஎழத்
தோகைமர மேகைத்தடி-ஆகவேகொண் டிந்தப்படி(அ)

௩. கைக்கே பலகெசம் வாலாற்பலகெசம்
காலாற் பலகெசம் சாடவும்
மிக்காம் பசிவிண்டு பூதாதிகள்உடன்
வேதாளங்கள் நடம் ஆடவும்
திக்கே முனிவர்கள் கைக்கேஅலர்கொண்டு
செயசோபனம் - இசை படவும்
அக்காலை இனில்மிகப் போர்க்களம்எங்கும்
ஆனையின்வெடிநாற்றம் மூடவும்
சுக்கிற்றுற்போற்லைகள் கீழேவிழநாட்டியும்
தும்பிக்கையைப்பிடித்துப்பம்பரம்போல்ஆட்டியும்
திக்குக்கெசங்களுக்கு வெட்கம்வரஓட்டியும்
சேரச்சேரப்பிடித்து வாரிவாரிமாட்டியும்
சிதறச்சிதறத் தாக்கி - பதறப்பதறத் தாக்கிச்
சேனைத்தளங்கள் [illegible] - ஆ[illegible]ப்பிணங்கள் ஆக(அதி)

அதிகாயனுக்கும் லட்சுமணனுக்கும் யுத்தம்.

விருத்தம்.

குதித்தேஇந்தப்படி அரக்கர்குழாமுங்கொடியானைகளும், கதிப்பாவிழக்கண்டதிகாயன்கனகமணித்தேர்மேற்கொண்டான், துதித்தேவரும் அங்கதகுமாரன்தோளில் இளையோன்மேற்கொண்டான், எதிர்த்தார் இரண்டுபெரும்வில்லைஎடுத்தார்சண்டைதொடுத்தாரே.

௩௮-தரு-பைரவிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

லட்சுமணனுக்கும் அதிகாயனுக்கும்-நேர்ந்ததே சண்டை

அநுபல்லவி.

அட்சயந்தம்பி அங்கதன்தோளில் விறினன்
ஆயிரமபரித்தேர்மேல்அதிகாயன் ஏறினன்
கட்சி ஆக இருபடைகளும் மென்மேலே
கலந்துசண்டைசெய்யக் கடலும்மலையும்போலே—லட்

சரணங்கள்.

௧. முந்தி அரக்கன்ஒரு கணைதொட்டான்-தம்பி
முறிந்தங்கக்கணைதன்னைக் கூறிட்டான்-அவன்
பந்தியாப்பதினாறு கணைஎய்தான்-தம்பி
பதினாறுகணையையும் பொடிசெய்தான்-பின்னும்
வந்தவன்கவசத்தை நூறமபாற்கீறினன்
வரும்அரக்கர்படையைச் சருகெனத்தூறினன்
பிந்தித்தேர்க்குதிரைஆயிரத்தையும்அவன்செங்கை
பிடித்தவில்லையும்ஒடித் தானே இப்படி அங்கே—லட்

௨. அனலாஸ்திரம்அரக்கன் ஏற்றினன்-தம்பி
அதுக்கதையைவிட்டு மாற்றினன்-தம்பி
கனகம்ஆம்பிரம்மாஸ்திரத்தை ஏவினன-அதி
காயன்எமபுரத்தை மேவினன்-பின்
நினையும்அங்கதனல்சராத்தகன் இடியவும்
நீலனுலேரணாஸ்தகன் முடியவும்
இனம் ஆம் நக்கிரி வந்துக்கும்பன்போய்ப் படியவும்
இடபனுமேலஅந்தவயமந்தன் [illegible]யவும்— [illegible]

ஈ. வல்அரக்கர்முனை — பிரிந்தோடி-லட்ச
மனைன்அம்பால்மடிந்தாரே — போராடி-அங்கே
கொல்லும்திரிசிரன்தேவாந் — தகன்கூற-அனுமான்
குத்தப்போய்விழுந்தாரே — உயிர்ஓடி-பின்பு
சில்லறைச்சில்லறை — ஆகிமெள்ளமெள்ள
தெறித்தார்அரக்கர்படை — இடறித்தள்ளத்தள்ள
எல்லாமுனிவர்களும் — எழுந்துதுள்ளத்துள்ள
ராட்சதர்அடங்கி — ராமர்செயங்கொள்ள—லட்

அதிகாயனுக்குப் புலம்பின ராவணன்முன்னே
தானியமாலைபுலம்புதல்.

விருத்தம்.

முனைபோய் இந்தப்படிதோற்றேமூர்க்கன் அதிகாயன்பட்டான்
அனலாவந்துதூதர்சொல்ல அதைராவணனும் அறிந்தழுதான்
தனைநேர்பெறும்தானியமாலைதானுமகேட்டுந்தலைவிரித்தே
பனைபோல்அரசர்கன்முன்விழுந்துபடுத்தாள் புலம்பதொடுத்தா
[ளே

எ. திபதை-காம்போதிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க.என்னசெய்வேன் இலங்கேசா-நான்-என்னசெய்வேன்வெறி
[பிடித்தாயே
மன்மதன்போல்அதிகாயன்தன்னைமானிடனாலேபோக்கடித்
தாயே [யே
உ.மாமகள்ஆம்சிதைதன்னைவிட மாட்டேன்மாட்டேனென்று
காமம்உன்னைகொல்லுகையால்அதிகாயனைநீஅல்லோகொன்
[றுயே
ங. கரன்முதலாக்கும்பகர்ன்னன் அதிகாயன்இவருடன்ஙிவார
[ணமோ
இருமனிதர்சையாலேஇன்னம்எவர்கள்தலைஉருளக்காரணமோ
சின்னமனிதர்கள்என்றுவெகுசேனைகளைஎல்லாம்தொலைத்தாயே
தன்னைஅமிழ்த்தினதும்மெத்தசமுத்திரம்என்றெண்ணிவாழ்[ய
[வைக்கலைத்தாயே
ரு.மலைபோலேஒத்ததம்பிசொல்லும்இந்தமாலியவான்சொல
[ஞ்தடுத்தாயே
தலைமேலேஇடித்தபின்னும் அய்யோசற்றுங்குனியாமலேகெ
[டுத்தாயே

௬. கொலைகாரிசூர்ப்பனகிசொன்னகோளால்இந்தப்பலனகண்டாயே [யே
நிலைவரமாத்தலைசொரியகொள்ளிநீதானேத்தேடிக்கொண்டா
பக்கத்திலேஓடிமரம்போலஎன்பாலன்அதிகாயனைகெடுத்தாயே
திக்குசெயம்செய்ததுபோய்உன்னைத்தேவர்நகைக்கஉடம்பெடு [த்தாயே
அ.பருங்கிரிபோலேசாய்ந்துமகனேபடுகளத்திலேமாண்டுகிட [ந்தாயோ
அருங்களிறேஅதிகாயாஎன்னைஅகலவிட்டெப்படிநடந்தாயோ

இந்திரசித்துசண்டைக்குவந்து அனுமாரைஇகழ அவர்அவனைஇகழதல்

விருத்தம்.

வாரேறுபூண்முலைதானிமாலைஇந்த
வகைஅழாவணன்சொல்லால்இந்திரசித்துக்கேட்டான்
தேர்வரிநாகபாசமும்பிரம்மாஸ்திரமும்
சேமத்தேர்ஆயிரமும்சேனையும்கொண்டெழுந்தான்
போர்வழியொருவெள்ளம்குரங்குகளைக்கொன்றுன்
போர்எதிரேமாருதியைக்கல்எடுக்கஅறிவாய்
நேரேவில்எடுக்கறியாய்போடாஎன்று
நீக்கினன்அனுமன்வந்து தாக்கினனே

௬௯ தரு தோடிராகம் ஆதிதாளம்

பல்லவி.

இந்திரசித்தே-சேவகம்-ஏதடாசற்றே

அநுபல்லவி.

உன்துணைஅதிகாயனைக்கொன்ற விலட்சணன்
உன்னையும்கொல்லவந்திருக்கின்றான்லட்சுமணன்—இந்திர

சரணங்கள்.

௧. என்னோடேஎதிர்க்கலாகுமோ
இளையவன்அம்பென்னஉன்னை நாணுமோ
உன்னிராமனுடனேஎதிர்க்கஎன்றால்
உனக்கவ்வளவுபலன் காணுமோ

என் அடா உன் தன் அத்தை முக்கறுந்தும்
இன்னம் இடக்குச் சொல்ல வேணுமோ
குன்னமாய்ச் சந்திரனைப் பார்த்து நாய்
குலைத்தால் என்ன அதின் மகிமை கோணுமோ—இந்தி

௨. அந்தநாள் உங்கள் ஊரைக் கொளுத்தின
தறியா யோசற்றே நில்லடா
முந்தி அம்பாலே கும்பகர்ணனும் முண்ட
கண்டம் ஆனான் அல்லடா
இந்திராதிகளை மிரட்டுவாய் நீ
எங்கள் சாமிக்கொரு புல்லடா
மந்திரந்திலே மாங்காய் விழுமோடா
மழைக்கோ குடை இடிக்கோ குடை சொல்லடா—இந்தி

௩. வில் எடுக்க அறிவேன் என்றாய்
வில்லாளி அல்ல நீ தானடா
கல் எடுக்க அறிவாய் என்றென்னை நீ
கடக்கப் போகச் சொன்ன தேதடா
வில் எடுக்க உங்கள் அப்பனைக் கொல்லும் ரகு
விரனே எச மானடா
எல்லாவர்க்கும் கல் எடுக்க விபீஷணன்
எப்போதென்று காத்திருக்கின்றனடா—இந்தி

வானரவீரர்களை மாட்டின இந்திரசித்துக்கும்
இளையவருக்கும் உயுத்தம்

விருத்தம்.

அந்த அனுமான் சொல்ல அரக்கன் சீறி
ஆயிரம் அம்பால் அவனைக் களைக்க வைத்தான்
பந்தம் உள்ள சுக்கிரீவன் நீலன் சாம்பன்
பனகன் முதல் தலைவர்களும் படையும் சாய்ந்தார்
சிந்தை தெளிந்த அனுமான் மேற்கொண்டும்
சிங்கம் ஆயிரம் பூண்ட தேர் மேற்கொண்டும்
வந்த லட்சுமணனும் இந்திரசித்தும் வில்லை
வாங்கினார் சண்டையிலே ஓங்கினாரே

சயி-தரு-சௌராஷ்டிரராகம்-ஆதிதாளம்

பல்லவி,

லட்சுமணனுக்கும்-இந்திரசித்துக்கும்-நேர்ந்த தேசண்டை-

அநுபல்லவி.

காட்சிஆகத்தம்பி அனுமான்மேற்கொண்டு
கார்முகங்கொண்டுசரமாரி நிறைக்கவும்
பட்சணச்சிங்கம் ஆயிரம்கொண்டதேரிலே
பாவிஅரக்கனவன்தாவிஅம் பிறைக்கவும் (லெட்)

சரணங்கள்.

௧. அரக்கன்ஆயிரம்கோடிஅம்புமுன் எய்தான்
அத்தைலட்சுமணன்
தாத்தி ஆயிரம்கோடிஅம்பாற்பொடி செய்தான்
தம்பியின்னேடே
நெருக்கிஅரத்தசக்கிரம்ஒருகோடி பெய்தான்
அதுகண்டவனும்
இருப்பிஅர்த்தசந்திரம்கோடிவிட்டுக் கொய்தான்
கங்கமந்திரம்
கோடிஅரக்கன்விடக்கோடிஇளையவனும் விடுத்தான்
வச்சிரமுகாஸ்திரம்
கோடிநிருதன்எய்யக்கோடிலட்சுமணன்விட்டுத் தடுத்தான்
அஞ்சலியாஸ்திரம்
கோடிபாதகன்எய்யக்கோடிதம்பியும்எதிர் தொடுத்தான்
கேசகர்ண்ணஸ்திரம்
கோடிஇவன்பொழியக்கோடிஅவன்பொழிந்து கெடுத்தான்
திவ்வியநாகாஸ்திரம்
நிருதன்கோடிஎய்யநிமலனும்கோடியால் மறித்தான்
திரிமுகாஸ்திரம்
வரதன்கோடிஎய்யவஞ்சனும்கோடியால் முறித்தான்
பஞ்சமுகாஸ்திரம்
திருடன்கோடிஎய்யத்திலகனும்கோடியாற் றறித்தான்
பத்மமுகாஸ்திரம்
குருடன்கோடிஎய்யக்குருசிலும்கோடியாற் தெறித்தான்
இந்தவகையாற்
கடலும்காடும்மலைகளும் பற்றிவேகக்
காணும் தேவர்முனிவரர் சிந்தைநோக
இடம்இல்லாமல்இந்த உலகந்தலோகம்
எங்கும்இவர்கள்விடும் சரம்மழைஆக—லட்சு

௨. சிறிஅரக்கன்பின்வானரப்படைகளை நீக்கி
இளையோன்மார்பில்
ஏறுகவசத்தில் ஈரேழுநூற்றம்பாற் றாக்கி
அனுமான்உடல்
கிறிநுழையஓர்ஆயிரம்வடிக்கணை தேக்கிப்
பெருங்குருதி

அறுசெய்நக்கைதத்தம்பியும்விழிகோணமு நோக்கித்
தேவர்மகிழ
ஒருபதினாயிரங்கணை ஒருகொடியினிற் பூட்டி
அரக்கனதேரும்
விருதுக்கொடியும்சிங்கத் திரளும்புரண்டுவிழ மாட்டி
அவன்பொன்மார்பை
உருவிநுழையும்மூவிருநூற்றம்பை ஓட்டிச்
சுற்றிலும்நின்று
பொருதும்வீரர்களைஒருகணையால்விழக் காட்டி
நிற்கக்கண்டவன்
சகஸ்திரகோடிகணைஒருமிக்கமழையெனத் துளித்தான்
அதெல்லாம்நீக்கி
சகஸ்திரவாளிதம்பிவிடஅவன்மெலிந்துதத் தளித்தான்
தம்பிநெற்றிமேல்
பருத்துநூறம்புகள்பாதகன்சடுதியிற் றெளித்தான்
அவன்மேற்றம்பி
பெருத்துநூறம்பெய்யமார்பிளந்துதிரம்கொப் புளித்தான்
சிலையைவூன்றி
ஊறும்தேரின்மே லவனிளைப்பாற
உதைத்தனுமான்அந்தத் தேரையும்பீற
தேர்ஒன்றார்ந்தவன் ஐம்பதுகணைதூற
தேரும்அழிந்துமறு தேர்அவன்ஏற—லட்சும

ரு.. ஏறயேறஇப்படிஅவன்ஆயிரம் தேரை
இளையோன்சிறி
ஆறுகோடிஅம்பால்அழித்தான்எதிர்த் தோரை
அனுமான்கையாற்
றுறுமாறுமாக்கிழித்தெறிந்தான்சில பேரை
உடல்வெவ்வேறுக்
கூறுகூறுசெய்தான்குவித்தான்பிணப் போரை
ஆயிரம்தேரை
ஒருகையினல்அப்பிஉயர்கடலினில்விழச் சாய்த்தான்
லட்சம்யானையை
இருகையினற்பற்றிஈயும்எறும்புமெனத் தேய்த்தான்
கோடிசேனையை
வரிதருவால்கொண்டு வாரிஅடித்தடித்து மாய்த்தான்
அந்தவேளையில்
கருடன்போல்அங்கதன்அநிருதன்முன் வாய்த்தான்
பேய்கள்ஆயிரம்
பூண்டதேரைநெடுங்கலைஒன்றினால்எறிந் தழித்தான்

அடாஉன்சேனை
மாண்டுகிடந்ததனைபார்க்கலேபோவென்று பழித்தான்
அவனும்போரில்
மூண்டுதேரில்நின்று முறைமுறைவெகுகணை கொழித்தான்
அவனைத்தம்பி
மீண்டுதேர் அழித்து மார்பினிற்கவசமுங் கிழித்தான்
மனங்கலங்கி
நைத்துவாடிஅவன் ஏறவும்வேறு
ரதம்இல்லாமல்வெறுங் குருதிவெள்ளாறு
சிந்திஒடக்கையிற் பிடித்திடுவீறு
சிலையும்அவனுமே தனிக்கஇவ்வாறு—லட்சு

௪. அரக்கனுடன்வரும்நாற்பதுவெள்ளமும் இறைக்க
அந்தோடேகூடிக்
குங்குவெள்ளங்கள்நாற்பதும்வெள்ளவும் இறைக்க
வானரங்களுள்
பெருத்தபேர்சிலபேர்களும்உயிர்வந்து பிறக்க
சமுத்திரம்போலே
இரத்தவெள்ளஙகளேசெவேல்என்று நிறைக்க
வெள்ளத்தின்மேலே
வாலும்ராட்சதர் காலும்குவியும்ரண்டை
கொடிமுடிகள்
போலும்படுகளம் கோலும்ராட்சதர் மண்டை
மண்டைபிளந்து
சாலும்தயிருமாமூலபெருகிய உண்டை
கோடானுகோடி
மேலும்தொகையிலநாலுதிசையிலும் சண்டை
விடும்அம்பாலே
கவிகைசிவிகையொடு கொடிகள்தடிகள்பல முரிய
கண்டகண்டமாத்
துவசகவசம்அற கரிகள்பரிகள்குடல் சரிய
நொந்தயுத்தத்தால்
அவரைஇவர்அறைய இவர்அவர்தலைகளை அரிய
ஆனந்தங்கொண்டு
தவசிகள் இருடிகள்முனிவர்கள்மலர்மழை சொரிய
தம்பிதொடுக்கும்
தெய்வபாணம்பட ராட்சதன்ஏறு
தேரும்நூறுபொடி ஆகவெவ்வேறு
எவ்விடங்களிலும் ரத்தவெள்ளாறு
எடுக்கஎடுக்கஇளை யாமல்இவ்வாறு—லட்சு

ரு. பத்தியாக இருவரும்கணை முறைமுறை தொட்டு
சூரியபகவான்
அஸ்தமானத்தை அடைந்திருள் வருகிற மட்டும்
போராட இந்திர
சித்தன் ஆயிரம் தேர்களும் முறிமுறி பட்டும்
மாயையினாலே
சத்தியாக லட்சுமணன் முதலோர்களைக் கட்டும்
உபாயம் தேடி
நாகபாசத்தை வேகமதாகவே தொடுத்தான்
தொடுக்கையாலே
ஆகம் ஆனது கட்டுண்டு தம்பியும் படுத்தான்
அனுமான் அப்பால்
வேகம் ஆகவே இறுக்குண்டு சுருக்கெல்லாம் விடுத்தான்
சுக்கிரீவன் முதல்
ஆகவீரர்கள் அனைவரையும் அரக்கன் தடுத்தான்
தாறுமாறாகக்
கதறிவிழுவார் சிலர் கருவிவிழுவார் சில பேர்கள்
வாலை அடித்து
உதறிவிழுவார் சிலர் உறுமிவிழுவார் சில பேர்கள்
சாமிகண்டாக்கால்
இதிலே விதனம் வரும் என மறுகுவார் சில பேர்கள்
அனுமான் உண்டு
சிதறு மோனமதுயிர் என மகிழுவார் சில பேர்கள்
சேனைசேனையா
கவலை ஆகி இப் படிவெகுவெள்ள
கவிகள் பயந்து மனம் தவிடென்னத் தள்ள
எவரும் இறந்தனர் என்றரக்கனும் மெள்ள
எழுப்ப விபீஷணனும் பயங்கொள்ள—லட்

நாகபாசத்தால் லட்சுமணர் கட்டுண்டதற்காக

விபீஷணர் புலம்பல்.

விருத்தம்.

மை இருளில் இந்தவகை மறைந்திந்திரசித்து விடவந்த நாகக், கைவளர் பாசம் தன்னால் லட்சுமணன் முதல் ஆனோர்கள ததிம் சாய்ந்தார், அவ்வழியே விடணனும் ஓடி வந்தான் லட்சுமணன் அவிதி கண்டான், எவ்வகையும் செயமாட்டான் என்றுதெல்லாம் எண்ணி இரங்குவானே

௬௪ தரு உசேனிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவினைக்கென்னசெய்வேன்-லட்சுமணநான்
இந்தவினைக்கென்னசெய்வேன்

அநுபல்லவி

வந்தானேஎசமானன் மகன்பாசத்துக்குநேரே
தந்தானேவிபீஷணன் சகிகாரன்என்பாரே—இந்

சரணங்கள்

௧. போரில்ஓடி இளைத்தானே ராட்சதன்ரவில்
சோரன்போல வளைத்தானே
யாரென்னசொல்வாரோஎவர்க்கேன்மேல்முண்டோ
ஊரைவாய்முடவும் உலைமுடிதான்உண்டோ—இந்த

௨. பரதர்போல் ஆனான்என்பாரோ வஞ்சனைக்கெல்லாம்
முதற்பாதம் நான் என்பாரோ
பதைப்பா அழைத்துவந்தான் பழிவார்த்தான்என்பாரோ
கொதிப்பா இட்டினமரத்திற்கூர்பார்த்தான்என்பாரோ

௩. சங்கைபோய் அடுத்தேனே காத்தசாமியை
வங்கைபோற் கெடுத்தேனே
அங்கவர்க் கானேனே அபயம்என்றுறவாகி
இங்கிவர்க் கானேனேஎன்போல்உண்டோதுரோகி—இ

இளையவர் நாகபாசத்தால்கட்டுண்டதர்க்காக ஸ்ரீராமர்இரங்கல்.

விருத்தம்.

விசயவிபீஷணன்இவ்வாறழுதுவாடும்
வேளையிலேராயச்சந்திரன் இடத்தில்மேவி
அனலனெனும்மந்திரிசொல்லச் சுடர்அம்பேந்தி
அவ்விருளைத்துரத்திஐயன் களத்தில்வந்தான்
முன்னைபெறுசுக்கிரீவனை அங்கதனைக்கண்டான்
முசித்தபடைகளைக்கண்டான்மூர்ச்சை ஆன

தனிஅனுமானையுங்கண்டான் சாமிகோபம்
தாங்கினான் தம்பியைப்பார்த்தேங்கினானே

சஉ-ஆ தரு-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னதான்செய்வேன் அடா-லட்சுமணாநான்
என்னதான்செய்வேன் அடா

அநுபல்லவி.

உன்னைப்பாசம்கட்ட-உன்பாசம்என்னைக்கட்ட
ஒருத்தன்நான் தவிப்பேனோடாலட்சுமணா (என்)

சரணங்கள்.

க. சனகிபிரிந்தகுறை மறக்கவோநீவந்து
தந்தாஇந்தத் தொல்லையே-லட்சுமணா
நினைவின்படிநான்கீறும் கோட்டைகடந்தொருவர்
நில்என்றாலும் நில்லையே-லட்சுமணா
எனதுகண்ணேநானும் உனதுபின்வருகிறேன்
ஏதுக்கெடுத்தேன் வில்லையே-லட்சுமணா
உனதுயிர்போனால்என்உயிரும்போம்அப்புறம்
ஒருகவலையும் இல்லையே-லட்சுமணா(என்)

உ. எடுத்தென்பசிஅறிந்து அருங்கனிதரும்கையை
எப்படி பிடிப்பித்தாயோ-லட்சுமணா
படுத்தறியாதநான் களத்திற்றூங்கிறேன்நீ
பார்என்று வருவித்தாயோ-லட்சுமணா
அடுத்ததகப்பன்போல நீயும்போய்என்னைஇங்கே
அவத்திலே சோதித்தாயோ-லட்சுமணா
பிடித்தகொம்பையும்விட்டுமிதித்தகொம்பையும்விட்டுப்
பேய்போல் அலையவைத்தாயோ-லட்சுமணா(என்)

ந. பெண்ணுக்காய்மான்பின்னை நடக்கச்சேதடுத்தஉன்
பேச்சையும் கடந்தேனே-லட்சுமணா
மண்ணும்வரும்உன்னாலே மனைவியும்வரும்என்று
மனமகிழ்ச்சி அடைந்தேனே-லட்சுமணா
கண்ணைக்கொண்டுநடக்கும் அவர்போலேநானும்

உன்னைக்கொண்டு நடந்தேனே-லட்சுமணா
என்னினஎன்னம்பொய்யதிரிக்கிளக்காரமா
ஏழையாக் கிடந்தேனே-லட்சுமணா(என்)

கெருடபகவான்வருதலும் நாகபாசமறுதலும்

விருத்தம்.

அதிபதிரகுபதிதுணைவனெடுருகிற அறைஇருளின்போதில்
உதவிய அரியதோர்தசமுகன் மகன் விடும் உரகநெடும்பாசம்
சிதறிட இளையவன்எழுதா அமரர்கள் திசை திசைநின்றாடக்
கதிரவன் அவன் அலன் இவன்எனவிசையொடுகெருடனும்வந்
[தானே

சஉ. தரு-மோகனராகம் ஆதிதாளம்

பல்லவி.

கெருடபகவானும்வந்தானே-தெய்வ-கெருடபகவானும்வந்தா
[னே

அநுபல்லவி

கெருடபகவான்வந்தான்-கிளம்பிபெருங்காற்றினை
இருசிறைகளும்சாடவே-அஷ்டமாநாக
அரசனும் பயந்தோடவே-ராமனைக்கண்டு
உருகிமனது வாடவே-வனமலைபோல்
உரகபூஷணம் ஆடவே-அந்நேரமே—கெருடபகவா

சரணங்கள்.

க. முந்திஆனையினல்என் - முதுகேறிமுதலைமேல்-அந்தச்சக்க
[ரமவிட்டயே
அந்தச்சக்கரத்தைவிட்டம்பும்வில்லும்கொண்ட
செந்தாமரைப் பூங்கையனே-எவர்களுக்கும்
சந்தோஷம்தரும் மெய்யனே-அறியார்போல்
நொந்தாலெப்படி துய்யனே-அடியேன் இதோ
வந்தேன்வந்தேன் அய்யனே-என்றுசொல்லி—கெரு

உ. விரிசிறகால்மண்ணும்-விண்ணும் மூடிக்கொண்டு-ஒருமலை
[யெனத்தாவியே
ஒருமலைமேற்சூரியன் உதித்தாற்போற்மலைமேலே

பருமூ்ா ஒளிவிரிய-காதங்கள் கோடி.
இருகண்பார்வையும்தெரிய-சாமிகைவிட்ட
பிரிவாலே . மனம்பரிய-பரவசம்ஆய்
உருகிக்கண்ணீர் சொரிய-வேகமதாக—கெருடபகவ

௩. கிடத்துடனேதெற்குத்திசையில்இருந்துபாயந்துவடக்கு [திசையைநாடியே
வடக்குதிசையில்அய்யன்மலர்பாதம்கண்டுகை
எடுத்துவணக்கம் குவிக்க-கழுத்தில்வெள்ளை
துடிப்பாவெண்ணில்வெறிக்க-ராகுகேதுவும்
திடுக்கென்றுடலே ஒழிக்க-நாகபசமும்
பொடிப்பொடியாய்த்தெறிக்க-அன்பினுடன்—கெருட

௪. கிழிந்துபாதாளத்தில்கிடக்கும் பாம்புகளும்-கண்சுழன்று தத்தளித்திடவே
சுழன்றுநாகபாசம்தொடுக்கும்இந்திரசித்தாலே
விழுந்தோர்மெள்ளமெள்ளவே-நித்திரைநீங்கி
எழுந்தவர்போலத் துள்ளவே-தம்பியைராமன்
அழுந்தத்தழுவிக் கொள்ளவே-தேவர்கள்பயம்
ஒழிந்துகவலை தள்ளவே-அவர்கள்வேண்ட—கரு

கெருடபகவான் ஸ்ரீராமரை துதித்தல்

விருத்தம்

மதம்சேர்நாகபாசம்இந்தவகையாற்றெறிக்கராமச்ந்திரன், இதம்சேர்லட்சுமணன்முதலோர் எழுதல்கண்டான்அதிசயிக்கும், விதம்சேர்நீயார்எனக்கேட்டான் விவரித்துரைப்பேன்பிறகென்று, பதம்சேவித்தான்மனதில்அன்பு பதித்தான்கெருடன்துதித்தானே.

௯௬-தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அய்யனேஉன்மகிமையை - அறிந்துசொல்லவேணும்என்றால்
ஆதிசேஷனுக்குவருமோ

அநுபல்லவி.

துய்யனேகாத்தருள்செய் மெய்யனேஎனத்தேவர்
தோத்திரம்செய்திடஒருஅ யோத்திநகரினில்வந்த—அ

சரணங்கள்.

க. பிரமாதிதேவர்களைப் பெறுவானும்நீ அவர்க்கு
பெருமானும்நீ உனக்கு ஒருவர்நேரா
தருமாதிபதவிகளைத் தருவானும்நீயுனக்குத்
தாவேனதென்னகோ சலைகுமாரா-எங்கள்—அ

உ. உலகெல்லாம்உன்வயற்றில் ஒடுக்குவாய்விடுப்பாய்பின்
ஒருவருக்கும்உண்டோ இந்த பெரியதிராணி
தலைவனே உனக்கொருவர் பலம்வேணும்என்பதென்று
சத்தியமோமித்தியகோ தண்டபாணி-எங்கள்—அ

ந. ஆகிநடுமுடிவாகி எள்ளும்எண்ணையும்போலே
அங்கெங்கும்நிறைந்தாயே நீஇப்போது
மேதினியிலேஉனக்கும் எதிர்ஒருவர்உண்டென்று
வில்எடுத்துவிளையாட வந்ததேது-எங்கள்—அ

ச. ஆரணங்கள் கூடவும்தன் காரணங்களறியாமல்
அரளிக்கையால்அகில லோகமித்திரவே
நாரணனே அகண்டபரி பூரணனே உன்கீர்த்தி
நான்உரைக்கமுடியுமோ ராமபத்திரனே-எங்கள்—அ

ரு. முத்தொழிலும்முக்குணமும்-முச்சுடரும்முப்பொழுதும்
முப்பொருளும்ஆகின்ற மூர்த்திராமா
பத்தர்ஆசாபாசம் தொலைக்கும்உனக்கொருநாக
பாசம்தொலைத்திடுவதுபிர யாசம்ஆமோ-எங்கள்—அ

இராத்திரியில் மகாரட்சத வீரர்கள்வதை.

விருத்தம்.

கெடிக்கருடன்விடைகொண்டான் அப்புறம்வானரரும்
கெர்ச்சித்தார்கருடன்வந்தவகையைராவணன்முன்
துடித்திடத்தூதுவர்சொன்னர் அவனும்மகனிடம்போய்ச்
சொன்னான் இந்திரசித்தும் ஒருபிரம்மாஸ்திரத்தால்
அடித்திடுவேன்நாளைப்போய் நரர்பொல்லார்இன்றைக்
காகாதுமிகவொக்தேன் அப்பப்பாஎன்றான்
முடித்தலைபத்துள்ளவனும் படைத்தலைவரோடே
முறைப்பட்டான்அக்கவரு மும்றப்பட்டார்தாமே

அ-திபதை-பைரவிராகம்-அட-தாளசாப்பு

கண்ணிகள்.

க. விக்கிரமராவணன் அனுப்பவேஒரு
வேகமாப்படை எடுத்தாரே
அக்கினிக்கெதுமுதற்படைவீரர்கள்
அனேகரும்களம் அடுத்தாரே

உ. நீலன்முதற்படைத் தலைவர்கள்இதுகண்டு
நேருக்குநேரேபோய்க் குதித்தாரே
ஆலகாலமும்வடவாக்கினியும்போல்
அவரும்இவரும்போர் எதிர்த்தரே

ங. சரத்தாலேராக்ஷதர் வானரத்தலங்களைத்
தறையிலேவீழவிழ முடித்தாரே
மரத்தாலேவானரர் அரக்கர்படைகளை
மண்டைகள்பினங்கிட அடித்தாரே

ச. வில்லும்சரமும்கொண்டுராக்ஷதர்வானர
வீரர்கள் அணிகளை உடைத்தாரே
கல்லும்மரமும்கொண்டுராக்ஷதசேனையைக்
கவிப்படைத்தலவர்கள் புடைத்தாரே

ரு. சுக்கிரீவன்வந்த சூரியகேதுவைத்
துண்டம்துண்டம்ஆக முறித்தானே
வைக்காமல்அப்போ தங்கதன்பாய்ந்தொரு
மாபெரும்பக்கன்உயிர் பறித்தானே

சு. தூமக்கண்ணனை ராமன் தூதன்எம
தூதனைப்போலவே வென்றானே
மாமுஷ்கரம்உள்ள நீலன் மலைகொண்டு
மலைபோன்றமாலினியைக் கொன்றானே

எ. இடபன்போய்ப்பொல்லா வச்சிரதந்தனை
எற்றிஅவன்கழுத்தை ஒடித்தானே
உடனேபனசன் பிசாசனைக்கண்டோடி
உதைத்துமிதித் தங்கையால் அடித்தானே

அ. இளையான்மேலே அக்கினிகேதுவும்

சர் இருவெள்ளம்கொண்டு நடந்தானே
கிலேபோய்சேனையும் போய்அக்கினி
கேதுவும்பட்டு கிடந்தானே

௯. விரிவாகவெஸ்ரீ ராமனை ஓர் ஆறு
வெள்ளம்அரக்கர்போயக் கவிந்தாரே
ஒருவாளியினாலே ஈசல்போக்குப்போலே
உடனே அவர்மண்ணில் அவிந்தாரே

௰. நாயும்நரியும்கழுகுகளும்வந்து
நாலுதிக்கிலும்குதி குதித்தவே
பேயும்ரணபத்திர காளியும்கூளியும்
பிணங்களைத்தின்று சதை உதித்தவே

௧௧. இரணசுக்கிரன்புறப்பட்டகண்ணிலே
இண்டமுள்ளுதைத்த தைப்போலே
மரணம்கொடுத்திடும் ராவணன் இந்த
வார்த்தையைக்கேட்டான் அப்பாலே

௰௨. குளித்தேமகரக் கண்படைகள் அஞ்சு
கோடிகொண்டரக்கன்முன் நின்றானே
வனத்தேஎன் அப்பனைக் கொன்றபழிக்குப்பழி
மனிதரைவாங்குவேன் என்றானே

௰௩. வெறுவாயைத்தின்னுகின்ற அவனுக்கு
வெள் அவல்கிடைத்தது தின்னவே
சூரியா அரக்கனும இருபதுவெள்ளம்
கூட்டினானே துணை என்னவே

௰௪. சிங்கமுகனும்ராத் தாட்சனும்என்னும்
சேனைத்தலைவர் இரு வோர்கூட
இங்கேஅந்தமக ராட்சதன்வந்தானே
ராமச்சந்திரனுடன் போராட

௰௫. ஓர்ஆயிரம்அம்பு மகரக்கண்ணன்
ஒருதொடைஆகவே எய்தானே
ஓர்ஆயிரம்அம்பாலே அய்யன் அதை
ஒருநொடியில்பொடி செய்தானே

௰௬. பின்னும்ராகவன் அப்பாலே அவன்

பெரும்தேரும்பரியும் அழிந்ததே
மன்னும்ஒருகணையாலே அந்த
மகராட்சதன் தலை விழுந்ததே

யஎ. நளனாலேராட்சனும்அந்த
நமனார்உலகத்தைக் கண்டானே
இளையாதபனசனாலே அந்த
இகற்சிங்கமுகன் உயிர் விண்டானே

யஅ. வில்லாலும் கல்லாலும்இருபது
வெள்ளம்படைகளும்போய் இறந்ததே
சொல்லானது ராவணன்செவியிலே
சுட்டாற்போலேபோய்ப் பிறந்ததே

லட்சுமணர்க்கும் இந்திரஜித்துக்கும்இரண்டாமுறை உயுத்தம்.

விருத்தம்.

அதைஅறிந்தான்ராவணன்என் மகன்தன்னை இங்கே
அழையுங்கள்எனத்தூதர் அவன்பக்கல்சென்றார்
வதைபடையின்கதைகேட்டான் தந்தையிடம்வந்தான்
வணங்கிமக்கள் இறந்ததற்குவருந்தாதேநான்போய்ச்
சிதையஅந்தஇருமனிதர்வசம் சீதைகண்டும்
சிறுகுரங்கின்பிணக்குவைஅத் தேவதைகள்கண்டு
பதைபதைத்தால்நீகாண்பாய் என்றிந்திரசித்தன்
பதிவிட்டான்தம்பிஅவன் எதிரிட்டானே


சறு தரு-நாதநாமக்கிரியைராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பெருஞ்சண்டைகேளீர்-லட்சுமணன்செய்த-பெருஞ்சண்டை [கேளீர்

அநுபல்லவி.

பெருஞ்சண்டைகேளீர்கள் அருஞ்சண்டைஆளிகள்
தருந்திண்டேர்யானைகள் கருந்துண்டமீசனைகள்
பருஞ்சண்டமாருதம்போல் நெருங்குண்டவாசிகள்
மருங்கண்டவே தந்திரத்தொடு வருங்கண்டக இந்திரசித் [தொடு
பெருஞ்சண்டை



லட்சுமணனுக்கும் இந்திரசித்துக்கும் உயுத்தம்.

சரணங்கள்.

க. சிரத்தில்மணிமகுடம் தரித்துமார்பிற்கவசம்
பரித்துப்பணிகள் அலங் கரித்துவலியப்பெருங்
கரத்தில்த்தனுவைக்கொண்டு சிரித்துமுப்புரங்களை
எரித்தருத்திரனைபோல்ஆர்ப் பரித்துவிக்கிரமத்துடன்
துங்கத்தைக்கோறி - ஓர் ஆயிரம்
சிங்கத்தேர் ஏறி - அலைஎறியும்
சீர்கொள்எழுகடலின் நீர்கள்கரைபுரளப்
பார்கள்கிடுகிடெனச் சூர்கள்விடுவிடென
ஊர்கொள்பருதிநிகர் ஏர்கொள்குடைகள்மலர்த்
தார்கள் அசையும்மணித் தேர்கள் ஆயிரம்கோடி
புடைசுற்றித்தரவே - ஆறுபதுவெள்ளம்
படைதத்தி வரவே - உயர்ந்தஅண்ட
கோளம்கனத்தசக்கிர வாளம்பருத்தபுவி
நீளந்தன்னெடுபாள பாளங்களாவெடிக்க
மேளங்கள் அடிக்கைத் தாளங்கள் துடிக்கஎக்
காளஙகள்தொனிக்கத்திக் காளங்கயானைகள்
வீரிட்டுக்கதறத் - திக்குப்பாலர்ப
பிரிட்டுப்பதறக் - களத்தில்வந்து
துன்றுசமர்விளைக்க அன்றில் அணிவகுத்துக்
இன்றுமனிதர்களை வென்றுபகைமுடிப்பன்
என்றுசங்கம்பூரித்து ஒன்றத்தனுவளைத்துக்
குன்றுவந்தெனஎத்துடனே நின்றஇந்திரசித்துடனே
பெருஞ்சண்டை

உ. வீரன்இந்திரசித்தன் போரில்நின்றஉடனே
கார்எனவேஆர வாரம்செய்யஅதி
தீரன்சுக்கிரீவனைச் சேரும்வானரர்எல்
லாருசிங்கத்தைக்கண்டு பெரும்யானைக்குலம்போல்
நடுக்கம்கொண்டோட- அரக்கர் அவர்
இடுக்கம்கண் டாட - அனுமசுக்கிரீ
வானும் அங்கதனும்ஸ்ரீரா மனும்சாம்பவனும்லக்ஷ்ம
ணனும்உக்கிரம்உளவீரர் எனும்சிலவரும்அஞ்சா
தினும்முந்திவரும்ராட்ச தனும்இந்தப்போரினில்
தனுவிந்தையாவளைத்து மனுமந்திரவாளிகள்
தொடுப்பதும்ஏற்ப்போம்-நம்மைக்கெலித்து
விடுப்பதும்பார்ப் போம்-எனவேநிற்க
தீதும்அதனில்மிக்க சூதும்உள்ளஅரக்கர்
வாதுசெயநினைந்தப் போதுபடைகளைக்கொண்

டதகிசயம்இனி ஏதுவிளையுமோஎன்
ரேதி அமரர்வெட்க மோதி அமர்விளைக்க
அதைஅய்யன் கண்டு-லட்சுமணனே
வதைசெய்வில்க்கொண்டு-என்றுசொல்லி
அனுமார்அங்கதன்தோளில் தனுவார்லட்சுமணர்
எனும்ஓர் இருவர்கேச வனும்ருத்திரனும்மிகு
கனம்ஆர்புள்ஏற்றின்மீ தினில்ஏறினாற்போல
மனமகிழ்ந்திட ஏறி அன்றுவன்-சினமிகுந்திடவீறிநின்ற
பெருஞ்சண்டை [பின்

௩. திடத்தலைன்முதற் படைத்தலைவர்கள்எல்லாம்
கிடைத்தமலைகளைக்கின் டெடுத்துமரங்களுங்கொண்
டடித்துப்போர்புரியத் துடித்துப்போம்அளவில்
அடுத்தராமச்சந்திரன் தடுத்தென்தம்பிசெய்யும்
சண்டையைஇன்று-நீங்கள்பார்த்துக்
கொண்டிரும்என்று-சொல்லியேகம்
பெருமானும்தம்பியும் ஸ்திரம்ஆகவேநின்று
உரம்ஆம்வில்லைவளைத்துச் சரமாரிகள்பொழிய
அாலல்அன்றுதிரி புரம்நீறெழுந்தாற்போல்
வரம்ஆரும்வெள்ளம்ஓர் இருமூப்பதுமடிந்து
விழுந்ததைக் கண்டு. இந்திரசித்தன்
அழுந்துள்ளம் விண்டு-அமர்களத்தில்
பெருந்திபோலஉ திரவெள்ளம்ஓடவே
வரும்ஆனைசேனைகு திரையாவயுமடியவே
ஒருநிமிஷத்திலே இருவோருமாவிட்ட
சரவேகமும்இவர்கள் கரவேகமும்சொல்ல
எந்தனால் ஆமோ-ஆதிசேஷ
னும்சொல்லப்போமோ-மடிந்தசேனை
ஞாலத்தில்இத்தவக் கோலத்தர்விடும்ஆல
கலத்தைநிகர்பாண சாலத்திலேசாபானு
கூலத்திலோ இந்திர சாலத்திலோஎந்த
காலத்திலும்கண்டிலேன் வெனற-மூலத்தைநான் விண்டி
பெருஞ்சண்டை [லேன்என்ற

௪. இன்றுபோரில்நமக் கென்றுராமலட்சுமணர்
துன்றும்அரக்கர்தமைக். கொன்றுவிருந்துசெய்தார்
நன்றுநன்றெனவே சென்றுசென்றுபல்லால்
மென்றுமென்றுசுவைத்துத் தின்றுதின்றுகொழுத்து
கூளிகள்பாட-ரணபத்திர
காளியும்ஆட-அதனைக்கண்டு

துங்கம்ஆகமுன்னம் பொங்கும்இந்திரசித்தன்
மங்கியேபிரமித்து இங்குவந்தமர்செய்
சிங்கம்ஏறனைய அங்கதன்அனுமானை
இங்குரைக்கில்அனேகர் எங்கும்மனிதர்என
ஆச்சரியம்கொண்டு-முன்னிருந்த
மாச்சரியம் விண்டு-இருந்தபோதா
காசம்ஆரும்தேவர் வாசமலர்கள்கொண்டு
நேசமாஇருவர்மேல் வீசஅதையும்கண்டும்
பூசலிலேஅரக்கர் நாசம்ஆகவேஇவர்க்
கேசல்ஆச்சுதேநம்பிர காசம்போச்சுதேயென்று
மனம்திடுக்கிட்டான்-பெருமூச்சுகள்
அனந்தமாவிட்டான்-அந்தவேளையில்
முக்கியம்ஆளஎட்டு திக்குகளும்அதிர
மக்கிநட்சத்திரங்கள் மிக்கிடவேஉதிர
சக்கிரம்ஏந்தும்திரி விக்கிரமன்நேர்அனுமான்
உக்கிரமுடனஇருதோளும் கொட்டிய நெக்கிடஒலிஆகா
பெருஞ்சண்டை [சம்முட்டியே
ரு. மாருதிதோள்கொட்டி ஆரவாரம்செய்யவே
ஊரும்ஆயிரம்கோடித் தேர்களிலேஇந்த
வீரம்எல்லாம்நடுங்கிப் பாரில்விழுந்தார்லங்கை
ஊரில்இருந்தபெருங் கார்அரக்கரும்தத்தம்
தனைக்கக்கி னார்கள்-சிலஅரக்கர்
நினைத்துட்கினார்கள்-மேகநாதன்கண்
டோர்குரங்கார்ப்புக்கு நீர்நடுங்கினபோதே
பார்மீதிலேசெத்த பேர்நீங்களேஎன்று
கார்வண்ணராமன்போல் நேர்வண்ணலட்சுமணன்
போர்மன்னியமுகத்தில் நேர்வந்தெதிர்த்தபோதா
யிரம்கோடிஉரவே-கத்தேரவர்
மருங்கோடிவரவே-லட்சுமணன்கண்டு
துஷ்டஇந்திரசித்தன்முன் விட்டநாகபாசக்
கட்டினாலேதோற்று விட்டான்என்றுஉலகத்தோர்
சட்டமானேச்சொல்வார் வெட்டிஅவன்தலைஉன்
கிட்டவைக்காவிட்டால் இஷ்டஅடிமைஅல்லேன்
எனக்கண்ணன்முன்னே-சிலசபதம்
தனைப்பண்ண பின்னே-சாமியும்மெய்க்க
ஆலம்உண்டபிரளய காலருத்திரனைப்பல
சீலலட்சுமணன்பாண சாலத்தாயிரம்கோடி
கோலத்தேரைஅழித்து மேலிட்டரக்கரை
காலன்வென்றுவிடஅன்றகன்றிடும்ஞாலம்மருவிடநின்று
பெருஞ்சண்டை [கொன்றிடும்

௬. தனித்திந்திரசித்தன்வில் குனித்துலட்சுமணனான்
உனைக்கொன்று அண்ணன் உன் தனக்குற்றுரிமைசெய்ய
நினைத்தேன்முடிக்காவிட்டால் அனைத்துலங்கையும்ஆளும்
கனத்தராவணன்மகன் எனப்பேர்படைத்தும்ஒரு
நலன் இல்லை இன்று-வில்எடுத்ததால்
பலன் இல்லை என்று-சொல்லலட்சுமணன்
நல்லவார்த்தைசொன்னாய் செல்வம்சொல்லுக்கஞ்சுமா
மல்லார்போரினில்வந்தால் எல்லாம்அப்பொதெரியும்
பொல்லாஉன்தனையேநான் கொல்வேன்உனக்குன் அப்பன்
கல்லார்கடன்கழிப்ப தெல்லாரும்காண்பார்வா
வாஎன்று சொல்ல-இந்திரசித்தாஆ
ஆஎன்று வெல்ல-பிரளயகாலந்
திடிபேலேஆர்ப்பரித் துடனேகடோரம்ஆம்
வடவாக்கினியைப்போலும் திடவாளிகள் அனேகம்
படபடெனஅங்கதன் உடலில்ஆயிரம்பாணம்
கடல்தாவும்அனுமான்மேல் அடல்சேர்பாணம்இரண்டா
யிரம்விட்டுத்தடுக்க-தேவர்கள்கண்டு
உரம்கெட்டு நடக்க-ராமாநுஜன்
இடிஉற்றெழுந்துகார்கற் கடகச்சந்திரயோகத்தில்
படியிற்பொழிந்தாற்போல் வடியிட்டசரமாரி
நொடியிற்பொழியநீசன் கொடியப்பகழிஎல்லாம்
பொடிபட்டிடஅன்றுகெட்டவன் கெடிவிட்டிடநின்றுவிட்
பெருஞ்சண்டை [டபின்

௭. லோகநாதன்தம்பியும் மேகநாதனும்எய்யும்
வேகம்ஆகியபாணத் தீகள்எழுந்ததினால்
சாகரங்களின்நீரும் மேகநீரும்வற்றிப்
போகக்காடுகள்பற்றி வேகஅதனைராமா
நுஜன் கண்டுகடுகி-சரங்கள்பல
துஜம்கொண்டு முடுகி-விடவேஇந்திர
சித்தன்தேரில்கட்டும் பத்துநூறென்னும்சிங்
கத்திரள்யாவையும் செத்துப்போகஅந்த
எத்தன் இந்திரசித்தனைச் சுற்றிவந்திடும்சே
மத்தேர் இல்லாமையால் மத்தியானசூரியன்
பரிவேஷம் நீங்கி-நின்றாற்போல்நின்
றுருகோஷம் ஓங்கி-செய்துகுரங்கின்
சேனைமேலேபெருஞ் சோனைமழைபோற்கூர்மை
ஆனசரங்கள்கையில் ஆனமட்டும்எய்து
மானஅங்கதன்மேலும் சேனைசரங்கள்விட்டு
வானிமீதிடிக்குச்ச மானம்ஆகச்சங்க

நாதத்தைப் பண்ணி-மகிழுவர்வி
காதத்தை எண்ணி-லட்சுமணன்பத்து
தேட்டம்ஆன பாணம் போட்டுமேகநாதன்
மாட்டிவந்தகவச மூட்டுகளைக்கழற்றிக்
கோட்டும்விற்குணத்தொனி காட்டிநின்றிடச்சுவாமி
கேட்டுமாநலம்என்றுமகிழ்ந்திடும் கூட்டவானரர்நின்று
பெருஞ்சண்டை [புகழ்ந்திடும்

அ. மணடுபோர் இளையான்பிர சண்டவில்க்குணத்தொனி
கண்டுமனமகிழ்ந்து கொண்டல்வண்ணராமன்
அண்டம்உண்டவாயால் விண்டுசொல்லவானரர்
எண்டிசைகளும்அதிர் கொண்டிடவே அட்ட
காசத்தைப்பண்ணி-கொச்சித்தார் துஷ்ட
நாசத்தை எண்ணி-அந்தவேளையில்
ஈசர்க்கும்எண்டிசை வாசர்க்கும்உலகர்க்கும்
பேசர்க்கரியபிரம பாசத்தைவிடுவதில்
மாசத்துவசம்உடைய நீசன்இந்திரசித்தன்
மோசத்தைஎண்ணிஆ காசத்திலேபோய்த்தன்
உடலத்தைமறைத்தான்-வானரர்என்னும்
கடல்வற்றக்குறைத்தான்-அதனைக்கண்டு
நாமாறிலாபரந் தாமாஸ்ரீராமாநாம்
ஏமாறி இருந்தால்என் ஆமோஇந்திரசித்தன்
சாமாறுபிரமாஸ்திரம் நாமேவிட்டிடவேணும்
க்ஷேமம்அருள்வாய்என்று ராமாநுசன்சொல்ல
அதைராமன் தடுக்க-செயிக்கும்வேளை
இது அன்றென் றெடுக்க-உறவே இந்திர
சித்தன்மனதில்வெகு சத்திஉள்ளபிரம
அஸ்திரத்தைவிட்டு வெற்றிபெறவேஒரு
உத்திசெய்துலங்கை அத்தினன்இதுகண்டு
சுற்றும்வானரர்ஆர்வாரித்த சத்தியவானவர் நேரேபூரித்த
பெருஞ்சண்டை

அனுமாருக்கும் அகம்பனுக்கும் யுத்தம்

விருத்தம்.

நலி இந்திரசித்திலங்கைநகர்புகுதக்கீழே
லட்சுமணனோடிறங்கிக்கவசமுதல்நீக்கி

மெலிசேனைஉணவுக்காவிடலைப்போக்கி
வீரன்ஆயுதபூசைவிதிசெய்யப்போனான்
கிலிகொள்மகன்உத்தியினால்அவரைஏமாற்றச்
கிளர்இராவணன்விடமகோதரனோடகம்பன்
வலியவந்தான்அவனையும்சேனைகளையும்பாய்ந்தனுமான்
வாட்டினான்தெண்டுகொண்டுமாட்டினான்தானே

௪௯-தரு பியாகடைராகம் அடதாளசாப்பு

பல்லவி.

சாடினானே-அனுமான்-சாடினானே

அநுபல்லவி.

சாடிக்கும்பகர்னன்முன்னேபோடும் அந்தத்தேண்டினாலே
நாடிஅகம்பன்படையில் ஆடுகளில்வேங்கைபோலவே(சா)

சரணங்கள்.

௧. வாரும்வாரும்ராட்சதரே வாரும்என்றுகூவினான்
வாரிவாரிஅந்தலங்கை ஊரில்விழத்தாவினான்
சாரிசாரிஆகஒரு கேசரிபோல்த்தாவினான்
தான்ஒருத்தனுமேருத்திர சாமிபோல்உலாவினான்
ஆரநெருங்கியகுதிரைகள்சருகென ஓட்டி பிணம்பிணமா
ஆனைகள்பூனைகள்ஆகவிழும்படிவாட்டி தேங்காய்போல்த
தேர்தனையேவிடுசாரதி தலைகளைமூட்டிமென்மேலும்வந்த[ள்ளி
சேனையைவீசிஅதோகதிஆகவே மாட்டிதிசைதிசையில்
விரிட் டரக்கியர்கீழ் ஓரிக்குரல்போலேஅழ
நேரிட்ட ராட்சதர்விழ பீரிட்டீஇரத்தம்எழ (சாடி)

௨. கோடிபேர்க்கொருத்தாகப் போடுவான்ஒருபுறம்
கொக்கரித்துராமனைக்கொண் டாடுவான்ஒருபுறம்
ஆடுவான்வாலாலேசுற்றி மூடுவான்ஒருபுறம்
ஆடாசேவகன்என்று தேடுவான்ஒருபுறம்
மூடன்நிகும்பன்அவ்வேளையிலே அனுமானேஉன்னைநான்கொ
[ன்று
போடுவேன்என்றொருசூலம்எடுத்தெறிவானைபொருந்திஅவன
தாடையில்ஓர்அடிபோடமுழங்கியசேனை-போலவேரத்தம்
ஓடமடிந்தனன்மேலும் மகாபலசேனை சுற்றியபோது

சாடிச்சட்டி ஒருகாலே-முடியிட்டகுளேமேலே
கோடைஇடிவிழுந்தாற்போலே-ஓடிஓடித்தெண்டிருலே(சா)

௩. அகந்தையால்ஒருதெண்டுகொண்டாயிரம்கமுதைத்தெரிலே
அகம்பன்வந்தடித்தான்முன்னேபுகுந்தனுமான்மார்பிலே
திகழ்ந்தஅனுமானும்தெண்டால் தட்டினன் அந்நேரிலே
தெண்டுங்கொண்டகையும்பிண்டுருண்டஅந்தப்பாரிலே [ன்
புகுந்தவன்தன திடக்கையால்அனுமானை அடித்தான் அடிக்கஜய
பொட்டெனவே அந்ததுட்டனைக்கையிலே பிடித்தான்பிடித்
[துமார்பில்
பகுந்துகுபீரெனரத்தம்இரங்கிட-இடித்தான்-இடித்தபின்னும்
பார்த்தவன்ஆவியைக்கூற்றுவன் ஆமெனக்குடித்தான்-மூர்
[திஐயையோ
பகைந்துஇராவணன் தள்ளஉகந்துவரும்நூறுவெள்ள[ள்ள
மிகும்படையைக்காலன்கொள்ள அகம்பன் உயிர்துள்ளத்து

இளையவர்பிர்ம்மாஸ்திரத்தால்கட்டுண்டதற்க்காக

ஸ்ரீராமர்இரங்கல்.

விருத்தம்.

அகம்பன் அங்கேபட அனுமான்முதலோர்கள்இருளில்
அகன்றுதனித்தனிப்போர்செய்தினையவன்பால் அடைந்தார்
புகைந்தஇராவினில்மகோதரம்தேவேந்திரன்போல்
போர்செய்தான்இளையவனும்திகைத்தான்அப்போது
முகிந்தபிரம்மாஸ்திரம் இந்திரசித்துவிட்டான்தம்பி
முதலானோர்படுத்துவிட்டார் அதைஅறிந்துராமன்
மிகுந்துயரால்வந்துலேவாய் மெழுகுபோல்உருகி
விழுகின்றான்துணைவனைப்பார்த்தழுகின்றான்தானே

சு. திபதை-எருக்ல்ககாம்போதிராகம்-ஆதிதாளம்

கண்ணிகள்.

க. அப்பனே அய்யனே அரும்பிறவியேஎந்தன்
அரசேகண்மணியே லட்சுமணா
எப்படிநான்உனைமறப்பேன் எப்போதுன்னுடன்பிறப்பேன்
இனிஎன்மனம்துணியேன் லட்சுமணா

உ. வன்னம்ஆம்பிரம்மாஸ்திரம் கொடுத்தபிரம்மாவைப்பழி
வாங்கநீதொடர்ந்தாயோ லட்சுமணா
என்னுடன்பிறந்ததுறை உசரப்போய்தசரதர்க்கு
இயம்பநீநடந்தாயோ லட்சுமணா

ங. தந்தையையும்சடாயுவையும் கொடுத்ததும்போதாமல்உன்
தனையும்பலிகொடுத்தேன் லட்சுமணா
இந்தவயதினில்இந்த கண்காட்சிகாணநான்
என்னஉடம்பெடுத்தேன் லட்சுமணா

ச. அந்தோநான்களையாகித் தண்ணீர்விடாய்யெடுத்தால்
ஆர்முகத்தைப்பார்ப்பேன் லட்சுமணா
இந்தாரும்காய்கனிகள் அண்ணாஎன்றழைக்கும்உன்
இன்சொல்நான் என்றுகேட்பேன் லட்சுமணா

ரு. நேர்அறிந்தென்வயிற்றில் காய்கனியை இட்டநீ
நெருப்பைஇட்டாபோஅய்யோ லட்சுமணா
ஆரையும்விட்டென்னைவிடேன்என்றுயேஎன்னைக்கூட
அகலவிட்டாயோநீ லட்சுமணா

சு. சொற்றிலேகல்எடுக்கறியேன்முகவணைக்கல்எடுப்பேன்என்
சொல்லையேநான்எடுத்தேன் லட்சுமணா [ற
ஆற்றிநான்முடிபெறுமுன் வந்தவிபீஷணர்க்குலங்கை
ஆளமுடிகொடுத்தேன் லட்சுமணா

எ. படிக்கும்முன்புத்திதள்ளி உனக்கும்வானரங்களுக்கும்
பழிக்காரன்ஆனேனே லட்சுமணா
பிடித்ததேபிடிஆகப்பெண்வார்த்தைகொண்டுநான்
பிழைமோசம்போனேனே லட்சுமணா

அ. மீளாஎன்உயிர்போம் பரதர்க்கும்இதுகேட்கில்
நிமிஷத்தில்உயிர்போமே லட்சுமணா
தாய்மாருக்கும்உயிர்போமே நான்பிறக்கச்சூரியகுலம்
தான்துலக்கம்ஆச்சே லட்சுமணா

ஸ்ரீராமனா ஆகாசத்தில்சகலதேதைகளும் தோத்தரித்தல்.

விருத்தம்.

இந்தாவந்தேன்வந்தேன்என்-றிளையபெருமாள்முகம்நோக்கி
நொந்தாயாசம்பெறமெலிந்து-நோக்கிப்பெரியபெருமாள்முன்

அந்தோ உனக்குங் கவலையுண்டோ-ஐயா என்றே அந்தரத்தில்
வந்தார் தேவர் சாமி முகம்-மதித்தார் இரங்கித் துதித்தாரே

சஎ- தரு-பந்துவராளி ராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

உன்னதும கிமையை-இன்னதென்றெவராலும்-உரைக்கலாமோ [ராமா

அநுபல்லவி

நின் ஒரு நாபியில் பிரமா ஒருத்தனாலே
நிகரில் சராசரங்கள் சகலமும் தரலாலே
நன்னி அரக்கருக்கு நீ பயப்படுவது
ஞாயமோ சாமி உன்தன மாயமோ புவிமேலே—உன்

சரணங்கள்.

க. முப்பரம் பொருளும் ஆய் முப்பரம் பொருளுக்குள்
மூல முதற் பொருளும் ஆவாயே
அப்பனும் அன்னையும் தம்பியும் உனக்குண்டோ
அவர்கள் வருத்தம் கண்டு நோவாயே
இப்படி உன் சரித்திரம் இது வேவ நிலைவரம்
என்றால் அத்தையும் கூடக் கடந்தாயே
செப்பிலும் இல்லை பக்தி லும் இல்லை உன் செயல்
சீமையிலே தகப்பன் சாமி என்பது நீயே—உன்

உ. அத்திமரத்தினிலே தொத்திய கனிபோலே
அண்டம் என்னும் கனிகள் உன் மேலே
தொத்தி இருப்பவற்றுள் ஒரு கனியிற் செனித்த
துஷ்ட அரக்கர் எனும புழுவாலே
கஸ்தி அடையல் ஆமோ சிற்றூரில் செல்வக்கூத்து
கட்டுகிறாய் என்ன ஒருகாலே
உத்தமனே உன் கீர்த்தி எத்தனை பேர் சொன்னாலும்
ஊசிக் கண்ணாலே ஆகாசம் பார்க்கிறாய்ப் போலே—உன்

ங. அம்பரீஷன் பிரகலாதனன் முதலோருக்
கருளிச் செய்தாயே அனுக் கிரக நாட்டம்
நம்பின எங்களை இந்த அரக்கருக்கு
நடுங்கச் செய்ததென்ன மாறாட்டம்

தம்பியும்பிழைக்கிருன் உன் தனக்கிவர்என்ன
சண்டமாருதத்தின்முன் சருகோட்டம்
எம்பிரானேநீநோக்காலெங்களுக்கொருகவி
இருக்குமோதேவர்என்றும் தரிக்குமோஎங்கள்கூட்டம்
[—உன்னரு

ஸ்ரீராமலட்சுமணருக்குச் சீதாதேவிஇரங்கல்.

விருத்தம்.

வானவர்இப்படி துதிக்கத் தூதர்சென்று
மன்னவனேஉன்மகனல் மனிதச்சாதி
ஆனவரும்குரங்குகளும்முடிந்தாரென்ருர்
அவனும்அங்கேபுஷ்பகவியானத்தேற்றிச்
சானகிக்குக்காட்டுமென்ருன்கண்டாள்சீதை
தணல்அடுத்தவெண்ணெய்போல் உருகிவாடி
நான் ஒருபெண்பிறக்கஇவ்வாருச்சோஎன்று
நலிக்கின்ருள்நொக்துநொந்து மெலிகின்ருளே

௰-திபதை-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

க. என்னசெய்வேன்சாமிநான் என்னசெய்வேன்சாமிநான்
இந்தக்கோலம்காட்டவோ வந்தீர்
துன்னிக்கைக்கெட்டினது வாய்க்கெட்டாமலேபோக
தோதகம்ஏன் ஒருமிக்கத் தந்தீர்

உ. கண்ணே அமுதே கருணைகரனே என்மனக்
காவலொடேஇத்தனை நாளா
மண்ணில்இருந்தஅயர் மறைந்தநிருமேனியை
மார்பில்அணைப்பதற்கோ வாளா

ங. நகரில்இரென்றஉம்மை அகலேன்என்றுபிடியா
நான்தொடர்ந்ததிதற்குத் தானே
பகைவர்இலங்கையிலே நீர்மடிந்தபிறகும்
பாவிநான்உயிர்தரிப் பேனே

ச. ஏகபோகம்ஆகவே இருந்தஎன்பிராணநேசரை
இழந்தஎன்உயிர்எமன் கொண்டு
போகமாட்டாமல்இந்த பொல்லாத்துயர்க்கடலிற்
போட்டுவிட்டானேஎன்ன கண்டு

௬. ஊர்மனிதர்க்கன்றுநீர் பதினாலுவருஷம்போய்
உடனேவருவேன்என்றதும் தப்போ
ஏர்பிடித்தோன்என் செய்வான்பாணிபிடித்தவள்பாக்கியம்
என்பார்அதுவோதான் ஒப்போ

ஆசைமான்பின்போஎன்றாள் காரணகாட்சிக்கெல்லாம்
அடிவேர்இவள்என்றறி வீரே
மோசம்செய்தாள்இவளை முகம்பார்க்கஆகாதென்று
மூடிக்கொண்டீரோகண்ணை நீரே

௭. வீட்டில்என்சாமிஅன்னை வார்த்தைதட்டாமல்வந்து
விரதங்கொண்டார்என்பதெல்லாம் ஏனோ
காட்டில்எரித்தநிலா கானலில்மழைஆச்சே
கைகண்டபலன்இது தானோ

௮. அருமைஆகியஒருபெண் பாவத்தைக்கட்டிக்கொள்ளும்
அரக்கர்செயம்பொருந்தப் போமோ
தருமமேசெயப்பெரு மாளேதுணைஎன்னும்என்
சாமிக்கபசயம்வரல் ஆமோ

௯. காதகஇந்திரசித்தன் சூதோஅன்றியீதென்ன
காரணமோநான்முன்செய் சதியோ
ஆதிமறைபோய்த்தாலும் பொய்யாப்பிராணநாதரை
அலையக்காண்பதும்பாழ்த்த விதியோ

௰. அய்யோலட்சுமணாநீஎன்சிறைமீட்குமுன்னே
ஆவிஉனக்கும்சும்மாப் போச்சோ
கையாலேநான்பாவிஉன் அண்ணன்கைபிடித்த
காலபலம்இப்படி ஆச்சோ

௧௧. ஓதும்பேச்சும்காணேன் மூச்சும்காணேனேசாமிக்
குயிர்உண்டோஇல்லையோசொல் மகனே
ஏதும்அசைவும்காணேன் இருவர்க்கும்ஒரெழுத்தா
எழுதிவைத்தானோசதுர் முகனே

௧௨. மையானகாட்டில்அண்ணன் மெய்வருந்தாமல்தூங்க
மலர்கொய்துமெத்தையிட்ட நீயே
வெய்யராட்சதநீசர் எய்யும்அம்புகள்என்னும்
மெத்தைமேலேகிடக்கி றாயே

௧௩. மெய்காணும்சாமிக்கும் உனக்கும்பழிகாரிநான்
விழுந்தாலும்என்பார் அல்லோ நீலி
கைகேசிமகராசி கருவிக்கருவிளெல்லாம்
கட்டிக்கொண்டாளேபாக்கிய சாலி

௧௪. தாய்பகைவந்தபோது நீஇருந்தண்ணனைக்
காட்டிக்கொடாதேஎன்று தனியே
தாய்சுமித்திரைசொன்னளே அதுக்கோநீ அண்ணன்முன்னே
சாய்ந்துகிடக்கிறாய்பிள்ளைக் கனியேனா

௧௫. புத்திரனேகண்மணியே கைத்துணைஆளஉன்னைப்
போக்கடித்தேன்நான்பாவி பொய்யோ
வற்றிவடகம்ஆயும் இத்தனைபாடுங்காண
வைத்ததேபாவிதெய்வம் அய்யோ

௧௬. எப்போதும்போலேசாமி செயிப்பார்என்றிருந்தேனே
இங்கேகண்டேனேஅலங் கோலம்
குப்பைஉயர்ந்ததென்ன கோபுரம்தாழ்ந்ததென்ன
கூடிச்சேரநீசருடன் காலம்

௧௭. தாய்மார்கள் இருவரும் பரதனும்இதுகேட்கத்
தரிக்குமோஅவர்அவர் தேகம்
கேவலம்பழிகொண்டேன் எனக்கினிஒருக்காலும்
கிடைக்குமோநல்லபர லோகம்

திரிச்சடைஅம்மாள் சீதாதேவியைத் தேற்றுதல்.

விருத்தம்.

பரிந்திந்தவகைஅழுதுசாமிமேலே
பதைத்துவிழஎழுந்தவளைக் கட்டிக்கொண்டு
விரிந்திடுங்கண்ணீர் துடைத்துப்பிறர்கேளாமல்
மிகப்பசித்தோர்களை த்தேற்றும்அமுதுபோல
சரிந்தபயிர்களைத்தேற்றும் மழையைப்போல
சவலைதன்னைத்தேற்றுகின்ற தாயைப்போல
தெரிந்ததிரிச்சடைஎன்பாள் சீதைதன்னைத்
தெற்றுவாள்மனக்குறையை ஆற்றுவாளே

சஅ தரு சாவேரிராகம் ஆதிதாளம்

பல்லவி.

எதுக்குவருந்துகிறாய்அம்மா-நீ-எதுக்குவருந்துகிறாய்சும்மா

அநுபல்லவி.

கேதப்படாதேதெய்வம்-போதுளென்பதழிந்ததோ
கிணறுதப்பிளென்னதுரவிலே விழுந்ததோ—எதுக்கு

சரணங்கள்.

க. மாயமாமான்என்றும் சனகராசன்என்றும்
மயக்கம்காட்டினன் உன்னண்டை
மற்றைநாள்வெளி ஆச்சுததுபோல்இந்திர
சித்தும்செய்கிறான் சிலசண்டை
ஓயவேபெரும் பேயும்நாயும்தின்ன
உருளுதுபார்இவன் தலைமண்டை
உரத்தாராமனை அரக்கர்கெலிக்கும்போது
உள்ளங்கையிலேமுடிக்கிறேன்பார் ஒன்பதுகொண்டை—எது

உ. அனுமான்என்பவன் தனதாகவேவந்து
அடிமைக்கடிமைஆகி உழைக்கிறான்
அவனாலேயேஉன்கணவன்தம்பிஉடனே
தவறாதபடி பிழைக்கிறான்
நினைவேதோலட்சுமணன் இளஞ்சூரியன்
எனவேமுகத்தொளி தழைக்கிறான்
நிமிஷத்திலே ராவணனையும்படையையும்
நமனும்வந்துதன் உலகத்துக் கழைக்கிறான்—எது

ரு. சொப்பனமும்உன்தன் கற்பும்சகுனமும்
சுபபலன்கொடுக்காமல் நீங்குமோ
சொல்லாய்மங்களம் இல்லார்களை இந்த
தூயவிமானமது தாங்குமோ
ஒப்பில்லாராகவன் இந்திரட்சத
அற்பருக்குப்பின் வாங்குமோ
ஒருக்காலேபயந்திருக்கிறாயேஎன்ன
ஒருகுளப்படி கண்டுதிரைகடல் ஏங்குமோ—எது



அனுமார் சஞ்சீவிபர்வதத்தைக்கொண்டுவருதல்.

விருத்தம்

திரிசடைசொல்லாற் சீதைதேறிப்போனாள்
சிலைவீரர்பாடும் சேனைகளின்பாடும்
கருதிவிபீஷணன்சொல்ல அனுமான்சாம்பன்
கட்டுரையாற்சஞ்சீவிமலையைநாடி
இருபுயமும்தூக்கி அண்டகோளமட்டும்
எட்டும்விஸ்வரூபம் கொண்டினிமேல்நீங்கள்
வெருவிடவேண்டாம் நானபோய்வருவேனென்று
விளம்பினன் அனுமந்தன்கிளம்பினனே

சகூ-தரு சுருட்டி ராகம் ரூபகசாப்புதாளம்

பல்லவி.

பாய்ந்தானே அநுமந்தன் பாய்ந்தானே. சஞ்சீவி
பர்வதத்தைக்கொண்டு வந்தானே

அநுபல்லவி.

சேர்ந்தசாம்புவன்உரைக்கையாலே- திரிவிக்கிரமசாமிபோலே
தேவர்மகிழ மூவர்புகழ
திசைஉளளீளம்கண்டு விஸ்வசொரூபம்கொண்டு—பாய்ந்

சரணங்கள்.

க. தெற்கிலேநின்றுவடக்கைநோக்கிவிஸ்வரூபத்தைப் பெருக்கி [நக்ஷத்
திரமண்டலமுங்கிழித்தே அண்டகோளத்தைமுட்டிநெருக்கி [ஒண்டி
நிற்கப்போத்திசைஎட்டினும்இடம்இல்லாமலே அருக்கி-பெரு
நிலத்தைஉதைத்துவிசைத்துக்கிளம்பிநெடியகழுத்தைச்சுரு [க்கி-ஒரு
கைக்குக்கைஓராயிரம்யோ சனைமட்டும்நீட்டி-நிமிர்ந்து
கணகணனவேவீரவாலின் மணிதனை ஆட்டி-தனது
விக்கிரமபுசபலபராக்கிரமம் அடங்கலும்காட்டி-தகப்பன்
விசையிலும்அதிவேகம்ஆகிய விசையைமுன்ஓட்டி-எங்கும்
மக்கிமலைகள்வேர்அறுந்தாட-மரங்கள்செடிகள்-பிடுங்குண்டோ
சொர்க்கத்தவரும்பதற பக்கக்கடலும்கொதற [ட
திக்குத்திசையும்கதற சக்கிரக்கிரியும்சிதற—பாய்ந்

உ. இலங்கைவிட்டொன்பதாயிரம் யோசனை இமயகிரியில்தாண் [டி அந்த
இமயம்விட்டொன்பதாயிரம்யோசனை ஏமகூடத்தில்த்தாண்டி [அப்பால்
சலங்கொண்டொன்பதினாயிரம்யோசனை நிஷதகிரியில்தாண்டி [நிஷதமும்
விட்டொன்பதினாயிரம்யோசனை தங்கபெருமலைதாண்டி அங்கே
துலக்கும்வெள்ளியங்கையிலைசசனஉமைக்குக்கையாலே-வாயு
சுதன் இவன்என்றுகாட்ட அவனைத்துதிசெய்தப்பாலே [வின்
] விளங்கும்

அலங்கலின்மாயனைப்பணிந்து தாவிவிண்மேலே-போகையில்
அருக்கனைக்கண்டுவிடிந்துபோச்சென்று திகைத்தொருக்காலே [பின்னும்
நிலம்தனிலேஅங்கேபகல்என்றறிந்து நிலையிலைகண்டப்பாற்பறி
விலங்கிப்புயல்விண்டொழியதொலைத்தெட்டாவும்சுழிய [ந்து
குலுங்கித்தரையும்குழிய கலங்கித்திசையும்கிழிய—பாய்ந்

௬. அரியமருந்தைக்காக்கும்தெய்வங்கள் அடங்கலும்வந்துதடுக்
ஆராளன்றுகேட்கராம தூதன்நான்என்றுகடுக்கி-ஒரு [கிநீ
பெரியசக்கரமசுழன்றுவந்ததுபோமட்டும்நெஞ்சைஒடுக்கி-கட்
பெலத்தங்கிருந்தகாவற்பேரையும்பின்னிட்டோடவே முடுடு [க்கிஅங்கே
தரையிலேஆயிரம்யோசனை தாழ்ந்துவேரோடிமேலே
தலைஎடுத்தோர்ஆயிரம்யோ சனைமட்டும்கூடி-ஆர்க்கும்
தெரியவேஓர்ஆயிரம்யோ சனையொடுமூடி நின்ற
திர்க்கமலையைஒருகையாலே தூக்கிப்பந்தாடி-திரும்பி
வருகையில்அந்தவாடைசுழன்று வஞ்சகன்பிரம்மாஸ்திரம்கழ [ன்று
ஒருலட்சுமணன் தேற-பெருகிப்புவனம் தேற
தருமப்பயிரும் தேற-திருலட்சிமியும் தேற—பாய்ந்த

ஸ்ரீராமர் லட்சுமணர்க்காக பின்னும்இரங்கல்.

விருத்தம்.

மறம்மிகும்அனுமான்பாய்ந்துவருமுன்னேசாம்புவனும்
திறல்விபீஷணனும்தேறத்தேற்றுவார்தம்மைநோக்கி
கறவைதன்கன்றைத்தேடிக்கரைகிறார்போலராமன்
பிறவியைஎண்ணிவேதைபெருகுவான்உருகுவானே

௫௰-தரு-எருக்கலகாம்போதிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

ஆனாலும்என்னைப்போல்இனி - ஆர்க்குண்டிந்த அநியாயம்

அநுபல்லவி.

மானகரன்தசரதன்பிள்ளைத்தவம்
வருந்தையிலேஇப்படிஇருந்ததோகாரணம்—ஆனா

சரணங்கள்.

க. ஆர் ஆர்க்கென்னசெய்யினுந்தம்பிபோல
அதுவந்தென் அவிதி துடைக்குமோ
நேரோராவணனைக்கண்டுவிட்டுவிட்டு
நெஞ்சுகிடந்துபுடை புடைக்குமோ
சீராளன்காலப்பிழைவெண்ணெய்
திரண்டுவரச்சீசதாழி உடைக்குமோ
தாரந்தேடக்கிடையாதேஎன்,
தம்பியைப்போல்எங்குந்தேடக் கிடைக்குமோ—ஆஹ

உ. சற்றுந்தம்பிவார்த்தையையெண்ணாமல்
தயங்கிமானின்பின்னேபோ னேனே
கத்திக்கொண்டுங்களைத்தேற்றிவந்து
கழுத்தறுத்தேனோநான் தானே
உற்றதகப்பனுஞ்சடாயுவும்
ஒருபிறவியுமிழந் தேனே
பெற்றாரையும்பிறந்தாரையுங்கொன்றேன்
பெண்ணாசைகொண்டபித்தன்என்பது நானே—ஆஹ

௩. சதிகாறராட்சதப்பையல்கைக்கு
தாழுவதென்தம்பிக் கையோ
மதிமோசமாஅய்யனைக்கொண்டுவந்து
மடிப்பாகக்கொடுத்தேன் பொய்யோ
இதவாகதருமமேசெயிக்கும்என்
றிருந்தஎனக்கது மெய்யோ
கதையோகரும்புக்குழுதபுழுதி
காச்சினபாலுக்குசர்க்கரை ஆமோ அய்யோ—அஹ

தம்பிக்காக இரங்கின ஸ்ரீராமரை சாம்புவன்தேற்றல்

விருத்தம்.

இளையவனை நினைந்திந்தப்படிக்கு ராகவன்புலம்பஎழுந்தான்
சாம்பன், வளையும்வகைவணங்கிநின்றான்சாமிநீநொடிப்போது
வருந்தவேண்டாம், விளையும்உயிர்தரும்மருந்து கொண்டுவரு
வான் அனுமான்விழுந்தோர்க்கெல்லாம், களை அகலும் அதுசெ
ய்யுங்குணம்என்பான்காண்பாய் இக்கணம்என்பானே.

ருக-தரு-சாவேரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவேதைநீகொண்டால்சாமி-இனிஎந்தவிதம்பிழைக்கும்பூமி

அநுபல்லவி.

சந்தரம்உனதுதர்மத்தாலேதழைப்போம்
தம்பியும்நீயும்எல்லாரும் பிழைப்போம் - ராமா—இந்த

சரணங்கள்.

க. அளந்துன்னைநான் அறிவேன்உனக்கொன்றும்குறையில்லை
அலைகடல்கடையச்சே நாலுமருந்தன்று
வளர்ந்துவடகுருவில் இருந்ததைக்கொண்டுவர
மாருதிகிளம்பினன் பாய்ந்துசென்று
பிளந்ததுகூட்டும்ஒன்றுபடைகரைப்பதொன்று
பிராணன்கொடுப்பதொன்றுபெலன் கொடுக்கிறதொ
களங்கம்இல்லாமல்வரும்-அதுமுன்னுகமலை [ன்று
கலங்கினுலும்மனம்கலங்காதவனே இன்று—இந்த

உ. தன்னைப்படைத்தபிரம்-மாவையும்பிரம்மாஸ்திரம்
சாடும்உயிர்குடித்துப்போடும் அதன்கடோரம
மின்னும்பிரம்மாஸ்திரமும் அந்தமருந்தைக்கண்டால்
மெய்யைவிட்டுக்கழன்று செய்யும்நமஸ்காரம்
பின்னைத்தம்பிகையாலே-அரக்கர்படுவதெல்லாம்
பெருக்கத்தெரியும்சற்றே பொறுபொறுஎன்னவிசாரம்
பன்னிச்சொல்வதென்ன-முன்னாள்சண்டைஒரு
பாக்கும்இனிமேற்சண்டை-தோப்பும்ஆகும்இந்நேரம்( )

ஈ. ஆரும்அறியார்அந்த-மருந்திருக்கும்இடத்தை
அடையாளம்சொன்னேன்விஷ்ணுசக்கிரம்காவல்உண்டு
பேரும்ஊரும்அறியார் அத்தைஇந்தமட்டுக்கும்
பிடுங்கிக்கொண்டுபோன பேர்களும்இல்லைபண்டு
சாரும்வாயுவேகம் மனவேகமா அனுமான்
தருவான்நொடிக்குள் இங்கே வருவான் அதனைக்கொண்டு
நேரும்உன்காரியம்-உனக்கேஜயம்அய்யா
நெருப்புமெழுகுபோல அடிக்கடிமனம்பிண்டு—இந்த

தம்பிமுதலானோர் எழுந்ததர்க்காக ஸ்ரீராமர் அநுமாரைப்புகழ்தல்.

விருத்தம்.

வெம்பிஇந்தவிதம்சாம்பன்தேற்றும்போது
விக்கிரமமாருதிமலைசஞ்சீவிதன்னைப்
பின்புகளத்தினில்வைத்தான்ஒருபிரம்மாஸ்திரம்
பிரிந்திடவேபரிபூரணசந்திரன்போலே
இம்பர்இளையவனும்வெள்ளம்எழுபத்தும்
எழுந்திடப்பூமலர்தேவாபொழிந்துவாழ்த்தத்
தம்பியைப்போல்எழுந்தஇராகாவன்விசாரம்
சாடினான்அநுமனைக்கொண்டாடினானே

ருஉ-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

அநுமானே-நீயே-சுனவானே

அநுபல்லவி.

தனதாளங்கட்குப்பிராண-தாரைநீவார்த்தாயே—அநுமா

சரணங்கள்.

க. நம்துதுணைவரும்வா னரர்களும்தாமே
நிமிஷந்துன்னல்உயிர் நிலைபிடித்தோமே
சுமதலைஉனக்கென்றே துணிந்தோம்பாமே
எமலோகபரியந்தம இனிச்சாதிக்கலாமே—அநு

உ. ஒன்றும்அசைவில்லாமல் உடம்பையும்மறந்தோம்
கொன்றஉயிர்களைநீ கொடுக்கவேசிறந்தோம்
அன்றுதசரதன்பெற் றுருயிர்இறந்தோம்
இன்றுனதுவயிற்றில் இருவரும்பிறந்தோம்—அநு

ந. விழிபோனும்என்தப்பி மெய்உயிர்போயே
முழுகார்தப்படிகாந்தாய் முழுதும்காப்பாயே
பழிகாரன்முன்இந்த பயம்தீர்த்தாயே
அழியாதசிரஞ்சீவி ஆயிருப்பாயே—அநு

இலங்கையில் வானரர்நெருப்பிட்டுகேர்ச்சனைஇடுதல்

விருத்தம்.

கட்டிடைவந்தனு-மத்துநிராகவ-கர்த்தன்உரைத்தளவில்
தட்டறஅண்டர்-இறைத்தனர்பூமலர்-தத்தையர்நிர்த்தமிட
மட்டறவெந்து-பொடிப்பொடிஆக-வளைத்துநெருப்பதனைக்
கிட்டிஇலங்கையில்-இட்டனர்வானரர்-செர்ச்சனை இட்டனரே

இந்திரசித்து மாயாசீதையை அனுமார்முன் கொண்டுவருதல்.

இதுவும்அது

இத்தலையில்இவர்ஆரவாரங்கேட்டான்
இலங்கேசன்உள்ளுடைந்தான்உடனே இந்திர
சித்தெழுந்தான்சஞ்சீவிமலையைமுன்போல்
செலுத்தியமாருதியும்வந்தான் எதிர்த்துக்கொண்டான்
வித்தையிலெல்ஞ்ருத்தனை அந்நேரந்தனில்
மெய்ச்சீதைவடிவாக்கிவெட்டுவேனென
றத்தலையில்கைத்தலத்தில்வாள்ஒன்றேந்தி
ஆட்டினன்மாயையினுற்காட்டினனே

ருந தரு-சௌராஷ்டிரராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

மாயச்சீதைகொண்டிந்திரசித்தனு-மான்முன்னேவந்தானே

அநுபல்லவி.

ஓயலங்கைமேலேவாசலிலேமந்-திரத்தாலேதந்திரத்தாலேசெய்
[த(மாய)

சரணங்கள்.

க. அளப்பில்லாவெகுதளத்தோடேபேரிகை
அதிரவே அடித்துக்கொண்டு-நீ
விளைத்தசண்டைகள் வீண்ஆச்சேஎன்று
விகடங்கள் படித்துக்கொண்டு-உடல்
தெளிக்கமயிர்தொட்டிழுத்துப்பல்லைநெற
நெறென்று கடித்துக்கொண்டு-மண்டை

பிளக்கவெட்டுகி றேன் பாரெனவேகத்தி
பிடித்துக்கொண்டுநொடி துடித்துக்கொண்டு-ஒரு(மாய)

௨. வீரம்ஆம்புலி வாய்மான்போல்அவன்
மேலிந்து குறைந்துகொள்ள-மழைத்
தாரையாவிட்டழுதகண்ணீர்முலைத்
தடங்களில் நிறைந்துகொள்ள-கலை
சோரவேபுரண்டழுந்தஉடைமைகள்
சுற்றிலும் இறைந்துகொள்ள-அய்யா
மாருதியேமுறையோ என்றவள்வெட்கம்
மறைந்துகொள்ளக்கண்ணில்அறைந்துகொள்ள-ஒரு()

௩. நேசம்உள்ள அனுமானேஇய்கேசற்றே
நில்லடா சொல்லுகிறேன்-வாள்
வீசிநான்இந்தச் சீதைதனைஉன்தன்
விழிமுன்னே கொல்லுகிறேன்-மறு
யோசனைஇல்லை இப்போழுதந்தஅ
யோத்திக்கும் செல்லுகிறேன்-கை
கேசிபரதன்எல் லாரையும்வேருடன்
கெல்லுகிறேன்உன்னை வெல்லுகிறேன்-என்று(மா)

இந்திரசித்துவெட்டினசீதைக்காகஅனுமார்புலம்பல்.

விருத்தம்.

வந்தபாதகன்இந்திரசித்தென்பான்மாயாசீதையைவாளாலே, விந்தைமாருதிநல்லவார்த்தைசொலவும் துணியாவிசிப்போட்டான், பந்தமாம்அயோத்திமேலேபோக்குகாட்டிநிகும்பலயிற் சேர்ந்தான், சிந்தைமாருதிகண்டுசோம்பினன் அழுதழுதுதேம்பினனே.

ருச தரு-எருக்கலகாம்சோதி-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோநான்பட்டது சும்மா-பாவிஅனுமான்
இனிமேல்நான்என்செய்வேன் அம்மா

அநுபல்லவி.

விதிக்கும்என்எண்ணம்போச்சே- விழுதுக்கிறைத்தநீர்-ஆச்சே
இதுக்கோநான்

சரணங்கள்.

க. ஓம்என் றுமுன் தானுவந்தேன் உன்உயிர்க்குக்கெடுதந்தேன்
ஆம்என் றுஎப்படிசெல்வேன் ஐயனுக்கெப்படிசொல்வேன்
சாமிதான்என்என் றுகேட்பான்தாய்நீஇருந்தால்அல்லோமீட்ப
நிமைதானேமேலிட்டதோதெய்வமுந்தான்கண்கெட்டதோ [ன்
இதுக்கோநான்

உ. அன்னமேதாயேஎன்தன்னை அறிந்தும்இந்திரசித்துன்னை
பின்னமேசெய்திடநானே பிரேதம்போலஇருந்தேனே
சொன்னசஞ்சீவிக்காத்தாண்டி சுறுக்காகநான்உன்னைவேண்டி
என்னென்னசெய்தாலும்அங்கே இப்படிஆச்சுதேஇங்கே
இதுக்கோநான்

ந. அருந்ததிதொழும்பெண்ணே அனைவருக்கும்இருகண்ணே
விரும்பும்உயிர்க்குயிர்ஆயே விளங்குகின்றஎன்தாயே
கனாந்துநான்உன்னைத்தேடி கண்டேன்என்றுமுன்ஓடி
இருந்தாள்என்றவாயாலே இறந்தாள்என்னவோமேலே
இதுக்கோநான்.

சிதைக்காகஇரங்குகிறஸ்ரீராமரைலட்சுமணர்முடுக்குதல்

விருத்தம்.

அஞ்சனைபாலகன் இந்தப்படிக்குநொந்தான்
ஐயன்இராமனுக்குப்போய் அறிக்கையிட்டான்
செஞ்சிலைவீரனும்அறிந்தான் எறிந்தான்வில்லைத்
தேடினன்வாடினன் தியக்கம்கொண்டான்
தன்செயல்ஆனதுமறந்தான்அந்தவேளை
தம்பியும்அப்பிடிதளர்ந்தான் இனிமேற்சாமி
என்செயல்ஆவதுநமக்கும் இருப்பேதென்றே
இனம்சொல்வான்லட்சுமணன் சினம்சொல்வானே

௫௫. தரு-அடாணாராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இனிமேல்யோசனைஎன்னதையா-தேவிபோனபின்-இரங்கினால்ஆ
[காதையா

அநுபல்லவி.

உனதுகவலைசொன்னால் ஊரார்க்கென்னநஷ்டியோ
சினம்எங்கேபோச்சுதய்யோ சிவன்கருப்புட்டியோ—இனி

சரணங்கள்.

க. இலங்கைஉள்ளாரும்தேவர் எவரையும்இப்போதுநேரே [ரே
குலங்களோடும்கொல்லாவிட்டால்கொஞ்சம்சொல்லிநகைப்பா
புலம்பல்ஆமோஇன்னம்சற்றே பொறுத்தால்எதிர்த்தபேரை
விலங்கிலும்போடுவார்அடிமைவேலையும்செய்யச்சொல்வாரே
இனிமேல்

உ. விலக்கவுமசீதையைப்பாவிவீசினுன்என்றனுமான்சொன்ன
கலக்கம்கொண்டாய்தர்மத்துக்கிது காலமோஅல்லவேசின்ன
கொலைத்தொழில்செய்தப்பால்எங்கும்கொளுத்துவாய்நெருப் [பாமின்ன
தலைக்குமேல்ஓடியவெள்ளம் சாண்ஓடிஎன்னமுழம்ஓடிஎன்ன
இனிமேல்

ந. நாட்டில்அரசும்போச்சுதுன்னுடைய நன்மையாலேவந்த [தெண்டம்
காட்டிலும்வந்திந்தக்கொள்ளை கட்டிக்கொண்டோமேதினகெ [கண்டம்
பூட்டிநீவில்லைவளைத்தால் பொடிபொடிஆமேமூதண்டம்
ஆட்டம்காட்டலாமோசாமி அடியேன்சொன்னபடிஎடுநீகோத
இனிமேல் [ண்டம்

ஸ்ரீராமரை அனுமார் முடுக்குதல்.

விருத்தம்.

சினமாஇப்படிஇளையோன்உரைக்கஇந்திர
 சித்தயோத்தியின்மேலேபோனபோக்கை
அனுமானும்சாமியுடன் சொன்னான்சாமி
 ஆவிதடுமாறினான் அந்தவேளை
புனைவீரப்படைகளையும் உமையும்கொண்டு
 போய்அரக்கன்முன்குதிப்பேன் அல்லவென்றால்
முனையாகானேபொருதிக்கொல்வேன்என்று
 முடுகுவான்மாருதியும் கடுகுவானே

ருசு. தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இதுக்கோஇந்தயோசனைசாமி-அனுமான்நான்இருக்க
இதுக்கோஇந்தயோசனைசாமி

அநுபல்லவி.

பதைக்கிறேன் இந்திரசித்தை-உதைக்கிறேன் அயனைநான்
வதைக்கிறேன் அயோத்தியில்புதைக்கிறேன் அதுக்கென்ன-இ

சரணங்கள்.

க. சுற்றியமதில்ஏழும்
எற்றிஊரிலேகையை நீட்டி-ராவணன்தன்னைக்
கொத்துப்பனங்காய்போலே
பத்துத்தலையும்பிடித் தாட்டி-மகனேஇந்திர
சித்தேதான்றவன்அங்கே
கத்திஅலறும்படி மாட்டி-ஆட்டுக்குட்டிபோல
மொய்த்தஅரக்கர்களைக்
குத்திக்கழுகுக்கிரை ஊட்டி-பாராய்என்சாமி
சுற்றிலேலங்கைநகரத்தைப்பிடுங்கிஒரு
பந்தைப்போல்தூக்கிஅங் கெத்துகிறேன்அடியேன்—இ

உ. துடுக்காளன்தாய்முன்கத்தி
எடுத்தான்அவனுக்கிந்த மிண்டேன்-கொல்லாதேஎன்று
பத்துப்படித்துச்சொல்லி
அடிக்கடிவேண்டிவேண்டிக்கொண்டேன்-கேளாமற்பாவி
முடுக்கிவீசக்கண்டு
துடித்துத்துடித்துமனம் விண்டேன்-பரதன்மேலே
வடக்குத்திசையைநோக்கி
நடக்களன்கண்ணாரக் கண்டேன்-உததாரந்தந்தால்
பிடிப்பேன்ஒருகடியாக்கடிப்பேன்அவன்உயிரை
குடிப்பேன்பழிக்குப்பழிமுடிப்பேன்-என்னலாகாதோ—இ

ங. பூத்தபுவனம்எல்லாம்
காத்திடவந்தபரந் தாமா-உன்வில்லுக்குமும்
மூர்த்திகள் ஆகிலும்
பாத்திரரோரகு ராமா-தர்மம்செயம்என்ற
சாஸ்திரமும்உனது
தோத்திரமும்தப்பி போமா-நம்பினதேவர்
பேய்த்தனம்கொள்ளஎன்ன
கூத்திதுநீவருந்தல் ஆமா-சேனையும்தோளில்
ஏற்றிஉம்மையும்நொடிமாத்திரத்துக்குள்ளாக
நேத்தியாக்கொண்டுபோய்-அயோத்தியிற்குதிக்கிறேன்—இ

சிதையின் இருப்பைக் கண்டுவந்த் விபீஷணர் ஸ்ரீராமருக்கு அறிவித்தல்.

விருத்தம்.

அளப்பரிய அனுமான் இது சொல்லவிபீஷணன் அதனை
 அறிந்தான் நான்போய்
வளப்பமெல்லாம்கண்டுவந்து சொல்வேன்என்றிலங்கை
 யில்ஓர் வண்டாய்ப்போனன்
களக்கம்இல்லாச்சிதையையும்கிரும்பலையை அரக்கன்செய்
 கவடும்கண்டான்
உளக்கவலைக்கடல்கடக்கக்கரைசெய்வான்சாமிமுன்னே
 உரைசெய்வானே

ருஎ-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இருக்கிருள்தாய்அசோகவனத்தினில்-இருக்கிருள்சாமி

அநுபல்லவி

இருக்கிருள் நமக்கொரு பாக்கியம்உற்றாற்போலே
ராவணன்குடிக்கொரு சூன்யம்வைத்தப்போலே—இரு

சரணங்கள்.

க. மோதுவேன்என்றும் இடிக்கிறேன்என்றும்
 முறைமுறை யேமிண்டு-சொல்லும்
வாதரக்கியர்முன்-புலிக்கூட்டத்தில்ஒரு
 மான்போல் மனம்பிண்டு-என்று
தீதிலாவொரு-ராமாமிர்தமே
 சீவனம் ஆகஉண்டு-ரகு
நாதனேஉன்கைவில்ஓசையும்வா
 னரஓசையும்கண்டு பரிபூரணம்கொண்டு—இ

உ. சொன்னமுறைபிசகிச்சிஷ்டர்எண்ணம்அழிந்து
 துஷ்டர்என் ணமேமுற்றுமோ-தர்மமேசெயம்
என்னநாலுவேதங்களும்ஆறுசாஸ்
 திரங்களும் வின்கத்துமோ-நல்லது

இன்னதேமெய் ஆனல்சந்திரசூரியகதி
இரண்டும் இங்கே சுற்றுமோ-உந்தன்
அன்னையைத்தொட்டால் அவன் இன்னமும் இருப்பானே
அருக்களிப்பேதுக்கையோ நெருப்பைப்புழுப்பற்றுமோ —இ

ரு.. அந்தநிகும்பலையாகம்செய்யப்போனன்
அறிந்தேன் அவன்சூதை-சாமி
உன்தன் அயோத்திக்கவன் ஓர் அடிவைத்ததில்லை
உனக்கேன் மனவேதை-சீதை
சிந்தைதேற்றுவாள் அடியேன்விபீஷணன்பெண்
திரிசடை எனும்பேதை-மதி
மந்திரி அனுமான்முன்னே இந்திரசித்துகொன்றது
மாயாசீதைஅது தாயார்எனும்சீதை—இருக்கிற

ஸ்ரீராமர் லட்சுமணர்க்குயுத்ததந்திரம்கற்பித்தல்.

விருத்தம்.

கலக்கம்அற இப்படிச்சொல்லிக்காட்டி அந்தவிபீஷணன்பின்
விலக்கவேணும்நிகும்பலையின்வேள்விமுடியாமுன்என்றான்
பெலத்தபடையும்தம்பியும்என்பின்கூட்டென்றான்சாமியுட்கெ
டிலக்குமணனை அழைத்துறுதிஎடுத்தான்சொல்லத் [ாண்டான்
[தொடுத்தானே

ருஅ- தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தம்பிலட்சுமணா-இந்திரசித்தன்-தலைகொண்டுவாபோடா

அநுபல்லவி.

நம்பிஉன்னோடேயாவர் எதிர்ப்பார்கள்
நான் அறிவேன்உன் வீரம்-சத்தியம்
ஆனதுவே உபகாரம்-உனக்
கேன் இனிச்சொல்லவிஸ்தாரம் இதுவேபாரம் இந்நேரம் அடா( )

சரணங்கள்.

க. முதற்சண்டைபோல்மறுசண்டைபோற்சேனையை
மோசப்படுத்தாமல் தேக்கி-நின்று

பதைத்தவன் அம்புக்கெதிர் அம்புபோட்டுப்
படுதுகள் ஆகவே நீக்கி-நாலு
விதத்திலும்போர்செய்து கைமெய்சலித்தவன்
மெலிவானவேளையை நோக்கி-மார்பிற்
பதித்தகவசமும்வில்லையும்போக்குவாய்
பார்த்திடுவார்தேவர் சாக்கி-ஆக
கூற்றுவன்போல்அம்பு தாக்கி-எல்லாம்
தோற்றிடவேஒண்டிஆக்கிஉயிரைப்போக்கிவெட்டித்தூக்கி-அடா [டா
தம்பிலட்சுமணா

௨. ஆசைநிகும்பலைவேள்விமுடிந்தாற்பின்
ஆராலும்வெல்லக்கூ டாதே.ஒரு
கேசரிபோற்படையோடும்போய்அத்தைக்
கெடுத்திடுவாய்வேளை ஈதே-அந்த
நீசன்ஆனவன்பிரம்மாஸ்திரம்தொட்டால்
நீயும்பிரம்மாஸ்ரம்தொ டாதே-கயிலை
ஈசன்சூலமும் சக்கரமும்இவை
ரண்டையும்போடதின் மீதே-அது
துண்டுதுண்டாகுமதப் பாதே-அவன்
சண்டைஎல்லாம்வெறுஞ்சூதே மலைக்காதேஇப்போதே அடா
தம்பிலட்சுமணா.

௩. மந்திரவாள்இது இந்திரன்கையினில்
வச்சிரத்தையும்செய்யும் தீங்கு-பார்
இந்தவில்அந்த மாயவன்வில்இத்தை
எதுவும்செய்யாது பொல்லாங்கு-என்று
அந்தநாளினிற்கும்பமுனிசொல்ல
அறிந்தாய்நீ அல்லவோ ஆங்கு-இனி
வந்துநமக்குத்தருமம்தானேபிர
மாணம்என்றுகையில் வாங்கு-நான்
பூணும்கவசத்தைத் தாங்கு-அம்பறாத்
தூணிஇந்தாபிடித்தோங்கு-வென்றுநீங்குஇதேபாங்கு அடா
தம்பிலட்சுமணா.

இந்திரசித்தை அனுமார்பழித்தல்.

விருத்தம்.

படித்தார்ராமன்சொன்னபடி பாய்ந்தார்லட்சுமணன்முதலோர், அடித்தார்பிடித்தார்கரிபரித்தேர் அழித்தார்கழித்தார் அரக்கர்உயிர், குடித்தார்கடித்தார்யாகத்தைக் குலைத்தார்கலைத்தார்கொக்கரித்தார், இடித்தார்வரிவில்இந்திரசித்தை இருப்பான்அனுமான்பழிப்பானே.

ருகூ-தரு-சங்கராபரணராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இந்திரசித்தேஉன் தன்-தந்திரவித்தைகள் எல்லலாம்-எண்டா
புறப்படடா

அநுபல்லவி.

உந்தன்நிகும்பலையில் ஒளித்துச்செய்கிருய்பூசை
ஒளிக்கும்செவகனுக்கு முகத்தில்வண்டாமீசை—இந்

சரணங்கள்.

க. முந்தஎன்தாயைப்போல் ஒருத்தியைக்கொன்ருயே
முடிக்காஅயோத்திமேல் நடக்கிறேன்என்ருயே
பந்தல்அலைந்தவனே நீயும்சென்ருயோ
பரதனை வென்ருயோ
அந்தராவணனுக்கு வந்தலச்சையீதோ
அங்கத்தைக்கொண்டுபோய் ஆற்றில்அலசொண்ணுதோ
வந்துநாணிக்கொள்ள பஞ்சமோகயிறு
வாளுள்வைக்கவேணுமோ சாண்அல்லவோவயிறு—இ

உ. விடுக்கும்வச்சிராயுதம் முனைவேலாயுதம்
விஷ்ணுசக்கராயுதம் சிவன்சூலாயுதம்
எடுக்கும்நாகபாசம் பிரம்மாஸ்திரத்தோடு
எதைவேணும் உதைப்போடு
திடுக்கிடவினைசெய்யும் உங்களுக்கேநாசம்
செத்தவனேஎங்க ளுக்குண்டோடாமோசம்
அடுக்களைபூனைபோல் இடுக்கிலேசுழிக்கிருய்
ஆடெடுத்தகள்ளன் போலேமுழிக்கிருய்—இ

ங. நிறைகடல்போலஉன் சேனைகள்களமேலே
நேராகவிழுந்தத்தைப் பாரடாகண்ணுலே
பரபரப்பிலேநிகும் பலையாகம்போச்சே
பாழும்சுடலை ஆச்சே
கறுவிநமனும்வந்து குறுகிக்கொண்டான்உன்னை
காலம்முடிந்ததினி மேலெனன்னடாமுன்னே
சிறைபட்டஇந்திரனும் குறைவிட்டுத்தழைக்கிருன்
செல்வலட்சுமணன்இதோ கொல்லவந்தழைக்கிருன்—இ

இந்திரசித்துக்கும் லட்சுமணனுக்கும் மூன்றுமுறையுத்தம்.

விருத்தம்.

மாருதி இவ்வாறுதவனைந்தராட்சதரும்சேனை
வீரவானரரும்சண்டைவிளைத்திட்டரர் இந்திரசித்தன்
தேரினில்ஏறிக்கொண்டான்சிலைகொண்டான் தம்பிதானும்
மாருதிமேற்கொண்டம்புவருஷித்தான்கருஷித்தானே

கூ௰ · தரு-கலியாணிராகம்-ரூபகதாளம்.

பல்லவி.

அஸ்திரம்வருஷம்தம்பி பொழிந்தானே-நிகும்பலையிலே இந்திர
சித்தன்படைகள்போ யொழிந்தானே

அநுபல்லவி.

வைத்தசமித்தும் பிணமும்எரிபட மந்திரபூரணகும்பம்நெரிபட
எத்தி அதில்எழும் தேரும்சிதைபட எருமையின்கூட்டங்கள்எ
ரத்தம்எழுந்திட சுற்றம்விழுந்திட [ல்லாம்வதைபட
யாகம்கலைந்திட யூகம்குலைந்திட-அஸ்திர

சரணங்கள்.

க. தேரில்அரக்கன்ஏறிஅனுமானை
சிலகணையாற்களை செய்தான்
நேரில்எழுந்தஅனுமான்புயம்தம்பி
நின்றுகணைசில பெய்தான்
சூரியவளிகளால்அரக்கன் அந்த
குரங்குபடைசிந்த அடித்தான்
வாரிஅம்பால்தம்பிஅரக்கன்சேனையை
மண்ணோடுமண்ஆக மடித்தான் தேர்
வலமகொண்டுசுற்ற அனுமான் இடம்கொண்டுதத்த அவன்தேர்
வானில்உலாவ அனுமான்விடேன்என்றுதாவஇருவர்கை
வாழிநெடுங்கணை எங்கும்நிறைந்திட
மலைகள்எல்லாம்வெந்து நீறாய் இறைந்திட
ஏழுகடல்நீரும் வற்றிக்குறைபட
எட்டுத்திக்கும்தெரி யாமல்மறைபட

எங்கும்புகைமுட்ட எங்கும்அனல்கொட்ட
இரவுபகல்ஆக நிருதன்மனம்நோக (அஸ்தி)

௨. இளையான்மேற்பின்னும்அரக்கன்சீறி
இருபத்தைந்துகணை விடுத்தான்
தொளையால்வன்மார்பும்கவசமும்தம்பி
தொளைத்தோடஓர்கணை தொடுத்தான்
களைஆய்அவன்அனுமான்மேலேரத்தம்
காணச்சிலகணை விதைத்தான்
வளையாவரும்அனுமான்அவன்தேரினை
மளுக்கென்றொடியவே உதைத்தான் அவன்
மற்றொன்றில்ஏறிஜயன்மேலேபத்தம்பைத்தூறிவிடத்தம்பி
வடிக்கணைசிந்தி அவன்அதைத்தடுக்காமல்முந்தி பொட்டஅ
மந்தாரத்தோளைஓர் அம்பல்தொளைசெய்ய [வன்
மற்றோர்அம்பால்அவன் தேரைவிழக்கொய்ய
நொந்தரக்கன்ரத்தம் கக்கிஅவசத்தில்
நூறுபத்தம்பெய்யத் தம்பிகவசத்தில்
நுழையாமலேவிண்டு பழுதாய்விடக்கண்டு
நுங்கிஅவன்பிந்த எங்கும்தனைகைமுந்த(அஸ்திர)

௩. சிந்தச்சிலகணை அரக்கன்பின்னும்அந்தச்
சேவகன்மார்பினில் தூற்றினன்
புந்திமகிழ்தம்பிஅரக்கன்மணிநெற்றி
புதையச்சிலகணை ஏற்றினன்
இந்தவில்அந்தமாயவன்வில்இவன்
ஈசன்ஆம்என்றவன் கூசினன்
அந்தவேளைவிபீஷணன்தம்பியை
ஆரக்கன்மேல்முடுகென்று பேசினன்-அவன்[அவன்
அக்கினிஅஸ்திரம் விடத்தம்பிஅக்கினிஅஸ்திரம்விட்டே
ஆதித்தன்அஸ்திரம்விடத்தம்பிஆதித்தன் அஸ்திரம்வி
ஆகபின்னும்சில அம்பைப்பொழிந்திட[விட்டேன்விசை
அணிஅணியாய்நின்ற தேர்கள்அழிந்திட
ஏகத்தில்வந்த கெசங்கள்படிந்திட
ராட்சதவிரர்கள் ஆரும்மடிந்திட
இற்றதுண்டங்களும் அற்றமுண்டங்களும்
லங்கையில்போய்விழ மங்கையர்கண்டழ (அஸ்தி)

௪. ஆரணன்அஸ்திரம்அவன்விடசிவன்
ஆயுதத்தாலதம்பி கொய்தான்

காரணன்ரூலநந்தை அவன்விடத்தம்பி
கைச்சூலத்தாற்பொடி செய்தான்
நாரணன் அஸ்திரம்தொட்டரக்கன்எங்கும்
நடுங்கிடவேஎய் தோங்கினன்
போரினில்தம்பியை அதுவலஞ்செய்து
போகக்கண்டேபயந் தேங்கினன்-தன்[செய்த
புத்தியுங்கெட்டான் தனக்குள்ளசத்தியும்விட்டான்- தம்பி
போரையும்பார்த்தான் ஓடி ஒளிக்கஊரையும்பார்த்தான்
போக்கிடம்இல்லாது பார்த்துமெலிபட்ட[அதுக்கும்
போதினிலேஅந்தப் பாதகன்மேற்போட்ட
வாக்கிஐயன் அம்பு போடக்களை பட்டு
மார்பும்கரங்களும் தோளும்தொளை பட்டு
வல்அரக்கன் பட்சம் எல்லாம்ஒருலட்சம்
சல்லடைக்கண் ஆகச் சில்லிகள் ஆய்ப்போக(அஸ்தி)

இந்திரசித்துவிபீஷணரை வயிற்றெரிச்சலால்ஏசல்.

விருத்தம்.

சில்லிகளாய்ப்போன இந்திரசித்தனவன் அழிந்தவொருதேர் மேல்நின்றே, கல்லின்மழைஎன அம்புபொழிந்தங்கேவிடணனை க்கண்டன்எம்மைக், கொல்லநிகும்பலைகெடுத்தாய் அரக்கர்குல த்தையும்கெடுத்தாய்கோளினாலே, எல்லாவரையும்கெடுத்தாய் என்றுவசைபேசுவான்ஏசுவானே.

சூக-தரு-பைரவிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.


சிற்றப்பாநீதான்-இந்தனை அபகீர்த்தி-பெற்றதேபோதும்அடா

அநுபல்லவி.

சத்தியவிபீஷணன்என்றெடுத்தா யே-பேர்நான்
சமைத்தநிகும்பலையும் கெடுத்தாயே
வற்றல்மனிதர்களாய்ப் போனயே-ஐயோ
வளர்த்தகிடாக்கையில் - பாய்ந்தாப்போல்ஆனயே(சி)

சரணங்கள்.

௧. வினயம்சொல்விமாயப்பூனைவேஷம்கொண்டாய்
வேருடனேஎங்களைக் கெல்லவோ-நாகங்கள்



இந்திரசித்தும் லட்சுமணனும்தம்மிலுள்ளயுத்தத்தில் இந்திரசித்துவிபிஷணரை வயிற்றெரிச்சலால்ஏசல்.

அனைவரும்இறந்தபின் ஒரான்காணியா
அரசாளலங்கையிற் செல்லவோ
தினமும்ஒருகலத்தில்உண்டும்இப்படிச்சதி
செய்தபாவம்நிரச் சொல்லவோ-அற்ப
மனிதர்க்கும்பஞ்சைஆய்ப்பணியும்செய்கிருய்உயிர்
வைத்திருக்கிறதிலும் செத்தாற்குணம்அல்லவோ (சிற்)

உ. மாடுமேய்க்கிறப்போலே தடிகொண்டுதிரிகிருய்
மானமும்லச்சையும் துறந்தாயோ-இனி
சூடும்முடிபெற்றாலும் சின்னமனிதாக்குநீ
தொண்டன் அல்லால்என்ன சிறந்தாயோ
தேடிநம்மைவணங்கும் பேரைநாம்வணங்கினல்
சின்னத்தனம்என்பதை மறந்தாயோ-உன்னுடன்
கூடப்பிறந்தவனைக்கொல்என்றுகோட்சொல்லி
குடிகெடுக்கவென்றிந்த குலத்தினிற்பிறந்தாயே (சிற்)

ந. பார்ஆளலாம்என்று மனப்பால்குடிக்கிருய்
பஞ்சைஉன்னல்அது தள்ளுமோ-இந்த
ஊரில்வாராதுக்குவழிஇட்டாயேஉனக்
கொருக்காலும்வசைஇது விள்ளுமோ
நீர்உள்ளமட்டுக்கும் மீனும்துள்ளும்அந்த
நீர்போனல்மீன்என்ன துள்ளுமோ-வெகு
பேர்ஆம்ரட்சதர்எல்லாம் போய்நீஒருத்தனும
பிணந்தின்னிப்பூச்சிபோல் இருந்தாற்கனம்கொள்ளுமோ (சி)

விபீஷணர் இந்தரசித்துக்குஎதிர்மொழிதல்.

விருத்தம்.

எல்லாம்மூடன்இந்திரசித்தன் இவ்வாறுரைக்கஉரைத்ததெல்லாம், செல்லாதடடாதருமமும்சத்தியமும் நானேகைக்கொண்டேன், பொல்லாய்ப்பாவம்கைக்கொண்டாய்போவாய்உருண்டுபோவாய்என், றல்லார்மேனிவிபீஷணன்வச் சரைப்பான்மறுசொல்உரைப்பானே.

கூஉ தரு-புன்னுகவராளிராகம்-அடதாளாப்பு.

பல்லவி.

துஷ்டப்பயலே-இந்திரசித்தேஎன்ன-சொன்னுய்அடாப்பயலே

அநுபல்லவி.

இஷ்டம்ஆம்எனக்கு ராமன்பதமேசொந்தம்
எனக்கும்உங்களுக்கும்இனிமேலஎன்னடாதொந்தம்—து

சரணங்கள்.

க. மன்னர்ஆகிமுன்பின்தர்மம்துணை அல்லாமல்
வாழ்ந்தவர் எவர்தாமோ
தன்னிலேகுதிக்கிறாய் பாவம்சாம்அல்லாமல்
தர்மம்என் பதுசாமோ
கன்னிச்சீதைஅன்னை சிறைஇருந்தழுகிற
கண்ணீர்சும்மாப் போமா
அன்னியஸ்திரிபுண்ணியஸ்திரி என்றெண்ணிப்பாராமல்
அபகீர்த்தியம்செய்யுமஉங்கள்முகத்தில்விழிக்கல்ஆமோ—து

உ. சிந்தைவஞ்சனைசெய்யேன்புலைசெய்யேன்குலைசெய்யேன்
தெய்வம்என்னை ஒறுக்குமோ
அந்தப்புத்திஉஙகளுக் கிருந்தால்வரவர
ஆதிக்கமும் சிறுக்குமோ
என்தாய்சீதைமேல் ஆசைஉன்அப்பனுக்கு
இன்னம்தான் வெறுக்குமோ
இந்தபுத்தியினாலே இலங்கைச்செல்வம்எல்லாம்
இழக்கலாச்சேகாய்க்குமுழுத்தேங்காய்பொறுக்குமோ—து

ஈ. கொடும்பாவம்என்ன செய்தேனோநான்உங்கள்
குலத்தில்வந்தூடம் பெடுத்தேன்
கடந்துபோகவேண்டிஉங்களைக்கடலிலே
கையைக்கழுவி விடுத்தேன்
மடங்காராவணனுக்கு எத்தனைபுத்திகள்
வகைமணியாத் தொடுத்தேன்
அடங்காப்பாம்புக்குராசா மூங்கில்தடி
ஆம்என்றவனைவிட்டு ராமன்தன்னை அடுத்தேன்—துஷ்

இந்திரசித்து தகப்பனுடன் முறைபடுதல்.

விருத்தம்.

எதிர்கொண்டிவ்வார்த்தைசொன்ன வீடணன்மேல்அம்பொ
ன்றெய்தான்அத்தைக், கதிகொண்டதம்பிகொய்தான்வேலெப்

தானை அதனையும் அக்கணத்திற்கொய்தான், முதிர்கொண்டகோபமுடன் கெர்ச்சனை இட்டொளித்திலங்கை மூதூர்சேர்ந்தான், குதிகொண்டான் அப்பன்முன்னே முறைபட்டான் இந்திரசித் தன்குறைபட்டானே.

௯௩. தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்

பல்லவி.

அய்யா ராவணா-என்னால்சண்டை-ஆகாதாகாதையா

அநுபல்லவி.

கொய் ஆம்பலி தன் கை அம்புகளாலே
கொங்கே தனே ஒளித்தோடி வந்தேனே இனிமேல்—அய்

சரணங்கள்.

க. வட்டவார்உலகில் தம்பிபிறக்கத்தகை
மட்டம் ஆச்சுதேன்பார் எனக்கே அந்தத்துறை
கிட்டிஉன் தம்பிஎன் வேழ்வியைத்தடுத்தானே
கெடுத்தான் கெடுத்தானே
திட்டம் ஆனதொரு பிரம்பாஸ்திரம் பாட்டும
சிவன்படையுடனேகேசவனபடைதன்னைவிட்டும்
குட்டிக்கரணம்போட் டென்றமேல ஆனமட்டும்
குதித்தும்குடத்தில்இட்ட விளக்காச்சேனன்னபட்டும்-அ

௨. ஆரும்அறிவா ரேஎன்னசைவில்லை
ஆண்டவன்காரியத்தில் சற்றும்வஞ்சனை இல்லை
தாராளமா அடிக்கடி போராய்நின்றேன்
சகலபேரை யும்கொன்றேன்
வாரா உயிர்வந்து வந்துகிளைக்கிறார்
வறுத்தபயறெழுந்து முளைத்தாற்போல்முளைக்கிறார்
தீராப்பழிகொண்டோம் ஆரைவிட்டது சனி
தெய்வபலமும்இல்லை செய்வதுண்டோ இனி—அய்

௩. நீதி ஆகநாம்என் ன்செல்வம்செருக்கிறோம்
நீயும்நானும் அல்லோ தப்பி இருக்கிறோம்
ஏதோபலம் வரவர அடங்குதே
எடுத்த அடி மடங்குதே

ஆதலால் அவர் முன்னென்றுகெல்லாம்விட்டுப்போட்டேன்
அங்கேஇன்னம்போனால் இங்கேநான்வரமாட்டேன்
சீதையைவிடுவது காரியம் அப்பால் உன்தன்
சித்தத்துக்குச்சரிப் போனபடிஎன்தன்—அய்

இந்திரசித்தைராவணன்உதாசனித்தல்.

விருத்தம்.

இனம்கொண்டிப்படிதன்பிள்ளை-இசைத்ததைஇலங்கைவேந்தன், கனம்கொண்ட தனல்வாய்நெய்யைக்-கவிழ்த்ததுபோலேகொண்டான், மனம்கொண்டபயத்தாற்சொன்னாய்-மனிதரோர்பொருட்டோஎன்னச், சினங்கொண்டே இந்திரசித்தை சீறுவான்கூறுவானே.

கூசதரு-நாதநாமக்கிரியை-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

என்னபுத்திசொன்னாய்-அடா-இந்திரசித்தேநீ
என்னபுத்திசொன்னாய்-அடா

அநுபல்லவி.

என்னபுத்திசொன்னாய்நீ சின்னமனிதர்க்கஞ்சி
என்னுடனே முறையிட்டாயே-பயப்
பட்டாயே-நீ
கெட்டாயே—என்னபு

சரணங்கள்.

க. ஆறணும்உமையவள்கோன் ஆளும்கயிலையை
மேனாளில்எடுத்தகைத் தலம்போச்சோ
நானுசெய்வதற்குநீ தானுபயலேநீ
போனாலும்என்னஎன் குலம்போச்சோ-படைக்
கலம்போச்சோ மூல
பலம்போச்சோ—என்னபு

உ. சோருவேனோமனிதர்ஈர்உயிரையும் அடி
வேருடனேகல்லிப் பறியாமல்

* திரும்போதும்ராமன்பேரும்என்பேரும்எல்
லாரும்சொல்லிக்கொள்வாரே பிறியாமல்-இத்தை
அறியாமல்-முன்பின்
குறியாமல்—என்னபு

௬. செயம்ஆனகீர்த்தியைமுயலாமல்மனிதர்க்குப்
பயம்ஆய்அபகீர்த்தியைத் தொடுவேனே
கையில்ஆகாதவன்போலே மயில்போலும்சீதையை
உயிரோடேநான்இனி விடுவேனே-முது
கிடுவேனே-சும்மாய்ப்
படுவேனே—என்னபு

நாலாமுறையுத்தத்தில்இந்திரசித்தன்வதை.

விருத்தம்.

தவறுபடாதிடிக்கும்ஒருத்தலைவலிக்குத்
தலையணையைமாற்றிபபோட்டாற்போமோஎன்
உவமைஇதுஎன்மகன்வார்த்தையைக்கேளாமல்
உறுமும்இராவணனைவிட்டான்ஊரைவிட்டான்
கவனமொடாயிரம்குதிரைகொண்டதேர்மேற்
கடற்படையும்தானும்போர்க்களத்தில்வந்தான்
பவன்எனும்சுமனன் அம்புபாயப்பாயப்
பாய்ந்திட்டான்இந்திரசித்துமாய்ந்திட்டானே

௯௫-தரு-கலியாணிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

விழுந்தானே-இந்திரசித்தன்-ஒழிந்தானேமண்மேல்

அநுபல்லவி.

இழந்திட்டோம்இலங்கையை என்மனம்பின்டுபின்டு
அழுந்தத்தழுவிஅப்பன் ஆசையைவிண்டுவிண்டு
எழும்பிப்பரிகளாயிம் கொண்டதேர்மேற்கொண்டு
குழந்தைத்தம்பிகைஅம்பாற் கிழிந்திட்டுவதைஉண்டு—விழுந்

சரணங்கள்.

க. நிறையக்கணைதொடுத்தார் இரண்டுபேர்களும்
நெறநெறன்றுசொரி மழைபோலே

*இதைஇரட்டித்துப்பாடும்போது-நான-என்றுமுதலிலே
கூட்டிப்பாடிகொள்ளவும்.

பிறகவன்தேரையும் சாரதிதலையையும
  பிளந்தானே தம்பி   அதன்மேலே
உறுதியா அரக்கன் கல்லின்மழைபொழிய
  உருண்டதே குரங்குகள்   ஒருக்காலே
கறுவி இளையவன் ஒருகணைவிட அந்தக்
  கணைவந்தரக்கன்மேற்   படலாலே
மறையும்கவசம்பிளந்   துடம்படங்கலும்தைத்து
  வடிக்கணை ஒன்றால் அவன்   விடும்சிவன் சூலம் இற்று
பிறையைபாம்புதொட்டுத்   தரையில்விழுவதொத்து
  பிடித்தவில்லுடன் அவன் இடக்கையும்கூட அற்று—விழு

உ. வளர்த்ததாயாரும் பெண்களும் இலங்கையில்
  வாய்விட்டழுதுகண்   ணீர்வடிக்க
இளைப்பிலா இலைசவந்ததென்றுபேய்
  எழும்பிஎழும்பிக்கொண்   டானஅடிக்க
ஒளித்திருட்டரக்கன் வருகிறான்என்றுதேர்
  ஓசைகொண்டுதேவர்   கிலிபிடிக்க
கிளைத்தமலைபோலே ஆகாசத்தில்வந்து
  கெர்ச்சித்தானே அண்ட   மும்வெடிக்க
செளைப்பில்லாமல்வரும்   சேனைகளை எட்டு
  திக்கிலும்லட்சுமணன்   கைக்கிரைஆகவிட்டு
குளத்தைக்குழப்பிஅங்கே   பருந்துக்கிரையிட்டு
  கொடுத்தாற்போல் அரக்கரைக்குரங்குக்கே இட்டுப்பட்டு—வி

உ. நித்தியம்ஆவதுவேதவிதிவச
  னத்திலேசொல்லும   பொருள்ஒன்று
சித்திஆவதுவேதியரைத்தெரி
  சித்துவருகிற   தேநன்று
கர்த்தன்ஆம்ரகுராமனேபர
  தத்துவம்ஆமஅவன்   வேறன்று
* சத்தியம்எனில்இந்திரசித்தன்தலைநிமி
  ஷத்திலேகொண்டு   வாவென்று
அர்த்தசந்திரபாணம்   அய்யன்தொடுத்தாற்போலே
  அற்றதேஅவன்தலை   எற்றிவிடுத்தாற்போலே
தத்துவமுனிவர்க்கெல்லாம்   வெற்றிகொடுத்தாற்போலே
  தளரும்இந்திராதியர்க்குக் களைஎடுத்தாற்போலே—விழு

---

* இதைஇரட்டித்துப்பாடும்போது இவை என்றுமுதலி லேகூட்டிப்பாடிக்கொள்ளவும்.

இந்திரசித்துவதை இராவணன்கேட்ட இடத்திலே புலம்பல்.

விருத்தம்.

இந்திரசித்தன் இந்தவிதம்விழுந்தான்தேவர்
இரக்கத்தால்குரங்கினத்தார்எழுந்தார்தம்பி
வந்தனுமானுடன்போனன் சாமிகாலில்
வல்அரக்கன்தலைதனை அங்கதனும்வைத்தான்
தொந்தவிபீஷணனைஐயன் மகிழ்ந்தான் அப்பால்
தூதர்இராவணர்க்குப்போய்ச் சொன்னார்சொல்லப்
பந்தம்எரிந்தாற்போலமகனைஎண்ணிப்
பத்துவாயாலும்அவன் கத்துவானே

௰௧-திபதை ஆனந்தபைரவிராகம்ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. மந்திரியேஎன்துரையே-மகனே மகனேஎன்பான்ஒருவா [யால்
இந்திரசித்தேஇந்திரசித்தே-என்று இரைந்தழுவான்ஒருவா [யால்
௨. இகத்தில்என்னைத்தவிக்கவிட்டுநீயும்இறந்தாயே என்பான் [ஒருவாயால்
முகத்தைஇனிகாண்பதெப்போதே என்றுமுறையிடுவான்ஒ ருவாயால் [ரலை
௩. பனிவாழைக்கனிதனிலே-முள்ளுபாய்ந்ததுபோலேமகனே
மனிதன்அம்புகள்பாய்ந்ததோஉன்தன் மார்பில்என்பான்ஒரு [வாயால்
௪. பரம்சேர்இந்திரன்முடிமேல்-மகனே பறித்தணிந்தமணிமா
நரன்காலில்விழஆச்சோ-இந்தநாளில்என்பான்ஒருவாயால் [லை
௫ துள்ளும்முசலாலேசிங்கம்பெருந்துரவில்விழுந்ததுபோலே
பிள்ளைமனிதன்கைஅம்பாற்பட்டுப் பிரண்டாயோஎன்பானொ [ருவாயால்
௬. ஈசன்முதலோர்படைகளும்உமி எனப்போமேஉன்னைக்கா
ல, பாசமதுதீண்டிடுமோ-இப்போ பதறிஎன்பான்ஒருவாயால்
௭. அரனையும்மாயனையும்வென்றுதிக்கில் அஷ்டகெசங்களையும்
வென்று [ால்
நரனுக்குத்தோற்றிடலாச்சோ இந்தநாளில்என்பான்ஒருவாய
௮. மலைகலங்கினலும்சற்றேஉந்தன் மனதுகலங்காயேமகனே
நிலைகலங்கிவிழுந்தாயே-இந்த நிலத்தில்என்பான்ஒருவாயால்

இந்திரசித்துகாகரர்வணன்ரணகளத்திலேபுலம்பல்

விருத்தம்

என்றழுதுகளம்பார்க்க நடந்தான்பிள்ளை
இடதுகையும்வில்லும அற்றுகிடக்கக்கண்டான்
சென்றெடுத்தான்முண்டம்ஆம உடம்பைக்கண்டான்
சிரம்காணுன் இரங்கினுன்உலகம்மூன்றும்
வென்றநான் இந்தஅலங்கோலமபார்க்க
விதித்தாயோஎன்மகனே மகனேஎன்று
கன்றிழந்தபசப்போல வடிவைவிட்டு
கதறினுன்ராவணனும் பதறினுனே

கூகூ தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மகனே இந்திரசித்தேநான்-இனி-மனதெப்படி துணிவேன்

அநுபல்லவி.

இகம்மேல்நான்ஒரு பெண்ஆசையைத்தொட்டும்
என்உயிர்க்குயிரான உன்னைஇழந்துவிட்டு—மகனே

சரணங்கள்.

க. வனமான்ஒருபுலியை அடித்தாற்போல
மனிதன்உன்னைஅடிக்க விடுத்தேனே
கனமும்துரைத்தனமும் தரும்உன்னைஎன் இரு
கண்பறிகொடுத்தாற்போற் கொடுத்தேனே
மனிதன்நாளைச்சண்டை இனிஎன்னைமாட்டுவானே
மயங்கியகமனும்சைச் சங்கிலி ஆட்டுவானே
இனிமேல்இந்திரனும்எனைகாப்பு காட்டுவானே
இலங்கையிற்சூரியன்தேரைக்கலங்காமல்ஓட்டுவானே—ம.

உ. நாற்றிசையிலும்உந்தன் கூற்றிமார்அழக்கண்டு
நானும்அழுதுதத் தளிப்பேனே
சித்தியாம்சிவனுக்கும்மாயனுக்கும்பயந்து
திருடன்போலேநுனி ஒளிப்பேனே

பார்த்தால்இனி இந்த லங்கைத்தேருவாரே
பரியாசம்செய்தென்னைத் துரைஎன்றுமருவாரே
பேர்த்தெவருமவனை வார்த்தைகள்தருவாரோ
பெண்டுகள்கூட இனி சண்டைக்குவருவாரே—மகனே

ங. பயம்தானும்குரங்கினில்ஒன்றும்செத்ததில்லையே
படுகளத்தினில்நீயே செத்தாயே
நயமானஎனக்குநீ செய்யும்உத்தரிமையை
நானேஉனக்குச்செய்ய வைத்தாயே
உயிரோடேமனிதன் கையில்விழுந்தபேச்சே
உலகம்உள்ளமட்டுக்கும் தொலையாதஇதுவச்சே
வயிறும்குடலும்பற்றி மண்டிஎரியலாச்சே
வல்லமையும்செல்வமும் எல்லாம்உன்னோடேபோச்சே()

இந்திரசித்துக்காக மண்டோதரிபுலம்பல்.

விருத்தம்.

எடுத்திந்தவண்ணம்போர்களத்தினுள்ளே
ராவணனும்அழுதுமகன்உடலைக்கொண்டு
தடுக்கரிய அரமனையில்வந்துசேர்ந்தான்
தாய்மண்டோதரிஅறிந்தாள் அவன்கால்வீழ்ந்து
கெடுத்தாயோமகனேஎன்றெருப்பாரிசொன்னாள்
கெடகெடென்றுபிரண்டாள்பின்மகன்மேல்வீழ்ந்தாள்
அடுத்தமகன்உடலைத்தன்கண்ணீராலே
அலம்பினாள்பதைபதைத்துப்புலம்பினாளே

௬எ-தரு-ஆகிரிராகம்-அடதாளசாப்பு.


பல்லவி.

ஐயையோமகனே-இனிஎன்செய்வேன்-ஐயையோமகனே

சரணங்கள்.

க. கைஇருபதுள்ளஉன்தன் ஐயனைப்போல்மூஉலகும்
மெய்மைஆகநீ அரசு-செய்குவான்என்றிருந்தேனே—ஐயை

உ. குழந்தைஆய்பிறந்தஅன்றுன்-அழும்குரல்கேட்டிடும்மேகம்
மழுங்கியேயடுங்கிமண்மேல்-விழுந்தகீர்த்தியும்பாழாச்சே ()



இந்திரசித்துக்காக மண்டோதரிபுலம்புதலும் சீதையைவெட்
டநடந்த இராவணனை மகோதரன் தடுத்தலும்.

௩. தன்னிகரொன்றும்இல்லாத-உன்னை இவ்வுலகத்தில்ஓர்
சின்னமனிதன்கொல்லவோ-என்னபாவம்பண்ணினேனோ ( )

௪. அம்புலிவாளன்னைவந்து-கும்பிட்டவன்மேல்மழுவை
வழிபிதென்றுரைக்கும்உந்தன்-தெண்மையான்என்றுகாண் [பேனோ

௫. கண்ணேஎன்குருகுலமேமண்ணோடேமண் ஆறுபோ
பெண்ணாலேகெட்டகுடியாப்பண்ணிவிட்டானேஉன் அப்பன்

௬. காட்டுச்சிங்கக்குட்டிகளைக் கூட்டிநீபிடித்துச்சண்டை
மூட்டும்உன்னுடையவிளை-யாட்டைஎன்றக்குக்காண்போனே

௭. சின்னஞ்சிறுவயதினில்-இன்னபடி ஆவாய்என்று
என்மாப்பாவிபிரம்மன்-தன்கைஎழுத்தைஇட்டானோ—ஐயை

௮. அந்தரம்கிட்டியே அந்த-இந்திரனைகட்டியே அன்றுன்
தந்தைமுன்விட்டையே இன்று-என்தனைதெருவில்விட்டையே-

௯. கோளும்குண்டுணிபேச்சும்-நாளும்சொல்லிஉன் அத்தை
ஆளும்பிள்ளையைக்கொல்ல-மூளுவித்தாளேயோர்பாவி-ஐயை

௰. இரக்கம்ஆய்உன்தேவியர்ஆய் அரக்கியர்கூடிவந்திங்கே
உரக்கஅழுதும்உன்முகம்-பரக்கநீகாட்டாதேனோ—ஐயை

௰௧ ஒக்கலையும்மக்களையும்-தக்காமலேசெய்தென்நாளும்
மக்கிமணம்குலைந்தான்-வெட்கவைத்தானேஉன்அப்பன் ( )

௰௨. இச்சகம்பேசுவோர்வார்த்தை-மெச்சியேஉன் அப்பன்எந்த
மச்சுனர்சொன்னவார்த்தையைத்-துச்சம்ஆகமதித்தானே ( )

௰௩. வீரியம்இல்லாமனிதன்செய்-போரில்நீவிழுந்ததுமக
மேருவும்வாயுவினாலே-வேரற்றுவிழுந்தாற்போலாச்சே.-ஐ

௰௪. தாதிசெய்துசீதையைவிடத் ததிஇதென்றுநீசொல்லியும்
விதிவழியிலேஉன் அப்பன்-மதிபேச்சுகேளென்செய்வேன் ( )

௰௫. ஒப்பில்லாசீதையாலேநீ- இப்படிமடிந்தபோது உன்
அப்பன்ஆர்உயிரும்நாளை-எப்படி ஆமோ அறியேன் —ஐயை

௰௬. பெருகும்உன் துயர்நாளை-வருதுயரும்தனையும்எண்ணி
இருதலைக்கொள்ளியில்எறும்-புகுதல்போலானேனே—ஐ

சீதையைவிட்டு நடந்தராவணனைமகோதரன்தடுத்த

விருத்தம்.

தொடுத்துமண்டோதரிபுலம்பும் வாக்கியமெல்லாம்
சுருக்கென்றுசுட்டிடலும் திடுக்கென்றங்கே
அடுத்திருந்த அரக்கன்மனம் கலங்கிமக்கள்
அனைவர்களும் அரக்கர்களும் மாண்டார் ஆசை
விடுத்தனென்சீதையே இனிமேற்சொல்லேனென்று
வெகுண்டுநடந்தான் அந்தவேளை இந்த
துடுக்காமோராவணா இதுபெண்பாவம்
சொல்லென்றான்மகோதரனும்நில்லென்றானே

௯ அதரு-ஆனந்தபைரவி-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

இந்தசனகிதன்னைக்-கண்டிக்கநடக்கிறாய்-ஏதையாராவணனே [பா

அநுபல்லவி.

சொந்தமகன்தலையைப் பந்துபோற்கொண்டுபோன
துஷ்டமனிதர்தம்மை விட்டுவிட்டேழையான—இ

சரணங்கள்.

௧. பொட்டானதேவர்களும் நெட்டகம்படிப்பாரே
புலஸ்தியன்குலத்துக்கோர் பழிகாட்டிஇடிப்பாரே
அஷ்டகெசமும்புத்தி கெட்டானென்றென்றேதா
அரனார்கைலாசமும் பரியாசம்பண்ணுதோ
கட்டானகாலகேயர் மேலனந்தவனை
கன்னிமேலேனிந்தால்குன்னம்சொல்லாரோநானே
முட்டாளும்கூடஉன்னைச் சட்டைதான்செய்வானே
மூன்றுலோகமும்கட்டி ஆண்டதிப்படிதானோ—இ

௨. முடுக்கில்இருந்-துகொண்டு துடிக்கிறாய்என்னசாரம்
மூன்கோன்மனிதரைமுனைகொண்டால்அல்லோவீரம்
அடுத்தாரைக்கெடுக்கிறாய் உன்னைப்போல் உண்டோஏழை
ஆயிரம்வேதம்கற்றும் நீயேகற்றறியேமோழை
பிடித்தகத்திஉறையில் அடக்கவேணும்என்சாமி
பெண்பழிகொண்டால் முனைபங்கம்சொல்லாதோபூமி

எடுப்பானபேருக்கெல்லாம் எடுப்பானதுஉன்மேலே
எய்தவனைநோகாமல் அம்பைநொந்ததுபோலே—இ

௩. அரியரிபிரம்மாதிகள் யாவர்க்கும்முதல்மூர்த்தி
ஆகியவனுக்கிது ஆகுமோஅபகீர்த்தி
பெருமையோசிறுமையோ பாரய்எனதுசொல்லை
பெண்மேற்கத்திஎடுத்த மன்னவர்எங்கும்இல்லை
தரும்ஒருகோபம்வந்து கிணற்றில்வீழ்ந்தால்ஆயிரம்
சந்தோஷம்வந்தாலும் எழும்பபோமோசரீரம்
நரைக்கெலிப்பாய்நாளை விருதுகளும்பூணுவாய்
நகரில்வருவாய்பிற கிவளைஎங்கேகணுவாய்—இ

தூதர்ராவணனுக்கு மூலபலத்தைவிவரித்தல்.

விருத்தம்.

அருந்துணை மந்திரி இந்தவாறுசொல்ல
அரக்கனும்வாள்விட்டெடயிந்தான்மகன்உடம்பை
பெருந்தயிலத்தோணிஇட்டான் அழைக்கப்போன
பெருமூலபலச்சேனைவரவுகேட்டான்
விரிந்தஅது அணிஅணியாய்போசட்டென்றான்
மென்மேலும்அதுபோகவந்ததூதர்
தெரிந்ததுசொல்வோம் சாமிகாதுக்குள்ளே
சேர்வன்றூர்வகைவகையாய்ப்பார்என்றாரே

௰உ திபதைசங்கரா பரணராகம் ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. தீராராவணவீரா விசையம்-சேர்இருபது தோளாய்
ஆராலும்சொல்லா-மூலபலம்இதை அறிந்ததுசொல்லக்கே
[ளாய்
௨. சாகத்தீவினில்உறைவார் இவர்-வேகத்தைஎவர்மொழிவார்
மேகத்தைக்கூடத் தாகத்தினாலே-நோகக்கைகொண்டுபிழிவார்

௩. குசைஎனும்பெருந்தீவோர்இவர்-விசயங்கொள் ஒருபேச்சு
வசனம்சொல்லவே-இசையும்தேவருக்கும் அசையுமோஒரு
மூச்சு [வோர்
௪. இறலித்தீவினில்உறைவோர்-உன் தன்முறைதப்பாமலேதிரி
திறமமிகக்கோர்இந்தத்துறைமுற்றும்சுற்றி மறலிக்கும்கொலைபு
[ரிவோர்

ரு. பவளத்தீவினைவிட்டோர் இவர்கவனத்தால்புறப்பட்டோர்
அவனிக்கேபெருந்திவலைப்பார்க்கடல்சுவறுக்கால்அடிஇட்டோ

சு மலயமாமலைத்தீவோர் இவர்-தொலையிலேநின்றும்வந்தோர்
சிலையினால்இந்திரன்-நிலையையுங்குலைகுலையவேவசைதந்தோர்

எ. இவர்கள்கிரவுஞ்சத்தீவோர் இவர்-எவரினும்பிரதாபர்
அவர்இவர்என்றும் பாரார்தாயே-ஆகிலும்கொல்லும்கோபர்

அ. கந்தமாதனகோளர் இவர்சொந்தமாம்படைஆளர்
அந்தகனுக்கும் அந்தகன்என்னவந்தபாவசண்டாளர்

கூ. புட்கரபெருந்தீவோர் இவர்.விக்கிரமம்என்னசெய்யார்
திக்கெசங்களை மற்கொடுங்கையில்-வைக்கிறஇவர்அய்யா

க0. இலவமாமரத்தீவோர் இவர்-கலகமேகற்றுப்படித்தோர்
மலையையும்கடல்-அலையையும்சேடன்தலையையும்தூக்கிப்பிடித்
[தோர்

சமர்த்துப்பேசினவன்னியைமாலியவான்இடித்தல்

விருத்தம்.

மதியுடன் இப்படிமூலபலத்தின்சேதி
வந்ததூதுவர்சொன்னார்அரக்கன்கேட்டான்
அதில்ஒருவன்வன்னிஎன்பான்சீதையாலே
அடைந்ததெல்லாம அறிந்தவர்ஆர்வலிஎன்என்ன
பதறிஅழும்நோயாளிமுகத்தின்முன்னே
பரிகாரிதலைமாட்டில்அழுகின்றாற்போல்
எதிர்இருந்தமாலியவான்வன்னிதன்னை
இடிக்கின்றான்பழமைசொல்லிப்படிக்கின்றானே

சுகூ-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வன்னியோசனைசெய்வதேதடா-அந்த
மானிடவரைவெல்லப்போகாதடா

அ.நுபல்லவி

உன்திடகெறுவத்தாலேஓதுகிறாய் சூதும்வாதும்
தென்னிலங்கைபட்டபாடுசென்மசென்மத்துக்குமபோதும் -வ

சரணங்கள்.

க. கோலமாரீசனும்மானைப்போலவே சென்றுகெட்டான்
சாலவேகானும்பொடிவேலை யினிலேபட்டான்
வாலியும்அவர்கைஅம்பினாலே உயிரைவிட்டான்
நீலவருணனும்ரத்தினமாலை தந்துகுப்பிட்டான்
மேல்என்னசானகிஎன்னும் விஷத்தில்நாம்தப்பலஆமோ
காலிலேசுற்றிபமாம்பு கடித்தால்ஒழியப்போமோ(வன்னி)

உ. பண்டுகும்பகர்னனையும் கண்டதுண்டம ஆக்கினர்
அண்டுஅதிகாயன்முடி பிண்டுவிழத் தாக்கினர்
கண்டகன்இந்திரசித்தன் மண்டைவிழத் தாக்கினர்
ஒண்டியெழிந்தோரைநமன் அண்டையிலே போக்கினர்
மண்டுகடல்வெந்ததங்கே வந்ததில்லையோநெருப்பு
மிண்டர்ஆம்அரக்கர்க்கினி மேலேஎன்னஇருப்பு(வன்னி)

ங. முத்தன்வில்ஒடித்தேபிர சித்தம்ஆன பேரடா
தத்திஒருகுரங்குகொ ளுத்தியதிவ் வூராடா
மற்றதுசஞ்சீவிதந்த வித்தைஎன்ன பாரடா
செத்தவர்பிழைத்தால்இனி வெற்றிகொள்வ தாரடா
இத்தலைஆயிரம்வெள்ளம் ராட்சதரும்அவராலே
புத்தில்ஈசல்போல்மடிந்து போனபிறகினிமேலே(வன்)

மூலபலம்கண்டுஒடினசாம்புவன்முதலோரைமறித்த

அங்கதனுக்குஅவன்கூறல்.

விருத்தம்.

அரக்கன்இந்தப்படிபாட்டன்வன்னிக்கோத
அதைமறுத்தான்மூலபலம்தன்னைவிட்டான்
கரைக்கடங்காததுவரக்கண்டஞ்சிஏங்கிச்
சாம்பன்முதல்அனைவரும்சாமியைவிட்டப்பால்
காக்கநினைந்தலைகடலைத்தாண்டிப்போனார்
காகுத்தன்அருளாலேஅப்போதந்த
குரக்கினத்தைஅங்கதன்போய்மறிப்பேன்என்று
கூடினான்சாம்பன்வுரையாடினனே

எ௰ தரு-புன்னாகவராளிராகம்-அடதாளாப்பு.

பல்லவி.

எங்களால்ஆகாதையா-மூலபலத்தின்-எதிர்நிற்கப்போகாதை
.[யா

அநுபல்லவி.

அங்கதாஉன்தர்மம்-எங்கள்மேலேயோவர்மம்
அரக்கர்க்கெங்களைக் கொடுக்கத்துடிக்கிறாய்
அருகினையப்பிடிதகுப் பருகிக்கடிக்கிறாய்—எங்க

சரணங்கள்

க. விளைக்குள் இந்திரசித்தம்பால்-பட்டபுண்கள் ஆறி
வேறேரத்தம்இன்னம் ஊறவும்இல்லையே
அனர்த்தகாலம்போற்கங்கு-கரைகாணாச்சேனைமேல்
அஞ்சாதேஅழைக்கிறாய் என்செய்வோம்கொலையே
தனுக்கையர் இருவரும்-அனுமானும்இவர்முன்னே
தரிக்கொள்வதேமெத்தப் பெரிதவர்நிலையே
பனித்தப்பஞ்சினிற்பாயும்-கனல்போல்எங்களைஅவர்
பாய்ந்துகொல்வார்என்று ஆராய்ந்துபார்க்கலையே
கனத்தகும்பகர்னனைத்தின்பான்ஒரு
அரக்கன்பொரிக்கறி போலும்
கணிதம்இவர்களுக்-குண்டோபெறுங்கடல்
மணலேயேஎண்ணி னாலும்
உனக்கென்னசிறு-பிள்ளைஆலோ
சனைக்குத்தெரியுமோ நாலும்
ஓட்டும்பாஷையும்-இட்டுத்தலைதொட்டென்
உயிர்க்குப்பிணைநீசொ ன்னாலும்—எங்க

உ. ஆனராவணன்தலை-பத்திவர்க்காயிரம்
ஐந்நூறுதலைகண்டோம் என்னென்னபோரோ
போனவாலியும்கால-நேமியும்மாலியும
பூச்சிபோல்இவர்க்கொரு மூச்சுக்காவாரோ
ஈனராகும்இவரை மூவரும்தூரநின்
றெட்டிப்பார்ப்பார்அல்லாமல்கிட்டிப்பார்ப்பாரோ
ஊனர்ஆகியகொஞ்ச வானரர்நாம்அந்த
தேவர்களிலும்பலம் ஆகியபேரோ

வனமா இந்தச்சேனை முன்விடுத்
தேன்குழக்கலிபோல் குழைக்கிறாய்
உற்றபேர்களைக்கெடுக்கவோ உந்தன்
சிற்றப்பனோடுநீ பிழைக்கிறாய்
ஆனமட்டும்பார்த்தோமே துரையே
ஏனோவீணிலே உழைக்கிறாய்
அறமுறுக்குகொண்டபிரிபோல் அற்றுவிட
அறியாப்புத்தியினாலே அழைக்கிறாய்—எங்க

௩. இவித்தான் அவர் எங்களைத்தொடாமல் அணையைப்போய்
இடிக்கிறோம் இதற்குநீ தடுத்துச்சொல்லாதே
சினத்தஎருதும்எருதும்போராடி நடுப்புல்லை
தேய்த்தாற்ப்போல் எங்களை ஏய்த்துக்கொல்லாதே
இனத்தோடேநாங்களெல் லாரும்போய் அவர் கையில்
இறக்குமட்டும் உனது பறப்புநில்லாதே
தனித்துத்தாய்வயற்றினில் செனிக்கையிலே இவர்
சதியும்யாயமும்கற்றோர் அதுவும் அல்லாதே
பனிப்பெருக்கிலேகப்பல் ஓட்டிட
நினைக்கிறாய்நீ சொன்ன
படிக்கிடக்குமோ குரங்குப்பிடியே
பிடிக்கிறாய்ப்பன்னப் பன்ன
அனுப்பினால் எழு பதுவெள்ளமும் ஒரு
வனுக்குப்போதுமோ தின்ன
அருந்தத்தழை உண்டு உறங்கமுழையுண்டு
அரக்கர் ஆண்டென்ன மனிதர் ஆண்டென்ன—எங்

அங்கதன் சாம்புவந்தனை இடித்தல்.

விருத்தம்.

இரங்கிச்சாம்பன்முதல் ஆனோர் இவ்வாறுரைக்கநீங்கள் என்ன
உரம்கெட்டீரோ படைக்கஞ்சிலுடல் ஆமோ சூரனுக்குத்
துரும்பத்தனையேசீவன் என்னச்சொல்வார் இலையோ வாரும் எ
ன்று, பரிந்தப்போதங்கதன் நீதி படிப்பான் சொல்லி இடிப்பா
[னே

எக. தரு-அசாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னகாரியம் எண்ணிநீர் சாம்பவரே நீர் என்னகாரியம்பண்ணி
நீர்

அநுபல்லவி.

தன்னவர்என்றும்மைச் சாமிசொன்னதும்போச்சே
சாமித்துரோகிஎன்று பூமிக்கும்பேர்ஆச்சே
பனனும்அங்கதன்என்சொல் எண்ணாமல்ஒதுங்கிறீர்
படைக்குப்பயந்திப்போது செடிக்குள்ளேபதுங்கிறீர்(எ)

சரணங்கள்.

க. பேய்த்தனம்ஆகவேஇகத்துக்கும்பரத்துக்கும்
பிரட்டன்என்றுசொல்லக் கேட்டீரே
பிராணன்போனால்என்னமானம்போகல்ஆமோநம்
பினபேரைப்போரிற்கை விட்டீரே
எற்றராமன்ஆதிமூர்த்திஎன்றறீரே
இங்கேஒளிக்கத்தலைப் பட்டீரே
இளங்கைஅல்லவோநீர்எல்லாம்தெரிந்திருந்தும்கா
டிப்பணியிற்கையை இட்டீரே
ஆத்திரமோஅவர்க்கென்ன உங்களைத்தொட்டு
அழிந்துவாலிஓர்அம்பால் விழுந்தானேதலைநட்டு
சாத்திரமோஒடல் ஆமோமுதுகிட்டு
சாகிறபேர்க்குச் சமுத்திரம்முழங்கால்மட்டும்—எ

உ. திடுக்கென்றுபோம்இந்தப்பாழுஞ்சரீரத்தைத்
திரம்என்றெவகேளண்ணைம் பெற்றீரே
சிவன்போனால்என்னகீர்த்தியும்உடன்போமோ
தெரியாமல்நினைவெல்லாம் செத்தீரே
அடுத்தபேரைகொல்லும்விஷம்ஆனநீங்களும்
அமுதம்போற்சாமியை உற்றீரே
அன்பெல்லாம்வெளிஆச்சேமண்குதிரையைநம்பி
ஆற்றில்இறங்கச்சொல்லி வைத்தீரே
முடுக்கிவாரும்உயிர் கொடுத்துப்பழிஒழிப்பீர்
முன்ஒன்றும்பின்ஒன்று செய்தவசைகழிப்பீர்
நடுக்கிஓடிநாற்பேர் எடுத்தெப்படிசெழிப்பீர்
நாயகன்முகத்தினிமேல் எப்படிமுழிப்பீர்—எ

ந. நால்வரும்போற்சண்டைபார்ப்பதல்லால்உண்டோ
நம்மாலேசாமிக்கு லவலேசம்
நமக்குத்தான்அபகீர்த்திசுமக்கநாயமோஇனி
நாளைக்கெப்படிசெல்லும் விசுவாசம்
மேல்கீழ்ஆனாலும்ஐயன்வில்இருக்க

மின்சிநமக்கு வருமோ மோசம்
வீரர்என்று சும்மா பேர்கொண்டோமே ஐயா
வேண்டாமோ அனுவாகிலும் ரோஷம்
சாலம்செய்தோடினால் நம்மைத்தடுப்பதாரோ
சதிசெய்யும்பெருக்குச் சமர்த்தர்என்றும்பேரோ
நீல அரக்கர்கெடும்காலம் என்றறியீரோ
நில்லாதுவாருங்கள் நிலைகடந்தோய்வாரோ—என்

மூலபலச் சண்டை.

விருத்தம்.

ஓதிஇவ்வாறங்கதன்சொல்உரைக்கும்சாம்பன்
உடன்பட்டான் அங்குதம்பி முதல்ஆனோர்கள்
நாதன்உரையால் அவரைக்கூடப்போனார்
நாலுசமுத்திரமும்ஒன்றாய் வளைந்தாற்போல
தீதுசெய்யும்மூலபலம் எதிர்க்கக்கண்டான்
சீராமன்கோதண்டத் திருநாண்வற்றிக்
காதளவும்வாங்கிஇதேம் மாத்திரமன்று
கருஷித்தான்சரமாரி வருஷித்தானே

எஉ-தரு-பந்துவாரளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

மூலபலசண்டையைக்கேளும்-ஸ்ரீராமன்செய்த
மூலபலசண்டையைக்கேளும்

அநுபல்லவி

மூலபலசண்டைகேளும் வேலைசூழ்இலங்கைஆளும்
மூடன்ராவணன்குடி கேடன்ராவணன்கெடி
முவ்உலகக்கிளைஞர்க்கும் எவ்வுலகத்தவுணர்க்கும்
முந்தஉபசாரம்பண்ணிப் பிந்திடவிசாரப்எண்ணி
முன் அரக்கர்நம்பினோர் தன்னோடொத்ததம்பிமார்
முக்கியதேவாந்தகன் உக்கிரமநராந்தகன்
முடிபெறும்சூரியகேது கொடிபெறும்யாககேது
மூளைபெற்றசம்புமன்னன் ரணமஸ்தன்கும்பகர்ணன்
முதுபோர்இடும்பன் அகம்பன் அதிகாயன்கும்பன்நிகும்பன்
வச்சிரத்தரக்கன்சங்கன் வச்சிரத்தெயிற்றன்சிங்கன்

புகைக்கும்பருதிக்கன்னன் புகைக்கும்குருதிக்கன்னன்
முதல்வீரர்மடிந்தனர் சதிமாருமுடிந்தனர்
முழுதும்நெஞ்சுகாய்ந்து பழுதுவந்துநேர்ந்தது
முற்றுயிர்கொடுக்கும்பேர்கள் கத்திஎன்றெடுக்கும்பேர்கள்
மூடவர்முதல்ஆகஇன்று கடுகிவரவேணும்என்று
மூயவிட்டதூதர்செல்லப் போய்எவர்க்கும்சேதிசொல்ல
முந்திஇலங்கையைநாடி வந்துதுக்கம்கொண்டாடி
மூண்டரக்கன்தன்னைத்தேற்றிசண்டையைஉட்கொண்டுதேற்றி
மூளும்கனல்போலேபற்றி ஆளும்களமேலேசுற்றி
மூடவுமபூமிஅசைந் தாடவும்தேவர்அஞ்சி
வாடவும்வானரர்கண் டோடவும்தேடிவந்த—மூவபலச

சரணங்கள்.

க. அஞ்சுமுகங்கள் ஈர் அஞ்சுகை வெற்பங்கள்
ஐம்பதுதலைகள் ஈர் ஐம்பது புசமலைகள்
ஐந்நூறுமுடிகள் ஈர் ஐந்நூறு தோள்அடிகள்
ஆயிரம்சிரங்கள் இரண் டாயிரம் கரங்களுடன்
அங்கம்மிகு காத்திரங்கள் பொங்குபொலிநேத்திரங்கள்
அலைபோலும். நாக்குகள் மலைபோலும் மூக்குகள்
ஆவெனத்திறந்த வாய்கள் தாவெனப்புகுந்த ஈய்கள்
ஆகர்சம் தொட்டகைகள் ஏகாசம் இட்டமெய்கள்
அடரக்கரு கறுத்துப் படையைக் குறிகுறித்து
அண்டத்தில்உள்ளோர்ஙவகண்டத்தில்உள்ளோர்எல்லாம்
அடியோடெழும்பி அந்த கடல்ஏழும்போங்கிஇந்த
அரும்பார்க்குள்நிறைபட்டாற்போல்-புறநினிலசசல்
பெரும்போக்கு புறப்பட்டாற்போல்-மலைமலைகள்
ஆனபெருராட்சதர்கள்-மானம்அளவாநிறைந்து
ஆயிரம்வெள்ளம்சேனை-ரதங்களுடன்
பாய்பரிகொல்லும்யானை-இவைஉரைக்கில்
அஸ்தகிரிஏமகிரி-சித்திரகூடகாமகிரி
அனையபெருமத்தகெசங்கள்-தேவரைவென்று
தன்விருதுபெற்றதுசங்கள்-கணக்கில்லாத
அண்டபகிரண்டமுட்டும்-எண்டிசைஅகன்றமட்டும்
அளவும்காத்திர ரதங்கள்-கண்களிற்பொறி
வளரும்போர்த்துர கதங்கள்-முறைமுறையா
ஆற்றுமணல்அளவிட்டேகட் செக்திரமஅளவிட்டாலும்
அதிகக்குதிரைக் கூட்டம்-திக்குகள்எல்லாம்
பதறிக்கொள்ஆட்டபாட்டம்-கைக்கடகங்கள்
ஆகம்அணிபதக்கங்கள்-தோள்வளைகள்கால்வளைகள்

அக்குமணிக் குண்டலங்கள்-மணியிழைத்த
பொற்கொலுசுவெண்டயங்கள்-வெற்றிக்கொடிகள்
ஆலவட்டம் தாலவட்டம்-சாமரங்கள்சுருட்டிகள்
அவுதாக்கள்முத்துக் குடைகள்-பீலிக்குடைகள்
கவிகைகள்சித்திரக் குடைகள்-வெயில்மறைக்க
அதிவிதநாகசுரம்-தவிலொடுதாரைசின்னம்
அறைந்தசங்குகள் எக்காளங்கள்-கர்ணவொடு
சிறந்தகொம்புகள்கைத்தாளங்கள்-துத்தரிகள்
ஆகுளிகள்மேளங்கள்-காகளம்டமாரங்கள்
ஐந்துவித பேரிகைகள்-வீரணங்கள்
பம்பையொடுபூரிகைகள்-முழங்கிவர
அங்குசங்கள்பரிசைள் சங்கிலியன்வரிசைகள்
அஸ்திரம்வேலாயுதங்கள்-வல்உலக்கைகள்
சஸ்திரம் சூலாயுதங்கள்-இப்படிக்கொத்த
ஆயுதத்தின்பேதங்கள் கோடிகோடிபூதங்கள்
அங்கைகொண்டுசூழ்ந்துவர-பேய்களும்கொண்டு
கங்குகங்காப் பாய்ந்துவர-புலிஇறச்சி
ஆட்டிறச்சிமான்இறச்சி-மாட்டிறச்சிநாய்இறச்சி
அலகைகள்கொடுத்துவர-மதுக்குடங்கள்
பலபேய்கள் எடுத்துவர-கெக்களிகொட்டி
அண்டமும்அகன்றநவ்-கண்டமுய்கிடுகிடென்ன
ஆர்பரித்துத்தொடைகள்தட்டி-விழிகள்எல்லாம்
தீப்பறக்கப்பெயிகள்கொட்டி-ராவணன்சொன்ன
தாரடாமனிதன்அவன்-ஆரடாவென்றேகத்திகள்
அடங்கலும்வீசிக் கொண்டு-ராமன்எங்கேஎன்
றிடும்புகள்பேசிக்கொண்டு-விதம்விதமா
ஆளிபுலிகரடிகள்-ஞாளிகழுதைகள்மேலே
அரக்கர்மெத்தப்பாய்குவாரும்-சிங்கத்தில்வழி
இரைச்சிலிட்டுச்சாய்குவாரும்-சில அரக்கர்
ஆகத்தினில்அடங்காத-தாகத்தாலேமேகங்களை
அங்கையாற்பிடிப் பாரும்-சலம்பிழிந்து
செங்கையாற்குடிப்பாரும் அதுக்கிஷ்டம்-ஆம்
ஆரும்வேசாயி அந்த நீரும்அகப்படாமல்
அலைகடலை அள்ளுவாரும்-பெருவாயால்
சலசலனக் கொள்ளுவாரும்-கைகளைநீட்டி
அஷ்டகெசங்களைக்கூடச்சுட்டெடுத்துத்தின்னவந்த
அனல்போற்சொறிவாரும்-மரங்களாலே
தினவுகளைச் சொறிவாரும்-பிறைகள்போலே
அக்கிரமம்மிகுந்தபல வக்கிரதந்தங்களைக்காட்டி

ஆவென்று திறப்பாரும்-பசிக்குதய்யோ
கூவென்றுபறப்பாரும் கழுதைசமுகம்
ஆனைமுகம்புலிமுகம் பூனைமுகம்பரிமுகம்
ஆகும்அரக்கர் அனந்தம் கண்கள்நெருப்பா
வேகும்அரக்கர் அனந்தம் சற்றுகிலும்
அஸ்தத்திலவிரல்இல்லாமல்-ஒற்றைக்கைய்யும்ஒற்றக்கா [லும்
ஆனஅரக்கர் கோடி-சோரூபம்கெட்டுப்
போனஅரக்கர்கோடி-இவரைக்கண்ட
அண்டர்கள்எல்லாரும்நீல-கண்டன்இடம்போய்எப்படி
அய்யாஎன்றேஒடுங்கியே-உயிர்மேல்ஆசை
வையாமலே நடுங்கியே-சிவனே இந்த
அம்புவியிற்கடல்களும்-டம்புசராசரங்களும்
அரக்கர்ஆய் வந்தனஎன்று-ஓடிஒளித்துக்
குாக்கினம்நொந்தன இன்று-நாங்களும்இனி
அம்பரத்திருக்கும்இந்த-உம்பருலகத்தைவிட்டு
அப்பாலேசொல்வோம்என்றார்-இருந்தால்இவர்
தப்பாமற்கொல்வார் என்றார்-என்னவே அரன்
அந்தராமன்சரத்தாலே-இந்தஅரக்கர்கள்எல்லாம்
அதம்ஆகிப்போவார்இன்னம்-நீங்கள்எல்லாரும்
சுகம்ஆகிவாழ்வீர் என்ன-கேட்டமரர்கள்
அகத்தினிலேமுன்னம்-மிகுத்ததுயர்கள்எல்லாம்
அகற்றிப்பயங்கரம் விண்டார்-ரட்சதர்கோரம்
சகித்துத்தயிரியம்கொண்டார்-முனிவர்எல்லாம்
அண்டநிழல்இல்லையென்று-தண்டுகமண்டலங்கள்விட்
டலங்கோலம்ஆய்வெதும்பினர்-தாமரை இலைச
சலம்போலவே ததும்பினர்-சித்தர்கள்எல்லாம்
அனந்தம்அரக்கர்க்கொரு-குரங்கைஉரை இட்டாலும்
அளவிடத் தள்ளாதென்பார்-இந்தச்சேனைக்கு
களம்இடம்கொள்ளா தென்பார் சாத்தியர்எல்லாம்
அத்தனை இத்தனை அல்ல-இத்தனைபேர்தலைகளை
அய்யன்அம்புகொய்யுமோஎன்பார்-நமதுபங்கில்
தெய்வம்என்னசெய்யுமோஎன்பார்-வித்தியாதராகள்
ஆயிரம்கோடிஅந்தகர்-ஆகிலும்இவரைக்கொல்ல
அனந்தம்நாள்வேணும்என்பார்-உலகழிக்க
நினைந்ததோகாணும் என்பார்-கந்தருவர்கள்
ஆமையும்சேஷனும்இந்தப்-பூமியும்எப்படியிவர்
அங்கத்தைச்சுமந்ததோ என்பார்-இத்தனைபேரும்
எங்கிட்டுச்சமைந்ததோ என்பார்-இவர்கள்இந்த
ஆச்சரியம்கொள்ளவெகு மாச்சரியம்கொண்டரக்கர்
அஷ்டதிசைமேலும் மேவினர்-ஆகாசம்எனும்

வெட்டவெளிமேலும் தாவினர்-இவரைக்கண்டு
ஆர்வலுள்ளபதினெட்டு-வீரரொடுசாம்புவனும்
அரண்டங்கெநாட்டம்கொள்ளவே-நடுநடுங்கிக்
குரங்கெல்லாம்ஓட்டம்கொள்ளவே-இவ்வகைநீசர்
அடர்ந்துமலையுங்குன்றும்-கடந்துநாலுதிக்கிலும்
படர்ந்துராவணனமுன்னேதொடர்ந்துதொடர்ந்துவந்த

மூலபலசண்டை

உ. எட்டி	வருவார்சிலர்	கிட்டி	வருவார்சிலர்
ஈண்டி	வருவார்சிலர்	தாண்டி	வருவார்சிலர்
ஏறி	வருவார்சிலர்	சீறி	வருவார்சிலர்
இரைந்து	வருவார்சிலர்	விரைந்து	வருவார்சிலர்
இடத்தில்	வருவார்சிலர்	வலத்தில்	வருவார்சிலர்
எடுக்க	வருவார்சிலர்	முடுக்க	வருவார்சிலர்
இடிஇடி	என்பார்சிலர்	பிடிபிடி	என்பார்சிலர்

எற்றும்எற்றும்என்பார்சிலர்குத்தும்குத்தும் என்பார்சிலர்
எட்டும்எட்டும்என்பார்சிலர் வெட்டும்வெட்டும்என்பார்சில
எதிர்எதிர் என்பார்சிலர் மிதிமிதி என்பார்சிலர்[ர்

இந்தவகைராமனை-வந்துவந்துமென்மேலும்
ஈய்கள்மொய்த்துக்கொண்டவகைபோல்-பெரும்புலியை
நாய்கள்சுற்றிக்கொண்டவகைபோல்-சுற்றயில்அய்யன்

என்சமர்த்தும்ராவணன்-தன்சமர்த்தும்வந்தபடை
யின்சமர்த்தும்பார்பபோம்என்றே-நினைந்துமெள்ள
புன்சிரிப்பு கொண்டுகொண்டே-நிற்கராட்சதர்

எல்லாரும்இவன்வெகு-வல்லாளகண்டன்தனித்
திருக்கும்செருக்கேபோதும்-இதுவும்செயம்
பெருக்கவேணுமோ ஓதும்-எனமுதுகில்

எத்தேசகாலமும்-வற்றாப்பெருஞ்சமுத்திரம்
என்றஅம்பறுத்தூணிசாத்தி-பிரசண்டகோ
தண்டவில்லை நாணிஏற்றி-குணத்தொனிசெய்

திட்டபோதுமும்மதமும்-பொட்டனவேவறண்டுகண்
டிருண்டசிலயானைகளுக்குத்-தொண்டையும்கூட
வரண்டசிலயானைகளுக்குச்-சிலயானைமேல்

இருந்தபாகரைத்தள்ளி-வருந்தவதைத்துக்கையை
எடுத்துப்பிடித்தஓட்டம்-பயத்தைஎல்லாம்
விடுத்துத்தேர்கூட்டம்-வல்அரக்கர்கள்

எறிவந்தபுரவிகள்-வீறிவந்தகதிமாறி
இளைத்துத்தள் ளாடினவே-ராட்சதர்க்கு
உளைத்துள்ளம்வாடினவே-பின்சாமிமுனைந்

திணை இல்லாவெகுசுடு-கணைஏவிநின்றவர்கள்
எவரும்இறக்கமுடித்தான்-அப்பாலேநின்ற
அவரும்பறக்கமுடித்தான்-முடிக்கவேநம்

இருநூறுவெள்ளம்இவன்-ஒருமானிடன்போகாதிர்
எனத்திரும்பிக்கூடிக் கொண்டார்-சூரியன்முன்னே
பனிக்குலம்போல்மூடிக்கொண்டார்-இவரோநமக்

கீடெனச்சினந்துகாற்-றாடிபோற்சுழலும்கணை
இலக்கம்அற்ற கணைதாக்கினான்-தாக்கிஅவரைத்
தொலைத்துவெட்டவெளிஆக்கினான்-பின்னும்அரக்கர்

இருநூறுவெள்ளமுடன்ஒருநூறுவெள்ளம்கொண்டு
ஏகோபித்துமுளைத்துக் கொண்டார்-நெருங்கிவந்து
மாகோபத்தில்வளைத்துக்கொண்டார்-அவர்அவர்கள

ஏலும்வழிமாறவெகு-நூறுகணைதூறிமுது
கிட்டோடத் தறித்துநின்றான்-சிலரைத்தரி
கெட்டோடமுறித்துநின்றான்-விடவிடவே

இப்படிஅந்நூறுவெள்ளம்-தப்பறமுடிந்ததுகண்
டிசமானன்வன்னிஎன்பவன்-மிகவும்பர
வசம்ஆகியே புலம்புவன்-அரக்கர்இன்று

இறந்தனர்எல்லாரும்-பறந்தனர்அய்யோஎன்
றேக்கம்ஆய்க்கவலைபெற்று-குறுகுறுத்து
மூக்கிலேவிரலை வைத்து-இனிஎப்படி

ராவணன்முகம்முன்நிற்கப்-போகுவோம்இதென்னமெத்த
லச்சைகேடென்றுவிளம்பி-விளம்பியபின்
அச்சத்தோடென்றுகிளம்பி-பலதிசையின்
இரச்சலைமாற்றிநின்ற-அரக்கரைப்பார்த்துநீங்கள்
ஈடழிந்துநொந்ததென்றும்-மனிதர்க்கஞ்சி
ஓடிஇங்கேவந்ததென்றும்-தேவர்கள்கண்டால்
ஏச்சாகும்இதுகொஞ்சப்-பேச்சாகும்என்றவரை
ஏசிடா ஏச்சைஏசி-சீசீஎனவே
ரோஷமாவார்த்தைபேசி-அரக்கர்எல்லாம்
இளைந்தோங்கியேஒருபெரும்பாம்பைத்தேரைக்ள் [சிகள்
இளப்பமென்றுசுற்றிக்கொண்டார்ப்போல்-விட்டிற்பூச்
விளக்கைவந்துமொய்த்துக்கொண்டாப்போல்மொய்க்க
எம்மாத்திரம்என்றுதானேஐந்நூறுவெள்ளம்சேனை [மனி
ஏகமாய்க்கதிகவிட்டான்-அம்பிலும்அதி [தன்

வேகமாய்மூடுகவிட்டான்-விடுத்தபின்னை
இளைத்தவன்போல்அவர் தன்னை-வளைத்திடும்படிக்குச்சற்றே
இடம்கொடுத்துப்பின்வாங்கினுன்-எவரும்கைக்குள்
அடங்கவிட்டுமுன்ஓங்கினுன்-வந்தஅரக்கர்
ஏறிநேரிசம்கட்டாரி-தறித்தோமரங்கள்வாரி
லக்ஷ்மணமீதில் சொரிந்தார்-அதுகள்நொக்கு
நொக்காசுராமன்அரிந்தான்-பின்னும்நெருங்கி
இரதம்ஓர்பக்கத்தில்விட்டும்-பரவிஓர்பக்கத்தில்விட்டும்
யானையோர்பக்கத்தில்விட்டும்-அணிஅணியா
சேனையோர்பக்கத்தில்விட்டும்-நிரைநிரையா
இருப்புலக்கைபிண்டிபாலம்-பெருத்தகத்திதண்டுசூலம்
என்னும்பபைடைவாங்கிவிடுத்தார்-விடுத்தேஅதின்
பின்னும்கணை ஓங்கித்தடுத்தார்-அவர்அவருக்
கெத்தனைகைஎத்தனைவில்-எத்தனைஅம்பெத்தனைதண்
டெப்படிஒருவன்தடுப்பான்-அவர்மேல்ஐயன்
எப்படித்தான்போர்கொடுப்பார்-பெருமழைபோல்
எடுத்துவிட்டபடைஎல்லாம்தடுத்துவிட்டான்என்றுவாயால்
எட்டிக்கடிக்க மேவினுர்-கைப்பிடிஆகக்
கட்டிப்பிடிக்கத்தாவினுர்-ஆகாசத்தினில்
ஈசனுநிருதர்கள்-நாசமாப்போவாரென்
றெல்லோர்க்கும்மனம்தேற்றினுர்-சாமியைத்தேவர்
உல்லாசம்ஆக வாழ்த்தினுர்-அந்தவேளையில்
எப்புறத்தும்ராட்சதர்கள்-அப்புறம்போகாமல்வாளிக்
கிரைக்காகத்தொகுத்துக்கொண்டான்-சுற்றிலும்போட்ட
சரக்கூடம் வகுத்துக்கொண்டான்-வகுத்தபின்பு
ரதங்கள்யானைகள்துர-கதங்கள்சேனைகள்பட
எவரையும்மண்ணிற்சதித்தான்-பிடித்தவில்லோ
டவர்அவர்முன்னில்குதித்தான்-தனித்தனியே
இந்திரவாணம்மோகவாணம்-சந்திரவாணம்நாகவாணம்
எரிவாணம் வாயுவாணம்-விஜயமுர
ஹரிவாணம்மாயவாணம்-குபேரவாணம்
இமையாதவருணன்வாணம்-நமன்வாணம்அருணன்வாணம்
இடிவாணம்ஆகநொடித்தான்-அரக்கர்தம்மை
அடியோடேசாகஅடித்தான்-பின்னையும்அவர்
எண் இறந்தசேனை சண்டைபண்ணிமூடியாதென்றெண்ணி
ஏகமாக் கடுகடுத்தான்-மந்திரம்சொல்லி
மோகனஸ்திரம்தொடுத்தான்-தொடுத்தபோதில்
இங்குராமன்அங்குராமன்-அங்குராமன்இங்குராமன்
எங்கும்ராமனுகத்தோற்றினுன்-அவருக்கவர்
தங்களாலேசாகமாற்றினுன்-இந்தவகையா

ஈனர்ஆயிரம்வெள்ளம்சேனையுமமுகூர்த்தம்தன்னில்
இரும்படிஆகப் புடைத்தான்-ரணகளத்தை
வெங்களம்ஆகத் துடைத்தான்-அனந்தம்கோடி
எரிவாளிகள்பிறந்த-கருமேகம்போற்சிறந்த
ஒருராமனுல்இறந்த-சருகள்போற்பறந்த—மூலபலசன்
ங. தோள்கள் அறுந்தபேரும் தாள்கள் முறிந்தபேரும்
தொடைகள் இடிந்தபேரும் இடைகள் ஒடிந்தபேரும்
தொந்திகள் சரிந்தபேரும் சந்துகள் முறிந்தபேரும்
துணைக்கைகள் இற்றபேரும் கணைக்கால்கள் அற்றபேரும்
தொண்டைகள் தறிந்தபேரும் மண்டைகள் திறந்தபேரும்
துண்டம்துண்டம் ஆனபேரும் கண்டம்கண்டம் ஆனபேரும்
தூணிகள் இழந்தபேரும் நாணிகள் இழந்தபேரும்
துரகம் உலைந்தபேரும் இரதம் கலைந்தபேரும்
தோரணங்கள் கெட்டபேரும் வாரணங்கள் விட்டபேரும்
தோமரம் பறிந்தபேரும் சாமரம் எறிந்தபேரும்
தொட்டெடுத்தவாள்கெட்டு-நட்டகட்டைபோல்பட்டுத்
துள்ளித்துள்ளிநெளிப்பாரும்-பிணங்கள்தம்மேல்
தள்ளித்தள்ளி ஒளிப்பாரும்-பலபலவர
துண்டங்கள்ஆம்உடம்புகள்-இண்டங்கொடிபோலேஅம்பு
துறுபட்டுமாய்வாரும்-குறைத்தலைஆய்
அறுபட்டுச்சாய்வாரும்-இவ்வளவென்று
சொல்இடம்இல்லாதபேரும்-சல்லடைக்கண்போல்உடம்பு
தொளைபட்டுவிழ்வாரும்-விடாய்எடுத்துக்
களைபட்டுச் சாய்வாரும்-போடப்போடவும்
தொலையா அம்புகளாலே-தலைபோய்பம்பரம்போலே
சுற்றிச்சுற்றிமடிவாரும்-முண்டங்களாகித்
தத்தித்தத்திப்படிவாரும்-நிலைகலங்கி
தோள்என்றும்தாள்என்றும்-வாள்என்றும்அடையாளம்
தோற்றுமற்கெட்டபேரும்-காயங்களாலே
ஆற்றுமற் பட்டபேரும்-தலைகள்அற்றுத்
தும்பிமேலேநின்றபடி-தொம்பர்போல்லாகுகொண்டு
தொப்பனவேவிழ்வாரும்-மண்ணைக்கடித்துக்
குப்புறவே தாழ்வாரும்-அம்புகள்எங்கும்
சொருகிஉயிர்விடச்சே-மரணவலிப்பெடுத்துச்
சுருட்டிக்கொண்டுபடுப்பாரும்-கண்பூச்சிபறந்
திருட்டிஉயிர் விடுப்பாரும்-கைகால்கள்அற்றுச்
சுருங்காமலேஅடிக்கும்-பெருங்காற்றிற்கொம்புபோன
சோலைபோலேகாணுவாரும்-தங்கள்குடலை
மாலைபோலே பூணுவாரும்-அடுத்தடுத்தது
தொண்ணூறுகாம்லுயோ-தண்ணீர்தண்ணீர்என்று

துடிதுடித்து ஓய்வாரும்-ரத்தத்தை அள்ளிக்
குடிகுடித்துச் சாய்வாரும்-மனிதனென்று
துடுக்குச்சொல்லியவாயின்-இடுக்குக்காயிரம் அம்பு
சொரிபட்டுவதைவாரும-சின்னபின்னமா
அரிபட்டுச்சிதைவாரும்-கழுக்கள்கொத்த
தொங்கியபனங்காயிலே-நுங்குபோலக்கண்களும்போய்
தொங்கிவிழும்தலை அனந்தம்-ரத்தம்பெருகிப்
பொங்கிவிழுமதலை அனந்தம்-கழுத்துகள்போய்த்
தூரத்தொலையில்விழப்-பீறிட்டுரத்தம்எழ
தூறும்தலைகள் ஆனந்தம்-ஒன்றின்மேல்ஒன்று
ஏறும்தலைகள் ஆனந்தம் அந்தத்தலையைத்
தொந்தமிடும்பேயினங்கள்-பந்துகள்போல்எடுத்தாடச்
சுற்றிலும்விழ்தலை அனந்தம்-கடலின்கரை
முற்றிலும்வீழ்தலை அனந்தம்-சுவாமி அம்பாலே
சொற்கம்உண்டெங்களுக்கென்று-கொக்கரித்துக்கொக்கரித்து
துடித்துவிழும்தலை அனந்தம்-ஒன்றிரெண்டாக
அடித்துவிழும்தலை அனந்தம்-அம்புபட்டிரு
துண்டாய்ச்சிலைக்ள்விழ-ரண்டாய்த்தலைகள்எழச்
சுழலும்கவந்தம் அனந்தம்-பிணங்களோடே
உழலும்கவந்தம் அனந்தம்-முடித்தலைகள்
துண்டித்துவிழவுமதேகம்-கொண்டெட்டிநடந்தாப்பாலே
சோரும்கவந்தம் ஆனந்தம்-எதிர்எதிரா
நேரும்கவந்தம் ஆனந்தம்-சரீரம்எங்கும்
துருவிட்டகணைபட்டு-மரவட்டைஉருவிட்டுச்
சுருளும்கவந்தம் அனந்தம்-நரம்பிசிக்க
உருளும்கவந்தம் அனந்தம்ந-ட்சத்திரம்போலத்
தொடுந்தமணிக்குண்டலத்தை-அடுத்தடுத்தம்மாலை போடத்
தொட்டாடும்சிலபேய்கள்-கவந்தத்தோடு
முட்டாடும்சிலபேய்கள்-ரத்தத்தில் ஆனைத்
தோட்டியினிற்பிணஙகளை-மாட்டிவிளையாட்டுக்காகப்
தாண்டிவிடும்சிலபேய்கள்-அதைப்பறிக்கத்
தண்டிவிழும்சிலபேய்கள்-தின்றுகொழுத்துச்
சுயம்கொண்டிராமனுக்குச்-செயம்செயமென்றுசொல்லித்
துதித்தாடும் சிலபேய்கள்-பிணமலைமேல்
குதித்தாடும்சிலபேய்கள்-ஆனைமணியைச்
சோடானதாளம்ஆக்கி-ஆடிக்கொண்டாரகவற்குத்
ஸ்தோத்திரம்சொல்லும்சிலபேய்கள்-சண்டைஉண்டென்
சாஸ்திரம்சொல்லும்சிலபேய்கள்-ராட்சதர்வாயில் [று
சுரைவிரைபோன்றபல்லைப்-பொரிமியன்றுவாயில்கவ்வித்

நாவிஇடும்சிலநாய்கள்-லங்கையைப்பார்த்துக்
கூவிஇடும்சிலநாய்கள்-ஈரலைஎல்லாம்

தோண்டித்தோண்டிப்பிடுங்கித்-தாண்டித்தாண்டிபசியைத்
தொலைத்திடும்சிலநாய்கள்-களத்தில்எங்கும்
குலைத்திடும்சிலநாய்கள்-பெருகும்ரத்தச்

சுனைக்குள்விழும்பிணத்தை-உனக்கெனக்கென்றுசண்டை
தொடுத்திடும்சிலநரிகள் குடிக்கிரையாக்
கொடுத்திடும்சிலநரிகள்-இழுத்திழுத்துத்

துணுக்குத்துணுக்காகக்கொத்திப்·பிணத்தைப்பெரும்பசிஆம்
ரூளைஇடும்சிலநரிகள்-இலங்கையைப்பார்த்
தூளையிடும்சிலநரிகள்-எலும்புகளும்

தொண்டைகளும்மண்டைகளும்-கொண்டுபோய்இலங்கையி
தூற்றுமசிலபருந்துகள்-வீடுகள்மேலே [லே
ஏற்றும்சிலபருந்துகள்-மூக்குகளாலே

தொப்பிளின்நரம்புகளை-முப்புரிகொள்வதுபோலச்
சுருட்டும்சிலகழுகுகள்-தலைதலையாய்
உருட்டும்சிலகழுகுகள்-பிணமலைமேல்

தொத்தித்தொத்திமண்டைகளைக் கொத்திக்கொத்திமூக்கினா
தூக்கும்சில கழுகுகள் ஓர்இடத்திலே [லே
சேர்க்கும்சிலகழுகுகள் கைஒழியாமல்

தூத்தித்தூத்திஅந்த அரக்கரைபிடித்தெம
தூதரும்சலித்தாரே எட்டுதிசைக்கு
நாதரும்கெலித்தாரே பிணங்கள்மேலே

சோரும்அரக்கியர்கள்-ணீரிற்குளித்துபூசை
தொண்டுபண்ணும்சிலகூளி அதற்குபலன்
உண்டுபண்ணும் ரணகாளி சம்மோகனச்

சுடுகணை ஒன்றாலே விடும்மூலபலம்எல்லாம்
தொலைந்ததென்றார்சிலதேவர் ராவணன்கோட்டம்
குலைந்ததென்றார் சிலதேவர் இந்தக்கணையைத்

தொடுக்கிறவித்தைராக வனுக்கும்சிவனுக்கும்
தோனும்என்றார்சிலதேவர் பின்ஆர்அறிவார்
காணும்என்றார் சிலதேவர் ராகவன்மேலே

சொர்க்கத்தலத்தில்உள்ள கற்பகமலர்பறித்துத்
தூற்றினார்சிலதேவர் செயமங்களம்
கூறினார் சிலதேவர் இப்படிக்கொத்த

துரைராமன்முன்நடந்து திரைஆழிபோற்படர்ந்த
வரைஆனகோதண்டத்துக் கிரைஆகவேமடிந்த—மூலபலச

லட்சுமணனுக்கும் ராவணனுக்கும் உயுத்தம்.

விருத்தம்.

பெருமூலபலம்எல்லாம்இவ்வாறுசாமிகையிற்போனபின்னை வருபோரில்ராவணனுமதேர்கொண்டான் பத்துவில்லும்வாங்கிக்கொண்டான், ஒருநூறுகோடிதேர்நானூறுகோடிபரிஓங்கும் யானை, இருநூறுகோடியுடன்குதித்திட்டான் இளையவன்வந்தெதிர்த்திட்டானே.

௭௩. தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

லட்சுமணனுக்கும் ராவணனுக்கும்-நேர்ந்ததேசண்டை

அநுபல்லவி

அட்சயமானமூலபலம் தன்னை
அந்தக்கோதண்டம்உண்டுவிட்ட பின்னை
கட்சிஅரக்கனும்தேரிலே தள்ள
காவலிளையவன் அனுமான்மேற் கொள்ள—லட்சு

சரணங்கள்.

௧. குரங்குவெள்ளத்தாரும்-அரக்கர்வெள்ளத்தாரும்
கூடித்தொந்தயுத்தம் ஆடினார்
குன்றுமரங்களும்-தெண்டும்சரங்களும்
கொண்டுஒன்றைஒன்றுற் சாடினான்
செருக்களத்தினில்அரக்கன்நொடிக்குள்ளே
சிலநூறுகோடிஅம் பேவினான்
திரும்பத்தம்பியும்-அதுக்கதையேவிட்டுத்
தெள்ளும்தவிடுபோலே தூவினான்
துரத்திப்பத்தம்பை அரக்கன்எய்யவும்
சுவாமிஅதைக்கூட தூளிசெய்யவும்
அரக்கன்மோகன அஸ்திரம்தெறிக்கவும்
அய்யன்நாரணன் அம்பால்முறிக்கவும்—லட்சு

௨. கொஞ்சத்தனம்என்னவி அரக்கன்வீடணன்
மேலேமாயன்வேலைத் தாண்டினான்

குறுக்கேதம்பிகருமுன்னே - அங்கதனோடு
  அனுமான் அதுக்கெதிர் தாண்டினான்
தஞ்சம்என்றவிபீஷணனுக்காகதம்பி
  இருவரையும்தள்ளி ஓங்கினான்
சகலபேர்களும்உருக்கவே அந்த
  வேலைமார்பினில் வாங்கினான்
அஞ்சிவிபீஷணன் பயந்துவாடவும்
  அரக்கன்கெலித்தோம்என் றாரில்ஓடவும்
சஞ்சீவியைக்கொண்டு அனுமான்அழைக்கவும்
  தம்பியும்சேனைகளும் பிழைக்கவும்—லட்சு

௯. பிழைத்ததம்பி விபீஷணன்சுகமோ
  சுகமோஎன்று கிளம்பினான்
பின்புசாம்புவன்ராமன்சேவடி
  முன்பின்உள்ளது விளம்பினான்
தழைத்தராகவன் உனைப்போல்ஆர்என்று
  தம்பிதன்புகழ் பாடினான்
சந்தனம்சிரஞ்சீவிஎன்றனு
  மந்தனையும்கொண் டாடினான்
அழைத்துவானர வெள்ளம்கொச்சிக்க
  ஆசைமுனிவர்கள் பேசிஅர்ச்சிக்க
மழைக்குநிகர்மலர் தேவர்தூற்றிட
  வாழிஇளையவன் என்றுவாழ்த்திட—லட்சு

மூலபலப்படுகளக்காட்சி.

விருத்தம்.

சீலம்உள்ளராகவனும்இளையோன்தன்னைத்
  தேற்றினன்பிறகுவிபீஷணனும்அங்கே
கோலம்உள்ளசுக்கிரீவன் அனுமான்சாம்பன்
  குமுதன்முதலோரைஎல்லாம்கூட்டிக்கொண்டான்
நாலுதிக்கும்சூரியன்முன்பனியைப்போலே
  நாயகன்கைக்கோதண்டம்ஒன்றினாலே
மூலபலபடுகளத்தைப்பாரீர்என்று
  மூட்டினன்வகைவகையாய்க்காட்டினனே

௫௩-திபதை-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

௧. வெற்றிகொள்ளவந்த-மூலபலம்மாள
  வேதண்டம்ஆம்விரகோதண்டம்செய்தத்தைச்

சூர்ரியசேனைப்படைத்தலைவருடன்
சுக்கிரீவரோவாரும் சுவாமிசெய்த விக்கிரமத்தைப்பாரும்

உ. சண்டபிரசண்டப்பெருங்காற்றிலேவெகு
தாகத்தினால்விழும்மேகக்குலம்போலே
அண்டர்பெருமான் ராமன்கையால்வீழ்ந்த
ஆனைகளைப்பாரும் கிடக்கிற சேனைகளைப்பாரும்

ங. துன்னனப்பொங்கிய ரத்தக்கடல்மேலே
சுவாமிஅம்பாலேசெந் தாமரைப்பூப்போலே
வண்ணம்செவந்து மிதந்துவரும்முக
மண்டலத்தைப்பாரும் சிதறிய குண்டலத்தைப்பாரும்

ச. சீரம்பெரும்பாய்கள் கட்டும்கொடிஆகச்
செத்தகளத்திலே ரத்தக்குளத்திலே
ஓராயிரம்கோடி கப்பலைப்போலவே
ஓடும்தேரைப்பாரும் விசைஅறுந் தாடும்தேரைப்பாரும்

ரு. கடலிலேபல மகரமீன்போல்
கண்டித்தயானையும் துண்டித்தயானையும்
இடலம்ஆகிய சத்தக்கடமேலே
எழுகிறத்தைப்பாரும் அழுந்தி முழுகிறத்தைப்பாரும்

சு கூத்தினில்கட்டுவன் பாத்திரம்என்றேத்தக்
குண்டலங்கள்குதைத் துண்டங்கள்ஆய்எங்கும்
பேர்த்து பேர்த்தநொண்டிக் கூத்தினைப்போல்ஆடும்
பிரேதங்களைப்பாரும் கைகள்கொட்டும் பூதங்களைப்பா
[ரும்

எ பண்டுபட்டயானை வால்புறத்தேஅறுப்
புண்டுபட்டயானையின் தலைகாணவே
ரனடுபக்கமும்தலை உள்ளயானைபோலும்
லட்சணத்தைப்பரும் பேய்கள்தின்னும் பட்சணத்தை
[ப்பாரும்

அ. அந்தரத்தக் கடலுக்குள்ளேமத
யானைக்கொம்புஅந்தி வானத்திலேஇளந்
சந்திரனைப்போல்மிதந்நுமிதந்து
தனும்புவதைப்பாரும் அங்கங்கேகிளம்புவதைப்பாரும்

கூ. அத்திக்கொம்பால்தந்த சுத்திசெய்தரத்தம்
அப்பிஅப்பிவாயைக் கொப்பளித்துவிழ்ந்த

சத்திகளைக்கொண்டு நாக்குவளிக்கிற
காளிகளைப்பாரும் சுற்றிவருமகூளிகளைப்பாரும்

ம. யுத்தகளம்என்னும்-ரத்தவயல்மேலே
ஏற்றசதைஎன்னும்-சேற்றிவிடத்திலே
அஸ்திரங்கள்பயிர்-ஒத்துக்கிடக்கிற
அற்புதத்தைப்பாரும் ரத்தந்தனில் புற்புதத்தைப்பாரும்

கக. கொண்டவன்என்னும் பிணத்தைக்கையில்
கொண்டெழும்பும்பேயைக் கண்ட அரக்கியர்
அண்டமட்டும்அதை எட்டிப்பிடிக்கிற
ஆச்சரியத்தைப்பரும்அவருடையமாச்சரியத்தைப்பாரும்

கஉ. தும்பிமுகத்திலேராட்சதர்மீசையைத்
துள்ளருகாச்சாத்திப் பிள்ளையார்என்றேதத்திக்
கொம்பில்அவர்மண்டைத் தேங்காய்உடைக்கிற
குட்டிப்பேயைப்பாரும்குதிக்கிற-மட்டிப்பேயைப்பாரும்

கங. பேய்முகம்நாய்முகம் ஆகியராட்சதப்
பெண்டுகள் அந்தப் பிணம்பிடுங்கவந்த
பேய்முகம்நாய்முகம்கண்டே அடையாளம்
பிடிக்கிறதைப்பாரும் நல்வார்த்தை படிக்கிறதைப்பாரும்

கச. பெண் அரம்பைக்கூத்து பாற்க்கிறதெல்லாம்போய்
பேய்க்கூத்தாச்சுதோஎன்றுமுறைபட்டு
பண்ணுடனேகிழப்பெண்கள்ஒப்பாரி
பாடுவதைப்பாரும் தலைவிரித் தாடுவதைப்பாரும்

கரு. இந்திரலோகமும்சந்திரலோகமும்
எட்டுத்திக்கும்கொள்ளை இட்டுச்சிறைவைத்து
கந்தஅரக்கரைராமன்வில்லுக்கிரை
கற்ப்பித்ததைப்பாரும் இராவணன்ஒப்பித்ததைப்பாரும்.

கசு. எள்இடவும்இடம் இல்லாமல்மண்டிய
இத்தனைசேனையும் கைத்தனுஒன்றாலே
வள்ளல்ராமன்மு கூர்த்தத்திற்கொன்றுயிர்
வாங்கினதைப்பாரும் பூமிபாரம் நீங்கினதைப்பாரும்

ஸ்ரீராமரைமாலியவான் கொண்டாடல்.

சந்தவிருத்தம்.

நீதன்கைவீசுசர மாரிபடவேபடை
பாடுண்டுபோனதை விபீஷணனேடேவிழ்

நேர்கண்டலோர்களும்இராகவனைமேவினர்அதன்மேலே
ஓதும்பிராணியுடன் ஓடியதசானன்
மூதண்டகோடிஉளதேவர்கள்பகிரிட
ஊர்எங்கும்வேணகளியாடல்விளையாடல்கள்செய்கிறபோதே
கோதண்டவாளியினில் மூலபலசேனையை
நாசஞ்செய்தான்எனவே ஓடிவருதூதர்கள்
கூறும்சொலால்இதென மானிடவனால்அவர்படுவாரோ
ஏதென்றுராவணன் விசாரமிடமாலிய
வான்வந்துகாதினிலேசுதீல்சுதீல்என
ராமன்பிரதாபசெய ராமன்இசை ஆனதுபுகழ்வானே

எசு-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ராமனுக்குநிகர் ஆக ராவணா பூமியில்வேறுண்டோ

அநுபல்லவி.

மாமூலபலம்எல்லாம் ஒருத்தன்கொன்றதெந்த
வகைஎன்றுதூத்தரைப் பகையாதெழுந்தழுந்த
ஆமவன்கோதண்டம் வளைத்தானேபடைசிந்த
அரைஅம்புகால்அம்பு தெறித்தானேஎதோஅந்த (ராம)

சரணங்கள்.

க. பின்னும்சொல்லுகிறேன் அவனுக்குனதுசண்டை
பிள்ளைவிளையாட்டல்லோ அத்தாட்சி
மன்னும்மரமும்புல்லும் கல்லும்ஒருசாத்தால்
மண்ணோடேமண் ஆமே கண்காட்சி
சின்னமனிதன்என்றும் ஒருத்தன்என்றும்எண்ணாதே
தெவருக்கும்தேவன்அவ னேசூட்சி
உன்னைக்கட்டினவாலி தன்னைக்கொன்றானே இது
உன் அண்டையில்இருக்க இன்னம்என்னடாசாட்சி(ரா)

உ. திண்டும்மிண்டும்செல்லாதேதர்மம்சேருமிடத்தில்
செயமும்சேரும்அட நிர்மூட
சண்டைஉன்னால்ஆகாது செத்தவர்க்கெல்லாம்தில
தர்ப்பணம்செய்அடா • குடிகேட
பெண்டுகளேஅல்லாமல் லங்கையைவிட்டுனக்குப்

பின்படைவருவதுண் டோகூட
அண்டர்நாயகனை ஒருத்தன்ஒருத்தன்என்றாய்
அண்டம்அழிக்கும்தேவர்ரண்டுபேர்உண்டோடா (ராம)

௬. வீரவேல்விட்டேன்என்றும்லட்சுமணன்பட்டான்என்றும்
விம்புவார்த்தைகள் இங்கே தந்தாயே
யாருமிமருந்தாலே அயன்எழுந்தானே இந்த
மதிமோசத்தால்அல்லவோ வெந்தாயே
காரியம்தெரிந்த விபீஷணன்சொல்லும்கும்ப
கர்னன்சொல்லும்கேட்க நொந்தாயே
வீரியத்தால்அய்யோ காடுவாவாஎன்ன
வீடுபோபோஎன்ன வினைகொண்டுவந்தாயே (ராமனு)

மூலபலப்படுகளத்தை ராவணன்கண்டது.

விருத்தம்.

வல்லாண்மைபேசியராவணன்முன் இந்த
வகைவகையாமாலியவான்சொல்லச்சொல்லப்
பொல்லாதபுண்ணிலேகோலிட்டாப்போல்
புடைபுடைத்தான்மூலபலம்மடிந்தவாறும்
சொல்லாலேதூதர்சொன்னசொல்லும்உந்தன்
சொல்லும்நிலைவரமோஎன்றரக்கன்பொங்கி
எல்லாம்பார்ப்போம்எனக்கோபுரத்தின்மேலே
ஏறினான்படுகளம்கண்டானே

எருதரு-மோகன-ராகம் ஆதிதாளம்.

பல்லவி,

கண்டானேராவணன்மென்மேலே மூலபலபடு
களத்தைஇருபதுகண்களாலே

அநுபல்லவி

மீண்டாம்தூதர்சொல் இன்று மெய்யோபொய்யோ என்று
மெத்தவிசாரப்பட்டக்கணமேசென்று உத்தரகோபுரத்துச்சியி [லேநின்று
கண்டா

சரணங்கள். [ல்ல

க. போனமுகந்தோறும் மலைமலையாபிணம்குவிய இதுவேக
தானம்ஆம்என்று மேகங்கள்வந்துகவியராகவன்விட்ட

மாண்க்கணைகள் பட்ட — பானத்தளவும்முட்ட
வானத்திலும் அட்ட — கோணத்திலும்எட்ட
சோனைப்பெரியமலை — தான்ஒத்தெழுந்தகொலை
ஆனைப்பிணங்களையும் — சேனைப்பிணங்களையும்(கண்டா)

உ. சிலமுனிவர்கள் — கண்டுடனே நடுநடுங்கசிறியஆல
காலம்ஆம்எனும் கண்களைநாய்நரி பிடுங்க வீரகோதண்ட
காலமாறிமழை — போலேகணைசொரிய
நாலுதிசையும்வளைந் — தோலமிடும்பெரிய
மூலபலப்படையைக் — கோலிவேர்அரிய
மூலைக்குமூலைஅலங் — கோலம்ஆய்த்தெரிய(கண்)

௩. பெருகவேகளம்எங்கெங்கும்கவந்தங்களாடநட்டுவன்போல
அருகிலேநின்றுபேய்கள்தாளங்கள்போட-ராமன்பிடித்த
ஒருசிலைஅதனாலே — வரவராஒருகாலே
விரிகணைஅறுபட — நிருதர்முடிகள்கெட
ஒருபெருமலைமேலே — வரும்அருவியைப்போல
குருதிநீர்துள்ளத்துள்ளக் குருவிகள்கொள்ளக்கொள்ள()
[திலே

ச. மங்கைமீர்அந்த-வானரப் பூச்சிகளைப்புடைத்துநிமிஷத்
உங்கள்முன்வரு-வேன்என்று கண்களைத்துடைத்து துடுக்
தங்கள்கணவன்கிடை — அங்கெதிர்கண்டுகடை [காவந்த
கண்களில்நீர்பெருகி — அங்கம்எல்லாம்உருகிப்
பெண்கள்திரண்டுமொய்த்துச் செங்கைதலையில்வைத்து
எங்கும்பதறிவிழ — எங்கும்கதறிஅழ(கண்)
[கள்நீர்

ரு பெரியவில்லுடன்-அறுபட்ட கைகளும்விரலும்கண்டுகண்
சொரியஅரக்கியர்-அடித்துக்கொண்டழும்கூக்குரலும் கண்டம்
ஒருவன்குடல்சரிய ஒருவன்உடல்எரிய [கண்டம்ஆய்
ஒருவன்தலைமடிய — ஒருவன்சிலைஒடிய
ஒருவன்தொடைபறிய — ஒருவன்குடைமுறிய
ஒருவன்உயிர்வதை — ஒருகணைசெய்ததை(கண்)

இராவணன்தேர் ஏறுதல்.

விருத்தம்.

மூலபலப்படைகளம்இவ்வாறுகண்டான்
முடிபுனைகோபுரம்இறங்கிக்கோவில்சேர்ந்தான்
காலம்எனும்முக்கோடிவயதும்ஈசன்
கைவாளும்கொலைக்கராவணன்முன்னாளில்

மாலனும்ராகவன்கொடுத்தவரத்தினாலே
மதியும்அதுவிதியும்அதுஎனலால்துவார
பாலன்என்முன்போல்வைகுந்தவாசல்ப்
படிகொள்வான்தேர்வரத்துடிகொள்வானேன்

௭௬. தரு-கலியாணிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

தேர்மேற்கொண்டானே-இராவணன்-போர்மேற்கொண்டா
[னே

அநுபல்லவி.

பார்மேலும்திசை மேலும்மலைமேலும்
பாயும்திரைகடல் மேலும்முட்டிய
ஆயிரம்புர விகளும்கட்டிய—தேர்

சரணங்கள்.

௧. இனத்தோடேவரச்சொல்லி உறுக்கினான்-தப்பி
இருந்தோரில்நூறுவெள்ளம் பொறுக்கினான்சங்கம்
தொனித்துகையொடுகையை முறுக்கினான்மேலே
தூணியும்கவசமும் இறுக்கினான்
கனத்தபூமியும் மலையும்வெடித்திட
முளைத்தபேரிகை குமுறிஇடித்திட
சினத்தினால்முக வேர்வைபொடித்திட
தனக்கும்சீதைக்கும் இடக்கண்துடித்திட—(தேர்)

௨. பத்துமுடியும்கரித் தோங்கினான்திசை
பத்தும்வெட்டியவாளைத் தாங்கினான்-கோ
பத்தால்அரமனையை நீங்கினான்-ஒரு
பத்துவில்லையுங்கையில் வாங்கினான்
செத்தபேர்களை எண்ணிமனம்நொந்து
சத்தமேகங்கள் போலேநால்ஐந்து
கைத்தலத்திலும் வாரிக்கொடைதந்து
சுற்றிஅர்ச்சனை செய்துவலம்வந்து—(தேர்)

௩. இருபதுகையும்வளை மாட்டினான்-காதில்
இருபதுகுழைகளும் பூட்டினான்தும்பை
இருபதுதோளிலும் சூட்டினான்-கண்கள்
இருபதும்நெருப்புபோல்க் காட்டினான்

வருபெண்சானகி பதறுகிறதொன்று
ஒருமண்டோதரி கதறுகிறதோன்று
விருதெல்லார்களும் பார்க்கவேஇன்று
இருவகையில்லன் ருக்குவேன்என்று—(தேர்)

இராவணன் அவசகுனம் காணுதல்.

சந்தவிருத்தம்.

கதிர்விடுகுண்டலம்- மணிமகுடம்பலகடகம்அலங்கிர்தம்-மென்போர்வை,கவசம்நெடுஞ்சாம்-அரைவடம் அந்தைகள்கலகலெனும்பணியின்கோவை, இதுமுதல்கொண்டொரு பதுகையில்வெஞ்சிலை ஒருபதுசெங்கையிலும் பாணம்எரிவிழிசிந்தியகருமலைஒன்றெனஎவரும்நடுங்கநெடுந்தேர்மேல், மதிகதிர்சிந்திட-உடுநிறைசிந்திடமலைகள்அதிர்ந்திட-மண்பூமி,மறுகிடஎண்டிசைமுருகிதியங்கிடமனிதன்எனும்சொல்இடும்பாலே,அதிரணமண்டலம்-அதிரரதந்தனை அதிரவிடென்றஇலங்கேசன், அருகினில்எங்கணும்-இருபதுகண்களில்-அவசகுனபலகண்டானே.

௭௭ தரு-பந்துவராளிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இப்படியா அவசகுனம் கண்டானே-கண்டராவணன்
இடும்பாலேஎண்ணமற்சென்றனே

அநுபல்லவி.

கைப்படைஆனதைச் சேகரம்பண்ணி
காகுத்தன்சரத்துக்குக் கொடுத்திடஎண்ணி
அப்படிவந்தானே ராமன்மேலே
அறிந்திருந்தும்புத்தி கெட்டவன்போலே—இப்ப்

சரணங்கள்.

க. ஆனைகளும்குதிரைகளும்பின்னுக்குவாங்கிடக்கால்பதறவும்
அறுந்தகொடிமேல்-பருந்துவீழவும்அங்கேரத்ததுளிசிதறவும்
சேனைகாவலர்-வாயெல்லாம்வெறும் பானைபோல்வரண்டுதறவும்
சேரநாய்களும்பேய்களும்அழச்சூரியனைப்பார்த்தோர்கதறவும

இப்படியா

உ. தோள்வளை சரிய-மலைகள் கரிய இடப்புறக்கண்கள்-துடிக்கவும்
தோகைமார் அழுகாகம்மேல்விழ ஆகாவாய்ச்சொல்-படிக்கவும
வாளின்வாய்முனை-மடங்கவும்கருந் தாளிஆனதுபிடிக்கவும்
வாளின்மேற்கரு-மேகம்இல்லாமல் வல்லிடி-இடிக்கவும-கொ
இப்படியா [ள்ளிகள்வெடிக்கவும்

ங. முறைமுறையாய்த்தேரிலேகட்டுமெவிருதுசேதனம்அழியவு
முரசமும்பேரியுமடமானமும் சருகுபோலே-கிழியவும்[ம்
மறவர்கள்பூசும்சந்தனம் வற்வறன்றுபோய்க்-கழியவும்
மண்மாரிகள்ஆனவைபொழியவும் பெண்ஆனையிலேமதம்-வழி
இப்படியா [யவும்

ஸ்ரீராமர் தேர் ஏறுதல்.

சந்தவிருத்தம்.

ஆசைகள் அதிர இவரவசகுனம் இராவணன்எதிர்படதேர் விடலால், ஆண்மைகள்பெருகியதீமறுபடி அனுமான்மிசைவருகல்ஒறுதுமுனே, மாசறுசதுர்முகனநேசமொடுதவிய வாசவன்விடுகிறதேர் இதன்மேல், மாருதிபுசம் எனஏறுதிஎனவருமாதலிஉரைசெயஆதரவாய் ஏசறுமுதுமறைஏறிடவிதிநிலை ஏறிடமுனிவர்கள்தேவர்கள்ஈ, டேறிடமகம்நிறைவேறிட அவரவர் ஏறியபதவியில்ஏறிடவே, வீசியமழைபொழிகார்முகில் ஒளிவிடுமேருஎன்மலைமிசைஏறுதல்போல், வீரன்இரவிகுலதீரன் அதுலரகுவீரன்இரதமிசைஏறினனே.

எஅ தரு-சாவேரிராகம்-அடதாளாப்பு.

பல்லவி.

தேர்ஏறினனே-ராமச்சந்திரன்-தேர்ஏறினனே

அநுபல்லவி

பார்மேலேவைபத்து நேர்அல்லஅரவிந்த
பாதம்வைப்பாய்என்று மாதலிகோடுவந்த—தேர்

சரணங்கள்.

க. சோதிமதிநுதலில் திருநாமம்அணிந்திட்டு
துலங்கும்அம்புருத்துணி வலப்புறத்தினில்இட்டு
காதல்செய்யும்தும்பை மாலைதோள்மேல்விட்டு
கச்சைகட்டியமார்பில் வச்சிரக்கவசம்தொட்டு
குரோதம்செய்யும்இள நகைவிடுத்துக்கொண்டு
பாதம்தன்னில்மிதி யடிதொடுத்துக்கொண்டு
கோதண்டம்ஒருகை யினில்எடுத்துக்கொண்டு
தாய்தந்தமரவுரி யினைஉடுத்திக்கொண்டு—தேர்

உ. ஆர்வாரம்செய்யும் வீரவெண்டயம்சாத்தி
அங்கைத்தலத்துக்கு முன்கைக்கட்டியும்ஏற்றி
தாரணிஉள்ளோரும் வானவரும்போற்றி
தான்சொல்லவேலட்சுமிகாந்தன்என்றேதோற்றி
வீரபட்டம்வி சாலம்உள்ளநெற்றி
நேரில்இட்டதி காம்உள்ளகத்தி
ஓர்வலப்புற மீதினிலேசுற்றி
ஆரும்ஒப்பிடொ ணாதஒருவெற்றி—தேர்

௩. தேவர்மடந்தையர் சோபனங்கள்பாட
சீதைமனதில் நினைந்ததுகைகூட
தாவும்மலர்க்கை முனிவர்கள்கூத்தாட
சூரியன்தேர்ஓட்ட லங்கைமேற்கண்போட
யாவரும்கண் கண்டுதேறவும்
பாவிகள்சந் தங்கள்மாறவும்
தேவருககா நந்தம்ஊறவும்
ராவணன்வை குந்தம்ஏறவும்—தேர்

மகோதரன்வதை.

விருத்தம்.

திருத்தேர்ஏறிராகவனும் சென்றான்போர்க்குமகோதரனும் தரிக்காதெழுந்து ராவணன்பால் சார்ந்துபோர்க்குவிடைகொடென்ன, செருத்தான்செய்துலட்சுமணனை செயித்துவாவெனறனுப்பவந்து, கருத்தாவானராகவனைக் கடிந்தான்அவனால் மடிந்தானே.

எசு-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

மடிந்தானேமகோதரன்-ராமன்கை அம்பால்-படிந்தானேமண் [மேல்

அநுபல்லவி.

கடிந்துராவணனல்லட்சு மணன்மீதில்விடப்பட்டு
கடுகிஓடிஅவன் மீதில்ப்போரினைவிட்டு
தொடர்ந்துராமன்மீத னேகசரங்கள்தொட்டு
சூதும்வாதும்சாமி தொடுங்கணையாற்கெட்டு (மடிந்)

சரணங்கள்

க. அனுகூலசத்துராதி-ஆகிஇருந்தரா
வணன்குடியினைக் கெடுத்து-தன்னுடைய
அகத்திலெண்ணமெல்லாம்-முடித்திலங்கையின்மேலே
ஆசை யினையுமவிடுத்து-இணை இல்லாரா
மனுக்குரதம்அனுப்பும் - தேவர்களையும்மக
வானையும் கடுகடுத்து-லட்சுமணனை
மடித்துவருவேன்என்று-வீரம்பேசக்கையில்
வலிய தனுவைஎடுத்து-அதிககடுஞ்
சினத்தோடெபெருந் தேரைஓட்டிக்கொண்டு
சேனைகளைஎல்லாம்தன் பின்னேகூட்டிக்கொண்டு
கனத்தவில்லைவளைத்து நாணைப்பூட்டிக்கொண்டு
கணைகள்எய்தராமன் கையில்மாட்டிக்கொண்டு (மடி)

உ. போர்களத்தினில்வந்து-அட்டகாசம்செய்து
பூமிஎங்கும்நடுங்கி டென்ன-லட்சுமணன்மீதிற்
போகவிட்டிடும்தேரை-மறித்துராமன்மீதிற்
போகட்டும்விடுவி டென்ன-சாரதிஇந்தப்
பார்க்குள்ராமனைவெல்லக்-கூடாதென்றுசொல்ல
பற்களைநெடநெ டென்னவேகடித்து
பார்அடாஉன்னைவிழுங்-குவேன்என்னசாரதி
பயந்துடல்விடுவி டென்ன-நடுநடுங்கி
கார்க்கடல்வண்ணன்ரா மன்மீதில்தேர்விட
கலங்காமலேமகோ தரன்நின்றுபோரிட
ஆர்க்கும்சேனைராமன் அம்பினாற்பேர்கெட
அதம்ஆகஅவன்மார்பில் ஓர்அம்பின்கூர்பட (மடி)

ங. மாலியவான்சொல்லால்-சீதையைவிடவேஷம்
மதித்தராவணனை அன்றுதடுக்கப்பெரு
வயிற்றைச்சாய்த்துக்கொண்டு-குடுகுடென்றேஓடி
வஞ்சனைஎண்ணி நின்றுஅதிகபல
சாலியானரா-வணனேமூவுலகமும்
சௌரியத் துடனேவென்று-இன்றுமனம்
தளர்ந்திந்தச்சனியை-விடலாமோபோபோஉன்
தனக்கிது சரியோஎன்று சொல்லியேகொல்லும்
காலனைப்போல்அவன் பாவிலேயிருந்து
கழுவாக்கரைத்துநாளும் கலகம்செய்துதிரிந்து
சிலராமன்கணைக்குத் தன்சேனையைவிருந்தா
செய்வித்தோர்களைபார்த்தன்-பெருவாயினஞ்சரிந்தும()

கடைசிநாளில் இராமராவணயுத்தம்.

விருத்தம்.

திடுதிடெனவோடிமகோதரனும்சென்ற
சேனைகளும்சாமிகையில்மடிந்தபின்பு
முடுகியிருவரும்தேரில்எறிக்கொண்டு
மூதண்டகோடிகளும்நடுங்கவிட்டே
கடுகிமலையோடுமலைஎதிர்த்தாற்போல
கடலினொடுகடல்எதிர்த்தாற்போலவிற்கொண்
டடும்இராகவனும்இராவணனும் அங்கே
அடுத்திட்டார்சண்டைசெய்யத்தொடுத்திட்டாரே

அ௯. தரு-தோடிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

ராகவனுக்கும்ராவணனுக்கும்-நடந்ததேசண்டைதொடர்ந்ததே

அநுபல்லவி.

மேகத்தைப்போலவே அய்யன்கணைகள்சாட
மேலைத்ததைக்காணமல் வெய்யன்கணைகள்மூட
வாகொத்ததேர்மேலே இருவரும்கதித்தாரே
வானமும்பூமியும் ஒன்ருகமதித்தாரே
வானரவெள்ளம்-கடல்போலே களத்தைப்பாய்வளைக்கவும்
ஈனர்விடுகைசரத்தாலே நெரித்துப்போய்-இளைக்கவும்
வாரிவிடும்கற்-பெருக்காலே அரக்கர்க்காவி-துள்ளவும்
வீரர்விடும்கைத்தடிக்குச்சூழ் குரங்குச்சேனைவிள்ளவும்
வாடவையொடுபொரு வடவைஎனநிலை
மலையினொடுபொரு மலையதெனஅலை
கடலினொடுபொரு கடலதெனவிரி
ககனமொடுபொரு ககனமெனஅரி (ராக)

சரணங்கள்.

க. அரக்கன்ராவணன் சிலசிலகணைஎய்தான்
அதைக்கண்டராமன் தவிடுபொடிகள்செய்தான்
அரக்கன்நூறுநூறு யிரம்அம்புதூற்றினன்
அதைக்கண்டேராமன் கொடிஒன்றில்மாற்றினன்

அரக்கன் ஆயிரம் ஆயிரம் ஆயுதம் தொட்டான்
அதைக்கண்டே ராமன் தூளிகள் தூளிகள் இட்டான்
அரக்கன் தேரை ஆகாசத்திற் போக்கினான்
அதுக்கும் சாமி தேர் மேலாகத் தூக்கினான்
ஆதிநெடுஞ்சே-ஷனும் பட்சிசனும் பொற்றாணிடத் தேகன
காசுரனும் சிங்கமும் தப்பர் - தடுத்துப் போர்-தொடுத்தால் எனா
ஆனதுராங்கம் திருப்பிக் கோல் பிடித்து தேர் விடுத்தே வரும்
மாதலி சங்கம்-தொனிக்கச் சேபயப்பட்டார் முடித்தேவரும்
அக்கணம் இருதேரும் தடம் தத்தும் நிலம் தத்தும்
திக்குத்திசைகளும் போய் இடம் சுற்றும் வலம் சுற்றும்
அப்புறம் மலை தாவும் அலை தாவும் கடல் தாவும்
இப்புறம் செவி தாவும் புவி தாவும்-கெவி தாவும்
அன்று முனிவர் பயந்து கடகட
என்று பததிர நடுங்கிவிடவிட
அண்டமுகடுபி ளந்து நிலைகெட
மண்டலமும் மிசை விண்டு தலைகெட
அதிர மலைகளும் அதிர நிலைகளும்
அதிர வெகுதிசை அதிர மழை இடி
அதிர உகதிகள் அதிர மதிகதிர்
அதிர உடுவினம் அதிர இப்படி (ராக)

உ. வடதிசை முதல் நாலு திசையும் போவார்
கட்லிலும் போவார் கடல் அப்புறமும் போவார்
மனது வேகமோ வாயுவேகமோ வென்ன
கனகலோகமோ கீழுலகமோ என்ன
வருவர் ஓடுவர் கூடுவர் இருதேரும்
பொருவார் சேருவார் நேருவார் இதை ஆரும்
வசனமாக உரை யார் சொல்வார் ஒருக்காலே
குசவன் ஆனவன் விடு திரிகையை போல
மாரிவழங்கும்-பிரசண்ட கொண்டலைப் போல இடித்தார் பல
திவும் விசும்பும்-குலுங்கச் செஞ்சாக்காடா-முடித்தார் செல
மாதலி அங்கம்-தொளைத்துப் பாய் பரிக்குக் கோல்- விடுத்தான் ஓர்
சாமி நெடுந்தேர் மறைத்தங் கேதுசத்தைக் கீழ்ப்படுத்தான் அவன்
வளையராகவன் தேரை நிருதன் மூடலாலே
இளையவன் முதல் ஆனோர் களையானார் அதன் மேமேலே
மணவாளராகவன் பனிபோல ஒறுத்தானே
கணையெல்லாம் அறுத்தவன் கொடியையும் அறுத்தானே
மால் ஒத்தவன் படை மாரிபெய்திட
சூலபடை கொடு சுவாமி கொய்திட
வன்னிவாளியை அவன் விடுத்திட

அன்னதம்பி தனைகொடு — சாமி தடுத்திட
மாமயன்படை — அரக்கன்தொடுக்கவும்
சாமிகந்தரு — வாஸ்திரம்எடுக்கவும்
மகலோகமும் — புவியும்பொடிப்பொடி
ஆகவேகள — மீதில் அடிக்கடி (ராகவ)

௩. சாமிமேல்ஒரு — தெண்டவன்விடுத்திட
சாமிஓர் அம்பு — கொண்டதைத்தடுத்திட
சாமிமேல் அவன் — மாயாஸ்திரம்போட
சாமிதான்ஞானஸ் — திரமதொடுத்ததைச்சாட
சாமிமேல்ச்சூலம் — அவன்விடச்சினங்கொண்டு
சாமிஓங்காரம் — செய்ததுவிழக்கண்டு
சாமிமூவரும் — இவன்என்னும்விவகாரம்
தம்பிசொன்னதை — நினைந்தெண்ணம் அந்நேரம் [ன்
தாகருடன்செஞ்சரத்தைக்கைப்பிடித்துச்சாமிதொட்டே அவ
ாகம்எனும்செஞ்சரத்தைக்கொத்தவிட்டுத்தூளிஇட்டான்ஒரு
சாமிதிரும்பதொடுந்துப்பொற் பிறைக்கொக்கும்சரத்தால்வரு
ராவணன்நெஞ்சைத்-தொளைத்தொற்றைச்சிரத்தைதுண்டம்இ
தறிபடுசிரகரம் — அவனுக்குமுளைத்திட [ட்டான்
சரிசரி அரியவே — வரவரக்கிளைத்திட
தறிபடுகையால்மா — த்லிமார்பைகலக்கினுன்
அவன்விடுதோமரத் — தையும்அய்யன்விலக்கினுன்
தயித்தியன்சரீ — ரம்நிறைந்திட
மயிர்க்கோர் அம்பது — ஆய்மறைந்திட
சலித்தவன்களை — ஆய்விழுந்திட
உணர்ச்சிகொண்டிட — னேஎழுந்திட
சரமும்விடுவிடு — படையுமபொடிபட
சகலரதகச — தளமும் அடிபட
இருவர்மனதிலும் — வளரமுதுபகை
எமனும்உடல்விட — விடௌ இவ்வகை (ராகவ)

ச. எடுத்துராவணன் — ளைத்தகைச்சிலைதன்னை
ஒடித்தும்நாணியை — அறுத்தும்இப்படிபின்னை
இடக்கையோடவன் — வலக்கையும்விழஎன்று
அடித்துராகவன் — முடுக்கினுன்கணைஒன்று
இழுத்துத்தேவரு — பரியும்பாகனும்சாக
அழுத்ததாணியும் — குடையும்படையும்போக
எதிர்த்தராவணன் — ஒருபதுமுடிமேலே
பதைத்துமாமலை — யினில்விழும்இடிபோலே
ராமன்விடும்செஞ்சரத்திற்கொத்துடைப்பத்துப்பனங்காய்என

நாய்நரிமண்டிக்-கடிக்க கொக்கரித்துச்சுற்றிலும் - பேய்விழ
ராகவன் இப்படி-தொடுத்துக்கத் தரிக்கக்கத்-தரிக்கத்தலை
ராவணனுக்குச்-சரிக்கட்டிச் சரிக்கட்டிக்-கிளைத்துக்கொள
இப்புறம்ராமன் அரக்கன் மாளும்வகைஎண்ண
அப்புறம்விபீஷணன் உபாயமுறைபண்ண
லட்சுமிசீதையும்காவல் கொண்டசிறைதிர
தட்சணசூரியன்தேரும் லங்கைவழிசேர
இணக்கிடும்கர தண்டமனுபதி
வணக்கிபிய்கோ தண்டநடுவதில்
இட்டுகைப்பிரம மாஸ்திரம்தனை
விட்டிடத்தனி ராட்சதன்புனை
ரத்தினமணிமரு மத்தின்இடையிட்டு
வைத்தஅமுர்தக டத்தில்அடிபட்டு
மத்தன்விடுகிற சித்திரதம்விட்டும்
பத்துமணிமுடி. தத்திவிழும்மட்டும்(சர்கள)

ஸ்ரீராமபாணத்தால் இராவணன்இறந்தது.

சந்தவிருத்தம்.

தாவிமுடிக்கயிலாசஎடுத்திரு - நாலுமதக்கரி-யைச்சாடி, சூரியனைத்திசை-மாறவிடுத்தொரு-சூறையடித்த-மிடுக்காலே, பூவுலகத்தவர்-கீழுலகத்தவர்-மேலுலகத்தவர்தப்பாதே, பூசைசெலுத்திட- ஆண்மைசெலுத்துபு - பாசலமிக்கத-சக்கிரீவன், ஆவல்மிகுத்தொரு-சீதைபொருட்டினில்- வீரமும்வெற்றியு-முக்கோடி, ஆயிசும்மட்டிடோ-ளுதஅரக்கரும் ஆடலம்ஒக்க-விடுத்தேபின், யாவரும்இக்கதை-ஆமுதொப்பென-வேதினம்உத்தமர்-கற்றேத, ராமசரத்திலில்-மாமலைஒத்தஇ- ராவணனிப்படி பட்டானே.

அண்ணன்இறந்ததர்க்காக விபீஷணர்புலம்பல்.

விருத்தம்.

நிருதன்இவ்வாறழிந்தபின்பு சாமிதேரில்
நின்றிறங்கிஇவன்முதுகில்வடுவேதென்றான்
வரும்முதல்நாள் அனுமான்கைக் குத்தால்வந்த
வடுஎனவிடணன்சொல்ல மகிழ்ந்தான்இப்பால்
அருளும்அய்யன்ஏவலினால் இளனும்போனால்
அண்ணாஅண்ணாஎன்றே அண்ணன்மேலே
ஒருமலைமேல்ஒருமலைபோல் வீழ்ந்தேகண்ணீர்
ஒழுகின்றான்பழமைசொல்லி அழுகின்றானே

௰௧-திபதை ஆகிரிராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

க. உண்டாற்கொல்லும்விஷம்-உலகத்திலெங்கெங்கும்
உண்டோ அண்ணாவே-சீதையென்று
கண்டாற்கொல்லும்விஷம்-உன்னிடத்திலேமாத்திரம்
கண்டேன் அண்ணாவே

உ. இந்தஅநியாயத்தை-பிரம்மாவுடன்சொல்ல
இறந்தாயோ அண்ணாவே-சீதைமேலே
பந்தித்தஆசையும்-உயிரோடேகொண்டு
பறந்தாயோ அண்ணாவே

௩. உள்ளதோசீதையை-திருடுவதென்றஎன்னை
ஓட்டினாய் அண்ணாவே-உலகிலே
கள்ளனுக்கூஎன்-றவன்மேல்பகைபோலக்
காட்டினாய் அண்ணாவே

௪. அடிநாளைச்சாபத்தீடு-சீதையாய்வந்ததென்றேன்
அலைந்தாயே அண்ணாவே-உடம்பெங்கும்
சுடுகிறசெந்தணலை-மடியிலேகட்டித்
தொலைந்தாயே அண்ணாவே

௫. வினையாதசீதையை-குலையும்வாழ்வென்றஎன்சொல்
நிறைந்ததோ அண்ணாவே-ராமனை
மனிதன்மனிதன்என்ற-வாயும்துடிக்கும்எங்கே
மறைந்ததோ அண்ணாவே

௬. வள்ளல்கும்பகர்ன்னனும்-மாலியவான்சொல்லியும்
மருண்டாயே அண்ணாவே-அடங்காமல்
துள்ளினமாடுபொதி-சுமக்குமென்றாற்போல்பட்டுச்
சுருண்டாயே அண்ணாவே

௭. சுற்றமும்சேனையும்உன்-பத்துமுடியும்முதல்நாள்
சேர்ந்தாயோ அண்ணாவே-எல்லாரும்
செத்தபிறகாகிலும்-ராமனைதெய்வமென்று
தேர்ந்தாயே அண்ணாவே

௮. பரந்தகைலாசமும்-உன்னுடைதோளுக்குப்
பற்றுமோ அண்ணாவே-தோள்மேலே

சாந்துகுரங்குகூட்டம்-இப்போதணிஅணியயத்
தொத்துமோ
அண்ணுவே

௯. விரிந்ததேவர்க்கெல்லாம்-கடைக்கல்கொடாமல்வெடு
வெடுத்தயே
அண்ணுவே-களத்திலே
பருந்தும்கழுகும்கொத்த-முழுமுழுக்கண்கொடுத்துப்
படுத்தாயே
அண்ணுவே

௰. பூமலர்அம்புகளைக்-காமன்கைஎய்தெய்து
பொழிந்ததே
அண்ணுவே-இப்போதிந்த
ராமன்எய்தபிறகுக்-காமன்எய்கிறதெல்லாம்
இழிந்ததோ
அண்ணுவே

௰௧. சிறுமதிகொண்டல்லவோ-மறுபெண்கள்மேல்ஆசை
திரண்டாயே
அண்ணுவே அவரவர்
பொறுமைஇடித்தல்லவோ-மண்என்கிறபெண்மேலே
புரண்டாயே
அண்ணுவே

௰௨. பிரம்மாதிதேவர்கள்-தந்தவரங்கள்எங்கே
பிரிந்ததோ
அண்ணுவே-இன்றைக்கெம
தருமராஜனுக்கும்-உன்னைத்தின்றுதொங்கி
சரிந்ததோ
அண்ணுவே

மண்டோதரி புலம்பல்.


விருத்தம்.

நாடிவிபீஷணன்இவ்வா றழுதபோது
நல்லசாம்புவன்தேற்றத் தெளிந்தான்இப்பால்
பாடல்செய்யுமமடமாதர் அரக்கர்மாதர்
பாதாளமாதர்முதலபலரும்சேர்ந்து
கூடமண்டோதரிஅங்கேகொள்கொம் பில்லாக்
கொடிபோலராவணன்பேர் உடல்மேல்விழுந்து
தேடரியதுணை இழந்த கிளிபோல்வாயைத்
திறக்கின்றுள்அழுதழுது பறக்கின்றுளே

௰௫ திபதைகாம்போதிராகம் ஆதிதாளம்

கண்ணிகள்.

௧. என்னசெய்வேன்என்னசெய்வேன்-மைந்நாகமலைபோல்உ[ன்னை
இங்கேகண்டுநொந்தேனநொந்தேன்லங்கைமன்னவாஐயோ



ஸ்ரீராமபாணத்தால் இராவணன் இறந்ததற்குவிபீஷணர் புலம்பல்

உன்உயிரைக்கொன்றநமன்-என்உயிரும்கைக்கொள்ளானே
ஓடிஇதோவந்தேன்வந்தேன் லங்கைமன்னவா

௨. கண்ஆனபேர்களைஎல்லாம்-புண்ணாக்கிவிட்டனன்என்னும்
கரும்பையும்வேம்பாக்கிவிட்டாய் லங்கைமன்னவா-ஐயோ
பெண்ஆனசீதைபிறக்க லங்கைஅழிந்துபோமெனற
பேச்சையேமெய்ஆக்கிவிட்டாய் லங்கைமன்னவா

௩. தினம்இந்தலோகத்திலே-தேவாராலும்சகாயம்என்று
சிந்தைமகிழ்ச்சிஆனேனே லங்கைமன்னவாஐயோ
வினைபோல்இந்நாளில்ஒருமனிதனாலேசாவாய்என்று
விதிஅறியாமற்போனேனே லங்கைமன்னவா

௪. சீனதஆசையைவெளியில் ஓதாமல்அடக்கிக்கொண்டு
செருக்களத்தில்தூங்கிறாயோ லங்கைமன்னவாஐயோ
ஏதையாசொற்கலோகத்து-மாதருக்குள்உனக்கேற்க
எந்தப்பெண்ணைக்காண்கிறாயோ லங்கைமன்னவா

௫. எட்டானைக்கொம்பும்பிடுங்க-ஒட்டாமற்கெட்டியாகக்கெட்டி
இருக்கிறமணிமார்பாச்சே லங்கைமன்னவா-ஐயோ
சட்டம்ஆகராமன்அம்பு-பட்டாடைமேல்ஊசிபோலத்
தட்டாமல்உருவிப்போச்சே லங்கைமன்னவா


௬. ஊரிலேசீதைமேல்வைத்த-ஆசைஇந்தமட்டும்எங்கே
ஒளித்திருந்துவாதிச்சதே லங்கைமன்னவா-ரகு
வீரன்பாணம்உன்உடம்பை-எலிவெட்டிசோதிக்கிறாப்போல்
வெட்டிஇன்றுசோதிச்சதே லங்கைமன்னவா

௭ அனர்த்தமாவிளையும்அய்யோநினைக்காதேசீதையைஎன்றேன்
அன்றுகேளாமல்வைதாய் லங்கைமன்னவா-நான்
உனக்குமுந்திக்கொள்ளாதமுன்-எனக்குநீமுந்திக்கொண்டா
ஓரவஞ்சகம்செய்தாயே னலங்கைமன்வா[யே

௮. நங்கைசூர்ப்பனகிசனகன்-நங்கையைஎடுக்கச்சொல்லி
நமன்போல்வந்துநின்றாளே லங்கைமன்னவாஐயோ
என்கழுத்தும்பாவிஅவள்-தன்கழுத்தைப்போலேஆக்க
எண்ணியேஉன்னைக்கொன்றாளே லங்கைமன்னவா

௯. அநதம்ஆய்சீதையைஆரும்-வந்தனைசெய்யும்தெய்வத்தை
ஆரோபோல்ஆசைபட்டாயே லங்கைமன்னவாஐயோ
இந்தமாத்தைவெட்டினால் இந்தயிடத்திற்சாயும்என்
றெண்ணாமற்புத்திகெட்டாயெ லங்கைமன்னவா

௰. வேதன்முதலோர்வரப்பிர-சாதத்தால்மூவுலகும்
வேந்தன்எனவாழ்ந்திட்டாயே லங்கைமன்னவா-ஐயோ
சீதைஆம்புரைமோர்விட்டு- வாழ்வாம்பாற்கடல்கெடுத்து
தெருவிலேஎன்னைவிட்டாயே லங்கைமன்னவா



இராவணன் இறக்கக்காமண்டோதரிபுலம்பல்.

சீதாதேவிக்கு அனுமார்சேதிகூறல்.

விருத்தம்.

ஆனவன்டோதரிஇவ்வாறழுதுசோர்ந்தாள்
அரக்கனுக்குக்கடன்விபீஷணனும்செய்தான்
வானரவேந்தனும்தம்பிதானும்செம்பொன்
மௌலிவைக்கயிலங்கைஅபிஷேகம்கொண்டான்
மானவனும்மாருதியைஏவத்தான்போய்
வாடியதோர்பயிர்க்குமழைபொழிந்தாற்போலச்
சானகிதன்காதில்இராவணன்போய்வீழ்ந்த
தனம்சொல்வான்மகிழ்ந்துசோபனம்சொல்வானே

அக-தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோபனம்சொல்லவந்தேன்-உன்தன்-தொண்டன்அனுமந்தன்

அநுபல்லவி

சோபனம்சானகித்தாயே முந்தமுந்த
சுவாமிராமகாரியமேசெயம் அந்த—சோபனம்

சரணங்கள்.

க. ராமசாமிவிடும்ஒருகணைபட்டு-ராவணன்உயிர் விட்டொரு
மாமலைபோல்தரைமேல்வீழ்ந்தானே வைகுந்தம்சேர்ந்தானே
இந்த சோபனம் [லைபோல்லப்
உ. தேவர்முனிவர்சிறைநீங்கிமுன்போலே-செழிப்பாய்உன்னு
பாவிஅரக்கன்பயங்கரம்விண்டாரே-பதவிகள்கொண்டாரே
இந்த-சோபனம் [னேஇப்போ
ந. இங்கேமுன்மோதிரம்தந்துநானே-இருளென்றுசொன்னே
தங்கேநீஎழுந்தருள்எம்மானே-அனுக்கிரகம்செய்தேனேஇந்த
சோபனம் [னம்அம்மா
ச. சந்திரன்இந்திரன்தேவர்க்குஸ்தாபனம்சகலர்க்கும்சோப
இந்தஅரக்கியரைநான்கொல்லவேணும் எனக்கிதுசோபனம்
காணும்-இந்த-சோபனம்

சீதாதேவிஅனுமாரைஉபசரித்தல்.

விருத்தம்.

கனம்மலர்ந்தராமதூதவன்இதுசோபனம்சொல்லக்காதில்க்கொண்டாள், தினம்மலர்ந்தசாமிதிருவடிமலரைத்திசைநோக்கித்தெண்டனிட்டாள், தனம்மலர்ந்தாள் அகம்மலர்ந்தாள் முகம்மலர்ந்தாள் என்அன்னைசனகிமுன்னாள், மனமலர்ந்ததுறைஎல்லாம்மாற்றினள் அனுமானைவாழ்த்தினளே.

௮௨ தரு-மோகன-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

எந்நாளும் வாழிநீதானே-என்தெய்வம்
உன்னைப்போல்உண்டோ - அனுமானே

அநுபல்லவி.

தென்இலங்கைஅரக்கன் தன்னைப்பட்சித்தாயே
பின்னைமங்களம்சொல்லி என்னைரட்சித்தாயே—எந்நா

சரணங்கள்.

௧. இருக்கும்சிறைமீட்பேன்என்ற வாக்கியம்என்முன்
உரைத்தபடிசெய்தாயேஎன் பாக்கியம்-அப்பாவுன்
கருத்தில்நீபிடித்ததேவை ராக்கியம்-உனக்குப்
பெருத்தமூவுலகும் கொடுத்தென்னசிலாக்கியம்
சிரத்தினால்வணக்கம் செய்வதேயோக்கியம்—எந்நா

௨. மனத்தில்அடங்கா விசாரம்நீக்கி
எனக்கிதுநீதந்த சரீரம்-அய்யா
இனிச்சொல்வதென்ன உபசாரம்-அங்கே
தனித்தசாமிக்கும் செய்தாயேஆதாரம்
உனக்குநான்என்ன செய்வேன்உபகாரம்—எந்நா

௩. இதம்ஆம்என்சொல்ஒன்றும் தட்டாதே-கோபம்
இவ்வரக்கியர்மேல் எட்டாதே-இன்னம்
உதவிசெய்யும்செய்கை விடாதே-வரங்கள
எதுவும்தந்தேன்நீ இனிபயப்படாதே
முதல்வர்மூவருக்கும் முறுகுகொடாதே—எந்நா

சீதாதேவி அக்கினியில் குளித்து எழுந்தது

விருத்தம்.

செவிக்கேசுபம்சொல் அனுமானைத்தேவி இவ்வாழிகள் சொன்னாள், திரவிபீஷணனும்சென்றான் திருச்சேவைக்குச்சமயம் என்றான், புவிக்கோர்தாயேவருகஎன்றான் பூவைபழங்கோலம் கொண்டாள், பூவாகனமேற்சென்றையன்புனைதாள் அம்மை பணிந்துநின்றாள், தவத்தோர்க்கருளும்சிராமன் தனதுகுறிப்பு வேறாகச், சாமி அடியேன்செய்தபிழைசகிப்பாஎன்றாள் தலைமேற்கை, குவித்தாள்முக்கால்வலம்வந்தாள் கொழுந்தன்வளர்த்த செழுந்தணலிற், குதித்தாள் அப்போதெழுந்தபருங்கொழுந்தாய் சீதைஎழுந்தாளே.

அங-தரு-பிலாஹரிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

எழுந்தாளேபூங்கோதை-எழுந்தாளேசீதை

அநுபல்லவி.

கொழுந்துபோல்ஒளிஓங்கி-குளித்தசெந்தணல்நீங்கி—எழுந்

சரணங்கள்.

க. புரந்தான் இந்திராணி - பூமேல் ஆரண்வாணி
பூதேசன்சர்வாணி
அருந்தவன்உடன் - கூட அருந்ததியுங்கொண்டாட
அமரர்சோபனம்பாட பூமலர்போட—எழுந்

உ. திருமேனிதன்னில்வன்ன - செழுமஞ்சள்ஒளிமின்ன
திசைஎங்கும்பளபளென்ன
தருமம்புகழ்ந்து துள்ள - தழைக்கும்எழுபது வெள்ள
சகலசேனையும்மெள்ள கவலைதள்ள—எழுந்

ங. மலரடி க்சங்காமல் - மணிக்கூறைமசங்காமல்
மாலைவண்டசங்காமல்
கலவைசாரம் வாங்காமல் - கனிவாய்நகைநீங்காமல்
கண்டோர்கள்ஏங்காமல் க்ஷணம்தாங்காமல்—எழுந்

ச. குங்குமம் புலராமல்-குழல்மேல்மைமலராமல்
கூந்தற்பூஉலராமல்
அங்கேராமன்முன்னாலே - அக்கினிதேவன்கைமேலே
அலர்ந்ததாமரைப்போலே மின்னலைப்போலே—எழுந்

அக்கினிபகவான்முறையிடல்.

விருத்தம்.

எழுந்ததோர்சீதைதன்னை ஏந்தியஅக்கினிதேவன்
செழுந்துழாய்மாலைராமன் திருமுன்னேவைத்துவீழ்ந்தான்
புழுங்கினேன்சாமிஇந்தப் பூவைகற்பேன்னும்தீயால்
அழுங்கினேன்எனத்தன்வாய்மேல் அறையிட்டான்முறையிட்
[டானே

அச. தரு-பியாகடைராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

என்னபிழைசெய்தேன்சாமி நான் - அக்கினிதேவன்
ஏதுபிழைசெய்தேன் சாமி

அநுபல்லவி

பன்னிச்சீதைதன்னை என்னில்இடுவித்தாயே
பதிவிரதாக்கினியாலே என்னைச்சுடவைத்தாயே—என்னபி

சரணங்கள்.

௧. ஏதொருபொருளையும் சுடுவதெனதுசென்மம்
என்னையும்சுட்டதிந்த அன்னைபத்தினிதன்மம்
வேதத்திலும்எனை அல்லால்உண்டோஒருகன்மம்
மெய்பொய்விளங்கும்என்மேல் செய்யலாமோவன்மம்-எ

௨. பாலும்பதக்குமோரும்பதக்கென்றெண்ணப்போமோ
பைங்தொடிசீதைக்கிணை எந்தப்பெண்கள்தாமோ
நாலும்தெரிந்தும்இந்தக் கோலம்செய்யலாமோ
நங்கைஇவளாலேஎன் அங்கம்இப்படிவேமோ—என்

௩. நீதிஅனுமான்சொன்னசேதிக்கும்உண்டோலோபம்
நினைப்பறிந்தும்சோதித்தாய் உனக்கிதில்என்னலாபம்
சோதிஅருந்ததிக்கும் சீதைக்குண்டுபிரதாபம்
சொன்னேன்சத்தியம் இதற்கென்மேல்என்னகோபம்—என்

ஸ்ரீராமர்சீதாதேவியை அங்கீகரித்தல்.

விருத்தம்.

மாட்சிஇவ்வாறுசொல் அக்கினிதேவனைவள்ளல்கண்டாள்
சாட்சிஎல்லாருக்கும் நீயேசனகிக்குஞ்சத்தியம்சொன்னாய்
மீட்சிசெய்வார்என்று விட்டான்அப்போதுமிதிலைவல்லி
காட்சிசெய்ராகவன் முன்னேஇருந்து களித்தனளே

பிரம்மதேவர் ஸ்ரீராமரைத்தோத்திரம்செய்யல்.

விருத்தம்.

அனம்போல்இவ்வாறெழுந்தாளை அருளால்நோக்கிரகவனும்
கனம்சேர்க்கென்றான்சனகிகுணம் கண்டுதுதித்தான்பிரமாவும்
நினைந்தான்சாமிநின்மகிமை நீயேஅறிவாய்சீதையின்மேல்
சினந்தான்ஏதென்றவள் பெருமைதெரிப்பான்புகழ்ந்துவிரிப்
[பானே

டுரு திபதை-பூபாளராகம்-அடதாளாப்பு.

கண்ணிகள்.

க. பரராமாரவி குலராமாபுச
பலராமாகோ சலராமா
சாராமாமனே கரராமாசௌந்
தாராமாஆ யிரம்நாம-ராமராமா

உ. பள்ளமாயையினிற் குள்ளேபுகுந்தெவர்க்கும்
பரமபதம்தருவாய் என்கோவே
கள்ளனும்ஆய்நின்று விளக்கும்பிடிக்கிறாய்உன்
கபட்டைஆர்அறிவாரென் கர்த்தாவே-ராமராமா

ங. மூக்காடிட்டபிள்ளை முன்னின்றபிள்ளை அல்லால்
முதற்குட்டினபிள்ளை அறியாதே
இக்காரியம்போல ஒன்றைஒன்றெதிர்காட்டி
இடைநின்றஉனைக்காண்ப தெப்போதே-ராமராமா

ச. நீதியாநாலாறு பேருக்குள்ஒருவனை
நீக்கிஅருளும்வித்தை பூண்டாயே
ஆதிமூலம்என்ற நாதத்திற்பாதம்வைக்க
ஆனைக்குமுன்னேவந் தாண்டாயே-ராமராமா

ரு. கயிற்றைப்பாம்பென்றெண்ணிக் கலங்கும்வண்ணம்ஒரு
கருக்கல்உண்டாகிய வகைபோலே
மயக்கத்திலேநாங்கள் மயங்கும்வண்ணம்இந்த
மயக்கம்காட்டலாமோ நெடுமாலே-ராமராமா

சு. ஞாலம்தண்ணீர்அனல் வளிவெளிஇவற்றைந்து
நாலும்மூன்றிரண்டொன்றும் அதிகார
கோலம்மானிடம்காட்டி ஆளுக்குள்ளேஆளாய்
குறுகுறுக்கிறதென்ன ரகுவீரா ராமராமா

எ. மாயைதனைப்படைப்பாய்மாயையையும்துடைப்பாய்உன்
வல்லமைஅறியா தல்லோபூமி
மாயைக்குள்திரும்பவும் மயக்கம்காட்டினல்உன்
மகிமையைஅறிவ தெப்படிசாமி ராமராமா

௮. நீயும்சீதையும் பெற்ற தாயுந் தந்தையுமன்றோ
நிலைக்கிற பூதங்கள் சதாகாலம்
தையலாள்மகிமையைப் புவிக்குக்காட்டவேண்டிச்
சாட்சிசெய்தாரையா இக்கோலம் ராமராமா

௯. கனிவிறைவிலார்க்குஉயிரும்உயிருக்குள்ள
கருத்தும்தெரிவாயே பெரியோனே
சனகிகருத்துமாத்திரம் தெரியாதுபோல்இந்திர
சாலம்செய்யலாமோ நீதானே ராமராம

௰. அக்கினியையும்சுடும் அக்கினிசீதைஎன்
றக்கினி அறிந்ததே இவள்சூட்சி
இக்காலம்ராவணன் தீண்டாமல்நிலத்தோடே
எடுத்தானே இதைவிட என்சாட்சி ராமராமா

௧௧. தீயையும்பிழைசொன்ன வாயையும்வடவைச்செந்
தீயையும்சுடும்இவள் பிரதாபம்
வாய்புளித்ததோமாங்காய்புளித்ததோஎன்று
மனதில்எண்ணினாலும் வெகுபாபம் ராமராமா

௧௨. எள்ளுக்குள்எண்ணெய்போல்இருக்கிறநீசீதை
இடத்தில்இருக்கலையோ பர்த்தாவே
உள்ளக்கருத்தைவள்ளல் அறியும்என்றவார்த்தை
உனையல்லவோசொல்லாய் கர்த்தாவே ராமராமா

௧௩. எதிர்அரக்கரைக்கொன்றுய் பதியில்எங்களைவைத்தாய்
இந்தத்தயவுனக்கெங்கே போச்சோ
மிதிலைவல்லியைஇங்கே சோதித்தாய்எங்களை
விருந்திட்டுப்பகைகாண மனதாச்சோ ராமராமா

௧௪. இழுக்காகியபொன்னைப் புடத்தில்வைத்தெடுப்பார்கள்
இவளுக்குண்டோசொல்லாய் விதிபாசம்
அழுக்கில்லாத்தங்கத்தைப்புடத்தில்வைத்தெடுத்தாயே
ஐயாஉனக்கும்உண்டோ மதிமோசம்-ராமராமா

மக்களையும் மருமகளையும் சக்கிரவர்த்திபுகழ்தல்,

விருத்தம்.

ஆராதபிரமன் இவ்வாறுரைக்கத்தேவர்
அனுமதியால்தசரதன்தேர் நிலம்மேற்கொண்டான்

காராருங்குழற்சீதைக் குபசரித்தான்
கற்பகமேவாழியென்றான் இளையோன் தன்னைச்
சோராமல்அண்ணன் தாட் புண்ணும்இந்திரன்
தோட்புண்ணும்துடைத்தனையே என்றான்கண்ட
மாராபிராமனைத்தன் மார்பில்கட்டி
மகிழுவான்அவன்குணத்தைப் புகழுவானே

அறு தரு-மத்தியமாவதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அய்யனே இன்றுன்னைக்கண்டேன்-ஆனந்தம்கொண்டேன்

அநுபல்லவி.

வையம்ஆள் தசரதன் ஆம்என்னை- மலடுநீக்கிவிட்டபின்னை
வானவர்க்கும்அந்தநான்முகனுக்கும்எட்டா
மாயவன்உலகத்திலேஇரென்றென்னைவைத்த —அய்ய

சரணங்கள்.

க. மல்லிகைப்பூமிதித்தாலும் வருந்தும்உன்தன்தாளிலே
வனத்தில்உள்ளகல்லும்முள்ளும் பொறுத்ததோ இந்தநாளிலே
எல்லாரும்காணக்கைகேசிசண்டாளிஎன் தோளிலே [ளிலே
இருந்துசெவியைக்கடித்தாற்போல் உனைப்பிரித்தாளே ஒருகோ
செல்லும்தரித்திரனுக்குத் திரவியங்கண்டெடுத்தாற்போல்
சென்மக்குருடனுக்குத்தெய்வம்கண்கொடுத்தாற்போல்—அய்

உ. கைகேசிசொல்லம்புக்காயம் கொஞ்சத்திலேமாறுமோ
* கட்டிக்கொண்டாலினதல்லாற் பின்னைஒன்றால்ஆறுமோ
அய்யாஉன்வாய்முத்தம்போல் அமுர்தமும்சுவைஊறுமோ
ஆர்முகமும்உன்முகம்போல் ஆகுமோமனம்தேறுமோ
கையும்மெய்யும்என்தன் கண்கள்தெரிசித்தது
கண்கள்படைத்தபலன் இன்றல்லோலபித்தது—அய்ய

ந. பரதனையும்கூட்டிக்கொள்ள வேணுமோஉற்றுரிமைக்கு
பாருளோருனக்கொப்பாரோஎன்அப்பாஉன்தன்அருமைக்கு
துருவம்ஆம் அருந்ததிகூட நிகரோசீதைபெருமைக்கு
சோதிக்கவேணுமோஎன்ன சொல்வேன்உந்தன்ஒருமைக்கு

* இதைஇரட்டித்து பாடும்போது-உனனை என்றுமுதலி
லேகூட்டிப்பாடிக்கொள்ளவும்.

திருக்கண்டகண்ணுக்குத்தீங் குண்டோமென்மமலே
　　தேவாதிதேவருக்கும் சிறந்தேனேடின்னும்லே—அய்யா

அனுமார்வசந்தனைக்கொணடுவருதல்.

விருத்தம்.

முடிபுனையும்தசாதன்உரைஇங்கிதுமுழுதும்மொழிந்துடனே
முதல்வர்வாம்தனில்-அனைவர்களும்பழ-முறையிளமுந்தபினே
இடர்பெறுகும்பாதனை-அருளும்படி-வடதிசைப்புஷ்பகமேல்
இரகுபதியும்சன-கியும்ஒருதம்பியும்-எவருநிறைந்திடுமுன்
மடியும்வசந்தனைஒருநிமிஷம்கொடு வருகெனஎம்பெருமான் [ம்
வரைநிருபந்தனைமுடிமிசைகொண்டொருமறலியின்மண்டலமு
அடுகளிறிந்திரன்-உறைதருமண்டலம் அயன்உறைமண்டலமும்
அதிரதிரும்படி-விசைஅனுமந்தன் அவ்-வளவில்கிளம்பினனே

அசு-தரு-அசாவேரிராகம்-ஆதிதாளம்

பல்லவி.

தாவிஅனுமந்தன் வந்தானே-வசந்தனை-ராம
சாமிமுன்கொண்டோடி பாய்ந்தானே

அநுபல்லவி.

காவல்வசந்தனைமுன்போலே-காட்டென்றுசெங்கைஓலே
　　காகுத்தன்எழுதிட எமபுரதிசைகண்டு
　　வேகத்துடனேஅரைநொடியினில்விசைகொண்டு—தா

சரணங்கள்

க. துருவிளமலோகத்தை வாட்டி வசந்தன்இல்லாமல்
　　சொல்லிஅரிகரிஎன்றுபா ராட்டி காதில்விழுந்த
　நரகவாசரேஅப்பால் ஓட்டி காட்டடாஎன்று
　　நமனைவாலிற்சுருக்கி யாட்டி எங்கெங்கும்தேடி
　கெருடவேகமொடு கந்தர்வலோகமும்
　இருகண்ணும்சிமிட்டாமுன் இந்திரலோகமும்—தாவி

உ. ஐந்தருநிழல்எங்கும் தேடி பயந்துவந்த
　　அந்தத்தேவரோடுரை யாடி சொற்கலோகத்தில்
　சந்தேகம்உண்டென்றதை நாடி அந்தலோகத்தில்
　　சற்றுநேரத்திலேபோய்க் கூடி அதற்கப்புறம்

பந்துபோல்எழும்பிப் பணைத்தவாலைப்பருக்கி
அந்தகனுடனே இந்திரனையும்சுருக்கி—தாவி

௯. கவலையாபிரம்மலோகம் நோக்கி வசந்தனை இங்கே
காட்டென்றுபிரம்மாவுடன் தாக்கி இந்திரன்எமனோ
டவனையும்வாலில்கட்டித் தூக்கி சராசரன்று
அந்தஉலகைவிட்டுப் போக்கி மிகவும்நல்ல
தவமிகுத்தபெருஞ் சத்தியமுனிவர்கிட்டும்
விவரமுத்திதரும் விஷ்ணுபதவிமட்டும்—தாவி

ஸ்ரீராமர் சீதைக்கு லங்கையில் பலர்பட்ட இடங்களைக்காட்டல்.

விருத்தம்.

ஓசையுடன் அநுமன்இந்த-வாறுவசந்தனைத்தந்தான்-உடனேகொண்டார்,ஆகமிதுமிகக்களித்தார்-வானரர்கள்யாண்டார்கள்- ஆனார்இப்பால், வாகைபெறுதம்பியுந்தா-னும்படையும்புஷ்பகமேல்-மகிழ்ந்தராமன், தோகைஎனும்சீதையுடன் - செலலுவான்இவைஇவைகள்சொல்லுவானே.

௰௯-திபதை சங்கராபரணராகம்அடதாளசாப்பு

கண்ணிகள்.

௧. கன்னிகையே அந்த சனகன்வேள்வியில்வந்த
கற்புள்ள மடமானே
உன்னிமித்தத்தில்இந்த-தென்னிலங்கைபோனதை
உற்றுப்பார் நீதானே

௨. வடிகணை ஒன்றாலே நான்-ராவணன்உயிர்கொண்ட
வடக்குவாசலைப் பாராய்
கெடிபெறும்நீலன்அந்த-பிரகஸ்தன்உயிர்பறித்த
கிழக்குவாசலைப் பாராய்

௩. தீரன்அங்கதன்அந்த-வச்சிரதந்தனைக்கொன்ற
தெற்குவாசலைப் பாராய்
வீரன்உன்மைத்துனன்-இந்திரசித்தனைக்கொன்ற
மேற்குவாசலைப் பாராய்

௪. உறுதிசொல்கும்பகர்னன்-அதிகாயன்முதல்ஆனோர்

உருண்டகளத்தைப் பாராய்
பிறகுமூலபலங்கள் கால்மாடுதலைமாடாய்ப்
பிரண்டகளத்தைப் பாராய்

ரு. அடுபோரில்சமைக்காத்த-அனுமான்அகம்பனை அன்
றடுகளத்தைப் பாராய்
படுபாவிஆம்மகோ-தரன்என்தன்கையிற்பட்ட
படுகளத்தைப் பாராய்

சு. வடிவானபாண்டம்-கொட்டித்தட்டிச்செய்யுங்குச
வனுக்குப்பலநாள் வேலை
தடிகாரனுக்கவை-க்ஷணம்போல்அரக்கர்என்றல்
சமைந்ததைப்பார்கண் ணாலே

எ. இந்திரசந்திரசூரியர்-எட்டிப்பார்க்கக்கூடாத
ஏழுமதில்கள் பாராய்
அந்தம்ஆம்பாதாள-லோகத்தின்கீழும்போம்
அகழிகள்இவை பாராய்

அ. சுக்கிரீவன்தங்கிநின்று-ராவணன்மேற்பாய்ந்த
சுவேலமலையைப் பாராய்
இக்கடல்சேனைபட்ட-ரத்தக்கடலைக்கொண்ட
இந்தக்கடலைப் பாராய்

ஸ்ரீராமர்சீதைக்குச்சேதுவைக்காட்டி-அதின்மகிமைன் [கூறல்

விருத்தம்.

நிறமென்கூந்தற்சானகியே நின்னை அனுமான்கண்டுவந்த
பிறகுகவிகள்ஒருநாளனுல்-பெருக்கச்செயும்பேர்அணைபாராய்
உறுதிஆகஇதன்மகிமை-உரைக்கமுடியாதானலும் [னே
சிறிதுமொழிவேன்எனராமன்-செல்வான்எடுத்துச்சொல்வா

அஎ. தரு-மோகனராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

இந்தச்சேதுவைக்கண்டாற்போமே-சனகன்பெண்ணே-இகபர [சித்திஆமே

அநுபல்லவி.

சந்ததமும்மனதினிற்பிரியாதேசகலபத்தினிகளும்தொழுவரும் [யாதே

சரணங்கள்.

க. தந்தையுடனே குருதெய்வநிந்தனையும்-கதிநீஎன்று
தஞ்சம்அடைந்தவரைக்கெஞ்ச அடிக்கும்சற்பனையும் அகுதிகளை
அந்தணரைப்பசுவைமைந்தரைக்கொல்லும்வேதனையும்-பஞ்சக
ாலத்தில்,அன்னமிட்டவரைக்-கன்னமிட்டிடும்வஞ்சனையும்பயப்
பிந்தைஆனகள்ளைக் குடிப்பதும்-பசு [படாமல்
மந்தைஉடைஞ்சுகல்லை இடிப்பதும்-நடுச்
சந்திவிருட்சங்களை ஒடிப்பதும்-பிறர்
சொந்தப்பெண்களைக்கையைப் பிடிப்பதும்
நொந்தபேர்பொருளைக் கொண்டதோஷமும்
நோன்புகளைநடுவில் விண்டதோஷமும்
வந்தபேர்பசிக்க உண்டதோஷமும்
மடிநழுவும்பெண்களைக் கண்டதோஷமும்—இந்த

உ. கேடுசெய்பவ ரோடுறவாகியநிலையும்-வயற்றினிற்ப
யிர்என்றிடவழக்-கோரம்சொல்லியகெடுதலையும்பாதிசாமத்தில்
வீடுகளில்மறைந் தோடிநெருப்பிடும்புலையும்கண்ணிகள்குத்தி
விலங்கும்பறவைகளும்-கலங்கிடவேசெய்யும்-கொலையும் ஆணும்
கூடும்கூட்டுறவைப் பிரிப்பதும்-வழி[பெண்ணும்
பாடுதப்பிநடக்கக் குறிப்பதும்-நடுக்
காடுகளிலேவெட்டிப் பறிப்பதும்-விளை
யாடும்பிள்ளைக்கழுத்தை முறிப்பதும்.
நாடிக்கொடுப்பவரைத் தடுக்கும்பாவமும்
நாண்இழந்தபெண்ணுடன் படுக்கும்பாவமும்
கோடைக்குளத்தைத்துத்து விடுக்கும்பாவமும்
கோட்சொல்லிகுடிகளைக் கெடுக்கும்பாவமும்—இந்த

ந.மாலைஇட்டவனை இழந்துசொல்லும்பாதகமும்வேறொருவனை
மருவிஅதனில்வந்தகருவை அழிக்கும்தோதகமும்பாலும்தேனு
ம்போலஇருப்பவரைக்கலைக்கும்மித்திரபேதகமும்-மாதவிடாய்
பூத்தமங்கையரைச் சேர்த்தணைத்தசூதகமும் தருவேன்என்று
மேல்வர்களை அலைக் கழிப்பதும்-வழிச்
சாலைசத்திரங்களை அழிப்பதும்-செய்யும்
காலசெபதபத்தை ஒழிப்பதும்-இடும்
பாலேகவிசகரைப் பழிப்பதும்
வலும்இறைச்சிகளைத் தின்றதோஷமும்
இருட்டினில்இடமஇல்லை என்றதோஷமும்
ஆலயங்களிற்புணர் நின்றதோஷமும்
ஆற்றில்அமமணந்துடன் சென்றதோஷமும்—இந்த

ஸ்ரீராமர்சீதைக்குவந்தவழி அடையாளங்கூறல்.

விருத்தம்.

திருவணைப்புலன்சதென்றுசிலையினாற்பகுத்தராமன்
தருமலர்க்குழலியான சானகிவதனம்நோக்கிப்
பொருமதில்அயோத்திவிட்டுப் புறப்பட்டநாள்முன்தொட்டு
வரும்வழி அடையாளங்கள்வகுத்திட்டான்தொகுத்திட்டானே

அஅ· தரு-ஆனந்தபைரவிராகம்- அடதாளசாப்பு.

பல்லவி.

சனகன்மாதே-பாரய்-சனகன்மாதே.

அநுபல்லவி

வினவினுடன்மனம் மகிழப்பாராய்பெண்ணே—சனக

சரணங்கள்.

க. இலங்கைநகர்மேலேமுந்நாள் எழுந்தனுமான்பாயவே
இடம்தரும்மயேந்திரம்இது தானே
தலம்புகழவேஎன்னை வருணன்அண்டக்கலம்என்று
சரண்புகுந்ததானம்இது தானே-பெண்ணே—சன

உ. மதிகதிர்உள்ளளவும்போம் பொதியமலைஇது திவ்விய
மருத்துவம்உள்ள அகஸ்தியமுனி தானம்
கெதியில்லதிரேகின்ற மலைஇதுசுக்கிரீவன்வாழ்
கிஷ்கிந்தைஅவனுக்கா தீனம்-பெண்ணே—சனக

ங. சந்திரனைநட்சத்திரம்போல் உந்தனைஇணங்கவே
சகிசெனங்கள் ஆகஒருக் காலே
இந்தமலைநின்றும்வானரமாதர்உருமாறி
இதோவருகிறார்பார்கண் ணாலே-பெண்ணே—சனக

ச. கிளைக்கும்என் அம்பினாலேஏழுமரங்களும்வீழ்ந்து
கிடக்கிறதைப்பார்நமக்கு நேராய்
வளைக்கும்மனழகாலத்தில் தம்பியுடன்நான்இருந்த
மாலியவந்தமலைஇதனைப் பாராய்-பெண்ணே—சனக

௫. துதிசெய்ாதன்பணிகளைச் சுக்கிரீவன்காட்டநான்
துயருற்றமதங்கஅடி வாரம்
அதிகபயபக்தியா என்னையும்உன்னையும்காத்த
அனுமன்கண்டதிவிடம்பம்பை ஓரம்-பெண்ணே—சன

௬. தயவாகமனம்தேற்றிப் பசிஆற்றிஎனைப்போற்றி
சபரிமுத்திபெற்றதிந்தச் சாலை
உயிர்போனும்உனைத்தேடி வாடும்வழிமேற்கவந்தன்
உயிர்கொண்டமூலைஇந்த மூலை-பெண்ணே—சனக

௭. எதிர்தரும்ராவணன்கையில் பழமைபாராட்டிஉன்னால்
இறந்ததந்தைக்கிங்கேசமஸ் காரம்
சதிர்செய்மூன்றுவருஷமும் நாம்இருக்கத்தம்பிசெய்த
சாலைஇதுபஞ்சவடி தீரம்பெண்ணே—சனக

௮. இவிடம்மாரீசன்பட்ட திவிடம்சூர்ப்பனகிகெட்ட
திவிடம்கரதூஷணர்வி நாசம்
இவிடமகோதாவிரிஅன்னை இவிட ம்தம்பிகண்டதென்னை
இவிடம்உன்னைராவணன்செய் மோசம்-பெண்ணே—ச

௯. தனித்துநீபுலம்பும்நாள் உன்நிமித்தம்உயிர்விடும்
சடாயுவனம்இது அவன்என் சாமி [ம்
அநித்தியம்இல்லாஅகஸ்தியமுனி எனக்குப்படைகொடுத்தஇட
அவிவையோஈதல்லோபுண்ணிய நாமி-பெண்ணே—சனக

௰. இதுசுதிஷ்டமுனிவனம் திதுதண்டகாரணியம்
இதுவேமுனிவர்கட்குறி வாசம்
இதுசரபங்கமுனி தேவியுடன்முத்திபெற்ற
இடம்இது அதிகபிர காசம்-பெண்ணே—சனக

௧௧. இங்கேவிராதனைக்கொல்லத் தேவன்ஆகியெனைப்போற்றி
ஏகினன்அல்லோவாளின் மீதே
தங்கப்பணிஉனக்கனு குதைதாஎனை அத்திரி
தபவோடாதரித்தஸ்தலம் ஈதே-பெண்ணே—சனக

௧௨. கன்றுபிரிந்தபசுப்போல் நான்பிரியப்பரதன்வந்து
கண்டமலைஇதுசித்திர கூடம்
அன்றிளையவன்தள்ள ஏறிவந்தயமுனை இதுக்
கடையாளம்பார்முங்கிலாற்செய்ஓடம்-பெண்ணே—சன

கங. ஈரேழுவருஷமும் நம்மைவரும்வழிநோக்கி
இருக்கும்பரத்துவனுக்கிது காணி
கார்வருகுகன்காக்கும்கங்கையிது நம்மைமுன்னாள்
கரையேற்றிவிட்டதிந்தத் தோணி-பெண்ணே—சனக

கச. சிலம்உள்ள தந்தையர்க்கு எள்ளும்நீரும்நான் இறைத்த
தீர்த்தம்இதுகங்கைநதி நேர்ந்தி
மூலமுதற்பொருள் இருக்கும் ஆலிலையைப்போல்இதோ
முன்காணும்நகரமிஅ யோத்தி-பெண்ணே—சனக

ஸ்ரீராமர் வரஇல்லைஎன்றுபரதர்புலம்பல்.

விருத்தம்.

உரத்தாலேஇந்தவிதம்உரைத்தராமன்
உடன்வரும்சேனையும் தானும்பரத்துவாசன்
வரச்சாலையினிற்புகுந்தான் அய்யோத்திதன்னில்
மாருதியைஅனுப்ப அவன்வரும்போதிங்கே
தரத்தாலேஎனக்குரைத்தநாள் ஆச்சையோ
சாமிவருவானோவாரானோஇன்னம்
வரக்காணேன்என் ஆவிவைக்கேன் என்று
வாடுவான்பரதன்நொந்து தேடுவானே

௬௭-திபதை பூபாளராகம் அடதாளசாப்பு

கண்ணிகள்.

க. பதினாலுவருஷம்போய்ப் பாதாநான்வருகிறேன்
பாரடாஎன்றாய்இந்தப் பூமி
பதினாலுவருஷத்திக் குள்ளேவருவது
பதினாலும்போயோஎன் சாமி-ராமராமா

உ. உண்டானராமவாக் கொன்றோமண்டோஎன்தன்
ஊழ்வினைப்பயன்இது தானோ
மண்டையில்எழுதி மயிரால்மறைத்துவைத்த
மலரயன்கபடாறி வேனோ-ராமராம

ங. முக்கியபாதுகையே எல்லாத்தெய்வமும்என்று
முன்னாளிற்கட்டளையிட் டாயே
தெற்குத்திசையேஎல்லாத் திசையும்ஆம்என்றென்னைத்
தினம்பார்த்துத்திகைக்கவிட் டாயே-ராமராம

ச. வருவான்என்சாமிஎன்னைப் பிரியாதேஎன்று நெஞ்சை
மடக்கமடக்கமடங் காதே
இருபாதம்என்று சொல்லும் கரைகண்டால் அல்லாமல்
என்கண்ணீர்வெள்ளம்அடங் காதே-ராமராமா

ரு. உருகிறதாய்மாருக்கும் ஊர்க்கும்எனக்கும்சொன்ன
ஒருவனைக்காணேன்கண் மீதே
வரும்விதிவந்ததென்றால் படும்விதிபடவேணும்
மாட்டோம்என்றாலும் விடாதே-ராமராமா

சு. அண்ணன்ஆம்என்சொல்லைசத்துருக்கனும்கேளாமல்
அரசாளமனமங்கி றானே
அண்ணன் அழைத்துப்போன லட்சுமணன்போல்என்னை
அழைத்துப்போகூடஎன்கி றானே-ராமராமா [யும்

எ. பூமிநெருப்பில்விழும் விழவேண்டாம்என்றொரு
புத்திமதிசொல்லவில் லாயோ
சாமிபின்போனநெஞ்சே வருவானோவாரானோ
சற்றேனும்வந்துசொல் லாயோராமராமா

அ. பொடித்தவனம்தன்னிலே எவருடன்சண்டையோ
புரோகிதரேசொல்லோ ணாதோ
நடுப்படையிற்போனாலும் வடுப்படாமல்திரும்பும்
நாயகன்வரத்தடை ஏதோ-ராமராமா

கூ. பருவங்கள்பதினாலும் தவம்செய்தென்னகண்டேன்
படைத்தேனே இந்தஅப வாதம்
பெருமாள்சென்றவழியிற் புல்லாய்முளைத்தாலும்
பெறலாமே ஆண்டவன் பாதம்-ராமராமா

ய. அரசனையும்காணேன் அரசுக்கரசாநின்ற
அண்ணனையும்காணேன்நான் எம்மாத்திரம்
பரதன்என்றபேரைப் பதரென்னென்றுசொல்லல் ஆம்
பாவிநான்அதற்கல்லோ பாத்திரம்-ராமராம

சத்துருக்கன் அரசாட்சிக்குஉடன்படாமை.

விருத்தம்.

பாதன்இந்தவிதம்புலம்பிச் சாமிதெரிசனம்காணப்பாவிநா
னே, சாதம்இனித்தீய்ப்பாய்வேன் உலகாள்வாய்சத்துருக்கா

தம்பீஎனருன், விபரீதமாகத்தினிலதுபோய்நெருப்பாகச் சுடஅவனும்வீழ்ந்துசோர்ந்தான். நரகம்அனதோஉனக்குப்பின்நிலம் என்றுன்-எனக்கென்னநலம்என்றனே.

அகூ தரு-புன்னுகவராளி-ராகம் ஆதிதாளம்.

பல்லவி,

இதற்கோநான் ஆளானேன்-இதற்கோஅண்ணுவே

அநுபல்லவி.

சதிக்குள்சத்துருக்கனு வாஎன்றழைத்திட்டாயே
சாமீபாதாஎன்னைக். கைநழுவவிட்டாயே—இத

சரணங்கள்.

க. பூமிஆளச்சொல்லி என்னைத்தானே-விட்டுப்
போகுல்என்ஆகுமோ கோமானே
ராமன்முகமும்உன் முகமும்கண்டுநானே
ரண்டாட்டில்ஊட்டின குட்டிபோல்ஆனேனே—இத

உ. ஒருவன்கானகத்தில் ஏகவும்-அவன்
உடன்ஒருதம்பிதுணை போகவும்
ஒருதம்பிஆனநீ நெருப்பிலேமூழ்கவும்
ஒருதம்பிஎன்னுயிர் வல்லுயிராகவும்—இத

ங. எனக்குமாத்திரம்உடல் கெட்டியோ-உன்பின்
இருந்துலகாளவிட்டால் நஷ்டியோ
உனக்குப்பின்வராமல் எனக்கொருவெட்டியோ
உன்உயிரிலும்எந்தன் உயிர்கருப்பட்டியோ—இத

அக்கினியில்விழும் பரதரைக் கௌசலைஅம்மன் தடுத்துக்கூறல்.

விருத்தம்,

வாடிஇவ்வாறாறுதகம்பிக் கிரங்கான்நான்போய்
மாள்கின்றனிவ் இவன்புவியைஆள்வன்என்று
கூடியமந்திரியாரும் ஊரவர்களாரும்
குந்தளரப்பதந்தி வாக்கச்சொன்னன்

நாடியதோர்கௌசலையும்கேட்டுவந்தாள்
நன்மகனேமகனேஎன் செய்வேனென்றே
ஓடிஅவன்கைஇணையைப் பிடித்தாள்புத்தி
உரைக்கின்றாள்மகன்மனதைக் கரைக்கின்றாளே

௯௰-தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னநினைந்தாய்-பராதா-என்னநினைந்தாயே

அநுபல்லவி.

அன்னைஎனும்கௌசலையை-அகலவிட்டிடநீயே—என்

சரணங்கள்.

௧. முன்மகன்ஆகியராமன்-முகம்பாரக்கவலைஎல்லாம்
உன்முகத்தைக்கண்டுநீங்கி உளம்குளிர்ந்தேனேமகனே
நின்முகமும்காட்டாமல்-நெருப்பின்முகம்நீபார்த்தால்
என்முகத்தைப்பார்க்கும்முகம் எந்தமுகம்மகனே—என்

௨. எத்தனைராமரும்உனக்கிணை ஆவாரோநீபோனால்
செத்துலகம்போம்எனது சீவனும்போம்மகனே
பெற்றமனம்பித்தென்றும்-பிள்ளைமனம்கல்லென்றும்
சுற்றினும்சொல்கிறபடி துணிந்தாயோடாமகனே—என்

௩. இதம்கொண்டராமன்வர-விதோஅதோஎன்றிருக்கநீ
மதம்கொண்டாற்போல்உயிரை மாய்க்கலாமோமகனே
சுதந்தரமாத்தவம்செய்தும்-சுகம்தக்கினதும்அல்ல
விரதம்தக்கினதும்அல்ல வேண்டாம்அடாமகனே—என்

பரதர் கௌசலைஅம்மனோடு முறையிட்டு இரங்கல்.

கொச்சகம்.

டன்னிஇதுதாய்சொல்லப்-பரதன்ஈரேழ்ஆண்டும்அண்ணன்
சொன்னபடிகாத்திருந்தும் சுவாமிதெரிசனம்காணேன்
பின்னைஎனக்கார்இருந்தேன்-ஆர்போய்என்பெருந்தீயில்
ன்உயிரைவிடுவேன்என்-றெழுவான்சொல்லிமொழிவானே

கூக தரு-சைந்தவிராகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

இனிநான்இருக்கல்ஆமோ தாயே

அநுபல்லவி.

அபிப்பிராயத்தில்அய்யனுக் - காகாமற்போயே—இனி

சரணங்கள்

க. மறுவில்லாவரங்கொண்டேன் நானே-அண்ணன்
வழிபார்த்துப்பார்த்தென்தன்விழியும்பூத்தேனே
சிறுபிள்ளைப்பருவம்நான் தானே-இதில்
சிறகுபறிகொடுத்த பறவைஆய்ப்போனேனே—இனி

உ. வருத்தம்அறியான்சாமி கொஞ்சம்-அறிந்தால்
வாராமல்இருப்பானோ எனக்குண்டோதஞ்சம்
நெருக்குதேகவலைப்பிர பஞ்சம்-என்னை
நெருப்பிலேபோட்டாலும் வேமோஎன்நெஞ்சம்—இ

ங. அரசனுக்குதவாமற் கெடுத்தேன்-அண்ணன்
அருமந்தமுடிக்கும்நான் சடைமுடிகொடுத்தேன்
தருமத்துரையைக்காட்டில விடுத்தேன்-பரதன்
சாமித்துரோகிஎன்றே எங்கும்பேரெடுத்தேன்—இ

ச. அய்யர்அன்னைசொல்லைநோ காமல்-கேட்க
அளிக்கத்தக்கவன்திருவுளத்துக்கா காமல்
செய்தேன்வெகுகுற்றம்போ காமல்-பல
தீட்டுக்குமுழுக்கொன்று நெருப்பில்மூழ்காமல்—இ

ஸ்ரீராமர்வரவை அனுமார் பரதருக்குகூறல்.

விருத்தம்.

தந்தாய்கௌசலைவந்தாளொடுபரதன் பாடுகள்இவைமுன்கூ
றி, கொந்தார்அனலைவலம்சூழ்பொழுது குழந்தாய்குழியில்அ
மிழ்ந்தாதே, அந்தோபொறுபொறு மைந்தாபொறுபொறுஅ
ன்பால்உன்முகம்தேடி, வந்தான்ரகுபதிவந்தான்என அனுமன்
நான்இஃதுரைத்தானே.

௯௨. தரு-மத்தியமாவதிராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

வந்தான்வந்தான்பரதா-ரகுராமன்-வந்தான்வந்தான்பரதா

அநுபல்லவி

வந்தான்வந்தான்மோதிரம் தந்தான்தந்தான்கைமேல்
இந்தா இந்தா தீயினில் முந்தாதே முந்தாதே(வந்தான்)

சரணங்கள். [றந்தாய்

௧. நாயகன்சொல்மறந்தாய்-அண்ணனென்றுபேயனைப்போல்ப
தாயாரையும்துறந்தாய்-பழிபோட நீஇதற்கோபிறந்தாய்
சேயின்முகம்பார்க்கும் தாயின்முகம்போல
காயும்புழுவுக்குச் சாயும்நிழல்போல
தீயும்பயிருக்குப் பேயும்மழைபோல
மாயன்கஜேந்திரனுக் காய்வந்ததுபோல—வந்தான்
[லைந்தாய்

௨. பொருந்தாதபுத்திதந்தாய் ஆலைவாயிற்கரும்புபோல்மெத்த
துரும்புபோல்வற்றிநொந்தாய்வீழ்வேனென்றுபெருந்தீயேச்
அரும்பதினால்ஆண்டும் ஆச்சென்றதினால்[சுற்றிவந்தாய்
வருந்தும்தம்பிமடி வானென்றுருக்காலே
பரிந்திதோசித்திர கூடத்துக்கப்பாலே
பிரிந்தகன்றைத்தேடித்திரும்புமபசுவைப்போலே—வ

௩. தீமைவினைகள் மண்டு-இராவணைப் பாமரன்ஆவிஉண்டு
சேமவஞ்சனைகொண்டுப்-பரத்துவாச மாமுனிபூசைகண்டு
சாமிரகுகுல சோமன்இதோவந்தான்
பூமகள்சானகி வாமன் இதோவந்தான்
ஸ்ரீமென்னும்ஆயிர நாமன் இதோவந்தான்
நீமறவாரகு ராமன்இதோவந்தான்—வந்தான்

பரதருக்குஅனுமார் சங்கிரகராமயணம்கூறல்.

விருத்தம்.

இந்தவாறனு-மந்தன்ஓதி-இடுகைமோதிரம்-சந்துடன்
சந்தாமாமுடி-கொண்டதோர்ப-ரதன்தன்னுளு ர-வளர்ந்தனன்
உந்தனோடு-பிரிந்தராமன் ஒழிந்த நாட-ம்ஙடந்ததும்
வந்தவாறும்-அறிந்திடென்று-மாருதன் இவை-கூறுறான்

௬௩ தரு கலியாணிராகம் அடதாளசாப்பு

பல்லவி.

பரதமகாராசனேகேளாய்-ராமன்சேதி-பரதமகாராசனேகேளா [ய்

அநுபல்லவி.

திரம்உலாவியசித்திர கூடத்திலேமுன்னே
திருவடிகள்நீகொண்டு போகியதின்பின்னே
இரகுபதிதண்டகவ னத்தில்அடிநீட்டினான்
ராட்சதவிராதனை உபேக்ஷயறமாட்டினான்—பரத

சரணங்கள்.

க. அந்தமுனிவர்க்கபயம் ஈந்தான்-பிறகு
அகஸ்தியமுனிஆசிரமம் சேர்ந்தான்-அவன்
தந்தபடைமுழுவதும் கொண்டான்-வந்து
சனகியொடுபஞ்சவடி கண்டான்
வந்தசூர்ப்பநகிஇவள் வாதாடும்நாளிலே
வள்ளல்இளையவன்அங்கே மீதாடும்வாளிலே
கந்தமூலையும்செவியும் நாசியும்நறுக்கினான்
கரதூஷணரையும்அவ ளாலேநொறுக்கினான்—பரதம

உ. பின்னுகமானைவர விடவே-அதின்
பிறகுகணையொன்றில்அது படவே-ஒரு
சன்னியாசிராவணன் அடுத்தான்-சீதை
தன்னைநிலமங்கையோ டெடுத்தான்
அந்நிலையிலேவரு சடாயுவைவருத்தினான்
அம்மைஅசோகவன காவலில்இருத்தினான்
கன்னிகைதனைச்சாமி தேடிமனதேங்கினான்
கழுகாசனைக்கண்டு கவந்தனுயிர்வாங்கினான்—பரதம

௩. சவரிசொல்லியவழி நடந்தான்-என்
தனைஅடிமையாகவே தொடர்ந்தான்-பின்
கவடுளமரங்கள்துணி செய்தான்-அந்த
காலன்வாலியையும்விழ எய்தான்
அவனியைசுக்கிரீவ னுக்குதவிமீளவும்
அடியேன்அறிந்தம்மை நிலைகண்டுமீளவும்
தவமுளவிபீஷணர்க் கபயம்கொடுத்தான்
சமிதிருவணையொன்று கடல்மேல்எடுத்தனன்—பரதம

௪. பண்டைலங்கையின்வீதில் பிடித்தான்-எழு
பதுவெள்ளமும்கொன் டிடித்தான்-வெகு
கண்டகஅரக்கரை மடித்தான்-பயிர்க்
களைஎடுத்ததுபோல் எடுத்தான்
அண்டர்பணிதம்பியும்நெ டுங்கணைகள்தாக்கினன்
அதிகாயனையும்இந்திர சித்தையும்மண்ணாக்கினன்
கொண்டல்மணிவண்ண னும்சிலகணை மூடுக்கினன்
கும் னனையும்ரா வணனையும்ஒடுக்கினன்—பரதமக

௫. மதிநுதல்சிதைதனை உற்றான்-அங்கே
வந்ததசரதன்வரம் பெற்றான்-தனது
பதியில்வரவேவுளம் மதித்தான்-புஷ்
பகமீதில்சேவடி பதித்தான்
எதிர்படும்காடும்நாடும் கண்டுதாண்டினன்
இமையவர்புரந்தரா திகள்புகழவேண்டினன்
அதிமுனிபரத்துவாசன் ஆசிரமம்மேவினன்
அதற்குமுன்உனைக்காண அடியேனைஏவினன்—பரதம

ஸ்ரீராமர் அநுமாரைஉடன்உண்ணவேண்டுதல்.

விருத்தம்.

நிதமுடன்அநுமான்இதுசொன்னன்இந்த
நிமிஷம்வந்துசாமிஉனக் கருள்வான்என்றான்
போதரவாய்பரத்துவாசன் மடத்திற்பூர்வ
போசனவேளையிற்போய் ராகவனைக்கண்டான்
பாதமலர்வணங்கினன் பரதன்தன்னைப்
பார்த்ததும்கார்த்ததும்சொன்னன் அப்போதையன்
காதலனேஅநுமானே நீயேஎன்தன்
கண்என்றான்என்னுடன்வாஉண்என்றனே

௬௪-தரு-மோகனராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

வாவாஅநுமானே-என்னுடன்உண்ணவாவாசீமானே

அநுபல்லவி

ஜீவபயம்இல்லாமல் பரதனையும்தேற
தேற்றினனக்குவந்து சொன்னஉன்இளைப்பாற—வாவா

சரணங்கள்.

க. அங்கேபிரமாஸ்திரத்தால் விழுந்ததம்பிபிழைக்க
அமுர்தமருந்துதேடிக் கொடுத்தாயே
இங்கேஅக்கினியினில் வீழுந்தம்பிபிழைக்க
என்வரவைச்சொல்லிதூக்கி எடுத்தாயே
சங்கடவேதனைகள் ஏதேதுவந்தாலும்
தலையிட்டுக்கொண்டுதீர்க்கத் தொடுத்தாயே
பொங்கும்இருப்புக்கோட் டையும்கற்கதவுமே
போலஎங்களைக்காக்க வாலாயம்அடுத்தாயே—வா

உ. பூட்டியதூதுநீபோய் அரக்கரைக்கொன்றரத்தம்
போச்சிலையேஇன்னம்லங் கையில்ஈரம்
வாட்டம்யில்லாமற்சீதை தனையும்தந்தாய்நல்ல
வாழ்வும்தந்தாய்எனக் குபகாரம்
கூட்டத்திலும்என்ன படையிலும்ஒருத்தன்
கொடையிலும்ஒருத்தன்உன் னதேவீரம்
தாஷ்டிகத்தம்பிமார்க்கும்தாய்மார்க்கும்எனைப்பெற்றோன்
தனக்கும்உனக்கும்நான் சொல்வதேன்உபசாரம்—வா

ந. சுக்கிரீவனுக்கும்வி பீஷணனுக்கும்தங்கள்
துரைத்தனமேல்ஆசை எந்தாயே
எக்காலமும்உன்தன் ஆசைஎன்காரியத்தில்
எங்கெங்கும்போய்ச்சுற்றி நொந்தாயே
விக்கிரமம்நீசெய்து வருகையாலேநாங்கள்
விருந்தமுதிருந்துண்ணத் தந்தாயே
சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரிபொழிந்தாற்போல்
சந்தோஷவார்த்தைகொண்டுசமயத்தில்வந்தாயே—வா

ஸ்ரீராமர் பரத்துவாசர்செய்த விருந்துண்ணல்.

விருத்தம்.

சுந்தரன்ஆம்ராமச்சந்திரன் இந்தவிதம்உபசாரம் சொல்லச்சொல்ல, வந்தஅனுமான்ஒடுங்கிவணங்கிநின்றான் எல்லாரும்மகிழ்ந்தேஉண்ணப், பந்தியிருந்தார் அனுமான்பரதனையேஅடிக்கடிக்குப்படித்துப்பேச, அந்தவுண்ரசெவிக்கமுதாவிருந்தமுது திருந்தினன் அருந்தினனே.

சுரு-தரு-தோடிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

உண்டானேராமன்-பரத்துவாசன்செய்தவிருந்
துண்டேஆனந்தம்கொண்டானே.

அநுபல்லவி.

வண்டார்குழற்சி   தையும்இளஞ்சூரனும்
வானரேசனும்   விபீஷணவீரனும்
கொண்டுடனே அருந்த   கண்டுமனமகிருந்த
அண்டம்எல்லாம்இருந்த பண்டியிலேபொருந்த—உண்ட

சரணங்கள்.

௧. ஓங்கியபொன்னுலகத்தினிற்பெண்கள்
ஓடிக்கொண்டுவந்த   வழங்கமுதும்
நான்குதிசையினும்உள்ளமுனிவர்கள்
நாடிக்கொண்டுவந்த   கிழங்கமுதும்
மாங்கனியும்கதலிப் பூங்கனியும்பனசத்
தேங்கனியும்பலவி ளாங்கனியும்திருத்திப்
பாங்ககவேமென்மேலே படையும்தானும்அன்பாலே—உ

௨. நானிலந்தனில் மாநலந்தரும்
நானுவிதம்உள்ள   சூபமும்
வானமங்கையர் தான்உகந்திடும்
வகைவகையான அ   பூபமும்
தேனும்கறிவகைகள் தானும்குளிர்ந்தநல்ல
பானகமும்சமைந்த போனகமும்கொண்டு
சேனை ஆரவாரிக்கத்   திருமேனியும்பூரிக்க—உண்டா

௩. பவ்வியவான்அநு மானைக்கடைக்கண்ணாலே
பார்த்துப்பார்த்துமனம்   களிப்பூற
செவ்வையானதை வேத்தியம்செயக்கண்டு
தேவர்எல்லாம்   சோபனம்கூற
இவ்வுலகத்தினிலும்அவ்வுலகத்தினிலும்
எவ்வுலகத்தினிலும் அவ்வவ்இடத்தில்உள்ள
திவ்வியசாரங்கள்பெற்று செவ்வாய்மலரில்வைத்து—உ

பரத்துவாசர் முதலானோர்க்கு ஸ்ரீராமர்ராட்சதர்

மாண்டவகைகூறல்.

விருத்தம்.

உண்டபின்புபரிகலத்தை அனுமான்கொண்டான்
ஒருசுக்கிரீவனுக்கும் விபீஷணர்க்கும்ஈந்தான்

கண்டபடைகளுக்கும்இட்டான் தானுமபாதி
கைக்கொண்டான்அவனை அயோத்தியிலேஏக
அண்டர்பிரான் அனுப்பினன்கடலைத்தாண்டி
அரக்கர்குலம்வேரோடே அழியவில்லால்
மண்டமரில்வென்றதெல்லாம் ராமச்சந்திரன்
வகைசொல்வான்முனிவருக்குத்தொகைசொல்வானே

கூகூ-திரு-சௌராஷ்டிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

இங்கேநாங்கள் இலங்கையைவென்றகதை
இந்தவாறுகாண்முனிவர்களே

அநுபல்லவி.

தங்கும்குரங்கெல்லாம் அணுப்போல்எதிர்தர
சண்டைசெய்யும்அரக்கர் மலைபோல்வரவர
அங்கேநீங்கள்முன் ஆசீர்வாதம்செய்ய
அணுவும்மலையாச்சந்த மலையும்அணுவாச்சயா—இங்

சரணங்கள்.

க. வானரத்தால்அரக்கர் படையெல்லாம்மடிந்தது
மாயையெல்லாம்விபீ ஷணனால்விடிந்தது
ஆனதம்பிமேல்ஒரு நாகாஸ்திரம்படிந்தது
அதுவும்கெருடனாலே பொடியாப்பொடிந்தது—இங்

உ. அந்தப்பிரம்மாஸ்திரத்தைஅரக்கன்விடுத்துமொய்த்தான்
அமுர்தமருந்தைஅனுமான்கொண்டுவந்துவைத்தான்
இந்தஅனுமானலே இளையவன்உயிர்பெற்றுமுன்
இளையவன்கைஅம்பாலே இந்திரசித்தனும்செத்தான்-இ

ங. மூலபலம்ராவணன் கும்பகர்னன்சென்மம்
முடியவேமுடிந்தது ராமபாணவன்மம்
எலவேதொலைந்தது எங்களைத்தொட்டகன்மம்
எங்களால்ஒன்றும்இல்லை எல்லாம்உங்கள்தன்மம்-இங்

குகன் ஸ்ரீராமர்வர இல்லையென்றுவருந்தல்.

விருத்தம்.

கரக்காமல்இவ்வாறுசொன்னராமன்
கானமுனிவரைநிறுத்திஆசிகொண்டு

பரப்பாம்புஷ்பகம்கொண்டு கங்கைஆற்றின்
பக்கல்வரும்முன்னம்முன்னேபரிவிநேடே
தாத்காலேஎனக்குரைத்தகாளும்கண்டேன்
சகுனமும்கண்டேன்இன்னம்சாமிஇங்கே
வாக்காணோன்என்ஆவிவைக்கேன்என்று
வாடுவான்குகன்வருந்தித்தேடுவானே

௰அ. திபதை-ஆனந்தபைரவிராகம்- ஆதிதாளம்.
கண்ணிகள்.

க. ஆண்டுபதினாலும்போய்வருகிறேம்என்ற - அய்யன்வரவுகா
ணோனே [ன்எனே
நீண்டப்பனமரம்போலேவளர்ந்தேனே நிலத்தில்இருக்கநா
உ. சாமியும்என்தாயும்தம்பியும்என்னைத்- தவிக்கவிட்டுமறந்தா
[ரோ
பூமியில்தங்களுடன்வாராக்குகன்- புலையன்என்றுதுறந்தீரோ
ங. இச்சையாலேநான்என்னபிழைசெய்தாலும் ஏழைஎன்றெ
[ன்னைஅறியாரோ
நச்சுமாமரம்ஆனாலும்வச்சவர் நன்மரம்என்றுகுறியாரோ
ச. உண்டால்பசிதீரும்என்றேஇந்த உலகம்சொல்லியமாண்பே
ஞே [ஞ
கண்டாற்பசிதீரும்என்சாமிமுகக் கமலத்தைஎன்றுகாண்பே
டு சோராதஒருதோழன்என்றவர் சொல்லியசொல்என்னபொ
[ய்யோ
கார்மேனியும்கோதண்டமும்என்தன் கண்எதிரேநிற்குதய்யோ
சு அங்கேமுன்பழகியவரை நினைக்காரோபகவானே
எங்கேஇருந்தாலும்ராமர்இருந்த இடம்அயோத்திதானே
வலக்கண்ணும்வலத்தோளும் துடிதுடித்து வருகிறதென்னஇ
[துதானே
கெலிக்கும்ராகவன்தரிசனம்கிடைத்தாலும் கிடைக்குமோஎன்
னஅறியேனே [னே
அ இனிமேல்ஒருதெய்வம்தன்னைக்கை எடுப்பேனேசற்றும்நா
தனியேஆனைதழுவும்கையாலேஆடு தழுவுமோஎன்கைதானே

பரதர்க்குஸ்ரீராமர் காட்சிகொடுத்தல்.

விருத்தம்.

நைய்யும்இந்தக்குகன்பணியச்சாமிவந்தான்
தம்பிபரதனும்நீயும்சுகமோஎன்றான்

துய்யகுகன்சனகிவிபீஷணன்சுக்கிரீவன்
துணைவனெடுபுஷ்பகமேல்அயோத்திசேர்முன்
செய்யவசிஷ்டனும்பலபேர்களும்தாய்மாரும்
திரண்டுவரும்பாதனுக்குக்கையாலேஉன்
அய்யன்வந்தான்என்றனுமான்காட்டக்காட்சி
யருளினன்ராமன்எழுந்தருளினனே

௲எ-தரு-சாவேரிராகம்-அடதாளசாப்பு

பல்லவி.

ராமன்எழுந்தருளினன்-பரதன்முன்சீதா-ராமன்எழுந்தருளின
[ன்

அநுபல்லவி.

ஆம்எனும்தேவர்களுக் கமுதம்சந்தாற்போல
பூமியில்உள்ளோர்க்கெல்லாம்போனபொருள்வந்தாற்போல()

சரணங்கள்.

க. தாயவர்க்கெல்லாம்முத்தித்துறைகள்சித்தித்தாற்போல
ஓயும்உடலோர்க்கெல்லாம்உயிர்பகுந்தாற்போல
நேயமாதர்க்கெல்லாம்கண்ணிழல்வந்துதித்தாற்போல
தாயார்க்கெல்லாம்அப்போதுதான்பிள்ளைபெற்றாற்போல

உ. உத்தமர்கள்நாவுக்கெல்லாம் ஊறும்தேன்மயம்ஆக
மற்றவர்கண்வண்டுக்கெல்லாம் மலர்ந்தபங்கயம்ஆக
அஸ்தசெந்தாமரைக்கெல்லாம் அருஞ்சந்திரோதயம்ஆக
புத்திரர்க்கெல்லாம்தாயைப் போலேவசியம்ஆக(ராம)

ங. சரியும்மரவுரியும் சடையும்நடையும்சோர
வருகிறதம்பிவந்த வரவுகண்டுகண்ணூர
உருகிஉருகிஅவன் உடையகுறைகள்தீர
திருவும்தம்பியும்கவிச் சேனையும்தானும்சேர(ராம)

பரதர் ஸ்ரீராமர் திருவடிகளிலே வணங்குதல்.

விருத்தம்.

இயல்புடன்இப்படிராபன்வந்தபோதில்
இதோர்வந்தான்சாமிஎன அனுமான்காட்ட

வியன்உறு தாய்மாருமூரருமபார்க்க
மிடியனுக்குக்கனகமழைகிடைத்தாற்போலத்
தயவுளதாய்முகம்காணும்சவலைபோலச்
சாமிமுகம்இளையவனும் தானும்கண்டான்
உயிர்உருகஉளம்உருகத்திருத்தாள்மேலே
உணங்கினன்பரதன்வந்துவணங்கினனே

௧௮-தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ணங்கிநின்றனேபரதன்-சாமிசேவைக்கு-இணங்கிநின்றனே [பரதன்

அநுபல்லவி

கணம்குலாவும்தச ரதன்தனை எதிர்ப்பட்டு
கண்டசீர்என்னக் கண்டுதெண்டனிட்டு—வணங்கி

சரணங்கள்

௧. அதிகானம்போய் வாழ்ந்தவன்உடம்பும் போற்றிஎன்ற
அடிமேலேபோய்விழ்ந்தவன்உடம்பும் கட்டிக்கொள்போதில்
அதுவோஅல்ல-இதுவோபின்னை எதுவோஉடல்பொதுவேஎ
அணைத்துஅணைத்துராமன் கண்ணீர்துள்ளத்துள்ள[ன்ன
அய்யனேமகனே என்றுகட்டிக்கொள்ள—வணங்கி

௨ அடியேன்மேல்திருவுள்ளம்உதித்ததோ அடிமைபடைத்தால்
ஆளக்கடன்என்பது மதித்தோ தரிசனம்தந்
தாயேதந்தை-தாயேஎன்ன - நீயேவளர்த்-தாயேஇப்போ
தவித்தபயறுமுளைக் கத்தந்தகதைபோலே
ஆவிநீதந் தாயேஎன்றுருக்காலே—வணங்கி

௩. என்னேடே நீபிறந்த தெல்லாம் நான்பதராகி
இருந்தேனே. நீவராநாள் எல்லாம்-நான் இருந்தாலும்
இறந்தேன்என்று-பிறந்தேன்கண்டு-சிறந்தேன்குறைமறந்தேன்
இருந்தநாள் இருந் தேனேநிலம்கெல்லி[இங்கே
இன்றல்லோபிழைத்தேன்என்று சொல்லிச்சொல்லி—வண

நகரியையும் ஸ்ரீராமரையும் சீதையையும்அலங்கரித்த [ல்

விருத்தம்.

வந்ததம்பிஇந்தவகைபணிந்தான்ராமன்
மாதாக்கள்மூவரையும்பணிந்தான்பின்னே

அந்தலட்சுமணன்பரதன்பதம்பணிந்தான்
அவன்பதத்திற்சத்துருக்கன்பணிந்தான்இப்பால்
பந்தம்உள்ளசீதைநின்றதிசையைநோக்கிப்
பரதனும்தம்பியும்பணிந்தார்சுமந்திரன்சொல்லால்
விந்தைவிந்தையாளவரும்கூடிநாளு
விதம்செய்தார்அயோத்திஅலங்கிர்தம்செய்தாரே

௰௬. திபதை-மோகனராகம்-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

க. தேசதேசமக-ராசராமனுக்குத்
திருமுடி அபிஷேகம்-செய்ய
ராசராசர்கள்எல்-லாரும்முறைமுறையா
எடுத்தனர் வைபோகம்

உ. சேனேசேனமக-ராசராசர்களுந்
திரிந்தனர் சாரிகைகள்-மிக
ஆனைமேலேநெடு-வானமும்அதிர
அடித்தனர் பேரிகைகள்

ஙு. சோதிமணிநெடு-வீதியில்மகர
தோரணம் தூக்கினர்-திசை
மீதினிலேபிச-காமல்இரு
மேருவுண் டாக்கினர்

ச. காரும்படிந்திடச் சூரியன்வெய்யல்மறையக்
காவணப்பந்தல் படுத்தார்-இனி
ஆரும்இங்ஙனேவாரும்என்றழைக்கும்பொன்
ஆலவட்டங்கள் தொடுத்தார்

ரு. முத்துக்குடைபவளச்-சித்திரகுடைகள்எங்கும்
முறைமுறையா நிரைத்தார்-அப்புறம்
சுற்றுக்குச்சுற்றிலே-வர்னவர்னம்உள்ள
சொர்னமலர்கள் விரைத்தார்

சா. கோலப்பதுமைஇந்திர-சாலப்பதுமைகட்டிக்
கூந்தற்கமுகு நட்டார்-சுற்றிலும்
மேலுக்கும்கீழுக்கும்கோலக்கண்ணாடிகள்
விதம்விதம்ஆக இட்டார்

அ. சூடகவால்வளைக்-கோதையர்கீதங்கள்
சோபனமுடன் அமைத்தார்-அபிநய
நாடகசாலையும் பாடகசாலையும்
நாலுமுகமும் சமைத்தார்

கூ. முத்தாலாத்தியும்பவளாலாத்தியும்
முகம்தோறும் காட்டினர்நல்ல
விஸ்தாரப்பெரு-வீதியெல்லாம்பனிநீர்
வெள்ளங்களா ஆட்டினர்

க0. பூந்துகில்தரித்து மாந்தழைவிரித்துப்
பூரணகும்பம் பதித்தார்-புவி
வேந்தரும்பல-மாந்தரும்ஆனந்தம்
மேற்கொண்டுகுதி குதித்தார்

கக. ஆணிமுத்துப்பவளம்-மாணிக்கத்தார்செய்த
ஆபரணம் திருத்தினர்-சோபனம்
பாணிக்கும்நவரத்தின-பலிகைஎங்கெங்கும்
பளபளன இருத்தினர்

கஉ. கலவைப்பொடிகதம்பப்-பொடிகள்குங்குமப்பொடி
கடைத்தலைஎங்கும் கொட்டினர்மெத்த
விலைபெற்றபொன்எழுத்து-விசித்திரம்விசித்திரம்ஆன
மேற்கட்டியும் கட்டினர்

கங. சந்தனச்சேற்றிலும்-அகிற்சேற்றிலும்போவோர்
சறுக்கிச்சறுக்கி விழுந்தார்-அதிலே
கெந்தப்பொடிஇறைத்துக்-கெட்டி-ஆக்கிமெள்ளக்
கிளம்பிக்கிளம்பி எழுந்தார்

கச. மாலையும்சொர்னவர்னச்-சேலையும்பந்தலும்
வாசற்குவாசல் விரித்தார்-தெய்வ
ஆலயங்களும்மலர்ச்-சோலையும்சாலையும்
அணிபெறஅலங் கரித்தார்

கரு. கொதிகொளும்கதிரவன்-மறைபடமாணிக்கக்
கொடிகளாலே மறைத்தார்-வெகு
விதம்விதம்ஆகிய-முத்துப்பவளங்களும்
வெள்ளியும்பொன்னும் இறைத்தார்

கசு. செப்பம்உள்ளபளிங்கில்-ஒப்பனைசெய்கனகத்
திண்ணையிற்கோலம் புனைந்தார்-நல்ல
முப்பழக்குலைகட்டி-அப்புறம்கனிவகை
முறைமுறையா வனைந்தார்

கசக. ஆனநற்சதுரங்க-சேனையுஞ்சிவிகையும்
அலங்கரித்தேறி வருவார்-இந்த
மாநிலதானமும்-கன்னிகாதனமும்
வகைவகையாய்த் தருவார்

கஎ. யாழும்வீணைகளும்-கின்னரிகளுங்கொண்டு
ராககீதம் படித்தார்-அலே
ஆழிபோற்குமுற-மேளதாளங்களை
அதிரஅதிர அடித்தார்

கஅ. சடைமுடிவள்ளலுக்குக்-குடைமுடிதரித்திடத்
தங்கஅலங்கிருதம் செய்தார்-எங்கும்
புடைவரும்தேவரும் மூவரும்யாவரும்
புஷ்பவருஷங்கள் பெய்தார்

ககூ. மாமன்சனகனும் தாய்மாரும்கண்டு
மகிழ்ச்சிகண்ணீர் துளித்தார்-பின்னும்
நாம்இங்கேசெய்த-தவமேதவம்என்று
நகருள்ளோரும் களித்தார்

உ0. கற்பனைகடந்தஎன்-அப்பனைராமனைக்
காவலர்ஒப்பனை செய்தார்-மிகு
பொற்புளகோதைஎன்-தாயார்சீதையைப்
பூவையர்ஒப்பனை செய்தார்

உக. சந்திரகுலத்தில்வந்த-சீதைக்குநாதன்என்று
சந்திரன் புகழ்ந்தானே-கூட
இந்தவைபோகத்தை-ஆயிரம்கண்ணாற்கண்டு
இந்திரன் மகிழ்ந்தானே

பட்டாபிஷேகமண்டபம் பரதர்சோடித்தல்

விருத்தம்.

இங்கிப்படியேஅயோத்தியும்-சிராமன்தானும்சானகியும்
பொங்கத்துடனேசிங்காரம்-புனைகின்றளவிற்பரதாழ்வான்
அங்கப்போதுசாமிமுடிக்-கபிஷேகம்செய்மண்டபம்தான்
தங்கத்தாலும்மணியாலும்-சமைத்தான்நன்றாய்அமைத்தானே

கூக. தரு-கேதாரகௌளராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சிங்காரம்செய்தானே பரதன் - அபிஷேகமண்டபம்
சிங்காரம்செய்தானே பரதன்

அநுபல்லவி

தங்கநவமணிகள் எங்கும்இருந்துவெய்ய
சூரியப்பிரபைகள்மேலே வாரிப்பிரபைகள்பெய்ய


இங்குள்ளபேருடன் அங்குள்ளபேரும்உய்ய
ரகுராமனுக்குதுய்ய மகுடாபிஷேகம்செய்ய—சிங்


சரணங்கள்.

க. விவரநீலத்திலும் கோமேதகத்திலும்
வேதிகையும்சிறந்த போதிகையும்அடுக்கி
குவியும்உபானமும் பதுமமும்யாளமும்
கோமளத் தால்அடுக்கி
தவளப்பளிங்குத்தள விசைவகுந்ததின்மேலே
சாதிமாணிக்கச்சிங்கா தனம்பதித்தொழுங்காலே
பவளத்தூண்கள்நட்டு மதலைச்செய்தொருகாலே
பதம்விரும்புந்தொண்டர் இதையகமலம்போலே—சிங

உ. துய்யமருமலர்ச்ச-ரங்கலைநிரைநிரை
தூக்கிவகைவகையாய் மேற்கட்டிகள்திருத்தி
பையக்கவரிகள்-கையினால்அசைக்கும்
பதுமைகள் சுற்றும்இருத்தி
எய்தும்அவர்மனதில் ஐயம்சொல்லச்சொல்ல
இதுவோஅயோத்திநகர் இதுவோஅல்லஅல்ல
அய்யாஇதுஅந்த வைகுந்தம்என்றுசொல்ல
ஆணிப்பொன்னாலேஎங்கும் வாணித்துநல்லநல்ல—சிங்

ந. தேடிஉலகங்கள்-நாடிக்கும்பிடும்
சிகரகும்பங்கள்பல தகதகென்றுமின்னவே
ஈடுள்ளபுவிக்குக்கண்ணாடிபோற்செய்தானே
எங்கும்நிக நிகென்னவே
பாடிக்கொள்வேதமோ ஆயிரம்தலைநாக
படம்பணையோகடலோ அந்தநாகரீக
வேடிக்கைகாண்சொல்லக் கூடுமோதேவலோக
விசுவகர்ம்மாவினாலே உசிதம்உசிதம்ஆக—சிங்





ஸ்ரீராமர்பட்டாபிஷேகம்.

விருத்தம்.

சித்திரமண்டபம்அதிலேஉள்ளம்கொண்டு-தேவர்கள்மானிடர்கள்செய்யும்சேவைகொண்டு
சுத்திபெருகுகன்விபீஷணன்சுக்கிரீவன்-துணைவர்பணிகொண்டுசிங்காசனமேற்கொண்டு
சத்தியமும்நீதியுமேற்கொண்டுதுள்ளச்-சகலமும்கைகொண்டுசெங்கோல்கொண்டராமன்
பத்தினிசானகியுடனேஉலகைஆளும்-படிகொண்டான்அபிஷேகமுடிகொண்டானே

ள. தரு-சௌராஷ்டிர-ராகம் ஆதிதாளம்.

பல்லவி.

மகுடாபிஷேகம்கொண்டானே-ஸ்ரீராமச்சந்திரன்-மகுடாபிஷேகம்கொண்டானே

அநுபல்லவி.

சகல ராசர்களும்-சகல தேசர்களும்-சகல வேதியரும்-சகலசாதியரும்
சகல மந்திரிகளும்-சகல தந்திரிகளும்-சகல முனிவர்களும்-சகல மனிதர்களும்
சந்திராதிமூவர்களும்-இந்திராதிதேவர்களும்-சந்தோஷமாப்பொருந்து-சிங்காதனத்திருந்து—மகு

சரணங்கள்.

க. மாதவர்முனிவர்கள் புடைசூட-பல வேதவேதியர்கள்மறை பாட
வானவர்ஆனவர் மலர்போட-ரம்பை மேனகையூர்வசிநடம்ஆட
மாதலத்துள்ளதீர்த்தமும் ஓதுசமுத்திரதீர்த்தமும் வரிசையுடன்அனுமான் மொண்டுவர
சோதிமிக்கஆலாத்தி மீதிலட்சுமிப்பெண்கள்சுபசோபனம்சொல்லிக் கொண்டுவர
வானகத்தில்அமுர்தத்தை-மானமிக்கமுனிவர்கள்-மகிழ்ந்துமகிழ்ந்தாசிகள் விண்டுவர
ஞானமிக்கநாரதர் கானவித்தைமுறைமுறை நானுவிதம்பாடிக் கண்டுவர
மாகதர்குகுதர் பலர்-கவடர்யவுனர் பலர்-வடுகர்குடகர் பலர் துளுவர்வளவர் பலர்
வங்கர்அங்கர்கள்பலர்-கொங்கணர்தெங்கணர்பலர்-மாளவர்சாளுவர்பலர்-லாடர்கள் மராடர்பலர்
வங்காளம்-பப்பரத்துளோர்பலர் கொங்கீழம்குச்சரத்துளோர்பலர்
வந்தேசந்தித்திறைஞ்சிமுடிபணியுந்தோறும்பட்டுதிர்ந்தபொடிமணி
வைத்தபதத்தில்உறுத்திட மற்றவர்-சுற்றிலும்ஒற்றிவரச்சிலகொற்றவர்
மட்டுவகுத்து வகுத்துவரச்சில-கட்டியம்உரைத்திடுபட்டர்செலச்சொல
வாமாபராக்குவெகு-நாமாபராக்குரண-வீமாபராக்குரகு-ராமாபராக்குஎன
வாசவர்க்கும்-கேசவர்க்கும்-ஈசுரர்க்கும-மீசுரர்க்கும்
வல்லோன்எனப்பிதிர்கள்-பல்லோர்களும்துதிக்க-நல்லோர்களுங்கதிக்க -எல்லோர்களும்துதிக்க—ம
உ. பூசுரவசிட்டன் நிசுவாசன் உர-கேசவன்குறுமுனிவன் பரத்துவாசன்
பூசிதகௌதமனுடன் வியாசன்-மிகு-காசிபன் கோசிகன் துறுவாசன்
பூந்துகில்சுற்றிநல்ல-மாந்தழைவைத்ததிவ்விய பூரணகும்பம்அவரவர் கொடுக்க
ஏந்துநெய்யும்பொரியும்-மாந்தி அக்கினிதேவன்-எழும்பிஎழும்பிவரக்கொழுந் தெடுக்க
போந்தமுகுர்த்தம்வந்து-நேர்ந்ததெனத்திரண்டு-புண்ணியபுரோகிதர்கள் கடுகடுக்க
சூழ்ந்துபலமுனிவர்சாந்திமந்திரம்சொல்லிச்-சுபம்தரும்நவக்கிரகசெபம் தொடுக்க
பூசுரர்உடைகளை-வேசியர்கள உடுக்க வேசியர்உடைகளை பூசுரர்கள்உடுக்க
பூசியபொடிவகை வேசியர்கள்இறைக்க-வேசியர்மிசைஅது வேதியர்கள்இறைக்க

பொன்போலும்சட்டமிட்டமாளிகை-மின்போலும்சுற்றில்வைத்தபாவிகை
பொங்காரம்சுற்றிலும்பளபளென-எங்கேயும்சித்திரம்தளதளன
புத்தமுதத்தைநிகர்த்தமொழிச்சியர்-அஸ்திர+த்திகள்ஒத்தவிழிச்சியர்
பொற்கடகக்கையில்அப்பிஅடிக்கடி-கற்பகபுட்பம்இறைத்துசதிப்படி
போராடவேகுயில்கள்-நேர்பாடவேமயில்கள்-போல்ஆடவேதகவும்-கோல்ஆடவேமிகவும்
பூமிகளும்-பாமகளும்-காமகளு-மேகிழ
பூதாதிதரும்யோக-வேதாவுடனேலோக-மாதாளனும்வைபோக-சீதாசமேதன்ஆக—மகுடாபிஷே
௧. அங்கதன்அருகில்உடைவாள்பிடிக்க-சுக்கிரீ-வன்கைலாக்குதந்துதோள்பிடிக்க
அஞ்சிஅனுமான் சாமிதாள்பிடிக்க-வந்து-அடப்பம்சுமந்துமதவேள்பிடிக்க
அட்சயவிவேகிஎன்னும்-லட்சுணமன்சத்துருக்கன்-அருகினில்நின்றுகவரிகள்வீச
பட்சம்உள்ளசுமந்திரன்-எச்சரிக்கைஎன்றுசொல்ல-பரதன்குடைபிடித்துநயம்பேச
அற்புதக்குபேரன்வந்து பொற்பணிதிருத்தமணி-அணிபணிகண்டுசூரியன்கூச
கற்பனேகடந்தராமன் ஒப்பனைசெய்திருமார்பில்-களபச்சந்தனங்கள்சந்திரன்பூச
அருள்முககமலமும்-அதில்இருகமலமும் இருகரகமலமும் இருபதகமலமும் ;
அனமிசைவருகிற அயன்வருகமலமும் வனிதைசனகிதிரு மலர்முககமலமும்
அன்பூறும்பச்செனும் சொரூபமும் முன்காணும்கைப்பிசாண்டசாபமும்
அங்கேகண்கொண்டுகண்டபேர்இதை இங்கேஎன்சொல்வோம்எனவேஅதை
அந்தரதுந்துமி தும்தும்தும்என முந்தியசங்குகள்பம்பம்பம்என
அந்தைகள்பம்பைகள் திம்திம்திம்என மொந்தைஅதிர்ந்ததுதொம்தொம்தொம்என
ஆதாளிகொண்டுவிரி பாதாளமும்திசையும் ஆலோலம்மண்டுகடல் போலேமுழங்கியிட
அந்தலோகம் இந்தலோகம் எந்தலோகமும்திரியும்
அனைத்துயிர்களும்ஒக்க மலர்க்கைகுவித்துநிற்க அதிஷ்டம்அயோத்திதக்க வதிஷ்டன்முனிவன்வை
மகுடாபி [க்க

ஸ்ரீ ராமர் அரசியல்.

விருத்தம்.

திருமுடிமேல்மகுடாபிஷேகம்கொண்டு
சீதையுடன்ரத்தினசிங்காசனமேல்க்கொண்டு
தருமனிலைவஸிஷ்டமுனிஉரைக்கக்கொண்டு
தம்பியர்மன்னவர்வணங்கச்செங்கோல்கொண்டு
வருமறையோர்தம்ஆசீர்வாதங்கொண்டு
மன்உயிரைத்தன்உயிர்போல்மனத்துட்கொண்டு
கருமுகில்நேர்மேனிரகுராமன்பூமி
கார்த்திட்டான்ஒருகுடைக்கீழ்ச்சேர்த்திட்டானே

ராக தரு அசாவேரிராகம் ஆதிதாளம்.

பல்லவி.

காட்சியுடனேராமன்-தாழ்ச்சியில்லாமல்அர-சாட்சிசெய்திருந்
[தானே

அநுபல்லவி.

மீட்சிசெய்தசீதாசமேதன்ஆகவேலுங்கி
வீறும்சிங்காசனமேல்மேவிக்கருணைதேங்கி
மாட்சிபெரும்சடையன்மரபோர்கொடுக்கவாங்கி
மணிமகுடத்தைஞானவசிஷ்டர்தரிக்கத்தாங்கி—கா

சரணங்கள்.

க. ஏர்க்கும்பசுவும்அதைத்-தாக்கும்வேங்கையும்ஒன்று
இசைந்திருக்கவேபகைநீக்கி
ஆர்க்கும்அடங்காதஅன்-மார்க்கம்உடையபொல்லா
அடையலர்படைகளைப்போக்கி
சேர்க்கும்குடிகள்ஆறில்-ஒருகடமைகொடுத்துச்
செழித்திடவேசெல்வம்தேக்கி
பார்க்குள்உறும்துயரை-நீக்கிஅருளவல்ல
பரதனைஇளவரசாக்கி
தார்ப்புயன்லக்ஷ்மணன்சேனாதிபதிஆகிவீர
சத்துருக்கன்ஞாயாதிபதிஆய்நீதிநிறைவேற
கார்க்கடல்வண்ணம்தேவர்கண்டுகண்களிப்பூற
கலைவல்லபலபலரிஷிகள்பல்லாண்டுகூற—கா

உ. மல்ஆர்ப்புயன்சுக்ரீவன் முதலாம்வானரருக்கு
மாமணிபணிகளும் பாய்ந்து
கல்ஆர்சஞ்சீவிமலை-கொண்டுவந்த அனுமார்
களிக்கப்பிரம்மபட்டமும் ஈந்து
சொல்ஆர்விபீஷணனுக்-கரங்கவிமானம்தந்து
துதிருகன்சாம்புவந்தனுக் காய்ந்து
ஏல்ஆர்பலமனுகள்-கோர்வைசெய்திட்டகண்டி
எழில்பெறக்கழுத்தினில் வேய்ந்து
சல்லாபம்ஆகஅவர் தமையும்அனுப்பிவிட்டு
சாதுசனங்களுட னேஎப்பொழுதும்நட்டு
வல்லாளன்ஆகிக்கொடுங் கோலம்மன்னவரைஅட்டு
வடிவழகியமலர்க் கையாற்செங்கோலைத்தொட்டு—கா

௩. சேமம்மிகுந்தபரந்-தாமத்திலிருக்கும்நிந்
தியசூரியர்களும்பிர காச
ராமராச்சியத்துக்கிணை-ஆமோஎந்தலோகமும்
நாமும்அங்கேபோவோமஎன்று பேச
சாமபேததான-தண்டம்அறிந்தராச
சமுகங்கள்எங்கும்வந்து மூச
காமராஜனும்அந்த-திவ்வியமங்களவிக்கிர
கத்தைக்கண்டுகண்கள் கூச
நேமப்படியேமந்திரி பிரதானிகளுந்துய்ய
நெறியார்மனுவின்படி உரியஅரசுசெய்ய
ஏமம்பெறமாதமும் மாரிஎங்கும்பெய்ய
இகத்தினில்உள்ளசர்வ சீவாத்துமாக்களும்உய்ய—கா

சமாப்தியில்மங்களம்.

பாயிரத்தில் வந்தமங்களத்தை அதின்விருத்தத்தோடே இவிட த்தில்பாடிக்கொள்க.

சமாப்தியில்சோபனம்.

பாலகண்டத்தில்வந்த சோபனத்தை அதின்விருத்தத்தைவில க்கி இவிடத்தில்பாடிகொள்க.

வாழி-விருத்தம்.

இரவிகுலம்வாழி-சீதாராமர்வாழி
இளையவர்மூவரும்வாழி-இவர்பெண்டீர்வாழி
குருவசிஷ்டர்சுமந்திரர்அனு-மார்சுக்கிரீவர்வாழி
குருவாழிகுகர்விபீஷணர்வாழிஇந்தப்
பரவியபார்கார்வாழி-மும்மூர்த்திவாழி
பலஅமரர்முனிவர்பரசு-மதிகதிர்கள்வாழி
தருவளர்காழியின்அருணாசலகவிசொல்லியகீர்த்
தனைப்படிப்போரும்கேட்போரும்வாழிவாழி.

நூற்பயன்.

விருத்தம்.

ஞானநாயகன்ஆம்ராமன்-நாடகம்இசையால்ச்சொல்லும்
கானபாகவதர்உள்ளம்-களித்திட இதனைகேட்பார்
தானம்ஆம்உலகில்உள்ள-சௌபாக்கியமும்பெற்றேநல்
வானநாட்டரசன்ஆகவசிகரம்பெறுவார்தாமே

உயுத்தகாண்டம்முற்றும்.

விருத்தம்-௱௨௭. கலித்துறை-௧. கொச்சகம்-௧. ஆ ௱௨௯.
திபதைகள்-௨௰. தருக்கள்-௱௧. ஆ ௱௨௧.
பாயிரம்-௧-க்கும-காண்டங்கள்-௬-க்கும்-கூடிய கொச்சகம்-௬
வெண்பா-௨. வசனம்-௧. கலித்துறை-௧. விருத்தம்-௨௬௮.
ஆ ௨௭௮. தோடையம்-௧. திபதைகள்-௬௰. தருக்கள்-௱௯௭.
ஆ ௨௫௮.

சக்கிரவர்த்தித் திருமகனார் திருவடிகளேசரணம்.

இராமநாடகம்.

முற்றிற்று.

தலைப்புகளின் அகராதி

சக்கிரவாத்தி முடிசூட ராமமரை வேண்டுதல்
ஐம்பத்தாறு தேசத்துராசாக்கள் வருதல்
திருஅயோத்தி அலங்கரித்தல்
கூனி கைகேசியைக் கலைக்க வருதல்
கைகேசி கூனியைக் கோபித்தல்
கைகேசிக்கும் சக்கிரவர்த்திக்கும் சம்வாதம்
கைகேசி ராமமரை வனத்திற்கு ஏவுதல்
ராமர் வனம் ஏக கைகேசியின் விடைபெறல்
ராமர் வனம் ஏகுதற்காக கோசலை புலம்பல்
ராமர் கோசலையைத் தேற்றி விடைபெறல்
ராமர் வனம் போக லைபற்றி லட்சுமணர் கோபித்தல்
ராமர் லட்சுமணர் கோபத்தை தணித்தல்
சுமித்திரை லட்சுமணர்க்கு புத்தி சொல்லல்
ராமர் பிரிதலைக் குறித்து சீதை இரங்கல்
ராமர் வனம் போகலால் புரசனங்கள் புலம்பல்
சுமிந்திரன் புலம்பல்
ராமர் சுமிந்திரனுக்கு நீதி ஓதுதல்
ராமமரை நினைந்து சக்கிரவாத்தி புலம்பல்
ராமமரைக் குகன் தன் ஊரில் இருக்க வேண்டல்
ராமர் குகனை சிநேகம் கொள்ளல்
ராமர் சீதைக்கு சித்திரகூடவளம் காட்டல்
சக்கிரவர்த்தியைக் குறித்து பரதர் புலம்பல்
பரதர் கைகேசியைக் கோபித்தல்
பரதர் கோசலாதேவிக்கு சத்தியம் கூறல்
குகன் பரதசேனையைக் கண்டு கோபித்தல்
லட்சுமணர் பரதசேனையைக் கண்டு கோபித்தல்
ராமர் சக்கிரவர்த்தியை குறித்து புலம்பல்
ராமமரை வசிஷ்டர் தேற்றுதல்
ராமர் முன்னே பரதர் புலம்பல்
ராமர் பரதருக்கு புத்தி சொல்லல்
பாதுகைக்கு பரதர் பட்டாபிஷேகம் செய்யல்
ஆரண்ணியகாண்டம்
ராமர் அத்திரியைக் கண்டு தண்டகாரண்யம் சேருதல்
தண்டகவனரிஷிகள் ராமரோடு முறையிடல்
ராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்
ராமர் பஞ்சவடி தீரத்தை காணுதல்
ராமர் சடாயுவைக் கண்டு பஞ்சவடி தங்கல்
சூர்ப்பநகை ராமரைக் கண்டு மோகித்தல்
ராமர் பக்கல் சூர்ப்பநகை வருதல்
ராமருக்கும் சூர்பநகைக்கும் சம்வாதம்
சூர்ப்பநகை தன் உறவை நினைந்து புலம்பல்

சுக்கிரீவன் அழைத்துப்போது விபீஷணர் சொல்லிக் கொண்டுவருதல்
விபீஷணர் ராமருடைய தரிசனம் செய்யல்
விபீஷணர் ராமரை சரணம் அடைதல்
ராமர் விபீஷணர்க்கு அபயமும் அரசும் கொடுத்த
விபீஷணர் ராமருக்கு ராவணன் பெருமை கூறல
ராமர் முன் விபீஷணர் அனுமாரை துதித்தல்
ராமர் வருணன் பேரில் அம்பு தொடுத்தல்
ராமரை வருணன் சரணம் அடைதல்
வானர வீரர்கள் சேது பந்தனம் பண்ணுதல்
ராமர் சுகசாரணரோடு கூறுதல்
ராவணனுக்கு மாலியவான் புத்தி கூறல்
மாலியவானை ராவணன் நிந்தித்தல்
சாரணன் ராவணனுக்கு ராமர் முதலானோரைக் காட்டல்
சுக்ரீவனுக்கும் ராவணனுக்கும் மல்யுத்தம்
ராமர் சுக்கிரீவன் பிரிவைப் பற்றி அவனோடு முறையிடல்
ராமர் வானர வீரரோடு இலங்கையை வளைத்தல்
ராவணன் இலங்கைக்கு காவல் வைக்குதல்
அங்கதன் தூது போக அவனோடு ராவணன் சொல்லுதல்
அங்கதன் ராவணனுக்கு மறுமொழி உரைத்தல்
அங்கதன் மீண்டு போர்கலக்க என்ன இருபடைகளும் கைக்கலைத் [தல்
அனுமாரும் ராவணனும் மகைக்குத்துக்கு நிற்குதல்
ராமருக்கும் ராவணனுக்கும் முதல் நாள் யுத்தம்
ராமர் ராவணனை சம்மதி கேட்குதல்
ராவணன் மாலியவானோடு அமர்களம் கூறல்
மாலியவான் புத்தியை ராவணன் கேட்காமல் மகோதரன் கலைத் [தல்
கிங்கரர் கும்பகர்ணனை எழுப்பவும் அவன் தூங்குதல்
கும்பகர்னன் ராவணனுக்கு புத்தி கூறல்
விபீஷணன் ராமருக்கு கும்பகர்னன் வரலாறு கூறல்
கும்பகர்னன் தன்னை அழைத்த ராவணனுக்கு புத்தி சொல்லல்
கும்பகர்னனுக்கு விபீஷணன் நீதி கூறல்
விபீஷணன் மீண்டபின் இருபடைகளும் போர்கலத்தல்
ராமருக்கும் கும்பகர்னனுக்கும் யுத்தம்
கும்பகர்னன் ராமரை துதித்து வரம் கொள்ளுதல்
ராமபாணம் கும்பகர்னன் தலையைக் கடலில் வீழ்த்தது
சீதாதேவியின் பக்கல் வந்து ராவணன் கெஞ்சுதல்
சீதாதேவி ராவணனை இடித்தல்
மாயா சனகனை சீதை கண்டு தகப்பனென்று புலம்பல்
கும்பகர்னன் மரணத்தைக் கேட்டு ராவணன் புலம்பல்



சங்கீத இராமாயணம்

